
# அகிலம்

வருடாந்தச் சிறப்பு மலர்



## தெளிவத்தை ஜோசப்

கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான தங்க நகைகளுக்கு.....

# Nagalingams Jewellers



Designers and
Manufacturers of 22 Kt
Sovereign Gold Quality
Jewellery



No. 101, Colombo Street, Kandy
Tel : 081 2232545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அகிலம்"

"அகிலம்" அறிவியல் சஞ்சிகை
கண்டி, கலை இலக்கிய இரசிகர் மன்றம்
இணைந்து நடாத்தும்

## மாபெரும் கலை இலக்கியப் போட்டிப் பரிசளிப்பும் கலை விழாவும் - 2015

காலம் : 24 - 10 - 2015 சனிக்கிழமை

நேரம் : பிற்பகல் 2.00 மணி

இடம் : கண்டி, திரித்துவக் கல்லூரி மண்டபம்

பிரதம அதிதி :

**கௌரவ வி. எஸ். இராதாகிருஷ்ணன் பா. உ.**

கல்வி இராஜாங்க அமைச்சர்

சிறப்பு விருந்தினர் :

**கௌரவ சரத் ஏக்கநாயக்க**

மத்திய மாகாண முதலமைச்சர்

ஆசிரியர் :

**கலாபூஷணம் கே. வி. இராமசாமி**

அகில இலங்கை சமாதான நீதவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றம்
මහනුවර කලා සාහිත්‍ය රසික සංගමය
KANDY ART AND LITERATURE ENTHUSIASTS ASSOCIATION
NO.308, D.S. SENANAYAKE VIDIYA, KANDY - SRI LANKA. T' PHONE: 076 6987504, 076 5490085

**PATRONS :-**

**Hon. P. P. Devaraj**
Chairman
GOPIO, Council

**Prof. Durai Manoharan**
Former Head, Tamil Department,
University of Peradeniya.

**CHAIRMAN :-**

**Sevajothy S. Muthiah J.P. (Whole Island)**
Luckyland Biscuits, Kundasale.

**PRESIDENT :-**

**Kalabooshanam K.V. Ramasamy J.P**
Editor - Akilam
Kandy.

**VICE PRESIDENTS :-**

**Prop. R. Mohan Nagalingam**
Justice of the Peace (**Whole Island**)
Nagalingam Jewellers,
Kandy.

**Mr. R. Manoharan J.P.**
Managing Director,
Luckyland Biscuits, Kundasale

**Prop. P. Palaniappan J.P.** (**Whole Island**)
Ranjitha Traders - Kandy

**HONY. SECRETARY :-**

**Mr. S. Manoharan M.A.**
Lecturer,
National College of Education

**HONY. TREASURER :-**

**Mr. R. Sudharshan**
Kandy.

**EXECUTIVE COMMITTEE :-**

**Mr. M. Rajendran**
Nesto Confectionery, Kundasale.

**Mr. P. Ramaraj**
Green Apple Foods, Kundasale.

**Mr. P. Kanagaraj**
Mega Collection, Kandy.

**Mr. M. Sathiyamoorthy J.P (Whole Island)**
Saratha Jewellers, Meera Travels
Digana - Kandy.

**Mr. R. Saravanan J.P.**
Latha Jewellers, Kandy

**Mr. B. Vytheeswaran**
Carsons Mega, Kandy

**Mr. A. Ariyaratnam**
Accountant & Auditor, Kandy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. 'சாகித்ய ரத்ன' தெளிவத்தை ஜோசப்:
   மலையக மண்வாசனைக்கு கிடைத்த தேசிய அங்கீகாரம் – மயில்வாகனம் திலகராஜ்
2. தெளிவத்தை என்றொரு புத்தகம் ! – கலாபூஷணம் மு. சிவலிங்கம்
3. வயது நீட்சியிலும் குறைந்து செல்லும் விளைவு
   விதியை சந்திக்காதவர் – பேராசிரியர் சபா. ஜெயராசா
4. விருதுகளால் அளக்க முடியாத படைப்பாளி ...! – பதுளை சேனாதிராஜா
5. அக்கினிக்குஞ்சு... – இரா. சடகோபன்
6. தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கியப் பணி
   மேலும் மெருகேற்றி தொடர வேண்டும்...! – பேராசிரியர் மா. செ. மூக்கையா
7. பெண்ணியம் பேசுவோம் – மலர் சின்னையா
8. மறக்க முடியாத மனிதர்கள்...
   இர. சிவலிங்கம் – திருச்செந்தூரன் – தெளிவத்தை ஜோசப்
9. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில்
   இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பங்களிப்பு – பேராசிரியர் துரை. மனோகரன்
10 தேடல்களை அடியொற்றிய அனுபூதி உளவியல் – பேராசிரியர் சபா. ஜெயராசா
11. மலையகப் பல்கலைக்கழகம் – பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
12. மலையகப் பல்கலைக்கழகம் தேவையும் நியாயப்பாடுகளும் – சிவம் பிரபாகரன்
13. மலையகத் தமிழ் மக்களுக்கென தனியானதொரு
    பல்கலைக்கழகமும் அம்மக்களின் சமூக மேம்பாடும் – பேராசிரியர் மு. சின்னத்தம்பி
14. தமிழ் இலக்கியத் திறனாய்வில் ஒரு பார்வை – கலாநிதி க. நாகேஸ்வரன்
15. ஈழத்து முன்னோடிக் கவிஞர்கள் – பேராசிரியர் செ. யோகராசா
16 மார்ட்டின் விக்கிரமசிங்ஹ – கே. எஸ். சிவகுமாரன்
17. எல்லாம் குரு மயம் – கலாபூஷணம் பொன். பூபாலன்
18. கலையாத கல்வி – மாண்புமிகு தெ. ஈஸ்வரன்
19. இலக்கை நோக்கிய படிப்பும், பரீட்சைகளும் – உடுவை எஸ். தில்லை நடராஜா
20. மலையகத் தமிழரும் உள்ளூராட்சி தேர்தல் முறை
    மாற்றங்களும் – மாண்புமிகு பி. பி. தேவராஜ்
21. இந்திய வம்சாவளி தமிழர் – பின்னணியும் சவால்களும்
    ஒரு மதிப்பீடு – யசோதரா கதிர்காமத்தம்பி
22. இருபத்தோராம் நூற்றாண்டுக் கல்வி கற்றலும், கற்பித்தலும் – பேராசிரியர் தை. தனராஜ்
23. அரச பொது நிர்வாகமும் பெருந்தோட்ட மக்களும் – கலாபூஷணம் மு. சிவலிங்கம்
24. கலாபூஷணம் சாரல்நாடன் நம் காலத்து மலையக சுடர்மணி – சு. முரளிதரன்
25. தமிழ் இலக்கிய உலகில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை – திருமதி. எஸ். தேவகுமாரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. உடப்பும் "சித்திரைச் செவ்வாய்" ஆற்றுகைச் சடங்கும் ஓர் அரங்கியல் ஆய்வு ... – யாழ். தர்மினி பத்மநாதன்
27. பெருந்தோட்ட மக்களுக்கு நிரந்தரமான வீடுகள் – கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸ்
28. திருடர்களின் தேசம் – இரா. சடகோபன்
29. மலையக சமூகத்தின் தற்போதைய எதிர்பார்க்கைகள் – எம். வாமதேவன்
30. திருக்குறள் : "சுடச்சுட ஒளிரும் தங்கம்" – மொழிவரதன் ஊ. மகாலிங்கம்
31. முற்போக்கு இலக்கிய முன்னோடி கே. கணேஷ் சில சிந்தனைகள் – லெனின் மதிவானம்
32. புதிதாய் பயில்வோம் ஆத்திசூடி – கவிஞர் பிரேம்ராஜ்
33. பரீட்சைகளை எதிர்கொள்ளலில் அறிகை முறைமைகள் – கலாபூஷணம் கோகிலா மகேந்திரன்
34. இரத்ததானம் ஒரு உன்னதமான யாகம் – டாக்டர் கே. ஜெயகுணசீலன்
35. சர்க்கரை வியாதியின் முக்கியத்துவம் – கந்தையா பரநிருபசிங்கம்
36. ஈழத்து நவீன தமிழ் கவிதை வளர்ச்சியில் மஹாகவி து. உருத்திரமூர்த்தி – இரா. லோஹிதா
37. தொடர்ந்து வாழும் மூடநம்பிக்கைகள் – எஸ். பத்மநாதன்
38. மனித வளங்களின் அபிவிருத்தியும் மானிட அபிவிருத்தி குறிகாட்டியும் – பேராசிரியர் மா. செ. மூக்கையா
39. மலையக தொழிற்சங்க அரசியல் முன்னோடிகள் – செல்வி மங்களேஸ்வரி வேலுசாமி
40. இலங்கையில் பெருந்தோட்டத் துறைசார் இந்திய வம்சாவழியினரின் கல்வி வரலாற்றுடன் தொடர்பான சமூக, அரசியல் மற்றும் சட்டப் பின்னணி – ப. ஆறுமுகம்
41. இலக்கியக் காவலராகத் திகழ்ந்தவர் துரை விஸ்வநாதன் (துரைவி)
42. மலையகத் தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிகளில் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் பங்கும் பணியும் – திருமதி சர்மிளாதேவி துரைசிங்கம்
43. நினைவில் நிற்கும் நிகழாட்டங்கள் – கலைமணி பசறையூர் க. வேலாயுதம்
44. விடியலே வா! – கந்தையா கணேஷமூர்த்தி
45. கல்விச் சமூகவியலும் மாணவர்களைச் சமூக இயல்பினர்களாக்குதலில் அதன் முக்கியத்துவமும் – சி. மனோகரன்
46. மூங்கில் காடு – ந. பார்த்திபன்
47. தமிழா நீ தலை நிமிர்ந்து வாழ்! – கே. குலசேகரன்
49. பிள்ளைகள் சமூகத்தின் பிரதிபலிப்புகளாகும் – துரைசாமி நடராஜா
50. மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்திருந்த தமிழ்த் திரைப்படங்கள்....! – பாலா சங்குப்பிள்ளை
51. கலை இலக்கிய போட்டி பரிசு பெறுவோர் விபரங்கள்

---

ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. இராமசாமி J.P.

இச்சஞ்சிகையில் வெளிவரும்
கட்டுரைகளுக்கு கட்டுரை
ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்

தொடர்பு முகவரி:
அகிலம் பப்ளிகேஷன்ஸ்
308, டி. எஸ். சேனாநாயக்க வீதி
கண்டி (இலங்கை) 0766987504

வங்கி கணக்கு :
**K. V. Ramasamy, A/C 96684, BOC, Kandy**

விலை ரூபா : 500/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலமே வருக ....

என்றும் இதயத்தில் – கவிமணி தமிழோவியன்

எங்கள் நண்பர் இராமசாமியின்
இலக்கிய வேட்கையால்
இல்லந்தோறும் "அகிலம்" இதழை
இன்று காண்கின்றோம்!
பொங்குந்திறன் ஆய்வறிவு
புலமை மிளிர்ந்திடும்
புதுமையான ஆக்கம் நிறைந்த
அகிலம் வளர்கவே .......!

தனி ஒருவர் தளர்ந்திடாமல்
தொடர்ந்து வெளியிடும்
தடைகடந்த 'அகிலம்' ஏடு
தழைத்து ஓங்கவே ......!

இனிவரும் இளையோர்களின்
எழுதும் ஆற்றலை
இலங்கச் செய்யும் நோக்குடனே
இலக்கியப் போட்டியை,
நடத்தி மகிழும் 'அகிலம்' இதழ்
நாளும் மலரட்டும்!
நல்லதமிழ்ப் படைப்புகளை நமக்கு
நல்கட்டும்.

படத்தைக்காட்டிப் பணஞ்சுருட்டும்
போக்கும் இன்றியே
படிக்கப்படிக்கச் சுவை பயக்கும்
அகிலம் வருகவே!



பெற்றதாயின் பெயரையிட்டு
இதழ் நடத்திடும்
பேறுபெற்ற இராமசாமி
பெருமை பெற்றிட
கற்றதமிழ் வாசகர்கள்
கரங் கொடுக்கட்டும்!

காலந்தோறும் அகிலம் மக்கள்
கரத்தில் தவழட்டும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழும் அறிவியலும் எழுச்சிபெற மலையகத்திற்கென தனியான பல்கலைக்கழகம் காலத்தின் கட்டாயமாகும்

- எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பெருந்தகைகள் அனைவருக்கும் முதற்கண் எமது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவிப்பதில் பெருமகிழ்வும் மனநிறைவும் அடைகின்றேன்.

- எமது மலையக மண்ணின் மைந்தர்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கும் எமது பண்பாட்டு கலாசார பாரம்பரிய முதுசங்களை களஞ்சியப்படுத்தி பேணி பாதுகாப்பதற்கும் எமக்கென தனியான பல்கலைக்கழகமொன்று மிக அவசரத் தேவையாகும். அத்துடன் ஏனைய சமூகங்களுக்கு நிகராகவும் போட்டி நிறைந்த நவீன தொழில்நுட்ப உலகுக்கு முகங்கொடுக்கவும் எமது மாணவர்களின் அறிவியல் திறனையும் வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

- தமிழர்களின் பெரும் சொத்தான இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் மலையக மண்ணிலிருந்து அழிந்துகொண்டு வருவது வேதனை தரக்கூடிய ஒன்றே. இவற்றைப் பேணிப் பாதுகாப்பாரும் போற்றுவாரும் இல்லாமல் போனால் அழிவது சாத்தியமே!

- இப் பல்கலைக் கழகம் குறித்த வாதப் பிரதிவாதங்களும் அவசியப்படுவதும் அனைவரும் அறிந்ததே. எனினும் அதிகாரத்திலிருப்பவர்களும் அதனைச் சாத்தியபடுத்தும் நிலையிலிருப்பவர்களும் ஒன்றிணைந்து இத்தேவையை நிறைவேற்றுவது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

- எனவே, இலைமறைகாயாக அங்கங்கே உதிரிகளாக இருக்கும் எமது மண்ணின் கல்விமான்களையும் கலைஞர்களையும் ஒன்றிணைத்து ஓர் உறுதியான அமைப்பினைத் தோற்றுவித்து இப்பெருமுயற்சியை முன்னெடுத்துச் செல்வது சம்பந்தப்பட்டோரின் பாரிய கடமையாகும்.

- மலையகத்திற்கென தனியானதொரு பல்கலைக்கழகம் குறித்து மிக நீண்டகாலமாக குரல் கொடுத்தும் எழுதியும் வருகின்ற பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசிரியர் எம். எஸ். மூக்கையா, பேராசிரியர் எம். சின்னத்தம்பி, பேராசிரியர் தை. தனராஜ், கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸ், திரு. எம். வாமதேவன் முதலியவர்களோடு இது குறித்து ஆர்வத்துடனும் முனைப்புடனும் இருக்கின்ற மலையகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் கல்வி ஆர்வலர்கள் அனைவரும் இத்தருணத்தில் ஒன்றிணைந்து எமக்கான பல்கலைக்கழகம் குறித்த முன்னேற்பாடுகளை செய்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மேலும் இப்பெரு முயற்சியின் தூண்களான முன்னாள் இராசாங்க அமைச்சர் திரு. பீ. பீ. தேவராஜ் அவ்கள். இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட கல்வி இரஜாங்க அமைச்சர் கௌரவ வேலுசாமி இராதாகிருஷ்ணன் அவர்கள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் கௌரவ பழனி திகாம்பரம் அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான தேசிய கலந்துரையாடல் அமைச்சர் கௌரவ மனோ கணேஷன் அவர்கள், கௌரவ மயில்வாகனம் திலகராஜ் அவர்கள், கௌரவ அ. அரவிந்தகுமார் அவர்கள், கௌரவ வடிவேல் சுரேஷ் அவர்கள் ஆகிய அனைவரும் மலையகப் பல்கலைக்கழகத்திற்கு உந்துசக்தியாக இருப்பார்களாயின் அதுவே, எமது சமூகத்திற்கு செய்யும் மகத்தான பணியாகும்.

- இன்றைய மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல தமது ஐந்து வருட காலத்திற்குள் மலையகப் பல்கலைக்கழகம் உருவாக்கித் தருவதாக திடசங்கற்பம் பூண்டிருப்பதை வெகுவாய் பாராட்டுவதோடு, கண்டி மண்ணில் தமிழர்களுக்கென தனியானதும் ஒரு முழுமையானதுமான தமிழ் மகா வித்தியாலயத்தினையும் அமைத்து கண்டி வாழ் தமிழர்களின் பாரம்பரிய முதுசங்களை பாதுகாக்க முன்வருவார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

- இலங்கைத் தமிழர்களும் தமிழ்கூறும் நல்லுலகமும் அறிந்த சிறந்த சிறுகதையாசிரியரும் நல்ல நாவலாசிரியருமான ஓர் அற்புத மலையகப் படைப்பாளியும் மலையக அளவிலும் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பல பதக்கங்கங்களையும் விருதுகளையும் பெற்ற பவளவிழா நாயகன் சாகித்ய ரத்ன தெளிவத்தை ஜோசப் அவர்களைப் பாராட்டுவதோடு, அவரது ஆளுமையையும் திறமையையும் கௌரவப்படுத்தும் முகமாக “அகிலம்” அவரது அட்டைப்படத்தினை தாங்கி வெளிவருவது அருமைக்கும் பெரும் கௌரவத்துக்குமுரிய விடயமாகக் கருதி “அகிலம்” அவருக்கு விருது வழங்கி பாராட்டுகிறது.

- எதிர்கால சந்ததியினரை எடை போட்டுப் பார்க்கக்கூடிய கலை, இலக்கிய அறிவியல் சஞ்சிகையான “அகிலம்” நாம் ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தியதிலிருந்து இம்மியளவும் மாறவில்லை. தமிழ் பேசும்மக்கள், குறிப்பாக மலையக மாணவ மணிகள் கல்வியில் ஒரு புரட்சியைக் காணவேண்டுமென்ற எமது நோக்கத்தை இதழுக்கு இதழ் “அகிலம்” வெளிப்படுத்தி வந்திருக்கின்றது.

- “அகிலம்” கடந்து வந்த பாதை மிகவும் கரடுமுரடானது என்றாலும் நாம் தொடர்ந்து மேற்கொண்டிருக்கும் பாதை, அதன் பணி புனிதமானது. இப்பணி தங்குதடையின்றி சிறப்புடன் தொடர்ந்து வரும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. வேதனையில் சாதனை பல படைத்தவர்கள் நாம். “அகில”த்தின் தொனியும் அதுதான்.

- “அகில”த்திலும் எமது கலை, கலாசாரத்தைப் பற்றி எழுதுகின்றோம். விரசமில்லாமல் ரசனையோடு சமூகத்தின் பல்வேறு வளர்ச்சிப் பாதையை மனதிற்கொண்டு படிப்படியாக புதிய புதிய அம்சங்களையும் சேர்த்து வருகின்றோம் என்றால் மிகையாகாது. இவைகள் தொடர்பான எமது அன்பிற்குரிய வாசகர்கள், நலன் விரும்பிகளின் எண்ணங்களையும் கருத்துக்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

**கலாபூஷணம் கே.வீ. இராமசாமி**

**- ஆசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்திவரும்

## கொழும்பு மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம்

மலையகத்தின் கல்வி மன்றைத் திறக்கவென 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ஆந் திகதி திரு. தனராஜ், திரு. தவக்குமார் ஆகியோரின் அருந்தவத்தால் உதயமான மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் அதன் கல்விப் பணியின் சவால்களை எதிர்கொண்டு தமது பயணத்தை வெற்றிகரமாக தொடர்ந்துகொண்டிருப்பதையிட்டு "அகிலம்" பெருமிதங்கொள்கிறது.

மலையகத்தில் வீட்டுக்கொரு பட்டதாரியை உருவாக்குவதை இலக்காகக் கொண்டியங்கும் இம்மன்றமானது பணிப்பாளராக திரு மோகன்ராஜ் அவர்களையும் தற்போது திரு. கருப்பையா சிவசுப்பிரமணியம் அவர்களை தலைவராகவும், திரு. ஏ. பாஸ்கரன் அவர்களை செயலாளராகவும் கொண்டும் வெற்றிநடை போட்டுக்கொண்டிருப்பது மலையகத்தின் விடிவிற்கானதொரு நல்ல சமிக்ஞையாக நாம் கொள்ளலாம்.

இம்மன்றமானது தனது ஒன்பது ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்து பத்தாவது வெற்றி ஆண்டில் விழாவை எதிர்வரும் நவம்பர் மாதம் தலைநகர் கொழும்பில் சிறப்பாகக் கொண்டாட இருப்பதைக் கண்டு "அகிலம்" தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து மனநிறைவு கொள்கிறது.

கல்வியைக் கருப்பொருளாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றிவரும் மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் வெற்றிக்கு அதன் திருமிகு போஷகர்கள், மன்றத்தின் தலைவர், செயலாளர் மற்றும் அனைத்தும் அங்கத்தினர்களினதும் ஆக்க சிந்தனையும் தெளிவான இலட்சிய நோக்குமே காரணமாகும்.

அதுமட்டுமல்லாமல் கொழும்பிலும் மலையகத்திலும் விடுமுறை தினங்களிலும் களியாட்ட நிகழ்வுகளில் பணத்தினை வீண்விரயம் செய்யாது அப்பணத்தினை எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் முதலீடாகக் கொண்டு செயல்படுவது ஓர் அறிவார்ந்த செயலாகும் என தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

### என்றும் எமது நன்றிக்குரிய பெருந்தகைகள்....

அகிலம் 2015ஆம் ஆண்டு வருடாந்த சிறப்பு மலர் எழில்மிகு ஈழத்திருநாட்டில், கலை இலக்கிய அறிவியல் பரப்பிலே அது மலருகின்ற இந்த சுவடுகள் பதித்த காலத்தால் மறக்க முடியாதவை என்பதற்கு எம்முடன் அஞ்சல்கள் மூலம் தொடர்புகொண்ட ஆக்கபூர்வமான கருத்துக்களே சான்று பகர்கின்றன.

"அகிலம்" அறிவியல் சஞ்சிகைக்கு ஆரம்ப காலம் முதல் இன்றுவரை எழுத்துக்கள் மூலம் பங்களிப்புச் செய்த எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், மாணவ மணிகள், அன்புக்கரம் நீட்டி விளம்பரங்களால் "அகிலம்" சஞ்சிகையை அலங்கரித்த வர்த்தகப் பெருந்தகைகள், தொடர்ந்து "அகிலம்" வெளிவர சந்தா வழங்கிய பெருமக்கள் மிகவும் கரிசனையுடன் "அகிலத்தை" விற்பனை செய்து உதவிய பேராசிரியர்கள், விற்பனை முகவர்கள், நண்பர்கள், நலன் விரும்பும் அன்பர்கள் என அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் தேசிய தொலைக்காட்சி, வானொலி. நாளேடுகள், வார இதழ்கள் மற்றும் சஞ்சிகைகளில் "அகிலம்" குறித்து சிறந்த விமர்சனங்கள், செய்திகள் அவ்வப்போது ஒலி-ஒளி பரப்பப்பட்டும் பிரசுரிக்கப்பட்டும் வந்துள்ளன. எனவே, எம்மை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி வந்துள்ள பொறுப்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அபிமானிகளுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

- ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වී. එස්. රාධාක්‍රිෂ්ණන් (පා.ම)
வி.எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ)
V. S. Radhakrishnan (M.P)

අධ්‍යාපන රාජ්‍ය අමාත්‍ය
கல்வி இராஜாங்க அமைச்சர்
State Minister of Education

## கல்வி இராஜாங்க அமைச்சர்
## கௌரவ வி. எஸ். இராதாகிருஷ்ணன் (பா.உ) அவர்களின்

# *ஆசிச் செய்தி ...*



ஒவ்வொரு சமூகமும் தனது தனித்துவத்தை வெளிக்காட்டுவது தனது கலாச்சார, விழுமியங்கள் மூலமேயாகும். அவ்வகையில் தமிழ் சமூகத்திற்கான பாரம்பரிய கலைகள் பல காணப்படுகின்றன. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் மூலம் தனது கலைத்துவத்தைப் பேணிவரும் தமிழ் சமூகத்தினர் அவர்களது பாரம்பரிய கலைகளைப் பேணிப்பாதுகாப்பது முக்கியமாகும். அவ்வகையான செயற்பாட்டுடன் கூடிய கலை இலக்கிய போட்டியினை "அகிலம்" கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகையின் வெளியீட்டுடன் நடாத்துவது பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

கண்டி கலை இலக்கிய ரசிகர் மன்றமும், அகிலம் சஞ்சிகையும் இணைந்து நடாத்தும் பரிசளிப்புடன் கூடிய கலை இலக்கிய விழா சிறப்புற வாழ்த்துவதுடன் 2014 ஆம் வருடத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதன்மை நிலைகளைப் பெறும் மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் என் உளங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு தசாப்த காலமாக கலை, இலக்கிய, அறிவியல் சேவைகளை ஆற்றிவரும் "அகிலம்" அறிவியல் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் கே. வி. ராமசாமி அவர்களின் 2015 ஆம் வருட சிறப்பு மலர் வெளியீட்டை சிறப்புற நடத்த என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සරත් ඒකනායක
சரத் ஏக்கநாயக்க
SARATH EKANAYAKE

මධ්‍යම පළාත් ප්‍රධාන අමාත්‍ය
பிரதான அமைச்சர், மத்திய மாகாணம்
Chief Minister, Central Province

"ඉතිහාසයට ගොඩක් දෙයක්ම එක්කරමු"

පළාත් සභා සංකීර්ණය
කුණ්ඩසාලේ - පල්ලේකැලේ

Provincial Council Complex
Kundasale - Pallekele

# MESSAGE OF GREETINGS FROM CHIEF MINISTER OF THE CENTRAL PROVINCE

## HON. SARATH EKANAYAKE



As Chief Minister and the Minister of Education in the Central province it gives me great pleasure to convey my warm felicitations on the Annual Literary Festival of the Awards Ceremony for the All Island competition for Poetry, Essays, Short Stories, Drama and Speech conducted by the Kandy Art Literature Enthusiasts Association and the Editor of Akilam Journal Kalabooshanam K. V. Ramasamy, J.P.

I am indeed happy and wish to state this Association take great interest and extends support through their own specially creataive education systems to overcome in practical problems to help the need of the society.

It is also appreciate the services of this Association to the society in Sri Lanka specially to the people of Hill Country to up lift the improvement of the Educational standard of the students studying for G.C.E. (O/L) & (A/L) classes and the Universities to achieve better results at their Examinations.

As you known anyone will be highly recognized and welcomed generally by the society, concerning the way you all express the languages Sinhala, Tamil or English as a spoken language in correct form and accepted manner within the competency in speech and in writing and in Drama as well.

Today it is very important for our society which consisting with multi cultural, religious, languages and habits to build the nation with peace, unity and brotherhood to achieve our goals through education.

Hence I wish all the best and good luck for those qualified for awards at the annual occasion and inauguration of the Trinity College hall Centre scheduled to take place on 24th October, 2015 and to express my personal good wishes to strengthen the effort to make available services further high in value.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सत्यमेव जयते

भारत का सहायक उच्चायुक्त

ASSISTANT HIGH COMMISSIONER OF INDIA

कैंडी, श्री लंका

Kandy, Sri Lanka

## இந்திய உதவித் தூதுவர் செல்வி ராதா வெங்கட்ராமன் அவர்களின்

# ஆசிச் செய்தி ...



அகிலத்தில் இந்து சமுத்திரத்தின் முத்தென வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவின் மத்திய மாகாணத்தின் தலைநகராம் கண்டி மாவட்டத்தில் "அகிலம்" எனும் வருடாந்த சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

மலையக சமூகம் முன்னேறி வளம்பெற வேண்டுமாயின் அவர்களின் கல்வி மட்டம் உயர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை "அகிலம்" தனது கொள்கையாகக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. இந்த நோக்கத்தின் அடிப்படையில் "அகிலம்" நடாத்தும் போட்டிகள் காத்திரமானவையாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மாதாந்தம் வெளியிடப்பட்ட "அகிலம்" சஞ்சிகையும் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் கைவண்மையில் உருவானதாக அறிந்தேன். "அகிலம்" சஞ்சிகையின் படைப்புக்கள் யாவும் தரம் வாய்ந்தவை எனவும் அறிகிறேன். மாணவ சமுதாயத்திற்காகவும், தமிழ் மொழியைப் பேணி பாதுகாக்கும் நோக்கிலும் கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை வரவேற்கத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகள் மலையக மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இச்செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு அதன் மூலமாக இம்மன்றத்தின் உயரிய நோக்கங்கள் முழுமை பெற வாழ்த்துகின்றேன். அகிலம் சஞ்சிகை மீண்டும் மாதாந்த சஞ்சிகையாக வெளிவர பிரார்த்தனைகளுடன் .......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මහනුවර මහා නගර සභාව
கண்டி மாநகர சபை
**Kandy Municipal Council**

நகர பிதா
Mayor 081-2222274

உதவி நகர பிதா
Deputy Mayor 081-2222810

150
1865 - 2015

மாநகர ஆணையாளர்
Municipal Commissioner 081-2223821

உதவி மாநகர ஆணையாளர்
Deputy Municipal Commissioner 081-2225638

## கண்டி மாநகர பிதா மஹீன்ந்ர ரத்வத்தே அவர்களின்

# *வாழ்த்துச் செய்தி...*



கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் இலக்கிய விழா 2015 இது சம்பந்தமாக வாழ்த்துச் செய்தியைத் தெரிவிக்க முடிந்தமை எனக்குக் கிடைத்த பாக்கியமாகக் கருதுகின்றேன்.

கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றத்தினால் வெளியிடப் படும் "அகிலம் எனும் இலக்கிய சஞ்சிகை மூலம் தேசிய பல்கலைக்கழகத்திற்கு உட்பிரவேசித்தலிற்கும் பல்கலைக்கழக பட்டதாரி தரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் மாணவ மாணவியருக்குச் சிறந்த அறிவைப் பெறுவதற்கும் இச்சஞ்சிகை உறுதுணையாக அமைகின்றது என்பது எனது நம்பிக்கையாகும். பாடசாலை கல்வியின்மூலம் பெற்றுக்கொள்ளும் கல்விக்கு மேலதிகமாக தம்முடைய அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கு நூலகத்தின்மூலம் விவரங்களைப் பெற்றுக் கொள்வதோடு "அகிலம்" இலக்கிய சஞ்சிகை பல்வேறு வகையான வழிகளில் சிறந்த அறிவைப் பெற்றுக் கொடுக்கின்றது.

எவ்வாறாயினும் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் மாணவ மாணவியருக்கு அவர்களின் திறமையை மேம்படுத்துவதற்கு உங்களின் மன்றத்தின் மூலம் வருடந்தோறும் நடைமுறைப்படுத்தப்படும். அகில இலங்கை பேச்சு மற்றும் கவிதைப் போட்டிகள் மற்றும் கட்டுரை, சிறுகதை, நாட்டியம், நடனம், விவாதப் போட்டிகள் ஆகியவை மிகப்பெரிய உறுதுணையாக அமைகின்றது என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

உங்களின் மன்றத்தின் மூலம் வெளியிடப்படும் "அகிலம்" இலக்கிய நூல் எதிர்கால சந்ததியினருக்குத் திறமையான மிகச் சிறந்த அறிவாற்றல் வழங்கக் கூடியதாகவும் சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாகவும் வருடதோறும் இலக்கிய விழாவின் செயற்பாடுகள் சர்வபிரகாசமாக அமைய எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PURAVALAR PUTHTHAGA POONGA
## புரவலர் புத்தகப் பூங்கா

### தமிழுக்குத் தொண்டு செய்வோர் தாரணியில் சாவதில்லை!



"அகிலம்" அறிவியல் சஞ்சிகையும், கண்டி கலை, இலக்கிய இரசிகர் மன்றமும் இணைந்து நடாத்தும் கலைவிழா - 2015 தொடர்பாக வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உலக மொழிகளில் ஆதி மொழியாகவும், அழிவில்லா மொழியாகவும், அழகு மொழியாகவும் உலகோரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்ற உன்னத மொழிதான் தமிழ் மொழி என்பதில் எனக்கு முழுமையான உடன்பாடு உண்டு.

கலையும், இலக்கியமும் இன்பத் தமிழ் மொழிக்கு இரு கண்கள் போன்றவை என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. தமிழ்க் கலையையும், இலக்கியத்தையும் வளர்ப்பதில் பலர் ஈடுபாடு காட்டுவது மட்டுமல்லாமல் இன்பமும் அடைவதை நான் பார்த்திருக்கின்றேன்.

அந்த வகையில் கண்டி கலை, இலக்கிய இரசிகர் மன்றமும், கலாபூஷணம் கே. வி. இராமசாமி அவர்களின் "அகிலம்" அறிவியல் சஞ்சிகையும் இணைந்து நடாத்துகின்ற கலைவிழா கண்டு களித்துவிட்டுப் போகும் ஒரு களியாட்டமாக அல்லாமல் கன்னித்தமிழின் வளர்ச்சிக்கு ஓர் உந்துதலாக அமைகின்ற உன்னதமான விழாவாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

பல்வேறு விதமான போட்டிகளை நடாத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளையும் வழங்குகின்ற நிகழ்வும் இந்த கலைவிழாவில் இடம்பெறுவது பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போன்ற ஒரு சிறப்பம்சமாகும்.

தமிழால் வாழ்பவர்களும் இருக்கிறார்கள். தமிழுக்காக வாழ்பவர்களும் இருக்கிறார்கள். தமிழுக்காக வாழ்பவர்கள், தமிழ்த்தொண்டு செய்பவர்கள் தாரணியில் சாவதில்லை என்ற முதுமொழியின் படி கண்டி கலை இலக்கிய மன்றமும், "அகிலம்" அறிவியல் சஞ்சிகை நிறுவனமும் தமிழ் நேசர்கள் மனங்களில் நிரந்தரமாக வாழ்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இவர்களின் இன்பத் தமிழ் முயற்சி வெற்றிபெற இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- புரவலர் ஹாஷிம் உமர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல தொழிலதிபர்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்ற பெருந்தலைவர்
சேவாஜோதி எஸ். முத்தையா அவர்களின்

# *வாழ்த்துச் செய்தி ...*



எமது மலையகத் தலைநகர் கண்டி மாநகர். சமூக, சமய, பண்பாட்டுச் சிறப்பிலும் வரலாறு படைத்த எழில் கொஞ்சும் திருநகரமாகும்.

கலாபூஷணம் கே. வி. இராமசாமி "அகிலம்" சஞ்சிகை ஆசிரியராகவும், கண்டி கலை இலக்கிய ரசிகர் மன்ற தலைவராகவு மிருந்து அகிலம் இலக்கிய அறிவியல் சஞ்சிகையை வெளியிட்டு வருபவர். கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றமும் அகிலம் அறிவியல் சஞ்சிகையும் இணைந்து நடாத்தும் இலக்கிய பேச்சுப்போட்டியின் கலை விழா 24.10.2015இல் கண்டியில் நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்வுறுகின்றேன்.

பத்திரிகை வெளியிடுவது மிகவும் சிரமமான பணி என்றாலும் இக்காலகட்டத்தில் தனித்து நின்று அகிலம் சஞ்சிகையை நடாத்தி வருவது பாராட்டுக்குரிய பணி எனலாம்.

அகில இலங்கை ரீதியில் இலக்கியப் பரிசுப்போட்டி நடாத்தி, பரந்தளவில் பரிசளித்து விழாக் கொண்டாடுவதும், அதன் சிறப்பம்சமாக "அகிலம்" சிறப்பு மலராக வெளியிடுவதும் எமக்கு பெருமை சேர்க்கும் செயலாகும்.

அகிலம் தடையின்றித் தொடர்ந்து வெளிவரவேண்டும். எமது மலையகம் கல்வியில் வளர்ச்சி கண்டு பாரம்பரிய கலைகள் இலக்கியம் வளர வழி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

உள்ளத்திலிருக்கும் திறமைகளையும் எண்ணங்களையும் வெளிக்கொணர உதவுவதோடு சிந்திக்கும் ஆற்றலும் அறிவாற்றலும் வளர உதவுமென்பதில் ஐயமில்லை.

அதுவே எனது நல்வாழ்த்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூத்தூவி வரவேற்போம்



**கலாபூஷணம் புசல்லாவை குறிஞ்சிநாடன்**

1. மன்மத ஆண்டு
   மலர்ந்துள்ள இத் தருணம்
   புன்னகை பூத்து
   பொன்மணி அணிந்து
   மென்நடை போட்டு
   மோகனம் பாடிவரும்
   பொன்மயிலாள் அகிலத்தை
   பூத் தூவி வரவேற்போம்.

2. பூத்துவரும் புத்தாண்டில்
   புதுமணம் கமழட்டும்
   நேத்துவரை இருந்ததுயர்
   நீறாகப் போகட்டும்
   காத்திருந்த காலங்கள்
   கனியட்டும் என்றிருந்தோம்
   சாத்திட்ட சாளரங்கள்
   சடுதியாய்த் திறந்தனவே.

3. அகிலம் சுமந்துவரும்
   அருமையாம் தானங்கள்
   மகிழ்வைத் தருவதுடன்
   மதிகெட்டுத் திரிவாரைத்
   தகித்துப் பொசுக்கியுடல்
   தரமான பொன்னாக்கி
   ஜெகத்தைச் சீராக்கும்
   திருப்பணியை வாழ்த்துகிறோம்.

4. கவிதையாய்க் கட்டுரையாய்
   கவினூறும் தேனடையாய்
   புவிமாற்ற வருகின்ற
   புத்தான ஆக்கங்கள்
   செவிகேட்கும் எல்லோரும்
   தித்திப்பாய் பேசுகின்ற
   பவிசான அகிலத்தை
   பாசமாய் வரவேற்போம்.

5. மன்மத ஆண்டு
   மலர்ந்துள்ள இந்நாளில்
   துன்மதியர் எல்லோரும்
   தூரோடு சாய்ந்திட்டார்
   துன்பத்தை வேதனையை
   துணையாக்கித் தந்தவர்கள்
   தென்புலத் தெய்வத்தால்
   துயருற்று வீழ்ந்தார்கள்.

6. மலையக மக்களை
   மாடுகளாய் ஆடுகளாய்
   நிலைகுலையச் செய்தவர்கள்
   நிலைகுலைந்து போனார்கள்
   மலைமுகடாய் நின்றவர்கள்
   மண்மேடாய் ஆனார்கள்
   தலைக்கனம் கொண்டவர்கள்
   தான்கவிழ்ந்து போனார்கள்

7. புத்தாண்டின் பின்னாலே
   பூத்தது புதுவுலகம்
   எத்திக்கும் இருக்கின்ற
   ஏதலிகள் எல்லோரும்
   பத்திரமாய் வாழும்முறை
   பாங்காக வந்ததுடன்
   நித்தியமும் சுதந்திரத்தை
   சுகிக்கும் வழி கண்டார்கள்.

8. வாழ்வதற்கு வீடின்றி
   வதைபட்டு நின்றமக்கள்
   வாழ்வதற்கு வீடுகட்ட
   வகையாக ஓர்நிலத்தை
   ஆள்வதற்கு இடம்தந்த
   அன்பான நெஞ்சினரை
   தாழ்மையுடன் வணங்கியே
   தக்கோரை புகழ்கின்றார்.

9. படிப்போர்க்குப் பள்ளியும்
   படித்தோர்க்குத் தொழிலும்
   இடிந்திருக்கும் முதியோர்க்கு
   இலவசமாய் மருந்தகமும்
   குடிப்பதற்கு நன்னீரும்
   குழந்தைகட்குப் பால்மாவும்
   கொடியோர்க்குக் கைவிலங்கும்
   கூட்டாட்சி தரவேண்டும்.

10. குடிகெடுக்கும் மதுவொழித்து
    ஹரோயினைத் தானொழித்து
    மிடிமையால் அடிமையாகும்
    சிறுவர்களை மீட்டெடுத்து
    துடிதுடிக்கக் கற்பழிக்கும்
    தீயோரைக் கூண்டிலிட்டும்
    முடிக்கும்வரை மக்கள் துயர்
    முடிவாகிப் போகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கங்கை யமுனை குமரி நதிகள்

குறிஞ்சி கவிமழை – புசல்லாவை ஸ்மாலிஹா

தலைவி என்றும் துணைவி என்றும்
தன்நிகர் இல்லாத் தாயே என்றும்
அலையிடை பிறவா அமிழ்தே என்றும்
அதியுயர் பதவி தந்தார் ஆன்றோர்.

மனைவி என்றும் மகளே என்றும்
மனையதன் விளக்கு இவளே என்றும்
மனையறம் காக்க வந்தவள் என்றும்
மங்கையின் புகழைப் பாடி நின்றார்.

இலட்சுமி என்றும் சரஸ்வதி என்றும்
இறைவி என்றும் தலைவி என்றும்
இலக்கியத்தில் சமயங்களிலே
ஏற்றம் பெற்றார் பெண்கள் அன்று.

கங்கை யமுனை குமரி நதிகள்
களங்கம் இல்லாப்பெண்கள் பெயரால்
எங்கும் ஓடி பெருமை பெற்று
இதிகாசப் புகழும் அடைந்த தன்றோ!

பாவை மன்றம் பாவை விளக்கு
பாவைக் கூத்தென பற்பல சிறப்பு
அவைதனில் ஔவை கவி மழை பொழிந்திட
அதியமான் வியந்தது விறுவிறுப்பு

எத்தனை ஏற்றங்கள் இருந்தன அன்று
அவைகளைக் காணோம் இங்கு இன்று
உத்தமப் பெண்களின் துயர்கள் வென்று
உயர்வு காணும் நாளும் என்று

சீதனம் வாங்கும் மணமகனாகும்
சிறப்பாய் தாலி கட்டிடுவார் பின்
ஆதனம் கொண்டு வா வென கூறி
அடிமைப்படுத்தி கொடுமை செய்வார்.

பாட்டில், படத்தில், தொலைக் காட்சியதில்
பாங்காய்க் காட்டும் பெண்மை எல்லாம்
காட்டில் பொழியும் நிலவைப் போல்
காட்சி அளிப்பது துயரமன்றோ.

ஏழைப் பெண்கள் திருமணக் கனவை
இரவும் பகலும் கண்டிடுவார்
வாழைத் தளிராம் இளமை கருக
வாழ்வைத் தொலைத்து தனித்து நிற்பார்

வீட்டின் வறுமை போக்கிடவே
விரும்பி நாளும் உழைக்கின்றார்
நாட்டின் பொருளாதாரம் தான்
நன்றாய் வளர பணிகள் செய்வார்

ஏடுகளிலே பெண்கள் பற்றி
எடுப்பாய் தலைப்பு தீட்டிட்டால்
நாடுகளெல்லாம் ஒன்றாய் கூடி
நங்கையர்க்காக வாதிட்டால்

அழகு ராணிப் போட்டிகளிலே
அழகு பவனி வந்திட்டால்
கழகங்களிலே தலைவியாகி
கருத்தை மதிப்பாய் சொல்லிவிட்டால்

எங்கள் செல்வியர் வாழ்வில் மேன்மை
ஏற்றம் அனைத்தும் வந்திடுமா?
பொங்கும் துயரக் கதைகள் மாறி
புவியில் சுபீட்சம் தங்கிடுமா?

ஆண்களைப் போல உடை உடுத்தி
அழகு நடையும் நடந்திட்டால்
பெண்கள் தரமும் சமமாய் ஆகி
பெருமை அனைத்தும் தந்திடுமா?

வீட்டில் வெளியில் சமூகமதில்
வாழ்வில் வசதியில் கல்விதனில்
நாட்டின் சட்ட திட்டங்களில்
நமது பெண் நிலை உயர்ந்திடனும்

முட்டும் துயரைத் துடைத் தெறிந்து
மங்கையர் நேயம் மலர்ந்திடனும்
வாட்டும் அடிமை நிலை மாறி
வளமாய் பெண் நிலை வளர்ந்திடனும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘சாகித்ய ரத்ன’ தெளிவத்தை ஜோசப்: மலையக மண்வாசனைக்கு கிடைத்த தேசிய அங்கீகாரம்



மயில்வாகனம் திலகராஜ் (மல்லிகைப்பூசந்தி திலகர்) (பா. உ)

இலங்கை நாடானது கிராமிய பொருளாதார முறைமையில் இருந்து பெருந் தோட்ட பொருளாதார முறைக்கு கால் பதித்து கோப்பி, தேயிலை பயிர்ச்செய்கைகளை ஆரம்பிக்கத் தொடங்கியவுடன் பொருளாதாரத்தில் மாத்திரமின்றி சமூகப் பண்பாட்டு கலை, இலக்கிய கட்டமைப்பிலும் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அந்த வகையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வளம் சேர்ப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர் மக்களும் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் இன்று ‘மலையக மக்கள்’ என பலராலும் நாகரிகமாக அறியப்பட்டாலும் கூலிகள், கள்ளத்தோணிகள், வடக்கத்தியான்கள், இந்திய தொழிலாளர்கள், பெருந்தோட்ட



தொழிலாளர்கள், இந்திய வம்சாவளியினர் என பலவாறு அழைக்கப்பட்டு வந்துள்ளனர். இன்றும் இந்த மக்களை ‘இந்தியத் தமிழர்’ என சுட்டும் மரபு சட்டரீதியாக இருந்தாலும் பண்பாட்டு ரீதியாக இந்த மக்களை ‘மலையக மக்கள்’ என அழைக்கும் மரபு ஓங்கி வளர்ந்துள்ளது. இந்த சிந்தனை வலுப்பெற காரணமே அது நாள்வரை ஏறக்குறைய நூறு ஆண்டுகளை இந்த நாட்டின் வளர்ச்சிக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்த மக்கள் கூட்டத்தினரது ‘குடியுரிமை’ இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததோடு பறிக்கப்பட்டதும், அந்நிய மனப்பான்மையுடன் ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இவர்களை இந்தியாவுக்கு திருப்பியனுப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியு மாகும்.

மலையக அரசியல் தொழிற்சங்க வரலாறு ஆழமானது. இன்றைய மலையக மக்களின் இயக்கத்துக்கு இன்றியமையாத பல பணிகளை அரசியல், தொழிற்சங்கத் துறை ஆற்றியிருக்கிறது. அதேநேரம் இந்த ‘மலையக மக்கள்’ எனும் கருத்துருவாக்கத்தை பண்பாட்டு அடிப்படையில் வளர்த்தெடுப்பதற்கு மலையக இலக்கியத்துறை ஆற்றியுள்ள, ஆற்றிவரும் பங்களிப்பு மகத்தானது. கோ. நடேசய்யர் முன்வைத்த ‘நாம் இலங்கையர்’ என்ற மன எண்ணம், சி. வி வேலுப்பிள்ளை அவர்களின் படைப்புகள் ஊடாக ‘மலைநாட்டவர்’ என்று பரிமாணம் பெற்று, தோழர் இளஞ்செழியன், இர.சிவலிங்கம் போன்றோரினால் ‘மலையகம்’ கருத்துருவாக்கமாக வலுப்படுத்தப்பட்டது. இந்த ‘மலையகம்’ எனும் சிந்தனையாளர்களின் கருத்துருவாக்கத்திற்கு உணர்வு கொடுத்தவர்கள் மலையக எழுத்தாளர்கள். அவர்கள் 1960களில் இயங்கத்தொடங்கிய ‘ஆத்திரப்பரம்பரையினர்’ என வரலாற்றில் பதிவாகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆத்திரப்பரம்பரையைச் சேர்ந்த எழுத்தாளரே தெளிவத்தை ஜோசப். 1934 ஆம் ஆண்டு பதுளை ஊவாகட்டவளை தோட்டத்தில் பிறந்து 1960 களில் எழுத்துலகில் நுழைந்து ஐம்பது வருடகாலம் தொடர்ச்சியாக எழுதி; இயங்கி வருபவர். ஆரம்ப காலங்களில் மலையக மக்களின் வாழ்வியலை, மாறாத மனம் கமழும் மண்வாசனையுடன் எழுதி வந்த இவர், பின்னைய நாட்களில் தலைநகர் நோக்கி இடம்பெயர்ந்தவராக, யுத்தகாலத்தின்போதான தலைநகர்சார் சிறுபான்மை மக்களின் வாழ்வியல் அவலத்தை தமது படைப்புக்களில் வெளிப்படுத்தியவர். இந்த இருநிலை வியாபகம் மலையக எழுத்தாளர்களுள் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு ஒரு தனித்துவத்தையும் அவருக்கு ஒரு பன்மைத்துவத்தையும் ஏற்படுத்தியது. புனைவு இலக்கியம் மட்டுமல்லாது புனைவு சாரா இலக்கியத்திலும் அவர் தன்னை பதிவு செய்தார். இது தமிழக, மற்றும் புலம்பெயர் தமிழ் இலக்கிய, செயற்பாட்டுச் சூழலில் தெளிவத்தை ஜோசப் அவர்களை பிரபலமாக்கியது.

மலையக எழுத்தாளராக மேற்குலக நாடுகளிலும் தமிழகத்திலும் நன்கு அறியப் பட்டவராக மலையக இலக்கிய தளத்தி லிருந்து, ஈழத்து இலக்கிய தளத்திலும் தமிழ் இலக்கியத் தளத்திலும் இவரது ஆளுமை அடையாளம் கண்டது. தமிழக இலக்கியவாதிகளை இலங்கைக்கு அழைத்து கௌரவிக்கும் நிலையில் தெளிவத்தை ஜோசப் அவர்களை தமிழகம் அழைத்து விருது வழங்கி கௌரவித்தது. தெளிவத்தை ஜோசப் அவர்களது 'கூனல்' எனும் சிறுகதை உலகத்தரம் வாய்ந்தது என்று எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியும், 'மீன்கள்' எனும் சிறுகதை தமிழில் வெளியான முதல் நூறு சிறந்த சிறுகதைகளில் அடங்கப்பெறும் என்று எழுத்தாளர் ஜெயமோகன் பட்டியி லிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மட்டுமல்லாது தெளிவத்தை ஜோசப்பின் ஒன்பது சிறுகதைகளைத் தொகுத்து தானே தொகுப்பாசிரியராக 'மீன்கள்' எனும் தலைப்பில் ஜெயமோகன் வெளியிடும் அளவுக்கு அந்த கதை அவரில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.



இவர் நாளாந்த வாழ்வில் மக்களோடு பழகுகின்ற தன்மையும், அவரது சமூக பிரக்ஞையும், சமூகம் நோக்கிய அவரது வித்தியாசமான பார்வையும் அவரது படைப்புக்களில் ஒரு வித்தியாசத்தன்மையையும் யதார்த்தத்தையும் கொண்டுவந்து விடுகின்றது. மக்களின் வாழ்க்கையை தமது எழுத்துக்களின் ஊடாக படைப்பாக்கம் செய்யும் செழுமைப் பெற்றவர் ஜோசப். அவரது ஒவ்வொரு படைப்புக்குள்ளும் சமூக வாழ்வின் பல்வேறு நுணுக்கங்களையும் வெளிக் கொணர்ந்திருப்பவர். எப்போதும் தேடல் மிகுந்த இவரது பழக்கம் இவரது வீட்டினை ஒரு வாசிகசாலையாகவும், பலநூறு புத்தகங்களைக்கொண்ட ஒரு நூலகமாகவும் ஆக்கிவிட்டிருக்கின்றது.

## தெளிவத்தை ஜோசப் அவர்களின் படைப்புகளின் பட்டியல் :-

**நாவல்கள் :-**

- காதலினால் அல்ல - மித்திரன் வாரமலர் -1966
- காலங்கள் சாவதில்லை - வீரகேசரி (நூல் வடிவம் - வீரகேசரி பிரசுரம் 1974)
- நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் தினகரன் 1983
- குடை நிழல் - 'சுபமங்களா' நாவல் போட்டிக்காக எழுதியது. 1996 (நூலுரு வாக்கம் கொடகே வெளியீடு 2010, மறுமதிப்பு 'எழுத்து' பதிப்பகம் தமிழ்நாடு - 2013)
- மாறுதல்கள் (தாய்வீடு – கனடா இதழில் தொடராக வெளிவந்துகொண்டிருக்கிறது) 2013/14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறுநாவல்கள் :-**

- பாலாயி – கதம்பம் இலக்கிய இதழ்
- மனம் வெளுக்க – தினகரன்
- ஞாயிறு வந்தது – கலைமகள் இலக்கிய இதழ் - இந்தியா (இவை மூன்றும் அடங்கிய தொகுப்புநூல் 'பாலாயி' துரைவி வெளியீடு -1997)

**ஆய்வுக்கட்டுரைத் தொடர்கள் :-**

- மலையக சிறுகதை வரலாறு – தினகரன் (நூல்வடிவம் - துரைவி பதிப்பகம் 2007)
- இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இதழியல் வரலாறு - தினகரன் - 2000/2002) (நூலுரு வாக்கம் அச்சில்)
- மலையக நாவல் வரலாறு – (நூலுரு வாக்கம் அச்சில்)

கடந்த ஐம்பது ஆண்டுகளில் பல்வேறு சஞ்சிகைகள் பத்திரிகைகளில் எழுபத்தைந்துக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதி யுள்ளார். அவற்றுள் தொகுப்புக்களாக வெளிவந்தவை,

**சிறுகதைத் தொகுப்புகள் :-**

- நாமிருக்கும் நாடே - வைகறை வெளியீடு - (யாழ்ப்பாணம் -1979)
- மீன்கள் - தொகுப்பாசிரியர் ஜெயமோகன் (நற்றிணைப்பதிப்பகம் -இந்தியா 2013)
- தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் - (பாக்யா பதிப்பகம் -ஹற்றன் 2014)

**சிறுகதைகளின் தொகுப்பாசிரியராக பின்வரும் தொகுப்புகளில் பங்கேற்றுள்ளார்**

- மலையக சிறுகதைகள் (துரைவி வெளியீடு)
- உழைக்கப்பிறந்தவர்கள் (துரைவி வெளியீடு)
- துரைவி தினகரன் சிறுகதைகள் (துரைவி வெளியீடு)
- சுதந்திர இலங்கையின் ஐம்பது சிறுகதைகள் (கலாசார அமைச்சு வெளியீடு)

தினசரிகள், வாரஇதழ்கள், இலக்கிய சிற்றிதழ்களில் பத்திகளை எழுதுவதன் மூலம் பத்தி எழுத்தாளராகவும் தன்னை அடையாளம் காட்டியவர் தெளிவத்தை ஜோசப் அவர்கள்.

தினகரன் - இலக்கிய தகவல்கள்
வீரகேசரி - இலக்கிய தகவல்கள்
சிலுமின - பாலம்

போன்றன இவரது பிரபலமான பத்தி எழுத்துத் தொடர்களாகும். இந்த பத்திகள் ஊடே இலக்கிய இரசனைக்கட்டுரைகள், விமர்சனக் குறிப்புகள், நூலறிமுகம், துயர் பகிர்தல், மொழிபெயர்ப்பு அம்சங்கள், இலக்கிய பயணக்கட்டுரைகள், இலக்கிய அனுபவங்கள் போன்றவற்றை பதிவு செய்துள்ளார். வேறு எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு (சிறுகதை -17, கவிதை -2, நாவல்-6, நடைச்சித்திரம் -2 நாடகநூல் - 1, ஆய்வு நூல் - 1, நாட்டாரியல் -1) 30 க்கும் மேற்பட்ட முன்னுரை, அணிந்துரைகள் எழுதியுள்ளார்.

இவரது படைப்புகள் சிங்களம், ஆங்கிலம், மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இந்தியா, தமிழகம் பாரதிதாசன் பல்கலைகத்திலும் இலங்கையின் பேராதனை, யாழ், சப்ரகமுவ, கிழக்கு பல்கலைக்கழகங்களிலும் பட்டப் படிப்பின் பகுதி தேவையாக பட்டதாரி மாணவர்கள் இவர்களது படைப்புகள் குறித்து ஆய்வக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர்.

**தெளிவத்தை ஜோசப் அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள விருதுகள் :-**

- இலங்கை அரச சாகித்திய விருது (நாமிருக்கும் நாடே 1974, மலையக சிறுகதை வரலாறு 2001)
- கலாபூஷணம் விருது (1995 அறிமுக ஆண்டிலேயே பெற்றுக்கொண்டார்)
- தேசிய இன ஒற்றுமைக்கான சாகித்திய விருது - 2000





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொழும்பு கம்பன் கழகத்தின் உயர் இலக்கிய விருது - 1999
- தமிழியல் விருதினையும் தமிழியல் வித்தகர் - எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் -2008
- பண்டிதமணி சி. கணபதிபிள்ளை நினைவாக வழங்கப்படும் உயர் விருதான 'சம்பந்தன்' விருது -2001
- 'குடை நிழல்' என்ற நாவலுக்காக தென்னிந்தியாவின் 'சுபமங்களா' பரிசு. 1996
- பேராதனை பல்கலைக்கழகம் (தமிழ்ச் சங்கம்) 'உயர் இலக்கிய விருது' - 2007
- கொடகே நிறுவனம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது - 2011
- கொழும்புப் பல்கலைக்கழக (தமிழ்ச்சங்கம்) இலக்கிய விருது - 2013
- இந்தியா தமிழ்நாடு 'விஷ்ணுபுரம் இலக்கிய வட்டம்' வழங்கிய 'விஷ்ணுபுரம்' விருது - 2013

இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, இந்தியா போன்ற வெளி நாடுகளில் இயங்கும் தமிழிலக்கிய அமைப்புகள் இவரை அழைத்து கௌரவித்திருப்பது இலங்கை, மலையக இலக்கியத்துக்கு கிடைத்த பெரும் கௌரவமாகவே அமைகிறது

இலங்கையில் வெளிவரும் இலக்கிய இதழ்களான 'மல்லிகை', 'ஞானம்', 'தமிழமுது' ஆகிய இதழ்களும், ஜேர்மனியில் இருந்து வெளிவரும் 'உரையாடல்' இதழும் தமது முன்னட்டையில் தெளிவத்தை ஜோசப் அவர்களது நிழற்படத்தை பிரசுரித்து கௌரவம் செய்திருக்கின்றன. இவரது பவள விழா ஆண்டில் 'ஞானம்' சிறப்பிதழையும், அமுதவிழா ஆண்டில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் சார்பில் 'வீரகேசரி' நிறுவனம், **கண்டி கலை இலக்கிய இரசிகர் மன்றம் 2014-2015** ஆண்டுக்கான **'அகிலம்'** அறிவியல் சஞ்சிகையிலும் அட்டைப்பட அதிதியாக தெளிவத்தை அவர்களை வெளியிட்டு கௌரவம் செய்கின்றது.

இலங்கையின் பிராந்திய இலக்கியம் தவிர்ந்து சிங்கள இலக்கிய சூழலிலும் அறியப்பட்ட ஆளுமையாக இருக்கும் தெளிவத்தை ஜோசப் எண்பது வயதினை எய்துவிட்ட நிலையிலும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தினதும், இலங்கை சிங்கள் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினதும் தலைவராக இலக்கிய வேட்கையோடு ஆர்வமாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கிக்கொண்டிருக்கிறார்.

இந்த நிலையிலேயே தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு இலங்கை அரசினால் வழங்கப்படும் அதி உயர் இலக்கிய விருதான 'சாகித்ய ரத்ன' 2014-09-03 அன்று இலங்கை நாட்டின் ஜனாதிபதி கரங்களில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. சிங்கள இலக்கியம் மற்றும் புலமைசார் துறைக்கு ஆற்றிய பணிகளுக்காக பேராசிரியர் விமல் திசாநாயக்க மற்றும் ஆங்கில இலக்கிய மற்றும் ஊடகத்துறைக்கு வழங்கிய பங்களிப்புக்காக எழுத்தாளர் கார்ல் முல்லர் ஆகியோரோடு ஈழத்து தமிழி லக்கியத்துறைக்கு பொதுவாகவும் மலையக இலக்கியத்துக்கு குறிப்பாகவும் தமது சீரிய பங்களிப்பை நல்கியமைக்காக தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கும் இவ்வாண்டு இந்த சாகித்ய ரத்ன விருதும் பணப்பரிசும் வழங்கப் பட்டுள்ளது.

வாழ்நாளில் ஒரு முறை மாத்திரம் வழங்கப் படும் இவ்வுயர் இலக்கிய விருதானது, இதுவரை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, எம்.எம். சமீம், வரதர், சொக்கன், செங்கைஆழியான், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் அருணாசலம், எழுத்தாளர் தெணியான் போன்ற ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆளுமைகளுக்கும் இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது. பதுளையை பிறப்பிடமாகக் கொண்ட, முற்போக்கு எழுத்தாளரான எம்.சமீம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில், மலையக மக்களின் மண்வாசனை கொண்ட எழுத்தாளர்கள் வரிசையில் முக்கிய மலையக படைப்பாளியாக விளங்கும் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு சாகித்யரத்ன வழங்கப் பட்டுள்ளமையானது இந்நாட்டுக்காக உழைத்தும் ஒருகாலத்தில் குடியுரிமை பறிக்கப் பட்ட, அந்நியர்களாக நாடுகடத்தப்பட்ட மலையக மக்களின் இலங்கைத் தேசிய அடையாளத்தை, மலையக தேசியத்தின் தனித்துவத்தை உணர்த்தும் அதேவேளை மலையக இலக்கியத்தின் ஊடாக வளர்த்தெடுக்கபட்டுள்ள மலையக மண் வாசனைக்குக் கிடைத்த தேசிய அங்கீகாரமாக அமைந்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவத்தை என்றொரு புத்தகம் !

உழைக்கும் வர்க்கத்தில் கொதித்து குமிழியிடும் எழுத்து சிந்தனைகள்தான் மலையக இலக்கியமாகிறது. தமிழ் இலக்கிய பெருவெளியில் சுமை நிறைந்த படைப்புக்களை சமூக நீதியின் முன்னால் சமர்ப்பித்துக் கொண்டிருப்பவர்கள்தான் மலையக எழுத்தாளர்கள்.

இந்த சமூகத்தின் இலக்கிய நெடுஞ் சாலையில் முதல் காலடி பதித்தவர் கோ. நடேசய்யர். இரண்டாவது நிலையில் கவிஞர் தாகூர் நிகருக்குப் படைப்புக்கள் யாத்த கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை இவருக்கு அடுத்தவர் இலக்கியச் செம்மல் என். எஸ். எம். ராமையா.

இம் மூவரைத் தொடர்ந்து எங்களது புதிய பாதையில் நான்காவது மைல் கல்லாக கம்பீரமாய் நின்றுகொண்டிருப்பவர்தான் தெளிவத்தை ஜோசப்!.

சக படைப்பாளர்களை சக படைப்புக்களை அறியாத, அறிய விரும்பாத இன்றைய தமிழ் இலக்கிய கலாசாரத்தில் தெளிவத்தை விதி விலக்கானவர். நம் நாட்டு படைப்பாளர் அவர்தம் படைப்புகள் பற்றி விரல் நுனியில் தகவல் ஏந்தி வைத்திருக்கும் ஓர் அபூர்வமான இலக்கியவாதி.

பிரதேச, தேசிய வேலிகளுக்கப்பால் சர்வ தேசிய தமிழ் கூறும் நல்லுலகை தெளிவத்தை ஜோசப் என்ற ஒரு பெறுமதியான புத்தகம் எழுத்துள்ளவரை அலங்கரித்துக் கொண்டேயிருக்கும் !

மனம் நிறைந்த வாழ்த்துகளுடன்...



**கலாபூஷணம்**
**மு. சிவலிங்கம்**



## வயது நீட்சியிலும் குறைந்து செல்லும் விளைவு விதியை சந்திக்காதவர்

தனக்குரிய தனித்துவமான சொல் அலகுகளால் ஒடுக்கப்பட்டோரின் உணர்வுகளைக் கலை வெளிக்கு கொண்டு வருபவர் தெளிவத்தை ஜோசப் அவர்கள். "ஒடுக்கப்பட்டோர்" என்ற அடையாளத்தினர் காலனித்துவத்தின் விளிம்பு நிலையினராவர். பின் காலனிய நிலையிலும் அந்த அடையாளம் தொடர்ந்துகொண்டிருத்தல் கால மாற்றத்தின் பின்னடைந்த விசைகளையே குறிப்பிடுகின்றது.

ஒடுக்கு முறையின் குறியீடாக அமையும் லயன் வாழ்வில் அனுபவச் சிதறல்களின் நுண் அலகுகளையும் சமூக மாற்றத்தின் அழுத்தத் துணிக்கைகளையும் புனைவாகவும் புனைவு வழி "ஈட்டிகளாகவும்" தருவதில் அவர் தனித்துவமானவர். அவற்றோடு இணைந்த வாசகங்களாக அவரது எழுநடை (Style) அமைந்துள்ளது.

தெளிவத்தையின் ஆளுமையை ஆழந்து நோக்குவதனால், அவரை ஒரு மீயறிகை (Metacognition) வயப்பட்ட எழுத்தாளர் என்றே குறிப்பிட வேண்டும். தனது நிலைப்பாட்டையும் செயற்பாட்டையும் தாமே ஆழ்ந்து விளங்கிக் கொள்ளல் மீயறிகையாகும். அதுவே எழுதும் செயற்பாட்டை மேற்கொள்வதற்குரிய அகவிசையாகும். மீயறிகையை வளர்த்துக்கொள்ளல் எழுதும் வனப்பை வளர்த்துக்கொள்ளலாகும்.

எழுதும் செயல் முறை அதன் வழியாக எழும் விளைவு ஆகிய இரண்டிலும் ஊன்றிய விசைகளுடன் நின்றமையால், அவரின் எழுத்தாக்கங்கள் காலவெளியிலே கரையாது நிற்கின்றன. அவருக்கே உரிய சுய நெறிப்பட்ட "கோடலாக்கம்" எழுத்துக்களுக்குரிய தனித்துவமான நுழைவாயிலை பிறப்பிக்கின்றது.

வயது நீட்சியிலும் குறைந்து செல்லும் விளைவுவிதியைச் சந்திக்காத தெளிவத்தை அவர்களுக்கு எமது நல் வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் சபா. ஜெயராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருதுகளால் அளக்க முடியாத படைப்பாளி ...!

இலங்கை தமிழ் இலக்கிய உலகில் தெளிவத்தை ஜோசப் என்ற படைப்பாளர் சிலாகித்துப் பேசப்பட்டுக் கொண்டிருப்பவர்.

இவரது படைப்புகள் மீள் பிரசுரமாகி வருவது புதிய தலைமுறை படைப்பாளர்களுக்குக் கிடைத்திருக்கும் வரப்பிரசாதமாகும்.

சிறுகதை, நாவல், இலக்கியங்களுக்கப்பால் ஆய்வுகள், வரலாறுகள், படைப்பாளர் பற்றிய மதிப்பீடுகள் என இவரது உழைப்பு பெருமைக் குரியவை.

தெளிவத்தை விருதுகளால் அளவிட முடியாத விசாலம் கொண்டவர்.

தமிழ் நாடு விஷ்னுபுரம் விருது, மலையகப் படைப்புகளுக்கு மட்டுமல்ல, இலங்கையின் அனைத்து தமிழ் படைப்புகளுக்குமே கிடைத்திருக்கும் ஓர் வெகுமதியாகும். சிறந்த வாசகர்களாலும் படைப்பாளர்களாலும் கௌரவப் படுத்தி வழங்கியிருக்கும் இந்த இலக்கிய விருது மிக மேன்மை மிக்கதென மனங்கொள்ள வேண்டும்.

அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுதி வரும் தெளிவத்தையின் இலக்கிய உழைப்பை தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் மறந்துவிடாது.

இதயம் நிறைந்த வாழ்த்துக்களுடன்,



பதுளை
சேனாதிராஜா
(சட்டத்தரணி)

## அக்கினிக்குஞ்சு...

தெளிவத்தை ஜோசப் என்ற உயர்படைப்பாளி
மலையகத்தின் குன்றிட்ட தீபம்
மலையகம் என்ற சொல்லுக்கு அடையாளத்தையும்
அர்த்தத்தையும் முழு உலகுக்கும்
உணர்த்திய மானிட நேயன்.

மலையகத்தில் கதையில்லை, கவிதையில்லை
காவியங்கள் தோன்றுவதற்கும் சிருஷ்டி
கர்த்தாக்கள் என்று சொல்வதற்கும் யாருமில்லை
வந்தேறு குடிமக்கள் தானே இவர்கள்
என்று நாவறுத்தோர் சொன்ன கூற்றுக்கு
தக்க விடை பகிர்ந்தார் தம் படைப்பாலே
விருது பெற்றார், வீறுபடைத்தார்
லயத்தில் பிறந்தோர் வெறும் விழல் அல்ல
தேயிலைச் செடி வாழ்வு கரிக்கும் கடலல்ல
கொழுந்து மலையில் கொளுத்தும் வெயில்
மலையடியில் கனக்கும் குளிர் உறையும்
கடிக்கும் அட்டை அடிக்கும் சிறுத்தை, மிதிக்கும்
யானை எல்லாம் கதைக்கருக்கள்
அவர் எழுத்தில் மிளிரும் உணர்வலைகள்

மலையக தேசியத்தின் வயது ஐம்பது
ஆரம்பித்து வைத்தவர் அண்ணல் இர. சிவலிங்கம்
தொடர்ந்து முன்னெடுத்தார் அமரர் பி.சந்திரசேகரன்
அதனை எழுத்தில் உருக்கொடுத்தார்
சந்தன சாமி தெளிவத்தை ஜோசப்
அதற்கான ஆவணங்கள்...

'பாட்டி சொன்ன கதை', 'நாமிருக்கும் நாடே',
'காலங்கள் சாவதில்லை', 'பாலாயி', 'மீன்கள்',
'குடைநிழல்', 'நாங்கள் பாவிகளாக இருக்கிறோம்'
இன்னும் பல் சிருஷ்டிகள் இவர் புகழ் கூறும்.

மலையகத்துக்கு யாரால் புகழ்?
இவரால் மலையகத்துக்கு புகழ்
அக்கினி குஞ்சொன்று கண்டேன்
அதை அங்கொரு காட்டிலோர்
பொந்தொன்றில் வைத்தேன்
வெந்து தணிந்தது காடு தழல் வீரத்தில்
குஞ்சென்றும் மூப்பென்றும் முண்டோ - ஆம்
எங்கள் அக்கினிக் குஞசு வேறொன்றுமில்லை
தெளிவத்தை, தெளிவத்தை, தெளிவத்தைதான்.



இரா. சடகோபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கிய பணி மேலும் மெருகேற்றி தொடர வேண்டும்...!

தமிழ்நாடு பிரபல எழுத்தாளர் ஜெயமோகன் இலக்கிய வட்டத்தினரால் அண்மையில் விஸ்ணுபுர விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது மலையகத்தின் தலைசிறந்த இலக்கியப் படைப்பாளி தெளிவத்தை ஜோசப் அவர்களை பாராட்டும் இந் நிகழ்ச்சியின்போது அவருக்கு எனது வாழ்த்துகளை தெரிவிக்க கிடைத்த இவ்வாய்ப்பிற்காக பெரிதும் மகிழ்ச்சி யடைகின்றென்.

வாழ்வின் பல துறைகளிலும் பின்னடைந் துள்ள மலையக சமுதாயத்திற்கு இன்று பெருமையுடன் சுளிக்கொள்ளவுள்ள வெகு சில துறைகளில் படைப்பிலக்கியத் துறை முக்கியமானதென்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். லௌகீக வாழ்வில் குறிப்பாக கல்வி, அரசியல் மற்றும் சமூக, பொருளாதார வளர்ச்சி என்பன ஒன்றுடன் ஒன்று கலந்து நாட்டில் ஒரு பிரிவினரை அடக்கி ஒடுக்கி நசுக்க முடிந்தாலும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் முற்றாக ஒடுக்கிவிட முடியாது. உணர்வுகள் சிந்தனையாக வெளிப் படுகையில் படைக்கும் ஆற்றலும் வெளிப்படலாம். அதனை ஒரு சிலரே எழுத்து வடிவில் வெளிக்கொணர முயற்சித்து வெற்றியும் அடைந்துள்ளனர். அவ்வாறானவர்களில் தெளிவத்தை ஜோசப் அவர்களை நான் முதல் வரிசை இலக்கிய கர்த்தாவாகவே பார்க்கிறேன்.

தான்பெற்ற கல்வியறிவினை சுயமாக மேலும் மெருகேற்றி தொழில் துறையில் தன்னை உருவாக்கிக் கொண்டு மனிதன் தனியே நாட்டுக்காக மாத்திரம் வாழ்பவன் அல்ல என்பதனை உலகிற்கு பறைசாற்றிய பெருமையினை நாம் தயங்காது ஜோசப் அவர்களுக்குவழங்கலாம். தனதுசிந்தனையின் வெளிப்பாடுகளை சிறுகதைகளாக சமூக விழிப்புணர்வு கட்டுரைகளாக பல தசாப்தங்களாக படைத்து பிற்காலங்களில் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிலும் இன்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு எழுத்தாளராக வளர்ந்து மலையக தமிழ் இலக்கியவாதிகளில் தலைசிறந்தவராக மாத்திரமின்றி தமிழ் இலக்கியத்தின் கருவறைக் காப்பாளர்களினாலேயே (தமிழ்நாடு) இன்று பாராட்டியும் விருது வழங்கியும் கௌரவிக்கப் பட்டுள்ளமையினை வலுவிழந்து கிடக்கும் மலையகத்திற்கு கிடைத்த ஆறுதலாகவும் ஊக்குவிப்பாகவும் கருதவேண்டும்.

எதிர்காலத்தில் தமிழ் இலக்கிய சமூகம் மலையக இலக்கியத்தின் தந்தையெனப் போற்றப் பட வேண்டியவர் தெளிவத்தை ஜோசப்பாக இருப்பார் எனும் எனது ஆருடம் மெய்யாகாது போக கரணம் இருப்பதாக எனக்கு தெரிய வில்லை.

தெளிவத்தை ஜோசப் அவர்களின் இலக்கியப் பணி தொடர வேண்டும். அதற்கு அவருக்கு நல்ல ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் மனோபாவமும் தொடர வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.



**பேராசிரியர் மா. செ. மூக்கையா**
முன்னாள் புவியியல் பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
துணைவேந்தர் கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணியம் பேசுவோம்


**மலர் சின்னையா**

முன்னாள் அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.


**போ**ற்றுவோம் பெண்ணியம்
வணங்குவோம் அவள் பிறப்பு
அவளுக்குள் இறங்கு
புரியும் அவள் தெய்வீகம்.

உயிர்களைப் பிரசவிக்கும்
இன்பத்தின் ஊற்று
குழந்தையின் பசிக்கு அவள்
உடம்பில் ஊற்று.

ஆண்வர்க்கம் அடங்குவதே
பெண்ணிடத்தில்
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
கொண்ட பெண்ணிடத்தில்

மென்மையின் இருப்பிடமே!
பொறுமையின் பொக்கிசமே!
அமைதியின் சாயலே!
பார்வையில் கருணையே!

பெண்ணே!
எந்தெந்த வறுமைகள்
எப்படி எப்படி வந்திட்டாலும்
பெண்மையைக் கடக்காதே.

வல்லவளாய் தலைவியாய்
வீர நங்கையாய்
அஞ்சா நெஞ்சினளாய்
அடிபணியா திடம் கொள்
இழந்திடாதே பெண்ணியத்தை.

ஆத்திரத்தால் கோபத்தால்
அகங்காரத்தால்
பொறாமையால்
வறுமையால்
உடைத்திடாதே பெண்மையை.

நீ குழம்பினால்
உன் வாழ்க்கை
மட்டுமா ? உன்
குடும்பம் நாடுமே
குழம்பி விடும்
நினைத்திடு
பெண்ணியம் வாழும்.

இல்லையேல் காப்பாற்ற
ஏந்த வேண்டும்
போர்க் கொடி.

ஆள்வதும் பெண்ணால்
அழிவதும் பெண்ணால்
அடிக்கடி நினைத்து
உன்ன நீ
நெறிப்படுத்து.

பெண்மையைக் காத்த
பெண்கள் காவியமானது
வரலாறு

"மன்னனும் நீயோ"
என்று நேருக்கு நேர்
நீதியை நிரூபித்த கண்ணகி
பெண்மையைக் காத்தாள்
பெற்றாள் வீரம்.

சீதையின் பெண்மை
மக(ா)வீரன் இராவணனையே
தள்ளி வைத்தது

இயமனை நெருங்கி
கணவனின்
உயிரையே பெற்ற
சாவித்திரியின் திட
நெஞ்சம் பெண்மையால் வந்தது.

கேட்பார் புத்தியால்
கைகேயி தன்
கணவனையே இழந்தாள்.

கூனியின் ஆத்திரமும்
சூழ்ச்சியும் இராமாயண
யுத்தத்திற்கே வித்திட்டது.

பெண்மையைப் பறிகொடுத்த
பூலான்தேவி எழுந்தாள்
வீரதீர மங்கையாய்
கொள்ளைக் காரியாய்
மக்கள் பிரதி நிதியாய்
உயர்ந்தாள்
வீரகாவியமானாள்.

வெளிச்சத்திற்கு வராமல்
எத்தனை எத்தனை
பெண்ணியம் காத்தவர்
காணும் இன்பம்
கோடி கோடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மனிதர்கள்...
# இர. சிவலிங்கம் – திருச்செந்தூரன்




தெளிவத்தை ஜோசப்

**மலையக இலக்கியம் மறக்க முடியாத மனிதர் அமரர் திருச்செந்தூரன் அவர்கள்:**

1960 க்குப் பின் எழுந்த மலையகக் கலை, இலக்கியப் புத்தெழுச்சியின் முதற்குரலாக ஒலித்தது கல்கியில் பரிசு பெற்ற அவரது "உரிமை எங்கே?" என்னும் சிறுகதை.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் 1956 ஐ தற்கால இலக்கியத்தின் ஆரம்ப எல்லையாகக் கொள்ளலாம். இந்த ஆண்டில் முதல் முறையாகப் பதவி ஏற்ற அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் (SWRD) அரசு கலாச்சார துறையில் காட்டிய ஆர்வமும் தேசிய மொழிகள் (தமிழ் - சிங்களம்) உயர் கல்விக்கான போதனா மொழிகளாக்கப்பட்ட பெருமாற்றமும் அதன் விளை பயன்களுமே 1956 ஐ தற்கால இலக்கியத்தின் எல்லையாகக் கொள்வதற்கான காரணங்கள்.



**திருச்செந்தூரன்**
**கண்டியை அண்மித்த, கலகாவில் ஒரு தேயிலைத் தோட்டத்தில் 30.08.1936ல் பிறந்தவர்.**

இந்த மாற்றங்களின் விளைவுகள் சிங்களக் கலை, இலக்கியத் துறைகளில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. வட கிழக்கு மக்களிடையேயும் தொற்றி வளர்ந்தன. மலையகத்தின் சமூகச் சூழ்நிலை, பொருளாதாரத் தாழ்வு, அரசியல் அநாதை நிலை ஆகிய மும்முனைத் தாக்குதல் மலையகத்தின் குரல்களை அமுக்கி வைத்திருந்தது. மலைநாட்டவரின் அவலம் மிகுந்த வாழ்வியற் பண்புகள் சிறுகதைகளாக, நாவல்களாக மேற்கிளம்பினவென்றாலும் உரத்து ஒலிக்கவில்லை.

உரத்து ஒலிக்காத இம்மலையக எழுத்துக்கள் பற்றி வாய்திறந்து யாரும் பேசவில்லை. இந்த ஆதங்கம், "காலங்காலமாக நாங்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள்தானா" என்னும் ஆத்திரம் படித்த மலையக இளைஞர்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டிருந்தது.

இந்த படித்த மலையகத்தின் இளைஞர்கள் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்துக் கொண்டது கூட இல்லை என்றாலும் மேற்கூறிய ஆதங்கமும் ஆத்திரமும் ஒரு நான்கு வருட கர்ப்பவாசத்தின் பின் ஒரே விதமான நாடித்துடிப்புடன், சமூக உணர்ச்சிப் பிரவாகத்துடன், ஒன்றுபட்ட உத்வேகத்துடன் 1960ம் ஆண்டளவில் பீரிட்டுக் கிளம்பியது.

இதன் முதற்குரல் கல்கியில் பரிசு பெற்று கல்கியில் வெளிவந்த செந்தூரனின் உரிமை எங்கே. அறுபதுகளில் பிரபல்யம்மிக்கதாக இருந்த கல்கிப் பத்திரிகை இலங்கைக்கென நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது உரிமை எங்கே சிறுகதை 3வது பரிசு பெற்றது.

அறுபதுகளில் மேற்கிளம்பிய மலையக எழுத்துத்துறைக்கும், எழுதத் தொடங்கியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய புதிய எழுத்தாளர்களுக்கும் தமிழகப் பத்திரிகையான கல்கி வெளியிட்ட இந்தக் கதை மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

ஆரம்பக் கல்வியை மலையகத்திலும் இடை நிலைக் கல்வியை யாழ். இந்துக்கல்லூரியிலும் பெற்று சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டதாரியானவர். ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர் ஒரு நாடகாசிரியரும்கூட.

ஷேக்ஸ்பியரின் ஒத்தேல்லோவைத் தமிழ்ப் படுத்தி மாணவர்களுடன் இணைந்து கல்லூரிகளில் மேடையேற்றியதுடன் ஒத்தெல்லேவாகப் பாத்திரம் ஏற்று நடித்தவர்.

மலையகத்தின் விழிப்புணர்வுக்காகப் பாடுபட்ட இவர் சமூக விமர்சனம்மிக்க நாடகங்களை எழுதி மலையகத் தோட்டங்களில் தொடர்ந்து மேடையேற்றினார். மலையக மக்களின் விழிப்புணர்வுக்காக அரங்கியல் ஆட்டங்களை ஒரு பிரச்சாரக் கருவியாகப் பயன்படுத்தினார். தாளலய நாடகங்களை நெறிப்படுத்தியதுடன் சமூக நாடகங்களையும் நெறிப்படுத்தினார்.

ஒரு நாடகாசிரியராக, நடிகராக, நெறியாளராகப் பணியாற்றிய அமரர் திருச்செந்தூரன் அவர்கள் அரங்கியல் ஈடுபாடு மிக்கவர்.

ஒரு கலைப் பட்டதாரியான இவரின் இந்த அரங்கியல் ஈடுபாடு கொழும்புப் பல்கலைக் கழகம் 1976 ல் தொடங்கிய நாடக கல்வித் தகைமைச்சான்றிதழ் பாடநெறியில் இணைந்து கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

கொழும்பு வளாகத்தில் "நாடகக்கல்வித் தகைமைச்சான்றிதழ்" பாடநெறியில் இணைந்து கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

கொழும்பு வளாகத்தில் "நாடகமும் அரங்கியலும்" என்னும் துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா பெற்றுக்கொண்டார். இந்தத் தொழில் முறை தேர்ச்சியின் மூலம் மலையக மாணவர்களுக்கு நாடகத்துறை பயிற்சி வழங்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

மலையகத்தில் ஆடப்படும் கூத்துக்களில் "அர்ச்சுணன் தபசு", "பொன்னர் சங்கர் கதை", "காமன் கூத்து" போன்றவைகள் முக்கியமானவை. அதிலும் "காமன் கூத்து" மிக முக்கியமானது.

காமன் கூத்து காமன் பொட்டலில் காமன் கம்பம் ஊன்றுதல் என்று ஆரம்பித்து ரதிமன்மதன் திருமணம், அதையொட்டிய செயற்பாடுகள், சிவபெருமானுக்கு மன்மதன் மலர்க்கணை எய்தல், நெற்றிக்கண் திறந்து சிவபெருமான் மதனை எரித்துவிடும் காமதகனம், பிறகு ரதி மன்றாடி மன்மதனின் உயிர் மீட்டல் என்று மூன்றுநாள் தொடக்கம் பத்துப் பதினைந்து நாட்கள் வரை ஆடப்படும் கூத்து காமன்கூத்து.

மலையகத்தின் பாரம்பரிய நாட்டுக்கூத்தான ரதிமன்மதன் கூத்தை, அதன் பாரம்பரிய மரபு சிதையாமல் நவீனப்படுத்தி மலையகப் பட்டினங்களிலும் கொழும்பிலும் காமன்கூத்தை ஆடிக்காட்டிய பெருமை செந்தூரன் அவர்களுக் குண்டு.

மாத்தளை கார்த்திகேசு தயாரித்த "அவள் ஒரு ஜீவ நதி" திரைப்படத்தில் கிறிஸ்துவப் பாதிரியாக வேடமேற்று நடித்துள்ளார் செந்தூரன்.

"ஓரிரு காட்சிகளிலேயே தோன்றினாலும் செந்தூரன் அவர்களது பாத்திரமும் அவரது பண்பான நடிப்பும் பரவசப்படுத்துகிறது" என்று பத்திரிகைகள் எழுதியிருந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹட்டன் ஹைலன்டஸ் கல்லூரியில் திருச்செந்தூரன் ஆசிரியராகவும் இரா. சிவலிங்கம் அவர்கள் அதிபராகவும் இருந்து பணியாற்றிய நாட்கள் வரலாறு படைத்தவை.

ஹட்டன் சென் ஜோன் பொஸ்கோ, ஹைலன்ட்ஸ் கல்லூரி, மாத்தளை பாக்கியா வித்தியாலயம் - பண்டாரவளை சென் மேரிஸ் கல்லூரி ஆகியவைகளில் அதிபராக இருந்து மாணவர்களை சமூக உணர்வாளராக நெறிப் படுத்தியவர் அமரர் செந்தூரன் அவர்கள்.

ஒரு ஆசிரியராக, பிறகு அதிபராக இவர் சேவையாற்றிய காலங்களில் இவரால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் பலர் கலை, இலக்கியம், கல்வி, அரசியல், சமூக சேவை என்று இந்த மக்களின் வாழ்வியலோடு கலந்து நிற்பது எத்தனை மகிழ்வானது.

வி. டி. தர்மலிங்கம், பி. மரியதாஸ், எம். வாமதேவன், பி. முத்தையா, தை. தனராஜ், சி. நவரட்ணம், மு. சிவலிங்கம், சாரல்நாடன், மு. கனகராஜ், மு. இராமலிங்கம் என்று இன்றைய மலையகம் மறக்கமுடியாத எத்தனையோ பேர் திருவாளர்கள் சிவலிங்கம் - செந்தூரன் என்னும் இரட்டைக் கல்விமான்களால் செதுக்கப் பட்டவர்கள்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஆரம்பகாலத் தலைவராகப் பணியாற்றியவர் இவர். வீரகேசரியின் ஆசிரியர் குழுவில் பணி யாற்றிய அமரர் கார்மேகம் அவர்களின் முயல்வுடன் வீரகேசரியும் மலைநாட்டு எழுத்தாளர் மன்றமும் இணைந்து நடத்திய முதல் சிறுகதைப் போட்டிக்கான நடுவர் குழுவில் ஒருவராகப் பணியாற்றி இருக்கின்றார்.

உரிமை எங்கே, நடுக்கடலில், சாமிக் கடன் போன்ற இவருடைய சிறுகதைகள் முக்கியமானவை.

ஆசிரியப் பணியிலிருந்து விலகி சமூக சேவை நிலையத்தில் முழுநேரத் தொண்டனாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

1983ன் இலங்கை இனக்கலவரம் இவரை தமிழகம் நோக்கி விரட்டியது. இவர் தமிழகம் சென்றபோது இலங்கை இந்திய ஒப்பந்தங்கள் மூலம் தாயகம் திரும்பியோர் சிலோன்காரர்களாகவும் இனக்கலவரங்களால் புலம்பெயர்ந்தவர்கள் அகதிகளாகவும் தாயகத்தில் அலைக்கழிக்கப் பட்டு, வேதனை துன்பம் துயரம் என்று கிடக்கும் நிலைகண்டு மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைத்து அரசுடன் பேச்சுவார்த்தையில் இர. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஈடுபட்டு உழைக்கத் தொடங்கினார்கள்

நீலகிரி மாவட்டத்தின் கோத்தகிரி, குன்னூர், ஊட்டி என்று தாயகம் திரும்பியோர் தேயிலை மலைகளில் மறுபடியும் தொழிலாளர்களாய் துயர்மிகு வாழ்வு நடத்தினர்.

அம்மக்களின் விடிவுக்காகப் பணியாற்ற மீண்டும் சிவலிங்கம் - செந்தூரன் அங்கும் இணைந்தனர்.

தாயகம் திரும்பிய மலையக மக்களுக்காக அவர்களின் உரிமைகளுக்காக, வறுமை நீக்கத்துக்காகப் போராடிய செந்தூரன் அவர்கள் 31.03.2001ல் திருச்சியில் அமரர் ஆனார்.

மலையக வரலாறு மறக்கமுடியாத ஒரு மகா மனிதர்களாக அமரர் செந்தூரனும் அமரர் சிவலிங்கமும் மலையகம் கண்ட வரலாற்று நாயகர்களாவார்கள்..

*நன்றி : தாய்வீடு*

- நாம் சத்தியத்தின் வழியில் நடப்பவர்கள், ஜனநாயகப் பண்புகளை மதிப்பவர்கள். அதனால் எந்தத்தடை போட்டாலும் எங்களிடம் அச்சமென்பதில்லை. வரலாறு முழுவதும் மற்றவர்களுக்கு உழைத்துக் கொடுத்துவிட உரிமையற்றவர்களாய் மட்டும் வாழ்வதை இனியும் சகித்துக் கொள்ள மாட்டோம்.

- என் உள்ளத்தாலும் உணர்வாலும் வாழ்வு முழுமையும் மலையக மக்களின் உரிமைப் போராட்டங்களில் ஒன்றிவிட்ட என்னை, விண்வெளியில் வீசியெறிந்தாலும் என் உணர்வுகளும் உறவுகளும் நமது மக்களையே வட்டமிடும் செயற்கைக் கோளாக மாறுவேனே அல்லாமல் செயலிழந்து போகமாட்டேன்.

**- இர. சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு



**பேராசிரியர் துரை. மனோகரன்**
முன்னாள் தமிழ்துறை தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

தமிழ்நாட்டின் தமிழ் இலக்கிய வரலாறு நீண்ட வரலாற்றைக் கொண்டது. தமிழ்நாட்டினை அடுத்து இலங்கை தனக்கெனத் தனித்துவமான இலக்கிய வரலாற்றைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் தமிழ் இலக்கிய வரலாறு கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தொடக்கம் பெறுவது போல இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் இருந்து தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெறத் தொடங்கியது. தமிழ்நாட்டின் பிரக்ஞை பூர்வமான தமிழ் இலக்கிய வரலாற்று எழுத்து முயற்சிகள் 19 ஆம் நூற்றாண்டில் இருந்து தொடக்கம் பெறுகின்றன. அதேபோன்று இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்று எழுத்து முயற்சிகளும் 19 ஆம் நூற்றாண்டிலேயே இடம் பெறத் தொடங்கிவிட்டன. சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளூராக் (1859) இவ்வகையில் ஒரு முன்னோடி முயற்சியாகும். அதனையடுத்து, 1886 இல் வெளிவந்த ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திரதீபகம் குறிப்பிடத்தக்கது.

சைமன் காசிச்செட்டியின் நூலில் 12 பேர் இலங்கையர்கள் அரசகேசரி, நல்லூர் வி. சின்னத்தம்பிப் புலவர், சுன்னாகம் வரதகவிராயர் (அ. வரதபண்டிதர்), கூழங்கையர் (கூழங்கைத் தம்பிரான் அல்லது கனகசபாபதி), பிலிப்பு த. மெல்லோ, மாதோட்டம் குமாரசிங்க முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர், அராலி விசுவநாத சாஸ்திரியார் ஆகியோர் இலங்கையர்கள் ஆவர். ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் நூலில் இடம் பெற்றுள்ளவர்களில் 9 பேர் இலங்கையர்கள்.

இவற்றைத் தவிர, இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் தமிழ்ப் புலவர் சரித்திரம், வித்துவான் சி. கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் ஈழமண்டலப் புலவர் சரித்திரம், ந. சி. கந்தையாப்பிள்ளையின் தமிழ்ப் புலவர் அகராதி, தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளையின் ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் ஆகியவையும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன.

இவ்வாறான முன்னோடி முயற்சிகள் இடம்பெற்றுள்ள நிலையில், இலங்கையின் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான முதல் எழுத்து முயற்சியாகக் கனக. செந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி (1964) விளங்குகிறது. இந்நூல் இலங்கையின் பழந்தமிழ் இலக்கிய வரலாற்றை மிகச்சுருக்கமாகக் குறிப்பிட்டு, 20ஆம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றை இயன்றவரை விரிவாகக் கூறுகின்றது.

வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா எழுதிய ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு (1970) இன்னொரு குறிப்பிடத்தக்க நூலாக விளங்குகிறது. இந்நூலில் இலங்கைத் தமிழ் இலக்கிய காலகட்டங்கள் பின்வருமாறு பகுக்கப்பட்டுள்ளன : மகாவம்ச அரசர் காலம் (கி.பி. 300), ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் (1240 - 1620), போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம் (1620 - 1800), ஆங்கிலேயர் காலம் (1800 - 1950), தற்காலம் (1950) நடராசா இந்நூலின் ஈழத்து இலக்கியப் பரப்பு, காவியங்கள், புராணங்கள் பற்றி வரிவாக நோக்கியுள்ளார்.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு என்ற அடிப்படையில் நின்று எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க நூலாகக் கலாநிதி க. செ. நடராசாவின் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி (1982) விளங்குகிறது. கி. பி. 14ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றை இந்நூல் விளக்குகின்றது. பின்வரும் நான்கு இயல்புகளை இந்நூல் கொண்டுள்ளது.

ஈழத் தமிழ் இலக்கியம், ஈழத்து அகப்பொருள் இலக்கிய வளர்ச்சி, ஈழத்துப் புறப்பொருள் இலக்கிய வளர்ச்சி, பிரபந்த வகையுள் அமையாத ஈழத்து இலக்கியங்கள், இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக வெளிவந்த நூல்களில் இதுவும் குறிப்பிடத்தக்க ஒரு நூலாகும்.

இத்தகைய முயற்சிகள் ஒருபுறமிருக்க இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைக்கும் முயற்சிகளும் இன்னொருபுறத்தில் இடம்பெற்று வந்தன. 1950 களில் பேராசிரியர் வி. செல்வநாயகம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில் இலங்கை பற்றிய இலக்கிய வரலாற்றுத் தகவல்களையும் தந்துள்ளார். அவரது மாணவராகிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் எழுதிய இலக்கியத் தென்றல் என்ற நூலிலும் இலங்கைத் தமிழ் இலக்கியம் தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் ஒரு முன்னோடி முயற்சியாக அமைந்த நூல், பேராசிரியர் ஆ. சதாசிவம் பதிப்பித்த ஈழத்துத்தமிழ்க் கவிதைக் களஞ்சியமாகும் (1966). இந்நூலில் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் சு. நடேசபிள்ளை வரை காலவரிசைப்படி கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்று அடிப்படையில் தொகுக்கப்பட்ட சிறந்த நூலாக இது விளங்குகின்றது. அரசியல் காலகட்ட அடிப்படையில் இந்நூலில் காலகட்டங்கள் பகுக்கப்பட்டுள்ளன. அக்காலகட்டங்கள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன..

1. சங்ககாலம்
2. யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர் காலம் (1261 - 1505)
3. போர்த்துக்கேயர் காலம் (1505 - 1658)
4. ஒல்லாந்தர் காலம் (1658 - 1796)
5. ஆங்கிலேயர் காலம் (1796 - 1947)
6. தேசிய எழுச்சிக் காலம் (1948 -)

அவ்வக்காலத்து அரசியல்நிலை, இலக்கியப் பண்பு என்பன அவ்வக்காலப் பகுதிகளுக்கு முன்னுரைகளாகச் சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளன. இன்றுவரை இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான முக்கிய நூலாகவும் மூலநூலாகவும் இது விளங்குகிறது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் இந்நூல் பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது எனலாம்.

பேராசிரியர் சதாசிவத்தின் ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தின் வரவை அடுத்து பல்கலைக்கழக ஆய்வாளர்களின் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல்கள் வெளிவரத் தொடங்கின. இவ்வகையில், பேராசிரியர் பொ. பூலோகசிங்கத்தின் "தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் (1970)" என்ற நூல், இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறும் சிறந்த ஆளுமைகளை இனங்காட்டும் முறையிலான கட்டுரைகளைக் கொண்டு விளங்குகிறது. சைமன் காசிச்செட்டி, ஆறுமுகநாவலர், சீ. வை. தாமோதரம்பிள்ளை, ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை, தி. த. கனகசுந்தரம்பிள்ளை ஆகியோரது பெரும் பங்களிப்புகளை விளக்கும் முறையில் கனதியான கட்டுரைகளைக் கொண்டதாக இது விளங்குகிறது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய "ஈழத்தில் தமிழ் இலக்கியம் (1978)" என்ற நூல், இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் கவனம் செலுத்திய இன்னொரு நூலாக விளங்குகிறது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான பல கட்டுரைகளைக் கொண்டதாக இது அமைந்துள்ளது. இலங்கையின் தனித்துவத்தையும் தமிழ் இலக்கியத்தின் பொதுமையையும் இணைத்து நிற்கும் ஓர் இலக்கிய மரபு இலங்கையில் தோன்றி வளர்ந்த முறையினைச் சிறப்பாக இந்திய வாசகர்களுக்கு எடுத்தக் காட்டுவதே இந்நூலின் முக்கிய நோக்க மாகும் எனச் சிவத்தம்பி தமது முன்னுரையில் குறிப்பிடுகின்றார். 1948-1970 காலப்பிரிவையே இந்நூல் விதந்துகாட்டுகின்றது. இந்நூலில் சிவத்தம்பியும் தமது நோக்கிற்கேற்ப இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான காலகட்டப் பிரிவுகளைத் தந்துள்ளார். அவை பின்வருமாறு அமைந்துள்ளன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. யாழ்ப்பாண இராச்சியம் தோன்றும் வரையுள்ள காலம்
2. யாழ்ப்பாண இராச்சியக் காலம் - இது ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் என்றே எடுத்துக் கூறப்படல் மரபு
3. போர்த்துக்கேயர் காலம்
4. ஒல்லாந்தர் காலம்
5. பிரித்தானியர் காலம்

பிரித்தானியர் காலத்தை கா. சீ. பின்வரும் உப-பிரிவுகளாக வகுத்துக்கொள்ளலாம் என்கிறார்,

(அ) கிறித்துவத்தின் பரவலும் சமூக பண்பாட்டுத் தனித்துவப் பேணுகையும் (1796 - 1879), ஆறுமுகநாவலர் (1822 - 79) முக்கியத்தவம் பெறுவர்.
(ஆ) ஆங்கில ஆட்சி, மத்தியதர வர்க்கத் தோற்றக் காலம் (1900 - 1948)
(இ) தேசிய இலக்கிய காலம் (1956 - )

சிவத்தம்பி ஆங்கிலேயர் ஆட்சிக்கால இலக்கிய வரலாற்றை மேலும் 4 உப-கட்டங்களாக வரிசைப்படுத்தியுள்ளார்.

ஆங்கில ஆட்சி வழங்கிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி, ஆங்கிலத் திருச்சபையும், அமெரிக்க மிசனரிமாரும் மேற்கொண்ட கிறித்தவமயப்படுத்தும் இயக்கத்தின் இலக்கிய வெளிப்பாடுகள்

1. இக்கிறிஸ்தவமயமாக்க முயற்சிகளை எதிர்த்து ஆறுமுகநாவலர் நடத்திய எதிர்ப் பியக்கத்தின் இலக்கிய வெளிப்பாடுகள்.

2. நாவலர் காலத்தின் பின்னர், 1880 வரை (இலங்கைக்கு வரையறுக்கப்பெற்ற பொறுப்பாட்சி வழங்கப்பட்ட காலம்வரை) இலங்கைத் தமிழர்களிடையே தோன்றிய ஆங்கிலம் கற்றும் கிளம்பிய மத்திய தரவர்க்கத்தினரின் இலக்கிய முயற்சிகள். பாவலர் துரையப்பா பிள்ளையை (1982-1929) இவ்வியக்கத்தின் பிரதிநிதியாகக் கொள்ளலாம்.
3. வரையறுக்கப்பட்ட பொறுப்பாட்சி வழங்கப் பெற்றதன் காரணமாகத் தோன்றிய அடிநிலை மக்களின் விழிப்பாகவும் அவ்விழிப்புக்கான உந்துதலாகவும் விளங்கிய இயக்கத்தின் இலக்கிய முயற்சிகள் (1933-1948 வரை).

இந்நூலில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலக்கிய வளர்ச்சியை கா. சிவத்தம்பி 3 கால கட்டங்களாகப் பகுத்துள்ளார்.

1. ஈழத்தில் தமிழிலக்கிய வளர்ச்சிக்கட்டங்கள் 1948 வரை.
2. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஈழத்தின் தமிழிலக்கிய வளர்ச்சியும் (1954-1970).
3. 1970-

இலங்கை தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாகப் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் எழுதப்பட்ட முதல்நூலாகப் பேராசிரியர்கள் சி.மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு, எம்.ஏ.நுஃமான் ஆகியோர் எழுதிய இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கியம் (1979) விளங்குகின்றது. இந்நூலில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம் ஆகிய துறைகள் பற்றி விரிவாக நோக்கப்பட்டுள்ளது. சிறிய நூலாக இருப்பினும், இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான குறிப்பிடத்தக்க ஒரு நூலாக இது விளங்குகிறது.

இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் முழுமையான பார்வையைச் செலுத்திய ஒரு நூலாகப் பேராசிரியர் துரை. மனோகரனின் இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி (1997) என்ற நூல் அமைந்துள்ளது. தொடக்ககாலம் முதல் நவீனகாலம் வரையான சகல காலகட்டங்களையும் உள்ளடக்கியதாக இது விளங்குகிறது. இந்நூல் பின்வரும் அமைப்பைக் கொண்டுள்ளது.

1. தோற்றுவாய்
2. யாழ்ப்பாணத் தமிழ்மன்னர் காலம்
3. போர்த்துக்கீசர்-ஒல்லாந்தர் காலம்
4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சி
5. இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சி

ஒவ்வோர் இயலும் அறிமுகம், குறிப்பிட்ட காலகட்டத்து இலக்கியப்பண்பு, குறிப்பிட்ட காலகட்ட இலக்கிய வகைகள், குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்து முக்கிய இலக்கியவாதிகள் பற்றி விளக்கியுரைக்கின்றது. தற்போது அச்சில் உள்ள இந்நூலின் இரண்டாம் பதிப்பு, இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் பெயரில் விரைவில் வெளிவரவுள்ளது. இதன் அமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

1. தோற்றுவாய்
2. யாழ்ப்பாணத் தமிழ்மன்னர் காலம்
3. போர்த்துக்கேயர் காலம்
4. ஒல்லாந்தர் காலம்
5. ஆங்கிலேயர் காலம்
6. சுதந்திர காலம்

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் ஆர்வம் செலுத்திய இன்னொரு நூல் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின் ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி (19ஆம் நூற்றாண்டுவரை - 2001) ஆகும். இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக வெளிவந்த குறிப்பிடத்தக்க இன்னொரு நூலாக இது விளங்குகிறது. இந்நூலின் இயல்கள் பின்வருமாறு அமைந்துள்ளன:

1. அறிமுகம்
2. ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்
3. போர்த்துக்கேயர் காலம்
4. ஒல்லாந்தர் காலம்
5. ஆங்கிலேயர் காலம் (19ஆம் நூற்றாண்டு)

இந்நூல் ஒவ்வொரு காலகட்டத்து இலக்கியச் செல்நெறிகள் பற்றியும், நூல்கள் பற்றியும் விரிவான விளக்கங்கள் தருகின்றது.

பேராசிரியர் க. கைலாசபதியின் ஈழத்து இலக்கிய முன்னோடிகள் (1986) என்ற நூல், அவரது மறைவுக்குப் பின் வெளிவந்தது. நூல் பொதுவாக இலங்கையின் இலக்கிய வரலாற்று அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையில் இலக்கிய முன்னோடிகளாக விளங்கிய சிலரின் ஆளுமைகளையும், ஆற்றல்களையும், பங்களிப்புகளையும் கைலாசபதி தமக்கே உரிய பாணியில் எடுத்துக் காட்டியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டு பற்றிய இலக்கிய வரலாற்றுக் கட்டமைப்பை, இந்நூலின் முதற்கட்டுரையான புதிய நோக்குகளும் போக்குகளும் தருகின்றது.

பேராசிரியர் சி. தில்லைநாதனின் இலங்கைத் தமிழ் இலக்கியம் (1997) என்ற நூல் 27 கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு நூலாக விளங்குகிறது. இந்நூலில் இடம் பெற்றவற்றுள் இலங்கைத் தமிழ் இலக்கியம் - ஒரு குறிப்பு. இந்நூற்றாண்டு முற்பகுதியிலே செய்யுளும் உரைநடையும் கவிதை வளர்ச்சி ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் - ஒரு பொது மதிப்பீடு, சிறுகதை வளர்ச்சி, மலையகமும் தமிழ் இலக்கியமும், ஈழத்தில் நடந்த இலக்கியச் சர்ச்சைகள் ஆகியவை இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான குறிப்பிடத்தக்க கட்டுரைகள் ஆகும்.

பேராசிரியர் சி. பத்மநாதனின் ஈழத்து இலக்கியமும் வரலாறும் (2004) என்ற நூலும் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது. கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு பூர்வசரித்திரம், கைலாசபுராணம், சித்திரவேலாயுதர் காதர் ஆகிய நூல்கள் தொடர்பாக நூலாசிரியர் விரிவாக நோக்கியுள்ளார். பிற வரலாற்றுச் செய்திகள் தொடர்பான கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சியை இனங்காணும் முயற்சியில் அமைந்த இன்னொரு நூலாக விளங்குவது, பேராசிரியர் வளர்ச்சியை இனங்காணும் முயற்சியில் பழைய இலக்கியங்கள் (2009) என்ற நூலாக. நூலில் பின்வரும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1. தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்
2. அரசகேசரியின் இரகுவம்மிசமும் அது எழுந்த இந்துப்பண்பாட்டுச் சூழலும்
3. இலங்கைத் தமிழர்களின் கயிலாச பாரம்பரியம்
4. கோணேசர் கல்வெட்டுப் பற்றிய நுண்ணாய்வு

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான நூல்கள் சில பிரதேசரீதியாகவும் வெளிவந்துள்ளன. அவ்வகையில், பேராசிரியர் க.அருணாசலத்தின் மலையகத் தமிழ் இலக்கியம் (1994), மலையகத் தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம் (1999) ஆகியவை குறிப்பிடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கன பல்கலைக்கழகரீதியாக மலையகம் பற்றிய பார்வையை அதிகம் முன்னெடுத்தவர், பேராசிரியர் அருணாசலம் ஆவார்.

இவைதவிர, தனித்தனி இலக்கியவகைகள் தொடர்பான நூல்களும் வெளிவந்துள்ளன. இவ்வகையில், கலாநிதி நா.சுப்பிரமணியத்தின் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் (1978), செ.யோகராசாவின் ஈழத்து வாய்மொழிப்பாடல் மரபு (2002) ஈழத்து நவீன கவிதை (2007), ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும் (2008), ஈழத்து முச்சந்தி இலக்கியம் (2013) என்பவையும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பதில் உதவக்கூடியன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.1851 - கி.பி.2000) (2005) என்ற நூலிலும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில், பிரித்தானிய ஆட்சிக்காலம் பற்றிப் பேராசிரியர் கா.சிவத்தம்பியும், கவிதை பற்றிப் பேராசிரியர் எம்.ஏ.நு·.மானும், நாவல் பற்றிக் கலாநிதி நா.சுப்பிரமணியமும், சிறுகதை பற்றி பேராசிரியர் துரை.மனோகரனும். நாடகம் பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பியும், நாட்டுப்புறவியல் பற்றிப் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸும், இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றிக் கலாநிதி ரமீஸ் அப்துல்லாவும், அறிவியல் தமிழ் பற்றிக் கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியமும், ஊடகங்களில் தமிழ் பற்றிப் பேராசிரியர் செ.யோகராசாவும், ஆய்வியல் தமிழ் பற்றிப் பேராசிரியர் க.அருணாசலமும் எழுதியுள்ளனர். இவையும் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சி பற்றி நுண்ணிதாக நோக்குகின்றன. இதேபோன்று, அயலகத் தமிழ்க் கலை இலக்கியம் - சமகாலச் செல்நெறிகள் (2001) என்ற நூலிலும் இலங்கைத் தமிழ் இலக்கியவரலாற்றோடு தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாக ஆய்வுக்கட்டுரைகள் எழுதிய மற்றும் பலரதும் பங்களிப்புகளும் இலங்கைத் தமிழ் இலக்கியவரலாற்றைக் கட்டமைப்பதில் நினைவுகூரத்தக்கன. இவ்வகையில், தனிநாயகம் அடிகளார், பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, ச.தனஞ்செயராசசிங்கம், எம்.எஸ்.எம்.அனஸ், வ.மகேஸ்வரன், க.விசாகரூபன், றமீஸ் அப்துல்லா போன்றோரின் பங்களிப்புகளும் குறிப்பிடத்தக்கன.


## எழுதுங்கள்!

எழுத்தாளர்களிடமிருந்தும், வாசகர்களிடமிருந்தும் திறமான, கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், விகடத்துணுக்குகள், குறுநாவல்கள் வரலாற்றுத் தகவல்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன. தழுவலாகவோ இதற்கு முன்னர் பிரசுரமானவையாகவோ இருப்பின் பிரசுரிக்கப்படமாட்டாது தாளின் ஒரே பக்கத்தில் எழுதுவதோடு ஆக்கங்களின் பிரதிகளை கைவசம் வைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

வெகு விரைவில் மாதர் அரங்கு, மாணவர் அரங்குப் பகுதிகளை அகிலம் ஆரம்பிக்க இருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அகிலம்
கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

அனுப்ப வேண்டிய முகவரி :-
ஆசிரியர்
**அகிலம் பப்ளிகேசன்ஸ்**
98CP, திருகோணமலை வீதி,
கண்டி (ஸ்ரீ லங்கா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடல்களை அடியொற்றிய அனுபூதி உளவியல்

பேராசிரியர் சபா. ஜெயராசா

அனுபூதி உளவியல் அல்லது அருள் நிலை, உளவியல் (Mystic Psychology) ஒரு சிறப்புத்துறையாக வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. தொன்மையான சடங்கு களோடும் மாயவித்தைகளோடும் இணைந்த அனுபூதி அனுபவங்கள் சமூக வளர்ச்சியோடு மேலும் பன்மை நிலைகளை அடையத் தொடங்கின. சித்தர்களும் யோகிகளும் தொடர்ந்து அனுபூதி அனுபவங்களை வெளிப் படுத்தி வருகின்றனர்.

அறுதியான உண்மை, இறைகாட்சி, தெய்வீக வியல்பு, அதிசயங்கள், கடவுள் தொடர்பான நேர்க்காட்சி அனுபவங்கள் முதலியவை அருள்நிலைக்காட்சியில் கிடைக்கப் பெறுவதாக அனுபவித்தவர்கள் குறிப்பிடுகின்றனர். அது தனித்துவமான உற்றுணர்வு நிலையாகக் கொள்ளப்படுகின்றது. அத்தகைய அதீத உணர்வுகளும் காட்சிகளும் தோன்றுவதற்குரிய பாடங்களை இயற்கையே கற்பித்துக் கொடுக்கும். அதாவது ஏட்டுப்படிப்பால் அவை பொதுவாக கிடைக்கப்பெறுவதில்லை. எதிர்பாராத காலநிலைத் தோற்றங்கள், பயிர் வளப் பெருக்கு, விநோதமான பிறப்புக்கள் என்பவை இயற்கையிலே தோற்றம் பெற்றன. அவற்றோடு ஒன்றித்த உளக்கோலங்களும் கற்பனைகளும் ஆழ்ந்த ஈடுபாடும் மறைபொருட்காட்சிகளை அனுபவ வழியில் மனத்திலே உருவாக்கின. வளப் பெருக்கை உண்டாக்கும் சடங்குகளிலும் கரைகளிலும் அனுபூதி உட்பொருள் உறைந் திருந்தது.

வரன்முறையான சமயங்களின் வளர்ச்சி யோடு அனுபூதி நிலைபற்றிய விளக்கங்கள் மேலும் வளர்ச்சியடையத் தொடங்கின. சமயஞானிகள் அனுபூதி அனுபவங்களை உட் பொதிந்தவர்களாக அமைந்தனர். தொன்மங்கள் அனுபூதி அனுபவங்களைத் தாங்கிய இலக்கியங்களாக வளர்ச்சி கொண்டன.

இந்து சமயத்திலே அனுபூதி அனுபவத்தின் இலக்கு பிறப்புக்களிலிருந்து விடுபடும் முத்தி நிலையைப் பெறுதலாகும். அனுபூதி நிலையானது உள்ளொளி எழுகை என்றும் மீநிலையான உற்றுணர்வு (Supra Conscious Experience) என்றும், சாதாரண அறிக்கையை விட மேம்பட்டதென்றும் கருதப்படுகின்றது "நானே பிரமம்" (மண்டுக உபநிடதம் 1.2) என்பதும் அந்த நிலையைக் குறிப்பிடுவதாகவே அமையும்.

அனுபூதி பற்றிய ஆய்வில் நிலைத்த வாதம் அல்லது நித்திய வாதம் (Perennialism) முன்வைத்த கருத்துக்கள் முக்கியமானவை. உலக சமயங்கள் அனைத்தும் பொதுவான ஓர் அடிப்படையிலிருந்து மேலெழுந்தவை என்ற கருத்து அங்கே முன்வைக்கப்படுகின்றது. அனைத்துச் சமயங்களுக்குமுரிய அனுபூதி அனுபவங்கள் பொதுவானவை என்று மேலும் வலியுறுத்தப்படுகின்றது.

வாழ்க்கையின் சாதாரண அனுபவங்களைக் காட்டிலும் உன்னதமான அனுபவங்களைத் தேடிக்கொள்ளல், மெய்ஞ்ஞான அனுபவங் களுடன் வாழுதல் என்பவை சமய வழியான தேடல்களாக அமைந்தன. யோக முறைகளும் தந்திரங்களும் அந்த இலக்கை நோக்கிய வழிகளாக மேலெழுந்தன. தியானமும் மந்திரங்களும் அவற்றின் அடிப்படையில் வளர்ச்சியுற்றன. அவற்றோடு இணைந்ததாக இசையும் ஆடலும் அனுபூதி அனுபவங்களைத் தோற்றுவிக்கும் வழிமுறைகளாகக் கண்டறியப் பட்டன.

சமயமும் அனுபூதி அனுபவங்களும் நடைமுறை வாழ்க்கையிலே செல்வாக்கைச் செலுத்திய வண்ணமுள்ளன. நடத்தை உருவாக்கத்திலும் நடத்தைகளைக் கட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதிலும் அவை ஏதோ ஒரு வகையிலே பங்களிப்பைச் செய்கின்றன.

உளவியலாளர் வில்லியம் ஜேம்ஸ் அவர்கள் நிறுவனமாக்கப்பட்ட சமயம், தனி நபருக்குரிய சமயம் என்ற இருநிலைப் பாகுபாட்டை ஏற்படுத்தியுள்ளார். நிறுவன மாக்கப்பட்ட சமயம் சமூகத்தின் பண்பாட்டோடு இணைந்தது. தனியாளுக்குரிய சமயம் அவருக்குரிய தனித்துவத்தோடு இணைந்தது. தனித்த அனுபவங்களோடு சேர்ந்து முகிழ்ப்புக் கொண்டது. நலம்மிக்க உளம் கொண்டோர், நலம் குன்றிய உளம் கொண்டோர் ஆகியோரின் அனுபவப்பிரயோகங்களுக்கு இடையே வேறுபாடுகள் காணப்படும்.

சமயம் மற்றும் அனுபூதி தொடர்பான உளவியற் கருத்துக்களை முன் வைத்தவர்களுள் உளப்பகுப்பு உளவியலாளர் சிறப்புப் பெறுகின்றனர். சிக்மன் பிராய்ட் கடவுளையும் அனுபூதி உணர்வுகளையும் உளப்பகுப்பு உளவியலுடன் தொடர்புபடுத்திப் பார்த்துள்ளார். சிறுவயதில் நிகழும் அடக்கி வைக்கும் உளக்கோலங்களோடும் அவற்றுடன் இணைந்த விடுகற்பனைகளோடும் (Fantasy) மாயைத் தோற்றங்களோடும் அனுபூதி அனுபவத்தை அவர் தொடர்புபடுத்தியுள்ளார்.

சமயம் மற்றும் சமயக் குறியீடுகள் தொடர்பான நேர்முக அணுகுமுறைகளை உளப் பகுப்பு உளவியல் மரபில் வந்த கார்ல் யுங் முன்வைத்தார். கடவுள் பற்றிய விடயங்களை உளவியற்கல்வியால் அணுகமுடியாது என்று கருதினார்.

நனவிலி மனத்தை தனியாளுக்குரிய நனவிலி மனம் மற்றும் கூட்டு நனவிலிமனம் என்ற இருநிலைகளாக வேறுபடுத்திக்காட்டிய அவர் சில சிறப்பான கருத்துக்களை முன் வைத்தார். கூட்டு நனவிலி மனத்தை தொல் வடிவங்களின் (Archetyps) களஞ்சியமாகக் கருதினார். அதாவது மக்கள் மனங்களில் உறைந்து வரும் தொன்மங்களும் குறியீடுகளும் கூட்டு நனவிலியிலே இடம் பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமயமும் அனுபூதி அனுபவங்களும் மனிதரிடத்து உளக்கலை உருவாக்கும் சாதனங்கள் என்பது அல்பிரெட் அட்லரின் கருத்து. அத்துடன் சமூக இடைவினைகளுக்கும் அவை இட்டுச்சென்ற வண்ணமுள்ளன. மனிதர் தாமாக உருவாக்கிக் கொண்ட தாழ்வுச் சிக்கலை ஈடு செய்வதற்கு சமயம் வழிவகுக்கும் என அவர் மேலும் விளக்கியுள்ளார்.

அனுபூதி அனுபவங்கள் சாதாரண புலனறி அனுபவங்களைக் காட்டிலும் வேறு பட்டவையாகச் சொல்லப்படுகின்றன. அவற்றை சமயத்தின் சாராம்சமாக அல்பேட் ஈன்ஸ்டீன் குறிப்பிட்டுள்ளார். அந்த அனுபவங்கள் பின்வரும் வகைகளில் அமையும்:

1. இறையுடன் ஒன்றிணைந்து முழுமை பெறல்.
2. காலத்தையும் வெளியையும் கடந்து செல்லல்
3. இறையை அண்மித்து நிற்றல்.
4. தூய்மையும் புனிதமும் எய்தும் பண்புகளைக் கொண்டிருத்தல்
5. வெளிப்படுத்த முடியாத வளமான தகைமைகளைக் கொண்டிருத்தல்.

இதன் தொடர்பில் உளவியலாளர் பல வினாக்களை எழுப்புகின்றனர்.

1. இந்த அனுபவத்தை எவ்வாறு பெற்றுக் கொள்கின்றனர்?
2. இவற்றைப் பெறுபவர்களையும் பெறாதவர்களையும் வேறுபடுத்தும் அடிப்படைக் காரணிகளைத் துல்லியமாகக் கண்டறிய முடியுமா?
3. குறிப்பிட்ட அனுபவத்துக்கும் சமயத்துக்கும் உள்ள தொடர்புகள் எவை?
4. மூளையில் நிகழும் உயிர் இரசாயனத் தெறிப்புக்களுடன் தொடர்புடையவையா?
5. பயிற்சிகளின் வாயிலாக இந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமா அல்லது எதிர்பாராத வாய்ப்பினால் தோற்றம் பெறுகின்றனவா?
6. இவை உயர்ந்த கலைப் படைப்புக்களின் ஆக்கங்களுக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் துணை செய்கின்றனவா?
7. இறை நம்பிக்கை அற்றவர்களும் இந்த அனுபவங்களுக்கு உள்ளாகின்றனரா?

சமய நம்பிக்கை உள்ளவர்கள், சமய நம்பிக்கை அற்றவர்கள், மூளை நரம்பியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர்கள், உளவியலாளர் ஆகியோர் இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்துறையில் நிகழ்ந்த ஆய்வுகளை அடியொற்றி “ஆள் நிலைபெயரும் உளவியல் (Trans Personal Psychology) என்ற துறை வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

மனிதரிடத்து உட்பொதிந்துள்ள அதீத ஆற்றல்களைக் கண்டறிதலும் பிரபஞ்சத்தை விளங்கிக்கொள்ளும் பெரும் ஆற்றல்களை இனங் காண்பதும் ஆள் நிலைபெயரும் உளவியலில் மேற்கொள்ளப்படுகின்றது. மனிதரின் அதீத ஆற்றல்களையும் இறை பண்புகளையும் ஆராயும் இயலாக அது அமைகின்றது. தன்னிலை (Self) விரிந்தெழும் செயற்பாடுகளும் விரிவாக நோக்கப்படுகின்றன. மனித வாழ்வில் நிகழும் எதிர்பாராத அசாதாரண அனுபவங்களும் ஆராயப்படுகின்றன.

இந்த உளவியலில் கென்வில் பர் என்பார் சிறப்புப் பங்களிப்பைச் செய்துள்ளார். மனித உற்றுணர்வு (consciousness) மூன்று பெரும் வகைப்பாடுகளைக் கொண்டதென அவர் விளக்கியுள்ளர். அவையாவன:

1. தன்மத்துக்கு முந்திய நிலை - (Pre-egoic) இது தனியாள் இயல்புக்கு முந்திய நிலையாகும்.
2. தன்ம நிலை (Egoic) இது தனியாள் இயல்பு நிலையாகும்
3. தன்மக் கடப்புநிலை (Trans Egoic) இது தனியாள் கடப்பு நிலையாகும்.

இக்கருத்தை அவர் மேலும் விரிவு படுத்தினார். மனித உற்றுணர்வு வளர்ச்சியை அடுக்கமைவு நோக்கிலும் சுற்றுவட்ட நோக்கிலும் விளக்கினார். உடல் உருவாக்கத்தி லிருந்து மன உருவாக்கமும் மன உருவாக்கத்திலிருந்து ஆன்ம உருவாக்கமும் நிகழல் அடுக்கமைவாகும். அதேவேளை சுற்றுவட்டமும் இணைந்து செயற்படுகின்றது. அறிவு, உணர்ச்சி, ஒழுக்கம் ஆகியவை வளர்ச்சிப் பாதையில் அடுக்கமைவாகத் தொடராது சுழற்சிக் கோலங்களைக் கொண்டிருக்கும். அனுபூதி அனுபவங்களும் தன்மக்கடப்பு நிலையுடன் தொடர்புடையதாகவே இருக்கும்.

அவருடைய கருத்துக்களை மறுதலித்து வாஸ்பேர்ன், குரொவ், சொவாட்ஸ்கி ஆகியோர் மாற்று மாதிரிகையை உருவாக்கினர். மனித வளர்ச்சி அடுக்கமைவாக அமைவதில்லை என்பது அவர்களின் கருத்து.

ஆள்நிலைக் கடப்பு உளவியலை தெய்வீக நிலைப்பட்ட உளச்சுகம் தேடும் செயற் பாடுகளை முன்னெடுப்பதற்கும் பயன்படுத்து கின்றனர். யோக முறைகள், தியான முறைகள், குண்டலினி முதலிய கீழைத்தேய அணுகு முறைகளுடனும் தொடர்புபடுத்துகின்றனர். உள்மன உசாவலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டுமென்ற கருத்துக்களும் அவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

வளர்ந்து வந்துள்ள சில உளவியல் துறைகள் ஆன்மிகத் துறைகள் மீது கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அனுபூதி உணர்வுகள், இறைகாட்சி அனுபவங்கள், எதிர்வுகூறும் காட்சிகள், ஆழ்நிலைத்தியானம், குண்டலினி எழுகை முதலிய துறைகளிலே வரன்முறை உளவியல் ஆழ்ந்த ஈடுபாட்டை மேற்கொள்ளவில்லை.

புதிதான இத்துறையில் இறையுணர்வு நெருக்கடி (Spiritual Crisis) இறையுணர்வு அவசர நிலை (Spiritual Emergency) முதலானவை முன் வைக்கப்பட்டுள்ளன.இது ஒருவகை அடையாள நெருக்கடியாகக் கருதப்படுகின்றது. அதாவது அத்தகைய உணர்வு பெறுபவர்கள் தமது முன்னைய கருத்துக்கொள்ளலில் தீவிர மாற்றங்களை அனுபவிக்கின்றனர்.

முன்னர் அனுபவிக்காத இறையுணர்வை அனுபவிக்கின்றனர். அதனால் அடையாள நெருக்கடி தோற்றம் பெறுகின்றது. அந்நிலை ஒருவரின் முன்னைய தொழிற்பாடுகளிலே குழப்பங்களை ஏற்படுத்துகின்றது.

குடும்பத்தை விட்டுவிலகுதல் (புத்தர்), தொழில்களை விட்டுவிலகுதல், சமூகத் தொழிற்பாடுகளிலே மாற்றங்கள் நிகழல், துறவு கொள்ளல் முதலாம் தொழிற்பாடுகள் தெய்வீக நெருக்கடிகளுடன் தோற்றம் பெறுகின்றன. அனுபூதியை அனுபவிப்பவர்களை உளவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களுக்கு உள்ளாவோர் என்று கொள்ளல் தவறு என்பதை நவீன உளவியல் வலியுறுத்துகின்றது. ஏற்கனவே சமய உளவியலிலே அது 'மீண்டும் பிறப்பெடுத்தல்' என்ற கருத்தாக்கத்தால் விளக்கப்பட்டுள்ளது. இறை நம்பிக்கையின் எழுபாய்ச்சல் (Leap) என்றும் அது குறிப்பிடப்படுகின்றது.

'ஆள் நிலை மாற்றத்தை'க் குவியப் படுத்துதல் உளவியலுக்கு மட்டும் உரிய செய்தி அன்று. சமூகவியல், மானிடவியல், வணிகவியல், மேலாண்மையியல், சீர்மியம், கலை, இலக்கியங்கள், நடிப்புப்போன்ற துறைகளுக்கும் அந்தக்கருத்தாக்கம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. அதனை அடியொற்றிய இலக்கியத்திறனாய்வும் வளர்த்தெடுக்கப் படுகின்றது.

அனுபூதி உணர்வுகள் பற்றிய ஆராய்ச்சி பல்வேறு சிந்தனைகளுக்கும் கருத்தாக்கங்களுக்கும் இட்டுச் சென்றுள்ளது. ஆனால், விஞ்ஞான முறைகளை அடியொற்றி அதனை விளக்குதலும், நிறுவுதலும் இடர்ப்பாடானதாக அமைகின்றது. ஆயினும் எதிர்பாராத அனுபூதி அனுபவங்கள் உளவியலாளர் முன்வைக்கும் படையல்களாகவுள்ளன.

ஏற்கனவே உள்ள உளவியல் ஆய்வு முறைகள் அனுபூதி உளவியலை ஆராய முடியாத மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. அந்நிலையில் புதிய ஆய்வு முறைகளையும் கருதுகோள்களையும் உருவாக்கி அனுபூதி அனுபவங்களை ஆழ்ந்து தேடவேண்டியுள்ளது. 'கண்டவர் விண்டிலர்' என்பது ஆய்வு நோக்கில் ஓர் அறைகூவலாகவுள்ளது. 'கண்டறியாதன கண்டேன்' என்ற அனுபவம் மேலும் உளவியல் தேடல்களை நோக்கி நீட்சிகொள்கின்றது.



# நூலகம்

❋ அளவுப் போராட்டத்துக்கான படைக்கலங்கள் செய்யும் படைவீடு நூலகம்

– இங்கர் சாஸ்

❋ எனது நூலகமே எனக்குப் போதிய செல்வமாகும்.

– ஷேக்ஸ்பியர்

❋ நூலகங்கள் பண்டைய உலகின் சின்னங்கள் இக்கால உலகின் புகழ் கொடிகள்.

– வாய்ட்பெல்லா

❋ இக்காலத்தின் உண்மைப் பல்கலைக்கழகம் நூல்களின் தொகுதிதான்.

❋ நூலகமே ஒரு தனி உலகம் அதன் உள்சென்று வந்தால் அறிஞனாகலாம். கலைஞனாகலாம். கவிஞனாகலாம்.

– அபிப் முகம்மது ஜின்னா

❋ என் நூலகம் என் பணிக்கு அடிப்படை என்னுள்ளும் புறமும் இன்பமும் ஆறுதலும் தருவதாகும்.

– கிப்பன்

❋ நூல்கள் இல்லாத வீடு சாளரம் (ஜன்னல்) இல்லாத வீடு

– ஹோம்ஸ்மான்

❋ தோழனுக்காக கூடத் திறந்து கொள்ளாத சொற்கள் கருத்துக்கள் உனக்காகத் தெளிவாக விளக்கப்பட்டுக் காத்திருக்கின்றன.

– எமர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்



மலையக மக்களுக்கென ஒரு பல்கலைக் கழகம் உருவாக வேண்டும் என்ற கோரிக்கையை யாம் சில ஆண்டுகளுக்கு முன் முன்வைத்தோம். இது பற்றி மறைந்த பெருந்தலைவர் அமரர் திரு. சௌ. தொண்டமான் அவர்களிடம் வலியுறுத்தி இப்புதிய பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கான ஓர் ஆலோசனைப் பத்திரத்தையும் தயாரித்து அன்னாரிடம் சமர்ப்பித்தோம். புவியியல் பேராசிரியர் எம். எஸ். மூக்கையா அவர்கள் உயர் கல்வி நிறுவனங்களை நிர்வகித்து அனுபவம் பெற்றவராதலின் அவர் அப் பல்கலைக்கழகத்துக்கு மலையகப் பல்கலைக்கழகம் (University of Highlands) எனப்பெயரிட்டு அவ்வாறான பல்கலைக் கழகத்திற்கான நிதித்திட்டம் ஒன்றை அறிக்கையாகச் சமர்ப்பித்தார். ஆயினும் அப்போது அடிக்கடி தேர்தல் நடக்க வேண்டிய அவசியம், அரசியல் ஸ்திரமற்ற நிலை, அரசியல் மாற்றங்கள் - இவற்றில் அனைத்து அரசியல் தலைவர்களின் கவனங்கள் இயல்பாகவே ஈர்க்கப்பட்டமை காரணமாக இக்கோரிக்கையை நடைமுறைப்படுத்தும் ஆலோசனைகளும் நடவடிக்கைகளும் உக்கிரம் பெறவில்லை.

அண்மைக் காலங்களில் நான் சந்தித்து வரும் மலையக அரசியல் தலைவர்கள் (நான் கல்வித்துறை சார்ந்த ஊழியர் என்ற முறையில்) என்னிடம் மிகுந்த ஆர்வத்துடன் மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்குச் செய்யவேண்டியது என்ன என்ற முறையில் என்னிடம் கலந்துரையாடுவார்கள். அவர்களுக்குக் கல்வி மேம்பாட்டில் உள்ள ஆர்வம் எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அவர்களிடம் நான் வலியுறுத்திக் கூறிவரும் பல்கலைக்கழகம் பற்றிய செய்தி இதுதான்:

"இன்று பாராளுமன்றத்தில் சக்திவாய்ந்த உறுப்பினர்களாக நீங்கள் உள்ளீர்கள். இது இன்றைய நிலை. எதிர்காலம் எப்படி மாறுமோ சொல்ல முடியாது. உங்களது இன்றைய செல்வாக்கைக் கொண்டு ஒரு மலையகப் பல்கலைக்கழகத்தை நிறுவிவிட்டால் மலையக மக்கள் உங்களை என்றென்றும் மறக்க மாட்டார்கள். உங்கள் சேவைகளில் எல்லாம் மகத்தான சேவையாக, எதிர்காலச் சந்ததியினரும் தங்களை நினைவு கூரும் மாபெரும் பணியாக அது அமைந்துவிடும்" என்று நான் அவர்களிடம் வலியுறுத்தியதுண்டு.

1942 இல் முதலாவது இலங்கைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் தேசிய பல்கலைக்கழகங்களாகவே கருதப்பட்டு வருகின்றன. பிராந்தியங்களிலும் (யாழ், றுஹுணு, கிழக்கிலங்கை, தென்கிழக்கு போன்ற) மாகாண ரீதியாகவும் (வயம்பா. சப்பிரகமுவா, ரஜரட்டை, ஊவா) அமைக்கப்படும் பல்கலைக் கழகங்களும் தேசிய பல்கலைக் கழகங்களாகவே கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும் காலவோட்டத்தின் நடைமுறைத் தேவைகள், தீவிரமடைந்து வந்த இனப்பிரச்சினை என்பன காரணமாக, இந்தத் தேசிய அந்தஸ்து குன்றி பல பல்கலைக் கழகங்கள் அவ்வப் பிராந்திய மக்களுக்கே முதன்மை வாய்ப்பை வழங்கும் பல்கலைக் கழகங்களாக மாறி வருகின்றன. ஒரு தேசிய பல்கலைக் கழகம் முன்நிபந்தனையாகச் சகல இனப்பிரிவினருக்கும் இடமளிக்க வேண்டும் என்றால், நடைமுறையில் சில பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்ட இனத்தவருக்கே விசேடமாக உரியவை என்ற முறையில் வளர்ச்சி பெற்றுவருகின்றன. இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல பல்கலைக் கழகங்களிலும் சகல இனத்தவருக்கும் இடமுண்டு என்பதில் எதுவிதச் சட்டபூர்வ தடையுமில்லை. ஆயினும், நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக முக்கியமாக மிக உக்கிரமடைந்த இனப் பிரச்சினை காரணமாகப் பல பல்கலைக் கழகங்கள் முழுமையான தேசிய அந்தஸ்தைப் பெறும் வகையில் பல இன மாணவர்களைக் கணிசமான வீதத்தில் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை.. சில பல்கலைக் கழகங்களில் சிறுபான்மைக் கற்றறிவாளரின் நிர்வாகம், மற்றவற்றில் பெரும்பான்மையினரின் ஆதிக்கம் என்ற யதார்த்த நிலை இன்று உருவாகியுள்ளது. பல்கலைக் கழகங்களின் பெயர்கள், அங்கு பயிலும் மாணவர்களின் இனவாரியான தரவு என்பவற்றைத் தந்து இவ்வுண்மையை நிரூபிப்பது எமது நோக்கமன்று. தேசிய பாணியில் தொடங்கிய இலங்கைப் பல்கலைக் கழக அமைப்புக்குள் அடங்கும் பல பல்கலைக் கழகங்கள் அந்தப் பாணியை இழந்து வந்துள்ளன என்பதே எமது அடிப்படையான வாதம். யதார்த்த அடிப்படையில் இன்று பல்கலைக் கழகங்களாகவும் மற்றையவை பிராந்திய ரீதியான பல்கலைக் கழகங்களாகவும் ஒரு குறிப்பிட்ட இனப் பிரிவினருக்குரிய பல்கலைக் கழகங்களாகவும் மிளிர்ந்துள்ளன. ஆனால், இவை இவ்வாறு மிளிரவேண்டும் என்பதை வலியுறுத்தும் அரச கொள்கைகள் எதுவுமில்லை.

இப் பின்புலத்தில் இன்று இல்லாதது மலையக மக்களுக்கான பல்கலைக் கழகம் ஒன்றுதான் என்பதே எமது வாதம். மலையக மக்கள் தவிர்ந்த ஏனைய இனப் பிரிவினருக்கென்றே கல்வி வாய்ப்பளிக்கும் பல்கலைக்கழகங்களை இன்று இனங்காண முடிந்த நிலையில் 'மலையகப் பல்கலைக் கழகம்' பற்றிய கோரிக்கையில் கொள்கை யளவில் தவறு எதுவுமில்லை.

'மலையகப் பல்கலைக் கழகம்' என்ற கோரிக்கை பல கேள்விகளை எழுப்புகின்றது:

- அப்பல்கலைக் கழகத்துக்கு மலையகத்தி லிருந்து போதிய தகமை வாய்ந்த மலையக மாணவர்கள் கிடைப்பார்களா?

- மலையகப் பல்கலைக் கழகத்தை நிர்வகிக்கக் கூடிய நிர்வாகிகள் (துணைவேந்தர், பதிவாளர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்) கிடைப்பார்களா?

மலையகப் பல்கலைக் கழகம் நடை முறைக்கு சாத்தியமற்றது என்ற முறையில் இவ்வாறான வினாக்களை எவரும் அடுக்கிக் கொண்டு செல்லமுடியும்.

எதுவுமே முடியாதென்றால் முடியாது தான். முடியாது, சாத்தியமற்றது என்ற முறையில் சிந்திப்பதால் என்ன பயன்? இவ்வாறான ஒரு பல்கலைக் கழகத்தை எவ்வாறு உருவாக்கலாம்? அதற்கான மாணவர் மற்றும் மனித வளம் பற்றிய உடன்பாடான சாதகமான - அனுதாபமான வினாக்களுக்கு ஏராளமான விடைகள் உண்டு. இவ்விடைகளின் மூலம் மலையகப் பல்கலைக் கழகம் ஒன்றை யதார்த்தத்தில் நிறுவ முடியும் என்பது எமது கருத்து.

மலையகப் பல்கலைக் கழகம் ஒன்று ஏன் தேவை என்பதற்கான காரணங்களைச் சுருக்கமாகத் தர விரும்புகின்றேன்:

1. இலங்கை வாழ் இந்தியத் தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற கொள்கை பல நடைமுறைச் செயற்பாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கணக்கீட்டில் தனியிடம், மந்திரி சபையில் பிரதிநிதித்துவம், அரசியல் யாப்புப் பேரவை உட்பட புதிதாக அமைக்கப்படவுள்ள சுதந்திர ஆணைக் குழுக்களில் மலையகத் தமிழருக்குப் பிரதிநிதித்துவம், பல்வேறு முக்கிய அரசாங்க ஆணைக்குழுக்களில் வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் - இவற்றை உதாரணங்களாகக் கூறலாம். இந்நிலையில் நாட்டின் ஏனைய சமூகத்தவர் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களில் அவர்களுடைய தலைமைத்துவத்துடன் **அப்பிராந்திய மாணவர்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட பல்கலைக் கழகங்கள் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன.** பிற இன மாணவர்கள் அங்கு அனுமதி பெற எவ்விதத்தடையுமில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். இந்நிலையில் இலங்கைத் தேசிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்ட மலையக இந்தியத் தமிழர்களுக்கென தனியான பல்கலைக்கழகம் உருவாவது காலத்தின் நிலைமைகளின் கட்டாயமேயாகும்.

2. **மலையக இந்திய மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்ய இன்றுள்ள பல்கலைக் கழக அமைப்பும் மாணவர் அனுமதிக் கொள்கையும் பொருத்தமானவையல்ல.** அனுமதிக் கொள்கையின் நோக்கு பின்தங்கிய பிரிவினரின், பின்தங்கிய பிராந்தியங்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்பதாகும். அனுமதிப் புள்ளி விபரங்களில் மலையக மாணவர்களின் தொகையைப் பார்த்தால் (அனுமதிபெறும் 20,000 பேரில் மலையக மாணவர் 200 பேர் இதுவும் ஐயத்திற்குரிய எமது மதிப்பீடு. எனவே **பின்தங்கிய** மக்களுக்குச் சார்பான பல்கலைக் கழக அனுமதிக் கொள்கை மலையக மக்களையும் பின்தங்கிய மக்கள் என்று விசேடமாகக் கவனிக்கவில்லை என்பது நன்கு தெளிவாகின்றது.

மலையக இந்திய மக்கள் கல்வியில் பின்தங்கியவர்களில் முதன்மையானவர்கள் என்பதற்கு சட்டென்று மனதில் உதிக்கும் சில காரணங்களையும் கூறுகின்றேன்.

- பல்கலைக்கழகக் கல்வி பயிலும் 70,000 மாணவரில் மலையக மாணவர்கள் தொகை நிச்சயமாக 3,500 (5 சதவீதம்) இல்லை. எமது மதிப்பீட்டில் இது 300 ஆகவும் இருக்கக்கூடும். ஏன் இந்த உத்தேச மதிப்பீடு? உயர்கல்வி அதிகார பீடங்களின் அறிக்கைகளில் இவ்விபரங்கள் தரப்படுவதே இல்லை.

- மலையகத்தில் - 10 இலட்சம் பேர் வாழ்கின்ற மலையகத்தில் க. பொ. த. உயர் நிலையில் **விஞ்ஞான வகுப்புக்களைக் கொண்ட 10 பாடசாலைகள் கூட இல்லை.** அங்குள்ள ஆசிரியர் பற்றாக்குறை, பிரச்சினைகள், அவலங்கள் ஏராளம்.

- எழுத்தறிவு சதவீதம் என்ற குறிகாட்டி கூட இந்தியத் தமிழர்களில் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் குறைவு என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

கல்வித்துறையில், விசேடமாக உயர்கல்வித் துறையில் பின்தங்கியுள்ள மலையக மக்களுக்கு, அவர்களுடைய அடையாளத்துடன் கூடிய பல்கலைக் கழகமொன்றை வழங்குதன் மூலமே அவர்களுடைய உயர் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்க முடியும் என்பது எமது வாதம். இப்பல்கலைக் கழகம் அம்மக்கள் மத்தியில் உயர்கல்வி பற்றிய ஒரு புதிய விழிப்புணர்வை மட்டுமன்றி, உயர்கல்விக்கான கேள்வியையும் மேம்படுத்தும்.

1. இச்சமூகத்தைச் சேர்ந்த தகுதிபெற்ற மாணவர்களுக்கான விசேட அனுமதிக்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். மேலும் இன்றைய பல்கலைக் கழகங்கங்கள் தனித்து க. பொ. த. உ.நி. சித்தி பெற்ற பட்டதாரி மாணவர்களைக் கொண்டு மட்டுமன்றி ஏராளமான விரிவாக்கக் கற்கை நெறிகளை (Extension Courses) நடாத்துகின்றன. பத்திரிகையியல், கணினிக்கல்வி, ஆங்கிலம் போன்ற துறைகளைப் பயில ஏராளமான வெளி மாணவர்கள் வார இறுதியில் பல்கலைக் கழகங்களை நாடுகின்றனர். இவ்வாறான கற்கை நெறிகளை அறிமுகம் செய்து, பல்கலைக் கழகக் கல்வியைத் தவறவிட்ட ஏராளமான இளைஞர்களுக்கு மலையகப் பல்கலைக் கழகம் உயர்கல்வி பயில ஒரு இரண்டாம் வாய்ப்பினை வழங்கலாம். அத்துடன் பட்டப்படிப்புக்கு வெளிவாரி மாணவர்களாக மலையக இளைஞர்களைப் பதிவு செய்து, அவர்களுக்கான வகுப்புகளை நடத்தவும் கற்க உதவவும் எதுவிதத் தடையுமில்லை. பல பல்கலைக் கழகங்கள் ஏற்கனவே இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

2. வழமையான பட்டக் கற்கை நெறிகளோடு இவ்வாறான பல உயர்கல்வி வாய்ப்புகளை மலையகப்பல்கலைக் கழகம் வழங்க முடியும்.

3. இன்று அழகியல் கல்விக்கென்று ஒரு பல்கலைக் கழகம் உண்டு. யாழ். பல்கலைக்கழகத்தில் இராமநாதன் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, மற்றும் நடனத்துறை, இசை முதலான வற்றில் முக்கிய தொண்டாற்றி வருகின்றது. கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துடன் விபுலானந்த இசைக் கல்லூரி இணைக்கப் பட்டுள்ளது. மலையகத்தில் இசை, நடனம் மற்றும் கலைத்துறைகளுக்குத் தனியான நிறுவனம் இல்லாத குறையை மலையகப் பல்கலைக் கழகம் தீர்த்து வைக்க முடியும்.

4. மலையக இந்தியர்களின் வரலாறு, பொருளாதாரம், கலை, இலக்கியம், நாட்டாரியல், கல்வி நிலை, சமூகவியல், மானிடவியல், அவர்கள் வாழ்விடங்களின் வளங்கள், எதிர்காலவியல் நோக்கில் அவர்களுக்கான வழிகாட்டல்கள், அரசியல், அரசியல் வரலாறு, அவர்களின் தலைமைத்துவம், தலைமைத்துவத்தின் பங்களிப்பும் பண்புகளும் இப்படிப் பல்கலைக் கழக நிலையில் ஆராயப்பட வேண்டிய ஏராளமான விடயங்கள் உள்ளன. நவீன உலகில் ஆராய்ச்சி இல்லையேல் அபிவிருத்தியில்லை. **வெறும் நிகழ்வுகளைத் தேடும் (Fact Finding) ஆய்வுகளின்றி மலையக இந்தியர்களின் மேம்பாட்டுக்கான ஆய்வுகளின் அவசியம் பற்றிச் சிந்திக்கும்போது, மலையகப் பல்கலைக்கழகம் என்ற நிறுவனமே எமது சிந்தனையில் தோன்றி உருப்பெறுகிறது.** இவ்விடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். இந்த ஆய்வுகளில் எவரும் ஈடுபடாமலில்லை. அதற்கு ஒரு சிறு பட்டியல்:

**மலையக இந்தியர் வரலாறு:**

*ஆங்கில மொழியில் முயற்சித்து எழுதியோர்:* பி. பஸ்தியாம்பிள்ளை, வெசுப்பெரும, பாலசிங்கம், நடேசன், எஸ். இராஜரத்தினம் (இன்னும் பலர்)

*இத்துறையில் எழுதிய வெளிநாட்டவர்:* கோண்டாப்பி, சத்தோபாத்தியாய, சகாதேவன் (இன்னும் பலர்).

**மலையகக் கல்வி:**

*ஆங்கிலத்தில்:* ஞானமுத்து, சந்திரசேகரன், மூக்கையா, அஞ்சலா விட்டில், நவரட்ன, வாமதேவன்.

**மலையக இலக்கியம்:**

கலாநிதி அருணாசலம், அந்தனி ஜீவா, நித்தியானந்தன், தெளிவத்தை ஜோசப், சாரல் நாடான், (பட்டியல் முழுமையானதல்ல).

**சாதி நிலைமை, பெண்கள் நிலைமை:**

*ஆங்கிலத்தில்* ஆர் ஜெயராமன், வி. கணபதிப் பிள்ளை, ஆர். சூரியன்.

மேற்கண்ட சிறுபட்டியலில் விடப்பட்டோர் ஏராளம், இங்கு வலியுறுத்தப்படும் கருத்து மலையகப் பல்கலைக் கழகத்தில் ஒரு விசேட ஆய்வுத் துறையொன்று - மலையக இந்தியத் தமிழர் கற்கைத்துறை (Dept. of Upcountry Indian Tamil Studies) ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, மேலே சொல்லிய ஆய்வு விடயங்கள் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டும் என்பதாகும். பல்கலைக் கழகம் என்பது வெறுமனே பட்டதாரி மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணியை மாத்திரம் கொண்டதன்று. ஆராய்ச்சியும் அதன் முக்கிய பணியாகும். இவ்வாய்வுத்துறையில் இவ்வுத்தேச பல்கலைக் கழகம் ஆற்றவேண்டிய பணிகளை இன்னும் விரித்துக்கூறப் போதிய தரவுகளும் தகவல்களும் உண்டு. மலையக இந்தியத் தமிழர் பற்றி இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகளைச் சேகரிப்பதும் தொகுப்பதும் செய்யப்பட வேண்டிய புதிய அபிவிருத்தி நோக்கிய ஆய்வுகள் பற்றி சிந்திப்பதும் செயலாற்றுவதும் உத்தேச பல்கலைக் கழகத்தின் இலக்குகளாக வேண்டும். உதாரணத்திற்கு ஒரு ஆய்வுத்துறையைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்: 1830 முதல் இலங்கையில் குடியேறிய இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்கள் தமது சமூக, பொருளாதார, கலாசார, கல்வி அந்தஸ்தை மேம்படுத்திக்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், கொள்கைகள், கருத்தாக்கங்கள் யாவை? 170 ஆண்டுகளாகப் பெருந்தோட்ட வட்டத்துக்குள் வாழ்ந்து எழுத்தறிவும், வாழ்க்கைத் தரமும் கல்வியும் குறைந்த நிலையில் அப்படியே வாழ்ந்தால் புதிய இருபத்தியோராம் நூற்றாண்டின் - அறிவுசார் நூற்றாண்டின், தகவல் மைய நூற்றாண்டின் சவால்களையும் தேவைகளையும அவர்களால் எதிர்கொள்ள முடியாது. எனவே, சோவியத் ரஷ்யாவின் சூழ்நிலையில் லெனின் கூறியது போல் 'இனி செய்ய வேண்டியது என்ன?' (What is to be done?) என்ற வினாவுக்கு மலையக தொழிற் சங்கங்களையும் மற்றும் அரசியல் கட்சிகளையும் வழிகாட்டும் வகையில் மலையகத்து மற்றும் இலங்கைக் கற்றறிவாளர்களை உள்ளடக்கிய மலையகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக் கழகம் எதிர்காலத்துக்கான செயற்றிட்டம் ஒன்றை உருவாக்க முடியும். ஆயினும் இப் பல்கலைக் கழகத்தை உருவாக்கும் பணியை மலையக அரசியற் தலைமைப் பீடமே சிரமேற் கொள்ள வேண்டும். இன்று பாராளுமன்றத்தில் பதவி வகிக்கின்ற அனைத்து மலையக - இந்திய வம்சாவழிப் பிரதிநிதிகளும் மலையகப் பல்கலைக் கழகம் என்ற உயர்ந்த இலட்சியத்துக்காக வேறுபாடுகளைக் கைவிட்டு ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும் என்பதே எமது தாழ்மையான வேண்டுகோள்.

மலையகப் பல்கலைக் கழகம் தொடர்பான கோரிக்கை மலையகக் கற்றறிவாளர்கள், அரசாங்கப் பிரதிநிதிகளிடம் முன்வைக்கப் பட்டபோது, அவர்கள் கொள்கையளவில் அதனை ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் உண்டு. ஒருமுறை வரவு செலவுத்திட்டத்திலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டது. தோட்ட உட்கட்டமைச்சின் 3 ஆண்டு வேலைத் திட்டத்திலும் இது பற்றி சற்று விபரமாகவே குறிப்பிடப்பட்டிருந்தது (2006-2008) மூன்றாண்டு காலப்பகுதிக்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கப்படல் வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் முன்னேற்றம் பற்றிய சரியான விபரங்கள் தெரியவில்லை.

தற்போது சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சின் ஆலோசகர்களாக உள்ள சில மலையக அறிஞர்கள் மலையகப் பல்கலைக் கழகம் ஒன்றுக்கான கோட்பாட்டுப் பத்திரத்தைத் தயாரித்து வருகின்றனர். மலையகத்துத்தலைமைப் பீடங்கள் அனைத்தும் இக்கோரிக்கை குறித்துத் தீர்க்கமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இவ்விடயம் தொடர்பாக ஆங்கிலத்தில் தயாரிக்கப் பட்ட இரு ஆவணங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

---

## YOUR EXCELLENCY THE PRESIDENT OF SRI LANKA - 11TH NOVEMBER, 2014

### A REQUEST TO ESTABLISH A UNIVERSITY/UNIVERSITY COLLEGE FOR THE UP-COUNTRY TAMILS

### *Background*

Tamils of Indian origin numbering about 1.5 million or around 7 percent of the populaiton have been living in this country for the past two hundred years and contributed enormously to the development of the country during this period. They were highly disadvantaged in education since their arrival but now things have improved that they have several 1AB and 1C schools and two teacher education institutes and a technical institue at Hatton. We are witness remarkable progress in their socio-economic conditions, thanks to the intervention of the successive governments of Sri Lanka including that of Your Excellency.

The development of university education during the post independent era in Sri Lanka witnessed that establishment of universities in the North and Eastern Provinces that the Tamils and Muslims in those areas are benefitted by this effort



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and they are able to establish faculties and centres to preserve and develop their cultures. In fact, the universities are helping the socio-economic development of the areas and possess the potential to undertake such task for the well being of the people.

Although there are three universities operating the plantation provinces the upcountry Tamils have no significant benefit as far as their cultural development is concerned. These unversities do not reflect this community in terms of their identity and culture.

***Suggestion***

In veiw of the circumstances explained above very briefly it is requested from His Excellency to consider the establishment of a University of Highlands for the upcountry Tamils where students from all communities can study. The proposed university will reflect the cultural ethos of the upcountry Tamils and it should be established at a suitable location in the Nuwara-Eliya district. The university could be declared as a reward for this community for their contribution to the development of Sri lanka during the past decades.

Favourable consideration of this request will go a long way as an attempt to expand state university education in Sri Lanka and accommodating a request made by a disadvantaged community which is also backward in higher education in terms of enrolment and output of graduates. We feel that the establishment of such a university would pave the way for creating a fresh demand for higher education in the upcountry in joining the emerging knowledge society in Sri Lanka under the great leadership of Your Excellency.

An altenative suggestion is to establish initially a university college at the Nuwara-Eliya district with an integrated Faculty of Socia Science, Commerce and management affiliated to the University of Peradeniya. This is because more students from upcountry offer these subjects as many 1C schools are available for them.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Appendix I*

October 2005

Hon. Dilan Perera
Minister of Estate Infrastructure and Community Development
Ministry of Estate Infrastructure and Community Development
Colombo 03.

Respected Sir,

***ESTABLISHMENT OF THE UP-COUNTRY UNIVERSITY***

We take this opportunity to congratulate you on your appointment as Minister of Estate Infrastructure and Community Development. We believe that you would be able to immensely contribute towards the socio-economic development of the Plantation people whose problems and issues are quite familiar to you and we ensure our wholehearted support and cooperation for all your endeavours to promote the community.

While very sincerely thanking you for inviting us to discuss the above matter we would like to submit the following that would make our request reasonable as well as urgent:

* The Sri Lankan university Movement which was originated by our leaders and academics in the colonial period has flourished into fourteen Universities and a Open University today. The current trend of establishing regional universities with a focus on the socio-cultural development and progress of the regional communities has had an effective impact in broad basing and democratizing university education in the country

* The relatively remarkable and significant achievements we have recorded in our national education system for the last fifty years have unfortunately failed to fully integrate the Plantation Community. As a result the community is lagging behind in all the educational indicators compared to other communities in the country.

* However changes are taking place slowly but steadily and the number of students entering the universities is increasing even though that number is far


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

from the ratio. You would appreciate the fact that the plantation community which is about 6% in the population should have at least 3,600 students among the present 60,000 students at the universities. But unfortunately the number is only about 600.

* Further the community needs a seat of higher learning that will focus and study in depth the problems of the community and recommends ways and means for the overall development of the community. Such University will also be the base for the creation of a pool of academics and researchers from the community who would strive to take this downtrodden community forward.

* There for the time is opportune to establish the Up-country University in a suitable location closer to Hatton/Nuwara-Eliya. This gesture will also be a token of appreciation and gift to the plantaiton community that has toiled selflessly for the last two centuries to create the national wealth but still patiently waiting to enjoy it legitimate share of that wealth.

Thanking you,

Yours Sincerely

**Sgd. Prof. S. Sandarasegaram**
Faculty of Education, University of Colombo

**Sgd. Prof M. Sinnathamby**
Department of Economics, University of Peradeniya

**Sgd. M. S. Mookiah**
Department of Geography, University of Peradeniya

**Sgd. Mr. T. Thanaraj**
National Consultant, Distance Education Partnership Programme
(Ministry of Education)

**Sgd. A. S. Chandrabhose**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகப் பல்கலைக்கழகம்
# தேவையும் நியாயப்பாடுகளும்



**சிவம் பிரபாகரன்**
(MBA(PIM-SRI J) B.B.A (Sp.) Col Diploma in Journalism)
சமூக ஆய்வாளர், ஊடகவியலாளர், முகாமைத்துவ ஆலோசகர்.

பல்கலைக் கழகம் எனும்போது மேற் படிப்பிற்கான அல்லது உயர் கல்விக்கான ஒரு நிறுவனமாகும். அதாவது முழுமையான இடைநிலை கல்விக்கு பிறகு ஆராய்ச்சி மற்றும் பட்டப்படிப்பு கற்கை நெறிகளை நடத்தும் ஒரு நிலையம் பல்கலைக் கழகமாகும். எனவே, பொதுவான பின்வரும் பண்புகளை பல்கலைக் கழகத்தில் அவதானிக்கலாம்.

* **பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்குதல்**
* **பின்பட்ட கற்கை நெறிகளை வழங்குதல்**
* **ஆராய்ச்சிகளை (ஆய்வுகளை) மேற்கொள்ளுதல்**
* **கல்விச் சுதந்திரம் உள்ள நிறுவனம்**
* **சுயாதீனமான நிறுவனம்**

இந்த வகையில் உலகில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பல்கலைக் கழகம் எது என்பது குறித்த மாறுபட்ட கருத்துக்கள் இருந்த போதிலும் இன்றுவரை செயற்பாட்டில் உள்ள பழமையான பல்கலைக் கழகமாக மொரோக்கோ பல்கலைக் கழகமே திகழ்கின்றது. ஆனால் உலகில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது பல்கலைக் கழகம் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்ட டக்ஷஷிலா எனவும், கிரீஸில் உருவாக்கப்பட்ட எதென்ஸ் பல்கலைக் கழகம் எனவும், எகிப்து-கெய்ரோவில் ஸ்தாபிக்கப்பட்ட அல் அஸார் எனவும் மாறுபட்ட தகவல்கள் இருந்த போதிலும் இவை மூன்றுமே உலகின் பழமையான ஆரம்பகாலப் பல்கலைக் கழகங்கள் என்பது மட்டும் உண்மையாகும்.

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலா வது நவீன உயர்கல்வி நிறுவனம் 1921 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழக கல்லூரி (University College of Ceylon) ஆகும். அதற்கு முன்னர் இலங்கையில் பல தொழிற்கல்வி நிறுவனங்கள் இருந்துள்ளன. ஆனாலும் இலங்கையில் முதலாவது பல்கலைக் கழகம் 1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகம் (University College of Ceylon) ஆகும். ஆரம்பத்தில் இலங்கைப் பல்கலைக்கழகம் என்று ஒன்றும், ஏனையவை அனைத்தும் இலங்கை பல்கலைக்கழகத்தின் வளாகங்கள் எனவும் அழைக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் பிரகாரம் அனைத்து வளாகங்களும் சுயாதீனமான தேசிய பல்கலைக் கழகங்களாக ஆங்கீகாரம் பெற்றன. இவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் (University Grants Commission - UGC) ஒப்படைக்கப்பட்டது.

இன்று இவ்வாறான 15 தேசிய பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன. அவை கொழும்புப் பல்கலைக் கழகம் (1942), பேராதனைப் பல்கலைக் கழகம் (1949), ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக் கழகம் (1959), களனிப் பல்கலைக் கழகம் (1959), மொறட்டுவைப் பல்கலைக் கழகம் (1972), யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் (1974), ருகுணு பல்கலைக் கழகம் (1978), இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம் (1978), கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் (1981), சப்ரகமுவ பல்கலைக் கழகம் (1991), தென் கிழக்குப் பல்கலைக் கழகம் (1995), ரஜரட்ட பல்கலைக் கழகம் (1996), வயம்ப பல்கலைக் கழகம் (1999), ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம் (2005), கட்புல, அழகியல் கலைகள் பல்கலைக் கழகம் (2005) என்பனவாகும். இவற்றுக்கு மேலதிகமாக சில அரசாங்கப் பல்கலைக் கழகங்கள் வெவ்வேறு அமைச்சுக்களால் நிர்வகிக்கப்படுகின்றன. உதாரணமாக, பாதுகாப்பு அமைச்சினால் நிர்வகிக்கப்படும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புப் பல்கலைக் கழகம் (1980), கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் பௌத்த, பாலிப் பல்கலைக் கழகம் (1981) மற்றும் புத்தசிராவக்க பிக்குகள் பல்கலைக் கழகம் (1996) இளைஞர் விவகார, திறன் அபிவிருத்தி அமைச்சினால் நிர்வகிக்கப்படும் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகம் - UNIVOTEC (2009) என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுக்கு அப்பால் பல வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இன்று அதன் கிளைகளை இலங்கையில் நிறுவி உயர் கல்வியை விற்பனை செய்து வருகின்றன.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தும் தேசிய பல்கலைக் கழகங்களாக இருந்த போதிலும் பல பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்ட இனக் குழுமத்தின் வளர்ச்சியிலும் அதன் இருப்பிலும் பாரிய பங்களிப்பைச் செய்து வருகின்றன.

இலங்கையில் இன்று நான்கு பிரதான இனக் குழுமங்கள் உள்ளன. சிங்களவர், இலங்கைத் தமிழர் (வட-கிழக்கு தமிழர்) முஸ்லீம்கள், மலையகத் தமிழர் என்பனவே அவை ஆகும். இவற்றிற்கு அப்பால் சிறிய இனக் குழுமங்களாக பறங்கியர் (பேகர்), மெலே, பரதர், கொழும்பு செட்டி, குறவர் (நாடோடிகள்), இலங்கை வாழ் ஆபிரிக்க சமூகமான கபீர் இனத்தவர் மற்றும் பழங்குடி இனத்தவரான வேடுவர் சமூகம் என்பனவும் உள்ளன. இவற்றில் பழங்குடி இனமான வேடுவர் இனம் மட்டுமே இலங்கையின் சுதேச இனமாகும். மற்றைய அனைத்து இனங்களும் இலங்கைக்கு வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறிய வந்தேறு குடிகளே ஆவர்.

இன்று இலங்கையில் பல்வேறு வடிவங்களில் இனத்துவ அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. மேற் சொன்ன அனைத்து தேசிய இனங்களும் (பெரும் தேசிய இனமான சிங்களவர்களை தவிர) இந்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மற்றுமொரு விளைவு இலங்கையின் பூர்வீக சுதேச இனமான வேடுவர் இனம் பெருமளவில் சிங்கள மயமாக்கப்பட்டது. இதுபோன்றே வட-கிழக்கு போர், மலையகத்தில் கட்டாய கருத்தடை, ஏனைய சிறு தேசிய இனங்கள் சிங்கள மயமாக்கலுக்கு மத்தியில் தங்கள் இன அடையாளங்களை தக்கவைப்பதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன. இந்நிலையில் காலங்கடந்தாவது வேடுவர் இனமும் இலங்கை வாழ் ஆபிரிக்க சமூகமும் தங்கள் இனத்துவ அடையாளங்களை பாதுகாக்க எடுத்து வரும் முயற்சிகளை வெகுவாகப் பாராட்டாமல் இருப்பது நியாய மல்ல.

மறுபுறத்தில் இலங்கையில் பிரதான நான்கு தேசிய இனங்களை (எண்ணிக்கை அடிப்படையில் அதிகம்) எடுத்துக் கொண்டால் அந்த தேசிய இனங்களைச் சார்ந்ததாக (மலையகத் தமிழர் தவிர்ந்த) உருவாக்கப்பட்ட தேசியப் பல்கலைக் கழகங்கள் அந்தந்த சமூகங்களின் இனத்துவ அடையாளங்களை பாதுகாத்து, முன்னெடுப்பதில் காத்திரமான பங்களிப்பை செய்து வருகின்றன. குறிப்பாக யாழ் பல்கலைக் கழகம் வட மாகாண தமிழ் மக்களின் அடையாளங்களைப் பாதுகாப்பதிலும் கிழக்கு பல்கலைக் கழகம் கிழக்கு மாகாண தமிழரின் அடையாளங்களை பாதுகாத்து, மீள் உருவாக்கம் செய்து முன்னெடுப்பதில் பாரிய பங்களிப்பை செய்து வருகின்றன. மிக குறுகிய காலத்திலேயே தென்-கிழக்குப் பல்கலைக் கழகம் முஸ்லீம்கள் சார்ந்த மிகவும் நேர்த்தியான வேலைத் திட்டங்களை செயற்படுத்தி வருவதையும் அவதானிக்கலாம்.

மேற்சொன்ன மூன்று பல்கலைக் கழகங்கள் தவிர நாட்டிலுள்ள ஏனைய அனைத்து பல்கலைக் கழகங்களும் மிகவும் திட்டமிட்ட வகையில் சிங்கள தேசியத்தின் இருப்புக்கான அடையாளங்களை பேணி பாதுகாத்து, புத்துயிர் அளிக்கும் செயற்பாட்டுக்கு பரந்தளவில் செயலுரு கொடுத்து வருவதையும் காணலாம். இந்நிலையில் தான் மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ அடையாளம், அதன் பாதுகாப்பு, எதிர்காலம் இந்நடவடிக்கை முன்னெடுப்பதற்கான ஓர் உயர் கல்வி நிறுவனத்தின் தேவை என்பன குறித்த வினாக்கள் எம் முன் எழுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் பல்கலைக் கழகங்களைக் கொண்டிருந்த சமூகங்கள் அல்லது பல்கலைக் கழகங்களுடன் தங்களை இணைத்துக் கொண்ட சமூகங்களின் இனத்துவ இருப்பு பேணப்பட்டு வருவதைக் காணலாம். குறிப்பாக இலங்கையில் தேசிய இனங்களின் இனத்துவ அடையாளம், அதன் இருப்பு குறித்து ஆராய்கின்றபோது பல்கலைக் கழகங்களின் பங்களிப்பைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். மலையகத் தமிழரைப் பொறுத்தவரை இலங்கையிலுள்ள பிரதான தேசிய இனங்களில் தனக்கென அல்லது தங்கள் விவகாரங்களை கையாளக்கூடிய பல்கலைக் கழகம் ஒன்று இல்லாத ஒரே சமூகமாக மலையகத் தமிழரே உள்ளனர். மறு புறத்தில் இன்று இலங்கையில் மிக வேகமாக இன அடையாளங்களை இழந்து வரும் ஒரு சமூகமாகவும், இனத்துவ அடையாளங்களை மாற்றி வரும் ஒரு சமூகமாகவும் மலையகத் தமிழரே உள்ளனர்.

உதாரணத்திற்கு ஒரு புள்ளி விபரத்தைப் பார்ப்போம். 1981 - 2011 வரையான முப்பது வருட காலத்தில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதமானது 36.49 வீதமாகும். இதில் சிங்களவர்களின் வளர்ச்சி 38.2 வீதமாகும். முஸ்லீம்களின் வளர்ச்சி 78.6 வீதமாகும். இலங்கைத் தமிழர் 20.3 வீதமாகவும் ஏனைய இனத்தவர்கள் (மலையகத்தமிழர் தவிர) 7.4 வீதமாகவும் இருக்கின்ற நிலையில் முப்பது வருட காலத்தில் மலையகத் தமிழரின் வளர்ச்சி வீதமானது வெறுமனே 2.8 வீதம் மட்டுமே உள்ளது. இது ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே. எனவே இந்த நிலையில் சரி மலையகத் தமிழரின் இனத்துவ அடையாளங்களை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டியது அவசிய தேவையாகும். இதை செயல் வடிவில் முன்னெடுப்பதற்கு சமூக அமைப்புக்களை போன்று ஒரு பல்கலைக் கழகத்தின் தேவையும் கட்டாயமாகும்.

ஒரு சமூகத்தை வளப்படுத்துவதில் பல்கலைக் கழகத்தின் பங்கு அளப்பரியது. குறித்த சமூகத்தினுடைய அரசியல், பொருளாதார, சமூக, உளவியல், ஆன்மீகம் ஆகிய விடயங்களை வளப்படுத்துவதில் அதன் பொறுப்பு மிகவும் முக்கியமானது. ஒரு சமூகத்தின் மூளை என்பதே பல்கலைக் கழகம் தான். யாழ் பல்கலைக் கழகத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் ஒரு கட்டத்தில் வட-கிழக்கு தமிழ் சமூகத்தின் மையமாகவே அந்தப் பல்கலைக் கழகம் தான் விளங்கியது. அந்த சமூகத்தின் அரசியல் நியாயப்பாடுகளை வெளிக்கொண்டு வந்ததும் யாழ் பல்கலைக் கழகம் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக உயர்கல்வித் துறையில் கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும் வளர்ச்சிப் படி என்றாலும் இந்த சமூகத்தின் எதிர்பார்ப்பை அது பூர்த்தி செய்ய போதுமானதல்ல. இன்று பல்கலைக் கழகங்களில் 400-450 வரையான மலையக மாணவர்கள் கல்வி பயின்றபோதிலும் சமூகம் சார்ந்த ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்வதற்கு உள்ள வாய்ப்புக்கள் அல்லது அது குறித்து இந்த மாணவர்கள் காட்டும் ஆர்வம் மிகவும் அரிதாகவே உள்ளது. இந்த பின்னணியில் தான் மலையகத்திற்கான பல்கலைக் கழகத்தின் தேவை மிகவும் அவசியமாக உள்ளது. அந்தப் பல்கலைக் கழகமானது மலையக தமிழ் சமூகத்தின் எதிர்காலத்திற்கு ஒரு பாய்ச்சலை கொடுக்கும்.

ஆய்வுகளிலிருந்து தான் சமூக அபிவிருத்திக்கான மூலோபாயங்களை உருவாக்க முடியும். அத்துடன் ஆவணப் படுத்தலும், பேணுதலும் நடந்தால் தான் சமூகம் முன்னோக்கி நகரவும் தன் இருப்பையும் அடையாளத்தையும் பேணவும் தக்க வைக்கவும் மீள் உருவாக்கம் செய்யவும் முடியும். எனவே, மலையக சமூகத்தினுடைய சமூகவியல், பண்பாட்டியல், கலையியல், சடங்கியல், தொழிற்துறையியல், தகவல் தொழில்நுட்பவியல் குறித்தான படிப்பு மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வது மலையகத்திற்கான பல்கலைக் கழகத்தின் கட்டாயத் தேவையாகும்.

'இது தான் பல்கலைக் கழகம்' எனும் மையப்படுத்திய கூறுகளிலிருந்து விடுபட்டு மலையகத்திற்கான பல்கலைக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி சிந்திப்பது பொருத்தமுடையதாக இருக்கும். கல்வி பற்றிய மரபு ரீதியான விளக்கத்திலிருந்து விடுபட்டு கல்வி பற்றிய மாற்று புரிதலிலிருந்து எமக்கான கல்வி சிந்தனையையும் நடைமுறையையும் ஏற்படுத்தல் வேண்டும். மாற்றுப் பல்கலைக் கழகம் எனும்போது பின்தங்கிய சமூகத்தின் சூழல் சார்ந்த அணுகுமுறையிலிருந்து தான் உருவாக வேண்டும். இதில் அந்த சமூகத்தின் சமூகவியல், உளவியல், பண்பாட்டியல் காரணிகள் செல்வாக்கு செலுத்தும். இது ஒரு ஜனநாயகப் பண்பு ஆகும்.

இந்த ஜனநாயகப் பண்பிலிருந்து தான் ஆரம்ப நிலையில் உருவாக்க வேண்டிய விடயங்கள் என்ன? என்னென்ன திணைக் களங்கள் - துறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்? வழமையான பல்கலைக் கழகம் போன்றதா அல்லது சிறப்பு ஏற்பாடுகளுடன் தொழில் செய்து கொண்டு கற்கையை மேற்கொள்ளும் பல்கலைக் கழகமா? சாதாரண தர சித்தியுடன் தொழில்கல்வி, சமூகவியல் சார்ந்த துறைகளை படிப்பதற்கான வசதிகளா என தீர்மானித்தல் வேண்டும்.

அடிப்படையில் இன்று முதலே இடைநிலை பாடசாலைக் கல்வியை விருத்தி செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும். இதனூடாகவே எதிர்காலத்தில் மலையகத்திற்கான பல்கலைக் கழகம் முழுமையான பல்கலைக் கழக தரத்தினைப் பேணமுடியும். இவற்றை செயற்படுத்துவதற்கும் மலையகத்திற்கான பல்கலைக் கழக தேவையை பூர்த்தி செய்வதற்கும் அதனூடாக மலையகத் தமிழரின் இனத்துவ அடையாளங்களை பேணுவதற்குமான 'மலையக பல்கலைக் கழக இயக்கம்' ஒன்று முதலில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**சிவம் பிரபாகரன்**

* *நுவரேலியா மாவட்டம் அல்மா குறூப்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர்.*
* *ஒரு சமூக, அரசியல் ஆய்வாளர் மற்றும் பயிற்சியாளர்*
* *கொழும்பு பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத் துறையில் இளமானிப் பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவத்துறையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றவர். கொழும்பு பல்கலைக் கழகத்தில் இதழியல் துறையில் டிப்புளோமா பட்டத்தையும் சுவீடன் நாட்டின் கல்மார் பல்கலைக் கழகத்தில் செய்தித்துறை முகாமை டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.*


# பெரட்டுக்களம்

பகிரல் - நண்பர்களுக்கிடையில் மட்டும்

**வெளியிடுவோர்** : மலையக சமூக ஆய்வு மையம்
**தொடர்புகளுக்கு** : சிவம் பிரபாகரன் - 0714903509
அருட்தந்தை மா. சத்திவேல் - 0714806035
மின்னஞ்சல் : upcsorec@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழ் மக்களுக்கென தனியானதொரு பல்கலைக்கழகமும் அம்மக்களின் சமூக மேம்பாடும்



**பேராசிரியர் மு. சின்னத்தம்பி** BA (Hons.), MA Econ. (Manchester)
ஓய்வுபெற்ற பொருளியற்றுறை பேராசிரியர்.

சலனங்களற்ற நீர் ஒருபோதும் கடலை யடைவதில்லை எனக்கூறப்படும். அதுபோன்றே, காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை அடைந்து கொள்ளமுடியாத ஒரு சமூகமும் வளர்ச்சியை அடையமாட்டாது எனலாம். ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின், காலத்திற்குக்காலம் அதில் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாததாகும். அப்படியெனில், ஒரு சமூகத்தில் இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவது யார் என்ற கேள்வி எழுகின்றது. அச்சமூகத்திலிருந்து உருவாகும் தொலைநோக்குள்ள அரசியற்றலைவர்கள், ஆற்றல்மிகு அறிவியலாளர்கள், சிறந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், திறமைமிக்க வியாபார முகாமையாளர்கள், ஆளுமை நிறைந்த நிர்வாகிகள் போன்ற துறைசார் நிபுணர்களே இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சுதந்திரம் பெற்ற காலம் முதல் குறைந்த தலாவருமானத்தையும் மிதமான பொருளாதார வளர்ச்சியையும் கொண்டிருந்த எமது நாடு, மனித அபிவிருத்தியில் இன்று உன்னதமான ஒரு நிலையை அடைந்துள்ளது. இதனை அடைந்து கொள்வதில் எமது ஆரம்பகால அரசியற்றலைவர்களும் சமூக முன்னோடிகளும் பாரிய பங்களித்துள்ளனர் என்பதும், அவர்களுட் பெரும்பாலானோர் சிறந்த கல்விமான்களாகவிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன. இது போன்ற சமூக முன்னோடிகளை உருவாக்க முடியாத ஒரு சமூகம் வளர்ச்சியில் பின்தங்கி நிற்கும் என்பதற்கு மலையகச் சமூகம் சிறந்ததொரு உதாரணமாக இருந்து வந்துள்ளது.

நாட்டின் ஏனைய சமூகங்களோடு ஒப்பீட்டு ரீதியில் மலையக சமூகமானது சமூக, பொருளாதார, கல்வித்துறைகளில் பின் தங்கியிருப்பது எல்லோரும் அறிந்த ஒரு உண்மையாகும். இச்சமூகத்திற்கு உண்மையான விடிவு ஏற்பட வேண்டுமாயின் இந்த நிலை மாறவேண்டும். கல்வித்துறையில் அதிலும் குறிப்பாக, பல்கலைக்கழக அல்லது மூன்றாம் நிலைக்கல்வியில் அது துரித முன்னேற்றம் அடைவது இன்றியமையாதது. கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக ஆரம்பக் கல்வியிலும், இடைநிலைக் கல்வியிலும் அது ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால், மூன்றாம் நிலைக் கல்வியைப் பொறுத்தவரை, அது இன்னும் குழந்தைப்பருவத்திலேயே உள்ளது. அறுபதாம் ஆண்டுகள் தொட்டு இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்விக்கான வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகரித்து வந்துள்ளபோதும், உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வயதுப்பிரிவினரில் ஒரு சிறிய விகிதாசாரத்தினரே இன்றுங்கூட பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்று உயர்கல்வியை பெறக்கூடியதாக உள்ளது. உதாரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கான நடப்பு விதிகளுக்கமைய 2008-2009ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் மொத்தமாக 1,30,236 பேர் ஆகக்குறைந்த தகுதியாவது பெற்றிருந்தபோதும் அவர்களுள் 20,846 பேர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்பட்டதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினது 2009ஆம் ஆண்டறிக்கை காட்டுகின்றது. இது அவ்வாண்டில் அனுமதிக்கான தகுதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 17.0 சதவீதம் மட்டுமேயாகும். மேலும் இலங்கையில் 20.24 வயதுக்குட்பட்ட இளைஞர்களுள் 2.0 வீதமானோர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 18.0 சதவீதமாக இருப்பதும், ஏனைய விருத்தியடையும் நாடுகளில் சராசரியாக 3.0 சதவீதமாகவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன. எமது பல்கலைக்கழகங்களில் காணப்படும் இடவசதி போதாமையும் சாதனங்களின் பற்றாக்குறையுமே இதற்கான முக்கிய காரணங்களாகும். அண்மைக்காலத்தில் தாபிக்கப் பட்டுள்ள தனியார்துறை உயர்கல்வி நிறுவனங்கள் இதை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்வதாக உள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பயிற்சி நெறிகளை உள்நாட்டிலேயே பயின்று, அப்பல்கலைக் கழகங்களின் பட்டங்களை பெறுவதற்குத் தேவையான வசதிகளை இவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. எனினும், மாணவர்களிட மிருந்து இவை மிகவும் உயர்ந்த கட்டணங்களை அறவிடுவதால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவற்றிற் சேர்ந்து உயர்கல்வியைப் பெறுவது சாத்தியமற்றதாக உள்ளது. நிதிவசதி படைத்த ஒரு சிலர் தமது பிள்ளைகளை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி பட்டம் பெறவைக்கின்றனர்.

எமது நாட்டில் பட்டதாரிகளிடையே பரவலான வேலையின்மை காணப்பட்டபோதும், கடந்த காலங்களில் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு உயர்கல்வியே சிறந்த மார்க்கமாக இருந்துள்ளதோடு, தொடர்ந்தும் இருந்து வருகின்றது. மேலும், பல்கலைக் கழகக் கல்வியானது ஒருவனது உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. எனவேதான், பட்டதாரிகளிடையே வேலையின்மை காணப்பட்டாலுங்கூட பல்கலைக்கழகக் கல்விக்கான கேள்வி உயர்வாக உள்ளது. அறுபதாம் ஆண்டுகளில் எமது பல்கலைக் கழகங்களில் தாய்மொழிக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசு பல புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்ததாலும், அதனைத்தொடர்ந்து பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் அவற்றில் அனுமதி பெறுவதற்கு மாவட்ட அடிப்படையிலான தரப்படுத்தலை அறிமுகம் செய்ததாலும், ஆயிரக்கணக்கான கிராமிய இளைஞர்களும் யுவதிகளும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பலரும் அவற்றில் அனுமதி பெற்று உயர்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றனர். பல்வேறு அரச நிறுவனங்களிலும் தனியார் தாபனங்களிலும், ஏன் சில சர்வதேச நிறுவனங்களிலும்கூட இன்று உயர்மட்டப் பதவிகளை வகிக்கும் பல இலங்கையர்கள், இதன் மூலம் உருவாக்கப்பட்டவர்களே. தேசியமட்டத்தில் இவ்வித மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் மலையகச் சமூகம் பல்வேறு வரலாற்று ரீதியானதும் வேறும் காரணங்களாலும் இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி மூன்றாம் நிலைக்கல்வியில் முன்னேற முடியாது போயிற்று.

இலங்கையில் கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் ஏனைய சமூகங்கள் மூன்றாம் நிலைக்கல்வியை பெற்றுக் கொள்வதில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளன. எழுபதாம் ஆண்டுகளுக்கு முன்னர் கல்வியில் மிகவும் பின்தங்கியிருந்த எமது சகோதர முஸ்லிம் சமூகம், சமூக உயர்வு மிக்கதும் தொலைநோக்கு கொண்டதுமான அதன் அரசியற்றலைவர்கள் மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கைகள் காரணமாக, தொடர்ந்துவந்த காலப்பகுதியில் பாடசாலைக் கல்வியில் துரிதமாக முன்னேற்றமடைந்து, இன்று அச்சமூகத்தினர் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் அரச பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதில் வெற்றி கண்டதன் மூலம் தனது இளைஞர்களின் உயர்கல்விக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக கலாச்சார வளர்ச்சிக்கும் உறுதியானதொரு அடித்தளத்தை அமைத்துக்கொண்டுள்ளது. இதை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்வோமாயின், மலையக சமூகம் செறிந்து வாழும் மலையக பிரதேசத்தில் இதே போன்றதொரு பல்கலைக்கழகத்தை அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மலையக இளைஞர்கள் உயர்கல்வியைப் பெறுவதன் அவசியத்தையும் அதற்கென ஒரு பல்கலைக்கழகம் தேவையென்பதையும் மேலே குறிப்பிட்ட உள்நாட்டுக் காரணிகளின் அடிப்படையில் மட்டுமன்றி, சர்வதேசரீதியான காரணிகளின் அடிப்படையிலும் நோக்கலாம். தொழில்நுட்பத்தில் அண்மைக் காலத்திலேற்பட்டு வந்துள்ள வியத்தகு முன்னேற்றங்களினால் தகவல் பரிமாற்றம், போக்குவரத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல் என்பவற்றில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி மாற்றங்கள் காலத்தையும் தூரத்தையும் அர்த்தமற்றதாக்கி விட்டன. எனவேதான், உலகம் இன்று சுருங்கி வருவதாக அதாவது, முழு உலகமுமே ஒரு கிராமமாக மாறி வருவதாக கூறப்படுகின்றது. கிராமங்கள், நகரங்கள், நாடுகள் என்ற எல்லைகளைத் தாண்டி பொருட்கள், சேவைகள் என்பவற்றிற்கான சந்தைகள் இன்று உலகெங்கும் வியாபித்துக் காணப்படுகின்றன. பல்நாட்டுக் கம்பனிகளின் உலகளாவிய உற்பத்தி நடவடிக்கைகள் காரணமாக பொருட்கள் எங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன, நுகர்வோர் அவற்றை எங்கே கொள்வனவு செய்கிறார்கள், அந்த நுகர்வொர் எங்கு வாழுகின்றார்கள் என்பதெல்லாம் முக்கியத்துவமிழந்து வருகின்றன. அதேபோன்றே, ஊழியத்திற்கான சந்தையும் இன்று உலகளாவிய ஒரு சந்தையாக மாறிவிட்டது. போக்குவரத்து, தகவல் பரிமாற்றம், தொடர்பாடல் என்பவற்றுக்கான செலவுகள் குறைந்து செல்லும் அதேவேளையில், அவற்றிற்கு ஏற்படும் காலதாமதமும் குறைந்து வருகின்றது. இதனாலேற்படும் துரிதமான உலகமயமாக்கம் காரணமாக அறிவாற்றலும் வினைத்திறனும் கொண்டோர் போட்டியடிப்படையில் தத்தமது நாடுகளின் அரசியல், புவியியல் எல்லைகளுக்கு வெளியே பிறநாடுகளிலும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மூன்றாம் நிலைக்கல்வி பயின்றோருக்கே இவ்வாறான வாய்ப்புக்கள் அதிகமாகவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், இன்றைய உலகம் ஒரு அறிவுசார் உலகமென கூறப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு அறிவே இன்று முக்கிய உந்துசக்தியாக மாறிவிட்டது. இந்தியாவின் பெங்களூர் நகரம் இன்று கணனி மென்பொருள் உற்பத்தித்துறையில் முன்னணியில் இருப்பதும், தமிழ்நாடு தொழில்நுட்பத்துறையில் துரித கதியில் வளர்ந்து வருவதும், கணனி மென்பொருள் உற்பத்தித்துறையில் அது பெங்களூருக்கு அடுத்த இடத்தைப்பிடித்து வருவதும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். கடந்த காலங்களில் தொழில் வாய்ப்புக்களையும் செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதற்கு நாடுகள் தமது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்வதிலேயே பாரிய முதலீடுகளை மேற்கொண்டன. ஆனால், அதே நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக இன்று மக்களது அறிவாற்றல், ஆக்க சக்தி, வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் அவர்கள் மீதே இவ்வித முதலீடுகள் செய்யப்படுகின்றன. அறிவினை உற்பத்தி செய்தல், அதனை குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தெரிவு செய்தல், அந்நோக்கங்களுக்காக அதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் என்பவற்றில் சமூகத்திற்கு உள்ள ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

இன்றைய அறிவுசார் உலகில் மலையக இளைஞர்களும் இணைந்துகொள்ள வேண்டுமாயின், அவர்கள் தமது அறிவாற்றலையும் ஆக்கத் திறனையும் பெருக்கிக்கொள்வது இன்றியமையாத தாகும். இதனை அடைந்துகொள்வதற்கு அவர்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் பல்கலைக்கழகமொன்று அமைவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூற முடியாது. நாட்டில் இருக்கும் ஏனைய பல்கலைக்கழகங்கள் சிலவற்றிலாவது தமிழ் மொழிமூல கல்விக்கான வாய்ப்புக்கள் இருந்த போதும், அவை மலையக மாணவர்களின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. அறிவாற்றலால் உந்தப்படும் பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமான கல்வி, பயிற்சி என்பவற்றை உறுதி செய்து கொள்வதில் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்களிக்கின்றன என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மலையக சமூகம் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் அரச பல்கலைக்கழகமொன்றை அமைத்துக்கொள்வதன் ஊடாக அவர்கள் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வதோடு, தமது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இனங் காண்பதற்கும், தமது சமூகத்தின் கலை, கலாசார, பாரம்பரியங்களை வளர்த்துக் கொள்வதற்கும் அது உதவியாக விருக்கும்.

தேசிய பல்கலைக்கழகமொன்றினது இடவமைவானது தேசிய ரீதியானதேவைகளின் அடிப்படையிலேயன்றி, ஒரு மாகாணத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று என்ற எளிமையான அடிப்படையிலோ, இன அல்லது வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டோ அமைக்கப்படக் கூடாது என தேசிய கல்வி ஆணைக்குழு (National Education Commission - 1996) கூறுகின்றது. வேறுபட்ட சமூக - பொருளாதார பின்னணிகளைக் கொண்ட மாணவர்களை ஒன்றாகக் கொண்டுவருவதன் மூலம் அவர்களிடையே சமூக ஊடாடலை ஏற்படுத்தி அதனூடாக ஒத்துழைப்பு, சமாதான சகவாழ்வு போன்ற நற்பண்புகளையும், உயரிய சமூகப் பெறுமானங்களையும் ஏற்படுத்துவதே பல்கலைக் கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டு மெனவும் அது கூறுகின்றது. இக்கருத்து பெருமளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றே. எனினும், இலங்கையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே பல பல்கலைக்கழகங்கள் பிராந்திய ரீதியிலும் ஓரளவு இன அடிப்படையிலும் தாபிக்கப்பட்டுள்ள நிலையில், மலையக இளைஞர்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு அம்மக்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்திலே பல்கலைக்கழகமொன்றை நிறுவுவது மலையக இளைஞர்களின் உயர்கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க உதவுமென்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

மூன்றாம் நிலைக்கல்வி, அதிலுங் குறிப்பாக, பல்கலைக்கழகக் கல்வியில் பங்கு பெறுவது எந்தவொரு சமூகத்தினதும் கல்வி அடைவினை அளவிடுவதற்கான நியம மானதொரு சுட்டியாகக் கருதப்படுகின்றது. பெருந் தோட்டத் தமிழ் மாணவர்களைப் பொறுத்த வரை, குறிப்பிட்ட வயதுக்குட்பட்டோரில் வருடாந்தம் ஒரு வீதத்திற்குக் குறை வானோரே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். இலங்கையின் மொத்த சனத் தொகையில் இந்திய வம்சாவளித் தமிழரின் இன விகிதாசாரம் ஏறக்குறைய 7.0 சதவீதமாக விருக்கும் நிலையில் குறைந்தது இச் சமூகத்தைச் சேர்ந்த 3,000 மாணவர்களாவது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் உண்மையில் 400 தொடக்கம் 450 பேர் மட்டுமே எமது பல்கலைக்கழகங்களில் பயின்று வருவது கவலைக்குரியதே. பல்கலைக்கழகங்களில் இணையும் எமது மாணவர்களின் மொத்த எண்ணிக்கையானது காலப்போக்கில் ஓரளவு அதிகரித்து வந்துள்ளபோதும், பல்கலைக் கழக மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் அவர்களது பங்கில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை, இம்மாணவர்களது பாடசாலைக் கல்வியில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளே இதற்கான முக்கிய காரணமாகும். உதாரணமாக, இச்சமூகத்தைச் சேர்ந்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் என்போரின் பற்றாக்குறை, இப்பாடசாலைகளில் உட் கட்டமைப்பு வசதிகளும் ஏனைய வளங்களும் போதாமை, பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் அசமந்தப்போக்கு, அவர்களின் வறுமைநிலை போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். இவ்வித குறைவாடுகள் நிவரத்தி செய்யப்பட்டால் மட்டுமே இம்மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் சேருவதற்கான வாய்ப்பினை அதிகரித்துக் கொள்ளமுடியும். அத்துடன், கடந்த காலங்களில் அறிமுகம் செய்யப்பட்ட பிரதேச ரீதியான தரப்படுத்தல் போன்று இம்மாணவர் களுக்கும் பல்கலைக்கழக அனுமதியில் ஏதோ ஒரு வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்ட கல்வித் துறைகளில் பட்டப்படிப்பினை நடத்துவதோடு நின்றுவிடாது, பல விசேட துறைகளில் குறுகிய கால டிப்ளோமா, சான்றிதழ் மட்ட பயிற்சி நெறிகள் போன்ற விரிவாக்கல் பாடநெறிகளை நடத்துவதற்கும் வாய்ப்பு இருப்பதால், பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு ஆகக்குறைந்த கல்வித் தகைமைகளையாவது கொண்டிராதோர் மேற்படி பயிற்சி நெறிகளில் பங்கு பற்றி ஏதேனுமொரு துறையில் விசேட திறமைகளை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் தொழிற்சந்தையில் போட்டியிட முடியும். இவ்வித பயிற்சி நெறிகள் ஏற்கனவே தொழிலில் இருப்போருக்கும் வழங்கப்படலாம். அத்துடன், பல்கலைக்கழகங்கள் நடத்தும் பல்வேறு கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான ஆகக் குறைந்த தகைமைகளாவது உள்ளோரின் எண்ணிக்கை மலையக மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. இப்படியான மாணவர்கள் தேவையான போதிய தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு புதிதாகத் தாபிக்கப்படும் பல்கலைக்கழகம் 11/2 தொடக்கம் 2 வருட கால துணை பாடப்பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Associate degrees) அல்லது அடிமட்டப் பயிற்சி நெறிகளை (Foundation Courses) நடத்தலாம். இப்பயிற்சி நெறிகளில் தேர்ச்சியடைவோர் குறிப்பிட்ட காலத்திற்கு ஏதேனுமொரு தொழிலைச் செய்துவிட்டு, மீண்டும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1 தொடக்கம் 1 ½ வருட காலப்பயிற்சியின் பின்னர் முழுமையான பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை அளிக்கலாம். இப்படியானதொரு பட்டப்பயிற்சி முறை திறந்த பல்கலைக்கழகத்தில் காணப்படுவதை இங்கு சுட்டிக்காட்டலாம். மலையக மாணவர்கள் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் அதேவேளையில், மனித வளமும் மானுட அபிவிருத்தியும் குறைவாகவிருக்கும் மலையகத்தைப் பொறுத்தவரை இவ்வித பயிற்சிநெறிகள் இவற்றை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கினை அளிக்கலாம்.

புதிய பல்கலைக்கழகமானது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், ஆராய்ச்சியில் ஈடுபடுதல் என்பவற்றோடு நின்று விடாது தன்னைச்சுற்றி இருக்கும் சமூகத்துடன் தொடர்பாடலையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதாவது, பல்கலைக் கழகத்துக்கு வெளியேயுள்ள அமைப்புக்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி அச்சமூகம் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள், அவற்றிற்கு சாத்தியமான தீர்வுகள் என்பன பற்றிய தனது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். அதே போன்று, பல்கலைக்கழகத்துக்கும் அந்த அமைப்புக்களுக்கும் இடையே அச்சமூகத்தைப் பற்றிக் காணப்படும் பொதுவான அக்கறைகள் பற்றி அறிந்துகொண்டு, அவற்றை மேம்படுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபடலாம். மலையக சமூகம் போன்றதொரு சமூகத்தைப் பொறுத்தவரை இது அப்பல்கலைக் கழகத்தின் முக்கியமானதொரு கடமையுமாகும். எனவே, மேலும் தாமதிக்காது இவ்வித பல்கலைக்கழகமொன்றை மலையகப் பிரதேசத்தில் தாபிப்பது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். அதேபோன்று, மலையக சமூகத்தின் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார மேம்பாட்டில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அனைவரும் இதற்கு தமது பூரணமான ஆதரவை அளிப்பது காலத்தின் தேவையாகும்.

## அறிவே உயர்வு தரும்

- **உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூல்களைக் கற்காமல் இருப்பதே ஆகும். ஆனால், நல்ல நூல்களை வாசிப்பதை அன்றாடப்பணியாக்கிக் கொள்ளுங்கள்.**
- **மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று; பருமன் அன்று; உயரம் அன்று; அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்த வல்லது.**
- **ஆண்டவனுக்கு பணக்காரன், இல்லாதவன் என்ற பேதங்கள் சிறிதும் கிடையாது. இறைவனின் சன்னதியில் அனைவரும் சமம் என்ற உணர்வோடு வழிபாடு செய்யுங்கள்.**
- **குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் தினமும் ஒன்றுகூடி, காலை அல்லது மாலை நேரத்தில் வழிபாடு செய்வதால் குடும்பத்தில் அமைதியும், அருளும் தழைக்கும்.**
- **இனிமையான சொற்களைப் பேசுபவர்களுக்கு உலகில் எந்தத் துன்பமும் இல்லை. எமவாதனை உண்டாகாது. அவர் இருக்கும் இடத்தில் அருள் துலங்கும்.**
- **நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வத்திடம் மன்னிப்பு பெற்று விடலாம். ஆனால், நன்றி மறந்த பாவத்தை தெய்வம் ஒருபோதும் மன்னிக்காது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியத் திறனாய்வில் ஒரு பார்வை



**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்** MA. Phd.
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா

கலை இலக்கியங்கள் மனித உணர்வுகளையும் உணர் திறன்களையும் சிந்தனையையும் வாழ்வின் குறிக்கோளையும் செழுமைப் படுத்துகின்றன. கலை, இலக்கியம், ஆக்கப் படைப்பு, சிருஷ்டி என்பன ஒரே நேரத்தில் - ஏக காலத்தில் உள் முகமாகவும் வெளிநோக்கியுஞ் செயற்பட வல்லன. கருத்துவளம் (செழுமை) கொண்டு இருத்தலினாலாகும். இலக்கியத் திறனாய்வு தரம், கலைத்துவம், திறன், அழகு, பின்னணி, மரபு ஆகியவற்றைக் கடந்து ஒரு வகையான விமர்சனக் கோட்பாட்டுத் துறையாக மாறிவருகிறது. இது ஒரு பக்கப் பார்வை நிலையாகும். அ∴து அறிவியல் ஆராய்ச்சியின் பயனுமாம். இலக்கியத் திறனாய்விலிருந்து (Literary Criticism) விமர்சனக் கோட்பாடுகளுக்கு (Critical Theory) மாற்றம் பெற்றுவிட்டதாக அறிவாய்வாளர்கள் சிலர் பதிவு செய்திருக்கின்றனர். அத்துடன் இலக்கியத் திறனாய்வு பண்பாட்டு அரசியல் சார்ந்த நிலையிலும் அமைந்துள்ளதென்ற கருத்துமுண்டு.

பெண்ணியம், தலித்தியம், தேசியம், பின் காலணித்துவம், இனக்குழுமங்களின் தனித்துவங்களின் அடியாக எழுகின்ற அரசியல் அடையாளச் சிக்கல்கள், ஒருபால் உறவு, ஒருபால் உறவினரின் புதிய இலக்கியங்களும் அவை எழுப்புகிற கேள்விகளும் அரசியல் தஞ்சம், புகலிட வாழ்வு, எல்லை கடந்து செல்லும் அடையாளங்கள் எனப் பல புதிய தளங்களும் தடங்களும் களங்களும் இலக்கியத்துக்குள்ளேயும் கோட்பாட்டு வெளிக்குள்ளேயும் பெரிய அலைகளை - தாக்கங்களை எழுப்பிவருகின்றன. உலகப் பொதுவான அல்லது பொதுமைப்பாடு எய்திய எந்தக் கருத்தியலையும் இவை கேள்விக்கு உள்ளாக்குகின்றன.

தமிழிலக்கியத் திறனாய்வுக் களங்களின் இயங்கு தளத்தில் மொழிப் பயன்பாடு, மொழிவளம், இலக்கியத்தின் பொருள்நிலை, அனுபவங்கள், வேறுபாடுகள், அரசியற் பக்கச்சார்பு, உணர்வு, பயன்படுத்தப்படுகின்ற உருவகங்கள், படிமங்கள் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலக்கியம் வெகுசனப் பண்பாட்டைப் பிரதிபலிப்பது - ஆதலினால் வெகுசனப் பண்பாட்டை உண்மையில் இலக்கியத்தைச் சந்தைப் பொருளாக மாற்றுகின்ற ஒரு முயற்சியாகவே கொள்ளல் வேண்டும் என்ற கருத்து இலக்கியப்படைப்பைத் தரக் குறைவாக்கும். இலக்கியத்தை அரசியல், பொருளாதார, சமூக நிலைநின்று கணித்த பேராசிரியர், கலாநிதி கா. சிவத்தம்பி இக்கருத்தை முன்வைத்துள்ளார் எனினும் மொழி, பண்பாட்டுச் சார்புடன் இலக்கியத் திறனாய்வைப் பார்க்கும் - நோக்கும் - கணிக்கும் பிறிதொரு பக்க விமர்சனமும் உண்டு. அது வர்த்தக பரிபாஷையிற் கூறுவது போன்று (Marketable Commodity) சந்தைப் பொருளாகப் பார்க்காத பெறுமதி (Value) மிக்கபான்மையில் அமைவது.

சிந்தனை விழிப்புநிலையை உருவாக்குகிறது. படைப்புக்குப் பின் சிந்தனையுமில்லை, விமர்சனமும் இல்லை யென்றால் அது படைப்பே இல்லை. சிந்தனை, விமர்சனம் என்றால் என்ன? என்பது பற்றியும் நாம் எண்ண வேண்டும். பேராசிரியர் க. கைலாசபதி க. நா. சு. இவை குறித்துச் சிலாகித்து எழுதியுள்ளனர். பேராசிரியர்கள் கா. சிவதம்பி, சி. தில்லைநாதன், சி. சிவசேகரம், அ. ச. ஞானசம்பந்தன், சு. வித்தியானந்தன், மு. வரதராசன், நா. வானமாமலை, சபா. ஜெயராசா, நா. சுப்பிரமணியன், கனகசபாபதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோதாத்திரி, நு.ஃமான், மு. நித்தியானந்தன், சேரன் இன்னும் பலர் சிலாகித்து எழுதியுள்ளனர். அணி பிரிந்து விவாதித்து உள்ளனர். ஆயினும் எதுவும் முடிந்த முடிபல்ல. கால மாறுதல்களாலும் இலக்கிய நோக்கின் திசைமாற்றங்களாலும் நாம் வாழும் காலத்துக்குரிய அனுபவங்களையும் அறிவுரைகளையும் முன்வைத்து இன்றைய வாழ்க்கையை மறுபரிசீலனை செய்து பார்க்கிறோம் - சிந்திக்கின்றோம்.

தமிழில் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி யடைந்துள்ளதா? என்று வினவுவோருளர். அதேவேளை முற்றிலும் அரசியல் நிலைநின்று, பக்கச்சார்புடையதாய்த்தான் திறனாய்வு திகழ்கின்றது என்போரும் உள்ளனர். திறனாய்வு முனைப்புப் போதாது, முனைப்பே கிடையாது, இல்லை என்று இன்னு மொரு சாரார் உறுமுகின்றனர். எதுவுமே விமர்சனத் திறனாய்வல்ல முதுகுசொறிதல் என்றும் வெறுக்கின்றனர். ஆயினும், பிரசுரிப்பு, வெளியீட்டு வளர்ச்சி, எழுத்தாளர் தொகைப் பெருக்கம், தமிழ் உரைநடை வளர்ச்சி, புதுக்கவிதை வளர்ச்சி, மொழிபெயர்ப்பு முயற்சிகள், திறனாய்வுக் கோட்பாட்டு நோக்கு, முன்னேற்றம் என்பன நிகழ்ந்துதான் உள்ளன. தேக்கநிலையடையவில்லை. தமிழ் இலக்கியத் திறனாய்வில் சூனியமே மிஞ்சியுள்ளதென்ற வாதமும் ஏற்புடைமையானதல்ல. காரசாரமான கண்டன விமர்சனங்களும் எழாமலில்லை. வாதப்பிரதிவாதங்கள் நிகழாமல் இல்லை. உக்கிரச்சமர் திறனாய்வுப் போர் நிகழ்ந் தேறியிருக்கிறது. முட்டிமோதி, பல்லுடைபட்டுக் கேவல நிலைக்கும் சென்றிருக்கிறது. அது பேருண்மை.

இலக்கியம் வாழ்வியலில் பெருஞ் செல்வாக்கு வகிக்கிறது. என்னதான் வேறு ஆறுதல் வழிகள் (Relaxation) இருந்தாலும் வாழ்க்கையின் நெருக்குதல்களை, நெருக்கடி களை, துன்பத்தை, அவலங்களை, அட்டூழி யங்களை, வேதனைகளை, வக்கிரங்களை யெல்லாம் ஓரளவில் இலக்கியங்களே தீர்க்க உதவுகின்றன. அதாவது, வாழ்க்கையின் நெருக்கடியை, அந்த நெருக்கடி உருவாக்கி வரும் சூழலில் சந்திக்காமல் கலைசார்ந்த மயக்கங்கள் மூலமே, இலக்கியம் சார்ந்த கற்பனைகள் மூலமோ மறைக்க விரும்புகிறோம் அல்லது மறக்க விரும்புகிறோம். எனினும் இலக்கியவாதியின் போராட்டத்தை ஏற்று - கணித்து - மதித்து - மரியாதை செய்து அதற்குத் திடமான முகத்தை அளிக்க நம் சமூகம் மறுக்கிறது. அதற்கான காரணங்களும் பலவாகலாம். தீர்க்க தரிசனத்துடன் கூடிய சிந்தனை எதிர்காலத்தில் இலக்கியப் படைப்பாளனை - எழுத்தாளனை - விமர்சகனை புத்திஜீவியாகக் கணிக்கவும், கண்ணியப்படுத்தவும் கூடிய சமுதாயப் பண்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்பதே பிரதான முயற்சியாக இன்று முன்னெடுக்கப்படல் வேண்டும்.

முன்னோடி இலக்கிய வரலாறு, படைப்பு அனுபவம் என்பன நமது எதிர்கால நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணை புரிவன. படைப்பும் திடீரெனத் தோன்றிவிடாது. அனுபவத்தின் வெண் சூட்டிற்பிறக்கும் எழுத்திலக்கியங்கள் அற்புதமானவை, அபார மானவை, நீடு நிலைப்பவை, பெரும் பயன் தருபவை, தரமிக்கவை.

ஈழத்துப் புனைகதைத் துறையில் செங்கையாழியான், செம்பியன் செல்வன், எஸ். பொன்னுத்துரை, டானியல், டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கன், தெளிவத்தை ஜோசப், நந்தி, என். எஸ். எம். ராமையா, சாரல் நாடான், தெணியான், முருகபூபதி, ந.பாலேஸ்வரி, கோகிலா மகேந்திரன், குறமகள், வசந்தி தயாபரன், அன்னலெட்சுமி இராசதுரை, இஸ்மாலிகா, அ. களங்கன், கேணிப்பித்தன், ஓ. கே, குணநாதன், நா. சிவஞானசுந்தரம், சம்பந்தன், வைத்திலிங்கம், டேவிட், யேசுராசா, புலோலியூர் இரத்தினவேலோன், பவானி சிவகுமாரன், அல் அஸூமத், சமரபாகு - சீனா - உதயகுமார், குறிஞ்சிநாடன், சட்டநாதன், செ. கணேசலிங்கன், திக்வெல்லை கமால் இன்னும் பல தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள் செல்வாக்கினைச் செலுத்தியுள்ளனர் - செலுத்தி வருகின்றனர். காத்திரமான படைப்பிலக்கியப் பங்களிப்பினைச் செய்துள்ளனர்.

ஒரு மீட்டலுக்காக வள்ளுவனும் கம்பனும் இளங்கோவும் பாரதியும் பாரதிதாசனும் வ. வே. சு. ஐயரும் உ. வே. ராவும் பெரியசாமித்தானும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலை சீனி, வேங்கடசாமியும் வையாபுரிப் பிள்ளையும் தெ. பொ. மியும் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் புதுமைப் பித்தனும். ஏற்றுக் கொண்டோமோ இல்லையோ, விரும்பினோமோ விரும்ப வில்லையோ, அங்கீகரித்தோமோ விட்டோமோ இன்று கவிதை பெற்றுவந்த இடத்தை உரைநடையும் புதுக்கவிதையும் பெற்று விட்டன. கால மாற்றமும் புதிய உத்திகளும் அறிவியல் முன்னேற்றமும் இலக்கியத் துறைக்குள் ஏனைய துறைகள் ஊடுருவிச் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையும் எழுத்தாளர் களின் தரம், தொழில், சிந்தனை, வெளிப்பாட்டு முறை என்பனவும் இன்றைய இலக்கிய வடிவங்களையும் போக்கையும் நிர்ணயி க்கின்றன. கால மாறுதல், புதுமை காணும் அவா, இலக்கியக்கள விரிவு என்பன இன்றைய இலக்கிய ஆக்கவெளிப்பாடுகளுக்குக் காலாகின்றன. எழுதுவோரது தொகை அதிகரிப்பும் உண்டு. எனினும் முன்னேற வேண்டுமெனில் இலக்கியத்தின் தரம், திறனாய்வு, நடைபற்றிய கவனிப்பும் ஒவ்வொரு வாசகனுக்கும், சுவைஞனுக்கும் இருக்க வேண்டும். உயர்தரத்தில் படைப்புருவாக்கமும், திறனாய்வுப் பார்வையும் இடம்பெற வேண்டுமெனில் தனித்தனியேயான திறமை, தகுதி, தரம், நோக்கி நமது சமூகம் முன்னேற வேண்டும், பயில வேண்டும், அனுபவம் பெறவேண்டும்.

ஒவ்வொரு வாசகனுக்கும் படைப்பைப் பற்றித் தன் கருத்தை நிமிர்ந்து கூற ஒரு வெளி கிடைக்கட்டும். நூல் மதிப்புரை என்பது முதுகு சொறிதலல்ல என்பது குறித்து நமது கவனம் இருக்கவேண்டும்.. திறனாய்வு என்பது தனிநபர் உறவு சார்ந்ததல்ல என்பது உறுதிப்படவேண்டும். சாகமறுக்கும் உண்மைகளுக்குப் படைப்பாளி புத்துயிர் அளிக்கட்டும். தேடிச்சென்று பெறுபவை அல்ல, தேடிவந்து கதவைத் தட்டுபவைதான் பரிசுகள் என்பது உறுதிப்படட்டும். சகல படைப்புக்களையும் மறுபரிசீலனை செய்யப் படைப்பாளிகளுக்கும் சுதந்திரமுண்டு என்பது உறுதிப்படட்டும். அச்சு, செய்தித்தாள், நூல்கள் போன்றன பரவும் போது மக்கள் மத்தியில் ஒருவித ஒருமிப்பு மனப்பான்மை ஏற்படும் என்றும் அதன் விளைவாக உருவாகுவதே தேசம் என்பது என்றும் இன்றைய சிந்தனையாளர்கள் கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது. நமது புத்திக்கூர்மையானது இன்றைய அகில உலகச் செல்நெறியாக உள்ள தமிழ்நெறி என்ன என்பதைத் துருவித் துருவி ஆராய்ந்து அறியவேண்டியதாயுள்ளது. முன்னேற்றம், வளர்ச்சி, பெருமை, புகழ், சாதனை எவையென்பது பற்றிய பிரக்ஞை ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்க வேண்டும்.

இன்றும் உயிர்ப்பும் உணர்வு நலனும் பெற்றிருக்கும் ஒரு சொல் 'மரபு' என்பது. 'மரபு' குறித்து முன்னரும் பின்னரும் இலக்கிய காரர்கள் பலர் பேசியும் எழுதியும் வந்துள்ளனர். செழுமை, வலிமை, வனப்பு, திறமையான புலமைக்கு மரபு பற்றிய அறிவும் அனுபவமும் மிகமிக முக்கியமானவையாகும். ஒரு சமூகத்தின் - இலக்கியத்தின் இருப்பு அதன் மரபிலேயே தங்கியுள்ளது. வழி வழியாக வந்த நீண்ட பாரம்பரியத்தையும் அந்தப் பாரம்பரியம் சேமித்துவைத்த அனுபவங்களையும் அனுபவங்களின் வெளிப்பாட்டு ஊடகங்களான கலை, இலக்கியம், பண்பாடு. பழக்கவழக்கங்கள் அத்தனையையும் ஒட்டுமொத்தமாகக் குறிக்கும் அடையாளச் சொல் மரபு. 'மரபு' என்ற மாத்திரத்தில் பயனற்ற பழமை, இயக்கமற்ற நோக்கம் என்று பொருள் கொள்வது பொருந்தாது. 'மரபு' அத்திவாரம். அத்திவாரம் உறுதியானாலே கோபுரம் நிலைக்கும். ஆகவே, அடிப்படை அத்திவாரமாகிய மரபு தளம்பினால் - இல்லையானால் - கலைத்துவமும் தரமும் தகுதிப்பாடும் சற்று இறுக்கமாயிருக்கும்.

'மரபு' மரணத்தின் தூதுவன் அல்ல. ஜீவிதத்தின் தொடர் ஓட்டப்பந்தயத்தில் அடுத்த தலைமுறையைத் தூண்டிவிடுகிற கிரியா உக்தி (சிற்பி 1996). மரபு தானாகக் கிடைக்கும் பரம்பரைச்சொத்து அல்ல. கடுமையாக உழைத்தால்தான் அதனைப்பெற முடியும். 25 வயதுக்குப் பின்னரும் ஒருவன் கவிஞனாகத் தொடர்வானானால் மரபை அறியும் வரலாற்றுணர்வு அவனுக்குக் கட்டாயம் தேவை. இந்த வரலாற்றுணர்வால் மரபின் பழமையை மட்டுமல்ல அதன் இன்றைய தொடர்ச்சியையும் உணரமுடியும். மரபறிந்து புதுமை படைக்கவேண்டும் என்பார் T. S. Eliot.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு நவீனம் குறித்த போராட்டம் இன்றும் இனியும் உளதாதல் வேண்டும். ஒரு சிலர் மரபை முற்றிலும் ஒதுக்கினாலேயே புதுமை, நவீனம் உருவாகும் என்று கருதுவர். இக்கருத்தியல் இருப்பது எல்லாவற்றையும் இழுத்து வீழ்த்துவதாகும். மொழி பற்றிய கூர்ந்த சிந்தனை இருக்குமாயின் 'மரபு' குறித்து எடுத்தெறிந்து எழுந்தமானத்தில் கருத்துக்களை முன்வைக்கமாட்டார்கள். புதிய, நவீன படைப்பாளர் கருவாகி உருவாகிப் பிறப்பதற்கு முன்னமேயே மொழி இருக்கிறது. நமது மொழி - தமிழ் மொழி என்று பிறந்ததென்று தெரியாது என்பதே ஆய்வறிவுண்மை. ஆகையினாலே மூத்த மொழியை, மரபை அறிவதை விடுத்து மரபை எதிர்த்து வாதிடுவது அபத்தம். புதுக்கவிதை - வசனகவிதை வரட்டும். அதற்குள் 'மரபு' பற்றிய கதை தேவையற்றது. இல்லையென்று கதைத்தால் மரபின் பிடிமானம் பெரிதாகிவிடுகிறது. மரபறிந்து எழுதப்படுபவை ஒருவகை. மரபை உடைத்து வெளிவரும் வசனக்கவிதை பிறிதொருவகை. இரண்டுமே இருக்கட்டுமே! அதிலென்ன நட்டம்? காலமும் உலகும் எது நிலைபேறுடையதென்பதை நிச்சயம் தீர்மானிக்கும். ஆயினும் இரண்டின் தேவையும் உணரப்பட்டுள்ளது. உலகத்தமிழ் இலக்கிய மாநாடுகள், சொல்லாடல்களுக்கு புதுக்கவிதையாளர் தலைமை வகிபாகம் தேவை. தமிழ்மொழியை வரன்முறையாகவே கற்று அதன் செழுமை, வளமையை அறிந்தோருக்கு மரபு தேவை. எனவே, அறிவியற் சிந்தனையும் கல்விச்சிந்தனையும் மொழிச்சிந்தனையும் தமிழுக்கு, தமிழ் உணர்வாளர்க்கு வேண்டுவனவேயாம். இவை சமாந்தரமாக இயலவேண்டும். "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே" என்ற கவிஞரின் கூற்று நினைக்கத்தக்கது.

ஒரே கருத்தையே எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது ஆய்வறிவில் செல்லாது. மரபு பற்றிக் குறை கூறுவோரது வெளிப்பாடும் வெளிவரலாம். தடையில்லை. அதுதான் முடிந்த முடிவென்பதல்ல. மாறுத லெய்தலாம், மறுதலிக்கப்படலாம், நிராகரிப்புக் குள்ளாகலாம். "யாப்பின் பிடிவாதத்தால் தேவையற்ற சொற்கூட்டங்களை இணைக்க நேர்ந்தமையாலும் புதிய உலகத்தின் நுண்ணிய மன ஓட்டங்களைச் சொல்லும் சக்தியை இழந்துவிட்டதாலும் மரபுக் கவிதை புதுக் கவிதைக்கு வழிவிட்டிருக்கிறது." என்றும் ஒரு வாதமுள்ளது. இக்கருத்துச் சரியா, பிழையா என்பது குறித்துக் காலம் பதில் சொல்லும். மொழி புதிய மாறுதல்களுக்கெல்லாம் ஈடுகொடுத்தே வளர்கின்றது என்பதே உண்மை.

பிறிதொரு வாதமும் உள்ளது. "இன்றைய உலகில் இன்னொரு கம்பன் தோன்ற முடியாது. நின்று நிதானித்துப் படிக்க நேரமில்லை என்பதும், வாய்விட்டுப் பாடவும், கேட்கவும், வேறு கலைவடிவங்கள் வளர்ந்து விட்டதால் கவிதைச் சந்தைக்கு வாடிக்கையாளர் குறைந்துபோய்விட்டமை ஒரு காரணம். மௌனவாசிப்பு, கணனிப் பயன்பாடு ஆகியவற்றால் காட்சிப்படிப்பு வளர்ந்துகொண்டிருப்பதும் தவிர்க்க இயலாக் காரணம். புதுக்கவிதையின் வளர்ச்சியைத் தடுக்க இயலாது. அதே சமயத்தில் மரபுக் கவிதையின் உன்னதங்களை இழப்பதற்காக வருந்தாமல் இருக்கவும் முடியாது" என்ற வாதம் உள்ளது. நவீன கவிதை குறித்து எழுதும் பேராசிரியர் செ. யோகராசா நவீன கவிதையின் பண்புகளாக சமூகச்சார்பு உலகளாவிய நோக்கு, வாழ்க்கைபற்றிய தரிசனம், தன்னுணர்ச்சி, தன்னனுபவம், எளிமை, நெகிழ்ச்சியான செய்யுள் வடிவங்கள், வசன ஊடகம் (எழுத்துப்பற்றிய பிரக்ஞை), (Romanticisim) எனப்படும் கற்பனா வாதத்திற்குப் பதிலாக (Realisim) எனப்படும் யதார்த்தவாதத்தைக் கையாண்டமை என்பர். விமர்சகரும் கவிஞருமான மு. பொன்னம்பலம் 'இன்றைய புதுமை என்பது நாளைய மரபே" என்று குறிப்பிடுவர்.

வசன இலக்கிய வடிவமான சிறுகதை சமூகச் செல்வாக்குப் பெற்றும், இலக்கிய அந்தஸ்துப் பெற்றும் வளர்வது இலக்கிய வடிவத்திற்குக் கடமையுண்டு. சிறுகதைகள் கொண்டுள்ள கதைக்கரு நோக்கப்பட வேண்டியவை. மிதமிஞ்சிய சாதி ஒடுக்குமுறை, வறுமை, உணவுக்கான போராட்டம், ஏழ்மை, பெண்ணடிமை, பால்யவிவாகம், தாசிவழக்கம், விபச்சாரம், மனதின் அகப்போராட்டம், புறப்போராட்டங்கள், ஏமாற்று, காதல், கொலை, கற்பழிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயராஜ்யம், சுதேசியம், விதேசிய பகிஷ்காரம், தீவிரவாதம், மிதவாதம் குறித்த செய்திகளெனப் பல இடம்பெறும். விழிப்பு நிலை மனிதர் பற்றியும் சிறுகதை வெளிவரும் தலித்தியம் உள்ளடங்கும்.

கதையாளர்கள் ஜெயகாந்தன், நாகராஜன், அசோக மித்திரன், கி. ராஜநாராயணன், வண்ணதாசன், அம்பை, பூமணி, கோணங்கி, பா. செயப்பிரகாசம், வண்ணநிலகன், கிருஷ்ணன் நம்பி, மௌனி, பிச்சமூர்த்தி, ல. சா. ராமாமிர்தம், சுந்தரராமசாமி, ஜெயமோகன், கா. சி. வேங்கடா மணி, ஆர். சண்முகசுந்தரம், க. நா. சுப்பிரமணியம், வல்லிக்கண்ணன், வீரமா முனிவர், வ. வே. சு. ஐயர், பாரதியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி முன்னோடிகள்.

**இலக்கியத்தில் கோட்பாடுகள்.**

தத்துவப் பாதிப்பு இருக்கிறது என்பதனாலேயே படைப்பு உன்னதமாகி விட முடியும் என்பது இலக்கியத்தில் ஒரு மூட நம்பிக்கை, படைப்பாளி அனுபவங்கள் சார்ந்து இயங்குகிறவன். அதன்மீது தத்துவச்சாயம் ஏற்றுவதென்பது படைப்பின் இயற்கையொளியை மறைப்பதாகும். அனுபவங்கள் சார்ந்து கிடைக்கும் பார்வைகள் முக்கியம். களப் பார்வை ஒருமுகம் மட்டுமே கொண்டதல்ல (முற்போக்கு இலக்கியம் எழுதியவரைக் காலம் காப்பாற்றிவிடவுமில்லை) வாழ்வின் அவலங்களோடும் உள்ளார்ந்த வேதனைகளோடும் தவிப்புகளோடும் படைக்கப்பட்ட சிறுகதைகள் பிரதானம். படைப்பு என்றுமே சுதந்திரமானது. கீழடங்கமறுப்பது. எனினும் இன்று பிற இலக்கிய ஆக்கத் துறைகளது இணைப்புத் தமிழிலக்கியத்திலே ஏற்பட்டுள்ளது. உளவியல், சமுதாயவியல், வரலாற்றியல், மானுடவியல், செவ்வியல், தொல்லியல், பாலியல், நவீன விஞ்ஞானங்களின் பரிவுகள், தத்துவவியல், நாட்டார் பண்பாட்டியல், அரசியல் என்பன அவை. பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவை குறித்துத் தனிநூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

**வாய்மொழி இலக்கியம் என்றால் என்ன?**

வாய்மொழி இலக்கியத்திற்கு ஐந்து பிரதான பண்புகள் என்பர்.

1. செவிவழி வந்து வாய்மொழிப் பரவல்
2. மரபுவழிப்பட்டதாதல்
3. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைதல்
4. ஆசிரியர் இல்லாமை
5. ஒரேவித வாய்ப்பாட்டுக்குள் அடங்குதல்.

'அது வாழ்வுபற்றிய விமர்சனம்'' Literature is criticim of life (1998 - மல்லிகை A.J.கனகரத்னா). What is popular litrature? வெகுசன இலக்கியம் என்றால் என்ன? ஆவலைத் தூண்டுவது வெகுசன இலக்கியம். அறிதற் (Lognitive environment) சூழல் முக்கியம். படம் - எழுத்து - அச்சாக்க முறைகள் - பக்க அமைப்பு என்பன Journalistic Format பத்திரிகைத்துறை அவசரக்கோலம் பூண்ட இலக்கியம் (Journalism is literature in a hury - Mather arnold) திறனாய்வு இல்லாத இடத்தில் மனித இருப்பும் இல்லாமல் போகிறது (ஓதெல்லோ 11-113)

தமிழ் திறனாய்வாளர்கள் வரிசையில், இலண்டன் செல்வராசா, தம்பிஜயா தேவதாஸ், கனக. செந்திநாதன், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன், வி. செல்வநாயகம், க. கைலாசபதி, கா. சிவதம்பி, அ. சண்முகதாஸ், எம்.ஏ. நுஃமான், நா. சுப்ரமணியன், துரை மனோகரன், மு. நித்தியானந்தன், வ. மகேஸ்வரன், ஈழத்துச் சோமு, திருமதி பத்மா சோமகாந்தன், அந்தனி ஜீவா, கோகிலா மகேந்திரன், த. வில்வரத்தினம், வண. தனிநாயக அடிகளார், அ. சண்முகதாஸ், சி. மௌனகுரு, , சித்ரலேகா, சிவலிங்கராஜா, விசாகரூபன், அம்மன்கிளி, ரூபி வலன்ரீனா, நடிரா மரியசந்தனம், ரகுநாதன், செல்வரஞ்சிதம், அகளங்கன், வெங்கடசாமிநாதன், திருமதி தேவகௌரி, சபா. ஜெயராசா, ப. ஜீவானந்தம், சிதம்பரரகுநாதன், தி. க. சி. இராமகிருஷ்ணன், அ. ச. ஞானசம்பந்தன், அகிலன், மார்க்கு, நா. வானமாமலை, வெ. கிருஷ்ணமூர்த்தி, கோ. கேசவன், தி. சு. நடராஜன், எஸ். தோதாத்திரி, ஆ.சிவசுப்பிரமணியன், தமிழவன், ஞானி, எஸ். வி. ராஜதுரை, முத்தையா, அருணன், சி. தில்லைநாதன், நந்தி, சாரல்நாடான், முரளிதரன், எஸ். யோகராசா, கனகநாயகம், சேரன், நாகேஸ்வரன், ஸ்ரீதர், தேவகுமாரி சுந்தரராஜன், சுதர்சன், சோதிநாதன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மாக்ஸியத் திறனாய்வு குறித்த தத்துவப்பார்வை இன்றும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முன்னோடிக் கவிஞைகள்



– பேராசிரியர் செ. யோகராசா –
மொழித்துறை
கிழக்கு பல்கலைக்கழகம், மட்டக்களப்பு

நவீன தமிழ்க்கவிதைகள் வளர்ச்சியில் ஏறத்தாழ எண்பதுகள் தொடக்கம் ஈழத்துக் கவிஞைகள் முக்கியம் பெற்று வந்திருப்பது இன்று வரலாறாகிவிட்ட விடயமாகும். இரண்டாயிரம் ஆண்டு காலமாக சொல்லப்படாத சேதிகளை முதன்முதலாக வெளிப்படுத்தியோர் ஒர் புறத்திலும் புலம்பெயர்ந்த 'மறுபாதிகள்' இன்னொருபுறத்திலும் 'பெயரிடாத நட்சத்திரங்க' ளான போராளிகள் மற்றொரு புறத்திலுமாக அவ் வரலாற்றை உருவாக்கி வந்துள்ளமை அனைவருமறிந்த தொன்று இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் மூன்று கவிஞைகள் மூன்று வேறு தளத்திலிருந்து தனித்துவமான தடங்களைப் பதித்திருப்பது பலருமறியாததொன்று. இம்மூவரு ளொருவர் திருமதி கோ. ந. மீனாட்சியம்மாள், மற்றொருவர் ஞானாம்பிகை, இன்னொருவர் M.R. வித்தியாவல்லியம்மாள்.

மேற்குறிப்பிட்டோருள் ஒருவரான மீனாட்சி யம்மாள் மலையத்தைச் சேர்ந்தவர். மலையகத்தில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தும் நோக்கில் பாடல்கள் இயற்றியவர். இத்தகைய பாடல்கள் கொண்ட தொகுப்பு 'இந்தியத் தொழிலாளர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை' (1940) என்ற பெயரில் வெளிவந்துள்ளது. தொகுப்பின் முகவுரையில் அவர் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

> "இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டே வருகின்றது. இலங்கை வாழ் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் உரிமைகளை நிலைநாட்டுடவதற்காக தீவிரமுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்களிடையே அதிலும் முக்கியமாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடயே பிரசாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அத்தகைய பிரசாரம் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின் அதிகம் பயனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கைவாழ் இந்தியர்களின் நிலைமையைப் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின் அதிகம் பயனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமையைப் பாட்டுக்கள் மூலம் எடுத்துக்கூற முன்வந்துள்ளேன். இந்தியர்களை தூக்கத்தில் ஆழ்ந்துவிடாது தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப்பாட்டுக்கள் தட்டியெழுப்ப வெண்டு மென்பதே எனது அவா"

மத்தியதர வர்க்கத்தினரை மனங்கொண்டு தேசிய ஒற்றுமை பற்றியும் சமூகக் குறை பாடுகள் பற்றியும் பாடப்பட்டுவந்த சூழலில் மலையகத்தில் வாழ்ந்த இந்தியத் தொழிலாளர் பற்றியும் அவர்கள் மத்தியில் போராட்ட உணர்ச்சியை ஏற்படுத்துவது பற்றியும் பாட முற்பட்ட மீனாட்சியம்மாளின் குரல் முற்றிலும் புதியதே. இன்னும் நுணுக்கமாக நோக்கினால் அது சமூக, அரசியல் நோக்கிலான முதல் எதிர்ப்புக்குரலாகும். தொகுப்பிலுள்ள மூன்றாவது பாடலுக்கு மேலுள்ள உபதலைப்பு "இலங்கையர்கள் இந்தியர்களை இந்தியாவிற்கு விரட்டவேண்டுமென்று சொன்னதற்காக எதிர்த்துப் பாடிய பாடல்கள்" என்றிருப்பதும் கவனத்திற் குரியது. எடுத்துக்காட்டாக பின்வரும் பாடற் பகுதி அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மந்திரிகள் கூற்று மிக
சீருகெட்ட தென்று சாற்று
சங்கடமே நேருமென தோற்று திந்திய
சமூகம் நெருப்பாய் வரும் காற்று
நன்றிகெட்டு பேசும் மந்திரிமாரே - உங்கள்
நியாயமென்ன சொல்லுவீரே
இன்றியமையாதவொரு போரே செய்ய
இடமுண்டாக்குகிறீர் நீரே.

எதிர்ப்பு நிலையில் சாத்வீகப் போராட்டத்திற்காக. தொழிலாளரிடம் அழைப்பு விடுக்கப்படுகின்றது:

**அநுபல்லவி**

தொழிலாளர் ஒன்று கூடுங்கள் இந்த நிமிஷமே
துணிந்து வழியைத் தேடுங்கள்.

**சரணம்**

சிங்கள மந்திரிகள் செய்திடும் சூழ்ச்சி
சேதியிதல்லாமல் வேறில்லை காட்சி
பொங்கவே தொழிலாளர் ஒற்றுமை மாட்சி
பொலிவு கொண்டாலவர் அடைகுவர் தாட்சி
(தொழி)

பண்டிதரிடமிருந்து பாமரரிடம் கவிதையைக் கொண்டுசென்ற பாரதி, அவர்களுக்காக இசைப்பாடல்களையும் மெட்டுக்களில் அமைந்த பாடல்களையும் உருவாக்கினான். மீனாட்சியம்மாளின் பாடல்களும் அவ்வாறமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மேலுள்ள பாடல்கள் இசைப்பாடல்களாகவிருப்பது கண்கூடு. அவ்வாறமைந்த பாடல்கள் பொதுமக்களுக்குப் பரீச்சயமான மெட்டுக்களிலமைந்திருந்தன. உதாரணமாக.

"நந்தவனத்தில் ஓர் ஆண்டி" என்ற மெட்டு
"ஆடு பாம்பே" என்ற மெட்டு
"தங்கக் குடமெடுத்து" என்றமெட்டு
"கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்ற மெட்டு
கும்மி மெட்டு

மேற்குறிப்பிட்ட மீனாட்சியம்மாள் அறியப்பட்டளவிற்கு கவிஞை ஞானாம்பிகை அறியப்பட வில்லை. மயிலிட்டி வாசியான ஞானாம்பிகையின் பாடல்கள் இன்னொரு வழியில் செல்பவை. அவரது பாடல்கள் "மேலைத்தேய மதுபான வேடிக்கைக்கும்மி" என்று பிரசுரமாக வெளி வந்துள்ளது. அதில் வெளிவந்த ஆண்டு குறிப்பிடப்படவில்லை. இருபத்தைந்தளவிலே (1925) அவை வெளிவந்திருக்க வாய்ப்புள்ளது. (இப்பிரசுரத்திலிடம்பெற்றுள்ள பாடலொன்றிலே கூறப்படும் சம்பவமொன்றில் ஆண்டு பற்றிய குறிப்பொன்றுள்ளது.)

நூலின் தலைப்பிலே மதுபானம் என்றிருப்பினும் கவிஞை முக்கியத்துவம் கொடுத்த பொருள் வேறொன்று: அது முற்றிலும் புதியபொருள். சமகாலத்து போலியான தேசோபகாரிகளை இனங்காட்டுவதில் - கண்டிப்பதில் - நையாண்டி செய்வதிலேயே கவிஞையின் கவனம் குவிந்துள்ளது. சமகால சமூகத் தேவைகளை அதிகளவு பாடிய பாவலர் துரையப்பாபிள்ளை உட்பட, உதிரியான கவிதைகள் பாடிய எவருமே இப்பொருள்பற்றிப் பேசினாரல்லர். கவிஞை, நூலின் விஞ்ஞாபனத்தில் பின்வருமாறு கூறியிருப்பது இவ்வேளை கவனத்திற்குரியது:

"………நாமிங்கே கண்டிப்பது. தற்போது இக்குடிவகைப் பதார்த்தங்களைரைவிட்டோட்டி விடவேண்டுமென்னும் தேசோபகாரிகள் தேசபக்தர்கள், தேச நன்மைக்காகப் பாடுபடுகின்றவர்கள், என்று வெளிப்பட்டுக் கங்கணங்கட்டி நிற்பவரையே. அவர்கள் ஸ்ரீமான் காந்தி, திலகர், சரோஜினி தேவியாகிய மகாத்மாக்கள் போல, உடல் பொருள் ஆவி மூன்றையும் உலகத்துக்காய் ஒப்புக்கொடுத்து நன்மை செய்யச் சித்தங்கொண்டவர்களல்லவே. தம்மைச் சனங்கள் தேச நன்மைக்காய் பாடுபடும் மகாத்துமாக்களென்று நம்ப வேண்டுமென்ற அவாவினால் வேறு வேஷம் போடுவர்: ஆடுவர், ஆதலின், கெட்ட குடிவகையை ஊராற்றுரத்துவதிலும் இவரன்னாரை ஊராயருவருத்து தள்ளிவிடுவதே உசிதமென்று நாம் துணிந்து சொல்லுகின்றோம். குடிவகைப் பதார்த்தங்களுக்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. இவர்களுக்கே நாமெல்லோரும் பயப்பட வேண்டியிருக்கிறது."

மேற்கோள் சற்று நீண்டதாயினும் கவிஞையின் பொருட் புதுமை எத்தகைய தென்பதையும் ஒப்பீட்டுப் பார்வையையும், ஆக்ரோஷ உணர்ச்சியையும், மனத்துணிவையும், அங்கதப் பாங்கையும் அது வெளிப் படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞை எழுதியுள்ள 123 பாடல்கள் கொண்ட முற்குறிப்பிட்ட பிரசுரத்திலே 57 பாடல்கள் தேசோபகாரிகள் பற்றியவை என்பது வியப்பிற்கும் சிந்திப்பதற்குமுரிய விடயமாகின்றது. ஏனெனில், போலித் தேசோபகாரிகள் அந்தளவிற்கு அதிக எண்ணிக்கையினராக இருந்துள்ளனரென்பதை நாம் அறிதற்கான வாய்ப்புகள் இன்றுவரை அரிதாகவே இருந்துள்ளது. கவிஞை அவ்விடயத்திற்கு முதன்மையளித்திருப்ப தனூடாகவே போலித் தேசோபகாரிகள் பலர் அன்றைய காலகட்டத்தில் தலைதூ க்கியிருந்தனரென்பது புலப்படுகின்றது. ஆக, முக்கியமான இவ்விடயம் பற்றி கவிஞை எழுதியுள்ள பாடல்கள் சிலவற்றை இங்கு எடுத்தாள்வது பயன்மிக்கது. அவை பின்வருமாற மைகின்றன:

"சாதுசன் யாசியெள வேஷ மிட்டூரில்
தன்கா ரியத்தை முடிப்ப ரிவர்களைத்
தேசோப காரிக ளென்றுஞ் சொலலாமோ
சிந்தித்து நீரிதைப் பாருமடி

ஊரிற் தமக்கு மதிப்பொன் றுண்டாக்கு
முபாயத்தைக் கொண்டு பலவேஷம் போட்டிவர்
ஆரினும் மேலவர் தேசோப காரிக
ளாமென ஆடிறார் பாருமடி

தேசநன் மைக்கென்று சல்லியும் வேண்டுவார்
தேசோப காரிகள் என்று முழங்குவார்
பேசுவ தன்றித் தம்மைச் சதமொன்றும்
பிரிய விடாரிவர் பாருமடி

..............................................................................

இப்படிப் பட்டவ ராலுல கத்துக்
கிருக்குங் கெடுதிக் களவிலை யாதலால்
இப்படிப்பட்டோரை யூரைவிட்டோட்டினால்
எல்லார்க்கும் நன்மையே பாருமடி

மட்டக்களப்பு வயித்திய லிங்கனை
மக்களைப் போலவ ரைத்தே சோபகாரச்
சிட்டரென்றாலும் தரும்பொரு ளால் நன்மை
செய்கிற ரல்லவோ பாருமடி

..............................................................................

வாக்கு மனங் காயமொத்து நயஞ்செய்
மனுஷரே தேசோப காரியல் லால் வேஷம்
போட்டு நடிப்பவர் தேசோப காரரா
பிரபல்ல வம்பரே பாருமடி"

போலித் தேசோபகாரிகளென்பவர் பற்றிப் பேசிய பின்னர் மதுபானத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி கவிஞை குறிப்பிடுவார். அதன் பின்னர் யூரிமார் பற்றிப் பேசுகின்றார். ஆங்கிலரது ஆட்சியில் நீதிமன்றம் முக்கியம் பெற்ற சூழலில் யூரிமாரும் முக்கியம் பெற்றிருப்பது வியப்பிற்குரியதன்று. யூரிமாராக வைக்கத் தகாதவர் யாவரென்பது பற்றிக் கவிஞை அலசுகின்றார். இதுபற்றியும் பாவலர் துரையப்பிள்ளை முதலானோர் பேசவில்லை.

தொடர்ந்து, பாரம்பரிய உடை, உணவு முறைகளிலேற்பட்ட மாற்றங்கள் குறித்து விரிவாக விளக்குகின்றார் கவிஞை. ஏனைய கவிஞர்கள் சுருக்கமாகவே அவை பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். இறுதியாகப் பின்வருமாறு முடிக்கின்றார்:

பொய்வேட மிட்டுல கத்தரை யேய்க்கும்
புரட்டரைப் பற்றிச் சொலவந்தே னன்றி நான்
நல்ல மனுஷரிருந்தாலவரை
நனைக்க வரவில்லைப் பாருமடி

பன்றியிற் சோனகர் கொண்ட பகையுமென்
பாலிதைப் பாடினே னென்று பிரபுக்கள்
கொண்ட பகையுஞ் சரியிதற் காய்மனம்
கொஞ்சமும் நானஞ்சேன் பாருமடி

இன்னும் நான் சொல்ல வனேகமிருக்கு
திரண்டாம் பாகத்தில் விபரமாய் நானதைத்
திண்மையாய்ச் சொல்லுவே னென்னிலேகோபம்
சிறிதும் வெண்டாமென்று செப்புமடி

வாழி

ஆகா வாழி யங்கவர் நீதிநெறி வாழி
கோதின் மறையவரினம் வாழி பொய்த்
தேசோபகாரிகள் பொள்ளலைக் காட்டிடுந்
தெய்வப்புலவர் கணம் வாழி

மேலைத் தேய மதுபானம் வாழி யதை
விற்குஞ் சாய்ப்புப் பெரியோர் வாழி
சீலக் குருவடி வாழியிக் கும்மி
செகத்தி லனு தினமும் வாழி.

மேற் குறிப்பிட்ட கவிஞைகளிருவர் இடமிருந்தும் முற்றிலும் வித்தியாசமான தடத்தில் செல்கின்றார் திருநெல்வேலி M. R. வித்தியா வல்லியம்மாள். இவர் பற்றி வெளியிட்ட பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்ரீமான் சேனாதிராசா கொலை விசித்திரக் கவிகள் (முதலாம் பாகம்)"

மேலுள்ள தலைப்பினைத் தொடர்ந்து பின்வரும் குறிப்பு இடம்பெறுகின்றது :

"இது முன்னர் வெளிவந்த புத்தகங்களிலும் பார்க்கச் சரித்திரம் தொடர்பாக வீரம், சோகம், தாபம் முதலிய சகல விபரங்களும் அடங்கிய வெண்பா, விருத்தம், கலித்துறை, கும்மி, சிந்து முதலிய நூதன மெட்டுக்களாற் பார்ப்போர் மனதைப் பிரம்மிக்கச் செய்யத்தக்க விதமாக வியற்றியது. தாசி நடனம், பணவாஞ்சை, அன்னியர் நேசம், கூடா நட்பு முதலியவற்றில் வருங்கேடு...... நன்கு விளங்கும் ......."

(புள்ளியிட்ட இடத்தில் எழுத்துக்கள் அழிந்துள்ளன).

சேனாதிராசா என்பவர் கோப்பாய் ஊரைச் சேர்ந்தவர்: உடையார் அல்லது மணியகாரர் பரம்பரையில் வந்தவர்: பரோபகாரி: செல்வாக்கு மிக்கவர்: தேவதாசிகளால் கோவிலிலேற்பட்ட அசம்பாவிதம் காரணமாக, திருவிழா பார்க்கச் சென்றவேளை திட்டமிட்டுக் கொலை செய்யப்படுகின்றார். வழக்கு நீதிமன்று செல்கின்றது. (தீர்ப்பு பற்றியது இரண்டாம் பாகம்: அது வெளிவந்ததா என்று தெரியவில்லை.)

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைப் பொருளாகக் கொண்ட இப்பிரசுரம் 'விசித்திரக் கவிகள்' என்றழைக்கப்பட்டாலும் எழுத்து இலக்கிய மரபில் நோக்கும் போது உள்ளூர்ப் பிரமுகர்களைப் பாடுகின்ற பிரபந்த இலக்கிய மரபினை (உதாரணம் : கதிரைவேலன் கோவை, தண்டிகைக் கனகராயன் பள்ளு) சார்ந்ததாகவுள்ளது என்று கூறமுடியும். எனினும், அதைவிட, வாய்மொழி இலக்கிய மரபில் உருவாகின்ற 'கொலைச்சிந்து' பாடல் மரபுடன் பொருத்திப் பார்ப்பதே பொருத்தமானது. தமிழகத்தில் இவ்வாறான கொலைச் சிந்துகள் வாய்மொழி பாடல் மரபில் அதிகமெழுந்துள்ளன. ஈழத்தில் மலையகத்தில் ஒரு சில எழுந்திருக்கின்றன. உதாரணமாக, எஸ். எம். ராஜப்பா என்பவர் பாடிய 'கட்சிப் போராட்டக்குரல்' இரண்டாம் பாகத்தில் "12 நபர்களின் படுகொலைப் பாடல்கள் அடங்கியுள்ளன". அறுபதுகளளவிலே யாழ்ப்பாணத்தில் 'கோகிலாம்பாள் கொலை வழக்கு' பிரசுரமாகின்றது.

வித்தியாவல்லியாம்பாள் இயற்றிய விசித்திரக் கவிகள் எவ் இலக்கிய மரபுடன் இயைந்தாலும் பாடியவர் பெண்கவிஞர் என்ற விதத்திலே முதன் முயற்சியாகின்றது என்பதே இங்கு கவனிக்கத் தக்கது.

நூலின் ஆரம்பம் கடவுளர் துதிகளுடன்இடம் பெறுகின்றது.

**விநாயகர் வணக்கம்**

**வெண்பா**

சீரோங்கு சேனாதிச் சீமா னுயிர் விடுத்த
பேரோங்கு காரியத்தைப் பேசவே - பாரோங்கு
மைங்கரனே போற்றி யடியிணையை யான் தொழுதேன்
சங்கையுறு செந்தமிழைத் தா

**சுப்பிரமணியர் துதி**

**கலித்துறை**

உன்னரும் வீதியிலூவித் திரிந்த வுத்தமனாம்
பன்னருஞ் சேனாதிபதியினுடலைப் பதைபதைக்க
அன்னியர் செய்தமையருங் கவியாற் சொல்லவாறுமுகா.
என்னரும் நாவினிதாயிருந் தி.்.தியம் புவையே.

**அவையடக்கம்**

கண்மணியாகிய சேனாதிராசன் கதைகளை யோர்
பெண்மணியாகிய பேதை கவி வழிபேசியதால்
பண்ணிசைகுற்றம் பார்த்துப் பிடித்திடும் பாவலர்கள்
விண்மணியாமென விரும்பி யுரைத்து விளங்குவரே.

**நூல்**

**நொண்டிச்சிந்து**

சற்சனரே சொல்லக் கேளும் - இந்த
தரணி யெலாம் புகழுங் கோவை நகரில்
சிற்பர னருளினாலே - சகல
செல்வமும் படைத்திலங்கும் நல்ல குலத்திலே

**சற்சனரே)**

குன்றனையகுணம் படைத்தோன் - குமரா
சூரியர் குலத்து தித்த குழந்தை யென்பார்
வன்றிறல் சேனாதி ராசா - என்று
வையத்தோர் சொல்லுவார்கள் ஐயா நேசர்கள்

**(சற்சனரே)**

மேற்கூறியவாறு ஆரம்பித்து சிறி கிட்டினன் என்ற பொலிஸ், கொலைக் குற்றவாளியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றிலே நிறுத்துவதோடு வாழி விருத்தத்துடன் (முதற்பாகம்) முடிவுறுகின்றது. (மேற்குறித்த பொறிஸின் பெயர் 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி'யிலும் இடம்பெறுவதால் அப்பிரசுரமும் ஏறத்தாழ 1920 - 1925 அளவில் எழுந்திருக்கலாம்)

மீனாட்சியம்மாள் வெவ்வேறு பாடல் மெட்டுக்களை பயன்படுத்தியிருப்பதுபோன்று, வித்தியாவல்லியம்மாளும் பல்வேறு பாடல் மெட்டுக்களைப் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கது.

இறுதியாக, தொகுத்து நினைவுகூர்வதாயின் மேற்கூறிய மூன்று கவிஞைகளும் வெவ்வேறு நோக்குகளும் போக்குகளும் கொண்ட பாடல்களைப் பாடியுள்ளமை புலப்படுகின்றது. தொழிலாளர் எழுச்சியை மனங்கொண்டு மீனாட்சியம்மாளும் காலனித்துவ ஆட்சி மாற்றங்களுட்பட போலித் தேசோபரிகள் பற்றி ஞானாம்பிகையும் உள்ளூர் பிரமுகர் கொலை பற்றி வித்தியாவல்லியம்மாளும் பாடல்கள் பாடி முன்னோடி முயற்சியிலீடுபட்டுள்ளனர். பொதுமக்களை மனங்கொண்டு இசைப் பாடல்களை மெட்டுக்களில் இயற்றியுள்ளனர். எனினும், இத்தகைய கவிஞைகள் தங்கள் பிரச்சினைகள் பற்றி பாட முற்பட்டாரல்லர். அதற்கான காலம் எண்பதுகளிலேயே உருவாகின்றது!

### அணிலைப்போல் இரு

**பெருந்துன்பம் செய்யும் உயிர்கள்: பாம்பு, தேள், நட்டுவாய்க்காலி, துன்பத்தை செய்வன: பெருச்சாளி, எலி, பூனை,நாய்,சிறு துன்பத்தைச் செய்வன, மூட்டைப்பூச்சி, உண்ணி இவைகளைப் போல் நீ இருக்காதே. ஒருவருக்கும் தீங்கு செய்யாதது: சேதுவில் அணைகட்டுவதற்கு ஸ்ரீராமருக்கு உதவி செய்தது, அணில். அதைப்போல் இருக்கக் கற்றுக் கொள்.**

### பெரியோரைப் பற்றிக் கொள்

**பலமற்ற கொடியானது உயர்ந்த மரத்தைச் சுற்றிக் கொண்டு வானம் வரை உயர்கிறது. மரத்தைப் பற்றிக் கொள்ளவில்லை என்றால் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது. கல்லைத் தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடுகிறது. அதே கல்லை கட்டையால் செய்யப்பட்ட படகின் மேல் வைத்தால் மிதந்து செல்கிறது. அதைப்போல் நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும் பெரியோர்களைப் பற்றிக் கொண்டால் நாமும் உயர்வடையலாம்.**

### நிலையற்ற 'பல்'

**நமது உடம்பில் இயற்கையிலேயே அமைந்த கண், காது, மூக்கு போன்ற உறுப்புகள் இறுதி வரை இருக்கின்றன. ஆனால் நமது உடலில் இடையிலே தோன்றுகிற பற்கள் இடையிலேயே உதிர்ந்து போகின்றன. 'நடுவில் வந்தது நடுவிலே போகும்' என்ற கருத்து எவ்வளவு உண்மையானது என்பதை இயற்கை நமக்கு இப்படி உணர்த்துகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்ட்டின் விக்கிரமசிங்ஹ

– கே. எஸ். சிவகுமாரன் –

மார்ட்டின் விக்கிரமசிங்ஹ என்ற சிங்கள எழுத்தாளர் உயிரோடு இருப்பாராயின் இன்று அவருக்கு 126 வயதாக இருந்திருக்கும். நவீன சிங்கள இலக்கியத்தின் முன்னோடி அவர் எனச் சில சிங்கள மொழி இலக்கியத் திறனாய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இவர் 19 ஆம் நூற்றாண்டுக் குரிய கலாசாரப் பாங்கும் 20 ஆம் நூற்றாண்டுக்குரிய பண்பாட்டுக் கோலமும் கொண்டவர் என்பர்.



நவீன சிங்கள நாவலின் தந்தை எனவும் அழைக்கப்படும் இவர் 1914 ஆம் ஆண்டு முதல் எழுதிவந்தார் என்று அறிகிறோம். ஆயினும் இவருடைய முதல் நாவல் 1944 இல் தான் வெளிவந்தது. அதன் பெயர் கம்பெரலிய (கிராமப் பிறழ்வு).

அறிஞர் எம். எம். உவைஸ் இதனை "கிராமப் பிறழ்வு" என்ற பெயரில் மொழி பெயர்த்து இருந்தாலும் அந்த மொழிபெயர்ப்பு வரவேற்கத் தக்கதாய் அமையவில்லை என்று தமிழ் திறனாய் வாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

கம்பெரலிய வெளிவருவதற்கு முன்னர் எழுதிய நாவல்களில் பிரச்சார வாடையும் அதித கற்பனையும் கொண்டதாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட இந்த நாவலுடன் தான் யதார்த்தப் பண்பு காணப்படுவதாக சிங்களத் திறனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நாவலின் சில பகுதிகளை பேராசிரியர் அஷ்லி ஹல்பே ஆங்கிலத்தில் தந்திருக்கிறார். இந்த நாவலுடன் தொடர்பு டையதாக கலியுக, யுகாந்தய ஆகியனவாகும்.

வெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் என்ற சிங்களத் திரைப்பட நெறியாளர், இம் மூன்று நாவல்களையும் திரை வடிவத்தில் தந்திருக்கிறார்.

மார்ட்டின் விக்கிரமசிங்ஹ 1947இல் எழுதிய 'மடோல் தூவ" என்ற நாவலை பேராசிரியர் அஷ்லி ஹல்பே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். கலாநிதி லஷ்மி டி சில்வா, மார்டின் விக்கிரம சிங்ஹவின் சிறுபராய நினைவுகளை, "LAY BARE THE ROOTS" என்ற பெயரில் ஆங்கிலத்தில் தந்துள்ளார்.

மா. வி. எழுதிய மற்றொரு நாவலான "விராகய" வை திஸ்ஸ அபேசேகர திரைப்படமாகத் தந்துள்ளார். ஆசாபாச மற்ற நிலைமை விராகய என்ற சொல் குறிக்கும் என்று அறிகின்றோம்.

இவருடைய எழுத்துக்கள் பற்றி அறிந்து கொள்ள, 1975இல் வெளியான ஆங்கில நூலாகிய "MAARTIN WICKRAMASINGHE : THE SAGE OF KOGGALLA" என்ற நூல் உதவக்கூடும்.

மார்ட்டின் விக்கிரமசிங்ஹ 1920 இல் எழுதிய "சிங்கள இலக்கியத்தின் மைல்கற்கள்" என்ற நூலை எதிரிவீர சரத்சந்திர ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இவற்றைவிட "STORIES FROM LANKA" என்ற தொகுப்பிலே, விக்கிரமசிங்ஹவின் சிறுகதை ஒன்றை, பேராசிரியர் யஸ்மின் குணரத்ன சேர்த்திருக்கிறார். இது 1979இல் வெளியாகியது.

"இருபதாம் நூற்றாண்டுச் சிங்கள இலக்கியம் என்ற தொகுப்பிலே மார்ட்டின் விக்கிரமசிங்ஹ எழுதிய மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இந்தத் தொகுப்பைத் தந்திருப்பவர் கிறிஸ்டபர் ரெய்னோல்ட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர். மொழிபெயர்த்தவர் ஹேம மாலினி குணசிங்ஹ யுனெஸ்கோ வெளியீடாக 1987 இல் இது இடம் பெற்றது.

இவருடைய வேறு சிறுகதைகள் "ASIAN PEN ANTHOLOGY (1966) ADAM (1972)" ஆகியவற்றிலும் இடம்பெற்றுள்ளன.

"THEORY OF EVOLUTION " என்ற நூலை ஆங்கிலத்திலேயே மார்ட்டின் விக்கிரமசிங்ஹ எழுதியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1924 ஆம் ஆண்டில் விக்கிரமசிங்ஹ "ககானியக்" என்ற தலைப்பிலே ஒரு நாவல் எழுதினார். அந்த நாவலுக்கு அவர் எழுதிய முன்னுரையைப் பேராசிரியர் ரஞ்ஜன் ஒபேசேகர மொழிபெயர்த்துள்ளார்.

மார்ட்டின் விக்கிரமசிங்ஹ ஒரு 50 வருடங்கள் எழுதினார். ஆக்க இலக்கியம் படைத்தார். அதுமட்டுமன்றி பத்திரிகை ஆசிரியராகவும் இவர் இருந்திருக்கிறார்.

# எல்லாம் குரு மயம்!

**கலாபூஷணம் பொன். பூபாலன்**



இன்றொரு மனித னிங்கே
இனிய சொல்லும் செயலுமோங்க
இன் முகம் காட்டி நடந்தாலே
அதுவே பிறப்பின் முதல் முகவரி!

சூழலும் ஓர்குரு சுற்றமும்
சிறந்த குரு குலமே!
மாசற்ற மனதும் முதல் குருதாமே
மக்களும் தருணத்தில் குருவாமே!

உள்ளொன்று வைத்தவராய்
உதட்டில் வேறொன்றும் பூசாத
உத்தமத் தோழனும் தோழியும் கூட
உயர் நிலை காட்டும் குருதாமே!

மற்றோர்க்கும் நற்பயனுள்ள
மனிதனென்ற தகைமையை விட
மற்றென்ன தகைமை வேண்டும்
மானிடர் நிலை காப்பதற்கே ?

திட்டமிட்டு வாசித்த நூலும்
தற்செயலாய்க் கிட்டிய ஏடும்
தக்கவழி காட்டும் துணை குருவாமே
தேவையுணர் ஆலோசனையும் குருதாமே!

இயற்கையின் சுவாசத்தால் சீவித்து
இயற்கையுடன் இணைந்து வாழும்
கல்வியே கற்காத பாமரனும் கூட
காலத்தால் ஆராயின் குருவேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையாத கல்வி

**மாண்புமிகு தெ. ஈஸ்வரன்**
தொழிலதிபர், அறங்காவலர்



கலையாத கல்வி எனில், ஒன்று, யாரும் இந்தக் கல்வியை நம்மிடமிருந்து எடுத்துச் செல்ல முடியாது, மற்றொன்று, ஒருமுறை கற்றுவிட்டால் அது நம்மிடமிருந்து கலைந்து, மறந்து போகாது.

கல்விகற்கும் மாணவர்களுக்கு இன்று இருக்கின்ற வசதிகள் போன்று என்றுமே இருந்ததில்லை. எத்தனை புலமைப் பரிசில்கள், எத்தனை எத்தனை தனியாருடைய உதவிகள், இக்கால மாணவர்களுக்குக் கொட்டிக் கிடைக்கின்றன. கல்லூரிப் படிப்புக்கு மட்டு மன்று, பல்கலைக்கழகம் வரை உதவிகளைப் பெற வாய்ப்பிருக்கின்றன.

91.2 வீதம் எழுத்தறிந்தவர்களைக் கொண்ட நாடு இலங்கை, இது நமக்குப் பெருமை. நம் மக்கள் மனது வைத்தால் நம் நாட்டிலே எழுத்தறிவற்றவர்களே இல்லை என்ற நிலையை எளிதில் உருவாக்கலாம். கண்ணுடையவர் என்று உயர்வாகக் கூறப் படுகின்றவர் கற்றவரே, கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்கள் உடையவரே என்பார் வள்ளுவர்.

> கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர்.
>
> (குறள் 393)

கல்லாதவர் மேல் எவ்வளவு கோபம் இருந்தால், 'இவர்கள் முகத்தில் இரு புண்ணுடையோர்' என்று சொல்லியிருப்பார் வள்ளுவர்? இப்பொழுது இருக்கும் வசதியில் 20% வசதியே இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த மாணவர்களுக்கு இருந்தது. இன்றைய மாணவர்கள் இவ்வசதியை முழுமையாக, முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

கற்பதனால் அறிவு விசாலமாகும். கல்வியினால் ஏற்படும் அறிவு மிகவும் உயர்ந்தது. இவ்வுலகம் போட்டிகளும், போராட்டங்களும், பொறாமைகளும் நிறைந்தவை. நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டுமென்றால் "அறிவு என்னும் கோட்டையை நிர்மாணித்துக் கொள்ளவேண்டும்" என்கிறார் வள்ளுவர்.

> அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
> உள்அழிக்கல் ஆகா அரண்
>
> (குறள் 421)

பொருள் :- அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும்: அன்றியும் பகை கொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்கமுடியாத உள்ளரணும் ஆகும்.

கல்வியின் துணை கொண்டு இந்த அறிவை நாம் தேடிக் கொண்டால் நம்முடைய பகைவர்களையும் செயலற்றவர்களாக ஆக்கி விடலாம். வாளோ, ஈட்டியோ வேண்டாம். எந்தப் போர்க் கருவியும் வேண்டாம். அறிவு என்ற கருவி நம்மிடமிருந்தால் போதும். அது நம்மைக் கோட்டையைப் போல் நின்று காக்கும்.

ஆத்திசூடியில் 'இளமையில் கல்' என முக்கியமான ஒன்றை ஔவையார் கூறியிருக்கிறார். எல்லா வயதிலும் கற்கலாம். ஆனால் இளமையில் கற்றால், கல்லில் செதுக்கிய எழுத்தென என்றும் மனதில் நிற்கும்.

மனிதனுக்கு மட்டும்தான் எந்த விடயத்தையும் சீர்தூக்கிப்பார்த்து முடிவு செய்யும் ஆற்றலை இறைவன் கொடுத்திருக்கிறார்.

தொட்டியிலே அழகான செடி இருக்கிறது. அது தண்ணீரைத் தேடிப் போய்த் தனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தண்ணீரை ஊற்றிக் கொள்ளாது. யாராவது தண்ணீர் ஊற்றவில்லை என்றால் அது பட்டுவிடும்.

சிங்கத்திற்குப் பாலும் பழமும் வைத்துப் பாருங்கள் அஃது அவற்றை உண்ணாது. மாமிசத்தைத் தவிர வேறு எதையும் சிங்கம் உண்ணாது. 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பதே பழமொழி.

மனிதன் மட்டுமே எது வேண்டுமோ அதைத் தெரிந்தெடுத்துச் செய்வான். விரும்பினால் அமைதியாக அமர்ந்து படிக்கலாம், எழுதலாம், தொலைக்காட்சியைப் பார்க்கலாம், மது அருந்தலாம், பயனற்ற, தன்னைப் பாதிக்கின்ற பலவகைச் செயல்களை அவன் செய்யலாம். அவனுக்கு மட்டுமே தான் செய்யும் செயலைத் தேர்வு செய்கின்ற பகுத்தறிவு இருக்கின்றது. அழகாகச் சொன்னார் வள்ளுவர்.

சென்ற இடத்தில் செலவிடா தீதொரீ.
நன்றின்பால் உய்ப்ப தறிவு
(குறள் 421)

பொருள்:- மனதைச் சென்ற இடத்தில் செல்ல விடாமல் தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து, நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

"மனம் போன போக்கில் காரியங்களைச் செய்வது அறிவல்ல. நன்மை தருகின்ற விடயங்களில் செலவிடுவது தான் அறிவு" என்றார் வள்ளுவப் பெருமான்.

"மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்றார் ஔவையாரும் உலக நீதியில்.

மாணவ மணிகளே, முத்தமிழ்ச் செல்வங்களே, உங்கள் மனம் செல்லும் இடங்களுக்கு உங்கள் கால்கள் செல்ல வேண்டாம். 'எந்தச் செயலும் உங்களுக்கு நன்மை பயக்குமா? உங்களை உயர்த்துமா?' என்ற கேள்விகளைக் கேட்க, நல்லவற்றைத் தெரிந்தெடுக்க. செயலாற்றிப் பயனடைக, என்பதே வள்ளுவரின் வேண்டுகோள். அதையே நானும் உங்கள் முன் வைக்கிறேன்.

கல்வி கற்பவர்களை ஊக்குவிப்பதற்காக பெருவிழா எடுத்துப் பரிசில்கள் கொடுத்து, மாணவர் முதுகிலே தட்டி, உற்சாகப்படுத்தும் "அகிலம்" சஞ்சிகை ஆசிரியர் கலாபூஷணம் கே.வி. இராமசாமி (அகில இலங்கை சமாதான நீதவான்) அவர்களைப் பாராட்டுகின்றேன்.

# பக்தி

நம்மை நல்லவர்களாக புத்திசாலிகளாக செய்வது ஆண்டவனிடம் வைக்கிற பக்திதான். சிறுவயதிலிருந்தே தெய்வத்தை கெட்டியாகப் பிடித்து கொள்ள வேண்டும். வயது ஏற ஏற ஆசைகள் வரும் ஆசைகளால் இடைஞ்சல்கள் வரும். அதனால் சிறுவயதிலேயே பக்தியுடன் இருக்க பழகிக் கொண்டால் பிரச்சனை வராது. தினமும் இரண்டுவேளை 5 நிமிடம் தெய்வத்தை தியானம் செய்ய வேண்டும். கோபம், பொறாமை போன்ற கெட்ட குணங்கள் நம்மை தாக்குகின்றபோது ஆண்டவனை பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை விழாமல் காப்பாற்றுவார்.

**- காஞ்சி மகா பெரியவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கை நோக்கிய படிப்பும், பரீட்சைகளும்

உடுவை எஸ். தில்லைநடராஜா
கல்வி மேலதிகச் செயலாளர் (ஓய்வு நிலை)

இன்று கல்விப்பரப்பு பெரிதும் விரிவடைந்துள்ளதால் மிகச் சிறுவயதிலேயே  மன்பள்ளி எனத்தொடங்கி, ஆரம்பப்பள்ளி, ரண்டாம் நிலைக்கல்வி, உயர்கல்வி, ல்கலைக்கழகம், தொழிற் கல்வி எனப் பரந்தும் தொடர்ந்தும் படித்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைக்கு சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட குறுகிய காலத்துக்குள் நேரத்தையும் வளங்களையும் திட்டமிட்டு அதியுச்ச அளவுக்கு முறையாகப் பயன்படுத்தா விட்டால் மாணவசமூகம் மட்டுமல்ல... அவர்களைச் சார்ந்திருப்போரும் பாதிப்படைய வேண்டிய சந்தர்ப்பங்களும் எழலாம்.

எனவே கல்லூரிகளில் ஆசிரியர்கள் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் மற்றவர்களின் குறிப்பாக பெற்றோர்களின் பங்களிப்பும் மாணவர்களின் புரிந்துணர்வும் முழுமையான முயற்சியும் இருந்தால்தான் ஒவ்வொருவரும் ஓரளவுக்காவது தொழில் வாய்ப்பைப் பெறக்கூடியதாகவும் தொடர்ந்து சொந்தக்காலில் நிற்கக்கூடியதாகவும் இருக்கும்.

பாடசாலைகளில் பல்வேறு பாடங்கள் படிப்பிக்கின்றபோதும் மாணவர்களைப் பொறுத்த வரை சில பாடங்கள் அவர்களால் படிப்பதற்கு சுகமாகவும் - பரீட்சையில் அந்தப் பாடங்களில் அதிக புள்ளிகள் பெற்றுத் திறமைச் சித்தி அடையக்கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் அந்தப் பாடங்களை வைத்துக்கொண்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வது பெரிதும் சிரமமாக இருக்கிறது. எனவே என்னால் நன்றாகப் படிக்கக்கூடிய பாடம் என்பதை விட - தொழில் வாய்ப்பு பெறக்கூடிய, பயனுள்ள பாடம் படிப்பதில் அக்கறை காட்ட வேண்டும் என்பதையும் மறக்கக்கூடாது.

சில மாணவர்கள் எளிதாகக் குறிப்பிடப் பட்ட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யும் எண்ணத்துடன் அவர்களுக்குச் சுலபமாகப் படிக்க முடிந்த பாடங்களைப் பூர்த்தி செய்து பட்டதாரிகளாக வெளியேறிய பின்னர், போதியளவு வருமானம் ஈட்டக்கூடிய தொழில் வாய்ப்பைப் பெற முடியாமல் தடுமாறுவதையும் காணமுடிகிறது.

அதேவேளை சில நாட்களுக்குள் தம்மை நன்கு மதிப்பீடுசெய்து சில பாடங்களுக்குப் பதிலாக வேறு பாடங்களை எடுத்தவர்கள் எளிதாக தொழில் வாய்ப்பைப் பெற்று, படிப் படியாக உச்சத்தை சென்றடைந்ததையும் காண முடிகிறது. எனது கிராமத்துப் பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவன் கணித பாடத்தில் மிகத் திறமையாகச் செய்து ஆசிரியர்களை அசத்தி விடுவான். ஆனால் இராசாயன பாடம் அவனுக்கு வேப்பங்காய் கணிதத்தில் ஆகக்கூடிய புள்ளிகளையும் இராசாயனத்தில் ஆகக் குறைந்த புள்ளிகளையும் அவனே பெறுவான். தன்னைத் தானே மதிப்பீடு செய்து பாடத்தை மாற்றிப் படித்ததால் கணித ஆசிரியராகப் பதவி ஏற்று, பல மாணவர்களை கணிதத் துறையில் பயிற்றுவித்து பரீட்சைகளில் அதிக புள்ளிகள் பெற வைத்ததுடன் பின்னர்கணிதன் என்ற பட்டத்துடன் படித்த கல்லூரியிலேயே அதிபராகவும் வர முடிந்தது.

அதே கிராமத்துப் பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரையில் எல்லாப் பாடங்களிலும் சிறப்பாகச் செய்து அதிக புள்ளிகள் பெற்றுக் கொண்ட எனக்கு க.பொ.த.(சா./த) விஞ்ஞான பாடங்கள் கஷ்டமாகத்தான் இருந்தன. பரீட்சைப்பெறுபேறுகள் எனது இயலாமையை வெளிப்படுத்தியதும் விஞ்ஞான பாடங்களிலிருந்து விடுதலை பெற்று கலைப் பாடங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் குறுகிய காலத்தில் படித்து சோதனையில் சிறப்பாகச் செய்து அதிக புள்ளிகளுடன் சித்தியடைந்து தொழிலையும் தேடிக் கொள்ள முடிந்தது.

ஒவ்வொருவரும் தத்தமது இயலுமை இயலாமை இரண்டையும் நன்கு புரிந்து இயலக்கூடிய விடயங்களை எடைபோட்டு ஆளுமையையும் அதற்கேற்ப அறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். நான் அறிந்த வரையில் படிக்க முடியாத சிலர் - படிக்க வசதி இல்லாத சிலர் குடும்ப பொருளாதார நிலையால் சிறு வயதிலேயே சிறு சிறு வேலைகளில் சேர்ந்து இந்த வேலைகளில் அனுபவம் நிபுணத்துவம் பெற்று வாழ்வில் உயர்ந்து தொழில் அதிபர்களாக வளர்ச்சி அடைந்ததையும் பெரும் செல்வந்தராக வாழ்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சிறிய மாணவப்பருவத்தில் மாணவரின் இயல்பான திறமைகளையும் அறிவையும் மதிப்பீடு செய்து அதற்கேற்ப பொருத்தமான சிலரை உதாரணம் காட்டி அவர்போல வரவேண்டும என்னும் எண்ணத்தை மனதில் விதைத்து ஊக்குவிக்க பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வரவேண்டும்.

பெரும்பாலும் வகுப்பேற்ற பரீட்சையை அடுத்து டிசம்பர் மாத விடுமுறையில் அடுத்த ஆண்டு படிக்க வேண்டிய புத்தகங்களை மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒழுங்கைச் செய்தால் மாணவர்கள் அந்த நூல்களை மேலெழுந்த வாரியாகவென்றாலும் வாசிக்கக்கூடியதாக இருக்கும். மாணவர் பாடப்புத்தகங்களை தாமாகவே வாசித்த பின் வகுப்பறைகளில் அவற்றைப் படிப்பிக்கும் போது ஆசிரியர்களுக்குச் சுகமாகவும் மாணவர்களுக்கு பாடங்களை விளங்கிக்கொள்வது எளிதாகவும் இருக்கும். சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கும் மேலதிக விளங்கங்கள் பெற்றுக்கொள்வதற்கும் நேர அவகாசம் இருக்கும்.

எல்லாப் பாடங்களையும் பாடசாலையிலேயே முழுமையாகப் படித்து விட முடியாது. தினமும் பாடசாலையில் கற்றல் முடிந்தபின் மாலையிலும் இரவிலும் வீட்டிலும் பாடங்களைப் படிக்க வேண்டியிருக்கும். அதே போல வார இறுதியிலும் தவணை விடுமுறையிலும் படிக்க வேண்டியிருக்கும். அப்படிப் படிக்கும் தருணங்களில் பெற்றோர் தமது பிள்ளைகள் நிம்மதியாகப் படிப்பதற்கேற்ற சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

சில வீடுகளில் பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கும் வேளைகளில் விருந்தினர் சென்றால் - பிள்ளைகளின் படிப்புக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக விருந்தினரை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்று உரையாடும் பெற்றோரையும் பார்த்திருக்கின்றேன். பிள்ளைகள் இரவில் படிப்பை முடிக்கும்வரை அவர்களுடன் கூடவே கண் விழித்திருக்கும் பெற்றோரையும் பார்த்திருக்கின்றேன். பிள்ளைகள் படிக்கும்போது கவனம் வேறு இடங்களுக்குத் தாவக்கூடாது என்பதில் கரிசனை காட்டும் பெற்றோர் வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றை தவிர்த்து வருவதையும் கண்டிருக்கின்றேன். பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் ஊக்குவித்து வருவதையும் அவதானித்திருக்கின்றேன்.

மாணவர்களை ஊக்குவித்தல் என்பது வகுப்பறைகளில் வீடுகளில் மாத்திரமன்றி, விளையாட்டு மைதானங்கள் - வயல் தோட்டங்களில் தொடர்வதையும் பார்த்துள்ளேன். சூரிய ஒளியில் விளையாட்டுத் திடலில் கற்பிக்கும் விடயங்கள் திறந்த வயல் வெளியில் தோட்டங்களில் சொல்லும் அறிவுரைகள் மாணவர் மனதில் ஆழப்பதிந்து அவர்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

மாணவன் செல்லும் வழியும் அவனது செயலாற்றுகையும் திருப்திகரமாக உள்ளதா என்பதை சரி பார்க்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் உண்டு.

பொருத்தமான வழி காட்டுதலாலும் படிக்கும் பாடங்களில் சந்தேகம் வரும்போது ஆசிரியரை அணுகி சந்தேகம் போக்கும் போதும் - முதலில் மாணவருக்கு மிகவும் கடினமாக இருக்கும் பாடங்கள் பின்னர் சிறிது கடினம் போலத் தோன்றி காலப் போக்கில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமாகி பின்னர் அந்தப் பாடமே மிகவும் சுகமான பாடமாக மாணவரை மகிழ்விப்பதையும் காணலாம்.

சிலர் பெரும்பாலான நேரங்களில் படிப்பில் அதிக அக்கறை செலுத்தாமல் சோதனைகளுக்கு முன்பாக படிப்பித்த பாடங்களையே மீட்டுப் பார்க்க முடியாமல் கஷ்டப்படுவதையும் பார்க்கின்றோம். கடைசி நேரப் படிப்பு பதற்றம் தரும் என்பதை உணர்ந்து, கடைசிவரை காத்திருக்காமல் நாளாந்தம் படிப்பதை மீண்டும் படிப்பதற்கான சந்தர்ப்பங்களை வரவழைத்து திரும்ப திரும்ப படித்தால் சோதனைகள் சுகமாகவும் அதிக புள்ளிகள் பெறத்தக்கதாகவும் அமையும்.

கல்லூரி நேரம் தவிர்ந்த மிகுதி நேரத்தை முறையாக எப்படி பயன்படுத்தலாம் எனத்திட்டமிட்டு அதற்கேற்ப ஒவ்வொரு பாடத்துக்கும் நேரத்தை ஒதுக்கி படித்து வருவது நல்லது. குறிப்பாக இரவு உணவு உண்பதற்கு முன்பாக சில பாடங்களுக்கு நேர ஒதுக்கீடு - உணவின் பின் எளிதாகப் படிக்கக் கூடிய பாடங்கள் - அதி காலையில் மனப்பாடம் செய்ய வேண்டிய பாடங்கள் என ஒழுங்கமைத்துக் கொள்ளலாம்.

சோதனைக்கு இரண்டொரு நாட்களுக்கு முன் புத்தகங்களையோ அல்லது எழுதி வைத்திருக்கும் குறிப்புகளையோ முழுமையாகப் படிக்கமுடியாது. எனவே முக்கிய கற்றல் குறிப்புகளை புத்தகங்களின் ஓரத்தில் - சொந்த வசனத்தில் குறித்து வைப்பது சிறந்தது. எதையும் விளங்கிப் படித்தால் சோதனையில் விளங்க வைக்க வைப்பது சுலபம். நாளாந்தம் பயன்படுத்தும் எளிய சொற்களைப் பயன்படுத்தி குறிப்புகள் எழுதுவது எடுத்துக்கொண்ட விடயத்துக்குப் பொருத்தமான படங்கள் வரைபடங்கள் உதாரணங்கள் ஆகியவற்றை இணைத்து விடைகளை எழுதுவதால் அதிக புள்ளிகள் பெறமுடியும்.

சோதனை வரும் நாள் வரை காத்திருக்காது நாளாந்தம் சில சொற்களையும் அவற்றின் அர்த்தங்களையும் பயன்படுத்தும் விதத்தையும் பழகிக் கொண்டு தொடர்பாடல் திறமையையும் அறிவையும் வளர்ப்பது நல்லது. அதுபோல அவ்வப்போது சூத்திரங்கள், வரைவிலக்கணங்கள். மேற்கோள்கள் ஆகிய வற்றை மனப்பாடம் செய்து தேவையான இடத்து பயன்படுத்தும் போது விடைத்தாள்களைப் பார்வை இடுபவரிடம் அதிக புள்ளிகள் பெற வாய்ப்புண்டு.

சாதாரணமாக நூல்களை வாசிப்பது ஒருபுறமிருக்க பாடங்கள் தொடர்பான உரைகளைச் செவிமடுப்பது பயன் நிறைந்தது. கல்லூரிகளில் சில ஆசிரியர்கள் தமக்கென ஒரு கற்பித்தல் முறையை கையாள்வதையும் ஆசிரியர்கள் இல்லாத நேரங்களில் சில மாணவர்கள் 'மிமிகிரி' பாணியில் அந்த ஆசிரியர்களைப் பிரதி பண்ணுவதையும் பார்த்துள்ளேன். ஒருவகையில் இந்த வகையான பயிற்சியால் பிரதி பண்ணும் மாணவரும் பார்த்துக்கொண்டிருக்கும் மாணவரும் பரீட்சைகளில் நன்றாகச் செய்வதையும் கண்டிருக்கிறேன்.

படிக்கும் பாடங்களை சகமாணவருடன் பகிர்ந்து கொள்வதும் - சேர்ந்து படித்தல், குழுக்களாக பிரிந்து எதிர் எதிராக வினாக்களை எழுப்பி விடைகளைச் சொல்லி அறிவைப் பெருக்கும்போது அவை அதிக விளைதிறன் உள்ளதாக மனதில் எளிதாகப் பதிவதையும் பார்த்திருக்கின்றேன்.

குழுக்களை உருவாக்கி, அறிவையும் வளங்களையும் பகிர்கின்றபோது கலந்துரையாடலில் கலந்து கொள்வோரின் அறிவும் ஆளுமையும் பன்மடங்கு பெருகுவதையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

எங்களுக்கு ஆங்கிலப்பாடம் கற்பித்த ஆசிரியை ஆங்கிலப் பாடநேரத்தில் ஆங்கிலத்தில்தான் கதைக்க வேண்டும். தமிழில் கதைத்தால் குற்றம் என்று ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு சதம் தண்டப்பணம் அறவிட நடவடிக்கை எடுத்தார். மாணவர் கல்லூரி நூலகத்தில் ஆங்கிலப் புத்தகங்களைப் பெற்று வாசிக்க ஒழுங்கு செய்து வாசித்த நூல்களின் பட்டியலை காட்சிப்படுத்த வைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நூல்களில் வினாக்களை எழுப்பி சரியாக விடை சொல்லும் மாணவருக்குப் பரிசில்களும் வழங்கினார். இதனால் பெரும்பாலான மாணவர் ஆங்கில அறிவையும் தமதாக்கிக் கொண்டனர்.

இன்னுமொரு ஆசிரியர் வகுப்பறையில் மாத்திரமன்றி கல்லூரி வளவில் மாணவரை காணுமிடத்தில் அவரது பாடம் தொடர்பான கேள்விகளைக் கேட்பார், சரியாகப் பதில் சொன்னால் பரிசு கொடுத்துப் பாராட்டுவார். தவறாகப் பதில் சொன்னால் சரியான பதிலைச் சொல்லித்தருவார்.

வேறோர் ஆசிரியர் வருட ஆரம்பத்தில் நன்றாகப் படித்து வகுப்பேற்றப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறும் மாணவனுக்கு தனது சொந்தப்பணத்தில் அடுத்த ஆண்டு படிக்க வேண்டிய புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லி - சொல்லியபடியே புத்தகங்களும் வாங்கிக் கொடுத்தார்.

ஒரு தடவை நியூசிலாந்து நாட்டில் சிறு பிள்ளைகள் படிக்கும் வகுப்புப் பொன்றுக்கு சென்றபோது ஆசிரியர் எங்களைக் காட்டி 'இவர்கள் இலங்கை விருந்தினர்' என்றதும் குழந்தைகள் உடனே உலகப் படத்தில் இலங்கையைக் கண்டுபிடித்து இலங்கையில் எப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று கேள்வி எழுப்பியதோடு தொடராகப் பல கேள்விகள் கேட்டு இலங்கையைப் பற்றியும் எங்களைப் பற்றியும் பல விடயங்களைத் தெரிந்து கொண்டார்கள். மாணவர்கள் தாமாகவே கேள்வி கேட்கவும், பயிற்சியளிப்பதோடு - கேள்வி கேட்பதன் மூலம் பல விடயங்களையும் தாமாகவே அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இன்னுமொரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. கல்வி அமைச்சர் தலைமையில் சீனாவிலுள்ள ஆரம்பப்பள்ளி ஒன்றுக்குச் செல்லும்போதும் பத்து நிமிடங்கள் தாமதமாகி விட்டது. கல்லூரி வாசலில் எங்களை வரவேற்க ஆசிரியர்களும் மாணவர்களும் ஐந்து நிமிடம் காத்திருந்ததாகவும் பின்னர் அவர்கள் தங்கள் வகுப்பறைகளுக்குச் சென்று விட்டதாகவும் கல்லூரிக் காவலாளி தகவல் சொன்னான். எங்களுக்கு காவலாளி தகவல் சொல்லும்போதே கல்லூரி அதிபருக்கு உள்ளக தொலைபேசியில் தகவல் சொல்ல இரண்டு நிமிடங்களுக்குள் ஆசிரியர்களும் மாணவர்களும் கல்லூரி வாசலுக்கு வந்து எங்களை வரவேற்றுச் சென்றனர். நேரத்துக்கு அவர்கள் கொடுக்கும் மதிப்பை ஒரு புறமும் - எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்யவேண்டும் என்பதை மறுபுறமும் அவதானிக்க முடிந்தது.

கைத்தொலைபேசி, தொலைபேசி தொலைக் காட்சி ஆகியவற்றை ஆசிரியர்கள் மாணவர்கள் பயன்படுத்தும்போதும் ஒழுங்கைக் கடைப் பிடிப்பதால் கல்வியின் இலக்கை அடைகி றார்களே தவிர வழிதவறிச் செல்லாமல் ஆசிரியர்களும் பெற்றோரும் கண்காணித்துக் கொள்கிறார்கள்.

இன்று கல்வித்துறையில் கணினி மூலம் படிப்பதும் படிப்பிப்பதும் சுலபம் என்பதுடன் கணினி மூலக் கல்வி மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கிறது., படங்கள் - வரை படங்கள் எல்லாவற்றையும் எளிதாகப் பெற முடிகிறது குறிப்புகள் எழுதலில் எளிதாக திருத்தங்கள் செய்யவும் பிரதிகள் எடுத்தல், அடிக்குறிப்பிடல், எழுத்துருவை மாற்றுதல், எழுத்தின் அளவைக் கூட்டிக் குறைதல் எல்லாமே எளிதாகிறது.

படிக்கும்போதுகூட எழுத்துக்களை அல்லது உருவங்களை பெருப்பித்து தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது., எனவே கற்றல் கற்பித்தலில் கணினி முக்கிய இடம் பெறுகிறது.

பரீட்சை என்பது குறிக்கப்பட்ட நேரத்தில் சரியான விடைகளை சமர்ப்பிக்க எடுக்கும் முயற்சியாகும். எவ்வளவு விரைவாக வினாக்களை தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறதோ - கொடுக்கப்பட்ட நேரத்துக்குள் ஆக்கபூர்வமாக விடை அளிக்க முடிகிறதோ அவை இரண்டிலுமே பரீட்சைப் வெற்றி பெரும்பாலும் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிப் பரீட்சைக்கு முன்பாக பரீட்சைப் பயிற்சிகளை வார இறுதி, மாத இறுதி, இடைக்கால தவணை என ஓர் ஒழுங்கில் அமைத்துக் கொண்டால் மாணவர்களுக்கு வினாத்தேர்வும் - விடையளிப்பதும் எளிதாக இருக்கும்.

கடந்தகால வினாப் பத்திரங்களை வழங்கியோ அல்லது முன்னோடி வினாத் தாள்களை வழங்கியோ எவற்றை எப்படி எழுதினால் அதிக புள்ளிளகள் பெறலாம் என்று அறிவூட்டினால் பரீட்சை பழக்கப்பட்ட ஒரு விடயமாகிவிட - இறுதிப் பரீட்சையிலும் மாணவருக்குப் பயம் இருக்காது.

தேவையான விபரங்களை எழுதவும், பிரதானமாக பெரிய வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு முன் முக்கியமான குறிப்புக்களை (..............) முதலில் எழுதியபிறகு விளக்கமாக விபரிக்கவும் தெரிந்து கொள்வார்கள். அத்துடன் பயின்ற விடயங்களின் எண்ணங்களை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தவும் பழகிக் கொள்வார்கள்.

பரீட்சைக் கால நேர அட்டவணையை நன்கு விளங்கிக் கொண்டு அதற்கேற்ப பாடங்களை மீட்டுப் பார்ப்பது நல்லது.

எதிர்வரும் திங்கள்கிழமை எழுதவிருக்கும் பாடத்தை வியாழக்கிழமை படிக்காமல் அதனை சனி, ஞாயிறு படிக்க ஒதுக்கி வைக்கலாம். வியாழக்கிழமையன்று அடுத்த நாள் வெள்ளிக்கிழமை எழுதவிருக்கும் பாடத்தை நன்கு படிக்கலாம்.

தொடர்ந்து சில நாட்களுக்கு சோதனை நடை பெறுகையில் அச் சோதனை முழுமையாக முடியும் வரை மற்ற மாணவருடன் முடிந்த பாடங்களைப் பற்றி கதைக்காதிருப்பதும் நல்லது. சில வேளைகளில் முடிந்த பாடங்களைப் பற்றி கதைத்தால் அது எழுத விருக்கும் பாடங்களைக் குழப்பிவிடும்.

விடைத்தாள்களில் தெளிவான கையெழுத்து, பக்கங்களுக்கு இலக்கம் இடுதல், ஒவ்வொரு விடைத்தாளிலும் சுட்டிலக்கம் எழுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்து வதோடு வேலைத்தாள் உட்பட விடைத்தாள்கள் எல்லாவற்றையும் பக்க ஒழுங்கில் அடுக்கி நூலால் நன்றாகக் கட்டிக் கையளிக்கவும் மறக்கக் கூடாது.

தேசிய அடையாள அட்டை உட்பட, பரீட்சை எழுதும் பேனா முதல் பரீட்சைக்கு அணியும் ஆடை வரை எல்லா பொருட்களையும் முன்கூட்டியே ஆயத்தம் செய்தல் நன்று.

பரீட்சை மண்டபத்துக்குச் சென்றதும் மண்டபத்தில் அமர்ந்து எழுதவிருக்கும் மேசை கதிரை ஆகியன எழுத்தோட்டத்தை தடை செய்யாது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அருச்சுனனுக்கு வில்வித்தை பழக்கிய துரோணர் ஒரு மரத்திலுள்ள பழத்தை குறி வைத்து அம்பால் எய்து பழத்தை விழத்த வேண்டும் என்று சொல்லி விட்டு, மரம் தெரியுதா என்று கேட்க அருச்சுனன் இல்லை என்றான்., கிளைகளும் இலைகளும் தெரியுதா என்று கேட்கவும் இல்லை என்றானாம்., பழம் தெரியுதா என்று கேட்க "ஓ தெரிகிறது என்று சொல்லிக் கொண்டு அம்பை எய்ய பழம் விழுந்ததாம்.

பரீட்சையில் நன்றாக எழுதி அதிக புள்ளிகள் பெறுவதும் - அதன் பெறுபேறாக சிறந்த தொழில் பெறுவதும் தான் இலக்காக இருக்க வேண்டும். அந்த இலக்கை நோக்கியே பயணிக்க வேண்டும்.

**3**

| | | | |
|---|---|---|---|
| முக்கனி | - மா, பலா, வாழை | மும்மலங்கள் | - ஆணவம், கன்மம், மாயை |
| முத்தமிழ் | - இயல், இசை, நாடகம் | மும்மூர்த்திகள் | - சிவன், பிரம்மா, விஷ்ணு |
| முத்தொழில் | - படைத்தல், காத்தல், அழித்தல் | முக்குற்றங்கள் | - காமம், வெகுளி, மயக்கம் |
| முப்பொறி | - மனம், வாக்கு, காயம் | முக்கடுகம் | - சுக்கு, மிளகு, திப்பிலி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழரும் உள்ளூராட்சி தேர்தல் முறை மாற்றங்களும்



மாண்புமிகு பி. பி. தேவராஜ்
முன்னாள் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர்

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டு புதுத் தேர்தல்கள் நடக்க உள்ளன. இந்த தேர்தல் உள்ளூராட்சி மன்றத்திற்கு புதிதாக நிறைவேற்றப்பட்ட வட்டார அடிப்படையிலான தேர்தல் முறை மூலம் தான் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் வட்டார முறை பற்றி விமர்சனங்கள் உள்ளபோதிலும் வரப்போகும் தேர்தல் புதிய அடிப்படையில் தான் நடைபெறும் என்று நம்பலாம். எனவே இது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

தகுந்த பிரதிநித்துவத்தை உறுதி செய்து கொள்ள முதலாவதாக இந்திய வம்சாவளி தமிழர்களின் அடையாளத்தை தெளிவுபடுத்திக் கொள்ள வேணடியுள்ளது.

இலங்கை வாழ் தமிழர்களை இலங்கைத் தமிழர் என்றும், இந்தியத் தமிழர் என்றும் குடிசன, புள்ளி விபரத் தொகை மதிப்பீட்டாளர் வகைப்படுத்துகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக வடகிழக்கைச் சார்ந்த தமிழ் மாவட்டங்களில் தமது பூர்வீகத்தை நிரூபிக்கக் கூடிய தமிழர், இலங்கைத் தமிழர் என வகைப்படுத்தப்பட்டனர். அவ்விதம் நிரூபிக்க முடியாதவர்கள், இந்தியத் தமிழர் என அழைக்கப்பட்டனர். 1911ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வகைப்படுத்தல் முறை வழக்கிலிருந்து வருகின்றது.

இந்தியத் தமிழர் என்று குடிசன மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், நடைமுறையில் இந்திய வம்சாவளித் தமிழர் 'மலையகத் தமிழர்' என்ற பதங்கள் இப்பொழுது பயன்படுத்தப்படுகின்றன. பிரித்தானியர் இந்த நாடு முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததும், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முதல் கூற்றிலும் தமிழ் நாட்டிலிருந்து வந்த மக்கள் பெருந்தொகையாக மலைப்பிரதேசம் சார்ந்த தோட்டங்களில் தொழில்புரிந்ததால் மலையகப் பெயர் இயல்பாகவே வழக்கில் வந்திருக்கிறது. ஆனால், 'மலையகத் தமிழர்' என்ற சொற்பதத்திற்குள் மலையகத்தைச் சாராத பலர் உள்ளனர். நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்கள், சிறு சிறு காணிகளை உரிமையாக்கி சொந்த நிலத்தில் வாழும் தமிழர்களும் மற்றும் பல்வேறு துறைகளில் தொழில் புரிபவரும் அடங்குவர். 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு குடியேறியவரில் சந்ததியினர் அனைவருமே இந்த வரையறையில் அடங்குவர். இந்திய வம்சாவளி தமிழர் என்ற பதம் இவர்களை குறிக்க பொருத்தமாக இருந்த போதிலும், மலையகத் தமிழர் என்று கூறுவது வழக்கிலுள்ளது என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

வட கிழக்கு மாகாணத்தொடர்பை நிரூபிக்க முடியாத, அதே வேளையில், மலையகத் தமிழ் பின்னணியைச் சாராத ஒரு தமிழ் பிரிவினர் புத்தளம், சிலாபம் போன்ற பிரதேசங்களில் வாழுகின்றனர். உதாரணமாக உடப்பு கிராமத்தில் வாழும் தமிழர் பிரிட்டிஷ் ஆட்சிக்கு சற்று முன்னதாக தமிழ் நாட்டில் இருந்து இங்கு வந்து குடியேறியவராவர். அவர்களின் சமூக பழக்க வழக்கங்கள் தமிழ் நாட்டுத் தொடர்பை வலியுறுத்துகின்றன. இவர்கள் தங்களை இந்திய வம்சாவளித் தமிழர்களாகவே கருதுகின்றனர்.

இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் நிறை வேற்றப்பட்டதும், 1948 ஆம் ஆண்டிற்கு முன் பிறந்தவர்கள் தம் தகப்பனார் இலங்கையில் பிறந்தவர் என்பதை நிரூபித்தால், அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வம்சாவளிப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். அதன் பிறகு நிறை வேற்றப்பட்ட இலங்கை இந்திய-பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ் பதிவுப் பிரஜை களாகியவர்களும் இலங்கைப் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டனர். இந்த காலகட்டத்தில் நடைபெற்ற குடிசன மதிப்பெடுப்பின் போது மேற்கூறியவர்களில் பலர் தங்களை இலங்கைத் தமிழர் எனக் கூறியபோது மதிப்பீட்டு அதிகாரிகள் அதனை ஏற்று அவர்களை இலங்கைத் தமிழர் என்ற பிரிவில் சேர்த்துக் கொண்டனர்.

இதே நிலை ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தச் செயற்பாட்டுச் சட்டங்களின் மூலமும், அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்களின் மூலமும் இலங்கைப் பிரஜைகளாகியவர்களுக்கும் ஏற்பட்டது. அவர்களில் பலர் இலங்கைத் தமிழர்களென பதிவு செய்யப்பட்டனர். இவ்விதமாக இலங்கைத் தமிழர்களாகப் பதிவு செய்யப்பட்ட குடிசன மதிப்பீட்டின் இந்தியத் தமிழரின் சதவீதம் 5.6 எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், அந்த அறிக்கையில் தரப்பட்டிருக்கும் குறிப்பில் இந்தியத் தமிழர் பிரிவைச் சேர்ந்த பலர் குடிசன மதிப்பீட்டாளரிடம் தம்மை இலங்கைத் தமிழர் எனக் கூறியிருப்பதால், இதனையும் கணக்கில் கொள்ளும் பொழுது இந்தியத் தமிழர் என்ற பிரிவிலடங்குபவர்கள் 7 சதவீதமாக இருக்க வேண்டும் என்று தொகை மதிப்பீட்டுத் திணைக்கள இயக்குநர் கருத்து தெரிவித்திருக்கின்றார். சில ஆய்வாளர்கள் இது 7.5 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கலாம் என மதிப்பிடுகின்றனர். இந்தக் கணிப்பீடுகளில் புத்தளம் பிரதேச தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இதுவரை சுட்டிக்காட்டிய பிரகாரம் இலங்கைத் தமிழரும், இந்தியத் தமிழரும், புள்ளி விபரக் கணக்கில் பின்னிப் பிணைந்து சிக்கலாயிருப்பதை நாம் உணர முடியும். மலையகத் தமிழர் பெரும்பான்மையாக வதியும் மாவட்டங்களில் இந்த நிலை இருப்பதை மனதிற் கொண்டே ஆய்வுகளையும் மதிப்பீடுகளையும் செய்தல் வேண்டும். இப்பிரதேசங்களில் வாழும் வட கிழக்கைப் பூர்வீகமாகக்கொண்ட இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகையாலும் அவர்கள் மலையகத் தமிழர்களோடு ஒத்துப்போவதாலும் புள்ளி விபரக் கணக்கில் மலையகத்தைப் பொறுத்த வரையில் அவர்களையும் மலையகத் தமிழர் களுடன் சேர்த்து தமிழர்கள் என்று கணக்கீடு செய்து கொள்வது தவறாகாது. "இலங்கைத்தமிழர்", "இந்தியத்தமிழர்" எனக் குறிப்பிட்டிருக்கும் இரு தொகையினரையும் சேர்த்து ஒரு குழுவாகவே நோக்கவேண்டும்.

கிராம சேவகர் பிரிவுகள், பிரதேசச் செயலகங்கள் மத்திய ஊவா, சப்பிரகமுவ, மேல், வடமேல் மாகாணங்களில் எவ்வாறு அமைந்துள்ள தென்பதை ஆராய்வோம். கிராம சேவகர் பிரிவுகளை எடுத்துக்கொண்டால், ஒரு கிராம சேவகர் சேவை செய்ய வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கையில் மிகுந்த வேறுபாடு காணப்படுகின்றது. மாவட்டங்களுக்கிடையில் மாத்திரமல்லாது கிராம சேவகர் சேவையின் அளவும் பெரிதும் வித்தியாசப்படுகின்றது. உதாரணமாக. நுவரெலியா மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், நுவரெலியா பிரதேசச் செயலகப் பிரிவில் 45,200 குடும்பங்களுக்கு 46 கிராம சேவகர்களே உள்ளனர். அதாவது 980 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர். ஆனால், அதே மாவட்டத்திலுள்ள அங்குராங்கெட்டையில் 19,790 குடும்பங்களுக்கு 128 கிராம சேவகர்கள் இருக்கின்றனர். அதாவது 155 குடும்பங்களுக்கு 1 கிராம சேவகர். அப்பேகமுவையில் வாழும் 45.625 குடும்பங்களுக்கு 48 கிராம சேவகர்களே கடமை யாற்றுகின்றனர். அதாவது 954 குடும்பங்களுக்கு 1 கிராம சேவகர். இதே போன்று அதே மாவட்டத்திலுள்ள வலப்பனையில் 23,925 குடும்பங்களுக்கு 117 கிராம சேவகர்கள் உள்ளனர். அதாவது 23 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர்.

கொத்மலை பிரதேச செயலகப் பகுதியில் 22,644 குடும்பங்களுக்கு 88 கிராம சேகவர். அதாவது 756 குடும்பங்களுக்கு 1 கிராம சேவகர். மலையகத் தமிழர் செறிவாக வாழும் பிரதேசங்களிலேயே இந்த நிலையுள்ளது. இதே நிலை மலையக மக்கள் செறிந்து வாழும் மற்ற மாவட்டங்களிலும் நிலவுவதை உன்னிப்பாக நோக்கும் பொழுது தெரிய வருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு நகரைக் கவனிக்கும்பொழுது கொழும்பு செயலகப் பிரிவில் 89,056 குடும்பங்களுக்கு 55 கிராம சேவகர் கடமை யாற்றுகின்றனர். அதாவது ஒரு கிராமசேவகர் 1,620 குடும்பங்களுக்கு சேவையாற்றுகிறார். இதே மாவட்டத்திலுள்ள கெஸ்பாவை செயலகத்தில் 33,167 குடும்பங்களுக்கு 73 கிராம சேவகர்கள் கடமையாற்றுகின்றனர். அதாவது 450 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் கடமை புரிகின்றார். கணிசமான அளவிற்கு தமிழ் மக்கள் வாழும் கொழும்பு நகர் பிரதேசத்தில், தமிழ் கிராம சேவகர் இல்லையென்று கூறுமளவிற்கு குறைவாக இருப்பதோடு, கிராம சேவகர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக உள்ளது.

தற்பொழுதுள்ள கிராம சேவகர் பிரிவுகளின் எல்லைகளில் சில மாற்றங்கள் செய்து, தோட்டங்களில் வாழும் 350 முதல் 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு என்ற அடிப்படையில் மேலதிகமாக கிராம சேவகர் பிரிவுகளை உருவாக்க முடியும். இதனைச் செய்வதில் அவ்வளவு சங்கடம் ஏற்படாது. ஏனெனில், தோட்டங்களின் எல்லைகள் தெளிவாக இருப்பதால் சிரமம் ஏற்படாத வகையில் பேசி முடிவு செய்து கொள்ளலாம்.

மத்திய அரசின் நிர்வாக அமைப்பில் கிராம சேவகர் பிரிவுகள் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. அடிமட்ட மக்களுக்கு கிராம சேவகர்கள் மூலமாகத்தான் பல சேவைகள் கிடைக்கின்றன. ஒரு பிரதேச செயலாளர் பிரிவு பல கிராம பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. ஒரு மாவட்ட செயலாளரின் நிர்வாகத்தின் கீழ்த்தான் பிரதேச செயலகங்கள் இயங்குகின்றன.

இப்பொழுது நாடற்றவர் நிலை அகற்றப் பட்டு, இந்திய வம்சாவளித் தமிழர் சகல உரிமைகளையும் அனுபவிக்கும் நிலையில் உள்ளனர். நிர்வாகத் தேவைக்காக நிர்வாக செயலக எல்லைகளை வகுத்தல், புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது இந்த மாற்றத்தையும் மனதில் கொண்டு செயல்படல் அவசியம். குறிப்பாக சொல்லப்போனால் புதிய கிராம சேவகர் பிரிவுகளின் எல்லைகள் மாற்றம் செய்வது அவசியமாகும். புதிய உள்ளூராட்சி சட்டத்தின்படி வட்டார அடிப்படையில் தேர்தல் நடத்த ஏற்பாடு ஆகியுள்ளது. வட்டாரங்கள் கிராம சேவகர் பிரிவு ஒன்றையோ அல்லது இரண்டையோ இணைத்துத்தான் உருவாக உள்ளது. எனவே, இதில் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் மலையக மக்களுக்கு உண்டு.

**மத்திய மாகாணம்**

மத்திய மாகாணத்தில் 3 மாவட்டங்கள் உள்ளன. மாவட்ட ரீதியாக மக்கள் தொகை விபரம் கொடுக்கப்பட்டுள்ளது.

| *மாவட்டம்* | *மக்கள் தொகை* | *தமிழர்கள் தொகை* | *சதவிகிதம்* | *முஸ்லீம்கள்* | *சதவிகிதம் உட்பட தமிழ் பேசுவோர்* |
|---|---|---|---|---|---|
| கண்டி | 13,69,899 | 1,54,874 | 11 | 3,46,033 | 25 |
| மாத்தளை | 4,82,229 | 45,156 | 10 | 92,269 | 19 |
| நுவரெலியா | 7,06.588 | 4,07.662 | 58 | 4,25,084 | 60 |
| **மாகாண மக்கள் தொகை** | **25,58,716** | **6,07,692** | | **8,63,386** | |

**கண்டி மாவட்டம்** : பிரதேச செயலகப் பிரிவுகள் 20 - மக்கள்தொகை விகிதாசாரம் 11.

இவற்றுள் 3 பிரதேச செயலகப் பிரிவுகள் 35 சதவீதத்திற்கு அதிகமாகவும், 6 பிரதேச செயலகப் பிரிவுகள் 20 சதவிகிதத்திற்கு அதிகமாகவும் உள்ளனர். ஒட்டுமொத்தமாக பார்த்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 பிரதேச செயலகப் பிரிவுகள் 12.5 சதவீதத்திற்கு அதிகமாகவும் இவற்றுள் ஒரு பிரதேச சபை (பன்வில) 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் தமிழர்கள் உள்ளனர்.

**மாத்தளை மாவட்டம் :** பிரதேச செயலகப் பிரிவுகள் 11- தமிழ் மக்கள் தொகை விகிதாசாரம் 10.

இவற்றுள் தமிழர்கள் ரத்தோட்டை 24 வீதம், அம்பகங்க கோரளை 24 வீதம், மாத்தளை 19 வீதம், உக்குவளை 15 வீதம்

**நுவரெலியா மாவட்டம்:** பிரதேச செயலகப் பிரிவுகள் 05- தமிழ் மக்கள் தொகை விகிதாசாரம் 57. இவற்றுள் தமிழர்கள் கொத்மலை 40 வீதம், ஹங்குரன்கெத்த 14 வீதம், வலப்பனை 36 வீதம், நுவரெலியா 77 வீதம், அம்பகமுவ 76 வீதம்.

**ஊவா மாகாணத்தில் 2 மாவட்டங்கள் உள்ளன.**

| *மாவட்டம்* | *மக்கள்* | *தமிழர்கள் தொகை* | *சதவிகிதம் தொகை* | *முஸ்லீம்கள்* | *சதவிகிதம் உட்பட தமிழ் பேசுவோர்* |
|---|---|---|---|---|---|
| பதுளை | 8,11,758 | 1,69,997 | 21 | 2,15,883 | 26 |
| மொனராகலை | 4,48,142 | 14,373 | 3 | 23,925 | 5 |
| **மாகாண மக்கள் தொகை** | **12,59,900** | **1,84,370** | | **2,39,808** | |

**பதுளை :** இவற்றுள் தமிழர்கள் சொரணதோட்டை 18 வீதம், பஸறை 39 வீதம், லுணுகலை 55 வீதம், பதுளை 20 வீதம், ஹாலிஎலை 20 வீதம், அப்புத்தளை 40 வீதம், ஹல்துமுல்லை 46 வீதம்.

**மொனராகலை :** இவற்றுள் தமிழர்கள் (மொனராகலை) பிரதேச செயலயகப் பிரிவில் 15 வீதம்

**சப்ரகமுவ மாகாணத்தில் 2 மாவட்டங்கள் உள்ளன.**

| *மாவட்டம்* | *மக்கள்* | *தமிழர்கள் தொகை பேசுவோர்* | *சதவிகிதம் தொகை* | *முஸ்லீம்கள்* | *சதவிகிதம் உட்பட தமிழ்* |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 10,82,277 | 1,17,253 | 11 | 1,38,803 | 13 |
| கேகாலை | 8,36,603 | 61,718 | 7 | 1,19,670 | 14 |
| **மாகாண மக்கள் தொகை** | **16,57,967** | **1,78,971** | | **2.58,473** | |

**இரத்தினபுரி மாவட்டம்:** பிரதே்ச செயலகப் பிரிவுகள் 17. தமிழ் மக்கள்தொகை விகிதாசாரம் 11.

இவற்றுள் தமிழர்கள் இரத்தினபுரி 16 வீதம், இம்புல்பே 14 வீதம், பலாங்கொடை 14 வீதம், பெல்மதுள்ளை 14 வீதம், அயகம 14 வீதம், கலவான 15 வீதம், நிவித்திகல 17 வீதம், கஹவத்த 21 வீதம் கொட்டகாவலை 19 வீதம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேகாலை மாவட்டம்:** பிரதேச செயலகப் பிரிவுகள் 11. தமிழ் மக்கள் தொகை விகிதாசாரம் 08

இவற்றுள் தமிழர்கள் புலத்கொபிட்டிய 17 வீதம், யட்டியாந்தோட்டை 22 வீதம், தெஹியோவிட்ட 16 வீதம், தெரனியகலை 22 வீதம்.

**மேல்மாகாணத்தில் 3 மாவட்டங்கள் உள்ளன.**

| *மாவட்டம்* | *மக்கள்* | *தமிழர்கள் தொகை* | *சதவிகிதம் தொகை பேசுவோர்* | *முஸ்லீம்கள்* | *சதவிகிதம் உட்பட தமிழ்* |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 23,09,809 | 2,58,654 | 11 | 5,01,382 | 22 |
| கம்பஹா | 20,79,115 | 90,950 | 4 | 1,86,456 | 8 |
| களுத்துறை | 1,27,260 | 57,973 | 4 | 1,60,249 | 13 |
| **மாகாண மக்கள் தொகை** | **49,05,425** | **3,97,577** | | **8,48.082** | |

**கொழும்பு :** இவற்றுள் தமிழர்கள் கொழும்பு 33, திம்பிரிகஸ்யாய 29 வீதம், தெஹிவலை 16 வீதம்

**கம்பஹா :** இவற்றுள் தமிழர்கள் வத்தளை 21 வீதம், நீர்கொழும்பு 10 வீதம், தமிழ் பேசுபவர்களை எடுத்துக்கொண்டால் வத்தளை 27 வீதம், நீர்கொழும்பு 23 வீதம், களனி 13 வீதம்.

**களுத்துறை :** இவற்றுள் தமிழர்கள் இங்கிரிய 10 வீதம், புலத்சிங்கள 12 வீதம், தொடங்கொடை 11 வீதம்

**களுத்துறை மாவட்டம்** பிரதேச செயலகப் பிரிவுகள் - தமிழ் மக்கள் தொகை விகிதாசாரம் 04

**தென் மாகாணத்தில் 3 மாவட்டங்கள் உள்ளன.**

| *மாவட்டம்* | *மக்கள்* | *தமிழர்கள் தொகை* | *சதவிகிதம் தொகை பேசுவோர்* | *முஸ்லீம்கள்* | *சதவிகிதம் உட்பட தமிழ்* |
|---|---|---|---|---|---|
| காலி | 10,58,771 | 20,869 | 2 | 59,460 | 6 |
| மாத்தறை | 8,09,344 | 20,546 | 3 | 45,846 | 6 |
| அம்பாந்தோட்டை | 5,96,617 | 2,247 | 0 | 8,803 | 0 |
| **மாகாண மக்கள் தொகை** | **23,40,693** | **43,662** | | **1,14,109** | |

**காலி :** இவற்றுள் தமிழ் பேசுபவர்கள் காலி 33 வீதம்

**மாத்தறை :** இவற்றுள் தமிழர்கள் 18 வீதம் தமிழ் பேசுபவர்கள் கோட்டப்பொல 31 வீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேல் மாகாணத்தில் 3 மாவட்டங்கள் உள்ளன.

| மாவட்டம் | மக்கள் | தமிழர்கள் தொகை | சதவிகிதம் தொகை | முஸ்லீம்கள் | சதவிகிதம் உட்படதமிழ் பேசுவோர் |
|---|---|---|---|---|---|
| குருநாகலை | 14,71,339 | 22,345 | 1 | 1,35,905 | 8 |
| புத்தளம் | 5,59,031 | 50,026 | 7 | 1,96,846 | 26 |
| **மாகாண மக்கள் தொகை** | **20,30,370** | **72,371** | | **3,32,751** | |


**குருநாகல் :** தமிழ் பேசுபவர்கள் ரஸ்னயகபுர 10 வீதம், கொபய்கான 11 வீதம், பண்டுஸ்நுவர 14 வீதம், குருநாகல் 15 வீதம், மடவலபிட்டிய 16 வீதம், மாவத்தகம 17 வீதம் ரிதீகம 14 வீதம், கிழக்கு குளியாப்பிட்டி 32 வீதம், உடுப்தாவ 11 வீதம், பொல்கஹவலை 12 வீதம்

உள்ளூராட்சி தேர்தல்கள் புதிய சட்டத்தின் அடிப்படையில் வரவுள்ளதால் மலையக தமிழ் அமைப்புக்கள் இது பற்றி விரிவாக ஆராய்ந்து எல்லைகள் மீள்நிர்ணயம் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.


பாராளுமன்றத் தேர்தலை பொறுத்தவரையில் தொகுதிவாரி தேர்தலை விட 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார தேர்தலின் மூலம் மலையக மக்களுக்கு சற்று கூடுதலான பிரதிநிதித்துவம் கிடைத்தது என்ற போதிலும் 1989 ஆம் 90 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்ற தேர்தலிலே நுவரெலியாவைத் தவிர வேறு இடங்களில் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போய்விட்டது. இத்தகைய ஒரு நிலை சமூகத்தை பிளவுபடுத்துவதற்கு ஏதுவாக அமைகிறது. எனவே, எந்த புதிய தேர்தல் முறையையும் நாம் கவனமாக ஆராய வேண்டும். கலப்பு தேர்தல் முறையின் மூலம் அனுகூலங்கள் கிடைக்கும் வகையில் செயற்பட முடியுமா என்பது பற்றி சிந்திப்பது அவசியமாகும்.

## தமிழ் மொழிக்கு ஏற்ப விசைப்பலகையை பாவித்தல்...

விசைப்பலகையில் ALT பொத்தானை அழுத்தியவாறு Shift ஐ அழுத்தினால் மொழியை மாற்ற முடியும்.




Standard Tamil Computer Keyboard Layout








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளி தமிழர் - பின்னணியும் சவால்களும் ஒரு மதிப்பீடு



**யசோதரா கதிர்காமத்தம்பி**

சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக் கழகம்

## அறிமுகம்

இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி பல கட்டுரைகள், கட்டுரைத் தொகுதிகள் மற்றும் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை, இலங்கையில் மலையக மக்கள் எதிர் நோக்கு கின்ற பிரச்சினைகளை பொதுவாக எடுத்துக் கூறுகின்றன. ஆனால், சற்று வித்தியாசமாக திரு. பி. பி. தேவராஜ் அவர்களினால் எழுதப் பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூல் இந்திய வம்சாவளி மக்களின் இடம் பெயர்வு, அவர்களுடைய அடையாளம், அரசியல் அந்தஸ்து மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றை கோட்பாட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் கோட்பாட்டு ரீதியான பகுப்பாய்வு 18, 19ம் நூற்றாண்டில் ஏற்பட்ட உலகளாவிய ரீதியிலான மனித இடம்பெயர்வு, மனித இடம்பெயர்வினால் நாடுகளில் ஏற்பட்ட இனத்துவ அமைப்புக்களின் மாற்றம், காலணித்துவ ஆட்சி யாளர்களினால் காலணித்துவ நாடுகளின் மீது உருவாக்கப்பட்ட கொள்கைகள், இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பு மற்றும் பின்பு இருந்த ஆட்சியாளர்களின் அணுகு முறை, இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகள் மீது இந்தியா காட்டிய அக்கறை மற்றும் இறுதியாக உலக மயமாக்கல் என்ற அம்சத்திற்குள் இந்திய வம்சாவளி தமிழரின் அடையாளம் என்பவற்றுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நூலாசிரியர் இந்திய வம்சாவளி மக்களின் இலங்கைக்கான வருகையை ஒரு தனிப்பட்ட சம்பவமல்ல எனவும், உலகில் ஏற்பட்ட மாற்றங்களுடன் அவர்களின் பிரச்சினைகளை எவ்வகையில் அணுகலாம் என்பதைப்பற்றியும் விபரித்துள்ளார்.

முன்னொருபோதும் இல்லாத வகையில் 18ம் மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் மக்கள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு இடம் பெயர்ந்தனர். இக்காலப்பகுதியில் ஐரோப்பா காலணித்துவ நாடுகளை தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தது. ஐரோப்பா தனது ஆட்சியை இந்நாடுகளில் வலுவாக்கியதுடன், வர்த்தக உறவுகளை விஸ்தரிக்கவும் செல்வத்தை பெருக்குவதற்கும் புதிய உத்திகளைக் கையாண்டன.

இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் தேயிலை, இறப்பர் மற்றும் கோப்பி முதலான தோட்டங்களில் வேலை செய்வதற்காக கொண்டு வரப்பட்டனர். இது கங்காணி முறையின்கீழ் அமுல் படுத்தப்பட்டது. தேயிலை வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சி தொழிலாளர்களை நிரந்தரமாக இலங்கையில் வைத்துக் கொள் வதற்கான தேவையை ஏற்படுத்தியது. இதனால் தொழிலாளர்கள் தமது குடும்பங்களை இலங்கைக்கு வரவழைத்து நிரந்தர குடியேற்ற வாசிகளாக தமது அந்தஸ்தை நிலைப்படுத்திக் கொண்டனர்.

இத்தகைய நிரந்தர குடியேற்ற வாசிகளாக இருந்த இந்திய வம்சாவளி மக்கள், இலங்கையின் இனத்துவ அமைப்பின் மாற்றத்தை ஏற்படுத்தி இலங்கையில் இருந்த பிரதான இனப்பிரிவுகளில் ஒன்றாக தம்மை "இந்திய வம்சாவளி தமிழர்" என்ற பிரத்தியேக அடையாளத்தை பெற்றுக்கொண்டனர். இது, இலங்கையில் இருந்த இனத்துவ அமைப்பில் ஒரு புதிய கூறாக அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிரியர் இந்திய வம்சாவளி தமிழர் என்ற இனப்பிரிவினரின் அரசியல் அந்தஸ்து படிப் படியாக கண்ட முன்னேற்றங்களையும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் அச்சமூகம் இழந்த அரசியல் அந்தஸ்தையும் மிகவும் நுணுக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார். இதற்கு ஆதாரமாக, காலனித்துவ ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்திய அரசியல் சீர்திருத்தங்களையும் சுதந்திரத்திற்குப் பின் ஆட்சியாளர்கள் திட்டமிட்டு இந்திய வம்சாவளி மக்களை அரசியல் அந்தஸ்த்திலிருந்து விலக்கி வைத்தமையையும் இறுதியாக இந்திய வம்சாவளி மக்கள் பெற்றுக்கொண்ட அரசியல் அந்தஸ்தையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றிலிருந்து நாம் சிந்திக்க வேண்டிய மிக முக்கியமான கட்டங்களை நான் கீழே எடுத்துக் காட்டியுள்ளேன்.

**காலனித்துவ ஆட்சியாளர்கள் அறிமுகப் படுத்திய அரசியல் சீர்திருத்தங்கள்**

பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையில் நிர்வாக ரீதியாக மாற்றங்களை மாத்திரமன்றி, ஜனநாயக ரீதியில் உள்நாட்டு மக்களையும் நிர்வாகத்தில் இணைத்துக்கொள்வதற்கான கட்டாயம் ஒன்றை ஏற்படுத்தியது. மேலும், காலனித்துவ ஆட்சிக்கு எதிராக எழுந்த இந்தியாவின் சுதந்திர போராட்டமும் ஆங்கில ஆட்சியாளர்களை அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு கட்டாயப்படுத்தியது ஒரு காரணியாகும் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

* 1833 - நிர்வாகத்தில் அனைத்து சமூகங்களும் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், அது சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை.
* 1906 - இலங்கையில் கல்வியில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டபோதும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இது எட்ட வில்லை.
* 1910 - மக்கலம் சீர்திருத்தம், தேர்தல் மூலம் உத்தியோக பற்றற்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். எனினும் அங்கு இந்திய வம்சாவளியினர் இடம் பெறவில்லை.
* 1919 - 1920 - 16 நிர்வாகத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. முதல் முறையாக இந்திய வம்சாவளித் தமிழரின் வர்த்தக சமூகம் ஒரு தொகுதியாக இடம்பெற்றது.
* 1923 - மனிங் சீர்திருத்தம், முதன் முறையாக இரண்டு இந்திய வம்சாவளித் தமிழரின் பிரதிநிதித்துவம் உருவாக்கப்பட்டது.
* 1920-30 இடைப்பட்ட காலத்தில் சேர் வில்லியம் மானிங் ஒரு முக்கியமான கருத்தைக்குறிப்பிட்டுள்ளார். அதாவது பல்லினத்துவ நாடொன்றில் அறிமுகப் படுத்தப்படும் தேர்தல் முறை எல்லா பிரிவினருக்கும் நியாயமாக அமைதல் வேண்டும் என்பதாகும். இவர் எடுத்துக்காட்டிய கருத்து இன்றும்கூட வலிதானதாகும். புதிய அரசாங்கத்தின் கீழ் அறிமுகப்பட இருக்கின்ற தேர்தல் முறை எந்த ஒரு சமூகத்தையும் பாதிக்காது ஒப்புரவு அடிப்படையில் அமைதல் வேண்டும்.
* 1927ம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் - 21 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வாக்களிக்கத் தகுதி உடையவர்கள்.
* வாக்காளர் பதிவு - வாக்காளர் பதிவு, விதிக்கப்பட்ட கடுமையான நிபந்தனைகள் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளைப் பாதித்தது.
* சுதந்திரத்திற்குப் பின்னரான வாக்குரிமை - 1948ம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டத்தின் பின்பு இந்திய வம்சாவளியினர் முற்றாக வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டனர்.
* 1952-1977ஆம் ஆண்டு - இந்தியாவுடன் பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும் பிரஜாவுரிமை பற்றிய பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இதனால் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் எமது சமூகத்திற்கு அரசியல் பிரதிநித்துவம் கிடைக்கவில்லை.
* 1977 க்குப் பின்பு - விகிதாசார பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமை இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு நல்ல சந்தரப்பத்தை ஏற்படுத்தியது.

இலங்கை சுதந்திரமடைந்த அதே ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகளுக்காக அனைத்துலக பிரகடனத்தை அறிமுகப்படுத்தி, எந்த ஒரு மனிதனும் பால், இனம், மதம், சமூகம், மொழி, தேசியம் போன்ற காரணங்களின் அடிப்படையில் பார பட்சமாக நடத்தப்படக்கூடாது என்பதை வலியுறுத்தியது. இலங்கை இந்த பிரகடனத்தில் கையொப்பமிட்டிருந்தது என்பது குறிப்பிடக்கூடிய விடயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அடிப்படை உரிமைகள்

நூலாசிரியர் 1947, 1972 மற்றும் 1978 ஆகிய அரசியல் அமைப்புக்களை பின்வருமாறு ஒப்பிட்டுள்ளார். 1947ம் ஆண்டு அரசியல் அமைப்பின் உறுப்புரை 29 (2) சிறு பான்மையினரின் உரிமைகளின் பாது காப்பிற்காக உருவாக்கப்பட்ட ஏற்பாடு 1972 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. மேலும் 1972 ஆம் ஆண்டு அடிப்படை உரிமைகள் அத்தியாயம் குழு உரிமைகள் அல்லாது தனி நபர்களின் உரிமைகளுக்காக உருவாக்கப்பட்டது. எனினும் இவற்றை நீதிமன்றமூடாக வலுப்படுத்த முடியாது 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு குடியியல் அரசியல் உரிமைகளை உத்தர வாதப்படுத்தியிருக்கின்றது.

### சுய நிர்ணய உரிமை

சுய நிர்ணய உரிமை ஐக்கிய நாடுகள் சபையின் பல மனித உரிமைகள் பிரகடனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக குடியியல், சிவில் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் மற்றும் பொருளாதார சமூக கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சாசனம் என்பவற்றில் இவ்வுரிமை அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இதன் பிரகாரம் அனைத்து மக்களும் பொருளாதார சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியில் எந்தவிதமான தடைகளுமின்றி சுதந்திரமாக அனுபவிக்க வேண்டுமென குறிப்பிடுகின்றது. இவ்வுரிமையை இந்திய வம்சாவளி மக்கள் எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை நூலாசிரியர் ஆழமாக ஆராய்ந்துள்ளார். அதன் சுருக்கம் பின்வருமாறு:

இலங்கையில் இரண்டு பிரதான தமிழ் பிரிவினர் உள்ளனர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள் இந்த இரண்டு குழுக்களுக்கிடையே மொழி, கலாசார மற்றும் பாரம்பரிய ஒற்றுமைகள் இருந்தாலும் அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் வேறுபட்டதாகும். இலங்கைத் தமிழர் பிரதேசம் சார் சுய நிர்ணய உரிமையையும், இந்திய வம்சாவளித் தமிழர் பிரதேசம் சாராத சுய நிர்ணய உரிமையையும் கோருகின்றனர்.

நாட்டிலுள்ள அனைவரும் தமது உரிமைகளை சமத்துவமாக அனுபவிக்க அவர்கள் பிரதேசம் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், இலங்கையின் எப்பாகத்தில் இருந்தாலும், ஒவ்வொருவருடைய உரிமையையும் பாதுகாத்துக்கொள்வதற்காக வேறுபட்ட அணுகுமுறைகளை கையாள்வது நியாயமான ஒன்றாகும்

சுதந்திரத்ததிற்கு முன்பு எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இலங்கை இரு தேசம் அதாவது சிங்கள தேசம், தமிழ் தேசம் பிரித்தானியருடைய இலங்கை வருகை இலங்கையின் இனத்துவ அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தியது என குறிப்பிட்டள்ளார். எனவே, இலங்கை இரு தேசம் எனக்குறிப்பிடுவது இன்று பொருத்தமற்றது. இலங்கைத் தமிழர்கள் ஒரு நீண்டகால வரலாறு, பாரம் பரியம் வரையறுக்கப்பட்ட நிலப்பிரதேசம்,மொழி ஆகிய அம்சங்களைக்கொண்டு பிரதேசம் சார்ந்த சுய நிர்ணய உரிமையைக் கோருவது நியாயமான கோரிக்கையாகும். அதே வேளையில், சிங்கள மக்களோடு தெற்கில் வாழ்கின்ற பிரதேசம் சாராத இந்திய வம்சாவளி தமிழர்களின் உரிமைகள் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு எவ்வகையான தீர்வு அவசியம் என்பதை ஆசிரியர் உலகளாவிய மனித இடப்பெயர்வு, இனத்துவ அமைப்பு, உரிமைகள் பாதுகாப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்த்துள்ளார். இங்கு Nations State என்பது மாற்றமடைந்து மாறாக இன்று Multi Ethnic State என்ற அமைப்பிற்கு மாற்றமடைந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

### நிர்வாக சேவையில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் பங்கு

நிர்வாக சேவைகள் மலையகத்தை முறையாக சென்றடையவில்லை. இது பல வருடங்களாக நீடித்து வருகின்றது. இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக, 2010ம் ஆண்டு பொது நிர்வாக அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவகர் பிரிவுகளின் விரிவாக்கமும் என்ற அறிக்கை தொடர்பாக இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரம்

சரியான முறையில் குடிசன மதிப்பீடு நடைபெற்றால் இந்திய வம்சாவளி மக்களின் சனத்தொகை 7.9 சதவீதம் ஆக இருக்க வேண்டும். எனினும் கடந்த குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரங்களின்படி மக்கள் தொகை 4.6 வீதமாகும். இதற்குரிய பிரதான காரணம் மலையகம் உட்பட கொழும்பு, களுத்துறை, காலி, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இந்திய வம்சாவளி மக்கள் தமது அடையாளத்தைச் சரிவர பிரகடனப்படுத்தவில்லை.

## முடிவுரை

இந்திய வம்சாவளித் தமிழர் - பின்னணியும் சவால்களும் என்ற நூல் மலையக மக்களைப் பொறுத்த வரையில் ஒரு பிரதான வளமாக பயன்படுத்தக்கூடிய ஒன்றாகும். சில விடயங்களை ஆசிரியர் ஆழமாகவும், ஒரு சில விடயங்களை மேலோட்டமாகவும் ஆராய்ந்துள்ளார். எனவே, இங்கு ஆராயப்பட்ட விடயங்களைப் பற்றிய மேலதிக ஆய்வு மற்றும் கலந்துரையாடல்கள் எதிர்காலத்தில் அவசியமாகும். கோட்பாட்டு ரீதியாக முன்வைக்கப்பட்ட விடயங்களை இந்திய வம்சாவளி மக்களின் பிரதிநிதித்துவம், நிர்வாக சேவையில் அவர்களுடைய பங்கு மற்றும் கல்வி போன்ற விடயங்களில் ஆராய்ந்து பார்த்து அரசாங்கத்துடன் நடக்கின்ற எமது சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்களில் அவற்றை முன்வைப்பது காலத்தின் தேவையாகவுள்ளது.

# கருஞ்சீரகம் தரும் நன்மைகள்

- தோல் நோய்களைக் குறைக்கும். பசியைத் தூண்டும். சீரணத்தை சீர்படுத்தும். வயிற்றுப் போக்கைக் குணப்படுத்தும். புழுக்கொல்லியாகச் செயல்படும். வாந்தியைத் தடுக்கும். இதய வலியைக் குறைக்கும். சிறுநீர்ச் சுரப்பிகளைத் தூண்டும். பாற் சுரப்பைக் கூட்டும்.
- சிறிதளவு கருஞ்சீரகத்தைப் பசும்பால் விட்டு அரைத்து முகத்தில் பூசி ஊறிய பின் கழுவி வர முகப்பரு மறையும்.
- கருஞ்சீரகத்தை நீர் விட்டு அரைத்து நல்லெண்ணையில் குழைத்து கரப்பன், சிரங்கு ஆகியவற்றில் பூசி வரக் குணம் தெரியும்.
- கருஞ்சீரகத்தை அரைத்து தேமல் மேல் பூசி வர தேமல் சிறிது சிறிதாக மாறும்.
- கருஞ்சீரகத்தை வறுத்து காடி விட்டு அரைத்து சொறி, தேமல் மேல் பூசிவர தேமல், சொறி மறையும்.
- கருஞ்சீரகத்தையும் தும்மட்டிக்காயையும் சேர்த்து அரைத்து விலாப்பக்கம் பூசி வர குடற் பூச்சிகள் வெளியேறி விடும்.
- கருஞ்சீரகப் பொடி, மல்லிப்பொடி இரண்டையும் பாலில் கலந்து சாப்பிட அஜீரணம் மாறும்.
- கருஞ்சீரகப் பொடியைத் தயிரில் கலந்து சாப்பிட அஜீரணம் மற்றும் வாயு உற்பத்தி மாறும்.
- கருஞ்சீரகத்தை எருமைப்பால் விட்டு அரைத்து முகத்தில் தடவி வர முகப்பரு மாறும்.
- கருஞ்சீரகத்தை வெற்றிலைச் சாறு விட்டு அரைத்து காது, கன்னப்பகுதியில் ஏற்படும் வீக்கம் மேல் பத்துப் போட வீக்கம் மறையும்.
- கைபிடி கீழா நெல்லி இலைகளோடு ஒரு ஸ்பூன் கருஞ்சீரகம் சேர்த்துச் சிறிதளவு பால் சேர்த்து அரைத்து பின் இதை ஒரு கப் பாலில் கலந்து காலை உணவுக்கு அரை மணிநேரம் பின் மற்றும் மாலை நேரம் பருகி வர மஞ்சட் காமாலை குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தோராம் நூற்றாண்டுக் கல்வி கற்றலும், கற்பித்தலும்


**பேராசிரியர் தை. தனராஜ்**
பீடாதிபதி - கல்விப் பீடம்
*Horizon Campus, Malabe, Sri Lanka.*




*'நாம் நேற்றுக் கற்பித்ததைப் போலவே இன்றும் கற்பிப்போமெனில் எமது சிறார்களின் எதிர்காலத்தை திருடுபவர்களாகி விடுவோம்'*

\- ஜோன் டூயி (1935- 1952

## முன்னுரை

இருபத்தோராம் நூற்றாண்டு ஓர் 'அறிவுமைய' நூற்றாண்டாக பரிணமித்துள்ளது. மனித வாழ்வியலில் முன்னர் விவசாயம், கைத்தொழில் ஆகியவை கொண்டிருந்த முக்கியத்துவத்தை தளர்த்தி அவற்றின் இடத்தை இன்று அறிவு ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. 'டிஜிற்றல் புரட்சி' என்னும் எண்மப் புரட்சியின் விளைவாக இந்நூற்றாண்டின் மனித சமூகம் அறிவுசார் சமூகமாகவும் (Knowledge Society) அறிவுப் பொருளாதாரமாகவும் (Knowledg Economy) கற்கும் சமூகமாகவும் (Learning Society) உருமாற்றமடைந்துள்ளது. டிஜிற்றல் புரட்சியின் அதீதமான வளர்ச்சி மருத்துவம், உயிரியல், பௌதீகவியல் போக்குவரத்து, தொடர்பாடல் தொழில்நுட்பவியல் முதலிய மானிட செயற்பாடுகளில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது.

மாற்றங்கள் மனிதகுலத்துக்கு புதியவை அல்ல. மாற்றம் என்னும் சொல்லைத் தவிர அனைத்தும் எப்போதும் மாறிக் கொண்டுதான் இருக்கின்றன. சோக்கிரற்றீஸ் காலத்துக்கு முன்னர் கிரேக்கத்தில் வாழ்ந்த ஹெரகிலிற்றஸ் (கி. மு. 540 - 480) என்னும் தத்துவஞானி 'ஒரே ஆற்றில் நீங்கள் இருமுறை கால்வைக்க முடியாது' எனக் கூறிச் சென்றார். இக் கூற்றிலிருந்து மாற்றம் பற்றிய பிரக்ஞை மனிதனிடம் வரலாற்றின் தொடக்க காலத்திலேயே இருந்து வந்துள்ளது.

ஆனால் இந்த நூற்றாண்டில் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் அவற்றின் தாக்கம், வேகம், விரிவு என்பவற்றின் அடிப்படையில் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக மனித சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைவிட மிக அதிகமாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (Beare and Slaughter, 1995) எண்மப் புரட்சியின் காரணமாக இவ்வாறு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றச் செயன் முறையில் கல்வி நிலையங்களும் அவற்றில் நடைபெறுகின்ற கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் விலகி நின்றுவிட முடியாது.

இக்கட்டுரையானது டிஜிற்றல் புரட்சி ஏற்படுத்தி வருகின்ற சவால்கள், அச்சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு மாணவர்கள் அடைந்துகொள்ள வேண்டிய தேர்ச்சிகள், அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்களில் வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் தம்மளவில் கொண்டிருக்கவேண்டிய தொழில்சார் திறன்கள் முதலியவை பற்றிச் சுருக்கமாக விளக்க முயல்கிறது. அதற்கு முன்னோடியாக இருபத்தோராம் நூற்றாண்டின் இயல்புகள் பற்றி தெரிந்து கொள்வது முக்கியமானது.

## இருபத்தோராம் நூற்றாண்டின் இயல்புகள்

இருபத்தோராம் நூற்றாண்டு மூன்றாவது மிலேனியத்தின் முதலாவது நூற்றாண்டாகும். 1980களில் தொடங்கிய டிஜிற்றல் புரட்சி அதீதமான அறிவுப் பிரவாகத்தை ஏற்படுத்தி யுள்ளது. ஒவ்வொரு நாளும் சுமார் 3,000 நூல்கள் அச்சிடப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் கூகுள் இணையத்தளத்தில் சுமார் 2.7 மில்லியன் தேடல்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் பரிமாற்றப்படும் குறுஞ்செய்திகள் (SMS) உலகின் சனத்தொகையான ஏழு பில்லியன்களை மிஞ்சி விடுகின்றன. கணினிகள் ஓரிருவருடங்களில் முன்னரைவிட இருமடங்கு வல்லமைகளைப் பெற்றுவிடுகினறன. இந்நிலையில் மனிதனுடைய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த அறிவு ஒவ்வொரு 73 நாட்களில் இருமடங்காகி விடுகிறது என்றும் கூறப்படுகிறது. அவ்வாறான நிலையில் பாடசாலைக் கலைத்திட்டங்களின் கதி என்ன? பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து தொழில்நுட்பப் பட்டத்தைப் பெறப் பயில்கின்ற மாணவன் 3-4 வருடங்களில் பெறும் பட்டம் அக்காலச் சூழ்நிலைக்கு பொருத்தமாக அமையுமா?

அடிப்படை மனித மூல உயிர்க்கலங்களைப் பற்றிய ஆய்வு (Human Genome Project) அமெரிக்காவில் 2003 இல் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. இதனால் புற்றுநோயைக் குணமாக்குதல், வயது முதிர்ச்சியடைவதை முறியடித்தல் போன்ற மனிதனின் கனவுகள் வெற்றியடையும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மனித அவயவங்களை மாற்றுதல், பொருத்துதல், செயற்கையாக உயிர்களை உருவாக்குதல் போன்றவை ஏற்கனவே அறவொழுக்கம் தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளன. எனினும் மருத்துவ விஞ்ஞானத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மனிதனின் ஆயுளை அதிகரித்திருப்பதால் உலகில் சனத்தொகை வளர்ச்சி கட்டுப் பாட்டுக்கு அப்பால் சென்றுவிடுமோ என்னும் அச்சமும் ஏற்பட்டுள்ளது.

சமூக தொழில் நுட்பவியலும் (Social Technology) இன்று அதீத வளர்ச்சியை காட்டிநிற்கின்றது 1969ல் உருவாக்கப்பட்ட (Internet) இணையமும் 1990 இல் உருவாக்கப் பட்ட (WWW) இணைய வலைத்தளமும் மிகவும் பிரசித்தி பெற்று இன்று முகநூல் (Facebook) ருவிற்றர் (Twitter) யூடியூப் (Youtube) ஆகிய மிகவும் பிரசித்திபெற்ற தொடர் பாடல் சமூக ஊடகங்களாக திகழ்கின்றன. ஈமெயில் முதலியவற்றைவிட மேற்படி சமூக வலைத்தளங்கள் மக்களிடையே மிகவும் பிரபலமாகிவிட்டன. வளர்ச்சியடைந்த நாடுகளில் பெரும்பாலானோர் இணையத்தைப் பயன் படுத்துகின்றனர். அபிவிருத்தி குறைந்த நாடுகளில் பெரும்பாலானோர் இன்று மொபைல் வசதிகளைப் பெற்றிருப்பினும் டிஜிற்றல் (Digital Divide) இடைவெளியினால் அவதியுறுகின்றனர். 2010ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஸ்மார்ட்போன் (Smart phones) 3G, 4G வலுவுள்ள (Tablet) முதலியவை இணையத்துடன் தொடர்பு கொண்டுள்ளபடியால் பலர் கணினிகளுக்குப் பதிலாக அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

இன்று விருத்தியடைந்துள்ள நுண் தொழில் நுட்பவியல் (Nanotechnology) மிகவும் சிக்கலான, அதீத வலுவுள்ள கருவிகளை மிகவும் குறைந்த செலவில் படைக்கிறது. இத்தொழில்நுட்பம் இன்னும் விருத்தியடையுமெனில் பொருளாதார முறைமைகள், இயற்கை சூழல், சுகாதாரப் பராமரிப்பு, பாதுகாப்பு, அண்டவெளிப் பயணம் முதலிய சகலவற்றையும் புரட்சிகரமாக மாற்றிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே கூறப்பட்டவாறு இந்நூற்றாண்டில் வியத்தகு மருத்துவ, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் சாதனங்கள் நிகழ்த்தப்பட்டிருக்கும் போது மறுபுறம் இயற்கை அழிவுகளும், மனிதனால் மேற்கொள்ளப்படும் அழிவுகளும் கட்டுக்கடங்காமல் செல்வதையும் இங்கு குறிப்பிட வேண்டும். நிலநடுக்கம், சுனாமி, புயல், காலநிலை சீரழிவு எப்போதுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளன. ஓசோன் படை மெலிவடைதல் போன்ற வளிமண்டல மாற்றங்களினால் தாவரங்கள், விலக்குகள் மற்றும் இயற்கை சூழலில் பல எதிர்மறைத் தாக்கங்கள் ஏற்படலாம்.

இக்கட்டுரையை எழுதும்போது உக்ரைனில் பயணிகள் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது. காஸாவில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்படுகின்றனர். இவை உலகப்பாதுகாப்பு, விமானப் பயணங்கள், தேசிய அரசுகளின் இறைமை முதலியவை தொடர்பான எமது சிந்தனைப் போக்குகளை மாற்றியமைக்க வல்லவைகளாக உள்ளன (Beare and Slaughter, 1995).

ஆக இருபத்தோராம் நூற்றாண்டு மானிட வாழ்வியலின் பௌதீக அம்சங்களை மிக உயர்ந்த மட்டத்துக்கு கொண்டு செல்லக்கூடிய விஞ்ஞான, தொழில்நுட்பவியலின் அதிஉயர் நிலையை சுட்டி நிற்கிறது. இந்நூற்றாண்டின் முடிவுக்குள் மனிதனுடைய அறிவும் முயற்சியும் இன்னும் பன்மடங்கு அதிகரிக்கக் கூடும். ஆனால் மறுபுறத்தில் ஏற்பட்டு வருகின்ற எதிர்மறையான, அழிவுகள் நிரம்பிய மானிட செயற்பாடுகளும் மனிதனது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத இயற்கை அழிவுகளும் உலகில் மனிதனது இருப்புக்கே சவாலாக அமைந்து விடுமோ என்னும் நியாயமான சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. இதனை கருத்திற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இரு தசாப்தங்களுக்கு முன்னரே பிரன்ற்லண்ட் அறிக்கை (Our Common Future - Brundtland Report. 1987) பின்வருமாறு எச்சரித்திருந்தது.

"...இன்று மனித சமூகம் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது. இந்த உலகத்தை மாற்றியயைமக்கக்கூடிய வல்லமையை மனிதன் கொண்டுள்ளான். ஆனால், எதிர்பாராத விதமாக மண்ணிலும் நீரிலும் வளியிலும் தாவரங்களிலும் உயிரினங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இம்மாற்றங்களின் வேகமானது எமது விஞ்ஞான அறிவை விஞ்சி நிற்கிறது. இவற்றை மதிப்பிட்டு வழிகாட்டும் இயலுமையை மனிதன் கொண்டிருக்கவில்லை. சிதறிக் கிடந்த உலகில் உருவாகிய எமது அரசியல், பொருளாதார நிறுவனங்கள் இன்றைய ஒன்றிணையும் உலகில் சமாளிக்கும் திறன் உள்ளவைகளாக இல்லை என்பதனால் விரக்தி ஏற்படுகிறது."

எனினும் இன்றைய கல்வி நிறுவனங்களும் அங்கு நடைபெறுகின்ற கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளும் மாற்றங்களை உள் வாங்கியே ஆகவேண்டிய நிலையில் உள்ளது. ஏனெனில் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் இன்றைய சிறார்களை தயார்ப்படுத்தும் பொறுப்பினை கல்வி நிறுவனங்களே கொண்டுள்ளன. இந்த அடிப்படையில் 21 ஆம் நூற்றாண்டில் மாணவர்கள் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சிகளை நோக்குவோம்.

## இருபத்தோராம் நூற்றாண்டில் மாணவரின் தேர்ச்சிகள்

### தலைமுறை *X, Y* மற்றும் *Z*

இன்றைய தலைமுறையினர் டிஜிற்றல் தொழில்நுட்பவியலுடன் மிகவும் நெருக்கமான தொடர்பை பேணுகின்றனர். இவர்கள் Millennials என்னும் Y தலைமுறையினர் Generation Y எனவும் ஆய்வாளர்களால் குறிப்பிடப்பிடுகின்றனர். இதனை இன்னும் கொஞ்சம் விளக்கமாகத் தெரிந்துகொள்வது நல்லது.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் குறிப்பாக 1946-64 காலப்பகுதியில் மேற்கு நாடுகளில் பிறப்புவீதம் அதிகரித்தது. இக்கால கட்டத்தில் பிறந்தவர்களை Baby Boomers தலைமுறையினர் என குறிப்பிட்டனர். 1960-1980 காலப்பகுதியில் பிறந்தவர்கள் Generation X என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தமது முன்னைய தலைமுறையினரைவிட கூடியளவு பன்மைத்துவத்தை ஏற்றுக்கொண்டனர். 1980-2000 காலப்பகுதியில் பிறந்தவர்கள் Generation Y எனவும் Millennials எனவும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தொழில்நுட்பவியலுடன் நெருக்கமான தொடர்பை கொண்டவர்களாகவும் தொழில்நுட்ப உபகரணங்களை இலகுவாக கையாள்பவர்களாகவும் உள்ளனர். 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்கள் Generation Z ஐச் சேர்ந்தவர்கள். உயர் தொழில்நுட்ப தொடர்பாடல், தொழில் நுட்பவியல் சார்ந்த வாழ்க்கைப் பாங்கு, சமூக ஊடகங்களூடான பரிச்சயம் போன்றவற்றுடன் இந்த தலைமுறையினர் மிக நெருக்கம் கொண்டுள்ளனர். (www.talentedheads.com). Straiss & House - 1991)

இந்த வகைப்படுத்தல் மேற்கு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டதெனினும் இலங்கையிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் வாழும் இளந் தலைமுறையினரில் பெரும்பாலானோர் தொழில் நுட்பவியலில் செல்வாக்குக்கு உட்பட்டவர்களேயாவர்.

Junco மற்றும் Mastrociasa (2007) மேற்கொண்ட ஆய்வில் இன்றைய தலைமுறையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களில் 97 வீதம் சொந்த கணினிகளையும் 94 வீதம் செல்போன்களையும் 56 வீதம் MP Player ஐயும் சொந்தமாகக் கொண்டிருப்பதாகவும் கண்டறிந்தனர். அத்துடன் 76 SMS வீதம் அனுப்புவதாகவும் அதே நேரத்தில் 92 வீதம் பல்வேறு செயற்பாடுகளில் (Multi-tasking) ஈடுபடுவதாகவும் 34 வீதம் செய்திகளைப் பெற்றுக்கொள்ள இணையத்தில் தங்கியிருப்பதாகவும் கண்டறிந்தனர்.

இன்றைய தலைமுறையினரின் டிஜிற்றல் தொழில்நுட்ப பயன்பாட்டின் காரணமாக அவர்களை டிஜிற்றல் சுதேசிகள் Digital Natives எனவும் டிஜிற்றல் தொழில்நுட்பங்களை கற்பவர்களை டிஜிற்றல் குடியேற்றவாசிகள் Digital Immigrants எனவும் Prensky (2001) குறிப்பிட்டுள்ளார் அவரது ஆய்வின்படி ஒரு சராசரி கல்லூரி மாணவன் தனது வாழ்க்கையில் 5,000 மணித்தியாலங்களினை மட்டுமே வாசிப்பில் செலவிடுகிறான். ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10,000 மணித்தியாலங்களை வீடியோ விளையாட்டுகளிலும் e-mail இணையம், செல்போன் SMS அனுப்புதல் ஆசியவற்றில் செலவிடுகிறான்.

ஆக, .இன்றைய மாணவர்கள் முற்றாக மாறியுள்ளனர். அவர்களது சிந்தனைப் போக்கும் தகவல்களின் நிரற்படுத்தும் முறையும் முன்னைய தலைமுறையினரைவிட முற்றாக வித்தியாசமானது. இந்த மாற்றம் படிப்படியாக நடக்கவில்லை. 20 ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களில் ஏற்பட்ட டிஜிற்றல் தொழில்நுட்பவியலின் வளர்ச்சியே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

எனவே, 21ஆம் நூற்றாண்டின் மாணவன் பின்வரும் இயல்புகளை கொண்டிருக்கிறான்: தொழல்நுட்பவியலை இலகுவாகப் பயன்படுத்தல், டிஜிற்றல் எழுத்தறிவை (Digital Literate) கொண்டிருத்தல், பல்வேறு செயற்பாடுகளில் ஒரே நேரத்தில் ஈடுபடுத்தல்(Multitasking), இடைவினை யாற்றலை (Interactivity) விரும்புதல், இணையத்துடன் ஒட்டியிருத்தல், தனக்குத் தேவையானவற்றை கற்றல், சொந்த முடிவுகளுக்கு வருதல்.

மேற்படி இயல்புகளுக்கு அனுசரணையாக சில தேர்ச்சிகளும் அத்தியாவசியமாக அமைந்துள்ளன.

**மாணவரின் கற்றல் தேர்ச்சிகள்**

21 ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் தேர்ச்சிகள் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. Tony Wagner - (2008) 21 ஆம் நூற்றாண்டுக்கு மிகவும் அவசியமானவை என பின்வரும் தேர்ச்சிகளை பட்டியல்படுத்தினார்.

1. ஆழ்நிலை சிந்தனையும் பிரச்சினை தீர்த்தல் திறனும் (Critical Thinking and Problem Solving)
2. வலையமைப்புகள் ஊடாக ஒத்துழைப்பு (Collaboration across networks)
3. விரைவும் ஒத்திசைவும் (Agillity and Adaptability)
4. முன்னெடுப்பும் முயற்சியாண்மையும் (Initiative and Enterpreneurialism)
5. வினைதிறன்மிக்க வாய்மூல/எழுத்துமூல தொடர்பாடல் (Effective oral/written communication)
6. தகவல்களைப் பெறுதலும் பகுப்பாய்தலும் (Accessing and Analizing Information)
7. புதியன அறியும் ஆர்வமும் கற்பனைவளமும் (Curiosity and Imagination)

மேற்படி தேர்ச்சிகள் பற்றி சுருக்கமாக தெரிந்து கொள்வது பயனுடையதாக அமையும்.

இன்றைய உலகில் தினமும் மிதமிஞ்சிய தகவல்கள் வந்து சேருகின்றன. அவற்றில் முக்கியமானது எது சரியானது எது எனத் தேர்வு செய்வதற்கு ஆழ்நிலை சிந்தனை அவசியமானது. இதற்கு நல்ல வினாக்களை தொடுக்கவேண்டும். ஆழ்நிலை சிந்தனையையும் பிரச்சினை தீர்த்தல் திறனையும் மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு நீண்டகால முயற்சியும் பயிற்சியும் அவசியமானவை.

அதேபோல இன்றைய நிறுவனங்களில் e-mail, video conferenced முதலிய தொழில் நுட்பவியல் வளர்ச்சியினால் பணியாளர்கள் குழுவாக தொழிற்படுகின்றனர். நிறுவனங்களில் அதிகார படியமைப்பு இன்று குறைந்தளவு பயிற்சிகளை கொண்டிருக்கின்றன. குழு நிலையில் மற்றவர்களுடன் இணைந்து பணி புரியும் தேர்ச்சி இன்று மிகவும் அவசியமானது.

இன்றைய சிறார்கள் இயல்பாகவே விரைவும் ஒத்திசைவும் கொண்டவர்களாவர். எந்தவொரு தொழில்நுட்பவியலையும் அவர்கள் சீக்கிரமே கற்றுக் கொள்கிறார்கள். அதே போல் புதிய சூழ்நிலையில் அவர்கள் இசைந்து ஒழுகுகிறார்கள். புதிய நூற்றாண்டில் இந்த தேர்ச்சி அவசியமானதாகும். பல்வேறு இனக்குழுக்கள், பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்களுடன் ஒன்றிணைந்து பணி செய்யும் போது இசைந்தொழுகுதல் அவசியமான தேர்ச்சியாகும். புதியவற்றைக் கண்டறியும் ஆர்வமும் ஆக்கத்திறனும் வாழ்க்கையில் வெற்றியடைய அவசியமான தேர்ச்சிகளாகும். ஆய்வுகளின்படி இடப்பக்க மூளை தர்க்கரீதியான சிந்தனைக்கும் வலப்பக்க மூளை ஆக்கத்திறனுக்கும் அடிப்படையாக உள்ளன. மாணவர்கள் மத்தியில் ஆக்கத்திறன் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

இந்த பின்னணியில் 21ஆம் நூற்றாண்டு ஆசிரியர்களின் வகிபங்கு மற்றும் தேர்ச்சிகள் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 ஆம் நூற்றாண்டில் ஆசிரியர்களின் வகிபங்குகளும் தொழில்சார் தேர்ச்சிகளும்.

எந்தவொரு கல்விமுறையிலும் மாணவர்களுக்கு அடுத்த அதி முக்கிய தொகுதியினராக விளங்குபவர்கள் ஆசிரியர்களே ஆவர். இதன் அடிப்படையில் 1966 ஆம் ஆண்டு UNESCO நிறுவனம் சர்வதேச தொழில் நிறுவனத்துடன் (ILO) இணைந்து ஆசிரியர்கள் அந்தஸ்து மற்றும் அவர்களின் பணி தொடர்பான விதந்துரைகள் கொண்டதொரு முக்கிய ஆவணத்தை வெளியிட்டது. இன்று உலகில் பணிபுரிகின்ற 50 மில்லியனுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் வேதனம், பயிற்சி ஆகியவற்றிற்காக மீண்டெழும் செலவினத்தில் 50-90 வீதம் வரை செலவிடப்படுகிறது. இது கல்வி மீதான பாரிய முதலீடாகும்.. எனவே, காலத்துக்குப் பொருத்தமான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதும் அவற்றை கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பிரயோகிப்பதும் ஆசிரியர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

21ஆம் நூற்றாண்டு ஆசிரியர்களின் தேர்ச்சிகளைத் தெரிந்து கொள்வதற்கு முன்பாக இந்நூற்றாண்டுக்குரிய வகுப்பறையின் இயல்புகளை தெரிந்துகொள்வது முக்கியமானது. அவ்வியல்புகளை பின்வரும் அட்டவணை ஒப்பீட்டு வகையில் விளக்குகிறது.

| **20ஆம் நூற்றாண்டு வகுப்பறை** | **21 ஆம் நூற்றாண்டு வகுப்பறை** |
|---|---|
| 1. நேரத்தை அடிப்படையாகக் கொண்டது | பேற்றினை (Outcome) அடிப்படையாகக் கொண்டது |
| 2. தகவல்களை மனனம் செய்வது முக்கியமானது | மாணவர்களுக்கு கற்பித்தலின் முடிவில் என்ன தெரியும், செய்யமுடியும் என்பது முக்கியமானது. |
| 3. பாடங்கள் Bloom இன் கீழ்மட்ட தேர்ச்சிகளில் (அறிவு, கிரகிப்பு, பிரயோகம்) கொண்டிருத்தல். | மேற்படி தேர்ச்சிகளுடன் தொகுப்பு, பகுப்பாய்வு, மதிப்பீடு ஆகியவையும் முக்கியமானவை. |
| 4. பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டது. | ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது. |
| 5. தங்குநிலை (Passive) கற்றல், சுதந்திரமின்மை. | உயிர்ப்பான (Active) கற்றல், போதுமான சுதந்திரம் |
| 6. மாணவர்கள் நான்கு சுவர்களுக்குள் தனிமையில் கற்றனர். | தமது சகமாணவர்களுடன் மாத்திரமல்லாது உலகளாவிய ரீதியில் கூட்டிணைந்து கற்கின்றனர் (Global Classroom) |
| 7. ஆசிரியரே சகல தகவல்களையும் தரக்கூடியவர் ஆசிரியர் மையமானது (Teacher Centred) | ஆசிரியர் கற்றலை வசதிப்படுத்துநர் மட்டுமே (Student Centred) |
| 8. கட்டொழுங்குப் பிரச்சினை : பரஸ்பர நம்பிக்கை யீனம் | ஆசிரியரும் மாணவர்களும் இணைந்து கற்கின்றனர் |
| 9. ஒன்றிணைக்கப்படாத (Fragmented) கலைத் திட்டம் | ஒன்றிணைக்கப்பட்ட கலைத்திட்டம் (Intergrated Interdiscilinary) |
| 10 புள்ளியினை சராசரிப்படுத்தல் | கற்றலுக்கு புள்ளிகள், தரங்கள் வழங்குதல் |
| 11 கீழ்மட்ட எதிர்பார்ப்புகள் | உயர் எதிர்பார்ப்புகள். சகல மாணவர்களும் கற்றலில் குறைந்தபட்ச வெற்றியடைகின்றனர். சிலர் உயர் மட்டத்துக்கு செல்வர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 12 ஆசிரியரே நீதிபதி. மாணவரின் சேவைகளை அவர் மட்டுமே பார்ப்பார்.. | சுயமதிப்பீடு மற்றும் சகபாடிகள், ஏனையோர் மதிப்பீடு செய்வர். |
| 13 கலைத்திட்டம் மாணவர்களின் விருப்பங்களுடன் தொடர்புபட்டதல்ல. | மாணவரின் ஆர்வம், அனுபவங்கள், யதார்த்த உலகுடன் கலைத்திட்டம் தொடர்புபட்டிருக்கும் |
| 14 கற்றல் மற்றும் மதிப்பீட்டுக்கு அச்சு ஊடகமே அடிப்படை | செயற்றிட்டங்கள், செயலாற்றுகை முதலிய பல்வேறு ஊடகங்கள் கற்றலுக்கும் மதிப்பீட்டுக்கும் உள்வாங்கப்படும். |
| 15. மாணவர் மத்தியிலுள்ள பன்மைத்துவம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. | மாணவரின் பன்மைத்துவம் கலைத்திட்டத்திலும் கற்பித்தலிலும் முக்கியம் பெறும். |
| 16 எழுத்தறிவு என்பது 3 R (வாசிப்பு.எழுத்து. கணிதம்) | உலகமயமாக்கப்பட்டுள்ள புதிய மிலேனியத்தில் வாழ்வதற்கு அவசியமான பன்மை - எழுத்தறிவு (Multiple Loteracy) |
| 17 கைத்தொழில் யுகத்தில் உற்பத்தி உடமையார்களுக்கு அவசியமான தொழிற்சாலை மாதிரியும் விஞ்ஞான முகாமையும் (Factory Model) | உலகமயமாக்கப்பட்ட உயர்தொழில்நுட்ப சமூகத்துக்குப் பொருத்தமான பூகோள மாதிரி (Global Model) |


மூலம் : www.wikipedia.com

மேலே கூறப்பட்ட சகல விடயங்களுடனும் சகலரும் உடன்படுவர் எனக் கூற முடியாவிட்டாலும் 21ஆம் நூற்றாண்டின் கற்றல் - கற்பித்தல் செயன்முறை, மாணவர் - ஆசிரியர் இயல்புகள், வகுப்பறை - பாடசாலையின் இயல்புகள் ஆகியவற்றின் செல்நெறிகளை மேற்படி அட்டவணை ஓரளவுக்கு காட்டிநிற்கிறது என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அபிவிருத்தியடைந்த பல நாடுகளில் மேற்படி விடயங்கள் பாடசாலை, வகுப்பறைகளின் அமைப்பிலும் கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளிலும் ஏற்கனவெ நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான கற்றல் - கற்பித்தல் சூழ் நிலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் தேர்ச்சிகளும் பொருத்தமாக இருக்கவேண்டியது முக்கியமானது.

அவ்வாறான நவீன ஆசிரியர்களின் இயல்புகளை அல்லது வகிபங்குகளை பின்வரும் உரு காட்டுகினறது.

**21 ஆம் நூற்றாண்டு ஆசிரியர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1. சூழலுடன் இயைபவர்

இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் சூழலுடன் இயைபு கொண்டு செயற்பட வேண்டியவராவார். கலைத்திட்டத்தில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. வர்த்தக மாதிரிகை (Business Model) க்காக உருவாக்கப்பட்ட மென் பொருள்களையும் வன்பொருட்களையும் தான் கற்பிக்கும் பல்வேறு வயதுப் பிரிவுகளும் வேறுபட்ட ஆற்றல்களும் கொண்ட மாணவர்களுக்கு ஏற்ற வகையில் வகுப்பறை செயன்முறைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலையும் நெகிழ்வுத் தன்மையையும் அவர் கொண்டியங்க வேண்டியுள்ளது். வகுப்பறையில் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தும் போது அவை செயற்படுதிறனை இடைநடுவில் நிறுத்திவிடமுடியாது. எனவே, அவ்வாறான சூழ்நிலையில் அறைகூவல்களை உவந்தேற்று அவர் சூழலுக்கு இயைந்து செயற்பட வேண்டும். அத்துடன் பல்வேறு கற்றல் பாங்குகளையும் (Learaning Styles) விளங்கிக் கொண்டு வேறுபட்ட கற்றல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆசிரியர் தனது கற்பித்தல் பாங்குகளை மாற்றிக்கொள்ளுதலும் வேண்டும்.

### 2. தொடர்பாளர்

எவ்விடத்திலும் எந்நேரமும் கற்றல் (Anywhere, Anytime Learning) என்பது அன்று பரவலாய்ப் பயன்படுத்தப்படும் தொடராகும். எனவே இருபத்தோரம் நூற்றாண்டு ஆசிரியரும் எந்நேரமும் எவ்விடத்திலும் கற்றல் செயற் பாடுகளில் ஈடுபடும் ஆர்வத்தையும் ஆற்றலையும் கொண்டிருத்தல் அவசியம். தொடர்பாடலையும் ஒன்றிணைப்பையும் ஏற்படுத்தக்கூடிய கருவிகள் மற்றும் தொழில்நுட்பவியல்களில் அவர் பரிச்சயம் கொண்டிருத்தல் வேண்டும். பல்வேறு உரித்தாளர்களுக்கிடையே தொடர் பாடலை ஏற்படுத்தவும் முகாமை செய்யவும் எமது ஆசிரியருக்கு அறிவும் ஆற்றலும் இருத்தல் அவசியம். உதாரணமாக, இன்றைய சூழ்நிலையில் மக்களிடையே நெருக்கமான தொடர்பாடலை ஏற்படுத்துவதில் சமூக வலையமைப்புகள் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. இவற்றுடன் பரிச்சயம் இல்லாத ஓர் ஆசிரியர் இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய ஆசிரியராக பரிணமிக்க முடியாது.

### 3. கற்போன்

சமகால அறிவுப் பிரவாகமானது மாணவர்களை மாத்திரமல்லாது ஒவ்வொரு குடிமகனையும் வாழ்நாள் நீடித்த கற்போனாக (Lifelong Learner) மாற வைத்துள்ளது. பாடசாலையுடன் அல்லது உயர்கல்வி நிலையத்துடன் "படிப்பு முடிந்தது" என்பது அர்த்தமில்லாத கூற்றாகிவிட்டது. மாறாக "தொட்டில் முதல் சுடுகாடு வரை" யிலான கல்வி இன்று அவசியமாகிவிட்டது. இதற்கு உதவும் வகையில் மூடப்பட்ட கல்வி முறைகளைவிட திறந்த கல்வி முறைகள் பிரபலமாகி வருகின்றன. கலைத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் தொடர்ச்சியாக புதியவற்றைப் புகுத்த வேண்டும் எனில் ஆசிரியரும் வாழ்க்கை நீடித்த கற்றோனாக உருமாறவேண்டியுள்ளது. அறிவுப் பிரவாகத்தினால் கல்விப் புலமும் தேவையான மாற்றத்திற்கு உள்ளாகும்போது அம்மாற்றத்தை உள்வாங்கக்கூடிய வகையில் தனது அறிவையும் தேர்ச்சியினையும் மாற்றிக் கொள்ளக்கூடிய ஆசிரியனே இருபத்தோராம் நூற்றாண்டுக்குப் பொருத்தமானவனாவான்.

### 4. தரிசனநோக்குடையவர்

தரிசன நோக்கு (Vision) என்பது தனிநபருக்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் அவசியமானது. அதேபோல அத்தகைய தரிசன நோக்கினை அடைவதற்கான செயற்றிறனும் முக்கியமானது. "செயற்றிறன் இல்லாத தரிசன நோக்கு வெறுமனே ஒரு கனவுதான், தரிசனநோக்கு இல்லாத செயற்றின் நேரவிரயமாகும். தரிசன நோக்கும் செயற்றிறனும் ஒன்றிணைந்தால் இந்த உலகினை வெல்ல முடியும்" என ஓர் அறிஞர் குறிப்பிட்டார். இன்றைய உலகின் தொழில்நுட்பவியலின் வளர்ச்சி வேகத்தையும் எதிர்காலத்தில் அதன் பரிணாமத்தையும் ஆசிரியர் விளங்கி அவற்றைச் செயலாற்றவும் வேண்டும். அத்தகைய நிலையை அடைய ஆசிரியருக்கு கற்பனைத்திறனும் கற்பனை வளமும் அவசியமாகும்.. புதிய புதிய தொழில் நுட்பங்களை வகுப்பறைச் செயன்முறைகளில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்குரிய கற்பனைத்திறன் இருபுத்தோராம் நூற்றாண்டு ஆசிரியருக்கு மிகவும் அவசியமாகும். கற்பனைத்திறன் கொண்ட ஆசிரியர் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் துறைக்கு அப்பால் சென்று ஏனைய கற்றல் துறைகளிலும் கலைத் திட்டத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனங்கண்டு தனது வகுப்பறைச் செயற்பாடுகளில் புதுமைகளைப் புகுத்த முயல்வார்.

### 5. தலைவர்

இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் ஒரு தலைவராகவும் மிளிரவேண்டியுள்ளது. ஒரு தலைவரின் வகிபங்கு யாது? ஒரு தலைவர் என்பவர் தனது நிறுவனம் அல்லது மக்களுக்குரிய தரிசன நோக்கினை உருவாக்குவார். அத்துடன் தன்னைச் சூழ உள்ளவர்கள் அந்தத் தரிசன நோக்கினை ஏற்றுக்கொள்ளவும் பாடுபடுவர். அது மாத்திரமன்றி அத்தரிசன நோக்கினை அடையக்கூடிய வகையில் தன்னைச் சார்ந்துள்ளோரை அவர் ஊக்கப்படுத்தவார். இன்று கல்வி உலகினும் குறிப்பாக வகுப்பறைச் செயன்முறைகளை வினைத்திறனுடனும் விளை திறனுடனும் முன்னெடுத்துச் செல்ல இத்தகைய தலைமைத்துவ தேர்ச்சியை ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞானம், தொழில்நுட்பவியலில் ஏற்படும் வளர்ச்சியும் முன்னேற்றமும் கல்வி உலகிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றை இனங்கண்டு வகுப்பறைச் செயன்முறையில் அத்தகைய புத்தாக்கங்களை உள்வாங்கி கற்றல், கற்பித்தல் செயன்முறையை நவீன மயமாக்குவதற்கு சிறந்த தலைமைத்துவமும் அவசியமாகிறது. இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியனுக்கு இத்தகைய தலைமைத்துவம் அவசியமாகும்.

### 6. முன்னுதாரணமானவர்

ஆசிரியர்கள் தமது சொல்லாலும் செயலாலும் எப்போதுமே மாணவர்களுக்கு முன்னுதாரணமாக நடந்து வந்துள்ளனர். மாணவர்கள் ஒரு நாளில் உயிர்ப்பான நேரத்தை தமது பாடசாலைகளிலேயே கழிக்கின்றனர். அந்நேரத்தில் ஆசிரியர்கள் விழுமியங்களையும் அறவொழுக்கங்களையும் அவர்களுக்குக் கற்பிப்பதோடு தாமே மாணவர்கள் பின்றபற்றக் கூடிய மாதிரிகளாகவும் திகழவேண்டிய நிலை உள்ளது. இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் பிரதிபலிப்பு நடைமுறையை (Reflective practice)பின்பற்றவேண்டியவராகிறார். வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் தொடர்பான சுய பிரதி பலிப்பை தானே அசை போட்டுக் கொள்ளாமல facebook, blogs, twitter முதலான சமூக வலைத்தளங்கள் மூலமாக பிறருடனும் பகிர்ந்துகொள்ள முடியும். சமூக வலைத் தளங்களில் பலரது கருத்துக்களும் பகிரப் படுவதால் பொறுமைகாத்தல், பிறரது கருத்தை கௌரவித்தல், கருத்து மோதலில் உயர் பண்பாட்டை வெளிப்படுத்தல், சர்வ தேசிய பார்வை முதலிய பண்புக் கூறுகளை இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் வெளிப்படுத்துவதோடு அப்பண்புகளின் நிலைக்களனாகவும் அவர் செயற்பட வேண்டியுள்ளது.

### 7. இணைந்து செயலாற்றுபவர்

ஒரு காலத்தில் கற்றல் என்பது வகுப்பறையில் நான்கு சுவர்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், இன்று கற்றல் செயற்பாடுகளுக்கு எல்லைகளில்லை. இணையத்துக்குள் பிரவேசிக்கும் ஒரு மாணவனோ அல்லது ஆசிரியரோ எல்லையற்றுப் பரந்து விரிந்து கிடக்கும் கற்றல் வாய்ப்புக்களுடன் சங்கமமாகிவிட முடியும். Ning, Blogger, Wiki spaces, Bebo. MSN, My space, Second life முதலான இணைய வலையமைப்புக்கள்மிகச் சிறந்த கற்றல் தொடர்புகளையும் வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் புத்தகறிவை உள்வாங்குதிறனும் நவீன உருவாக்கு திறனும் அவற்றைப் பிறருடன் பகிர்வதிலும் தனது மாணர்களுடனும் ஏனையோருடனும் இணைந்து செயற்படு திறனும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

### 8. ஆபத்துக்குத் துணிபவர்

மேற்குறிப்பிட்ட பல்வேறு புதிய மாறுபட்ட வகிபாகங்களை ஏற்று செயற்படுவதில் பல ஆபத்துக்களும் உள்ளன. ஆனால் இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் அவ்வித ஆபத்துக்களைத் துணிந்தேற்று செயற்பட வேண்டிய நிலையிலுள்ளார். மாணவர்கள் நவீன தொழில்நுட்பவியலுக்குள் மிக எளிதாகப் பிரவேசிப்பதுடன் அவற்றைத் திறமையுடன் கையாளவும் செய்கின்றனர். அதனால் ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சந்தர்ப்பங்களில் தமது மாணவரிடமே கற்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. கற்றலை உறுதிப்படுத்துகின்ற உயரிய விளைதிறன் கொண்ட வழிமுறை பிறருக்கு கற்பிப்பதாகும். எனவே இருபத்தோராம் நூற்றாண்டு ஆசிரியர் தமது மாணவர்கள் ஒருவருக்கு ஒருவர் கற்பிப்பதற்கு வழிப்படுத்தவும் வேண்டிய நிலையிலுள்ளார். தரிசன நோக்கு. தெளிவான இலக்குகள், புதிய தொழில்நுட்பவியலில் நம்பிக்கை போன்றவை நவீன ஆசிரியர் ஆபத்தை ஏற்று வெற்றியடையும் துணிச்சலை அவருக்கு வழங்கக்கூடியன.

21ஆம் நூற்றாண்டு ஆசிரியர்கள் உயர்மட்ட தேர்ச்சிகளையும் வகிபங்குகளையும் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் அவர்களது தொழில்சார் நிலைமைகள் பற்றியும் கருத்தில் கொள்ள வேண்டியதும் அவசியமானது. ரத்தேரி (2004) ஆசிரியர்களின் தொழில்சார் நிலைமைகள், விருத்திபற்றி பின்வரும் நான்கு அம்சங்களை முன்வைக்கிறார்.

## ஆசிரியர்கள் வாண்மைத்துவ மேம்பாடு

1. ஆசிரியர் கல்வியும் தொழில்சார் விருத்தியும் தொடங்குநிலை: ஆசிரியர் கல்வி மாத்திரமல்லாது தொடருறு ஆசிரியர் கல்வியும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இன்று ஆசிரியர் தொழிலில் பெண்களே பெருமளவினராக இருப்பதால் அவர்களது சமூகம் மற்றும் பால்நிலை பற்றிய பிரச்சினைகளும் ஆசிரியர்களின் நியமனம், தொழில் விருத்திகளில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இலங்கையில் ஆசிரியரின் தொடங்குநிலை தொழில்சார் கல்வியும் தொடருறு கல்வியும் 21ஆம் நூற்றாண்டுக்குரிய ஆசிரியர் தேர்ச்சிகளுக்குப் பொருத்தமானவைகளாக அமைந்துள்ளனவா என்பது விரைந்து விடைகாண வேண்டிய வினாவாகும்.

2. ஆசிரியரின் வேதனமும் ஏனை வருமானங்களும்: ஒரு சில விருத்தியடைந்த நாடுகளைத்தவிர ஏனைய நாடுகளில் ஆசிரியர் தொழிலில் அந்தஸ்து, முக்கியத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களது வேதனமும் ஏனைய வருமானங்களும் அமைந்துள்ளன என கூறுவதற்கில்லை. இலங்கையில் ஒரு பட்டதாரி ஆசிரியர் மூன்று நான்கு வருடங்கள் பல்கலைக்கழகக் கல்வியையும் ஓராண்டு பட்டப் பின் தொழில்சார் பயிற்சியையும் பெறுகின்றார். ஆனால், அவருக்கு வழங்கப்படும் வேதனம் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டதாரியாகி ஆசிரியர் தொழில்தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு செல்லும் ஒருவரது வேதனத்துக்கு சமனாக இல்லை. ஆசிரியர்களது தொழிற்சங்க போராட்டங்கள், ஆசிரியர்களின் மூலதனம் மற்றும் ஏனைய சலுகைகள், உரிமைகளை மேம்படுத்தவதில் பெருமளவு வெற்றிபெறவில்லை. ஆசிரியர்களின் தொழில்சார் அந்தஸ்து குறைவாக உள்ள நிலையில் உயர்திறன்கள் கொண்டவர்களை தொழிலில் உள்வாங்குவதிலும் தக்க வைப்பதிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

3. தொழில்சார் நிலைமைகள்: தொழில் சார் நிலைமைகள் என்பது விளைதிறன் மிக்க கற்றல் மேற்கொள்ளக்கூடிய வகுப்பறை, பாடசாலை நிலைமைகள், வகுப்பு பருமன், கற்றல் சாதனங்கள், வேலைச்சுமை முதலியவற்றைக் குறிக்கும் தற்போது பெரும்பாலான பாடசாலைகளில் மேற்படி நிலைமைகள் ஆசிரியர் தனது தொழில்சார் செயற்பாடுகளை விளைதிறனுடன் மேற்கொள்ள சாதகமாக உள்ளன எனக் கூறுவதற்கில்லை. புதிய நூற்றாண்டில் ஆசிரியரிடம் புதிய தேர்ச்சிகளும் வகிபங்குகளும் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் மேற்படி நிலைமைகள் சீர்திருத்தப்பட வேண்டுவதும் முக்கியமானதாகும்.

4. கல்விசார் தீர்மானங்களில் பங்கு கொள்ளல், கல்வி முகாமைத்துவம் என்பது அண்மைக் காலங்களில் பன்முகப்படுத்தும் (Decentralization) தன்மைகள் காணப்படுகின்றன. எனினும் கல்விக் கொள்கைகளைத் தீர்மானித்தல், கல்விசார் தீர்மானங்களை மேற் கொள்ளல் ஆகியவற்றில் ஆசிரியர்களையும் அவர்கள் சார்ந்துள்ள அமைப்புகளையும் பங்குபெறச் செய்வதில் இலங்கையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனக் கூறமுடியாது. அரசியல் மற்றும் தொழிற்சங்க பேதங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக ஆசிரியர்களின் கூட்டு பேரம்பேசல் (Collective bargaining) மற்றும் தொழிற்சங்க வல்லமையை இந் நாட்டில் உயர்மட்டத்துக்கு கொண்டு செல்ல முடியாமையின் காரணமாக கல்விசார்தீர்மானம் மேற்கொள்ளலில் ஆசிரியர்களின் பங்கேற்பு மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது.

### முடிவுரை

மாற்றம் என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது என்றபோதிலும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் மனித வாழ்வியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் போல மனிதனது வரலாற்றில் என்றுமே ஏற்பட்டதில்லை எனக் கூறுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் டிஜிற்றல் புரட்சியும் அதன் விளைவுகளுமாகும். டிஜிற்றல் புரட்சியானது தற்கால மாணவர்களின் மனப்பாங்குகள், நடத்தைகள், சிந்தனைப்போக்கு, கற்கும் முறைகள், தொழில்நுட்பத் திறன்கள் முதலிய வற்றில் பாரதூரமான செல்வாக்கை செலுத்தி வருகிறது. விருத்தியடைந்த நாடுகள் பலவற்றில் சமகால மாணவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற விதத்தில் பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளின் கட்டமைப்புகள், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், கலைத்திட்ட உள்ளடக்கம் ஆகியவற்றில் காத்திரமான, காலத்துக்கு ஏற்ற மாற்றங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. ஆனால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அரசியல். பொருளாதார, சமூகக் காரணங்களினால் இந்த எண்மப் பிரிவினை (Digital Divide) குறைக்கும் முயற்சிகள் மிகவும் தாமதமாகவே நடைபெறுகின்றன.

மனித குலத்தின் ஒரு பகுதியினர் கல்வியில் மிகவேகமாக முன்னேறிச் செல்லும்போது மறுபகுதியினர் தொடர்ந்தும் அடிப்படைக் கல்வியைக் கூட பெறமுடியாத அளவுக்கு வறுமையில் வாழ்பவர்களாயின் சமாதானம், சமத்துவம், நியாயத்துவம் முதலிய சொற்கள் அர்த்தமற்றவைகளாகவே நிலைத்துவிடும்.

### உசாத்துணை


*Beare, H (2001), Creating the Future of Schools, London: Routeledge Falmer*

*Beare H & Slaughter, R (1995) Education for the 21st Century, London, Routeledge.*

*Bruntland Report (1987) Our Common Future World : Commission on Environment andDevelopment, OxfordUniversitypress*

*Howe, N. & Strauss, W. (1991), Generation -The History of America's Future, New York: William Morrow & Co.*

*Junco, R. & Mastrodicasa, J (2007), Connecting in the net Generation, USA - NESPA*

*Prensky, M (2011) "From Digital Natives to Digital Wisdom" in Hopeful Essays in 21st Century Education, USA - Corwin*

*Retteree, B (2004), "Teachers in the 21st Century: Some observations on their Role and Status" in D. N. Rao (eds) Education for the 21st Century, New Delhi: Discovery Publishing House.*


* **நீ இந்த உலகிற்கு வர யார் காரணமோ, யாரை இழந்தால் நீ மீண்டும் பெற முடியாதோ, அவளே தாய்.**

* **மன்னிப்புக் கேட்பவன் மனிதன். மன்னிப்புக் கொடுப்பவன் கடவுள். உன்னிடம் மனிதனாக நடப்பவர்களுக்கு இவ்வுலகில் இழப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஜெயிப்பதற்கு உலகமே இருக்கின்றது.**

**– விவேகானந்தர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பொது நிர்வாகமும் பெருந்தோட்ட மக்களும்



கலாபூஷணம் மு. சிவலிங்கம்

இந்த நூலைப் பற்றி தற்கால அரசியல் சூழ் நிலையில் மிக ஆழமாகப் படித்தறிந்துக் கொள்ள வேண்டியது மலையக சமூக ஆர்வலரதும் நமது மக்களினதும் தலையாயக் கடமையாகும். இந்நூல் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிவர வேண்டிய அவசியத்தை நாம் வலியுறுத்தவும் அதற்கான செயற்பாட்டை மேற்கொள்ளவும் முன்வர வேண்டும். நூலாசிரியர்களான பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் எஸ். விஜயச்சந்திரன், இரா.ரமேஷ் ஆகியோரின் புதிய நோக்கு வரவேற்கத்தக்கதாகும். அரச யாப்பின் பிரகடனம், உள்ளூராட்சி சட்டங்கள், மனித உரிமை மீறல்கள், இவைகளுடாக பெருந் தோட்ட மக்களின் தேசிய பிரச்சினைகள் தெளிவான வகையில் அரசியலாக்கப்பட்டிருக்கப்பட்டிருக் கின்றன.

இந்த நூலை தோட்ட சமூக தோழமைத் துவ வலை பின்னல் நிறுவனத்தைச் சேர்ந்த அருட் தந்தை என்ட்ரு தேவதாசன் வெளியிட்டுள்ளார்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கி யிருக்கும் கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜயதேவ உயன்கொட தனது கூற்றில், "சிறுபான்மையினரின் மனித உரிமையும், ஜனநாயகமும், சிறுபான்மையினரின் மேல் செலுத்தும் ஆதிக்கம்... அதனால் தூண்டப்படும் சுய நிர்ணயம்... பிரிவினை வாதம்" என்பது பற்றி தர்க்க ரீதியில் விளக்கியுள்ளார்.

1978 ம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி, இந் நாட்டின் பிரஜைகள் யாவருக்கும் இன, மத, மொழி, பிரதேசம், பிறப்பிடம் என்ற வேறுபாடுகளற்ற பொது நிர்வாக சேவை வழங்கப்பட வேண்டும் என்று உறுதி படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், பெருந் தோட்ட மக்களைப் பொறுத்தளவில், உள்ளூராட்சி அதிகார சபைகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்வது என்பது சட்ட ரீதியாக மறுக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. நாட்டில் சகல பிரஜைகளும் அரச சேவைகளைப் பாகுபாடின்றிப் பெற்றுக் கொள்வதற்கு உரிமையுண்டு என சர்வதேச மனித உரிமை சட்டங்கள் கூறுகின்றன.

சுமார் பத்து லட்சம் மக்கள் வாழும் பெருந் தோட்டத்துறைக்கு, உள்ளூராட்சி அமைப்புக்கள் அரச சேவை வழங்குவதில் புறக்கனிக்கும் செயல், தேசிய அரசியலில் நெருக்கடி மிகுந்த விடயமாகக் கருதப்படுகின்றது. இம் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்காக உருவாக்கப் பட்ட சட்டங்கள், நிர்வாக நடைமுறைகள் யாவும் இன ரீதியிலான அரசியல் செயற்பாடுகளாக எமது மக்களின் சமூக வளர்ச்சிக்கு தடையாக இருந்து வருகின்றன.

இந்த பொது நிர்வாக சேவைகளின் புறக் கணிப்பை இந்தப் புத்தகம் மனித உரிமை கண்ணோட்டத்திலேயே ஆய்வு செய்துள்ளது... என்று நூலாசிரியர்களான எஸ்.விஜேசந்திரன் அவர்களும், இரா.ரமேஷ் அவர்களும் விளக்கம் தந்துள்ளனர்.

நூலில் உள்ள அனைத்து விடயங்களையும் இங்கு ஆய்வு செய்வது முடியாத ஒரு காரிய மாகும். ஆகவே முக்கியமான விடயங்களை சுருக்கமான விளக்கத்துடன், மேற்குறிப்புக்களாக உங்களுக்குத் தகவல் தருவது நல்லதென நினைக்கின்றேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடமைப்பும், வீட்டுரிமையும் :-**

சுதந்திரத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப் பட்ட வீடமைப்புத் திட்டங்களில் இம் மக்கள் அறவே உள்வாங்கப் படவில்லை. குறிப்பாக 1984 ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட 10 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இம் மக்களுக்கென துணைத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அப்போதைய அரசு முன் வந்தது.. ஆனாலும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வில்லை. 1985 – 1990 ஆண்டு காலப் பகுதியில் இரட்டை வீட்டுத் திட்டம் (Twin quarters system) வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் அமுல் படுத்தப்பட்டது. ஆயினும் அத் திட்டம் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை.

1994ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா அம்மையாரின் அரசாங்கம் முதன் முதலாக தோட்ட வீடமைப்புக்கான பிரதி அமைச்சு ஒன்றை உருவாக்கி அந்த அமைச்சுக்கூடாக 7 பேர்ச்சஸ் காணிகளில் தனி வீடு அமைக்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் ஏறக்குறைய 25,000ம் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வாறு நிர்மாணிக்கப் பட்ட வீடுகளில் 15% குடும்பங்களே வசித்த வருகின்றன.

தோட்டங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டதன் பின் (Estate Welfare Trust) சமூக நல நிதியத்தின் அறிக்கையின் படி வதிவிட தொழிலாள குடும்பத்தினர் 8,20,000 ஆயிரம் பேர் உள்ளனர். அவற்றுள் 1,91000 ஆயிரம் பேர் லயன் அறைகளில் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் 25% லயன் அறைகள் திருப்திகரமானவை எனவும், 5% திருத்த முடியாத மோசமான நிலையில் உள்ளன எனவும், 70% மனித தேவைக்கான அடிப்படை வசதிகளற்றவை எனவும் கணிப்பிடப் பட்டுள்ளது.

அந்த வகையில் மலையக மக்களின் கௌரவமான வாழ்க்கைக்கு தனியானதும், சொந்தமானதுமான காணிகளுடன் வீடுகள் அத்தியாவசியமானதாகும். ஆனால் இம் மக்களுக்கு இவ்வுரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றது என்று நூலாசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். அத்துடன் அவர்கள் மேலும் சில தகவல்களை கீழே தருகின்றனர். உள்ளூராட்சி அதிகார சபைகள் வறிய மக்களுக்கு குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தில் கிராமிய மக்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டு வருகின்றனர். எத்தகைய அடிப்படை வசதிகளுமற்ற மோசமான, ஆபத்தான குடியிருப்புக்களில் வாழும் தோட்ட மக்களுக்கு, உள்ளூராட்சி அமைப்புக்கள் குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்ப தில்லை. இம் மக்களின் சேம நலன்களை தோட்ட முகாமைத்தவமே கவனிக்க வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. எனவே உள்ளூராட்சி சபைகளும், அரச நிர்வாகிகளும், தோட்ட நிர்வாகங்களே தொழிலாளர் குடியிருப்புக்களை அமைத்தல், சீர்திருத்தல் போன்ற வேலைகளுக்குப் பொறுப்பு என கருதுகின்றனர்.

இதற்கான காரணம், பெருந் தோட்டங்கள், அரச நிர்வாக பரப்புக்களிலிருந்து ஒதுக்கப் பட்டிருப்பதேயாகும் என நூலாசிரியர்கள் இங்கேயும் சுட்டிக் காட்டுகின்றனர். தோட்ட வருமானத்தை நாட்டின் ஏனைய சமூகத்தவர்களின் மேம்பாட்டுக்காக செலவிடும் அரசு, தோட்ட மக்களின் வீடமைப்புத் தேவைகளை புறந்தள்ளியிருப்பது, தேசிய பாரபட்சமும், மனித உரிமை மீறலுமாகும் என்று நூலாசிரியர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள்.

**சுகாதார நிலைமைகள்:-**

பெருந் தோட்ட மக்களின் சுகாதார சேவையானது இன்னும் தேசிய சுகாதார சேவைகளுடன் முழுமையாக இணைக்கப்பட வில்லை என இந்த நூல் பல காரணங்களைக் காட்டியுள்ளது. பெருந் தோட்டத்துறையில் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கூற்றுப்படி 23 பெருந் தோட்டக் கம்பெனிகளுக்கும் ஜனவசம, அரச கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான தோட்டங்களில் 50 தோட்ட வைத்திய சாலைகளும், 179 மகப் பேற்று நிலையங்களும், 266 மருத்துவ நிலையங்களும் காணப் படுகின்றன. இவற்றுள் 23 தோட்ட வைத்திய சாலைகளை மட்டுமே அரசாங்கம் பொறுப்பேற்று தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில முன்னேற்றங்களை சம்பந்தப்பட்ட மக்கள் அடைந்துள்ளனர்.

ஒரு சமூகத்தில், ஒரு நாட்டின் சுகாதார நிலையை அளவிடும் குறி காட்டியாக சிசு மரண விகிதம் கையாளப்படுகிறது. இலங்கையில் சிசு மரணம் தேசிய மட்டத்தில் மிகக் குறைவாகவும், தோட்டங்கள் மத்தியில் அதி உயர்வாகவும் காணப்படுகின்றது. கிராமம், நகரம், மற்றும் தேசிய மட்டத்தில் 7%, 14%, 19% என்றும், தோட்டப்புற மட்டத்தில் 47% எனக் காணப்படுகின்றது.

1992 ஆம் ஆண்டு பெருந் தோட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்ட பின்னர், பெருந் தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் மூலமே (Plantation Human Development Trust) பெருந்தோட்ட சுகாதார சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிதி மூலம் தோட்ட மக்களின் சுகாதார தேவைகளை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியாத நிலையை பல ஆய்வுகள் எடுத்துக் கூறியுள்ளன. தகைமை வாய்ந்த வைத்தியர்கள் இன்மை, போதியளவு மருந்துப் பொருட்களின்மை, கட்டிடங்கள், வாகனங்கள், மருத்துவ உபகரணங்கள் இல்லாமை, ஊழல், மோசடி நிறைந்த நிலை. இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளும், குறைபாடுகளும் அபிவிருத்தி நிதியத்தின் நிர்வாகத்தில் காணப்படுகின்றன.

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம், அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு இன்றி, நொராட், யுனிசெப், போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன், ஒரு குறிப்பிட்ட அரச நிதியுடனேயே சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிதியம் அண்மைக் காலங்களில் நிதி பற்றாக்குறை காரணமாக தோட்ட சுகாதார சேவைகளை சரிவர மேற்கொள்ள முடியாத நிலைமையை சந்தித்துள்ளது. இந்த நிதி நிலை காரணமாக தோட்டங்களில் குறைந்த சேவைகளையே மேற்கொள்வதால், பெருந்தோட்ட சமூகத்தினர் பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

இன்று தோட்ட வைத்தியசாலைகள் பிரசவ விடுதிகள், தரமான மருந்தகங்கள், மருத்துவர்கள், மருத்துவ உபகரணங்கள், அம்புலன்ஸ் வாகனங்கள் ஆகிய வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலேயே காணப்படுகின்றன. பெருந் தோட்ட மக்களின் சுகாதார சேவையின் நிலை பற்றி உள்ளூர் புத்தி ஜீவிகள், மலையக அரசியல் தலைமைகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியன கூட்டாகவும், தனித்தும், தேசிய மற்றும் சர்வ தேச மட்டம் வரை குரல் கொடுத்துள்ளன. அதனால் அரசுக்கும் அழுத்தங்கள் கிடைத்தன. இருந்த போதிலும் தேசிய ரீதியிலான சுகாதார சேவைகள் தோட்டங்களை எட்ட வில்லை எனலாம். என்று சுகாதாரம் பற்றிய கண்ணோட்டத்தில் மிக நுணுக்கமாகவே நூலாசிரியர்கள் தங்கள் தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**பொது நிர்வாக சேவைகள்:-**

பொது நிர்வாக சேவை என்பது அரசாங்கம் தனது குடி மக்களுக்கு அரச நிதியினைக் கொண்டு, வழங்கப்படும் சேவைகளாகும். மக்களின் கல்வி, சுகாதாரம், தொழில், அரச ஆவணங்கள் பெறுதல், போக்குவரத்து, மின்சாரம், தொடர்பாடல், நீதி, வங்கி சேவை, தபால் சேவை, பொலிஸ் சேவை என அட்டவணைப் படுத்தலாம்.

இந்தப் பொதுப்பணிகள் அரச நிர்வாக இயந்திரத்தின் ஊடாக அனைத்து பிரஜைகளுக்கும் சமத்துவமான முறையிலும், பாகுபாடற்ற வகையிலும் மேற்கொள்ளப்படல் வேண்டு மென்பது, ஆட்சி செய்யும் அரசின் தேசிய கடமையும், பணியுமாகும். சேவைகள் மனித மேம்பாட்டிற்கும், சமூக இயக்கத்திற்கும் பெரிதும் அத்தியாவசியமானதாகும்.. இச் சேவைகள் இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடக் கூடியதாகும். இச் சேவை கிராமிய மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியே வழங்கப்பட்டு வருகின்றது. பெருந்தோட்ட மக்களை பொது நிர்வாக பொறிமுறைக்குள் உள்வாங்குவதற்கு தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் முன்னெடுக்கப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மக்கள் நாடு சுதந்திரமடைந்த காலம் முதல் இன்று வரை பொது நிர்வாக கட்டமைப்பிலிருந்து ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளனர்.

நாட்டில் 30,000 முதல் 40,000 பேருக்கு ஒரு செயலகம் படியே உருவாக்கப்பட்டுள்ளன. அல்லது செயற்பாட்டில் காணப்படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் பத்தாயிரத்துக்கும் குறைவான சனத் தொகைக்கும் பிரதேச செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ஆனால், பெருந் தோட்ட மக்கள் செறிந்து வாழும் அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவு 2,02432 பேரையும், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு 2,06,944 பேரையும் சனத் தொகையாகக் கொண்டுள்ளது. மேலும் இவை பெரும் நிலப் பரப்பினையும் உள்ளடக்கியுள்ளன. ஒரு தோட்ட குடிமகன் தன் காரியங்களுக்காக பிரதேச செயலகம் வருவதற்கு ஒரு நாள் பொழுதையும், ஒரு நாள் ஊதியத்தையும் இழக்க வேண்டியுள்ளது.

எட்டுக்கும் மேற்பட்ட பிரதேச செயலகங்களால் ஆற்ற வேண்டிய சேவையினை, மேற்படி இந்த இரண்டு பிரதேச செயலகங்கள் மட்டுமே மேற்கொண்டு வருகின்றன. இதனால் இப்பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படும் பொதுச் சேவைகளையும், அபிவிருத்தித் திட்டங்களையும் பெருந் தோட்ட மக்கள் போதியளவு பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்ற மாவட்டங்களிலும் பொதுச் சேவையினைப் பெற்றுக் கொள்வதில் தொடர்ந்தும் பெருந்தோட்ட மக்கள் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். இத்தகைய பிரச்சினைகள் தொடர்வதற்கு பெரும்பான்மையின தலைவர்களின் அரசியல் ரீதியிலான விருப்பமின்மையே காரணமாகும் என்று (Lack of Political Willingness) நூலாசிரியர் விஜேசந்திரன் கூறுகின்றார்.

இந்த நூலின் ஆசிரியர்கள் இருவரும் தொடர்ந்து பிரதேச சபைகளின் சேவைகள் பற்றி விளக்குகின்றனர். மலையகப் பிரதேசங்களில் கனிசமான அளவு மலையக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் நிலைமை யாவரும் அறிந்ததே.. நுவரெலியா, அம்பகமுவ பிரதேச சபைகளில் அதிகமான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவது, பிரதேச சபை தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை சபைத் தலைவர் பதவிகளை எளிதாக தோட்ட உறுப்பினர்கள் பெற்று வருவதையும் நாம் அறிந்த விடயமாகும். சபைகளை பரிபாலனம் செய்வதைத் தவிர இச் சபைகளுக்கு தோட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாலும், சபைகளை உருவாக்கிய தோட்ட மக்களுக்கு இச் சபைகள் மூலம் என்ன பயன் கிடைத்துள்ளது என்பது பற்றி இங்கு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

பிரதேச சபைகளின் பணிகளான சுகாதார விழிப்புணர்வு, கழிவகற்றல். நோய் தடுப்பு, சுகாதார பரிசோதனை. மகப் பேற்று சேவைகள், மலசலகூட வசதிகள், கழிவு முகாமைத்துவம் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றன. ஆனால் இவற்றின் பயனாளிகளாக தோட்டப்புற மக்கள் உள் வாங்கப்படவில்லை. தோட்டங்களை அரச சுகாதார வைத்திய அதிகாரி, (M.O.H) பொது சுகாதார பரிசோதகர் (P.H.I.) ஆகியோர் கண்காணிப்பதில்லை. இவர்களது சேவைக்குப் பதிலாக தோட்ட சேமநல அதிகாரிகள் (Estate welfare Officer) செயல்படுகினறனர்.

இலங்கையில் முன் பள்ளி கல்வி வழங்கும் பொறுப்பு உள்ளூராட்சி அமைப்புக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தோட்டப்புறங்களுக்கு அரசு மூலமாக முன் பள்ளி கல்வி சேவை கிடையாது. தொண்டு நிறுவனங்களும், சமூகக் கழகங்களும், தனியாருமே தோட்டங்களில் முன்பள்ளி கல்வி வழங்கும் பணிகளைச் செய்து வருகின்றன.

**மொழி உரிமை மறுக்கப்படல்:-**

1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தில் 10 ஆம் அத்தியாயம் இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 4 ஆம் அத்தியாயம் 1987 ம் ஆண்டின் 13 வது அரசியலமைப்பு சீர்திருத்தமும், 16 ஆம் அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பன மொழியுரிமையினை வலியுறுத்திக் கூறுவதுடன், இலங்கை பிரஜைகள் அனைவருக்கும் அரசாங்க தாபனங்களுடன் தாய் மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமான தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு உரிமையை வழங்குகின்றன.

குறிப்பாக 1987 ஆம் ஆண்டு 13வது சீர்திருத்தத்தின் உறுப்புரை 2(B) ஆனது, தமிழும் அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமெனவும், 1988 ம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட 16 வது சீர்திருத்தம் சிங்களமும், தமிழும் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்பதனையும் உறுதிப்படுத்தியுள்ளன. ஆயினும் இவை வெறுமனே சட்டங்களாக காணப்படுகின்றனவே தவிர, உள்ளூராட்சி அமைப்புக்கள் இவற்றின் நடைமுறை பிரயோகத்தை இது காலம் வரை உறுதிப்படுத்தவில்லை.

**2005 ஆம் ஆண்டு சுற்று நிருபம் :-**

இலங்கை அரசாங்கமானது 2005ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட செயலாளர் பிரிவின் கீழ் 12.5% க்கு மேல் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்தால், அதனை இரு மொழி பிரதேச செயலகமாக மாற்றுவதற்கான சுற்று நிருபங்களை வெளியிட்டது.

இந்த சுற்று நிருபங்கள்படி பார்த்தால், பிரதேச செயலகத்திலும், பிரதேச சபைகளிலும் 12.5%க்கு மேற்பட்ட பெருந்தோட்டத் தமிழர்கள் வாழ்வதால், அவர்கள் தமிழ் மொழியில் காரியங்களைச் செய்து கொள்ளும் உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

பெருந் தோட்டத் தமிழர் 36 பிரதேச சபைகளில் 12.5% க்கு அதிகமான சனத் தொகையைக் கொண்டுள்ளனர். அத்துடன் இவர்கள் செறிந்து வாழும் 14 மாவட்டங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் சனத்தொகையையும் கவனத்தில் எடுத்துக் கொண்டால், பெரிய விகிதாசாரத்தில் பெரும்பான்மையாகவிருப்பர். அவ்வாறான 50 சத வீதத்துக்கும் அதிகமான பிரதேச சபைகள், இரு மொழி உரிமையில் தமிழ் பேசும் இவர்கள், தங்கள் காரியங்களை தமிழ் மொழியில் மேற்கொள்ள உரிமை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், நடைமுறையில் அவர்கள் அந்த உரிமைகளை மறுக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். சட்டம் வேறு.. நடைமுறை வேறு.. என்பதை இவை காட்டிக் கொண்டிருக்கின்றன. ஆகையினால் பெருந்தோட்ட பகுதிகளில் இயங்கும் உள்ளூராட்சி அமைப்புக்களில் மொழி பிரச்சினை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

பெருந்தோட்ட மக்கள் பெரும்பான்மையாக வாழும் நுவரெலியா, அம்பகமுவ பிரதேச சபைகளில் கூட இரு மொழிக் கொள்கை முழுமையாக நடைமுறை படுத்தப்படுவதில்லை. இவ்வாறான உள்ளூராட்சி அமைப்புக்கள் தமிழ் பேசும் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் கூட தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளை போதியளவு நியமிப்பதில்லை. இருந்த போதிலும் நுவரெலியா, அம்பகமுவ பிரதேச சபைகளில் ஒரு சில விடயங்களையேனும் தமிழ் மொழியில் நிறைவேற்றுகின்றனர். வேறு அனைத்து பிரதேச சபைகளும் இம் மக்களுக்கு தமிழ்மொழி மூலம் சேவை வழங்குவதனை மறுதலிக்கின்றன. இதன் மூலம் உள்ளூராட்சி சபைகள், மொழி சார்ந்த அடிப்படை உரிமைகளை நிராகரித்து வருகின்றன.

இவ்வாறு நூலாசிரியர்களின் நுணுக்கமான பார்வையில் பெருந் தோட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கும் தேசிய உரிமைகள் பற்றி விளக்கம் கொடுத்திருப்பதை அப்படியே மேற்கோளுடன் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது.

ஆய்வுரையின் இறுதிப் பகுதியாக பொது நிர்வாக சேவை தோட்ட மக்களுக்கு மறுக்கப்படுகின்ற காரணங்களைப் பற்றி இந் நூல் கூறுவதைக் கவனிப்போம்.

**பொதுச் சேவைகள் மறுதலிக்கப்படல்:-**

பிரதேச சபை சட்டத்தின்படி அச் சபையின் பொது நிதியினை கிராமிய அபிவிருத்திகளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்ய முடியும். பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 19(xiv), 19(xxii ) இவ்வாறு கூறுகின்றன. தோட்டங்கள் இச் சட்டத்துக்குள் உட்படாத காரணத்தால், தோட்டத்துறையின் அபிவிருத்தி வேலைகளுக்கு பிரதேச சபையின் பொது நிதியை பயன்படுத்த முடியாது. இத்தகைய வரையறைகளைக் காரணம் காட்டி, பிரதேச சபைகள் தோட்ட மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிர்வாக சேவைகளை வழங்குவதனை மறுதலிக்கின்றன.

மேலும் தோட்டப்புற மேம்பாட்டுக்கான நிதி பிரயோகம், பிரதேச சபைச் சட்டங்களுக்கு எதிரானவையாக பல சந்தர்ப்பங்களில் கருதப்பட்டு அது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக பிரதேச சபை நிதியினை தோட்டப் பிரதேச பாதை அபிவிருத்திக்கு பயன்படுத்தியமைக்காக, பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 33ஐ அடிப்படையாகக் கொண்டு 2008 ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்திலுள்ள உடபலாத்த பிரதேச சபை கலைக்கப்பட்டதனை குறிப் பிடலாம். இதன் காரணமாக உள்ளுராட்சி சபைகளில், பொது நிர்வாக சேவை வழங்கல் சட்ட ரீதியாகவே தோட்டப்புறங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

----------

இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு தேடும் முயற்சியாக சில பரிந்துரைகளை நூலாசிரியர்கள் தங்களது பொருளடக்கப் பக்கத்தின் இறுதி ஏட்டில் 10.1 முதல் 10.14 வரை காட்டியுள்ளார்கள்.

இவைகளோடு எனது தனிப்பட்ட கருத்தாக அரச பொது நிர்வாக வேலைத் திட்டங்கள் பற்றி நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பு விவாதமொன்றை ஏற்படுத்தி, ஐந்து உறுப்பினர்களும் கூட்டுச் சக்தியாக இணைந்து உரையாட வேண்டும். அவர்களது உரையாடல் ஆங்கிலம், சிங்கள மொழியில் அச்சிட்டு வாசிக்கப்படல் வேண்டும். பாராளுமன்ற மொழிபெயர்ப்புக்கப்பால் இது செல்ல வேண்டும். அதே வேளையில் சர்வதேச சமூகம் அறியும்படியாக அனைத்து வெளி நாட்டு ஸ்தானிகராலயங்களுக்கும் அறியத் தர வேண்டும்.

இப்புத்தகத்திலுள்ள முக்கிய விடயங்களை இக்கட்டுரையில் கோர்வையாக்கி காட்டப் பட்டுள்ளன. சமூக விஞ்ஞான கல்வி கற்கும் மாணவர்களுக்கும், சமூகங்களுக்குரிய மனித உரிமைகளை அறிய விரும்பும் ஆய்வாளர்களுக்கும் இந்த நூலில் அடங்கி யுள்ள மிகப் பெறுமதியான தகவல்கள் துணை புரியுமென்று திடமாக நம்பலாம்.

# நெஞ்சில் நிறைந்த மனிதம்.....



**"இந்தியாவின் தலை சிறந்த விஞ்ஞானி**
**தொழில்நுட்ப வல்லுநர்.....**
**மிகப் பெரிய பொருளாளர்....**
**இந்தியாவின் பதினோராவது குடியரசுத் தலைவர்.....**
**இந்திய ஏவு கணை நாயகன்....**
**இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை....**
**சிறந்த ஆசிரியர்.... சிறந்த பேச்சாளர்....**
**பாரத நாட்டின் பெறுமதியைக் கூட்டிய மா மேதை...."**

பாரத நாட்டின் புகழ் பெற்ற இராமேஸ்வரம் என்ற கிராமத்தில் பிறந்த ஒரு படகோட்டியின் மகன், எல்லோர் மனதில் என்றும் நிலைத்திருக்கும் ஒரு அறிவொளி. பிறந்த மண்ணுக்கும் பெற்றோருக்கும் என்றும் நினைவில் நீங்காத பெயரை தேடித் தந்த ஒரு மாமேதை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் சாரல்நாடன் நம் காலத்து மலையக சுடர்மணி



- சு. முரளிதரன் -
கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு

புதிய தலைமுறைகளிடையே வலிமையான சிந்தனைகள் தோன்ற வேண்டும் என்ற அவாக் கொண்ட இர.சிவலிங்கத்தின் பாசறையில் பூத்து இன்று பலரும் பார்த்து அதிசயிக்கின்ற ஆய்வாளராகத் திகழ்ந்த சாரல்நாடன் எழுபதாவது வயதில் நம்மை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். அறுபதுகளில் மலையகத்தில் ஓர் ஆத்திர பரம்பரை புறப்பட்ட தென சொல்லப்படும் மரபு மலையகத்தில் உண்டு. அந்த பரம்பரையில் இன்றளவும் செயற்றிறன் கொண்டு ஆரோக்கியமான பங்களிப்புச் செய்துவரும் சிலரில் பன்முக ஆளுமைகள் காரணமாக நிமிர்ந்து தன்னை நிலைநாட்டிக் கொண்டவர் சாரல்நாடன்.

**பிறப்பும் பாடசாலைக் கல்வியும்**

அப்கொட் - சாமிமலை, 1953 இல் தொழிற்சங்க முகிழ்ப்புக்கான போராட்டத்தில் தம்மைப் பலிகொடுத்த வெள்ளையன், இராசம்மா எனும் இரு தியாகிகள் காரணமாக பிரசித்தம் பெற்றது. அதே பகுதியில் 1944 இல் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கையை நெருக்கமாக நின்று நோக்கும் வாய்ப்புக்கள் மிக்க கணக்குப்பிள்ளையாக பணியாற்றிய கருப்பையாவின் மகனாகப் பிறந்த சாரல்நாடனின் இயற்பெயர் நல்லையா. சங்க இலக்கியத்திலிருந்து அவர் தெரிந்த புனைபெயரான சாரல்நாடன் என்பதாகவே பலருக்கும் அவர் அறிமுகமானவர்.

ஆரம்பக் கல்வியை அப்கொட் மின்னா தமிழ் பாடசாலையில் பெற்று இடைநிலை கல்விக்காக ஹற்றன் - ஹைலண்டஸ் கல்லூரியில் தொடர்ந்தார். தனது திறமையால் இர. சிவலிங்கத்தை கவர்ந்தார். இர. சிவலிங்கம் அவரை ஒரு பேச்சாளராகவே செதுக்கினார். ஹற்றன் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் அவர் ஜொலிக்கும் நட்சத்திரமாகத் திகழ்ந்தார். என்றாலும் மலையக சிந்தனைகளை உள்வாங்கிய அவரின் படைப்பு உள்ளம் பேச்சாளனை மீறிய ஒரு கவிஞனாகவும் உருவெடுக்க வைத்தது. 'ஐயோ பாவம்' எனும் தலைப்பில் சிட்டுக் குருவியொன்று மலை மாந்தர்களை பார்த்து கழிவிரக்கம் கொண்டு பாடுவதாக அமைந்த அவரின் கவிதை வீரகேசரியில் வெளிவந்தமையால் கிடைத்த வரவேற்பும் உற்சாகமும் அவரை மலையகத்தின் ஒரு கவனத்திற்கொள்ள வேண்டிய கவிஞனாக மாற்றியது.


பாடசாலைக் காலத்தில் மாணவரான இவருக்கே நூலகத்தை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. எனவே, நூல்களை வாசிக்கும் வரப்பிரசாதம் கிடைத்தது. மேலும் ஹைலண்டஸ் கல்லூரியில் இவரின் திறமை கண்டே வாய்ப்பு வழங்குவதற்காக உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பரீட்சையில் தோற்றி பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பு பெற்றாலும் பொருளாதார வாய்ப்பின்மையும் பெற்றோரையும் சகோதரிகள் பலரையும் போசிக்க தொழிலொன்றை தேட வேண்டியதாயிற்று.

**பாடசாலை வாழ்வுக்குப்பின் கண்டியில் செயற்பாடுகள்**

பாடசாலை உயர் கல்வியை முடித்துக் கொண்ட சாரல்நாடனை இர. சிவலிங்கம் கண்டி அசோகா பி. டி. ராஜனுக்கு அறிமுகப்படுத்தி வழங்கிய பரிந்துரை காரணமாக அவருக்கு அசோக விடுதியில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. கண்டியில் தனது தொழில்சார்ந்த ஒரு வாழ்க்கைக் காலம் அமைந்ததை சரிவர பயன்படுத்திக் கொண்டவராக சாரல்நாடனை இனங்காணலாம். தனது ஆய்வில் ஆற்றலை மேம்படுத்தி கண்டி அமெரிக்கன் நிலைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலகத்தை முழுமையாக பயன்படுத்தினார். மாற்று சிந்தனைகளை தாங்கிய கட்டுரைகளை பத்திரிகைகளுக்கு எழுதுபவராக தன்னை நிலைப்படுத்திக் கொண்டார். குறிப்பாக அரசகரும மொழித் திணைக்களம் தமிழ் மொழிபெயர்ப்புப் பணிகளில் 'ஏனோதானோவென செயற்படுவதை அம்பலப்படுத்தி காரசாரமாக வரைந்த கட்டுரை பலரின் கவனத்தை அக்காலத்தே ஈர்த்ததாக அமைந்தது.

கண்டியில் மலைநாட்டு நல்வாலிபர் சங்கம் மேற்கொண்ட கல்வி எழுச்சிப் பணிகளோடு சாரல்நாடன் தன்னையும் பிணைத்துக் கொண்டவராக விளங்கினார். குறிப்பாக மலை நாட்டு நல்வாலிபர் சங்கம் ஆங்கில மொழி மூலமாக அனைவரும் மலையக கல்வி நிலையை அறிந்து கொள்வதற்காக ஏற்பாடு செய்திருந்த மகாநாடு The Hindu பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தை அது குறித்து எழுதும் வண்ணமாக அமைந்திருந்தது. அம்மாநாட்டினை நடத்துவதில் பங்களித்ததோடு மட்டு மல்லாமல் சிறந்த மொழிபெயர்ப்பாளராக செயற்பட்டமையை கப. சிவம் என்னைக் காணும்போதெல்லாம் நினைவுகூருவார். அது மட்டுமல்லாமல் கண்டியிலிருந்து கப. சிவம் நடத்திய 'மலைமுரசு' பத்திரிகையில் தொடர்ச்சியாக தனது சிறுகதைகள் மற்றும் கவிதைகள் இடம்பெறுவதை உறுதி செய்து கொண்டிருந்தார். ஹற்றனில் ஆசிரியராக பணியாற்றியபோது சாரல்நாடனுக்கு நெருக்கமாக இருந்த நாடகாசிரியர் நவாலியூர் ந. செல்லத் துரை பின் கண்டி திருத்துவ கல்லூரியில் ஆசிரியராக இணைந்து நியமனம் பெற்று கண்டி வந்தபோது நட்பு மேலும் தொடர்வதாயிற்று. இது மலையக மற்றும் ஏனைய படைப்பாளிக ளோடு சாரல்நாடன் பரிச்சியம் கொள்வதற்கும் அவர்களோடு இணைந்து செயற்படுவதற்கும் வழிவகுத்தது.

### தொழிற்சாலையில் தொடங்கும் வாழ்வும் தொடரும் படைப்புலகமும்

கண்டி அசோகாவிலே தொடர்ந்தும் பணியாற்றி கல்வித்துறை சார்ந்த ஒருவராக வெளிப்படுவாரென பலரும் கருதியிருக்கும்போது சில வாழ்வியல் அழுத்தங்கள் காரணமாக தனது ஊரான சாமிமலைக்கு அருகிலுள்ள மின்சிஸ்லேண்ட தோட்ட தேயிலைத் தொழிற் சாலையில் பயில்நிலை உதவி உத்தியோகத்தராக இணைந்துகொண்டார். இப்பணியும்கூட அவரை ஒரு நல்ல மலையக படைப்பாளியாக பங்களித்தது. இக்காலப் பகுதியில் அவரின் சிறுகதைகளை தினகரன், வீரகேசரி, சிந்தா மணி பத்திரிகைகள் விரும்பி வரவேற்றுப் பிரசுரித்தன.

அவ்வாறான சிறுகதைகளை பார்க்கும் போது, தொழிலாளர்களை எவ்வாறு நேசித்தார் என்பதையும் தோட்ட உத்தியோகத்தர்களாக செயற்படுவதிலுள்ள பலங்களையும்பலவீனங்களையும் சொல்வதோடு அத்தகையவர்களின் வாழ்வியலை சித்தரிப்பதைக் காணலாம்.

அறியாமையின்பாற்பட்ட தொழிலாளர்களின் மனக்கதவு திறக்கப்பட வேண்டும். அநீதியும் அநியாயமும் தங்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்றதென்ற உண்மையை அவர்கள் உணர்ந்தே ஆக வேண்டும். தூங்கிக் கிடக்கும் அவர்களின் சக்தியை தட்டி எழுப்புவதன் மூலமே தூங்கும் மத்தியதர வகுப்பினரை துயில் எழுப்ப முடியும் என சாரல் நாடனின் சிறுகதை ஒன்றில் கூறப்படுகின்றது, உண்மையில் பெருந்தோட்ட பகுதி என்பது படைப்பிலக்கியங்கள் ஊடாக தொழிலாளர்களை பெரும்பான்மையாகக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் தான் மலையகத்தை ஆக்கிரமிக்கிற தென்ற தொனி உருவாகின்றது. ஆனால், அங்கே தொழிலாளர்களுக்கும் துரைமார்களுக்கும் இடையில் மத்தளமாகவிருந்து இருபுறமும் அடி வாங்கி தவிக்கும் ஒரு கூட்டம் மேலே சொல்லப்பட்ட துயில் கொள்ளும் மத்தியதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பினரான தோட்ட ஊழியர்கள் ஆவர். கணக்குப்பிள்ளைகளும் டீமேக்கர்களும் கண்டாக்டர்களும் கிளாக்கர்களும் மத்தியதர வர்க்கத்தின் பிரதிநிதிகளாகக் கருதப்பட்டு அவர்களை மெத்தனமாக சித்தரிக்கும் பண்பு இன்றுவரை மலையக சிறுகதை நாடக வடிவங்களில் தொடர்ந்து வந்திருக்கின்றது. சில சமயங்களில் இவர்களின் செயற்பாடுகள்தான் மலையகத்தின் படைப்புகளுக்கு கருக்களை தருகின்றன என்று மனோபாவம் கொண்ட படைப்பாளிகளும் உண்டு.

அன்று தொடக்கம் இன்று வரை இந்த தோட்ட ஊழியர்களாக நியமிக்கப்படுபவர்களில் அதிகமானோர் தோட்டங்களிலே பிறந்து வளர்ந்து ஓரளவு படித்தவர்கள். சிலர் வேறு பிரதேசங்களில் இருந்து செல்வாக்குகள் காரணமாக இங்கு வந்து சேர்ந்தவர்கள். அடிப்படையில் தோட்ட சமூகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் துரோகிகளாக மாறி தோட்ட நிர்வாகத்திற்கு உடந்தையாக இருக்க முடியும் என்பது பலராலும் எழுப்பப்படும் வினாவாகும். அந்த வினாக்களுக்கெல்லாம் சிறந்த தோட்ட ஊழியர் ஒருவரின் உள்ளுணர்வு பதிலளிக்கும் பாங்கிலே சாரல்நாடன் சிறுகதைகளைப் படைத்திருந்தார்.

மலையகத்திற்கென இன்ன இன்ன பிரச்சினைகள் தான் இருக்கின்றன; அவற்றுக்குள்ளே கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்ற தன்மையில் இருந்து புறம் நீங்கி எல்லோருக்கும் உள்ள காதலும் சோகமும் பிரிவுத் துயரும் இந்த சமூகத்திற்கும் இருக்கக்கூடாதா என கேட்பவராக தோட்டத்தின் நாயகர்களையும் நாயகிகளையும் வைத்து பிசிர் இல்லாமல் உணர்ச்சி குழம்புகளை படைப்புகளாக தரும் ஆற்றல் கொண்டவராக **'புது புனல்', 'கண்ணீரிலே கரைந்த இரவு', 'சாளரம்'** எனும் கதைகளின் ஊடாக தரிசனம் அளிக்கின்றார். சில நாள் தாம்பத்தியத்தின் பின் கைம்பெண்ணாகி விழிகள் நிரம்பி வழிகின்ற இருபது வயது பெண்ணுக்கு கர்ப்பிணி நிலையிலும் கைகொடுக்கவரும் காத்திருந்த காதலன் கதைக்குள் வரும்போது மனமதுக்குள் நிறைந்து போகின்றான். இது 'புது புனல்' ஏற்படுத்தும் அனுபவமாகும். அதே போல் 'கண்ணீரிலே கரைந்த இரவில்' முன் இளமை காலத்தில் தவறிப்போன வடுவையும் கானகத்து மலராக விரிந்துவிட்ட தற்போது எதிர்கொள்ளும் பாலியல் இம்சைகளின் அவஸ்தைகளையும் கணவன் என்று வாய்த்த ஒருபிரகிருதியோடு ஒருநாள் தன் மனதில் உள்ள சுமையை எல்லாம் அவள் இறக்கி வைக்கும் போது அந்த இரவு கண்ணீரில் கரைந்ததாக அவர் சொன்னாலும் அந்த கதையில் நாமும் சிறிது கரைந்துதான் போகின்றோம். இவைகள் சாரல்நாடன் அறுபதுகளில் முன்வைத்த வித்தியாசமான அனுபவங்களாக இருந்திருக்கலாம்.

தோட்ட ஊழியர்களோடு தொழிலாளர்கள் ஆத்மார்ந்த ரீதியில் தனிப்பட்ட உறவுகளை வைத்திருக்க வேண்டியது அந்த சூழ்நிலையில் தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வாறு இணையும் தொழிலாளி பந்தக்காரன் என பெயர் பெறுவதும் தவிர்க்க முடியாதது. ஆனால், 'வைராக்கியம்' கதையில் டீமேக்கர் சுந்தரேசனும் தொழிலாளி மருதமுத்தும் வித்தியாசமானவர்களாக இருந்து கதையின் முடிவிலே நம்மை சற்றே அதிர வைக்கிறார்கள். அதே போலவே **'உள்ளும் புறமும்'** கதையில் கண்டாக்டர் ஐயாவும் முத்துவும் ஒருவரை யொருவர் விளங்கிக் கொள்ளும்போது வித்தியாசமான அனுபவம் ஏற்படுகின்றது.

**'பிரேத ஊர்வலம்'** கணக்கபிள்ளை பற்றி தொழிலாளர்கள் உள்ளார்த்தமாக கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை கதாசிரியர் அவர் மகன் போர்வையில் கதைக்குள்ளே வந்து சமாதானம் செய்து வைக்கின்றார். கண்டக்டர் ஒருவர் கிளர்ச்சி செய்யும் செம்பதேவன்மீது தன் மனதுக்குள்ளே எப்படியொரு மரியாதை கொடுத்து வைத்திருக்கின்றார் என்பது தனி ஒருத்தனில் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு தோட்ட உத்தியோகத்தர்கள் பிரதானமான கதாபாத்திரங்களாக உலாவரும் கதைகளின் மூலம் உத்தியோகத்தர்களை ஏற்படுத்திக் கொண்டவர்கள் படிஇறங்கி அவர்களுக்குள்ளேயும் மனிதர்கள் ஒழிந்திருக்கிறார்கள் என்ற உள பதிவை ஏற்படுத்துவதில் சாரல்நாடன் பெற்ற வெற்றி சாதாரணமானதல்ல.

பயில்நிலை தொழிற்காலம் பூர்த்தியான பின் பூண்டுலோயா டன்சினன் பெருந்தோட்டத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய தொழிற்சாலையில் நிரந்தர உதவி உத்தியோகத்தராக 1965ம் ஆண்டு நியமனம்பெற்று பின் தனது வாழ்க்கைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் பெரும்பகுதியை அங்கேயே கழிக்க வேண்டியிருந்தது. அக்காலத்திலே மேற்படி கதைகள் உருவாகின.

1973 வரை துடிப்போடு படைப்புத்துறையில் இருந்தாலும் தொழில் குறித்த கவனமிகுதி காரணமாகவும் இலக்கிய நண்பர்களிடமிருந்து தொலைவாகிப் போனதும் அவரை ஆக்க இலக்கிய பணியிலிருந்து ஒரு தற்காலிக அஞ்ஞானவாசத்தை மேற்கொள்ளச் செய்திருந்தது. அவ்வப்போது ஆர்வமிகுதி கொண்டு குறிஞ்சித் தென்னவன் அவரை சந்தித்துச் செல்வது மட்டுமே அவருக்கு ஆறுதலாக அமைந்த இலக்கிய தொடர்பென சாரல்நாடன் அடிக்கடி கூறுவதுண்டு.

## தொழிற்சங்க அரசியல் முனைப்புகள்

தொழில் பாதுகாப்புக்காக அவர் இ. தொ. கா. சார்ந்த தோட்ட ஊழியர் சங்கத்தில் இணைந்திருந்தார். அவரின் திறமைகளை இனங்கண்ட இ.தொ.கா அதன் தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக தெரிவுசெய்து அவரை தீவிர தொழிற்சங்க செயற்பாட்டாளனாக மாற்றிவிட்டிருந்தது. தோட்ட சேவையாளர் நலன்களுக்காக ஒரு தோட்ட தொழிற்சாலையின் முதன்மை அதிகாரி என்ற வகையில் முகாமைத்துவம் விதிக்கும் வஞ்சகவலையில் சிக்காமல் தன்னையும் தொழிற்சங்க நலவுரிமைகளையும் காத்துக் கொள்வதென்பது அவருக்கு கத்திமீது நடக்கின்ற அனுபவத்தை நன்றாகவே கற்றுத் தந்திருந்தது. தோட்ட முகாமையாளருக்கு எதிராக தோட்ட ஊழியர்கள் மேற்கொண்ட பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தலைமை வகித்திருந்தார்.

மறைந்த தலைவர் தொண்டமான், செல்லசாமி மற்றும் முத்துசிவலிங்கம் போன்றவர்கள் மிகுந்த அனுசரணையாக செயற்படுமளவுக்கு ஈர்ப்புச்சக்தி கொண்டவராக சாரல் விளங்கினார்.

இதன் காரணமாக ஏற்பட்ட இ.தொ.கா.வின் நெருக்கம் அவரை கொத்மலை பிரதேச சபைக்கு தலைமைத்துவ வேட்பாளராக போட்டியிட வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியிருந்தாலும் தனது தொழிற் பாதுகாப்புக்கும் அதிலிருந்த அக்கறையும் காரணமாக அரசியலைத் தவிர்த்துக் கொண்டார்.

## தேக்கத்தின் பின் தீவிர ஆய்வாளனாக புதுப் பிரவேசம்

எண்பதுகளின் நடுப்பகுதியில் அவரின் வாழ்க்கையில் இலக்கிய மற்றும் ஆய்வு சார்ந்த எழுச்சி ஏற்படுவதற்கு அந்தனி ஜீவா தூண்டுகோலாகின்றார். அறுபதுகளில் சாரல் நாடனின் பங்களிப்புகளுக்கூடான அவரின் மேதாவிலாசத்தை சரிவர உள்வாங்கிக் கொண்ட அந்தனி ஜீவா அவரை சி. வி. வேலுப்பிள்ளை குறித்து தேடுதல் நடத்தி மலையகத்துக்கு அவரின் கம்பீரத்தை உணர்த்தக் கொடுத்த உந்துதல் 'சி. வி. சில சிந்தனைகள்' எனும் ஆய்வு நூலாக (1986) வெளிவரும்போது - புதிய மலையகத்துக்கு சி. வி. மட்டுமல்ல சாரல்நாடனும் மீளறிமுகமாகிறார். சி. வி. க்கும் சாரல்நாடனுக்கும் ஒரு தலைமுறை இடைவெளியிருந்தாலும் சி. வி. குறித்த சிந்தனைகளை எழுத்துருவாக்கும்போது பளிச்சிட்ட நேர்மையும் நேர்த்தியும் இலங்கையிலும் தமிழகத்திலும் ஒரு பரந்த அங்கீகாரத்தை இருவருக்குமே ஈட்டிக்கொடுத்தது.

சாரல் நாடனில் திணவெடுத்த ஆய்வூக்கம் மழுங்காதிருக்க, அந்தனி ஜீவா சாரல்நாடனை நடேசய்யர் பற்றிய தேடல்களை மேற்கொள்ளச் செய்து அனுசரணையாக இருந்தமை சாகித்தியப் பரிசு பெற்ற 'தேசபக்தன் நடேசய்யர்' (1988) வெளியாவதற்கு காரணமாக அமைந்தது.

மலையக சண்டமாருதமாக விளங்கி தொழிலாளர் எழுச்சிக்கு வழிசெய்த கோ. நடேசய்யரை ஒரு மேருமலையாக புதியவர்களுக்கு அவர் அறிமுகப்படுத்த அவர் மேற்கொண்ட சிரமம் சார்ந்த பணி நடேசய்யர் குறித்து மாத்திரமன்றி மலையக வரலாற்றில் காணமல் போயிருந்த பல பக்கங்களையும் மீட்டெடுப்பதாகவும் இருந்தது. சாரல்நாடனின் எழுத்துக்கள் வெறும் உரைவீச்சுக்கள் என சொன்னவர்களெல்லாம் நடேசய்யர் நூல் வருகைக்குப் பின் அவரை ஓர் அறிஞராக காணத் தொடங்கினர். பல்கலைக் கழகங்கள் அந்நூலை பார்த்து ஆச்சரியப்பட்டன. வெறுமனே முதுமாணி அல்லது கலாநிதி பட்டங்களுக்காகவே ஆய்வுகள் நிகழ்கின்ற சூழலில் தனியாக நின்று சுயாதீனமாக செயற்படும் சாரல்நாடனை பல்கலைக் கழக விரிவுரையாளர்களும் புத்திஜீவிகளும் பாராட்டாமல் விட்டால் எங்கே தாங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்துவிட்டவராகி விடுவோமோ எனும் அருட்டுணர்வில் சற்று நீளமாக கைகளை அவரிடம் நீட்டிக் குலுக்கிக் கொண்டார்கள். தமிழகத்தில் மலையரசி பதிப்பகம் மலையகத்திலிருந்து புலம் பெயர்ந்த அவரின் நண்பர் சிக்கன் ராஜுவினால் நடத்தப் பட்டுவந்தது. அவரும் சாரல்நாடன் முன்னர் எழுதிய பத்திரிகை கட்டுரைகளை தொகுத்து 'மலையகத் தமிழர்' (1990) எனும் நூலாக வெளியிட்டு அவரின் ஆளுமைக்கு மெருகேற்றினார்.

இந்து கலாசார திணைக்களம் அக்காலப் பகுதியில் நடத்திய நாட்டாரியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு மலையக நாட்டாரியல் தொடர்பில் கட்டுரை வாசித்த தோடு அதன் தொடர்ச்சியில் 1993 ஆம் ஆண்டு சென்னை சவுத் ஏசியன் வெளியீடாக மலையக வாய் மொழி இலக்கியம் எனும் நூலை வெளியிட்டார்

அந்தனி ஜீவா கொழுந்து சஞ்சிகையும் இக்காலப் பகுதியில் தொடர்ச்சியாக வருவதாக இருந்தது. அதன் தரத்துக்கு சாரல் நாடனின் எழுத்துக்கள் வெகுவாக பங்களித்தது.

### கொட்டகலையில் தொடர்ந்த பணிகள்

டன்சினன் தோட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்று புசல்லாவ பகுதியில் நியூபீகொக் தோட்டத் தொழிற்சாலையில் முதன்மை அதிகாரியாக பணியாற்றி பின் கொட்டகலை பகுதியில் உள்ள டிரேட்டன் மற்றும் கெலிவத்தை தேயிலை தொழிற்சாலைகளில் கடமையாற்றினார். நியுபீக்கொக் தோட்டத்தில் பிரபல நாவலாசிரியரும் அங்கு பணியாற்றிய வைத்தியருமான ஞானசேகரனின் நெருக்கம் வாய்த்தது. இதுவும் அவருக்கு எழுத்துலக உந்து சக்தியாக அமைந்தது. அதுவே குமரன் பதிப்பகத்துக்கூடாக தமிழகத்தில் அவரின் சிறுகதைகளை தொகுத்து 'மலைக்கொழுந்தி' (1994) எனும் பெயரில் வெளிவரக் காரணமாக அமைந்தது. இந்நூல் கொட்டகலை பிரதேச சபை மண்டபத்தில் வெளியிடப்பட்டது. அப்போது கொட்டகலை யதன்சைட் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இருந்த நான் நூல் நயவுரை செய்திருந்தேன்.

மூத்த எழுத்தாளர் சோமகாந்தனின் அறிமுகமும் நெருக்கமும் காரணமாக சாரல்நாடனின் இலக்கிய பணி விசாலமானது. அவரின் வேண்டுகோள்கள் காரணமாக மலையகத்தில் இராம வழிபாடு தொடர்பில் ஆய்வு செய்து Rama Cult in Plantation என்பதாக ஆங்கில கட்டுரை வடித்து தொகுப்பு நூலொன்றில் வெளிவரச் செய்ததோடு, யாழ்ப்பாணம் சென்றும் இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். நான் அக்காலப்பகுதியில் இலங்கை வானொலியில் தொகுத்தளித்த கலைப்பூங்கா நிகழ்ச்சிகளில் பங்குபற்றி உரைகளாற்றி இருந்தார்.

அக்காலப்பகுதியில் மலையக கலை இலக்கிய பேரவை தலைவராக விளங்கி அந்தனி ஜீவாவையும் என்னையும் வேகமாக இலக்கிய செயற்பாடுகளில் ஈடுபட செய்தார். திரு. புத்திரசிகாமணி அவர்கள் மத்திய மாகாண தமிழ்க்கல்வி அமைச்சராக இருந்த போது நடைபெற்ற சாகித்திய விழாக்கள், மலையக தமிழாராய்ச்சி மகாநாடு மற்றும் கலாசார அமைச்சு நடத்திய பிரதேச சாகித்திய விழா என்பவற்றில் பங்களிப்புச் செய்திருந்தார். அப்போது அவரின் 'மலையகம் வளர்த்த தமிழ்' நூலுக்கான ஆய்வுக்கு அடிக்கடி சுவடிக்காப்பகத்துக்குச் சென்றுவந்து அதனை துரைவி வெளியீட்டகத்தூடாக 1996 ஆம் ஆண்டு வெளியிட்டார். அப்போது கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் எனது தலைமையில் 1997 ஆம் ஆண்டு வெளியீட்டு வைபவம் நடைபெற்றபோது அதில் அவரின் அபிமான ஆசிரியர் இர. சிவலிங்கமும் உரையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதன் பின் பெண்கள் கல்வி ஆய்வு வட்டத்துக்காக 'இன்னொரு நூற்றாண்டுக்காய்' எனும் நூலை வெளியிட்டார். நடேசய்யர் குறித்த தேடலில் மூழ்கி அவர்பால் வசியமுற்றவராக சில காலமிருந்த சாரல்நாடன் மேலும் மேலும் நடத்திய தேடல்களின் விளைவாக 'பத்திரிகையாளர் நடேசய்யர்' (1998) எனும் சாகித்திய பரிசு பெற்ற மற்றுமொரு ஆய்வு நூல் வெளியாக வழிவகுத்தது.

### படைப்பு மற்றும் பதிப்பு முயற்சிகளில் தீவிரம்

2000 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பின் கொட்டகலை கலை இலக்கிய வட்டத்தையும் சாரல் வெளியீட்டகத்தையும் தோற்றுவித்து முதலில் அதனூடாக சுப்ராமைந்தன் எனும் பெயரில் நான் தொகுத்த ஆசிரிய கலாசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் 'விருட்சப் பதியங்கள்' கவிதை நூலை வெளியிட்டார். அதன் பின் அதனூடாக 'மலையக இலக்கியம் - தோற்றமும் வளர்ச்சியும்' எனும் தனது நூலை கொண்டுவந்தார்.

பதிப்பு முன்னெடுப்பதில் அக்கறையாக செயற்பட்டமை காரணமாக மல்லிகை சி. குமார (மனிஷியம்), மொழிவரதன் (ஒரு நாடும் மூன்று நண்பர்களும், தங்கமே தளிரே) சிக்கன் ராஜு. (வேரற்ற வாழ்வு) சு. முரளிதரன் (மலையக இலக்கியத் தளங்கள், வரவும் வாழ்வும்), பபியான் (உயிர்த்தெழச் சொல்லுங்கள்) போன்றோரின் நூல்கள் தொடர்ச்சியாக வெளிவர முடிந்தது. மேலும் சாரல்நாடன் 'பிணம் தின்னும் சாத்திரங்கள்' (2001), 'மலையக தமிழர் வரலாறு' (2003), 'பேரேட்டின் சில பக்கங்கள்' (2004) 'கண்டிராசன் கதை' (2005) 'புதிய இலக்கிய உலகம்' (2006) இளைஞர் தளபதி இர. சிவலிங்கம் (2009) 'சிந்தை அள்ளும் சிவனொளிபாதமலை (2009) என சாரல் பதிப்பகம் ஊடாக தனது படைப்புகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டார். இந்த நூல்கள் ஒவ்வொன்றும் உருவாகும்போது சாரல்நாடன் அவர்களோடு நெருக்கமாக இருந்தேன் என்பதால் அவற்றின் பின்னணி குறித்து எழுதினாலே அரிய தகவல்களை சொல்லக்கூடியதாக இருக்கும்.

உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்லலாம். நானும் சாரல்நாடனும் கொழும்பில் பழைய நூல்களை விற்பனை செய்யும் இடங்களுக்கு ஒரு முறை சென்றிருந்தோம். அப்போது 1941ம் ஆண்டு புசெல்லாவை பகுதியில் நடைபெற்ற போப் துரை கொலை வழக்கு பதிவுகள் (Pope murder case) அடங்கிய நூலைக் கண்டோம். சாரல்நாடன் அந்நூலில் கொண்ட ஆவல் விற்பனையாளனை அதிக விலை சொல்ல வைத்திருந்தது என்றாலும் அதை வாங்கி வந்து அதிலே மூழ்கி கொடுங் கோலனான துரையை கொலை செய்து தூக்கு மேடையேறிய இரு தியாகிகளான தொழிலாளர்களின் வரலாற்றை கட்டுரையாக வடித்ததோடு குறுநாவலாகவும் படைத்து வீரகேசரியில் தொடர்ச்சியாக எழுதியிருந்தார். இதனையும் நூலாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டு பிரசுர அனுசரணை வேண்டி நூலக மற்றும் ஆவணவாக்கல் சபைக்கு அனுப்பி வைத்திருந்தார். அச்சபையின் உறுப்பினன் என்றவகையில் பிரசுரத்துக்கான அங்கீகாரம் வழங்கியிருந்தாலும் சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதித் தட்டுப்பாடு காரணமாக அது சாத்தியமில்லாமலிருக்கின்றது.

2004ம் ஆண்டுக்கு பின் சாரல்நாடனின் பணிகள் ஹற்றன் தமிழ்ச் சங்கத்தை ஒட்டியதாக அமைந்தது. திரு. ஓ. ஏ. இராமையா ஆலோசகராகவும் நான் தலைவராகவும் சாரல்நாடன் உப தலைவராகவும் லிங்கம் செயலாளராகவும இருக்குமாறு தமிழ்ச் சங்கம் இயங்கியது. சாரல்நாடனின் நூல்களும் மற்றும் பல நூல்களும் ஹற்றன் தமிழ்ச் சங்கத்தினால் ஹற்றன் நகர சபை மண்டபத்தில் அறிமுகம் செய்யப்பட்டன. அக்கூட்டங்களில் பலதரப்பிலான மலையக ஆளுமைகள் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கினார்கள், என்றாலும் ஓ. ஏ. ராமையா மற்றும் சாரல்நாடனின் உரையையும் கருத்துக்களையும் கேட்பதற்கு இக்கூட்டங்களுக்கு பலர் வருவார்கள்.

இக்காலப் பகுதியில் ராமையாவுக்கும் சாரல்நாடனுக்கும் வலுவான தொடர்பு உருவாகியது.

ராமையாவின் பழுத்த இடதுசாரி தொழிற் சங்க அனுபவங்களை தெரிந்துகொண்டு அதனை அடிப்படையாகக் கொண்ட மலையக வரலாற்றை எழுதும் ஆவல் கொண்டவராக இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தான் மட்டுமே நூல்கள் எழுதி வெளியிட வேண்டும் என்ற மனப்பாங்கிலிருந்து விலகி மற்றவர்களையும் ஊக்குவித்து நூல்களை வெளியிடச்செய்ய வேண்டுமென்ற அவரின் உயரிய சிந்தனையின் பெறுமானம் காலங்கடந்தே பலருக்கும் புரியவரும். சி. வி. வேலுப்பிள்ளை தினகரனில் தொடராக எழுதிய 'வாழ்வற்ற வாழ்வு' நாவலின் அத்தியாயங்களை தேடியெடுத்து பெரிய நூலானாலும் அதனை வெளியிடுவதிலும் குறிஞ்சித்தென்னவன் கவிதைகளை தொகுத்து கவிச்சரங்களாக வெளியிடுவதிலும் அவர் காட்டிய அக்கறை அவரின் பெருமையை என்றென்றும் பறைசாற்றும் முயற்சியாக அமையுமெனலாம்.

குமரன் பதிப்பகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழ் சுடர்மணிகள் வரிசையில் கோ. நடேசய்யர் மற்றும் சி. வி. வேலுப்பிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் இரு நூல்களை எழுதி குமரன் பதிப்பகத்தின் மூலம் தமிழ்கூறு உலகத்துக்கு வழங்கினார். மலையக நிர்மாண சிற்பி எனும் நடேசய்யர் எனும் இந்நூல் எம். துரைசாமி அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு சிங்களத்தில் 2011ம் ஆண்டு குமரன் பிரசுரமாக வெளிவந்தது. இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பதாக மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை எனும் குமரன் பிரசுரத்துக்காக கொட்டகலையிலும் ஹற்றனிலும் வெளியீட்டு விழாக்களை நடத்தியிருந்தார். கடைசியாக குமரன் பதிப்பகம் அவரின் மலையக தமிழ் இலக்கிய முயற்சிகள் நூலை வெளியிட்டது. ஆனால், வெளியீட்டு விழா காணாமலேயே மறைந்து போனார்.

மலையகத்தின் ஒரு சராசரி குடும்பத்தில் பிறந்து. பாடசாலைக் கல்வியை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு கடின உழைப்பை எதிர்பார்க்கும் தேயிலை தோட்ட தொழிற் சாலை அதிகாரியாக பலமட்டங்களில் பணியாற்றிய வாறு - அரச விருது பெறுமளவுக்கான மூன்று ஆய்வு நூல்களையும் படைத்து தமிழ் கூறு உலகின் கவனத்தை தன்பால் திரும்ப வைத்துள்ள சாரல்நாடனை குறித்து மலையகத்தில் மாத்திரம் அல்லாமல் முழு இலங்கையிலும் ஒரு பிரமிப்பு இருப்பதை நான் வலிதாகவே உணர்ந்திருக்கிறேன்.

சிதம்பர ரகுநாதன், பே. சு. மணி, எஸ் வி. ராஜதுரை போன்ற சிலரே தமிழகத்தில் சுயாதீனமாக ஆய்வு மேற்கொண்டு தமிழ்ப்பணி செய்வோராக இனங்காணப்பட்டுள்ளனர். இவ்வாறான ஓர் அடையாளம் பெறக்கூடியவராக இலங்கையின் சார்பில் சொல்லக்கூடியவர்களுள் ஒருவராக இருப்பதோடு மலையகத்தில் தனித்து விளங்குபவராகவும் இருக்கின்றார். இலங்கையில் குறிப்பாக மலையகத்தில் சாரல்நாடன் வரலாறு ஆய்வுத்துறையில் எட்டிய சாதனையை முறியடிக்கக்கூடியதான வேறு ஒரு ஆளுமையிருப்பதற்கான தடத்தைக்கூட காணக்கூடியதாக இல்லை.



## மகாத்மா காந்தி அடிகள்

- மாணவருக்கு உண்மையான பாடப்புத்தகம் ஆசிரியரே. ஆசிரியர் தாம் படித்துத் தெரிந்து கொண்டவைகளையெல்லாம் தன்னுடைய சொந்த நடையில் சொல்லிக் கொடுக்கவேண்டும். சாதாரண வாய்மொழியாகச் சொல்பவற்றை வெகு எளிதாக மாணவர்களால் திரும்பச் சொல்ல முடியும்
- ஒவ்வொரு மாணவரும் தமது சமயத்தைப் பற்றியும் அது சம்பந்தமான நூல்களைப் பற்றியும் பொதுவாகத் தெரிந்திருப்பது அவசியம். ஆன்மா பற்றிய ஞானத்தை அறியச் செய்து தன்னை அறிவது ஆகும்.
- கோழையாக இருக்கும் ஓர் ஆசிரியர் தம்மிடம் படிக்கும் மாணவர்களை வீரர்களாக்கி விடமுடியாது. மாணவர்களை அடிப்பதுபோன்ற தண்டனையே கூடாது. அவனிக்காற்றே படக்கூடாது என்று குழந்தைகளைப் பத்திரமாக மூடி வைத்து வளர்த்து விடுவதால் அவர்களைத் தீமைகள் பற்றாமல் விடுவதில்லை.
- சிறுவர் சிறுமிகளைச் சேர்த்து வைத்துப்போதிக்கும்போது பெற்றோரும், ஆசிரியரும் கடுமையான வேதனைகளுக்கு ஆளாகுகிறார்கள். உண்மையான ஆசிரியராகவும் பாதுகாப்பாளராகவும் இருக்கவேண்டுமாயின் மாணவர்களுடைய உள்ளங்களைத் தொடவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இலக்கிய உலகில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

– திருமதி. எஸ். தேவகுமாரி –

முதுநிலை விரிவுரையாளர், மொழிகள்துறை, சப்ரகமுவப் பல்கலைக் கழகம், பெலிகுல்லோயா

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் அறிஞர் பெருமக்களுள் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை என்றும் நினைவு கூரத்தக்கவர். அவர் 1903.07.02 அன்று புலமைப்பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த தும்பளையிற் பிறந்தார். பன்மொழி விற்பன்னரான அவர் மொழியியலாளர், ஆய்வாளர், கவிஞர், புனைகதையாசிரியர், நாடகாசிரியர் எனப் பல்துறைப்புலமை மிக்கவராகவும் திகழ்ந்தார். பல்கலைக்கழக விரிவுரையாளர், தலைவர், தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர், பேராசிரியர், பீடாதிபதி, துணைவேந்தர் எனப் பல பதவிகளையும் வகித்தார். தமிழ்ச்சங்கப் பெருந்தலைவராக இருந்த வேளையில் மாணவர்கள் நடிப்பதற கென்று 10 நாடகங்கள் எழுதியுள்ளார். அவற்றுள் மாணிக்கமாலை என்ற இலக்கிய நாடகம் தவிர ஏனைய 9 நாடகங்களும் மேடையேற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பல்துறை விற்பன்னராக இருந்தாலும் அவரது நாடக இலக்கியங்களே அவருக்கு மிக்க புகழை ஈட்டித்தந்தன. இவ்வாறு இவருடைய பல்துறைப் பங்களிப்பு களையும் ஆளுமைகளையும் ஆய்வு செய்கின்ற வேளையில், தமிழ் இலக்கிய உலகில் இவருக்கெனத் தனியானதொரு இடமுண்டு என்பது புலனாகின்றது.

## i. கல்விப் பின்புலம்

அவர் ஆரம்பத்திலேயே மரபுவழித் தமிழ்க் கல்வியுடன் வடமொழிக் கல்வியையும் கற்கத் தொடங்கினார். பின்பு ஹாட்லிக் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியை முடித்துக்கொண்டு, 1927 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிற் சேர்ந்து சமஸ்கிருதத்தில் சிறப்புத் தேர்ச்சிபெற்று, 1930 ஆம் ஆண்டு கலைமாணிப் பரீட்சையில் மிகத்திறமையான முறையில் (First class) சித்தியடைந்தார். அதற்காக இலங்கை அரசாங்கம் கீழைத்தேய மொழி ஆராய்ச்சிப் பரிசினை வழங்கியது. இதன் மூலம் நான்கு ஆண்டுகள் வெளிநாடுகளில் படிப்பதற்கான அரிய வாய்ப்பினைப் பெற்றுக் கொண்ட அவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் வித்துவான் பட்டக்க ல்வியினை கற்றுத்தேர்ந்து, 1932 ஆம் ஆண்டு வித்துவான் பட்டத்தைப் பெற்றார். பின் இலண்டன் பல்கலைக்கழகக் கீழைத்தேய ஆய்வுப் பள்ளியில் சேர்ந்து கற்றுத் தேர்ந்த தோடல்லாமல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

## ii. பதவிகளும் பணிகளும்

பேராசிரியர் அவர்கள் 1936ஆம் ஆண்டு தொடக்கம் 1965 ஆம் ஆண்டு வரை 29 வருடங்கள் தமிழ்த்துறைத் தலைவராகவும், விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். 1947ஆம் ஆண்டு தொடக்கம் 1965 ஆம் ஆண்டுவரை 18 வருடங்கள் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் விளங்கினார். அக்காலப் பகுதியில் அவர் தமிழர்களுக்கும் தமிழ் இலக்கிய உலகிற்கும் ஆற்றிய சேவை மதிப்பிடற்கரியது. அவ்வேளையில் அவருக்கு கீழைத்தேய மொழிகள் பீடத்தின் தலைவராக மட்டுமன்றித் துணைவேந்தராகப் பணியாற்றும் சந்தர்ப்பமும் கிடைத்தது. துணை வேந்தராக இருந்த வேளையில் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழகத் துணை வேந்தர் மாநாடுகளில் பங்கு பற்றினார். மேலும் கீழைத்தேய மொழியியல் மாநாடுகளிலும் பங்குபற்றினார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினைத் தோற்றுவித்த சிறப்புக் குரியவர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. **ஆய்வு முயற்சிகள்**

பரந்த அறிவையும் பன்மொழிப் புலமையையும் கொண்ட பேராசிரியர் சிறு வயது முதற்கொண்டு கலாநிதிப்பட்ட ஆய்வுவரை மொழிவழிக் கல்வியையே கற்றார். அதனால் அவரது ஆய்வுகளில் அதிகமானவை மொழியியல் தொடர்பானவை. அவர் ஏறக்குறைய 40 ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு இதழ்களுக்கும் எழுதியுள்ளார். ஏழாம் எட்டாம் நூற்றாண்டுக்குரிய தமிழ் கல்வெட்டுக்களில் மொழி பற்றிய ஆய்வு (A study of the Language of the Tamil inscriptions of $7^{th}$and $8^{th}$ century AD) என்பதே அவருடைய கலாநிதிப்பட்ட ஆய்வேட்டுக்குரிய தலைப்பாகும். இதுவே தமிழ்ச் சாசனங்கள் பற்றிச் செய்யப்பட்ட முதலாவது ஆய்வாகும். இவ் ஆய்வின் மூலம் அவர் சில முக்கிய தகவல்களை இலக்கிய உலகு அறியத்தந்தார். கி.பி 7ம், 8ம் நூற்றாண்டுகளில் தமிழ் எழுத்துக்கள் எவ்வாறு அமைந்திருந்தன, சங்கமருவிய காலமாகிய அறநூற்கால மொழியமைப்பு சங்ககால மொழியமைப்பிலிருந்து எவ்வாறு மாறுபட்டுள்ளது என்பவையே அவை.[1] இது தொடர்பாக போராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றமை இங்கு நோக்கத்தக்கது.

"வரலாறு நிலைநின்று நோக்கும் பொழுது இந்த இரு நூற்றாண்டுகளும் அரசு அமைப்பு, பொருளாதார அமைப்பு, சமூக அமைப்பு, பண்பாட்டுநிலைமை ஆகியவற்றில் மிக முக்கியமான ஒரு மாறுநிலைக் காலமாகும் (Age of transition) அதற்கு முன்னர் நிலவிய அரசு, பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைகளிலிருந்து வேறுபட்டனவாகும். பிற்கால ஆய்வுகளினால் இவ்வுண்மை மேலும் துல்லியமாக வெளிவந்துள்ளது. கலாநிதி கணபதிப்பிள்ளை இவ்வாய்வைச் செய்ததன் மூலம் தொல்காப்பியத்திலிருந்து நன்நூலுக்கு வருகின்ற தமிழ் இலக்கண வளர்ச்சிக்கான காரணிகளை நன்கு தெரிந்திருந்தார். குறிப்பாக நன்நூல், தொல்காப்பியத்திலிருந்து வேறுபடுவதற்கான பின்புலக்காரணிகள் தெளிவாகின. இதனால் இந்த இரண்டு இலக்கண நூல்களையும் தெளிவுறப் பதிப்பிடுவதற்கான ஒரு நிலை ஏற்பட்டது. இந்தக் கண்ணோட்டத்தில் தொல்காப்பியத்தை நோக்கிய அவர் தொல்காப்பியம் என்னும் நூல் பலரால் எழுதப் பெற்று (அல்லது காலத்துக்குக் காலம் உருவாக்கம் பெற்று) பின்னர் தொல்காப்பியம் என முழுமை வடிவம் பெற்றது என்ற கருத்தினைத் தமது இலக்கண விரிவுரைகளின் போது கூறுவது வழக்கம். ஆனால் இதனை அவர் எழுத்திற் பொறிக்கவில்லை. தொல்காப்பியத்தின் அமைப்புப் பற்றி ஆராச்சி மேற்கொண்ட செக்கோ சிலவாக்கிய அறிஞர் காமில் ஸ்வெலபில் இத்தகைய ஒரு கருத்தினை (The smile of Murugan on Tamil Literature of South India Leiden 1973) எடுத்துக் கூறியுள்ளார். பின்வந்த ஓர் ஆராய்ச்சி அறிஞரின் இந்த ஆய்வு முடிவு கணபதிப்பிள்ளை அவர்களின் ஆராய்ச்சித்தொலை நோக்குத் திறனை நன்கு எடுத்துக் காட்டுகின்றது"[2]

**மேலும் அவர் ஆராய்ச்சித் திறனும் தீட்சண்ணியமும் மிக்கவர் என்பதை, பேராசிரியர் கா.சிவத்தம்பி பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.**

அக்காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயில் வோருக்கு கல்வெட்டியியல் ஒரு கற்கைநெறியாக இருந்தது. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையே இதனைக் கற்பித்தார். அவரின் முயற்சியினாலேயே பல்கலைக்கழகத்தில் கல்வெட்டியியல் ஆய்வுத்துறை வளர்ச்சி பெற்றது. அதுமட்டுமன்றி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை இலங்கைக் கல்வெட்டாராய்ச்சியிலும் ஈடுபட்டிருந்தார். மாங்கணாய், பண்டுவஸ்நுவர ஆகிய இடங்களிற் கிடைக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டுக்களை ஆராய்ந்து University of Ceylon revive என்னும் ஆய்விதழில் கட்டுரைகள் எழுதினார்.[3] முதன் முதல் தமிழ் கல்வெட்டியல் ஆய்வில் ஈடுபட்ட தமிழ் அறிஞர் என்ற பெருமைக்குரியவரும் இவரே. இவர் சாசன ஆராய்ச்சியில் சிறந்து விளங்கியமையினால் இலங்கை அரசாங்கம் அவ்வேளையில் நியமித்த வரலாற்று ஆவணங்களை ஆராயும் குழுவில் அவரும் இடம் பெற்றார். அதன் மூலமே தமிழ் கல்வெட்டுக்கள் பலவற்றை இலங்கைப் புதைபொருள் திணைக் களத்திடமிருந்து பெற்று கா. இந்திரபாலாவுடன் இணைந்து வாசிக்கும் சந்தர்ப்பத்தினைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். அவ்வாறு அவரால் வாசிக்கப் பெற்றவையே இரண்டாம் கஜபாகு மன்னன் காலத்தில் எழுதப்பெற்ற மாங்கணாய் கல்வெட்டு, நிசங்கமல்லனின் பண்டுவஸ்நுவரகல்வெட்டு, மொறகவெல தூண் கல்வெட்டு என்பன வாகும். சாசனத் துறையில் அவரிடம் ஆ.வேலுப்பிள்ளை, கா.இந்திரபாலா ஆகியோர் கற்றனர். ஆ.வேலுப்பிள்ளை அவரைப் பின்பற்றி இடைக்காலக் கல்வெட்டுக்களை விரிவாக ஆராய்ந்தார். கா.இந்திரபாலா இலங்கை வரலாறுகள் பற்றிய ஆய்வில் சில முக்கிய பங்களிப்புகளைச் செய்துள்ளார்.

ஒலிப்பியலிலும் (Phonology) இவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. பல்கலைக்கழக ஆய்விதழில் பண்டைய தமிழ் மொழியின் இயல்புகள் பற்றியும் யாழ்ப்பாணப் பேச்சுமொழி யின் இயல்புகள் பற்றியும் ஆங்கில மொழியில் பல கட்டுரைகளையும் எழுதிவெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இருந்த ஈடுபாடு காரணமாக, பின்வரும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

1. Jaffna Dialect of Tamil – Phonological Study, *in Indian Lingustics*. Turner Jubilee volume pune, India (1958)
2. Words in the Jaffna Dialect of Tamil, *in University of Ceylon Review* vol XX111 vol1 No.2 , Peradeniya (1965)

யாழ்ப்பாணக் கிளை மொழி பற்றி ஆய்வோருக்கு இக்கட்டுரைகள் முன்னோடிகளாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.[4]

மேலும் தமிழர்களின் பண்பாடு தொடர்பான ஆய்வுகளிலும் ஈடுபட்டார். ஆனால், அது அவரது பிரதான ஆய்வுத் துறையாக இருக்கவில்லை. தமிழர்தம் வரலாறு, வாழ்வியல், இலக்கியம் என் பனவற்றிற் கொண்ட ஈடுபாட்டினாலேயே இத்துறை தொடர்பான ஆய்வில் ஈடுபட்டார் எனலாம். அவை பெரிதும் யாழ்ப்பாண மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், உணவுவகைகள். கொண்டாட்டங்கள், பிள்ளைப் பேறு போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. இவ்வாறான கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்பே "ஈழத்து வாழ்வும் வளமும்" என்ற நூலாகும். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை "ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்தவரை அதன் வரலாறு தெளிவுபடுத்தப்படவேண்டும்"[5] என்று விரும்பினார். மட்டக்களப்புத் தமிழையும் யாழ்ப்பாணத் தமிழையும் நுணுகியாராய்ந்து 'ஊருக்கொரு பேச்சு'என்ற கட்டுரையை எழுதினார். அது சென்னை வானொலி நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டது.

இலங்கைத் தமிழர்களின் வரலாறு தொடர்பான பல தகவல்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு, தமிழர்களின் உரிமைகள் பறிக்கப் பட்டுவந்த காலத்தில் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை இலங்கைத் தமிழர் வரலாறு என்னும் சிறிய நூலினை எழுதினார். அது அவருடைய சங்கிலி என்னும் வரலாற்று நாடகநூலுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் தம் ஆற்றலுக்கியைந்த அளவு ஆராய்ச்சியினை மேற்கொள்ளவில்லை என்ற குறைபாடும் நிலவத்தான் செய்கிறது.

## 3.2 பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் இலக்கியப் பங்களிப்புகள்

ஆக்க இலக்கியத்துறையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். அவரது படைப்புக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. செய்யுள் இலக்கியம்
2. புனைகதை இலக்கியம்
3. சிறுவர் இலக்கியம்
4. நாடக இலக்கியம்

**1. செய்யுள் இலக்கியம்:** செய்யுள் இயற்றுவதில் பேராசிரியருக்கு மிக்க ஈடுபாடு இருந்தது. "பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை அவர்களிடம் செய்யுள் இயற்றும் திறமை இயல்பாகவே அமைந்திருந்தது"[6] என T. சண்முகசுந்தரம் குறிப்பிட்டுள்ளமையும் இச் சந்தர்ப்பத்தில் நோக்கத்தக்கது. அக்காலத்தில் பேராசிரியர் தான் யாப்பிலக்கணம் கற்றுக் கொண்டமை பற்றியும், செய்யுள் இயற்றக் கற்றுக்கொண்டமை பற்றியும் பின்வருமாறு கூறுகின்றார்:

"இளமை தொடக்கம் என் எண்ணங்களைப் பாட்டு மூலம் சொல்ல எனக்கு ஆசை. ஓரளவிற்குத் தமிழ் அறிவு வளர்ந்த காலத்திலே என் ஆசிரியப் பெருந்தகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரிய திராவிட மகா பண்டிதர் புலோலி ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் யாப்பருங்கல காரிகையை சொல்லித் தந்தார்கள். அதனைப் படிக்குந் தோறும் என்னைப் பாட்டுக்கள் பாடும்படி ஊக்குவித்தார்கள். அக்காலம் தொடக்கம் எனக்குப் பாட்டிலே ஒரு தனி விருப்பு. இந் நாட்களில் மாணவர்களுக்குக் கட்டுரை எழுதலை கற்பிப்பது போல அந்நாட்களில் பாட்டியற்றப் பழக்குதல் மரபு. அதன் விளைவாக மனதிலே உயர்ந்த அரிய உணர்வு என்று எதனைக் கருதினாரோ அதனை பாட்டிலே கூறுவதிலேயே ஆத்ம திருப்தி கண்டனர். அக் காலக் கல்வி முறையின் பயனாக பாட்டுப் பாடுதல் ஒரு பொழுது போக்காக எனக்கும் அமைந்தது."[7]

மேலுமவர்,

"இக் காலத்திலே நாவல், சிறுகதை முதலியவற்றின் மூலம் சமுதாய ஊழல்களையும் ஒழுக்க நெறியையும் எழுத்தாளர் உலகத்தாருக்குத் துலக்கிக் காட்டுவது போல நானும் சமுதாயத்தில் காணும் உயரிய பண்புகளை மட்டு மன்றித் தாழ்ந்த நிலைகளையும் இன்ப துன்பங்களையும் பாட்டிலே தீட்டிக் காட்டுவதில் உள நிறைவு கண்டேன். பாட்டின் மூலம் சிரிக்கலாம். பாட்டின் மூலம் அழலாம். சிரிப்பதிலும் பார்க்க அழுதலே கூடிய சுவையைக் கொடுக்கும் என் வாழ்வில் நகையும் அழுகையும் அதிகமாக எழுந்த காலங்களில் தீட்டி வைத்தவையே இப் பாடல்கள். இவை எனக்கு இன்பத்தை ஊட்டின, இன்றும் ஊட்டுகின்றன." [8]

என்று தமது செய்யுள்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனினும் இதுவரை இவரது காதலியாற்றுப்படை, தூவுதும் மலரே ஆகிய இரு செய்யுள் நூல்களே வெளிவந்துள்ளன. கவிதைகளை இரசிப்பதிலும் ஆக்குவதிலும் அலாதிப்பிரியங் கொண்ட இவரது பல கவிதைகள் நூலுருப் பெறவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆற்றுப்படையென்னும் இலக்கிய வடிவம் சங்ககாலத்திலேயே பெருவளர்ச்சியடைய லாயிற்று. மன்னனிடமோ குறுநில மன்னனிடமோ அல்லது யாராவதொரு வள்ளலிடமோ பரிசில் பெற்று வரும் பாணனோ, விறலியோ, கூத்தனோ பரிசில் பெறச் செல்லும் தம்மைப் போன்ற கலைஞர்களுக்கு இன்ன இடத்தில் இன்னவரிடம் சென்றால் சிறந்த பரிசில் பெறலாம் என ஆற்றுப்படுத்துவதாக அமைவதே ஆற்றுப்படை இலக்கியமாகும்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பழமையான இவ்விலக்கிய வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய பெயரில், புதிய உள்ளடக்கத்தைப் புகுத்தி 'காதலியாற்றுப்படை' என்னும் ஆற்றுப்படை இலக்கியத்தைப் படைத்துள்ளார். 877 வரிகளைக் கொண்டது இச் செய்யுள் நூல். இதனை அச்சிடும் விருப்பு அவரிடம் இருக்கவில்லை. ஈழகேசரி அதிபரான பொன்னையா அவர்களே இதனை அச்சிற் பதித்துள்ளார்.[9] இது யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த காதலியைப் பருத்தித்துறையைச் சேர்ந்த காதலனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. அவ்வாறு ஆற்றுப்படுத்தும் பொழுது தலைவனது பதிக்குச் செல்லும் வழி வர்ணனையானது அவ்விடத்திற்கே வாசகர்களை இட்டுச் செல்வதாக அமைந்துள்ளது. அது மட்டுமன்றி வடமராட்சிப் பிரதேசச் சமூக, பண்பாட்டு நிலைமைகள் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சிறார்கள் பனம்பழம் உண்ணும் செயலை பின்வருமாறு நகைச்சுவையாகச் சித்திரிக்கின்றார்,

"காடியிற் றோய்ந்த தாழ் பனங் கொட்டையை தாயார் தங்கையிற்றாவினர் வாங்கி வண்டியும் சொக்கும் பனங்களி புரள வண்டினந் தேனையுண்டல் போலக் களியினை மாந்திக் காழ்தனைக் கையில் ஏந்து மிகுவலியின்றித் தயங்கும் புன்றலைச் சிறார்தமின்புறு கூட்டம்"[10]

இவ்வாறு இன்னும் பலசிறார்களின் சிறுபருவக் குறும்புத்தனங்களையும் விளையாட்டுக்களையும் மனம் லயிக்கும் விதத்தில் சித்திரித்துள்ளார், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை. இலக்கியத் தமிழில் காதலியாற்றுப்படையை எழுத முனைந்த போதும் சாதாரணவழக்குச் சொற்களும் இடம் பெறத் தவறவில்லை. உதாரணமாகப் பின்வரும் பாடலை நோக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காகா டுண்டுண் காகா டுண்டுண் ஈதோ சாமி யெழுந்து தேர்வாரார் காகா டுண்டுண் காகா டுண்டுண் அம்மா வழிவிடு ஆத்தை நீ விலகு"[11]

இதில் சாமி, ஆத்தை முதலிய பேச்சு வழக்குச் சொற்களையும் 'காகா டுண்டுண்' முதலிய ஒலிக்குறிகளையும் அவதானிக்கலாம். மேலும் மாயக்கிட்டினன், பிளா, வெள்ளாப்போடு, சோடினை போன்ற பல கிராமியச் சொற்கள் இடம் பெற்றுள்ளதையும் அவதானிக்கலாம்.

கணபதிப்பிள்ளையின் தூவுதும் மலரே என்ற தொகுதியில் தமிழ்த்தாய் வணக்கப் பாடலுடன் நான்கு கதைப் பாடல்களும் இடம் பெறுகின்றன. அவை பின்வருமாறு:

1. சீதனக் காதை
2. விந்தை முதியோன்
3. பாணர் புரவலன்
4. தீவெட்டிக் கள்ளர்

அவற்றுள் 1930 ஆம் ஆண்டிலிருந்து 1940 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் நிலவிய சீதனக் கொடுமை பற்றிய கதைப் பாடலாக சீதனக்காதை அமைந்துள்ளதோடு, சீதனக்கொடுமையை நகைச்சுவையாக விளக்குகின்றது. மேலும் இக்கவிதை தேசிக விநாயகம்பிள்ளை எழுதிய 'மருமகள்வழி மாண்மியம்' என்ற கவிதை நூலுக்கு இணையானது எனத் தூவுதும்மலரே நூலின் தொகுப்புரை குறிப்பிடுகின்றமையும் இங்கு நோக்கத்தக்கது. இக்கவிதை பேராசிரியரின் கவிதையுணர்வையும் சிறப்பாகப் புலப் படுத்துகின்றது. இதற்குப் பின்வரும் கவிதைப் பகுதியை உதாரணமாக நோக்கலாம்.

"அலுமணி தன்னில் கொலுவா யிருக்கும்
புட்டுட னிட்டலி புகலிடி யப்பம்
சுட்டுமே லடுக்கிய தோசை வகையும்
வகையுடன் முறுக்கு வமார்
கேசரி மைசூர்ப் பாகும் மணமுறு
ஓமப்பொடி கப்பலுங் கதலியுங்
கவின் பெறுமாணை பற்றி இதரை
பகரரு சுகத்தால் ஆகிய பலவகை
அருமைசேர் வாழைப் பழங்கள்
முதலாம் பார்திடுங் கணமே பசியினை
யெழுப்பும்'[12]

மேலும் அக்கால மக்களுக்கு ஏற்பட்டிருந்த ஆங்கில மோகம், அதனுடன் ஒட்டியதான கொழும்பை நோக்கிய நகர்புற நாட்டம் என்பவற்றையும் இக்கவிதையில் சித்திரிக்கத் தவற வில்லை. மேல்வரும் கவிதைவரிகளில் கொழும்புவாழ் மக்களின் ஆங்கில மோகத்தை சுவாரஸ்யமாகச் சித்திரிக்கின்றார்.

"அடுத்த வீட்டிலெம் அம்மாச்சி சொன்னாள்
கொழும்பி லேழாண்டு குலவியே வாழ்ந்தவள்
அவ்வூர் வதியும் எவ்வமில் சிறுவர்
தமிழ்மொழி யறியார் தக்கநல் லாங்கிலம்
ஓயாது பேசுவர் ஓர்ந்துநல் லாங்கிலம்
உடைக ளணிந்து கொண் டுயராங் கிலராய்
வனப்பொடு திரிவர் வளம் பெறு கல்வியும்
படிப்ப தாங்கிலம் பள்ளியிலாகும்'[13]

'விந்தைமுதியோன்' என்பது எகிப்தியக் கதை. 'தீவெட்டிக்கள்வர்கள்' பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியிலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தீவெட்டிக் களவுகளை நடத்திய ஒருவரைப் பற்றியது. இவை தவிரப் பேராசிரியர் அவர்களால் எழுதப்பட்ட பல செய்யுட்கள் இதுவரை தொகுக்கப் படவில்லை.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் காலத்தில் யாப்பிலக்கணக் கல்வி முக்கிய இடம் பெற்றது. வெறுமனே யாப்பிலக்கணக் கல்வி மட்டும் கற்பிக்கப்படாது யாப்பிலக்கணத்தின் அடிப்படையில் செய்யுள் இயற்றுவதற்கும் கற்பிக்கப்பட்டது.இவ்வாறு பயிற்சி பெற்ற பேராசிரியர் பின்பு ஓய்வுகிடைக்கும் பொழுதெல்லாம் செய்யுள் இயற்றுவதைப் பழக்கமாகக் கொண்டார்.

இவருடைய செய்யுட்கள் பெரும்பாலும் மரபு வழிப்பட்ட பாடல்களாகவே காணப்படுகின்றன. எனினும் காதலியாற்றுப்படை முதலியவற்றில் அவர் பொதுமக்களை அதிகமாகக் கவனத்தில் கொண்டுள்ளதை அவதானிக்கலாம். கவிதைகள் பற்றிய அடிப்படை இலக்கணங்களை மையமாகக் கொண்டு நோக்குக் பொழுது இவற்றினை எந்த அளவுக்குக் கவிதைகளாகக் கொள்ளலாம் என்ற கேள்வியும் எழாமல் இல்லை. எனினும் அவர் கவிதைகளினூடாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துபவை பெரும்பாலும் சமகாலப் பிரச்சினைகளாகவே காணப்படுகின்றன.

## 2. புனைகதை இலக்கியம்

பேராசிரியரின் புனைகதை இலக்கியங்கள் பிறமொழிப் புனைகதைகளின் தழுவல்களாகவே உள்ளன. 'பூஞ்சோலை' (1955), 'வாழ்க்கையின் விநோதங்கள்' (1954) என்பன அவரின் புனை கதைகளாகும். 'பூஞ்சோலை' என்ற நாவல் தியோடர் ஸ்ரெம் (Theodor Srom) என்னும் ஜேர்மனிய நாவலாசிரியர் எழுதிய 'இம்மென்ஸ்' (Immense) என்பதன் தழுவலாகும். இது நிறைவேறாது போன இளமைக் காதல் பற்றி உணர்ச்சி பூர்வமாகச் சித்திரிக்கின்றது. 'வாழ்க்கையின் விநோதங்கள்' அபூ என்னும் பிரெஞ்சு நாவலாசிரியர் எழுதிய நாவலின் தழுவலாகும். வாழ்க்கையின் விநோதங்கள் நாவல் எழுதுவதற்கான காரணம் பற்றி பேராசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்: "அபூ என்பவர் பிரெஞ்சு மொழியில் எழுதிய இரட்டையர் என்னும் நூலைப் படித்த பொழுது எமது நாட்டு மாணவர்களைப் பற்றியும் அது போன்ற கற்பனைச் சித்திரம் ஒன்று வரைய வேண்டுமென்ற எண்ணம் உள்ளத்தில் எழுந்தது. அதன் விளைவே இந்நூல்"[14]

மேலுமவர் இந் நாவல் பற்றித் தனது முன்னுரையில் இதற்கு உயிர் நிலையாய் நிற்பது உள்ளத்து நிகழ்ச்சியே என்று குறிப்பிடுகின்றார். சோமசுந்தரம், முருகப்பன், வள்ளியம்மை, சேர் புவனகிரி நீலகண்டன், மீனாட்சி போன்ரோரின் வாழ்க்கைப் போராட்டங்கள், குணப்பண்புகள் போன்றவற்றை இந்நாவலில் நோக்கலாம். இந்நாவலானது பின்வரும் நான்கு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1. நாட்டு வாழ்க்கை நகர வாழ்க்கை
2. காதல் மணத்தை விரும்பின்
3. கண்டதும் காதல்
4. வாழ்க்கையின் விநோதங்கள்

இக் கதை இளமையில் கஷ்டத்தை அனுபவித்த இரு சகோதரர்கள் பிற்காலத்தில் மிகுந்த செழிப்புடன் வாழ்ந்தமையைக் கூறுகின்றது. சகோதரர்களில் ஒருவன் அன்பு, எளிமை என்பவற்றின் மூலம் செம்மையாக வாழ, மற்றவனோ படாடோபமாக வாழ்ந்து அவலநிலையை அடை கிறான். இறுதியில் இரு சகோதரர்களும் சேர்ந்து வாழ்வதாக அமைகின்றது. இக்கதையில் முருகப்பன் என்னும் பாத்திரத்தின் மூலம் கணபதிப்பிள்ளை தன்னையே சித்திரிப்பதாக அறிய முடிகின்றது.

அந்தேசன் என்பவரின் 'மோகினிச் சிறுமி' என்னும் கதையைத் தழுவி எமது நாட்டுச் சிறுவர் சிறுமியருக்கு ஏற்றவிதத்தில் எழுதப்பட்டதே 'நீரரமகளிர்' கதையாகும். இது ஒரு கற்பனைக்கதை. நீருலகத்திலும், நில உலகத்திலும் வாழும் மனிதர்களின் சிக்கல்கள், அபிலாசைகள் போன்றவற்றைச் சித்திரிக்கின்றது.

கடலரசனின் ஆறு பெண்களின் மனப் போராட்டங்களையும், அவர்கள் நில உலகத்தைக் காண விரும்புவதையும், கண்டபின் அவர்களது மன உணர்வுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை இக்கதை சித்திரிக்கின்றது. கடலரசனின் ஆறாவது மகள் நிலஉலக அரசிளங்குமாரன் மேல் காதல் கொண்டு தனது மீன் வாலை இழந்து இரு கால்களைப் பெற்றது மட்டுமன்றி நாக்கையும் இழந்து ஊமையாகின்றாள். அவள் அழகில் மயங்கிய அரசிளங்குமாரன் அவளை மணமுடிப்பதாகக் கூறிப் பழகிவிட்டு இறுதியில் நிலஉலகில் உள்ள அரசிளங் குமாரியை மணமுடிக்கின்றான். இதுவே இதன் கதையம்சமாகும்.

கணபதிப்பிள்ளை எழுதிய நாடகங்கள் தவிர, ஏனைய கவிதையாகட்டும் கதையாகட்டும் எதுவாக இருப்பினும் அவர் இலக்கியத் தமிழில் எழுத நினைத்தாலும் அவரையுமறியாது அவற்றில் சாதாரண வழக்குத் தமிழும் வந்து புகுந்து விடுவதை அவதானிக்கலாம். அவ்வாறே அவர் தமது நாவல்களைச் செந்தமிழில் எழுதிச் சென்றாலும் அவரையும் அறியாமலே பேச்சு வழக்கும் இடம் பெறத் தவறவில்லை.

தமிழில் மிகுந்த பற்றுக்கொண்டவர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை என்பதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஆக்கங்கள் மட்டுமன்றி அவரது நடையுடை பாவனைகளும் உரையாடல்களும் உறுதிப்படுத்துகின்றன. எனவே தமிழ் மொழியில் பிறமொழிக் கலப்பு ஏற்படுவதை அவர் விரும்பவில்லை.

இயன்ற அளவு பிறமொழிச் சொற்களைக் குறைத்துள்ளேன். என அவரே கூறுவதி லிருந்து இதனை அறியலாம். அவர் தனது கதைகளை உயர்ந்த மொழிநடையில் எழுத முனைந்து, தன்னைச் சூழவுள்ள சமூகத்தை உன்னிப்பாகக் கவனித்து உணர்ச்சி ததும்ப எழுத முற்பட்டிருந்தாலும் அவை கதாசிரியரின் எடுத்துரைப்புகளாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

**3. சிறுவர் இலக்கியம்**

குழந்தை இலக்கியங்களில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளைக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது.

இலங்கை வானொலியில் குழந்தைகளுக் காக அவ்வப்போது பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பியதுடன் பஞ்சதந்திரக் கதைகளையும் குழந்தைகளுக்கு ஏற்ற விதத்தில் எழுதி ஒலிபரப்பி வந்தார். பாரதியாரின் பாப்பாப் பாடல்களுக்கும் சிறந்த விளக்கங்கள் கொடுத்ததாகவும் அறிய முடிகின்றது. ஐரோப்பாவைச் சேர்ந்த குழந்தைக் கதை எழுத்தாளரின் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டிய கணபதிப்பிள்ளை 'அந்தேசன்' என்பவர் எழுதிய 'மோகனச் சிறுமி' எனும் நூலைத் தமிழ் மரபுக்கு ஏற்றவாறு தமிழ் மொழியில் எழுதி வெளியிட்டுள்ளார். மேலும் சிறுவருக்கான பல கதைகளை எழுதி வெளியிட முயற்சித்துள்ளார். அவை கையெழுத்துப் பிரதிகளாகவே உள்ளன. அவர் சிறுவர்களுக்காக எழுதிய கதைகள் பெரும்பாலும் தமது குழந்தைகளை மனங்கொண்டு எழுதியனவே என அறிய முடிகின்றது. அவரது அச்சேறாத கதைகளாக செருமானிய நாட்டுச் சிறுகதைகள், நம்பிக்கை யுள்ள நாதன், சங்குபதி (Little red riding hood) என்பவை காணப்படுகின்றன.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை கிராமிய வாழ்க்கைமுறையிலும் சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதனை அவரது பேரபிமானத்தைப் பெற்ற மாணவர்களுள் ஒருவராகிய பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் பின்வரும் கூற்றிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

> "பழைய பழக்க வழக்கங்கள், உடைகள், உணவுகள், ஆபரணங்கள், கலைகள், வழிபாடுகள் ஆகியவற்றைப் பற்றி இவருடன் பேசுவது தனியின்பம். கிராமியப் பண்பாட்டுக் கவர்ச்சியினாலே தான் இவர் சாதாரண மக்களுடன் தொடர்பு கொள்வதைப் பெரும் பேறாகக்கொண்டார். அவர்களை யெல்லாம் தமது நாடகங்களிலும் முக்கிய பாத்திரங்களாக அமைத்தார்."[15]

அது மட்டுமன்றி அவர் எழுதியுள்ள கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றின் மூலமும், அவர் கிராமிய வாழ்க்கை முறையிலும் பேச்சுவழக்கிலும் கொண்டிருந்த ஈடுபாட்டினை அவதானிக்கலாம். இவ்வாறு கிராமியப் பண்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்த அவர் நாட்டார் இலக்கியத்துறையில் முன்னோடியாக இருந்ததில் வியப்பில்லை.

> "அண்ணாவிமார், கூத்துப்புலவர் ஆகியோர் எல்லோரையும் பாராட்டுவார். நாட்டார் வழக்கு, இழிசினர் வழக்கு என எள்ளி நகையாடியவர் - வாழ்ந்த காலம் அது. நாட்டார் இலக்கியம், மக்கள் கலை, கூத்து என்பவற்றில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் கணபதிப்பிள்ளை"[16]

என 'தேசிய தமிழ் சாகித்திய விழாச் சிறப்பு மலரில்' இது பற்றிக் கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. நாட்டார் இலக்கியத்திற் கொண்ட ஆர்வத்தினால் கண்ணகி வழக்கு உரையை வார இதழ் ஒன்றில் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தார் (1953). ஆனால், அது முற்றுப்பெறவில்லை. இவ்வாறு பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பல துறைகளில் புலமையுடையவராகத் திகழ்ந்தாலும் நாடகத்துறையே அவருக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நாடக இலக்கியம்

பேராசிரியர் நாற்பதுகளின் பிற்பகுதிகளில் மேற்கொண்ட நாடகம் தொடர்பான செயற்பாடுகள் தமிழ் நாடக உலகுக்கு ஒரு புதிய பரம்பரையினரை உருவாக்கியது. இப்புதிய பரம்பரையினரின் தொடர்ச்சியை நாம் இன்றுவரை காணலாம்.

உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து, முருகன் திருகுதாளம், நாட்டவன் நகர வாழ்க்கை, பொருளோ பொருள், தவறான எண்ணம், சுந்தரம் எங்கே, துரோகிகள், சங்கிலி, மாணிக்கமாலை என்பனவே கணபதிப்பிள்ளையினால் எழுதப்பட்ட 10 நாடகங்களுமாகும். பெரும்பான்மையான நாடகங்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தனால் நெறியாள்கை செய்யப்பட்டுப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தினால் மேடையேற்றப்பட்டன.

பொதுவாக மேடையேற்றத்திற்கென்று எழுதப்படுகின்ற நாடகங்கள் படிப்பதற்கு உகந்தவையாக இருப்பதில்லை. படிப்பதற் கென்று எழுதப்படுகின்ற நாடகங்கள் மேடையேற்றத்திற்கு உகந்தவையாக இருப்ப தில்லை. ஆனால் பேராசிரியரின் நாடகங்கள் மேடையேற்றத்திற்கென்று எழுதப் பட்டிருந்தாலும் படிப்பதற்கும் உகந்தவையாக இருக்கின்றமை அவதானிக்கத்தக்கது. அவர் தமது நாடகங்ளுள் உடையார் மிடுக்கு, பொருளோ பொருள், கண்ணன் கூத்து என்பவற்றை முற்றிலும் பேச்சு மொழியைக் கையாண்டே படைத்துள்ளார். தவரான எண்ணம், துரோகிகள், சுந்தரம் எங்கே, சங்கிலி ஆகிய நாடகங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் இலக்கணத் தமிழையும் பேச்சுத் தமிழையும் கையாண்டுள்ளார். எனினும் அவரது நாடகங்களுக்கு பேச்சுமொழிப் பிரயோகமே உயிர்த்துடிப்பை வழங்குகின்றது.

'உடையார் மிடுக்கு' நாடகமானது தலைமுறை முறண்பாட்டினால் ஏற்படும் பிரச்சினை களையும் அதற்குரிய காரணங்களையும் மட்டுமன்றி, உடையார் திருந்துவதே அனைத்துப்பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும் எனத் தீர்வுமார்க்கத்தையும் கூறத்தவறவில்லை. மேலும் மையக்கருவுக்கும் கதையம்சத்துக்கும் ஏற்பக் கொழும்பில் சுந்தரத்தின் வீட்டிலும் யாழ்ப்பாணத்தில் உடையாரின் வீட்டிலும் காட்சியமைப்புக்கள் பொருத்தமுற இடம்பெற்றுள்ளன. 'பொருளோ பொருள்' நாடகத்தில் கார்த்திகேசு அவரது மகள் கமலவேணி ஆகியோரது பொருளாசை யாலும் நாகரிக மோகத்தாலும் ஏற்படும் பிரச்சினைகளை யதார்த்தம் குன்றாத முறையில் பாத்திர உரையாடல்களாக வெளிப்படுத்தியுள்ளார். அவரது 'சுந்தரம் எங்கே' நாடகம் பணத்தையும் பதவியையும் பெரிதாக எண்ணி உறவுகொள்ளும் மனிதர்களும், சுயசிந்தனை இல்லாது பிறரது சொற்கேட்டுச் செயற்படுபவர்களும் அடையும் இடர்களைப்பற்றி சித்திரிக்கின்றது. 'கண்ணன் கூத்து' நாடகத்தின் மூலம் யாழ்ப்பாண சமூகத்தில் சாதியாசாரங்களில் ஏற்பட்டுவரும் நெகிழ்வுத்தன்மையைச் சித்திரித்துள்ளார். 'தவறான எண்ணம்' நாடகத்தில் கதையம்சம் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு இல்லையாயினும் இடப் பெயர்கள், பாத்திரப்பெயர்கள் என்பன கற்பனையானவையாக இருப்பினும் இன்றைய அரசியற் பிரச்சினைகள், அங்கு இடம் பெறும் ஊழல்கள் போன்றன யதார்த்தம் குன்றாத முறையிற் சித்திரிக்கப்பட்டுள்ளன. 'நாட்டவன் நகர வாழ்க்கை' யானது கிரமப்புறத்து மக்கள் கல்வியறிவைப் பெற்றுக் கொண்டதும் ஆங்கில மோகத்திற்கும், நகரவாழ்க்கை நாகரிகத்திற்கும் ஆட்பட்டு அதனால் அடையும் இன்னல்களைச் சித்திரிக்கின்றது. 'சங்கிலி' ஒரு வரலாற்று நாடகமாக இருப்பினும் 16 ஆம் நூற்றாண்டின் நிகழ்வுகள் பலவற்றை யதார்த்தம் குன்றாமல் ஆசிரியர் சித்திரித்துள்ளார்.

கணபதிப்பிள்ளை எழுதிய நாடகங்கள் தவிர, ஏனைய கவிதையாகட்டும் கதை யாகட்டும் எதுவாக இருப்பினும் அவர் இலக்கியத் தமிழில் எழுத நினைத்தாலும் அவரையுமறியாது அவற்றில் சாதாரண வழக்குத் தமிழும் வந்து புகுந்து விடுவதை அவதானிக்கலாம். அவ்வாறே அவர் தமது நாவல்களைச் செந்தமிழில் எழுதிச் சென்றாலும் அவரையும் அறியாமலே பேச்சு வழக்கும் இடம் பெறத் தவறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் மிகுந்த பற்றுக்கொண்டவர் கணபதிப்பிள்ளை என்பதை அவரது ஆக்கங்கள் மட்டுமன்றி அவரது நடையுடை பாவனைகளும் உரையாடல்களும் உறுதிப்படுத்துகின்றன. எனவே தமிழ் மொழியில் பிறமொழிக் கலப்பு ஏற்படுவதை அவர் விரும்பவில்லை. இயன்ற அளவு பிறமொழிச் சொற்களைக் குறைத்துள்ளேன். என அவரே கூறுவதிலிருந்து இதனை அறியலாம். சில சந்தர்ப்பங்களில் அவர், தனது கதைகளை உயர்ந்த மொழி நடையில் எழுத முனைந்து, தன்னைச் சூழவுள்ள சமூகத்தை உன்னிப்பாகக் கவனித்து உணர்ச்சி ததும்ப எழுத முற்பட்டமையால் அவை கதாசிரியரின் எடுத்துரைப்புகளாகவே அமைந்துள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

எனினும் சிறந்த கல்விப்பின்புலத்தை கொண்டிருந்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை தாம் வகித்த பதவிகளால் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளப்பெரும் சேவையாற்றியதோடு மட்டுமல்லாமல் தமது இலக்கியப் முயற்சிகளால் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகிற்கும் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளார். குறிப்பாக இலங்கைத் தமிழ் நாடக இலக்கிய உலகில் அவரது பெயர் என்றும் நிலையானதொரு இடத்தினை வகிக்கும் என்பதில் ஐயமில்லை

### சான்றாதாரம்


1. சிவத்தம்பி.கா., (1997), **பேராசிரியர் கணபதிப்பிள்ளை (அவரது புலமைப் பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு),** கொழும்பு தமிழ் சங்கம், ப.14
2. மேலது.இ ப.14-15
3. மேலது.இ ப.20
4. மேலது.இ ப.16
5. மேலது., ப.17
3. சிவத்தம்பி.கா. (1997), **பேராசிரியர் கணபதிப்பிள்ளை (அவரது புலமைப் பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு),** கொழும்பு தமிழ் சங்கம்., ப.7
4. மேலது., ப.7
5. மேலது., ப.8
6. சண்முகதாஸ்.அ., (1998), **கலையருவி கணபதிப்பிள்ளை,** கலைப்பெருமன்றம் தெல்லிப்பளை, ப.42
7. மேலது.இ ப.42
8. மேலது.இ ப.42-43
9. மேலது.இ ப.42
10. செல்வரஞ்சிதம் சுப்பிரமணியம், (2004),**பேராசிரியர் கணபதிப்பிள்ளை–நூல்களும் மதிப்பீடும்,** கிறிப்ஸ், ப.22
11. நதியா. எ. எம், (1991), **தேசிய தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர்,** இந்து சமய தமிழ் கலாச்சார இராஜாங்க அமைச்சு, ப.138
12. கணபதிப்பிள்ளை.க., (1962) **தூவுதும் மலரே** , யாழ்ப்பாணம், கலைவாணி அச்சகம், ப.3
13. மேலது.இ ப.15
14. நதியா.எ.எம், (1991), **தேசிய தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர்,** இந்து சமய தமிழ் கலாச்சார இராஜாங்க அமைச்சு, ப.138
15. வித்தியானந்தன்.சு., (67-68), "பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் இலங்கைப் பல்கலைக் கழகமும்", **இளங்கதிர்,** தமிழ் சங்க வெளியீடு, ப.132
16. நதியா.எ.எம், (1991), **தேசிய தமிழ் சாகித்திய விழா சிறப்பு மலர்,** இந்து சமய தமிழ் கலாச்சார இராஜாங்க அமைச்சு, ப.137




* **அர்த்தமற்ற பல செயல்களை விட, அர்த்தமுள்ள ஒரு செயல் போதுமானது. கனவுகளோடு வாழுங்கள். கனவுகள் இல்லாத வாழ்க்கை சிறகுகள் இல்லாத பறவைக்குச் சமன்.**

* நீ சுமக்கின்ற நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும்.

*- அப்துல் கலாம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடப்பும் "சித்திரைச் செவ்வாய்" ஆற்றுகைச் சடங்கும் ஓர் அரங்கியல் ஆய்வு ...

யாழ். தர்மினி பத்மநாதன் M.A.,M.. Phil.




## அறிமுகம்

முட்டி மோதிக் கறுத்துக் கொட்டிய மேகத்தின் அழகை இரட்டிப்பாக்கி சோவென்று பொழிந்து கொட்டியது மழை. வெள்ளக்காட்டின் நடுவே சில்லென்ற சிறுதுளி நடுக்கத்துடன் வயல் பரப்புக்களையும் கடல் வரம்புகளையும் இறால் உற்பத்தியின் அழகை உள்ளார்ந்த அனுபவிப்பை எழுத்துக்களில் உணர்த்துவது அவ்வளவு இலகுவல்ல."உடப்பு" என்ற அர்த்தம் பொதிய புத்தளம் மாவட்டத்திற்கு எமது அரங்கப் பயணம் ஆனந்தம் கொண்டது.

வருடா வருடம் நிகழும் "சித்திரைச் செவ்வாய்" என்ற சடங்கு நிகழ்வை அரங்கியல் பார்வையிலான ஆய்வின் நோக்கில் யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் முன்னாள் துறைத்தலைவர் கலாநிதி க. சிதம்பரநாதன் தலைமையிலான குழுவுடன் அமைந்திருந்தது.

## உடப்பின் அழகு

மாலை ஆறுமணிக்கெல்லாம் நாம் உடப்பூர் வந்து சேர்ந்தோம் எங்கும் கொட்டும் மழை. வெள்ளம், செந்நீராய் அந்த ஊர் முழுக்க



போட்டியிட்டு ஓடியது. குருகுமணல் கும்பிகளும் கிராமத்தை அலங்கரித்து நின்றது. பெரிய பெரிய வீடுகள் எல்லாமே புதுப் பொலிவுடன், மாபிள்கள் பதிக்கப்பட்டு பொருளாதார மாற்றங்களை பறைசாற்றியது. குறிப்பாக இன்று பல இளைஞர்கள் ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் உழைப்பைத் தேடி வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளமையினை ஒவ்வொரு பெற்றோரும் கூறி சந்தோஷிப்பதனூடாக அறிய முடிந்தது. ஆரம்ப காலத்தில் மீன் வள்ளங்கள் நிறைந்து மீன்பிடி தொழிலையும், புகையிலை செய்கையினையும் முனைப்புக் காட்டி நின்ற இந்த சமூகம் இன்று நாகரீகம் என்ற போர்வைக்கும் அப்பால், போர்க்காலம் கற்றுக் கொடுத்த படிப்பினைகளுடன் இணைந்து வெளிநாடு நோக்கிப் படையெடுக்கத் தொடங்கியுள்ளது.

நீண்ட, பரந்த முற்றத்து வளவுகளையும் தென்னை மர வளங்களையும் கொத்துக் கொத்தாக பூத்துக் குலுங்கும் கறுத்தக் கொழும்பான் மாமரங்களையும் ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் தவறாமல் காணமுடிந்தது. இவ்வாறான இயற்கை வளமும் கடல் வளமும் சேர்ந்து இவ்வூரை அலங்கரிக்கும் அழகே தனியழகு தான்.

## ஆற்றுகை முறைமை

இயற்கை அழகின் நடுவே பண்பாட்டின் உச்சமாக இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது செவ்வாய் கொட்டும் சடங்கு. இது "சித்திரைச் செவ்வாய்" எனவும் அழைக்கப் படுகின்றது. சித்திரை மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளில் இச் சடங்கு நிகழ்த்தப் படுகின்றது. செவ்வாய் அம்மனுக்குரிய நாளாக கடைப்பிடிக்கப்பட்டு வருவதனால் இச் சடங்கும் மாரியம்மனை வேண்டி நிகழ்த்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடப்பில் திரௌபதை அம்மன், மாரியம்மன், பேச்சியம்மன் போன்ற தெய்வங்கள் வழிபாட்டு தெய்வங்களாக உள்ளன. உடப்புக்கு சிறப்பு கூறும் வகையில் திரௌபதை அம்மன் தீ மிதிப்பு சடங்கும் செவ்வாய் கொட்டும் சடங்கும் மிக முக்கியமாகவுள்ளன. செவ்வாய்ச் சடங்கின் ஆரம்பத்தில் பால்ய வயது சிறுமிகள் சேர்ந்து வீடுகளுக்கு பாடிப்பாடிச் சென்று நவதானியம், பணம் என்பன பெற்றுக்கொண்டு, அந்த நவதானியத்தை ஆலயத்தில் வைத்து முளையிடுகின்றனர். முளையிடும் பாத்திரமான பெரிய நிறைகுடம், செம்பு போன்றவற்றில் சாணம், புத்துமண், வண்டல் மண் என்பன இட்டு, தானியங்களைப் போட்டு நீர் தெளித்து முளை பதிப்பர்.

ஆரம்ப காலத்தில் வீடுகளில் செய்யப் பட்ட பதியம் இடப்படல் தற்போது ஆலயத்தில் அல்லது தூய்மையான இடத்தில் செய்யப்படுகின்றது. ஒன்றுவிட்டு ஒரு நாள் இந்த முளைய பாத்திரம் முற்றத்தில் வைக்கப் பட்டு சிறிது நேரம் கூடி ஆடி பாடி கொட்டி விரதம் இருக்கின்றனர். இவ் முளைப் பாரியில் தீட்டுக்கள், குற்றங்கள் நிகழாதிருக்கவே சிறுமிகளை நவதானியம் சேகரிக்க அனுப்புகின்றனர்.

இறுதி ஒன்பதாம் நாள் செவ்வாய்க்கிழமை வீட்டு முற்றம் மற்றும் ஆலய முன்றல் வாழை மரங்களால் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு கொலு வைத்து பந்தலிடப் பட்டு இச்சடங்கு நிகழும். அம்மனை கும்பமாக பிரதிஷ்டை செய்து அழகான ஆசனம் அமைத்து மாலை, மத்தளம் மற்றும் வேப்பிலை என்பவற்றால் அம்மன் அழகுபடுத்தப்படுவாள். இன்றைய சடங்கின் தெய்வமான மாரியம்மன் கும்பத்தில் இருத்தப்பட்டு கொலுவின் நான்கு மூலைகளும் தென்னங்குருத்து, பாளை களினால் அலங்கரித்து உயரமான உரலில் நிறுத்தப்படுவாள்.

மாரியம்மன் கொலுவின் முன் நேர்த்திக் கடன், மற்றும் வரம் வேண்டும் பெண்கள் தமது பூசைப் பொருட்கள், பழங்கள் என்பவற்றை படையலிட்டு வணங்க, ஐயர் அவற்றிற்குத் தண்ணீர் தெளித்து மந்திரம் கூற பெண்மணி ஒருவரே தூப தீபம் காட்டுகின்றாள்.



சிறுமிகள் தொடக்கம் முதியவர்கள் வரை பங்கு கொள்ளும் இச் சித்திரை செவ்வாய்ச் சடங்கு உடப்பு கிராமத்துக்கு என்றே தனித்துவம் மிக்கதாக விளங்குகின்றது. ஈழத்தில் மட்டுமன்றி சர்வதேசத்தில் கூட இவ்வாறு தனியே பெண்களால் மட்டும் நிகழ்த்தப்படும் ஆற்றுகை வடிவம் பண்பாட்டு ரீதியில் மரபார்ந்து விளங்கி வருவது என்றால் மிக ஆச்சரியம் தருகின்றது.

தமிழ் நாட்டை பூர்வீகமாக கொண்ட இந்த உடப்பூர் தமிழ்ச் சமூகம் தனித்து விடப்பட்ட சமூகமாக வாழ்வதாகவும் இவர்கள் அனுதாபம் கொள்கின்றனர். நீண்டகாலப் பாரம்பரியம் கொண்ட இச்சடங்கு அண்மைக்கால வரலாற்றில் பல்வேறுபட்ட மாற்றங்களையும் உள்வாங்கிக் கொண்டுள்ளது. வெளிநாட்டு வசதி வாய்ப்புக்கள் ஆடம்பரமான அணுகுமுறைகள் பக்தியை நோக்கிய புள்ளியில் இருந்து சலசலக்கத் தொடங்கியுள்ளது.

ஆயினும், அவர்களின் கருத்தியலில் மாற்றங்கள் இன்றி எதற்காக இச் சடங்கினை நிகழ்த்தத்தொடங்கினரோ அதற்காக அந்த வருட முறைப்படி, பாரம்பரிய மரபுப்படி நிகழ்த்துதல் என்பதில் இருந்து குறைவற்றவர்களாகவே உள்ளனர். அம்மன் நோய் ஏற்படாதிருக்கவும், கருவள உற்பத்தி மற்றும் சிறந்த கணவன் கிடைக்கவும் கல்வி வளம் வேண்டியும் என்ற ஐதீகங்களின் அடிப்படையில் இச் சடங்கு இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. சடங்கு என்கின்றபோது குறிப்பாக பல தெய்வங்களுக்கு நிகழ்த்தப்படும் மிக அதி உணர்ச்சி சார்ந்த சடங்கு நிலையில் அன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியல் நிலையில் சித்திரைச் செவ்வாய் அமைந்துள்ளது.

இச்சடங்கில் குழந்தைப்பேறு கிடைத்த குடும்பத்தினர், மரணக் கிரியைகளை சந்தித்த குடும்பத்தினர் மற்றும் மாதாந்த நெருக்கடியைச் சந்திக்கும் பெண்கள் போன்ற தீட்டு எனப்படும் குற்றம் சார்ந்த விடயங்களில் ஆட்பட்டவர்கள் பங்கு கொள்வதில்லை, பங்குகொள்ள முடியாது.

தம் வேண்டுதல்கள் நிறைவு பெற்றதும் அம்மனை குளிர்விக்கும் பொருட்டு பொங்கல் படையலிட்டு வழிபடுகின்றனர். பொங்கல் நிகழ்வும் மாரியம்மனுக்கு அமைக்கப்பட்ட பந்தலின் முன்னிலையிலேயே நிகழ்த்தப் படுகின்றது.

பொங்கல், பூஜை முடிந்ததும் வெளியில் அமைக்கப்பட்ட மேடையில் அம்மன் புகழ் பாடும் ஆண்கள் குழுவாக இருந்து உரத்த குரலில் பாடல்களைப் பாட பெண்கள் கும்மி கொட்டுகின்றனர்.

பாடல் ஒலிபெருக்கியில் காற்றோடு கலப்பதனால் ஆடுவதற்கும் பெண்கள் பாடலை உள்வாங்குவதற்கும் உதவியாகவும் அமைகின்றது. பெண்கள் அம்மனின் கொலுவைச் சுற்றி சுற்றி வந்து கும்மி கொட்டுகின்றனர். "கும்மி ஆட்டம்" எனப்படும் ஆடல் வடிவமே இங்கு 'கும்மி கொட்டுதல்' என்றும் சித்திரை மாதத்தில் நிகழ்வதால் "சித்திரை கொட்டுதல்" என்றும் வழக்கானது.

கும்மி கொட்டும்போது வழமையான கும்மி அடித்தல் போன்று நெளிந்து, வளைந்து அசைந்து ஆடுவது போன்று அல்லாமல், தம் உடல் நிலையில் இரு தோள்களுக்கும் இடையே ஒரு கெந்தல் அசைவைக் கொடுத்து, கால்களை முன் நாட்டி கைகளை தட்டியபடி வட்டமாக அசைகின்றனர். பெண்கள் குழுக்கள் குழுக்களாக வந்து ஆடப்படும் வட்டத்துடன் தம்மை இணைத்துக்கொண்டு வட்டத்தை பெரிதாக்கிக் கொள்கின்றனர். சிறுமிகள், இளம் பெண்கள், திருமணமான பெண்கள் என அவர்களின் வயது நிலை அடிப்படையில் வட்டங்கள் பெரிது சிறிதாகவும் இயல்பிலேயே அமைந்து விடுகின்றன. வட்டத்தின் அளவு போதாவிடத்து மேலும் மேலும் வட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இதே போன்று கோல் தடிகளைப் பயன்படுத்தி 'கோலாட்டம்' என்ற பெயரில் சிறந்த தடிகளை தயார் செய்து கோலை தட்டியும் ஆடி வருகின்றனர். கோல் தட்டுவதில் வயதான ஆண்களும் இணைந்து கொள்கின்றனர். நேர காலமின்றி ஊர் முழுவதும் ஒன்றுகூடும்வரை விடிய விடிய ஆடியதாகவும் கூறப்படுகின்றது.

பத்தாம் நாள் காலையில் ஒன்பதாம் நாள் போன்றே பொங்கலிட்டு, படையலிட்டு, ஆடப்பட்டு பின் முளையிடப்பட்ட முளப்பாரி பெண்களின் தலையில் சுமக்கப்பட்டு, ஊர்வலமாக சென்று கடற்கரையில் மீண்டும் செவ்வாய் கொட்டப்பட்டு இறுதியில் கடலில் கரைக்கப்படுகின்றது.

கடற்கரைக்கு வரும் ஊர்வலங்கள் பல்வேறு மடங்களில் இருந்து வந்து அந்த பரந்த வெளியில் அம்மன் புகழ்பாடும் போது ஆடப்படும் செவ்வாய் கொட்டில் எந்தப் பெண்களின் மனங்களிலும் நெருக்கடி நிலையை அவதானிக்க முடியவில்லை. சமுத்திரக் கடலாய், கடற்கரையை நோக்கிய இந்த பெண் சமுகம் எப்படி ஓர் ஒழுங்குமுறைப்பட்ட ஆட்டத்தை, சடங்கை ஆத்மார்த்த நெருக்கடி இன்றி செய்ய முடியும்? சாதாரண பஸ் பயணத்திலோ, கோயில் திருவிழாவிலோ ஆளைஆள் முட்டுவதும், தொடுவதும் என்று எத்தனை கோபங்கள், சினங்கள், சண்டைகள் என்று நீட்டிமுழங்கும் இடத்தில், அவரவர் சமூகத்தின் மத்தியில் அவரவர்களுக்கே பாதுகாப்பும் இல்லாத இடத்தில் எந்த சலனமுமின்றி பெண்களை பெண்கள் ஒன்று சேர்த்து திரண்ட விதம் ஆச்சரியம் தந்தது.

முழுக்க முழுக்க பெண்களால் நிகழ்த்தப்படும் இச்சடங்கில் பெண்கள் மிக சுதந்திரமான வெளியில் சுயாதீனமாக தம்மை வெளிக்காட்டியுள்ளனர். இப் பிரமாண்டமான ஆற்றுகை நிகழ்வு பெண்களுக்கான பெரும் சவால் என்றே சொல்ல வேண்டும். பொது வெளிகளில் பணத்துக்காக குத்தாட்டம் போடுபவர்களுக்கு மத்தியில் பாரம்பரிய கலை வெளிப்பாடாக சிறுமிகள் தொடக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்கள் வரை பங்கு கொள்ளுதல் என்பது அதிசயம் தான்.

ஆரம்பகாலங்களில் வீட்டின் முற்றங்களிலும் வளவுகளிலும் ஆற்றுகை செய்யப்பட்ட இச்சடங்கு கடந்த காலங்கள் தொடக்கம் ஆலய வெளிகளில் நிகழ்த்தப்பட்டாலும் இன்றும் சில வீட்டு முற்றங்களில் ஆடப்பட்டும் வருகின்றன. இளம் பெண்கள் கொலுவைச் சுற்றிவர அம்மாமார் தாளம், மத்தளம் வாசித்து அம்மன்புகழ் பாடியும் தங்கள் பக்தியை மட்டுமன்றி மரபையும் பேணிக் கொள்கின்றனர்.

இந்த ஆற்றுகையின் ஆடல் வடிவத்தை முன்பின்னான எந்த பயிற்சியுமின்றி பரம்பரை பரம்பரையாக வழக்கத்தில் கொண்டு வருகின்றனர். இதனூடாக இங்கு பெண்கள் அனைவருமே ஓர் ஆடல், பாடல், இசைக் கலைஞர்கள் என்பதனையும் பறைசாற்றி வருகின்றனர்.

### ஆற்றுகை வெளி

முன்பு குறிப்பிட்டது போன்று ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு வீட்டு முற்றங்களிலும் வீட்டின் பின்புற வெளிகளிலும் நடாத்தப்பட்ட இந்த ஆற்றுகைச் - சடங்கு கடந்த பத்து வருட காலத்திற்கும் மேலாக ஊரில் அமைந்துள்ள இந்து ஆலயங்களின் வெளியில் முத்துமாரி அம்மனுக்கு கொலு வைக்கப்பட்டு, பந்தலிடப்பட்டு நிகழ்த்தப்பட்டு வருகின்றது. ஆயினும் பாரம்பரியச் சடங்காக நிகழ்த்தப்பட்டு வரும் அதே வேளை இன்றும் பல வீடுகளின் முற்றங்களிலும் ஆங்காங்கே காணவும் முடிகின்றது. இறுதி பத்தாவது நாள், முளையிடப்பட்ட நவதானியம் பெண்களின் தலையில் சுமக்கப்பட்டு, அம்மனின் புகழ் பாடப்பட்டு, தாளம், மத்தளம் போன்ற இசைக் கருவிகளின் துணையுடன் வீதி வழியால் பயணிக்கப்பட்டு இறுதியில் கடற்கரையை சென்றடைகின்றது.

இந்த ஊர்வலம் செல்லும் வீதி எங்கும் சுத்தம் செய்யப்பட்டு, பயணிக்கக் கூடிய வகையில் நெருக்கடி இல்லாமல் உள்ளது. சாதாரண கோவில் திருவிழாக்களின் போது கடைப்பிடிக்கப்படும் ஆலய விதிமுறைகள், போலிஸ் கடமைகள், வீதிப் போக்குவரத்து பாதுகாப்புக்கள் என்று எதுவுமேயின்றி அந்த ஊரின் பிணைப்புடன் மிக எளிமையாகவும் நேர்த்தியாகவும் இந்த நிகழ்வு-ஆற்றுகை களம் காண்பது ஒரு வகையில் வியப்பு தருகின்றது.

### வேட உடை ஒப்பனை

இச்சடங்கிற்கு என்றே விசேடமாக ஊர்ப் பெண்கள் அனைவரும் தம்மை தயார் செய்கின்றனர். கடைசி பத்தாயிரம் ரூபா தொடக்கம் இலட்சம் ரூபா வரையாக பெண்களின் தேவைகளுக்காக செலவிடப்படுகின்றது. நட்புக் குழாங்களாக இணைந்து தமக்கான ஆடை, அணிகலன்கள் என்று யாவற்றையும் பாரிய செலவில் திட்டமிடுகின்றனர்.

இறுதி பத்தாம் நாள் நிகழ்வில் அனைவரும் புத்தாடை அணிந்து தலைநிறைய கொண்டை மாலை அணிந்து, வளையல்கள், ஜொலிக்க மனம் பிரகாசிக்க மலர்களின் வாசனை கோயில் வளாகம் எங்கும் வாசனை வீச அசைந்து வரும் அழகு பிரமிக்க வைக்கின்றது. இவ்வருடம் பத்தாம் நாள் நிகழ்த்துகையில் அணியப்படும் புத்தாடைகள் வரும் வருடத்தின் ஒன்பதாம் நாள் நிகழ்வில் அணிவது என்பது இவர்களின் மரபாகவும் உள்ளது. எக்காரண தேவைகளுக்காகவும் இவ் உடைகள் இடையில் பயன்படுத்தப்படுவதில்லை என்பதும் அவர்களின் பாரம்பரிய வழக்காக உள்ளது.

ஐந்து வயதுச் சிறுமிகள் தொடக்கம் வயது முதிர்ந்த பாட்டி வரை இச் சடங்கில் பங்குபற்றி வருகின்றனர். சிறுமிகள் 'சோலிகிட்' எனப்படும் ஆடையும், முழுநீளப் பாவாடை சட்டையும் அணிய, மாணவப் பருவ பெண்கள் பாவாடை தாவணியும் அணிவதுடன் ஏனைய பெண்கள் சேலைகள் அணிகின்றனர். உடைப் பாரம்பரியம் இங்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஏனைய திருவிழா காலங்களில் கோயில்களுக்குச் செல்லும் போது தம்மை அழகுபடுத்துவது போன்றில்லாது இச் சடங்கு நிகழ்வுக்கு என்றே தனித்துவமான பாரம்பரிய போக்கை கடைப்பிடித்து வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு வட்டங்களாக இணைந்து குழுக்கள் குழுக்களாக ஒரே மாதிரியான உடைகளை, வளையல்களை தெரிவு செய்கின்றனர். திருமணமான பெண்கள் தாலியுடன் அட்டியல், பதக்கம் என கழுத்தை நிறைத்துக் கொள்கின்றனர். ஒருவருக்கு ஒருவர் சளைக்காமல் எல்லோருமே அலங்காரம் செய்வதில் அதிக அக்கறை கொள்கின்றனர். தலை நிறைந்த கொண்டை மாலை வெள்ளை, மஞ்சள், ஓரேஞ் என்று தனி அழகை மெருகூட்டி நிற்பதுடன், அவர்களின் ஆடைகளின் தையல் வடிவமைப்பும் மிகமிக ஆச்சரியமாக விதம் விதமாக அமையப்பெற்றும் இருந்தன. இதனூடாக சிறந்த தையல் கலைஞரை உடப்புக் கிராமம் தக்க வைத்துள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் ஒரே மாதிரியான ஆடை, அணிகலன்களுடன் இச்சடங்கில் பங்கு கொள்ளும் போது " எப்படி இப்படி முடிகிறது? " என்ற கேள்வி நேரில் நிற்கும் ஒவ்வொரு புதியவர் மனதிலும் எழத்தான் செய்யும். அந்த வகையில் உரையாடிய சிலரின் வெளிப்பாடாக ..... " நாங்கள் கொண்டை மாலை, பாவாடைத் தாவணி, சேலை யாவும் தொகை தொகையாக கடைசி மூன்று மாதங்களுக்கு முன்பே இந்தியா வியாபாரியிடம் ஓடர் கொடுத்துவிடுவோம். அதற்கேற்ற வளையல். கொண்டை மாலை எல்லாம் சரியான நேரத்தில் கிடைக்கும். கொண்டைமாலை இயற்கையாகவே இந்தியாவில் இருந்து தொகையாக இறக்குமதி செய்வோம். ஒரு முழம் 250 ரூபா விற்பனை விலை. எங்கட ஊரில் பூ கிடைப்பது கஸ்ரம் என்டதால ஓடருக்கே அதையும் எடுப்போம். குறித்த நேரத்தில் எல்லாம் வந்து சேரும். நாங்கள் கடைகடையாய் ஏறி இறங்கி அலையிறது இல்லை ..." என்ற பெண்ணை குறுக்கிட்டாள் இன்னொரு பெண்மணி "நாடகம், படம் என்று எல்லாமே சினிமாவில டிசைன் டிசைனான சாறிகள் வரும். உடுப்பு கொண்டு வந்து விற்கிற அண்ணாவிடம் டிசைனை சொல்லி அதேமாதிரி எடுப்போம். இல்லாட்டி அவரும் புதுப்புது டிசைன் காட்டுவார். அதை வைச்சு தீர்மானிப்போம்." என்றவளின் கதைகளுக்கு நடுவே தன் பங்கிற்கு "முந்தி இப்படி விதம் விதமாய் உடுப்பு போடுறதில்லை. வசதிக்கு ஏற்றமாதிரி தான் போடுறது. இப்ப வெளிநாட்டு வசதி வாய்ப்பு வர எங்களுக்கும் கஷ்டமோ நஷ்டமோ யோசிக்காமல் இப்படியே எல்லாரும் மாறிப் போயினம். என்ன? வருசத்தில ஒரு தடவை தானே பிள்ளைகள் கேட்கக்குள்ள மறுக்கவும் ஏலாது. கடன் பட்டாவது வாங்கித்தான் குடுக்கிறது. போன வருசம் மாமன் பத்தாயிரம் அனுப்பி உதவி செய்தவர். இந்த வருசம் சொந்தக்காரப் பிள்ளை அனுப்பினது. இந்த திருவிழா எண்டால் கஷ்டப்பட்டவைக்கு யாரிட்ட உதவி கேட்டாலும் செய்து தருவினம்" என்றாள் ஓர் பெண்மணி. இச்சடங்கு ஆற்றுகை பற்றிய கருத்தாடலின்போது பிரபல ஊடகவியலாளரும் உடப்பு பற்றி வெளி உலகிற்கு அடிக்கடி அறிமுகம் செய்து வருபவருமான உடப்பு வீரசொக்கன் குறிப்பிடுகையில் "பெரியளவிலான அலங்காரங்கள் எல்லாம் கடந்த பத்து வருட காலங்களாகதான் மாற்றம் கொண்டு வருகின்றது. உடப்பில் மீன்பிடி தொழிலில் இருந்து அநேகமாக ஆண்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமையினால் அவர்களுக்காக வாழ்க்கைத் துணையை தெரிவுசெய்ய இச்சடங்கு முக்கியத்துவம் நிறைந்ததாக உள்ளது. இந் நிகழ்வின் வீடியோக்கள் பல்வேறு நாடுகளிலும் உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப் படுவதனால், வீடியோக்களை பார்த்துவிட்டு தமக்கு விரும்பிய பெண்களை தெரிவு செய்யும் வகையில் இந் நிகழ்வு இருப்பதனால் பெண்கள் தம்மை அலங்கரிப்பதில் அதிகம் ஆர்வம் கொண்டுள்ளனர்." என்று குறிப்பிடுவதனை நோக்கும் போது உண்மையில் பக்தியையும் கடந்து தம் ஆடல் வடிவத்தினை கடைப்பிடித்து வந்தாலும் இளம் இரத்தங்களிடையே விதமான சலனங்களையும் காணமுடிந்தது.

'உடப்பு' தனிப்பட்ட தமிழ்க் கிராமமாக உள்ளது. அவர்களை சுற்றி சிங்களக் கிராமங்களும் முஸ்லீம் கிராமங்களும் உள்ளன. ஆயினும் வடக்கு கிழக்கு சார்ந்த தமிழ் உறவுகளுடனான தொடர்பாடலற்ற நிலையில் உடப்பு கிராமம் இருப்பதையிட்டு மனம் வருந்தும் அதேவேளை, இக் கலைச் செயற் பாடுகளினூடாக தொடர்பாடல் வெளிகளை ஏற்படுத்த வேண்டும் என்று தன் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார் உடப்பூர் வீரசொக்கன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆற்றுகையில் இசை**

சித்திரை கொட்டும் சடங்கில் எவ்வாறு அவர்களின் உடலும் மனமும் பங்கு கொள்கின்றதோ அந்த பயணிப்பிற்கு இசையும் அம்மன் புகழ் பாடல்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்க ஆண்களினால் அம்மனின் புகழ் பாடப்படுகின்றது. அவர்களின் குரல் வளமும் சல்லாரி, தாளம், மத்தளம், தபேலா என்பவற்றுடன் நவீன கருவியான ஓர்கனும் இப்போ பயன்படுத்தப் பட்டுள்ளது. கைகளினால் கொட்டப்படும் ஓசையும் கோலினால் தட்டப்படும் ஓசையும் மென்மேலும் ஒலி எழுப்பி நிற்பதுடன் சிறுமிகள், பெரியவர்களின் கால் சலங்கையின் "சல் சல்" என்ற கணீர் ஓசையும் வளையல்களின் ஓசையும் இந்த வெளியை ஆர்ப்பரிக்கச் செய்கின்றது. இங்கு பெண்கள் ஒவ்வொருவரும் தாம் இயல்பிலேயே கலைஞர்கள் என்பதனையும் அடையாளம் காட்டும் வகையில் ஆடல், பாடலூடாக தம்மை நிரூபித்துள்ளனர்.

மேலும்,

'அரங்கு எனும் போது சாதாரண மக்களின் ஒடுக்கப்பட்ட உணர்வுகள் யாவும் எழுச்சி கொள்ளவும் வெளிப்படுத்தவும் சந்தர்ப்பமாக அமைகின்றது. குறிப்பாக இங்கு மனவிடுதலை கிடைக்கின்றது. அந்த வகையில் இச் செவ்வாய் கொட்டுச் சடங்கும் காலம்காலமாக சித்திரை மாத செவ்வாயில் பண்பாட்டு அம்சங்களுடன் மரபார்ந்து நிகழ்த்தப்பட்டு வந்தாலும் இங்கு பெண்களுக்கு மன ரீதியான விடுதலையை இச்சடங்கினூடாக அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

ஏனெனில் எந்த சலனமுமின்றி, சுதந்திர வெளியை அவர்கள் அனுபவிப்பதன் சந்தோசத்தினூடாக அதனை அனுபவிக்க



முடிகின்றது. அரங்கு மக்களுக்கான சுதந்திர வெளிப்பாட்டுக் களம். அந்தக் களத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் அசைந்து வரும் யானை போன்று மிக அழகாக இவ் ஆற்றுகையை நிகழ்த்தி இருந்தனர்.

சாதாரண வெளிகளில் பெண்களைக் கண்டாலே கூச்சலிடும் சமூகத்தின் நடுவில் இந்த ஆற்றுகையில் பெண்கள் மீதான சீண்டுதல்களோ, கூச்சல் கும்மாளம் எதுவுமின்றி அவர்களின் பக்திசார், நம்பிக்கைசார் ஆற்றுகையில் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கி வணங்கி நின்ற ஆண் சமூகம் இங்கு இந்த வெளியில் மதிக்கப்படுகின்றது என்றே கூறத் தோன்றுகின்றது.

பெண்களுக்கான களத்தை உருவாக்கி, கலகலக்க செய்து, மனங்களை விடுவித்து மகிழ்விக்கச் செய்யும் வகையில் இவ் ஆற்றுகை நிகழ்த்தப்பட்டதாயினும் பெண்களின் கூட்டிணைப்பும் பங்கும் அவர்கள் மிகப் பெரிய சக்தி என்பதையும் வலுப்படுத்தி நின்றது. இங்கு பெண்ணுலகை கண்டு வியப்புக் கொள்ளும் அளவில் இந்த ஆற்றுகை பிரமாண்டம் கொண்ட சடங்காக இவ்வூருக்கே தனித்துவமாக மிளிர்வது ஆச்சரியம் தான்.

## அன்பு...

- இசைக்கு மொழி இல்லை என்பது போல, அன்பிற்கும் மொழி தேவையில்லை

*- அன்னை தெரேசா*

- மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல குறை காண்பவனும் ஆவான். பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன். தன் குறையைக் காண்பவன் முழு மனிதன் *- சாக்கிரடீஸ்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தோட்ட மக்களுக்கு நிரந்தரமான வீடுகள்



**கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**நா**ம் நமது தாய் நாட்டில்தான் வாழ்கின்றோம் என்பதை நமக்கென உள்ள சொந்த வீட்டில் இருக்கும் போதே உணரலாம். மக்களின் வீட்டுத் தேவையை வழங்குவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். இலங்கையில் வீட்டு வசதிகள் தொடர்பாக பல்வேறு திட்டங்கள் கிராமிய நகர மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பெருந்தோட்ட மக்களுக்கு அதன் பலன்கள் எதிர்பார்த்த அளவில் சென்றடையவிலலை. தோட்டங்களில் உள்ள வீடுகளைப் புனரமைப்பதற்கு ஆரம்பம் முதல் பல்வேறு பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் கிராமம் மற்றும் நகரங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் தோட்டங்களில் இடம்பெறவில்லை.

பல்வேறு முயற்சிகளும் பயனளிக்காத நிலையில் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு 50,000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்ற செய்தி மிகுந்த மகிழ்ச்சி தரும் செய்தியாகக் காணப்பட்டது. இலங்கையின் வரவு செலவுத்திட்டத்தில் பெருந்தோட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்காக மேற்கொள்ளப் படவுள்ள பாரிய அளவிலான வேலைத் திட்டமாகவும் இதனைக் குறிப்பிட்டாலும் 2014 ஆம் ஆண்டு முடியும் தறுவாயிலும்கூட ஒரு அங்குல அளவிலான வீட்டைக்கூட சம்பந்தப்பட்டவர்கள் கட்டி முடிக்கவில்லை என்பது கவலை தரும் விடயமாகும்.

இப்படி இருக்கத் தக்கதாக தொழிலாளர்களின் குடியிருப்புக்களை மாற்றியமைப்பதற்கு மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன? மக்களின் எதிர்பார்ப்பு எவ்வாறு உள்ளது? போன்ற விடயங்களை மேலோட்டமாக அவதானிப்பது இக்கட்டுரையின் உள்ளடக்க மாகும்.

இக்கட்டுரைத் தொகுப்பானது இலங்கை புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப் பட்ட Household Income and Expenditure Suvey - 2009/10. தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் இலங்கையின் தேசிய திட்டமிடல் பிரிவின் செயலாளர் திரு. எம். வாமதேவன் அவர்களின் தலைமையில் தயாரிக்கப்பட்ட "National Plan of Action for Social Development of the Plantation Community - 2006/2015" மற்றும் வணக்கத்திற்குரிய கீதபொன்கலன் எழுதிய கட்டுரைகள் மற்றும் எஸ். விஜயசந்திரன் Caritas நிறுவனத்திற்காக எழுதிய "Employment and Housing Conditions of the Estate Community - 2012" மற்றும் 1980 களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் வெளியிடப்பட்ட Congress News போன்றவற்றினை ஆதாரமாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதிகள் மற்றும் வருமானம், செலவுகள் தொடர்பாக 2009/10 காலப் பகுதியில் இலங்கையின் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டு வெளியிடப்பட்டதை யாவரும் அறிவர். இதன்படி கிராமிய மக்களில் 95.6 வீதமானவர்கள் தனியான குடியிருப்புகளில் வாழ்பவர்களாக உள்ளனர். இந்நிலைமையை நகரங்களில் பார்க்கும் போது 71.6 வீதமாகக் காணப்படுகின்றது. ஆனால், தோட்டங்களிலோ தனியான வீடுகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கை 33.4 வீதமாகவே காணப்படுகிறது. இலங்கையிலே மிகக்குறைந்தளவு வீட்டு வசதிகளுடன் வாழ்பவர்கள் தோட்டத் தொழிலாளர்களில் சுமார் 60 வீதமானவர்கள் இன்னும் பிரித்தானியர்களால் அமைக்கப்பட்ட லயன் காம்பிராக்களிலேயே வாழ்கின்றனர். சுமார் 2 வீதமானவர்கள் குடிசை அமைத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். மிகுதி சுமார் 5 வீதமானவர்கள் தற்காலிக கொட்டகைகளில் வாழ்கின்றதாக மேற்குறிப்பிட்ட கணிப்பீடு காட்டுகின்றது: இலங்கையில் வாழ்விடத்தை பொறுத்தவரையில் மோசமான நிலையில்தான் மலையக தொழிலாளர்கள் வாழ்கின்றனர் என்பதை மேல்வரும் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இலங்கையில் தேசிய திட்டமிடல்களில் நாட்டு மக்களுக்கான நலன்கள் தொடர்பாக திட்டமிட்டுள்ள போது பிரித்தானியர்களால் தோட்டத் தொழிலாளர்களுக்காக கட்டிக்கொடுக்கப்பட்ட லயன் காம்பிராக்கள் பற்றி கடுமையாக விமர்சிக்கப்பட்டது. பிரித்தானியர்கள் மனிதர்கள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற வீடுகளை தொழிலாளர்களுக்கு அமைத்துள்ளனர். நாள் முழுவதும் இருட்டறையில் இருக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட லயன் காம்பிராக்கள் இலங்கையின் வாழ்க்கை முறைக்குப் பொருத்தமானதல்ல. உடனடியாகவே இந்த லயன் காம்பிராக்கள் தரைமட்டமாக்கப்பட வேண்டும். தனிவீடுகள் அமைத்து அவர்களைக் கௌரவமாக வாழவிடவேண்டும் என்று திட்டங்கள் தீட்டினர். இம்மக்களின் சுகாதாரம் பற்றி விவாதிக்கப்பட்டது. மலசலகூடங்கள் பற்றி கருத்துரைக்கப்பட்டது. அடுப்புப் புகையிலும் சூரிய வெளிச்சம் இல்லாத அறைகளால் இவர்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றி பட்டியலிட்டனர். 1950 முதல் 1970 வரையில் இதுபற்றி கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ஆனால், லயன்கள் லயன்களாகவே காணப்பட்டன. திட்டங்கள் கிராமங்களுக்குச் சென்றன. நகரங்களுக்கும் பகிரப்பட்டன. கிராமிய மக்கள் தனித்தனி வீடுகளில் வாழ்வதற்கு வசதிகள் கிடைத்தன. கிராமிய, நகர மக்களுக்காக தனித்தனியாக வீடுகள் அமைக்கப்பட்டதன் பின்பு 1972-1975 காலப்பகுதியில் நிலச்சீர்திருத்தம் கொண்டுவந்ததன் விளைவாக படிப்படியாக அவர்களது வீடுகளும் அவர்களுக்கான குறைந்த பட்ச பயிர் நிலங்களும் சொந்தமாக்கப்பட்டன. அரசாங்கம் பல்வேறு திட்டங்களால், உதாரணமாக "சுவர்ணபூமி" திட்டம், "கம் உதாவ" திட்டம் போன்ற பல்வேறு பெயர்களில் வீடுகளையும் பயிர் நிலங்களையும் கிராமிய, நகர மக்களுக்குச் சொந்தமாக்கின. ஆனால், தோட்டங்களுக்கு திட்டமிட்டவாறு செய்யவில்லை.

இலங்கையில் வீடுகளை நிர்மாணிப்பதில் முன்னாள் பிரதமர் அமரர் ஆர். பிரேமதாஸ மிக முக்கியமானவர். குறைந்த வருமானம் பெறுவோர்களுக்கு வீடுகள் அமைத்து அதனை பின்பு சொந்தமாக்கினார். இதற்காக அவர் காலத்தில் உருவாக்கப்பட்ட "கம் உதாவ" மற்றும் மாடிவீட்டுத் திட்டங்கள், மத்தியதர வர்க்க வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விளைவாக கிராமிய, நகர மக்கள் இலங்கையர் என்ற பெருமையுடன் கௌரவமாக வாழ்வதற்கு வழிவகுத்தது. இதனால் மேற்குறிப்பிட்டது போல 95.6 வீதமான கிராமிய மக்கள் தனித்தனி வீடுகளில் வாழ்பவர்களாகினர். இவர்கள் அவ்வீடுகளுக்குச் சொத்தக்காரர்களாகவும் மாறிவிட்டனர்.

பெருந்தோட்டங்களுக்கெனவும் திட்டங்கள் வரையப்பட்டன. ஆனால், அத்திட்டங்கள் தேசிய வீடமைப்பின் கீழ் கொண்டுவரப்படவில்லை. மாறாக தொழிலாளர்களின் நலன்களுக்கென அமைக்கப்பட்ட PHDT நிறுவனத்திடம் கையளிக்கப் பட்டது. 1992 இல் இருந்து கடந்த 22 வருட காலத்தில் PHDT சுமார் 23,000 வீடுகளை மட்டுமே நிர்மாணித்தது. இன்று தோட்டங்களில் சுமார் 1,10,000 குடும்பங்கள் உள்ளன. இவர்களில் சுமார் 70,000 பேர் இன்று லயன்களில் வாழ்கின்றார்கள். வேலைத் திட்டத்தின்படி இவர்கள் யாவருக்கும் தனி வீடுகள் அமைக்க இன்னும் 66 ஆண்டுகள் தேவைப்படும்.

இந்நிலையில் திரு. எம். வாமதேவனின் வழிகாட்டலில் பெருந்தோட்ட அபிவிருத்திக் கென 10 வருட செயற்றிட்டம் உருவாக்கப் பட்டது பல கட்டங்களில் கலந்தாலோசிககப் பட்டு திட்டமிடல் வல்லுனர்களால் உருவாக்கப் பட்ட திட்டம் துரதிர்ஷ்டவசமாக அமுல்படுத்தப் படவில்லை.

ஏற்கனவே குறிப்பிட்டது போல பல்வேறு திட்டங்கள் கடந்த 60 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட தீவிரமான நடவடிக்கையின் பயனாக இன்று பெருந்தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களில் 33.4 வீதமானவர்கள் தனித் தனியாக வீடுகளில் அல்லது மாடி வீடுகளில் வாழ்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வீடுகளை நிர்மாணிப்பதற்கு தொழிலாளர்களுக்கு வங்கியினூடாக கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. இலங்கையிலுள்ள வங்கிகள், வீடுகள் கட்டுவதற்கு நிலத்தை அல்லது வேறு சொத்துக்களை அடமானம் பெற்றுக்கொள்ளாத நிலையில் ஆகக்கூடியது 25 வருடங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய கடன் வசதிகளை வழங்கியது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கே ஆகும்.

25 வருட கடன் திருப்பிக் கொடுத்த நிலையிலும் அவர்களுக்கான வீட்டு உரிமைப் பத்திரம் இன்னும் வழங்கப்படவில்லை. காரணம் தெரியாது. தனி வீடுகள் அல்லது மாடி வீடுகள் நிர்மாணிப்பதற்கு மாதம் 675 ரூபா செலுத்தும் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக மாதாந்தம் வழங்கிவிடுகின்றனர். இக்கடன் எப்போது செலுத்தி முடியும்? எப்போது வீட்டு உரிமைப்பத்திரம் தமக்குக் கிடைக்கும்? என்பது இவ்வாறான கடனாளிகள் பலருக்குத் தெரியவில்லை.

தோட்டங்களில் தொழிலாளர்கள் மட்டுமல்ல, தோட்ட சேவையாளர்களும் உள்ளனர். இதைவிட பல்வேறு சமூகக் காரணங்களால் தோட்ட வேலையை விட்டு வேறு வேலைக்குச் சென்றாலும் அவர்கள் தோட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களும் உள்வாங்கப்படுவார்களானால் சுமார் 4,00,00 தொழிலாளர்களாவது தோட்டங்களில் வாழ்பவர்களாக உள்ளனர். இவர்கள் யாவருக்கும் வீடுகள் வழங்குவது மிகவும் பயனுள்ளதாகும்.

இப்போது தோட்ட வேலைகளை நம்பியே தமது வாழ்வாதரத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமையும் கேள்விக் குறியாகிவிட்டது. தோட்டக் கம்பனிகளால் நடாத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது தோட்ட கம்பனிகள் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மட்டுமே அதிகரிக்கப் பட்ட சம்பளத்தில் வேலை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிலையில் பெருந் தோட்டங்களில் வாழ்பவர்களின் வருமானம் இனிமேல் தோட்டங்களில் வழங்கப்படும் வேலைகளில் தங்கியிருக்கப்போவதில்லை. வேறு வேலைகளை நாடிச் செல்லுமாறு தூண்டப்படுகின்றனர். அவ்வாறாயின் அவர்களுக்கான முறையான தொழில்பயிற்சி போன்றவற்றை வழங்கவேண்டும். உ-ம்: வாழ்ந்த சூழலிலேயே வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களையும் ஏற்படுத்த வேண்டும் என்பது அவசியமாகும்.

## நல்வாழ்வுக்குரிய 10 நெறிகள்

1. காலையில் எழுந்தவுடன் கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்க!
2. எல்லோருக்கும் இனியவராக, நல்லவராக இருக்க முயலுக!
3. மனத்தாலும் பிறருக்கு தீங்கு நினையாதே!
4. பிறர் பசியைப் போக்க முடிந்தளவு உதவுக!
5. உணவு உண்ணுமுன் மற்றவர்க்கோ, பறவைகளுக்கோ பிறவற்றுக்கோ சிறிது உணவளித்து விட்டுச் சாப்பிடுக!
6. இறைவனுடைய திருப்பெயரை உச்சரித்தவாறே உறங்குக!
7. தீயவைகளை எண்ணாமலும், பேசாமலும், கேட்காமலும், பாராமலும், இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்!
8. பெரியோர்களை வணங்கி, அவர் கூறும் அறிவுரைகளை கேட்க வேண்டும்!
9. அடுத்தவர்களை அன்பாக நேசிக்கவும்!
10. உறங்கு முன் அன்றாட நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்து, தீமைகளை குறைக்க முயற்சிக்க வேண்டும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருடர்களின் தேசம்

இத்தாலிய மூலம்: **இத்தாலோ கெல்வினோ**

ஆங்கிலம் வழியாக தமிழில் : **இரா. சடகோபன்**

**மு**ன்பு ஒரு காலத்தில், ஒரு வித்தியாசமான தேசம் இருந்தது. அது வித்தியாசமான தேசம் என்று கூறப்பட்டதற்குக் காரணம் அங்கிருந்தவர்கள் எல்லோரும் திருடர்களாக இருந்தமைதான். அவர்கள் பகலெல்லாம் உண்டு குடித்து உறங்கிவிட்டு, இரவானதும் நடுச் சாமத்தில் கறுப்பு மை பூசிய லாந்தர் விளக்குகளைக் காவிக்கொண்டு கள்ளச் சாவிக் கொத்தையும் எடுத்துக் கொண்டு அண்டை அயல் ஊர்களில் களவாடச் சென்றனர், அவர்கள் தமது பக்கத்து வீடுகளையும் கூட சூறையாடத் தயங்கவில்லை. அவ்விதம் அவர்கள் இரவில் களவாடிவிட்டு, திருடிய பொருட்களையெல்லாம் தம் வீட்டுக்குக் கொண்டுவந்தபோது அவர்கள் வீட்டையும் யாரோ களவாடி சுத்தம் செய்திருப்பது கண்டு ஆச்சரியப்படவில்லை.

இவ்விதம் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அனைவரும் களவாடுவதில் இன்பம் கண்டு வாழ்வை மகிழ்ச்சியாக கழித்து வந்தனர். அனைவரும் ஒருவர் வீட்டில் மற்றவர் திருடுவதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் தம் வீட்டில் திருட்டுப் போனதை அவர்கள் இழப்பாகக் கருதவில்லை. முதலாமவன் இரண்டாம் ஆளிடமும் இரண்டாமவன் மூன்றாம் ஆளிடமும் மூன்றாமவன் நான்காம் ஆளிடமும் முறை வைத்துத் திருடுவதுடன் இறுதி ஆள் பின் முதலாமவனிடம் திருடினான். இந்த திருட்டுக்கள் ஒரு சங்கிலிக் கோர்வையைப் போல் சுற்றிச் சுழன்று முறையாக நிகழ்ந்து கொண்டிருந்தன.

நாட்டில் நடைபெற்ற வணிக வியாபாரங்கள் கூட திருட்டுப் பொருட்களாலும், பொய் ஏமாற்று, தில்லுமுல்லு, திருகுதாளம் என்பவற்றுடனேதான் இடம் பெற்றன. நாட்டில் காணப்பட்ட அரசனும் திருடர் தலைவனாகவும் மக்களைக் கொள்ளை யடிப்பவனாகவும் இருந்தான். மறுபுறத்தில் நாட்டின் பிரஜைகளோ அரசாங்கத்தைக் கொள்ளையடிப்பவர் களாகவும் ஏமாற்றுக்காரர்களாகவும் இருந்தனர். இவ்விதமாக வாழ்க்கை வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. யாருமே அதிக தனவந்தர்களாகவோ, அதிக ஏழைகளாகவோ இருக்கவில்லை.

இப்படி இருக்கும்போது ஒரு நாள் ஒரு நேர்மையும் நெஞ்சுரமும் மிக்க ஒரு மனிதன் அவ்வூருக்குக் குடியிருக்க வந்தான். இரவானதும் கரிய மைபூசிய லாந்தர் லாம்பையும் கோணிச் சாக்கையும் எடுத்துக்கொண்டு களவாடச் செல்வதற்குப் பதில் அவன் சுருட்டொன்றை பற்ற வைத்துக் கொண்டு புகையை உறிஞ்சியவாறு தடித்த கதைப்புத்தகம் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு வாசிக்க ஆரம்பித்தான். இதன் காரணமாக அவன் வீட்டில் அன்று பிரகாசமான விளக்கு எரிந்துகொண்டிருந்ததால் திருடுவதற்காக வந்தவர்கள் வெறுங்கையுடன் திரும்பிச் செல்லவேண்டிவந்துவிட்டது.

இவ்விதம் இந்த நாடகமும் பலமுறை நடந்தேறி விட்டது.

இதனால் தமது அன்றாட வாழ்வு பாதிக்கப்பட்டுவிட்டதாகவும் அவன் செய்யும் காரியம் மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கின்றதென்றும் பொறுமை இழந்த பலரும் ஒன்றாகக் கூடி கூட்டமாகச் சென்று அவனிடம் முறையீடு செய்து அவனது இந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளும்படி பஞ்சாயத்து செய்துவிட்டு வந்தனர். அவன் இரவில் வெளியில் போகாமல் வீட்டில் இருக்கும் நாளில் எலலாம் இன்னொருவன் திருடும் தொழில் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் பட்டினி இருக்க நேரிடுகின்றது என அவர்கள் எடுத்துரைத்தனர்.

இதன் காரணமாக இந்த நெஞ்சுரமிக்க நேர்மையான மனிதனால் அவர்களின் வார்த்தையை வெறுமனே தட்டிக் கழிக்க முடியவில்லை. தன்னால் பிறர் துன்பப்படுவதை அவன் விரும்பவில்லை. ஆதலால் அவன் அந்திமாலைப் பொழுதானதும் வீட்டைவிட்டுச் சென்று விடிந்த பின்னர் வீடு திரும்பினான். ஆனால், அவன் எந்த வீட்டிலும் திருடவில்லை. உண்மையான நேர்மையான மனிதனுக்கு அந்த ஊரில் செய்யக்கூடிய காரியம் ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. அவன் வீட்டைவிட்டுக் கிளம்பி மெதுவாக நடந்து சென்று ஊருக்கு ஒரு புறமாகக் காணப்பட்ட சிற்றாறு ஒன்றின் மீது அமைக்கப்பட்டிருந்த பாலத்தின் மீதமர்ந்து கீழே நுரைத்துச் சுழியோடிச் செல்லும் நீர்ப்பிரவாகத்தை உற்றுப் பார்த்து ரசித்துக் கொண்டிருப்பான். அதன் பின் அதிகாலையில் அவன் தன் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அவன் வீடு கொள்ளையிடப்பட்டு சூறையாடப்பட்டிருக்கும்.

இது தொடர்ந்தபோது அந்த நேர்மையான மனிதன் ஒரு வார காலத்துக்குள்ளே கையில் ஒரு சல்லிக்காசும் இல்லாத ஏழையாகிப் போய்விட்டான். அவனது வீட்டில் ஒரு நெல்லரிசிகூட மிச்சமாக இருக்கவில்லை. இருந்தாலும் இதனைப்பற்றி அவனால் வருத்தப் பட முடியவில்லை. இது யாருடைய குற்றம் என்று யாரையும் குற்றம் சுமத்த முடியவில்லை. இது தன்னுடைய தவறுதானே என்று தன்னையே நொந்துகொண்டான்.

நாட்டில் எல்லோரும் திருடர்களாக இருக்கும் போது ஒருவன்மட்டும் நேர்மையாளனாக இருக்க முடியுமா என்பது கேள்விக்குரியதாயிற்று. இதனால் திருடர்களின் தினந்தோறும் இடம்பெற்றுவந்த திருட்டுச் சங்கிலியில் ஒரு ஓட்டை விழுந்தது. ஒருவன் மாத்திரம் இரவில் வீட்டைவிட்டு எங்கோ சென்று அவன் திருட வேண்டிய வீட்டில் திருடாமல் வந்ததால் ஒரு வீட்டில் மாத்திரம் திருட்டு போகாமல் இருந்தது. அவன் திருடுவதற்கென நியமிக்கப்பட்டிருந்த வீட்டில் திருடாமல் விட்டமை மீண்டும் திருடர்கள் மத்தியில் நெருக்கடியை ஏற்படுத்தியது. நேர்மையாளனின் இந்த செயல் காரணமாக மற்றுமொரு விளைவும் ஏற்பட்டது. நேர்மையாளன் தான் திருட வேண்டிய வீட்டில் திருடாமல் விட்டதால் ஒவ்வொரு நாளும் திருடாமல் விட்ட வீட்டைச் சேர்ந்த திருடர்கள் ஏனைய திருடர்களைவிட செல்வந்தர் ஆனார்கள். அவர்களுக்கு தொடர்ந்தும் திருடியே பிழைக்க வேண்டிய தேவை இல்லாமல் போய்விட்டது.

நேர்மையாளனின் நேர்மையான செயல் காரணமாக நாட்டில் மற்றுமொரு நெருக்கடியும் தோன்றியது. நேர்மையாளனின் வீட்டில் பல முறை திருடப்பட்டதாலும் அவன் புதிதாகத் திருடிக் கொண்டுவந்து தன் வீட்டில் செல்வம் சேர்க்காததாலும் அவன் வீட்டுக்கு திருட வந்தவர்கள் வெறுங்கையுடன் செல்ல நேர்ந்ததால் அவர்கள் ஏனைய திருடர்களைவிட வறுமையில் வீழ்ந்துள்ளார்கள்.

திருடர்கள் மத்தியில் தனவந்தர்களாகிய பல திருடர்கள் தாம் தனவந்தர்களானமைக்குக் காரணம் நேர்மையாளன் என்று கருதினார்கள். அவர்களில் இவர் நேர்மையாளனைப் பின்பற்றி இரவில் சிற்றாற்றுப் பாலத்துக்குச் சென்று கீழே பிரவகித்து ஓடுகின்ற நீரைப்பார்த்து ரசிப்பதை வழக்கமாகக் கொண்டார்கள். இத்தகைய செயல் திருடர்கள் வாழ்வில் மேலும் குழப்பங்களை ஏற்படுத்தத் தொடங்கியது.

எனினும் இவ்விதம் பாலத்தின் மேல் இருந்து நீரைப்பார்த்து ரசித்த செல்வந்த திருடர்கள் தொடர்ந்தும் அச்செயலைச் செய்து சும்மா இருந்து வந்தால் தாமும் விரைவில் ஏழைகளாகி விடக்கூடும் என்று நினைத்தனர். இத்தகைய சிந்தனையின் பின் அவர்கள் வேறு ஒரு உபாயத்தில் ஈடுபட்டனர். அவர்கள் அங்கு வாழ்ந்த ஏழ்மைப்பட்டவர்களைக் கூலிக்கமர்த்தி தம் சார்பில் திருட்டுத் தொழிலில் ஈடுபடுத்தத் தலைப்பட்டனர். இதன்பொருட்டு அவர்களுடன் நிபந்தனைகள் விதித்து ஒப்பந்தம் செய்யவேண்டி ஏற்பட்டது. சம்பளம், மேலதிக வேலை, விபத்து நிவாரணம் என்பன தொடர்பில் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. இரண்டு திறத்தவர்களும் அடிப்படையில் திருடர்களாக இருந்தபடியால் ஒருவரை ஒருவர் ஏமாற்றியும் வஞ்சித்தும் இலாபம் உழைத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அந்நாட்டில் தனவந்தன் ஏழை என்ற இரண்டு பிரிவினர் உண்டாயினர். தனவந்தர்கள் மேலும் தனவந்தர்களாயினர். ஏழைகள் மேலும் பரம ஏழையானார்கள்.

மேலும் அந்நாட்டில் தனவந்தர்களில் பெரும் தனவந்தர் என்ற பிரிவினர் உருவானார்கள். இவர்களுக்கு தொடர்ந்தும் திருட்டில் ஈடுபடவோ ஏழைகளை திருட்டில் ஈடுபடுத்த வேண்டிய தேவையோ ஏற்படவில்லை, இவர்கள் ஏழைகளைக் கட்டுப்படுத்தி கசக்கிப் பிழிந்து தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். தமது சொத்து சுகங்களை திருடர்களிடமிருந்து பாதுகாக்க பொலிஸ் பிரிவொன்றை ஏற்படுத்தினர். மீறியோருக்கு கடுந்தண்டனையளித்து சிறைக் கூடங்கள் அமைத்து சிறையில் தள்ளினர். நாடெங்கும் பொலிசும், சிறைக்கூடங்களும் ஆட்சி நடத்தவாரம்பித்தனர்.

இவ்விதம் பல வருடங்கள் கழிந்தன. தன வந்தர்களின் வீடுகளில் திருடச் சென்றவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானார்கள். அதன்பின் ஒவ்வொருவரும் திருட்டைப்பற்றியோ. திருடச் செல்வது பற்றியோ கதைப்பதைக்கூட நிறுத்திக் கொண்டனர். இப்போது நாட்டில் காணப்பட்ட இரண்டு பிரிவினரான தனவந்தர், வறியவர்கள் தமக்குள் தத்தமது பேதங்கள் பற்றி மட்டும் பேசினர். ஒருவரில் இருந்து மற்றவரை எவ்வாறு பாதுகாப்பது என்பது அவர்களின் முக்கிய பிரச்சினையாயிற்று. அவர்கள் தத்தமது விடுதலை பற்றியும் பேசினார்கள். ஆனால் அவர்கள் அனைவருமே திருடர்கள் என்பதில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை.

இப்போதும்கூட அந்த நாட்டில் நெஞ்சில் உரமும் நேர்மைத்திறமும் கொண்ட ஒரே ஒரு மனிதன் மாத்திரமே வசித்து வந்தான். அவன் வேறு யாருமல்ல. முன்பு நான் குறிப்பிட்ட திருட்டுத் தொழிலுக்குப் போக மறுத்த அதே மனிதன் தான். அவனாலும் தொடர்ந்து வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடிய வில்லை. அவனும் ஒரு நாள் இறந்து போய்விட்டான். அவன் ஏன் இறந்தான் என்பது பலருக்கும் புதிராக இருந்தது. தான் இறந்து போனமைக்குக் காரணம் பட்டினிதான் என்பது அவன் ஒருவனுக்கு மட்டும்தான் தெரியும்.

## வெற்றிபெற வேண்டுமானால்...

- தாழ்வு மனப்பான்மையை நீக்குதல்
- எப்பொழுதும் உற்சாகமாக உழைத்தல்.
- நம் செயலை நேசித்தல்
- குறிக்கோளை மனதில் ஆழமாகப் பதிவு செய்தல்.
- திறமைகளை மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளுதல்.
- தோல்வியைக் கண்டு துவளாமல் விடாமுயற்சி செய்தல்.
- நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுத்தல்.
- நம்மால் முடியும் என்று நம்புதல்
- நேர்மைக்குப் பலன் கிடைக்கும் ஆனால் நெடுநாள் காத்திருக்க வேண்டும்.
- வாய்ச்சொற்களைக் குறையுங்கள். அதற்காக வேண்டுக. வாய்மையைக் குறைத்து விடாதீர்கள்.
- கோழையாக வாழ்வதைக் காட்டிலும் போராடிச் சாவது எவ்வளவோ மேல்.
- நீங்கள் எதைச் செய்தாலும் சரி, உலகத்திற்கும் உள்ளத்திற்கும் உண்மையாகவே நடந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சமூகத்தின் தற்போதைய எதிர்பார்க்கைகள்



**எம். வாமதேவன்**
முன்னாள் செயலாளர் தோட்ட உட்கட்டமைப்பு,
வீடமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சு

**முகவுரை**

மலையக சமூகம் என்று அடையாளங் காணப்படுகின்ற இந்திய வம்சாவளியினர் பெருமளவில் பெருந்தோட்ட சமூகத்தையே உள்ளடக்குகின்றனர். எனவே, பெருந்தோட்ட சமூகத்தின் அடையாளங்கள், குறைபாடுகள், இருப்பு தொடர்பான பிரச்சினைகள் என்பவை மலையக சமூகத்தின் பிரச்சினைகளாக கொள்ளப்படுவதில் அதிகம் தவறுகாண முடியாது. இந்த சமூகமானது தோட்டப்புறங்களில் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் 150 ஆண்டுகளுக்கு மேலாக தனிமைப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்தபோது அவர்களின் குடியுரிமை பாதிக்கப்பட்டதோடு அவர்கள் அரசியலில் தனிமைப்படுத்தலுக்கும் உள்ளானார்கள். இதன் காரணமாக சுதந்திரத்திற்கு பின் ஏற்பட்ட நாட்டினது சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி போக்கில் இவர்கள் பங்கு பெற முடியவில்லை. வேறு வார்த்தைகளில் கூறினால் நாட்டில் ஏற்பட்ட அபிவிருத்தி திட்டத்தின் பலாபலன்கள் இந்த மக்களையுரிய வகையில் போய்ச் சேரவில்லை எனலாம். இந்த நிலையே 1990 வரை தொடர்ந்தது. இவர்கள் குடியுரிமை பெற்று பாராளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கையினை அதிகரித்து அரசாங்க அதிகாரத்தில் பங்காளர்களாக மாறத் தொடங்கியதன் பின்னரே அபிவிருத்தியின் பலன்கள் அவர்களை சென்றடையத் தொடங்கியது. புறந்தள்ளப்பட்டு ஒடுக்கப் பட்டிருந்த இந்த மக்கள், 1977 ஆம் ஆண்டுக்கு பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்ற இன ரீதியான வன்முறை சம்பவங்களினால் பெருமளவில் பாதிக்கப்பட்டமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனவே, இந்த மக்களின் ஒட்டுமொத்த எதிர் பார்க்கையாக இருப்பது இந்த புறந் தள்ளப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்டநிலையில் இருந்து விடுதலை பெற்று தேசிய நீரோட்டத்தில் இணையவேண்டும் என்பதேயாகும். அரசாங்க சேவை வழங்கலில் இந்த தனிமைப்படுத்தல், புறந்தள்ளல் என்பவற்றின் தாக்கம் இன்னும் தொடர்கிறது. அந்த தாக்கத்தின் தன்மை அவற்றிற்கான காரணங்கள் என்ன என்பதை அடையாளம் கண்டு அதற்கான வழிமுறைகளை சுட்டிக்காட்டுவதுமே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**தற்போதைய நிலை**

இச்சமூகம் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளல் என்ற செயன் முறையானது 1970 களில் தொடங்கி 1990 களில் முனைப்பு பெற்றது. 1970 களில் பெருந்தோட்டங்கள் அரசுடைமையானமை இந்த தேசிய நீரோட்டத்தில் செயன் முறையில் ஒரு மைல் கல்லாகும். தனியார் மற்றும் வெளிநாட்டு வசமிருந்த தோட்டங்கள் நில சீர்திருத்த சட்டத்தினால் அரசுடமை ஆக்கப்பட்ட தாலும் இம்மக்கள் முழுமையாக அரச நிர்வாக இயந்திரத்திற்குள் உள்ளீர்க்கப் படவில்லை எனலாம். அத்துடன் கல்வித் துறையை பொறுத்தவரை பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசுடைமை ஆக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் 1970 களில் எடுக்கப்பட்டு 1977 க்குப் பின்னரே அது முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வெளிநாட்டு முகவர் நிறுவனங்களில் செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியமை முக்கிய ஒரு அம்சமாக கருதலாம். சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை சிறுவர் பராமரிப்புப் போன்றவை அறிமுகப் படுத்தப்பட்டது. ஆண், பெண் சம சம்பளம் நடைமுறைப்படுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமையும் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சி ஆகும்.

அரசுடைமை ஆக்கப்பட்ட இத்தோட்டங்களில் தொடர்ந்தும் முகாமைத்துவ அமைப்பை பொறுத்தவரை தனியார் முறைமைகளே பின்பற்றப்பட்ட காரணத்தினால் "குடிமகன்" என்ற வகையில் தொழிலாளர்கள் எதிர்பார்த்த நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை. தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து இருந்துவந்த தோட்ட முகாமைத்துவ நிலை காரணமாக இந்த மக்களின் வாழ்க்கை நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. தோட்ட நிர்வாகம் அவர்களை "தொழிலாளர்கள்" என்ற நிலைப்பாட்டிலே பராமரித்து வந்தமையினால் அரச நிர்வாகங்களின் செயற்பாடுகள் இம்மக்களை சென்றடையாத நிலை தொடர்ந்தும் இருந்தது. 1992 ஆம் ஆண்டு மீண்டும் தனியார் மயப்படுத்தப்பட்டதை அடுத்து இதேநிலை தொடர்ந்தது.

இவர்களது அடிப்படை தேவைகளான வீடு மற்றும் காணி உரிமைகள் பற்றிய அரசாங்கத்தின் தெளிவான கொள்கைத் தீர்மானம் 2015 ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் உருவான புதிய ஆட்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இது சாத்தியமான ஒன்றாகியது. இத்திட்டத்தின் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்ட 100 வேலைத்திட்டங்களில் 73 வதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "மலையக மக்களை தற்போதைய லயன் வாழ்க்கையில் இருந்து மீட்டெடுத்து காணி உரிமையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட நவீன மயமான கிராமிய சூழலில் தனி வீடுகளும், பொது வசதிகளும் அமைத்து கொடுப்பதுடன் இத்திட்டம் முழுமையாக தோட்ட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் பிரதேச சபைகளின் மூலம் சேவைகளை பெறக்கூடியவாறு உருவாக்கிக் கொடுத்தல்". இங்கு கொஸ்லந்த் மீரியபெத்தயில் 2014.10.29 ஆந் திகதி ஏற்பட்ட பாரிய மண்சரிவைத் தொடர்ந்து இந்த லயத்து வாழ்க்கை முறையின் பாதகமான விளைவுகள் உலகத்தின் கவனத்தை ஈர்த்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாகவே மீரியபெத்தை மக்கள் இழந்த இருப்பிடங்களுக்காக தனி வீடுகளை காணி மற்றும் வீட்டு உரிமையுடன் வழங்க 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் வழிவகுத்தது. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த தீர்மானத்தின் மூலம் 12 இலட்சம் பெறுமதியான வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு இலவசமாக அரசாங்க செலவில் தனி வீடுகளாக உரிமை பத்திரத்தோடு வழங்கியமை ஒரு முன்னுதாரணமாக அமைந்தது.

மீரியபெத்த மண்சரிவினைத் தொடர்ந்து மலையகத் தோட்டங்கள் அனைத்திலும் மண்சரிவு அபாயங்கள் உள்ளன என தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தின் (N. B. R. O.) அறிவுறுத்தலின்படி தங்களது தற்போதைய வாழ்விடங்களைவிட்டு வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் என ஏறக்குறைய 5,900 குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன. எனவே, இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்களுக்கும் மீரியபெத்த சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்ட வீடமைப்பை போன்ற ஒரு முறைமையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளமை முக்கியமான ஒரு விடயமாகும். இதன்படி ஏறக்குறைய 300 வீடுகளுக்கு அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுவதற்காக கல்நாட்டு வைபவங்கள் இடம்பெற்று நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த 300 குடும்பத் தலைவர்களுக்கு மே மாதம் 10ம் திகதி வசிப்பிட உரிமை பத்திரமும் வழங்கப்பட்டது. இந்த முறைமை ஏனைய பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கும் எதிர்காலத்தில் விஸ்தரிக்கப் பட வேண்டும்.

### அரச சேவைகள் தோட்டங்களைச் சென்றடைதல்

அரசாங்க நிர்வாக அமைப்பின் மக்களுக்கு கிட்டிய நிலையிலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளின் மூலமாக தேசிய அமைச்சுகளின் சேவைகள் முழுமையாக சென்றடையாத நிலைமை காணப்படுகின்றது. இதே நிலைமை பிரதேச சபைகளை பொறுத்த வரையும் காணப்படுகின்றது. சேவை வழங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சுகள் தங்களுடைய வேலைத் திட்டங்களை தயாரிக்கும் பொழுது தோட்டப் புறங்களை உள்ளீர்த்துக் கொள்வதில்லை. தோட்டப்புற மக்களின் தேவைகள் இத்தகைய துறைசார் அமைச்சுக்களுக்கு சென்றடைவதில்லை. அதற்கான பிரதேச செயலாளர் மட்டத்தில் செயற் திட்டங்கள் உருவாக்கப்படும் பொழுது தோட்டத்துறை உரிய முறையில் கவனிக்கப்படாமையே பிரதான காரணமாக அமைகிறது. இத்தகைய நிலைமைக்கு தோட்ட நிர்வாக அமைப்புக்கும், பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கும் இடையே போதியளவு தொடர்பின்மை ஒரு காரணமாக அமையலாம். அரசியல் பிரதிநிதித்துவம் அதிகம் உள்ள நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கள் முறையாக செயற்படும் நிலையில் இந்த இடைவெளி ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்படலாம். இன்னுமொரு மிகப் பிரதானமான தடை மொழி சம்பந்தப்பட்ட ஒன்றாகும். இந்த மக்கள் தங்களுடைய சொந்த மொழியிலே அரசாங்க காரியாலயங்களில் சென்று கருமமாற்றிக் கொள்ள முடியாத நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது. அரசாங்கம் இரு மொழி உபயோகங்களாக அறிவிக்கப்பட்ட 29 பிரதேச செயலகங்களில் கூட இந்த மக்கள் தங்களது சொந்த மொழியில் கருமங்களை செய்து கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. இங்கு செயலாற்றும் அரச உத்தியோகஸ்தர்களின் தமிழ் மொழி அறிவு போதியளவுக்கு இல்லாமையே இதற்கான காரணமாகும்.

இங்குள்ள தோட்டப்புற மக்களுக்கு சிங்கள மொழியில் தங்களுடைய கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளும் அளவிற்கு பரீட்சயம் உண்டு என்ற எடுகோள் பிழையான ஒன்றாகும். அறிவித்தல் பலகைகளில் தங்கள் மொழி காணப்படவில்லை என்பதும் தங்களது மொழியில் தங்களது பிரச்சினையை எடுத்துக்கூற முடியாத நிலை காணப்படுவதும் ஒரு பொதுவான குறைபாடாக சுட்டிக்காட்டப் படுகின்றது. இந்த நிலைமையை போக்குவதற்காக அரசாங்கம் 2006ஆம் ஆண்டு 300க்கும் மேற்பட்ட பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதிப்படுத்துனர் (P.C.C.F.) என்ற புதிய உத்தியோகத்தர்களை நியமித்தது. எனினும் இவர்கள் பயனுறு முறையில் இக்காரியாலயங்களில் பணியாற்ற முடியாதிருப்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

அரசாங்க சேவைகளை பொறுத்தவரை பெருமளவில் இம்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளான நுவரெலியா, அம்பேகமுவ போன்ற பிரதேச செயலகங்களில் இந்த மக்களை சார்ந்தவர்கள் உயர் அதிகாரியாக இல்லாமல் இருப்பது ஒரு குறையாக சுட்டிக் காட்டப்படுகின்றது. பிரதேச செயலாளர்களும் அல்லது உதவி பிரதேச செயலாளர்களும் இந்த மக்களை சார்ந்தவர்களாக இல்லாமல் இருப்பது இந்த மக்களுக்கும் நிர்வாக இயந்திரத்திற்கும் இடையில் ஒரு இடைவெளியை எடுத்துக் காட்டுகிறது. தங்களது மொழி பேசுவோர் இப்பதவிகளில் இருக்கும்பொழுது இம்மக்களுக்கும் இந்த நிர்வாக அமைப்பு தங்களுக்குரியது என்ற உரிமை உணர்வும் தாங்களும் இதில் ஓர் அங்கம் என்ற உணர்வு பிறப்பதற்கு இடம் ஏற்படுகின்றது. கிராம சேவகர்கள் பலர் இம்மொழி பேசுபவர்களாக இருப்பது ஒரு வரவேற்கதக்க விடயம். இதே போன்ற நிலைமை மேல்மட்டங்களிலும் இருக்கவேண்டும் என்பதே இம்மக்களின் அபிலாசையாக உள்ளது.

தோட்டச் சுகாதாரத்துறை இன்னும் முழுமையாக தேசிய அமைப்புக்குள் உள் வாங்கப்படவில்லை. இது குறித்த கொள்கை தீர்மானம் எடுக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும் இன்னும் நிறைவேறாத ஆசையாகவே இருந்து வருகின்றது. தோட்ட நிர்வாகத்தின் கீழ் இருந்த கல்வி 1970ம் ஆண்டு அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதைப் போல சுகாதாரத் துறையும் முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான பௌதீக மற்றும் மனித வளங்கள் வழங்கப்படுவதில் குறைபாடுகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன.

**உயர்கல்வி**

உயர்கல்வியைப் பொறுத்தவரை பல்கலைக் கழக கல்வியை இவர்கள் பெற்றுக் கொள்வதில் தொடர்ந்து ஒரு பாரிய இடை வெளியை காணக்கூடியதாக உள்ளது. இலங்கை சனத்தொகையில் 6.7 சதவீதமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமூகத்திலிருந்து, தேசிய பல்கலைக் கழகங்களுக்கு நாட்டிலிருந்து மொத்தமாக தெரிவு செய்யப்படும் 20,000 பேரில் 100 - 150 பேர் வரையே தெரிவு செய்யப்படுகின்றனர். இது ஒரு சதவீதத்துக்கும் குறைவானதாகும். ஏறக்குறைய இன விகிதாசாரப்படி, இச் சமூகத்திலிருந்து 1200 - 1400 பேர் வரை தெரிவு செய்யப்ப வேண்டும்.

இச்சங்கங்களுக்கு ஏனைய சமூகத்த வரை போல் பல்கலைக்கழகம் ஒன்று இல்லாமல் இருப்பது ஒரு குறைபாடாக சுட்டிக் காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்கள் இலங்கைத் தமிழர் சமூகத்தையும் அம்பாறை, ஒலுவிலில் அமைந்துள்ள தென் கிழக்கு பல்கலைக்கழகம் முஸ்லிம் சமூகத்தையும் மையப்படுத்தி அமைந்துள்ளன. ஒரு சமூகத்தின் கலாச்சார அடையாளத்தைப் பேணுவதற்குத் அச்சமூகம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் இத்தகைய பல்கலைக் கழகங்கள் அவசியமாக கருதப்படுகின்றன. ஊவா மற்றும் சப்ரகமுவா போன்ற மாகாணங்களில் பல்கலைக்கழகங்கள் காணப் பட்டாலும் அவை மலையக சமூகத்த வரை கொண்டுள்ளதாக அடையாளப்படுத்த முடியாது. இங்கு கற்கின்ற மாணவர்களில் தமிழ் மாணவர்களின் தொகை குறைந்த சதவீதத்தையே கொண்டுள்ளது. இந்த மக்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்று தேவை என்பது கடந்த 10 ஆண்டுகளாக மலையக கல்வி சமூகம் பல்வேறு அமைப்புக்களால் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து சாத்தியவள ஆய்வொன்று மேற் கொள்வது ஒரு முதற்படியாக அமையும்.

## அரசியல் பிரதிநிதித்துவம்

தற்போது 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தமாக தேர்தல் முறைமையை மாற்றியமைப்பது பற்றி தீவிரமான வாத பேதங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் இம்மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது. 1948 இல் இச்சமூகம் 8 பேரை பாராளுமன்ற பிரதி நிதிகளாக கொண்டிருந்தது. அப்போது மொத்த சனத்தொகையில் இச்சமூகம் 12 சதவீதத்தையும் பாராளுமன்ற மொத்த பிரதிநிதிகளில் 7.5 சதவீதத்தையும் கொண்டிருந்தது. தற்போது இது 3.5 சதவீதமாகவே காணப்படுகின்றது. மலையக மக்களின் சனத்தொகை 6.7 சதவீதமாக குறைவடைந்துள்ள நிலையிலும் இது போதியள வானது என்று கூறமுடியாது.

2005 - 2010 காலப்பகுதியில் 11 பேர் பாராளுமன்ற பிரதிநிதிகளாக இருந்தனர். தற்போது முன்மொழியப்பட்டுள்ள 20ம் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின்படி பாராளுமன்ற பிரதிநிதித்துவ எண்ணிக்கை 255 ஆக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி இம்மக்களுக்கு 17 - 20 பிரதிநிதிகள் தெரிவு செய்ய ஏற்பாடு இருக்க வேண்டும். இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியது, பெண்களின் பிரதிநிதித்துவமாகும். இதுவரைக்கும் இம்மக்கள் சார்பாக ஒரு பெண்ணாவது பாராளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்படாதிருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. பெண் சமத்துவம் பெண்களை வலுவூட்டல் என்பன இன்று அதிகம் வற்புறுத்தப்படுகின்றது. அத்தோடு ஐ. நா. ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்திவரும் மில்லேனியம் அபிவிருத்தி குறிக்கோள்களில் (Millennium Development Goals - MDG) ஒன்றாக இது ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 4 சதவீதமாக காணப்படுகின்றது. பாராளுமன்ற தேர்தல்களின்போது அபேட்சகர்கள் நியமிக்கப் படும்போது பெண்களுக்கு 25 சதவீதம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை ஒன்று பரவலாக முன்வைக்கப்படுகின்றது. தற்போது இச்சமூகத்திலிருந்து மத்திய மாகாண சபையில் ஒரு பெண்ணும் அம்பகமுவ பிரதேச சபையில் இன்னுமொரு பெண்ணுமே பிரதிநிதிகளாக காணப்படுகின்றனர். இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு பெண்கள் அதிக எண்ணிக்கையில் பிரதேச சபை, மாகாண சபை, பாராளுமன்றம் போன்ற தெரிவு செய்யப்பட்ட அமைப்புக்களில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும்.

## முடிவுரை

தோட்டத்துறையில் கட்டுண்டு வாழும் இம்மக்கள் அதிலிருந்து மீட்சிபெற்று தேசிய நீரோட்டத்தில் இணைந்துகொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயன்முறையில் காணப்படும் தடைகள், பிரச்சினைகள் இக்கட்டுரையில் கூட்டிக்காட்டப் பட்டுள்ளது. இதற்கு இம்மக்களின் முழுவாழ்வியல் அம்சங்கள் அனைத்திற்கும் பொறுப்பேற்றுக்கொண்ட தோட்ட முறைமையே பிரதான தடையாக காணப்படுகிறது. தேயிலைத் தோட்டத் தொழிலுக்கு நிரந்தரமான தொழிலாளர்கள் தேவைப்படுவதால் இவர்களது வாழ்க்கை முறை தோட்டத்தொழிலோடு பின்னிப்பிணைந்ததாக காணப்படுகின்றது. பெருந்தோட்டத் தொழிலின் முக்கியத்துவம் காரணமாகவும் தோட்டத் தொழிலாளர் அத்தொழிலையே நம்பி இருக்கவேண்டிய ஒருநிலை உருவாக்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலை விட்டு வேறு தொழில்களைத் தேடிக்கொள்வது, வீடு, காணி உரிமை இல்லாது இருந்தமை, உயர்கல்வி மற்றும் திறன்கள் அற்ற நிலைமை இவர்களது குடிபெயர்விற்கு பிரதான தடைகளாக அமைந்தன. தோட்டத் தொழிலை விட்டு வெளியேறியோர் வேறு தொழில்கள் புரிவதன் மூலம் தங்களது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொண்டமை கண்கூடான ஒன்றாகும். இனிவரும் எதிர் காலங்களில் இந்த நிகழ்ச்சிப்போக்கு துரிதமடைய வாய்ப்புண்டு. தோட்டத் தொழில் முகாமைப்படுத்தும் கம்பனிகள் புதிய தொழில்நுட்பங்களை கண்டறிந்து தொழிலாளர்களை பதிலீடு செய்கின்ற மாற்று நடவடிக்கைகளை நாடவேண்டிய தேவை உருவாகியுள்ளது.

தோட்டச் சமூகத்தினர் ஏனைய மக்களோடு "குடிமகன்" என்ற அடிப்படையில் எல்லா உரிமைகளையும் அனுபவிக்க உரித்துள்ளவர்கள். இந்த நிலை உறுதி செய்யப்படுதலே அவர்களது அடிப்படை எதிர்பார்க்கை ஆகும். நாட்டினது சமூக பொருளாதார குறியீடுகள் இவற்றை உறுதி செய்யவேண்டும். இக்கட்டுரையில் இனங் கண்டவாறு சுகாதாரம், உயர்கல்வி, அரசதுறையில் உயர்நிலைகளில் பங்குபெறல், பெண்களின் அரசியல் பிரதிநிதித்தவம் போன்றவற்றில் பாரிய இடைவெளிகள் காணப்படுகின்றன. இவற்றை நிவர்த்திக்க அரசானது இம்மக்களை மையப்படுத்திய நேர்கணிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உண்டு.

## பெண்

- கணவனுக்கு உலகமெல்லாம் வீடு. ஆனால் பெண்ணுக்கு வீடுதான் உலகம்.
  *- தாகூர்*
- பெண் என்பவள் மலரைப் போன்றவள். பலவீனமானவள். எனவே அவளை அன்புடன் நேசியுங்கள்
  *- பிளேட்டோ*
- சகிப்புத்தன்மையால் வலிமை மிகுந்தவர் பெண்.
- வாழ்க்கை என்று கப்பலைக் கடப்பதற்கு பெண் என்ற படகோ கப்பலோ அவசியம் தேவை
  *- காந்தியடிகள்*
- பெண்களின் பங்களிப்பு இல்லாமல் புதியதோர் உலகத்தை உருவாக்க முடியாது. பெண்கள் பங்குபற்றாத அரசியல், அரசியலே அல்ல.
  *- அருந்ததி ராய்*
- பெண்ணின் துணிவு பணிவதில் இருக்காது. மௌனமே பெண்ணுக்குப் புகழைத் தேடிக் கொடுக்கிறது.
  *- பிளேட்டோ*
- மதப்பற்றில்லாத பெண்கள் நறுமணமில்லா மலரைக் போன்றவர்கள். *- வறீன்*
- நற்குணமுள்ள பெண்களைவிட வேறு எல்லோரும் உலகில் சிறந்தவர்களல்லர்.
  *- ஷேக்ஸ்பியர்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் : "சுடச்சுட ஒளிரும் தங்கம்"

**மொழிவரதன் C. மகாலிங்கம்**

திருவள்ளுவர் அவர் தந்த திருக்குறள் என்ற பொருள்பற்றி தமிழறிஞர்கள் மாத்திர மல்ல பிற நாட்டவர்களும் மொழியினரும் மதத்தினரும் நிறையவே ஆராய்ந்தும் பேசியும் வருகின்றனர் என்பது உலகறிந்த ஓர் உண்மை யாகும்.

மிக நீண்ட காலங்களுக்கு முன்னர் வெளிவந்த திருவள்ளுவர் திருநாள் விழா மலர் ஒன்றினை பார்க்கும் ஓர் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இதனுள் பல கட்டுரைகள் காணப்படுவதோடு திருக்குறள் தொடர்பாக பல தகவல்களும் உள்ளன.

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் வெளியிட்டு வந்த இவ்வகையான திருவள்ளுவர் நினைவு மலர் 1935 ஆம் ஆண்டிலும் மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டதாக கூறப்படுகிறது.

திருக்குறள் பற்றி ஆராய்ச்சியிலீடுபட்டோர் உரையாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள் என்ற வாறு பல தகவல்கள் இம்மலரில் உள்ளன. இதிலும் ஒரு விசேடம் என்ன வெனில் குறித்த அறிஞர்களின் ஒளிப்படங்களோடு அக்காலகட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளமையாகும்.

ஆராய்ச்சியாளர்களாக பின்வருவோர் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

தி. இலக்குமணப்பிள்ளை, தச்சநல்லூர் இலக்குமணப் போற்றி

டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
மறைமலை அடிகள்
ராய. சொக்கலிங்கம்
டாக்டர் மா. இராசமாணிக்கம்
சரவண ஆறுமுக முதலியார்
அ.க. நவநீதகிருட்டிணன்
டாக்டர் தி. இரா. அண்ணாமலை
ஜெகவீரபாண்டியன்
எஸ். அய்யாசாமிபிள்ளை
மு. அண்ணாமலை, எம்.ஏ.
எம். இராதாகிருஷ்ணபிள்ளை
கு. மதுரை முதலியார்
புதுவை சுந்தரசண்முகம்
டி. எஸ். ஸ்ரீபால்
கு. கோதண்டபாணிப்பிள்ளை
வெ.சு. சுப்பிரமணியாச்சாரி
டாக்டர் வ. சுப. மாணிக்கம்
வீ.குமாரசாமி ஐயர்
செந்துறைமுத்து
கி.ஆ.பெ.விசுவநாதம்
கோ. சுப்பிரமணியபிள்ளை
செ.செ. இராமசாமிப்பிள்ளை
ஈ.வே. ராமசாமிப்பெரியார்
தி. மாணிக்கவாசகஞ் செட்டியார்
நாரண துரைக்கண்ணன்
சுகவனம் சிவப்பிரகாசம்
டாக்டர் பா. நடராசன்
கிருபானந்தவாரியார்
வ. சுப்பையாபிள்ளை
இரா. இளங்குமரன்
அ.ச. ஞானசம்பந்தம்
அ. திருமலை முத்துசுவாமி
பூவண்ணன் (வே.தா. கோபாலகிருட்டிணன்)
சிவஞான முனிவர்
தண்டபாணி சுவாமிகள்
ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள்
ஊ. புட்பரதச் செட்டியார்
மார்க்கிசகாயஞ் செட்டியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் சோமசுந்தர பாரதியார்
கி. செல்வக்கேசவ ராய முதலியார்
கி.சு.வீ. இட்சுமி அம்மணி
ச. வையாபுரிப்பிள்ளை
திரு. நாராயண ஐயங்கார்
தி.பி. சுப்பிரமணியதாசு
சாமி. வேலாயுதனார்
தெ.பொ. மீனாட்சிசுந்தரம்
யோகி சுத்தானந்த பாரதியார்
ஔவை சு. துரைசாமிப்பிள்ளை
இளவழகனார்
ஆர். கே. அரங்கசாமி
அ. கிருஷ்ணசாமி நாயுடு
பு.ஆ. முத்துகிருஷ்ணன்
டி.ஆர். விசுவநாத சாஸ்திரி
தஞ்சை இராமையதாஸ்
சுப்ரமணிய பாரதியார்
கே. எம். நல்லசாமிப்பிள்ளை
தெ.பொ. கிருஷ்ணசாமிப்பாவலர்
இ. தா. சாரங்கபாணி
சி.எஸ். முருகேசு முதலியார்
அ. சிதம்பரனார்
வி. சுந்தர முதலியார்
நல். முருகேசு முதலியார்
டாக்டர் ஆ. தேவசேனாதிபதி
க.பொ. இரத்தினம்
கலைஞர் மு. கருணாநிதி
எம். சண்முகசுப்பிரமணியம்
பி.ஸ்ரீ
ம.பொ. சிவஞானம்
க. வச்சிரவேலு முதலியார்
கலாநிதி ந. இரவீந்திரன்
நாமக்கல் கவிஞர்
அயோத்திதாசர்
தா. மாஸ்கோ
அநந்தநாதநயினார்
கு. மோகனராசு
பேராசிரியர் கா. சிவத்தம்பி
இ. சுந்தரமூர்த்தி
இரா. சாரங்கபாணி
மு. சண்முகம்பிள்ளை
தண்டபாணிதேசிகர்
செ. கணேசலிங்கன்
தி. முருகரத்தினம்
க. சி. அகமுடைநம்பி
அ. இராமசாமி
பா. வீரமணி
பாலசுப்பிரமணியம்
கவிஞர் சிற்பி
க. பஞ்சாங்கம்
வா. செ. குழந்தைசாமி
காமாட்சி சீனிவாசன்
ச. அகத்தியலிங்கம்
சா. இரவிவர்மன்
மு. இராசமாணிக்கனார்
உ. பிரபாகரன்
மு. செல்வம்
பீ. நாகராஜ்
எம். செல்வராஜ்
தி. தாமரைச்செல்வி
ஜி. சுப்பிரமணியன்
எஸ். எம். சுந்தர்ராஜன்
கு. மங்கையர்க்கரசி
கவிஞர் தமிழ்நாடன்
குறிஞ்சிப்பாடி கணேசன்
ஏ. கனகராசு
எஸ். இராமகிருஷ்ணன்
சரளா இராசகோபாலன்
கோவை பாணன் (சு. துரை)

மேற்குறிப்பிட்டவை தவிர மேலும் பல ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர் என்பதே யதார்த்தம். எனினும் எமக்கு தேடிக்கிடைக்கப் பெற்ற விபரங்களே மேற் குறிப்பிடப்பட்டவை ஆகும்.

தமிழ் மொழியாம் செம்மொழியில் பிறந்த திருக்குறள் எமது நூல் என்பதில் எமக்குப் பெருமையே. தமிழ் மொழியில் எழுந்துள்ள இலக்கியங்கள் எமக்குப் பெருமை தருபவை ஆகும். திருக்குறளில் உட்பொதிந்துள்ள பல்வேறுவிடயங்களை இவ்வாய்வாளர்கள் ஆய்ந்து நூல்கள் வெளியிட்டுள்ளனர். விரிவு கருதி நூல்கள் குறிப்பிடவில்லை.

திருக்குறள் "சுடச் சுட ஒளிரும் தங்கம் ", "வெட்ட வெட்ட அழகு தரும் வைரம்" எனில் தவறில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முற்போக்கு இலக்கிய முன்னோடி கே. கணேஷ்

## சில சிந்தனைகள்

**லெனின் மதிவானம்**

பிரதி ஆணையாளர், கல்வி அமைச்சு

ஈழத்து முற்போக்கு இலக்கிய வரலாற்றில் முக்கியமானவர்களிரொருவர் கே. கணேஷ் (1920-2004). முற்போக்கு எழுத்தாளர்களுள் சிரேஸ்டர் என வழங்கத்தக்க தனிச் சிறப்பு வாய்ந்தவர். பல்துறைசார்ந்த ஆற்றலும் பயிற்சியும், சிருஸ்டிகர ஆற்றலும் பெற்றவர்கள் வெகு சிலரே உள்ளனர். அவர்களுள் கணேஷுக்கு தனியிடமுண்டு. இருப்பினும் அன்னாரின் பல்துறைச் சார்ந்த ஆளுமைகளை வெளிக் கொணரும் வகையிலான ஆய்வுகள் மதிப்பீடுகள் மிகவும் அருந்தலாகவே உள்ளன. அவ்வாறு வெளிவந்த மதிப்பீடுகள் கூட அறிமுகக் குறிப்புகளாகவே உள்ளன. இது ஒரு புறநிலைப்பட்ட உண்மை. எனினும் முற்போக்கு இலக்கியத்திற்கான அவரது பங்களிப்பை உணரத் தொடங்கியிருக்கின்ற இன்றைய காலக்கட்டத்தில் இன்னும் சில வருடங்களில் அவரது நூற்றாண்டு நிறைவை எதிர் நோக்கியிருக்கும் இவ்வேளையில் அவரது சமூகப் பங்களிப்பை புறந்தள்ளி விட்டு, அவரது சமய நம்பிக்கையை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு அவரைக் குறுகிய வரம்புக்குள் நிலைநிறுத்தி, ஆன்மீக கூண்டிற்குள்ளும் வேதாந்த சிறைக்குள்ளும் அடைத்து விட முற்படுபவர்களையும் காண்கின்றோம். இந்நிலையில் கணேஷின் மேதாவிலாசத்தின் அடிப்படைகள் என்ன? சமய நம்பிக்கையின் வரம்புகளையும் கடந்து சென்ற அவரது சமூக அணுகுமுறைகள் என்ன? என்பது குறித்த தேடல் அவசர அவசியமானது.

கணேஷ் கண்டியிலுள்ள அம்பிட்டி என்னும் பிரதேசத்தை சார்ந்த தலாத்துஓயா என்னும் இடத்தில் பிறந்தவர். இதன் காரணமாக இவர் தலாத்துஓயா கணேஷ் எனவும் அழைக்கப்பட்டார். இவரது இயற்பெயர் சித்தி விநாயகம் என்பதாகும். ஆனால் இவர் கே. கணேஷ் என்ற பெயரிலேயே அறிமுகமாகியிருக்கின்றார். 02 மார்ச் 1920 ஆம் ஆண்டு பிறந்த அவர் 05 ஜுன் 2004 அன்று தமது 86 வது வயதில் மறைந்தார். இவரது பெற்றோர்கள் தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த தத்தமங்களம் என்ற சிற்றூரில் இருந்து வந்தவர்களாவர். இவரது தாய்வழி தாத்தா பெரிய கங்காணியாக மலைநாட்டில் பணிபுரிந்தவர். பின்னாளில் பேருவலையில் கண்காணிப்பாளராக (P. W. D Overseer) பணியாற்றியிருக்கின்றார். ஒருவகையில் கணேஷின் குடும்ப பின்னணி செல்வாக்குமிக்க மத்தியதர வர்க்க குடும்பமாகவே இருந்துள்ளது. தனது ஆரம்பக் கல்வியை தமது பிரதேசத்திலே அமைந்துள்ள பெப்டிஸ்ட் மிசன் (Baptist Mission) பெண்கள் கல்லூரியில் சிங்கள மொழியிலும், பின்னர் கண்டி புனித அந்தோனி (St. Anthony's) கல்லூரியிலும் கற்றார். தமது தாயார் மூலமாகவே தமிழ் கற்றிருக்கின்றார் என்பதை என். செல்வராஜா முதலானோர் பதிவு செய்துள்ளனர். 1934 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ் சங்கத்தில் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றமை இவரது வாழ்வில் முக்கிய திருப்புமுனையாக அமைந்திருந்தது. குறிப்பாக முப்பதுகளின் ஆரம்பத்தில் (1934 - 1935) இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்தது. இக்கால கட்டத்தில் பல இடதுசாரி தோழர்களுடனான தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. இதன்காரணமாக மதுரை தமிழ் சங்கத்திலிருந்து இவர் விலக வேண்டிய சூழ்நிலை உருவானது. பின்னர் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் நுழைவுத் தேர்வில் தெரிவாகி திருவையாரு அரச கல்லூரியில் தமது கல்வியை தொடர வேண்டியேற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலச் சூழல் கணேஷ் அவர்களின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாக அமைந்திருந்தது. இக்கால கட்டத்தில் இடதுசாரி தோழர்களுடனான உறவுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக மாயாண்டி பாரதி, கே. இராமநாதன், சக்திதாசன் சுப்பிமணியம், ப. ஜீவானந்தம் போன்றோருடனான தொடர்பு முக்கியமானது. மாயாண்டி பாரதி முதலானோர் உருவாக்கியிருந்த இளைஞர் காங்கிரஸ் அமைப்பும் அதன் வெளியீடான லோக சக்தி பத்திரிக்கையும் பொதுவுடமைக் கொள்கையிலான பற்றும் பல இடதுசாரி தோழர்களுடனான தொடர்பும் ஏற்படுதற்கு ஏதுவாக அமைந்திருந்தன. 1938 ஆம் ஆண்டுகளில் அவர் இலங்கைக்கு திரும்பிய பின்னரும் கூட இந்திய இடதுசாரிகளுடனும், சுதந்திர போராட்டத் தோழர்களுடனான நட்பை பேணியே வந்துள்ளார். இலங்கைக்கு வந்த பின்னர் 1946 ஆம் ஆண்டு திரு: கே. இராமநாதனுடன் தொடர்புக் கொண்டு பாரதி என்ற இதழை தொடங்கியுள்ளார். இவ்விதழின் இணையாசிரியராகவும் கணேஷ் கடமையாற்றியுள்ளார். பாரதி இதழ் 1946 ஆம் ஆண்டு தோன்றிய ஒரு சஞ்சிகையாகும். அதே காலப்பகுதியில் மறுமலர்ச்சி இதழும் தோன்றியது. அவ்விதழ் இரண்டு மூன்று வருடங்கள் தொடர்ந்து வந்தன. மறுமலர்ச்சி பெற்ற கணிப்பை பாரதி இதழ் பெறவில்லை: குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து முதலாவதாக வெளிவந்த முற்போக்கு இதழாக பாரதியைக் குறிப்பிடலாம். மறுமலர்ச்சி இதழுக்கு சமனான இடத்தை வகித்தது பாரதி இதழ். மறுமலர்ச்சி அழகியல் கோட்பாட்டை முன்னிறுத்தி வெளிவர, பாரதி சமூக உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தது. எனவே பாரதி இதழ் குறித்த ஆய்வுகள் வெளிவர வேண்டியதோடு அவை ஒப்பியல் அணுகுமுறையாகவும் அமைய வேண்டும் என்பர் பேராசிரியர் யோகராசா. பாரதியில் வெளிவந்த ஆக்கங்கள் புதுமையில் அடிப்பட்டு போகாமலும் பழமையில் அழிந்துப் போகாமலும் இரண்டையும் தரம் பிரித்து இனங்கண்டு புதுவழிக் கண்டமையினாலேயே முற்போக்கு இலக்கியத்திற்கான முன்னோடி இதழாக பாரதி திகழ்ந்துள்ளது என்பது வெறும் புகழ்ச்சியில்லை என்றே தோன்றுகின்றது: இவ்வகையில் மிக அண்மைக் காலத்தில் கூட பாரதி இதழின் முக்கியத்துவம் உணரப் பட்டுள்ளதை அறியலாம். வீரகேசரி வார பத்திரிக்கையில் துணையாசிரியராகவும் சுதந்திரனில் செய்தியாசிரியராகவும் பணி புரிந்துள்ளார்.

பாரதி இதழ் ஒரு பண்பாட்டமைப்புக்கான தேவையை உணர்த்தியதன் விளைவாகவே இலங்கை எழுத்தாளர் சங்கம் உருவாகியது. பாரதி சஞ்சிகையை சிறிது காலம் நடத்திய இவர்களுக்கு இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. அவ்வியக்கத்தை சார்ந்த பிரபல எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்த் இலங்கை வந்திருந்தபோது எழுத்தாளர் சார்ந்த ஸ்தாபனமொன்றினை அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பேராசிரியர் விபுலானந்த அடிகளைத் தலைவராகவும், பிரபல சிங்கள எழுத்தாளர் மார்ட்டின் விக்கிரமசிங்காவை உப தலைவராகவும் சரத்சந்திர, கே. கணேஷ் ஆகியோரை செயலாளராகவும் கொண்டு 1947 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதே இலங்கை எழுத்தாளர் சங்கமாகும். ஆனால் மிக குறுகிய காலத்திலே இவ்வியக்கம் இயங்காமல் போனமை துரதிஸ்டவசமானதொன்றாகும். பேரினவாதம் முனைப்புற்றிருந்த சூழலில் சிங்கள தமிழ் எழுத்தாளர்களின் ஐக்கியம் என்பதை சிதைப்பதாக அமைந்திருந்தது. தமிழ் முற்போக்கு சக்திகள் தமிழ் இனவாதத்திற்கு எதிராக போராடிய அளவு சிங்கள முற்போக்கு சக்திகள் சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக போராடவில்லை என்றே கூறவேண்டும். இது குறித்த கனதியான ஆய்வுகள் அவசியமானதாகும். இது ஒருபுறமிருக்க இவ்வியக்கம் இத்தகைய சவால்களை கடந்து இயங்கியிருக்குமாயின் பாரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை. கே. கணேஷ் தொடர்ந்து இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை உருவாக்க பல முயற்சிகள் எடுத்தும் பயனளிக்கவில்லை என்றே கூறவேண்டும். 1954 ஆம் ஆண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோன்றும் வரையிலும் முற்போக்கு எழுத்தாளர்கள் ஒரு ஸ்தம்பிதம் அடைந்த நிலையிலே காணப்பட்டனர் என்பது முற்போக்கு இலக்கிய வரலாற்றில் ஒரு இருண்ட காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிரவும் ஆபிரிக்க- ஆசிய எழுத்தாளர் சங்கத்துடன் இணைந்த இலங்கை மக்கள் எழுத்தாளர் முன்னணியின் உப தலைவராகவும் இருந்துள்ளார். இருப்பினும் இந்திய இலங்கை போன்ற நாடுகளிலே முற்போக்கு எழுத்தாளர் சார்ந்த அமைப்புகளை உருவாக்குவதில் கணேஷ் பங்களிப்பு முக்கியமானதாகும். அவ்வாறே இடதுசாரி அமைப்புகளுடனும் தோழர்களுடனும் நெருங்கிய தொடர்பை பேணியிருக்கின்றார். முப்பதுகளின் இறுதிப் பகுதியில் திரு. எஸ் நடேசன் தலைமையில் இயங்கிய ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கலாசாரப் பிரிவின் பொறுப்பாளராக இயங்கியுள்ளார் என்னதையும் அறிய முடிகின்றது (செல்வராஜா. என். 2007, சுடரொளி வெளியீட்டுக் கழகம், இங்கிலாந்து இணைந்து சிந்தனை வட்டம், இலங்கை). கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடனும் தாயகம் சஞ்சிகையுடனும் நெருக்கமான உறவுகள் இருந்துள்ளதை கணேஷின் குறிப்புகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. அவ்வாறே நீர்வை பொன்னையனுடனும் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார் என்பதனையும் அறிய முடிகின்றது. நீர்வையின் முற்போக்கு இலக்கிய முன்னோடிகள் (2007, பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு) என்ற நூலுக்கு கணேஷ் எழுதிய முன்னுரையின் ஊடாக முற்போக்கு இலக்கியம் பற்றி அவரது விசாலமான பரந்துபட்ட பார்வையை மாத்திரமன்று நீர்வையின் படைப்புகள், செயற்பாடுகள்-பங்களிப்புகள் பற்றியும் அறியமுடிகின்றது.

மேலும் அவர் பண்பாட்டு இயக்கங்களின் ஸ்தாபகராக மட்டுமன்று எழுத்தாளராகவும் திகழ்ந்தவர். தமது பன்னிரெண்டாவது வயதிலே (1932) தமது எழுத்துப் பணியை தொடர்ந்தவர். அவர் ஆனந்தபோதினி என்ற பிரபல்யமான சஞ்சிகையில் தமது எழுத்துப்பணியை தொடங்கியதாக என். செல்வராஜா பதிவாக்கி இருக்கின்றார். பின்னாட்களில் மணிக்கொடி, கலாமோகினி, கிராம ஊழியன் சக்தி, ஹனுமான், தென்றல் போன்ற சிற்றேடுகள் அவரது எழுத்துக்களை பிரசுரித்திருக்கின்றன. கே. கணேஷ் சித்தார்த்தன், கலாநேசன், மலைமகன், ஆகிய புனைப்பெயர்களிலும் எழுதியுள்ளார். அவரது எழுத்துக்களில் "சத்திய போதிமரம்" என்ற கதையும் கண்டியிலிருந்து வெளிவந்த "அகிலம்" சஞ்சிகையில் சித்தார்த்தன் என்ற பெயரில் எழுதிய கண்டி வளர்த்த தமிழ் என்ற கட்டுரையும் முக்கியமானவையாகும் (சித்தார்த்தன் என்ற பெயர் கணேஷினுடையது என்ற தகவலை தந்தவர் அகிலம் சஞ்சிகையின் ஆசிரியர் கலாபூஷணம் கே. இராமசாமி). சத்திய போதிமரம் என்ற கதை மோசடிக்காரர்கள் அம்மரத்தடியில் வைத்து பொய் சத்தியம் செய்தால் அவர்களுக்கு கேடு நிகழும் என்ற நம்பிக்கையை ஆதாரமாக கொண்ட கதை. தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுப்படியும் வெல்லும் என்ற நம்பிக்கையில் எழுதப்பட்ட கதையாக இக்கதை அமைந்துள்ளது. இவ்வாறே கண்டி வளர்த்த தமிழ் என்ற தொடர் கட்டுரையில் கண்டி பிரதேசத்து வரலாற்றை பண்பாட்டு நோக்கில் ஆய்வு செய்ய முனைகின்றது. குறுகிய பிரதேச வாதங்களை கடந்து தேசிய சர்வதேச நோக்கில் கண்டி பிரதேச வரலாற்றை பண்பாட்டு நோக்கில் ஆய்வு செய்ய முனைந்த முயற்சியாக அமைந்துள்ளது. அத்துடன் கணேஷ் அவர்களின் சிந்தனையை அவரது நேர்காணல்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. கணேஷ் சிறப்பிதழாக வெளிவந்த காலம் சஞ்சிகையில் (2003) பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் கண்ட நேர்காணல் கவனத்திற்குரியதாகும். இதனைத் தொடர்ந்து ஞானம் சஞ்சிகையும் கணேஷ் சிறப்பிதழ் ஒன்றினை வெளிக் கொணர்ந்திருந்தனர். கணேஷின் முக்கிய பங்களிப்புகளில் ஒன்றாக அமைந்தது அவரது மொழிபெயர்ப்பு துறையாகும். மொழிபெயர்ப்பு துறையில் அவர் காட்டிய ஆர்வம் காரணமாக அவரது சொந்த ஆக்கங்களில் கவனம் செலுத்த தவறிவிட்டார் என்றே கூறத் தோன்றுகின்றது.

முல்க்ராஜ் ஆனந்த், கே. ஏ. அப்பாஸ், கிருஷ்ணசந்தர், லூசுன், ஹோசிமின், சந்தோர்பெட்டோவ்பி, குப்பிரியாவோவ், ஜௌ சூலி, இவன்ஃபிராங்கோ இன்னும் இது போன்ற ஆசிய நாட்டு விடுதலை வரலாற்றில் குறிப்பிடத் தக்க தாக்கங்களை கொண்டு வந்து சேர்த்த படைப்புகளையும் இரசிய படைப்புகளையும் மொழிப்பெயர்ப்பு செய்துள்ளார். அவற்றில் தீண்டத்தகாதவன், அஜந்தா, குங்குமப்பூ, ஹோசிமின் சிறைக்குறிப்புகள், அந்தகானம், போர்க்குரல், லூசுன் சிறுகதைகள், பல்கேரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள், எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே, பார்பரா கவிதைககள், குப்பிரியாவோவ் சோவியத் கவிதைகள், இளைஞன் ஏர்கையின் திருமணம், குறை பிறை, உக்ரேனியக் கவிதைகள், உடலும் உணர்வும் ஆகிய நூல்கள் முக்கியமானவையாகும்.

கணேஷ் தனது ஹோசிமின் சிறைக் குறிப்புகள் என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிடும் பின்வரும் கூற்று கவனத்திற்கு உரியது:

"ஹோ சி மின் கவிதைகள் தென் வட வியட்னாம் மற்றும் கம்போடியா, லாவோஸ் வீரர்களை ஊக்குவித்தது மட்டுமல்லாது உலகத்தின் பல நாடுகளிலும் நன் மதிப்பைப் பெற்றுள்ளன. தென்னமெரிக்க நாடுகளிலும், ஆப்பிரிக்காவின் பல நாடுகளிலும் மற்றும் ஐரோப்பாவிலும் ருஷ்ய நாட்டிலும் பற்பல மொழிகளிலே ஆக்கப்பட்டு விடுதலை வேட்கை மிக்க மக்களால் ஆர்வமுடன் பயிலப் படுகின்றன. சீனத்தின் மூல மொழியிலேயே வெளியிடப்பட்டு லட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகியுள்ளன. அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு சிலவாண்டுகளுக்குள் ஐந்து பதிப்புகள் வெளிவந்துள்ளதினின்றும் இவை பெற்ற வரவேற்பை உணரலாம்.

ஹோ வெறும் கற்பனையிலேயே திகழ்ந்த கவிஞனாக இல்லாது விடுதலை ஈட்டிக் கொடுத்துத் தன் நாட்டையும் உருவாக்கி, ஒரு வழி முறையையும் வகுத்தளித்து உருவாகி வரும் நாட்டை வலிய ஆயுத பலத்துடன் தாக்கிய உலக மகா சக்தியான அமெரிக்காவை எதிர்த்து வியக்கும் பல வெற்றிகளையடையச் செய்யும் உள்ளத் திறத்தையும் தன்னாட்டு மக்களுக்கு ஊட்டுவித்தார்.

மேற்குறித்த வரிகள் கணேஷ் அவர்களின் பரந்துப்பட்ட நோக்கை, உணர்வை அழகுற எடுத்துக்காட்டுகின்றது எனலாம். தனது காலத்திற்கு ஏற்றவை எவை என்பதையும் இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றை மொழிப் பெயர்த்தமையே கணேஷின் சிறப்புக்கும் தனித்துவத்துக்கும் அடிப்படை ஆகும். அதாவது கணேஷின் தற்கால உணர்வும் சர்வதேசிய நோக்குமே அவரை சமகாலத்தவர் பலரினின்று வேறுப்படுத்தி தனிச் சிறப்புடையவராய் காட்டுகின்றது. ஈழத்து இலக்கியத்தின் முக்கிய கர்த்தாக்களில் ஒருவராக விளங்கிய அவர் தமிழ் சமுதாயத்திற்கு அவசியமாகவிருந்த பிறநாட்டு இலக்கியங்களையே மொழிப் பெயர்த்து இருக்கின்றார். அப்பணி பலருக்கு ஆதர்சனமாக இருந்திருக்கின்றது. அவையே புதுப்பாதைக் காட்டும் புதுப்பணிகளாகவும் அமைந்திருக்கின்றன.

அக்காலச் சூழலில் "'ரூசிய எழுத்தாளர் கார்க்கி எழுதிய "தாய்" மற்றும் முல்க்ராஜ் ஆனந் எழுதிய "தீண்டாதார்" முதலாம் நாவல்கள் முற்போக்குச் சிந்தனைகள் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு வகை மாதிரியாகச் சுட்டிக் காட்டப்பட்டன. என்பார் பேராசிரியர் சபா.ஜெயராசா. தமிழ் பண்பாட்டுச் சூழலை மையமாகக் கொண்டு நோக்குகின்ற போது ஐரோப்பியாவில் காணப்பட்டது போன்றதொரு வர்க்க கட்டமைப்பு இங்கு காணப்படவில்லை. இச்சமூக சூழல் இனக் குழு வாழ்முறைக்கான சாதிய கட்டமைப்பை கொண்டதாக விளங்கியது. நமது வாழ் முறையின் சுரண்டலுக்கான ஏற்றத்தாழ்வுடைய சமூகவமைப்பு சாதி என்பதை புரிந்துக் கொள்ள முடியும். இவ்வாறான சூழலில் நமது பண்பாட்டுச் சூழலில் ஐரோப்பியாவில் தோற்றம் பெற்ற வர்க்க போராட்ட சிந்தனையை அப்படியே பாவிப்பது என்பது வர்க்கவாதத்தில் முடங்குவதாக அமைந்திருந்தது. மறுப்புறத்தில் சாதிய ஒடுக்கு முறைகளை மாத்திரம் கவனத்திலெடுத்து ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை சகல மேல்சாதியினருக்கும் எதிராக வளர்த்தெடுக்கப்படுகின்ற அடையாள அரசியலாக காணப்படுகின்றது. இவ்விரு போக்குகளும் நமது பண்பாட்டுச் சூழலில் சமூக மாற்றப் போராட்டங்களை சிதைப்பதாக அமைந்திருந்தது.

இந்நிலையில்சாதியஎதிர்ப்புபோராட்டத்தை மார்க்சிய கண்ணோட்டத்தில் நோக்கி அப்போராட்டத்தை சரியான திசை மார்க்கத்தில் முன்னெடுக்கப்பட்ட வரலாற்றை - அதன் அவசியத்தை இந்திய வாழ்நிலையிலிருந்து வெளிப்படுத்தியதில் தீண்டாதான் என்ற நாவலுக்கு முக்கிய இடமுண்டு. முற்போக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய பாரம்பரியத்தை முன்னெடுத்த தாய் இன்னும் இது போன்ற பல நாவல்கள் இருக்க கணேஷ் தீண்டாதவன் நாவலை மொழிப்பெயர்த்துள்ளமை அவதானத்திற் குரியது. நமது பண்பாட்டுச் சூழலில் மார்க்சிய பிரயோகம் பற்றிய நிதானமான தெளிவு அவரிடத்தில் இருந்திருப்பதற்கான சாத்திய கூறுகளை அவரது இந்த மொழிப்பெயர்ப்பு எடுத்துக்காட்டுவதாகவே படுகின்றது. கணேஷ் சொந்தமாக எழுதினாலும் சரி, மொழி பெயர்த்தாலும் சரி, அவற்றில் வீறுமிக்க சிந்தனையிருக்கும்: தனித் தன்மையான நடையிருக்கும் அவரது தமிழில் தெளிவும், இனிமையும், புதுமையும் இருக்கும். தீண்டாதவன் என்ற நாவல் கணேசின் மொழிப்புத் திறனுக்கு ஒரு சான்றாகும்.

அவ்வகையில் கணேஷ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிந்தித்தவை மொழிப் பெயர்த்தவை பல வழிகளில் தமிழுக்கு புதிதாயும் ஏனையோருக்கு முன்மாதிரியாகவும் இருந்து வந்திருப்பது சிறப்பாக குறிப்பிட வேண்டியதாகும். சீன இலக்கிய முன்னோடி லூசுன் பற்றிப் பலரும் நன்கு அறியாதிருந்த வேளையில் லூசுன் சிறுகதைகளை மொழிப் பெயர்த்து போர்க் குரல், சீன அறிஞர் லூசுன் சிறுகதைகள் நூல் வெளிவந்தது. இவ்வாறே ஆசியாவில் மனிதகுலத்தின் விடுதலையை உணர்த்தி நின்ற பல படைப்புகள் மொழி பெயர்ப்பு செய்துள்ளார்.

இவ்வாறு சாதனைகள் பல புரிந்த கணேஷ் பல காலமாக பொதுவுடைமை தத்துவத்தை தழுவியவராக இருந்து வந்திருக்கின்றார். மார்க்சியத்தை உள்வாங்கி தமிழ் கலை இலக்கிய மரபினை அதனுடன் கலந்து இலக்கியம் படைப்பவராக இருப்பதே அவரது தனிச்சிறப்பு எனலாம். அவரது மொழிப் பெயர்ப்புகளிலும் எழுத்துக்களிலும் இதனைக் கண்டு கொள்ளலாம். அவர் பெற்றுள்ள விருதுகள் இலக்கியச் செம்மல் (1991) தேசிய விருது, கலாபூஷணம் (1995) தேசிய விருது, விபவியின் சிறந்த மொழிப்பெயர்ப்பாளருக்கான விருது (இரு முறை), கனடா இலக்கிய தோட்டத்தினால் வழங்கப்பட்ட இயல் விருது (2003) ஆகிய விருதுகளையும் பெற்றிருக்கின்றார். விருதுகளுக்காக தன் இலக்கிய போக்கையோ கொள்கையையோ மாற்றிக் கொண்டவர்கள் பலர். பணமுடிச்சு, பொன்னாடை சுமர்த்தல், புகழ் நாட்டம் போன்றவற்றிலிருந்து ஒதுங்கியிருப்பதை தமது கௌரவமாக கருதுபர்கள் சிலர். இந்த வாத விவாதங்களுக்கு அப்பால் கே. கணேஷ் அவர்களுக்கு இவ்விருதுகள் கிடைத்தமையால் அவ்விருதுகள் தான் அங்கிகாரத்தை பெற்றன எனக் கூறின் மிகைக் கூற்றல்ல.

இது இவ்வாறிருக்க அவர் பொறுத்து வெளிவந்த விமர்சனங்களையும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளல் காலத்தின் தேவையாக உள்ளது. பலரும் அன்னாரை முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடியாக கொள்கின்ற இன்றைய சூழலில் காலம் சஞ்சிகையில் வெளிவந்த அவரது நேர்காணலை மையமாகக் கொண்டு மார்க்ஸியவாதிகள் யாரும் இறுதியில் மதத்தில் சங்கமிக்கின்றார்கள் என்ற அடிப்படையில் அவர் பொறுத்து கேட்கப்பட்ட கேள்விகளும் அவரது பதிலும் அமைந்திருந்தன. இன்னொரு புறத்தில் அவரது ஆன்மீகம் சார்ந்த பற்றுதல் இளமைக் காலத்திலிருந்தே வந்தது என்பதாக வெளிவந்த எழுத்துக்கள். மிக அண்மையில் மு. பொ எழுதிய புதிய திறனாய்வின் திசைகள் (2011, கொடகே வெளியீட்டகம், கொழும்பு) என்ற நூலில் அவரது சத்திய போதிமரம் என்ற கதையை ஆதாரமாகக் கொண்டு மேற்குறித்த கருத்துக்களை நிறுவ முற்படுகின்றார். இதற்கு அப்பால் கணேஷை மத முகாமிற்குள் அடைத்து முற்போக்கு இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை நிராகரிக்கும் வகையிலான உள்நோக்கம் கொண்ட எழுத்துக்கள் ஆங்காங்கே தலைக்காட்டாமலும் இல்லை. இவ்விடத்தில் முக்கியமானதொரு விடயத்தை சுட்டிக் காட்டுதல் அவசியமானதாகும். அக்கதையில் வெளியிட்ட கருத்து வேத வேதாந்த மீட்டுருவாக்கமாக அல்லாமல் ஒரு மனிதநேயம் சார்ந்த பற்றுதலாகவே அக்கருத்து அமைந்திருந்தது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. ஓர் ஒப்பியல் வசதிக்காக டொமினிக் ஜீவாவின் பாதுகையுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது இக்கதையில் வரும் செருப்பு தைக்கும் தொழிலாளி தனது தொழிலின் மீது கொண்டிருந்த பக்தியின் காரணமாக செருப்பின் மீது சத்தியம் வைக்க மறுக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலெல்லாம் வெளிப்பட்ட நம்பிக்கைகள் மனிதநேயம் சார்ந்ததாகவே அமைந்திருந்தது என்பதை அறியலாம். எது எவ்வாறாயினும் அத்தகைய மத நம்பிக்கையுடன் இருந்த ஒருவாராலும் முற்போக்கு இலக்கியத்திற்கு எத்தகைய காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும் என்பதைக் கவனத்திலெடுத்தல் அவசியமாதொன்றாகும். கணேஷின் இத்தகைய சமூக பங்களிப்பை கவனத்தில் எடுத்த இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் பூபாலசிங்கம் பதிப்பகத்துடன் இணைந்து வெளியிட்ட முற்போக்கு சிறுகதைகள்-1 என்ற தொகுப்பில் இவரது கதையை சேர்த்துள்ளனர். தவிரவும் இவர் இறந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பல நினைவுப் பேருரைகளை இவ்வியக்கத்தினர் ஒழுங்கமைத்து நடாத்தியுள்ளனர். இதுவரை எட்டு பேருரைகள் நடாத்தப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது. முற்போக்கு அணியினர் கணேஷின் இலக்கிய முக்கியத்துவத்தையும் சமூகப் பங்களிப்பையும் உணர்ந்திருந்தனர் என்பதற்கு இந்நிகழ்வுகள் தக்க சான்றுகளாக அமைகின்றன. தன் காலத்து வேடிக்கை மனிதரிலிருந்து வேறுபட்டு அவரது இலக்கியம் மற்றும் அது சார்ந்த இயக்கங்களின் தோற்று வாய்களுக்கும் வழிகோலிய அன்னாரின் பங்களிப்பும் பணியும் இந்நாட்டின் முற்போக்கு இலக்கிய அரசியல் எழுச்சிகளில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன - ஏற்படுத்த வேண்டும். கணேஷ் பற்றிய ஒரு சில செய்திகள் மட்டுமே இவை. எனினும் அவர் வாழ்வும் வளமும் பங்களிப்பும் இன்னும் சரியான முறையில் ஆராயப்பட வேண்டியிருக்கின்றது.

- **நம்மை நல்லவர்களாக, புத்திசாலிகளாகச் செய்வது ஆண்டவனிடம் வைக்கிற பக்திதான். சிறுவயதிலிருந்தே தெய்வத்தை கொட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். வயது ஏறஏற ஆசைகள் வரும். ஆசைகளால் இடைஞ்சல்கள் வரும். அதனால் சிறுவயதிலேயே பக்தியுடன் இருக்கப் பழகிக் கொண்டால் பிரச்சினை வராது. திறமும் இரண்டுவேளை 5 நிமிடம் தெய்வத்தைத் தியானம் செய்ய வேண்டும். கோபம். பொறாமை போன்ற கெட்ட குணங்கள் நம்மை தாக்குகின்றபோது ஆண்டவனை பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களை விழாமல் காப்பாற்றுவார்.**

*- காஞ்சி மகாபெரியவர்.*

- **அன்பு, பொறாமை, சகிப்புத் தன்மை, வீட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தியாகம், கடின உதைப்பு, பணிவு இருப்பவரே உயர்ந்தவர்**

*- மகாத்மா காந்தி*

- **குடிப்பழக்கம் மனிதனான படுபாதாளத்தில் ஆழ்த்திக் குடும்பங்களையும், குழந்தைகளையும் நாசமாக்குகின்றது**

*- மகாத்மா காந்தி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிதாய் பயில்வோம் ஆத்தி சூடி

கவிஞர் பிரேம்ராஜ்

### 1. அறம் செய்ய விரும்பு - DO GOOD

நீ தர்மம் செய்ய ஆசைப்படு. தர்மம் தலை காக்கும். தக்க சமயத்தில் உயிர் காக்கும். கூட இருந்தே குழி பறித்தாலும் கொடுத்தது காத்து நிற்கும். கடைசிவரையில் எம்மோடு கூட வருவது நாம் செய்த தர்மமே. மகாபாரதத்தில் குருஷேத்திரப் போரில் அம்புகள் நெஞ்சைத் துளைத்த நிலையிலும் கர்ணனின் உயிரைப் பிரிய விடாமல் தடுத்தது அவர் செய்த தர்மமே.

### 2. ஆறுவது சினம் - SUBDUE ANGER

கோபம் தணியத் தகுவதாம். கோபத்தோடு எழுபவன் நஷ்டத்தோடுதான் உட்காருவான். எந்தக் காலத்திலும் எதற்காகவும் கோபம் கொள்ளலாகாது. கண்ணகியின் கோபம் மதுரை மாநகரையே எரித்தது - இது சரித்திரம்.

### 3. இயல்வது கரவேல் - DO NOT WITHHOLD WHAT YOU CAN AFFORD TO GIVE

கொடுக்க முடிந்த பொருளை இரப்பவர்க்கு ஒளியாமல் கொடு. இல்லை என்று வருபவருக்கு உன்னால் முடிந்த பொருள் ஏதாவது இருப்பின் அதை தயங்காமல் மனமு வந்து கொடு. இஸ்லாம் மதத்தில் கூட ஐம்பெரும் கடமைகளில் மூன்றாவது கடமையாக "ஸகாத்" என்று ஒரு கடமை உண்டு. நோன்பைக் கூட நான்காவது கடமையாக்கி "ஸ காத்" என்கின்ற ஏழை வரியை மூன்றாவதாக வைத்துள்ளார்கள். ஒருவன் தனது நிகர வருட இலாபத்தில் 2.5 பங்கை ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்கிறது இஸ்லாம். ஸகாத்தைக் கொடுக்காதவனுக்கு சொர்க்கத்தின் வாயில் எப்போதும் திறக்கப்பட மாட்டாது என்றும் அம்மதம் சொல்கிறது.

### 4. ஈவது விலக்கேல் - HINDER NOT ANOTHER'S GIFT

ஒருவர் மற்றொருவருக்குக் கொடுப்பதை கொடுக்க வேண்டாமென்று நீ தடுக்காதே. நாய் வைக்கோலை தானும் தின்னாது, தின்னவரும் மாட்டையும் தின்ன விடாது. அது போல் வாழ்ந்திடாதே. ஒருவர் தனது தகுதிக்கும் சக்திக்கும் ஏற்ப தானம் செய்யும்போது உன் பிரசன்னம் அதனைத்தடுத்துவிடக்கூடாது. அப்படித் தடுத்தால் அதன் பாவமும் பழியும் உன்னையே சேரும்.

### 5. உடையது விளம்பேல் - PROCLAIM NOT YOUR WORTH

உன்னுடைய பொருளை அல்லது கல்வி முதலிய சிறப்பை நீயே புகழ்ந்து பேச வேண்டாம். உன்னிடம் இருக்கும் பொருளை அடுத்தவரிடம் நீ பெருமைப்பட்டுச் சொல்லும் போது அவை திருட்டுப்போவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. நீ பெற்ற கல்வியின் சிறப்பை அடுத்தவர் தான் பெருமையாய்ப் பேச வேண்டுமே தவிர உன்னைப் பற்றி நீயே பெருமை கொள்ளாதே.

### 6. ஊக்கமது கைவிடேல் - GIVE NOT UP PERSEVERANCE

நீ எத்தொழில் செய்யும்பொழுதும் மனவலிமை யினைக் கைவிடாதே. ஊக்குவிக்க ஆள் இருந்தால் ஊக்குவிக்கும் ஆள் கூட தேக்கு விற்பான் என்றார் திரைப்படப் பாடலாசிரியர் வாலி. மலை சாய்ந்து போனால் சிலையாகலாம். மரம் சாய்ந்து போனால் விறகாகலாம். மலர் சாய்ந்து போனால் சருகாகலாம். இந்த மனம் சாய்ந்து போனால்.... கூடவே கூடாது. உன் மனம் சாயக் கூடாது. உன் மனதில் வலிமை உண்டேயானால் நீ சாதிக்கலாம். நிச்சயம் சாதிப்பாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **எண்ணெழுத்து இகழேல் - SCORN NOT NUMBERS AND LETTERS**

கணிதத்தையும் இலக்கணத்தையும் இகழாமல் நன்றாகக் கற்றுக்கொள். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். மனித அவயவங்களில் பிரதானமானது கண். கை, கால் இல்லாத முடமாகக் கூட வாழலாம். கண்ணின்றி வாழ்தல் கடினமானது. கொடுமையானது. அப்படிப்பட்ட கண்போன்ற எண்ணும் எழுத்தும் இல்லாது வாழ்தலை விட இறப்பதே மேல்.

8. **ஏற்பது இகழ்ச்சி - BEGGING IS CONTEMPTIBLE**

இரந்துண்டு வாழ்வது பழிப்பாகையால் நீ ஒருவரிடத்தும் சென்று ஒன்றை வேண்டாதே. முடிந்த வரை உன் உழைப்பில் வாழ்ந்துவிடு. கையேந்தி நிற்பது கேவலம். ஏழையாகினும் இரவல் கேட்டோ இரந்தோ வாழாமல் உன் சொந்தக் காலில் நின்று வாழ்.

9. **ஐயம் இட்டு உண் - GIVE ALMS AND EAT**

ஏழைகட்கும் குருடர், முடவர் முதலானவர்கட்கும் பிச்சையிட வேண்டும். தானங்களில் சிறந்தது அன்னதானம். நீ உண்ணும் உணவில் கொஞ்ச மேனும் பசித்தவருக்கு புசிக்கக் கொடுத்து உண். உனக்கு முன்னே ஒருவன் பசித்திருக்க நீ அறுசுவை உணவை உண்பது பாவம். தன் சிறிய தோணியில் உட்கார்ந்தபடி மீன் பிடிக்க தூண்டில் போட்டுக்கொண்டிருந்தார் சங்கரன்பிள்ளை. வெகு நேரமாகியும் தூண்டிலில் எந்த மீனுமே அகப்படவில்லை வேதனையுடன் இருந்த சங்கரன்பிள்ளை மேலே அண்ணாந்து பார்த்து "கடவுளே ரொம்ப நேரமாகியும் என் தூண்டிலில் ஒரு மீனும் அகப்படவில்லையே. கொஞ்சம் கருணைகாட்டப்பா! இன்று நான் எவ்வளவு மீன் பிடிக்கிறேனோ அதில் பாதி உனக்கு" என்றார். சொல்லி சில நிமிடங்கள் கூட ஆகவில்லை அவரது தூண்டிலில் பென்னம் பெரிய மீனொன்று அகப்பட்டது. மேலே எடுத்து அதன் வாயில் மாட்டியிருந்த தூ ண்டிலை கழற்றியபடியே சந்தோச மிகுதியில் "எந்த மடையனாவது இவ்வளவு பெரிய மீனின் பாதியை கடவுளுக்குக் கொடுப்பானா?" என்று முணுமுணுத்தார். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மீன் ஒரே துள்ளலில் கடலில் விழுந்து காணாமல் போனது. மீன் பறி போன வேதனையில் "கடவுளுக்கு பகிடிகூடத் தெரிய வில்லை" என்றார் சங்கரன்பிள்ளை. கொடுப்பது என்று உறுதியாகிவிட்டால் கொடுத்துவிடு. அவ்வளவு கொடுப்போமா? இவ்வளவு கொடுப் போமா? என்று பாரபட்சம் வேண்டாம்.

10. **ஒப்புரவு ஒழுகு - CONFORM TO THE WAYS OF THE WISE**

உலகத்தோடு பொருந்த நடந்து கொள். உலகத் தோடு ஒத்துப்போகாத வாழ்க்கை விபரீதங்களை உண்டுபண்ணிவிடும்.

இயற்கையோடு இணைந்ததாய் இல்லாமல் செய்யும் எந்தக் காரியமும் விபரீத விளைவு களையே உண்டு பண்ணும். ஆகவே உலகத் தோடு ஒன்றித்து வாழு.

11. **ஓதுவது ஒழியேல் - CEASE NOT TO LEARN**

அறிவு தரும் நல்ல நூல்களை எப்பொழுதும் படித்துக் கொண்டிருங்கள். வாசிப்பதால் ஒருவன் பூரணத்துவமடைகின்றான் சரித்திரம், பூகோளம், புவியியல், விஞ்ஞானம், மந்திரம், நாகரீகம், நாட்டு நடப்பு, உலக அரசியல், சமயம், வாழும் கலை இப்படி எல்லாவற்றையும் நமக்கு சொல்லிக் கொடுப்பது நூல்கள்தான். ஆகவே நேரம் கிடைக்கும் போதெல்லாம் நல்ல நூல்களை வாசியுங்கள். நேரமில்லை என்று தப்பித்துக் கொள்ளாதே.

12. **ஔவியம் பேசேல் - SPEAK NOT WORDS OF ENVY**

நீ ஒருவரிடத்தும் பொறாமை கொண்டு பேசாதே. உலகில் சுகப்படுத்த முடியாத நோய் எதுவென்றால் அது பொறாமை தான்.

ஒரு தடவை நாராயணன் கடவுளை நோக்கி கடுமையான தவம் புரிந்தார். அவரது தவத்தின் கடுமையையும் பக்தியையும் மெச்சிய கடவுள் நாராயணன் முன் தோன்றி "பக்தா உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாராயணன் கேட்பதற்கு வாயைத் திறந்தபோது சட்டென கடவுள் "பக்தா வரம் கேட்கும் முன் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள். நீ என்ன கேட்கிறாயோ அதைப்போல இரண்டு மடங்கு உன் அடுத்த வீட்டுக்காரனுக்கும் கிடைக்கும். இப்போது வரத்தைக் கேள்" என்றார். நாராயணன் வாயடைத்துப் போனான். சற்று நேரம் யோசித்து விட்டு "கடவுளே எனக்கு ஒரு கண் குருடாக வேண்டும்" என்று வரம் கேட்டான். வரம் கொடுக்க வந்த சாமி பின்னங்கால் பிடரியில் அடிபட ஓடியே போய்விட்டார்.

தனக்கு என்ன கிடைக்கும் என்பதைவிட்டு, அடுத்தவனுக்கு என்ன கிடைக்கிறது என்பதை யிட்டு பொறாமைப்பட்டால் அது தவறு.

### 13. அஃக்கம் சுருக்கேல் - USE NOT SHORT CORNMEASURE

மிகுந்த இலாபத்திற்கு ஆசைப்பட்டுத் தானியங்களின் அளவை குறைத்து விற்காதே. நீ விற்கும் விலை எதுவானாலும் பரவாயில்லை. ஆனால் எடையை குறைத்து விற்காதே. அது மிகப் பெரிய பாவம். அப்படி எடை குறைத்து விற்பவனுக்கு கடைசிக் காலங்களில் அவன் கை, கால்களில் தொழு நோய், குஷ்டம்போன்றவை வந்து அழுந்த நேரிடும் என்று மதங்கள் கூறுகின்றன.

### 14. கண்டு ஒன்று சொல்லேல் - SPEAK NOT DIFFERENTLY FROM WHAT HAVE SEEN

கண்ணால் கண்டதற்கு மாறாகச் சொல்லாதே. ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லி அடுத்தவரை வம்பில் மாட்டி விடாதே. ஈரைப்பேனாக்கி, பேனை பெருச்சாளியாக்கி, பெருச்சாளியை பெருமாளாக்கும் மொள்ள மாரித்தனம் கூடாது. உண்மையைக் கூறு. உன் கையால், மடியால் எதையும் சேர்த்துச் சொல்லி, கண்டதாகப் பொய் கூறாதே.

### 15. ஙப் போல் வளை - BE AS THE LETTER "I" SUPPORT ALL YOUR KIN

"ங" என்னும் எழுத்து தான் பயனுடையதாயிருந்து பயனில்லாத ஙா முதலிய தன் வர்க்க எழுத்துக்களைத் தழுவிக் கொள்ளுதல் போல் நீ பயனுடையதாயிருந்து உன் இனத்தார் பயனில்லாதவராயினும் அவரைத் தழுவிக் கொள். ங என்கின்ற எழுத்து எத்தனை இடத்தில் வளைகின்றது. அது போல் வளைந்து கொடுக்கக் கற்றுக்கொள். இடத்திற்கு ஏற்றவாறு வாழப் பழகிக் கொள் பாம்பு, தின்கின்ற ஊருக்குப் போனால் நடுத்துண்டு நமக்கு என்று கேட்டு வாங்கிச் சாப்பிட உன்னை மாற்றிக் கொள்.

### 16. சனி நீராடு - TAKE OIL BATHS ON SATURDAYS

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்து முழுகு. எண்ணெய் தேய்ப்பதினால் உடலில் உள்ள சரும நோய்கள் நீங்கும். தோல் வரட்சி யடையாது. உடல் ஆரோக்கியத்திற்கும் தோலின் பளபளப்புக்கும் எண்ணெய் இன்றியமை யாததாகும்.

### 17. குயம்பட உரை - SPEAK SWEETLY

இன்பமுண்டாக்கும்படி பேசு. உன் வார்த்தையில் தேன் கலந்து பேசு. உன் வார்த்தை அடுத்த வரை வசப்படுத்த வேண்டும். உன் பேச்சில் கரும்புச் சாறு கலந்து கொள். கேட்பவர் தன் காதுகளைக் கூராக்கி இன்னும் கொஞ்சம் பேச மாட்டானா? என்று ஏங்க வேண்டும். உன் பேச்சில் இனிமையுடன் கூடிய சுவை இருந்தால் தான் நம் வாழ்வும் நமக்கு இனிக்கும்.

### 18. இடம்பட வீடு எடேல் - BUIILT NOT TOO BIG A HOUSE

அளவுக்கு மேல் இடம் வீணாய்க் கிடக்கும்படி வீட்டைப் பெரிதாகக் கட்டாதே. அதிகமான அறைகளும் இடமும் இருக்கும்போது அவற்றைத் துப்பரவு செய்வதும் கடினமாகும். அழுக்குகளும் தூசுகளும் படிந்து விட்டை சுகாதாரமற்றதாக்கி விடும். அப்படியில்லையேல் அவற்றைத்துப்பரவு செய்வதற்கு சம்பளத்திற்கு ஆளை நியமித்து தூ ய்மைப்படுத்த வேண்டும். வீணாண செலவுகள் அதிகரிக்கும். அதிகமான இடம் இருக்கும் போது வேண்டாத விருந்தாளிகள் வந்து தங்குவதோடு அல்லாமல் வீண் பிரச்சினைகளையும் எமக்கு தருவார்கள். ஆகவே, வீடு எப்போதும் எமக்கள வானதாகவே இருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இணக்கம் அறிந்து இணங்கு - BE FRIEND AFTER PROPER KNOWLEDGE AND UNDERSTANDING

நற்குண செய்கை உடையவரென்பதைத் தெரிந்து கொண்டு ஒருவரோடு நட்புச் செய். உன் நண்பன் யார் என்று தெரிந்து கொண்டால் உன்னை யார் என்று சொல்லிவிடலாம் என்பது முதுமொழி. ஆபத்தின் போது உண்மை நட்பை உணர்ந்து கொள்ளலாம். பழைய கதை ஒன்று உண்டு. சிவராமனும் கிருஷ்ணமூர்த்தியும் நல்ல நண்பர்கள். இருவரும் ஒரு நாள் காட்டு வழி செல்லும்போது ஒரு கரடியை எதிர்கொண்டார்கள். உடனே சிவராமன் மளமளவென்று ஒரு மரத்தில் ஏறி உச்சிக் கொப்பில் அமர்ந்து கொண்டான். கிருஷ்ண மூர்த்திக்கோ மரம் ஏறத் தெரியாது. என்ன செய்வதென்று புரியாமல் நிலத்தில் படுத்து இறந்தது போல் கிடந்தான். கிருஷ்ண மூர்த்தி அருகில் வந்த கரடி அவனைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவன் தலையையும் முகர்ந்து பார்த்துவிட்டு அப்பால் சென்றுவிட்டது. சிறிது நேரத்தின் பின் மரத்தில் இருந்து இறங்கிய சிவராமன் "டேய் கிருஷ்ணமூர்த்தி கரடி உன் காதருகில் வந்து ஏதோ சொல்லியதுபோல் இருந்ததே என்னடா சொல்லிச்சு' என்றான். அதற்கு கிருஷ்ணமூர்த்தி "ஆபத்தில் உதவாத நண்பனோடு சேராதே" என்று சொல்லிவிட்டுப் போனது என்றான். ஆகவே. நட்புக் கொள்ளும் போது தேர்ந்தெடுத்து நட்பு வை.

20. தந்தை தாய் பேண் - PROTECT YOUR PARENTS

உன் தாய் தந்தையரை அன்புடன் போற்றிக் காப்பாற்று. மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். குருவும் தெய்வமும் பின்னேதான். தாய் தந்தையர் தான் முன்னே. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம். அந்த முன்னறி தெய்வங்களை அன்போடு போற்றுவதும் காப்பதும் உன் தலையாய கடமையாயிருக்கட்டும்.

21. நன்றி மறவேல் - FORGET NOT GOOD DONE

உனக்குப் பிறர் செய்த நன்மையை எப்போதும் மறக்காதே. தீமையை மட்டும் மறந்துவிடு. நன்றி மறப்பது நன்றன்று. திருவள்ளுவர்கூட சொல்வார். "என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு" என்று. செய் நன்றி மறவாதே!

22. பருவத்தே பயிர் செய் - CULTIVATE IN SEASON

எச்செயலும் அதற்குரிய காலத்திலே செய்யப் பட வேண்டும். பருவம் தப்பிச் செய்யும் பயிர் என்றும் பயன் கொடுப்பதில்லை. மழை இல்லாக் காலத்தில் பயிரிடும் நெல் விளைச்சலைத் தருவதில்லை. வாழ்க்கையின் பருவங்களைக் கூட நடிகர் ரஜனிகாந்த் ஒரு திரைப்படத்தில் வெகு அழகாகச் சொல்வார். எட்டு எட்டாய் உன் வயதைப் பிரித்துக் கொள். எந்த எட்டில் எப்போ இருக்கிறாய் பார்த்துக்கொள் என்று. முதல் எட்டில் ஆடாதது விளையாட்டல்ல, இரண்டாம் எட்டில் கல்லாதது கல்வியுமல்ல... இப்படி அந்த அந்த பருவங்களில் என்னென்ன பயிர் பண்ணவேண்டுமென்று சிந்தித்து அதற்கேற்ப வாழப் பழகிக்கொள்.

23. மன்று பறித்து உண்ணேல் - LIVE NOT BY LITIGIOUS ROBBERY

நீதிமன்றத்திலே இருந்துகொண்டு இலஞ்சம் வாங்கி வாழாதே. மனிதன் செய்யும் குற்றம், தவறுகளுக்கு தண்டனை வழங்கும் நீதி வழங்கும் இடங்களில் இருந்துகொண்டு நீதியை மறுப்பது போல் கையூட்டு வாங்கி பிழைக்காதே.

24. இயல்பு அலாதன செயேல் - DO NOTHING IMPROPER

நல்லொழுக்கத்திற்கு மாறான செயல்களைச் செய்யாதே. ஒழுக்கம் விழுப்பம் தரலான். ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும். நம்முடைய நல்லொழுக்கமே சமூகத்தில் நம்மை யார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பறைசாற்றும். பெரியோரைக் கனம் பண்ணுதல், உயிர்களிடத்தே அன்பாயிருத்தல், இனியவை கூறுதல், பொய் பேசாமை, சினங் கொள்ளாமை, அடுத்தவர்க்கு உதவி செய்தல் எல்லாமே நல்லொழுக்கங்களே.

### 25. அரவம் ஆட்டேல் - REFRAIN FROM SNAKE CHARMING

பாம்பைப் பிடித்து ஆட்டி விளையாடாதே. பாம்புக்கு பல்லில் விஷம் உண்டு. தன்பாட்டில் செல்லும் பாம்பை நீ பிடித்து விளையாடுவதால் வேதனை தாங்காது தற்பாதுகாப்புக்கு உன்னை சீண்டியே தீரும். அதனால் உனக்கு மரணம் சம்பவிக்கலாம்.

### 26. இலவம் பஞ்சில் துயில் - SLEEP ON A MATTRESS OF SILK COTTON

இலவம் பஞ்சினாற் செய்த மெத்தையிலே படுத்துறங்கு. இயற்கையான பஞ்சினால் செய்த மெத்தையில் படுத்துறங்குவதால் முதுகு வலி போன்ற நோய்கள் உண்டாவதில்லை. செயற்கையான றப்பர் போன்ற மெத்தையில் படுத்துறங்குவதால் உடலுக்கு உஷ்ணம் உண்டாகி அதன் மூலம் சில நோய்கள் உண்டாக வாய்ப்புண்டு.

### 27. வஞ்சகம் பேசேல் - SPEAK NOT WORDS OF DECEIT

கபடச் சொற்களைப் பேசாதே. வஞ்சனையான சொற்களைப் பேசும்போது மற்றவர்மனம் புண்படும். அதனால், மற்றவர்களின் வெறுப்புக்கும் கோபத்திற்கும் ஆளாக நேரிடும்.

### 28. அழகு அலாத செயேல் - DO NOTHING UNBECOMING

இழிவான செயல்களைச் செய்யாதே. களவு, கொலை, மது, விபச்சாரம் போன்ற செயல்களைச் செய்யக்கூடாது. சமூகத்தின் அங்கீகாரமில்லா இழிவான செயல்களைச் செய்யும்போது மானம், மரியாதை ஆகியவற்றை இழக்க நேரிடும். நம்மோடு சேர்ந்து நம் குல, குடும்ப மானமும் அழிந்து போய்விடும். ஆகவே, ஒரு காரியத்தைச் செய்யுமுன் அதன் உயர்வு தாழ்வுகளை உணர்ந்து உன் புத்திக்கேற்ப மனசாட்சிக்கு விரோதமில்லாமல் செய்.

### 29. இளமையில் கல் - LEARN WHILE YOUNG

இளமைப் பருவத்திலேயே படிக்கத் தொடங்கி கல்வியைக் கற்றுக் கொள். கற்பதற்கு சிறந்த பருவம் இளமையே. படிக்கும் பாடங்கள் யாவும் சிலைமேல் எழுத்தாய் பதிந்து போகக் கூடியது இளமைப் பருவத்தில் தான். காலம் கடந்த பின் கவலைப்படுவதால் நன்மையில்லை. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் தேவையில்லை. இளமைப் பருவம் பொறுப்புகள் அற்றவை. குடும்ப பாரம் கனவு இல்லாதவை. ஆகவே. மனதில் வேண்டாத கற்பனைகள் இருக்காது. அந்த நிலையில் படிக்கும் பாடங்கள் ஆழமாய்ப் படிந்துவிடும். வயதுகள் போன நிலையில் கற்கும்போது பல்வேறு மன அழுத்தங்களும் நிறைந்து இருப்பதனால் மனதில் பதிவது கொஞ்சம் குறைவாகவே இருக்கும்.

### 30. அறனை மறவேல் - FORGET NOT YOUR DUTY

தருமத்தை எப்போதும் மறவாமல் செய். உனக்கு கடமையாக்கப்பட்டுள்ள தர்மங்களை மறந்து விடாதே. உனக்குள் இருக்கும் கல்விச் செல்வத்தை, அறிவை அடுத்தவர்கட்கு எப்போதும் வழங்கு. உனக்கு இருக்கும் உன் தேவைக்கு அதிகமான பொருள் பண்டங்களை உன் இன சனத்தாருக்கு, அயலவர்க்கு, வறுமையில் உள்ளவர்களுக்கு வழங்கி சந்தோசத்தைப் பெற்றுக்கொள்.

### 31. அனந்தல் ஆடேல் - SLEEP NOT TOO MUCH

மிகுதியாகத் தூங்காதே. மிகுதியான தூக்கம் உன்னில் சோம்பலையே உண்டாக்கும். தூங்காதே தம்பி தூங்காதே நீ தூங்கிப்புட்டு பின்னாடி ஏங்காதே. நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கழித்தவர்கள் நாட்டைக்கெடுத்ததுடன் தானும் கெட்டார் என்று பாரதிதாசன் பாடியுள்ளார். தூக்கத்தில் கவனம் தேவை. அளவான தூக்கமே ஆரோக்கியமானது. பகல் தூக்கம் மறந்துவிடு. நாம் ஒவ்வொருவரும் சாதிக்கப் பிறந்தவர்கள். உன் சாதனைகளுக்கு தூக்கம் தடை போட்டுவிடும். தூக்கம் என்கிற தடையை தகர்த்து விடு. நீ சாதனை படைக்கும்போது உலகம் உன் பின்னால் ஓடிவரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கம் உன் கண்களை தழுவாதிருக்கட்டும்
அமைதி உன் நெஞ்சில் தவழ்ந்திருக்கட்டும்.
கொங்கு தேர் வாழ்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழியோ
பயிலியது எகழீயே நட்பின் மயிலியற்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளளோ நீ அறியும் பூவே.

தன் மனைவியின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா? அல்லது செயற்கையாக மணம் உண்டாயிற்றா? என்ற செண்பகப் பாண்டியனின் சந்தேகத்தை தீர்ப்பதற்காக இறையனாரும் தலைமைப் புலவன் நக்கீரரும் போட்டி போட்டுக் கொண்டதால் தான் குறுந்தொகையில் நமக்கு ஒரு நல்ல செய்தியும் தீர்க்கமான தெளிவான பதிலும் கிடைத்தது. இது தான் தமிழ் மொழியின் அழகு.

உலகில் ஆயிரக்கணக்கான ஏன் இலட்சக் கணக்கான மொழிகள் இருக்கலாம். ஆனாலும் செம் மொழிகளாகத் தேர்வு செய்யப்பட்ட ஆறு மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று என்று எண்ணும்போது நாம் பெருமைப் படுவது கொஞ்சநஞ்சமல்ல.

இலக்கண சுத்தமும் இலக்கிய நயமும் இனிதே பெற்று இமயம் தொட்டு நம் தமிழ் மொழி. எதுகை மோனை சொல்லி இப்படித்தான் இயைபு என்று கவிதைக்கே வரைவிலக்கணம் கொடுத்தது நம் தமிழ் மொழி. வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்றையுமே சேர்த்து "தமிழ்" என்று சொல்வது தான் நம் தாய்மொழி. உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து என எழுத்து வகையை ஒன்று சேர்த்து "அம்மா" என்று எங்கள் முதல் வார்த்தையை அமைத்துத் தந்ததும் எங்கள் தமிழ் மொழியே.

ஒரு மொழி வளர வேண்டுமானால் மக்கள் வேண்டும். மக்கள் வளமாக வாழவேண்டு மென்றால் நடு நிலை தவறாத மன்னன் வேண்டும். மன்னன் நல்லவனாய் மட்டுமல்ல வல்லவனாகவும் வேண்டும். நல்லவனாய், வல்லவனாய் மக்களையும் மொழியையும் காக்க மண் வேண்டும். மண்ணுக்காய் புண்படும் போதெல்லாம் புகழ்பாட புலவர்கள் வேண்டும்.

ஆனால் இன்று வரப்புண்டா? நீருண்டா? நெல்லுண்டா, குடியுண்டா கோன் உண்டா?

இந்த நிலை மாறும். இதுவும் கடந்து போம். தமிழ் வளர்த்த மண்ணுக்கும் மண்ணை ஆண்ட மன்னர்க்கும் இயல் இசை நாடகம் என்ற முத்தமிழை வளர்த்த மூத்த புலவர்களுக்கும் தமிழுக்காய் மண்ணுக்காய் களமாடி கற்போடு உயிர் நீத்த மண்ணின் மாணிக்கங்களை மாவீரர்களையும் மறக்காது நினைவு கூர்ந்து அவர்கள் காட்டிய வழியில் பாதை தவறாது பயணித்தால் நம் தமிழின் பெருமை மேலும் மெருகேறும், நாமும் தமிழனென்று செல்லி தலை நிமிர்வோம்.

* **யாருக்கு தன்னிடம் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.**
* **உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்திற்கு முற்றிலும் முரண்பட்டது.**
* **மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப் படுத்துவதுதான் கல்வி.**
* **எல்லாம் அறிந்தவனுமில்லை. ஏதும் அறியாதவனும் இல்லை.**
* **லட்சியத்திற்காக உன் உயிரையும் அர்ப்பணிக்கக் கூடியவனாக இருந்தால்தான் நீ ஒரு தலைவனாக இருக்க முடியும்.**

*– சித்குபானந்தா*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைகளை எதிர்கொள்ளலில் அறிகை முறைமைகள்



- கலாபூஷணம் கோகிலா மகேந்திரன் -

உளரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த சிகிச்சை முறையாக அறியப்பட்டிருப்பது அறிகைச் சிகிச்சை. இது மனித மனங்களில் ஏற்படும் எண்ணங்களே ஒருவரது உள ஆரோக்கியத்திற்கும் ஆரோக்கியமின்மைக்கும் முயற்சிக்கும் தோல்விக்கும் அடிப்படையாக அமைவது என்ற கருத்தின் அடிப்படையில் தோன்றியது. அல்பேட் எலிஸ், ஆரன் ரி. பெக் ஆகிய இருவருமே இந்த அறிகை முறைமைகளின் பிதாமகர்கள் என்று கூறப்படுபவர்கள்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் சம்பவங்களை உள்வாங்கும் முறை வெவ்வேறானது. சம்பவங்களை உள்வாங்கும்போது அவர்களின் மனதில் தோன்றும் எண்ணங்களே அவர்களின் உணர்வுகளையும், நடத்தைகளையும் தீர்மானிக்கின்றன. ஆகவே, எண்ணங்களில் கவனமாக இருப்பவர்கள் அல்லது எண்ணங்களை நேராக வைத்திருப்பார்கள் அல்லது எண்ணங்களை மாற்றக்கூடிய கட்டுப்பாடு உடையவர்கள் பொதுவாக வாழ்வில் சந்தோஷமாக இருக்கிறார்கள். வாழ்வில் வெற்றி பெறுகிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் தானாகத் தோன்றும் மறை எண்ணங்கள் கட்டுப்பாடின்றி மனதை ஊடுருவும். இது NAT எனப்படும். இந்தத் தானியங்கி மறை எண்ணங்கள் உள்ளங்களைக் குழப்பி ஞாபகத்தைப் பாதிக்கும்.

"இந்தச் சோதனையில் நான் சித்தியடைய மாட்டேன்" என்று ஒரு மறையெண்ணம் பலருக்கு மனதில் தோன்றும். மனதில் இன்னும் சற்று ஆழமான இடத்தில் தொழிற்படாநிலை ஊகங்கள் இருக்கும். "நான் சித்தியடையாவிட்டால் என் வாழ்வு தோல்வி" என்பது ஒரு நிபந்தனைப்படுத்தப்பட்ட தொழிற்படாநிலை ஊகம். இந்த எண்ணம் ஒருவரைத் தொழிற்படவிடாது. அவர் பெரும்பாலும் படிக்காமலே இருப்பார். மனதின் இன்னும் ஆழமான இடத்தில் அடையாளம் காணக் கடினமான "மறை நம்பிக்கைகள்" (Core beliefs) இருக்கும். இவை நிபந்தனைப்படுத்தப் படாதவை. அதுதான் உண்மை என்று மனதால் ஏற்றுக்கொள்ளப்படுபவை "என்னுடைய வாழ்க்கையே தோல்வி தான்" என்பது அத்தகைய ஒரு மறை நம்பிக்கையாக இருக்கலாம். இந்தத் தொழிற்படா நிலை ஊகங்களும் மைய நம்பிக்கைகளும் எமது மனதின் அறிகைப்பரப்பின் கூறுகள். வாழ்வின் மிக ஆரம்ப நிலையில் உறுதிப்படுத்தப்படுபவை. புறச்சூழலாலும் அதன் தூண்டிகளாலும் தூண்டப்படுபவை. பரீட்சை ஒரு தூண்டியாக அமையலாம். பரீட்சைக்குச் சற்று முந்திய காலப்பகுதியில் பெற்றோரும் ஆசிரியரும் கூறுகின்ற வசனங்கள் இந்த மறை நம்பிக்கைகளை மேலும் உறுதிப்படுத்தி விடலாம். "படிக்காமல் இருக்கிறீர் றோட்டுக் கூட்டத்தான் நீர் லாயக்கு" என்று ஆசிரியர் வேறு சொல்லிவிட்டால் 'எனது வாழ்க்கை தோல்வி' என்ற மைய நம்பிக்கை மேலும் உறுதிப்பட்டுவிடும். "வர வர மாக்ஸ் குறையுது. நீ சாணம் தான் அள்ளப் போறாய்" என்று பெற்றோரும் சொல்லிவிட்டால், அந்த மாணவர் வெளியே வர முடியாத ஒரு நச்சு வட்டத்தில் அகப்பட்டுக் கொள்வார்.

சோதனை என்ற தூண்டியால் ஏற்படுத்தப்படும் 'பதகளிப்பு' என்ற உணர்வு 'அக்கறை' என்ற தொழிற்படு நிலை உணர்வாக மாற்றப்பட வேண்டும். அதற்கு மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் மறை எண்ணம் மாற்றப்பட வேண்டும். "இந்தச் சோதனையில் நான் சித்தி அடைய மாட்டேன்" என்ற மறை எண்ணம் அடிக்கடி வருமாயின் அது உண்மை போலத் தோன்றும். ஆகவே, மாற்றுவது கடினமாக இருக்கும். ஒவ்வொரு நாளும் அல்லது அடிக்கடி வழமையாக வரும் எண்ணம் என்பதால் அடையாளம் காண்பது கடினமாக இருக்கலாம். சூழலில் உள்ள பல விடயங்கள் அதைத் தூண்டி விடலாம். பரீட்சையில் சித்தி அடையாத மற்றொரு வரைக் காணும்போது "நானும் இப்படித் தான்" என்ற எண்ணம் வரலாம். பரீட்சையில் தோல்வி அடைந்த பாத்திரம் ஒன்று மது அருந்துவதைத் தொலைக்காட்சியில் பார்க்கும்போது 'நானும் இதே நிலைதான்' என்று தோன்றலாம். இந்த எண்ணம் இச்சைக்குட்படாதது, தானாக இயங்குவது. ஆகவே, அவற்றின் மீதான கட்டுப்பாடு கடினம். ஆயினும் தாங்கள் முயன்று இந்த எண்ணத்தை நேராக மாற்றிக் கொள்ளலாம்.

"நான் சோதனையில் சித்தியடைய மாட்டேன்" என்பதற்கு என்ன சான்று? சித்தி அடைவேன் என்பதற்கு என்ன சான்று? என்று கேட்டு மனதிற்குள் ஒரு பட்டி மன்றம் நடத்திப் பார்க்கலாம்.

இவர் ஒரு பல்கலைக்கழக மாணவராக இருந்தால் "நான் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் நல்ல பெறுபேறு பெற்றேன், க.பொ.த உயர்தர பரீட்சையில் நல்ல புள்ளி பெற்று பல்கலைக்கழகம் வந்தேன். ஆகவே எனது நுண்மதி உயர்வாக இருக்க வேண்டும். நான் பல்கலைக்கழகப் பரீட்சையிலும் சித்தி அடைவேன்" என்பது நான் சித்தி அடைவேன் என்பதற்கான சான்று. "சித்தி அடைய மாட்டேன்" என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை. ஆகவே, நான் இன்று முதல் படிக்கத் தொடங்கப் போகிறேன் என்று எண்ணத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டால் அவர் சித்தி அடைவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது.

எண்ணத்தை மாற்றுவது முக்கியந்தான். ஆனால், அது மட்டும் போதாது. செயற்படத் தொடங்க வேண்டும். வெற்றிகள் எல்லாமே கடும் உழைப்பை அடிப்படையாகக் கொண்டவை. வெற்றிக்குக் குறுக்குவழி கிடையாது. நாள்தோறும் ஒரு நேர அட்டவணை போட்டுக்கொண்டு படிக்கத் தொடங்க வேண்டும். குழு முறையில் இடையிடை படிக்கலாம். குழுவில் மூன்று அல்லது நாலு பேர் இருக்கலாம். குழுவிற்கு ஒரு தலைவன் இருக்கலாம். அவர் குழு படிப்புத் தொடர்பற்ற வேறு விடயத்திற்குத் திரும்பாமல் இருப்பதை உறுதி செய்வார். பொதுவாக மதிய உணவிற்குப் பின் தனியே இருந்து படித்தால் தூக்கம் வரலாம். ஆகவே, ஞாயிற்றுக்கிழமை மதிய உணவின் பின்னான நேரத்தைக் குழுக் கற்றலுக்கு ஒதுக்கலாம். இரண்டு மணி முதல் ஐந்து அல்லது ஆறு மணிவரை இது நீடிக்கலாம். அந்த நேரத்தில் சத்தமாக வாசிப்பது மற்றவர் சொல்வதைக் கேட்பது, படங்களைப் பார்ப்பது, வினாக்களுக்கு விடை சொல்வது போன்ற பல முறைகளும் கலந்து கற்றல் நடக்கலாம். ஒரு மணித்தியாலம் முடிந்தபின் ஐந்து நிமிடம் இடைவேளை எடுக்கலாம். அந்த இடைவேளையில் பழங்கள் ஏதாவது சாப்பிடலாம் அல்லது நல்ல சங்கீதம் கேட்கலாம். பின்னர் அடுத்து ஒரு மணி நேரம் படிக்கலாம். ஒரு அலகின் பிரதான கூறுகளை ஒருவர் ஞாபகப்படுத்த வேண்டும். பின்னர் அதில் உள்ள நுணுக்கமான விடயங்களையும் குறிப்பாக அறியவேண்டிய விடயங்களையும் பற்றி அனைவரும் கலந்துரையாடலாம்.

பெரும்பாலான நேரத்தில் தனியாகக் கற்பது தான் நல்லது. ஏனென்றால் அது வேகமான முறை. தனியாக இருந்து படிக்கும் அறை நல்ல காற்றோட்டமும் நல்ல வெளிச்சமும் உள்ள அறையாக இருப்பது உகந்தது. கதிரையில் இருந்து படிப்பதே நல்லது. நடந்து நடந்து படிப்பது, படுத்திருந்து படிப்பது ஆகிய முறைகளைத் தவிர்ப்பதே நல்லது. ஒருவரது ஞாபகத்திற்கும் அவரது பௌதீக உடல் நிலைக்கும் தொடர்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். நாங்கள் எப்படியும் கதிரையில் இருந்துதான் பரீட்சை எழுதப் போகிறோம். ஆகவே, அந்த இருத்தல் நிலையில் ஞாபகங்களை உள்வாங்குவதே சிறந்த வழியாகும்.

எமது ஞாபகம், "குறுங்கால ஞாபகம், நீண்டகால ஞாபகம்" எனப் பிரதானமாக இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைப்படும். ஒரு முறை, படிக்கும்போது ஒரு விடயம் குறுங்கால ஞாபகத்தினுள் வரும். ஆயினும் அதனைப் பலமுறை மீட்டல் செய்யும் போதுதான் அது நிரந்தரமான நீண்டகால ஞாபகத்தினுள் வரும். படிக்கும் காலத்தில் நித்திரையைக் குறைப்பது நல்லதில்லை. ஒரு நாளில் குறைந்தது ஏழு மணி நேரம் தூ ங்குவது அவசியம். தூக்கம் ஒரு அடிப்படைத் தேவை. அதைக் குறைத்துக் கொண்டால் மனம் தென்புடன் இருக்காது. விளங்குவதற்குச் சற்றுக் கடினமான விடயங்களைத் தூ க்கத்திற்குப் போவதற்கு முன் படித்துவிட்டுப் படுப்பது நல்லது. மூளை நித்திரை நேரத்தில் அதைப் பகுப்பாய்வு செய்து புரிந்து கொள்ள முனையும். காலையில் நித்திரை விட்டெழும்பும் போது அதிகளவு விளயங்களை உள்வாங்குவதற்குரிய இடத்தை மூளை ஆயத்தம் செய்து வைத்திருக்கும். ஆகவே காலையில் அதிகம் படிக்கலாம். அதுதான் " காலை எழுந்தவுடன் படிப்பு" என்று பாரதியும் கூறினார். ஆயினும் மாலை நேரத்தில் நாம் படித்தவற்றைப் பதிவு செய்வதற்குத் தேவையான இரசாயனப் பதார்த்தங்களை மூளை சுரக்கிறது. ஆகவே, படுக்கைக்குப் போகுமுன்னர் அன்று படித்த அனைத்தையும் மீட்டல் செய்துவிட்டுப் படுப்பது சிறந்த முறை.

உங்களுக்குப் படிப்பதற்கான ஒரு அறை இருக்கிறது. முக்கிய தகவல்களை அல்லது மறந்துபோகிற சூத்திரங்களை ஒரு சிறு அட்டையில் எழுதி அந்த அறையில் தொங்கவிடலாம். படிப்புத் தொடர்பான பல்வேறு விடயங்களினால் உங்கள் அறை அழகுபடுத்தப்படலாம். படிக்கும் விடயங்களை ஒரு காட்சியாக்கி மனதில் பதித்துக் கொண்டால் மறப்பது கடினம். குருதியில் செங்குருதிக் கலங்களின் எண்ணிக்கை வெண்குருதிக் கலங்களின் எண்ணிக்கையைவிட அதிகம் என்று படிக்கும்போது சிவப்புச் சட்டைபோட்ட பல மனிதர்களுக்கிடையில் வெள்ளைச் சட்டைபோட்ட ஒரு சிலர் நடந்து போவது போன்ற ஒரு மனப்படம் உருவாகலாம். செங்குருதிக் கலம் சம்பந்தமான கேள்வி ஒன்றின்போது இந்த மனப்படம் முன் வந்து நிற்கும். பல சொற்களை ஒரு தொடராக ஞாபகம் வைத்திருக்க வேண்டுமாயின் அந்தச்சொற்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து ஒரு அர்த்தமுள்ள சொல்லாக்கிக்கொண்டால் ஒழுங்குதவறாமல் ஒப்புவிப்பது இலகுவாக இருக்கும்.

வீட்டில் தனியாக இருந்து படிப்பதற்கு ஒரு மேசை இருக்க வேண்டியது அவசியந்தான். அதே சமயத்தில் ஒரே விடயத்தைப் பல்வேறு சூழலிலே இருந்தும் படிப்பது சிறந்தது என்றும் ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. பாடசாலையில் படித்த அதே விடயத்தை வீட்டில், நூலகத்தில், பூந்தோட்டத்தில் என்று பல இடங்களிலும் மீட்டுக் கொள்ளும்போது அது மனதில் அழியாமல் பதிந்து விடும். படிக்கும் இடத்தில் வேறு கவனக் கலைப்பான்கள் இருப்பதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும் " நான் பாட்டுக் கேட்டுக் கேட்டுப் படிப்பேன்" என்பது உண்மையில்லை. இடையிடை பாட்டுக் கேட்பதும், இடையிடையே படிப்பதுமாகவே அமையும். அது அநியாயமான நேர விரயம் ஆகும். தனியே இருந்து படிக்கும் நேரத்தில் ஒரு மணி நேரம் முடிந்தவுடன் எழுந்து சென்று ஒரு கிளாஸ் நீர் அருந்துவது படித்ததை மீட்டபடி ஐந்து நிமிடம் நடப்பது அல்லது கறுப்புச் சொக்லேட் சாப்பிடுவது உதவலாம். ஒமேகா - 3 அதிகம் காணப்படுகிற வித்துக்கள், ஒலிவ் எண்ணெயில் பொரித்த கடலை போன்வற்றை வாயில் போட்டுக்கொள்ளலாம்.

நாங்கள் எதிர்பார்த்திருந்த பரீட்சைத்தினம் அறிவிக்கப்பட்டுவிட்டது. "இந்தப் பரீட்சையில் நான் சிறந்த பெறுபேறு பெறுவேன்" என்று அறிக்கை முறை மாற்றம் நிகழ்ந்துவிட்டது. அதற்குரிய படிப்பு ஒழுங்காக நடைபெறுகிறது. இப்போது இந்தப் பரீட்சை பற்றிய எல்லாத் தகவல்களையும் அறிந்து கொள்ளவேண்டும். வினாத்தாள் எத்தகைய வினாக்களைக் கொண்டிருக்கும் கட்டுரை வகையா, பல்தேர்வு வினாவா, வினாத்தாள் எவ்வளவு நேரம் கொண்டது பொன்ற சகல விபரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் விரிவுரையாளர்களிடம் உதவி கேட்க நேர்ந்தால் தயங்காமல் கேட்க வேண்டும். "எனக்கு இந்தப் பகுதி விளங்கவில்லை" என்று கேட்பதைப் பொதுவாக யாரும் தவறாக விளங்கிக் கொள்ளமாட்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க வேண்டிய புத்தகங்கள், குறிப்புகள் பேன்றவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். பழைய வினாத்தாள்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும். விடைகளை கஷ்டப்பட்டு மனனஞ் செய்வதைவிட அதைப் புரிந்து கொள்வது முக்கியம்.

சோதனைக்கு இன்னும் எவ்வளவு நாள் இருக்கிறது? அதற்குள் படித்து முடிக்க வேண்டிய பாடங்கள் எவ்வளவு? என்று கணக்கிட்டு ஒரு நாளில் செய்ய வேண்டிய வேலையை மதிப்பிட்டு அதன்படி செயற்படத் தொடங்கலாம். பரீட்சைக்கு மிக முக்கியமான விடயங்கள் எவை என்று ஆசிரியர் அல்லது விரிவுரையாளரிடம் கேட்கலாம். அவை கட்டாயந் தெரிந்திருக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.

ஒவ்வொருநாளும் படிக்கத் தொடங்கும் போது ஒரு சிறிய தியானப் பயிற்சி அல்லது தளர்வுப் பயிற்சி செய்து கொள்ளலாம் அல்லது இயற்கையைச் சிறிது நேரம் ரசித்த பின் தொடங்கலாம். சோதனைக்கு அண்மித்த வாரங்களில் அதிக கொழுப்புணவு உண்பதைத்தவிர்த்து அதிக புரதம், பழங்கள், காய்கறிகள் உண்பது நல்லது. சோதனைக்கு முதல் ஒரு முழுமையாக முன்பரீட்சை செய்து பார்த்துக் கொள்வதும் சிறந்தது. முக்கிய சூத்திரங்கள், மறந்துபோகிற விடயங்கள் ஆகியவற்றைச் சிறு அட்டையில் எழுதிப் போகிற வருகிற இடங்களுக்குகெல்லாம் கொண்டு திரியலாம். இடையிடையே பார்த்துக்கொள்ளலாம்.

இறுதியாக நாங்கள் எதிர்பார்த்த சோதனை நாளும் வந்துவிட்டது. அன்று நல்ல நித்திரை செய்து காலை ஆறு மணிக்குப் புத்துணர்வுடன் எழுந்திருக்க வேண்டும். இரவிரவாக நித்திரை விழித்து மனனம் செய்வதைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். அன்று காலை மனதில் வரக்கூடிய எண்ணம் "நான் எவ்வளவு தூரம் ஆயத்தம் செய்துள்ளேன் என்று மதிப்பிட வருகிறது பரீட்சை எனது திறமையைக் காட்ட நல்லதோர் சந்தர்ப்பம்": அந்த எண்ணத்துடன் தளர்வாகப் பரீட்சை மண்டபத்திற்குப் போகலாம். "ஒரு வேளை எனக்குத் தெரியாத கேள்வி வந்தாலும், அது ஒன்றும் உலக முடிவில்லை என்றும் நினைத்துக் கொள்ளலாம்". பேனா, பென்சில், அடையாள அட்டை போன்ற தேவையான பொருள்களை முதல் நாள் இரவே எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். கடைசி நேரத்தில் இவற்றைத் தேடிப் பதகளிப்பு அடைய வேண்டியதில்லை. பரீட்சைக்குப் போகும் போது கட்டாயம் சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டும். இல்லாவிட்டால் வினாக்களோடு போராடுவதைவிட அதிகமாகப் பசியோடு போராட நேரிடும். சோறும், உருளைக் கிழங்கும் இறைச்சியுமாக வயிறு புடைக்க உண்டுவிட்டுப் போவதும் நல்லதில்லை. குருதியில் பெரும் பகுதி உணவுக் கால்வாய்த் தொகுதிக்குப் போக வேண்டியிருக்கும். ஆகவே, மூளைக்கு வரும் குருதி குறையும். ஆரோக்கியமான இலேசான உணவை உண்டு. ஒரு தண்ணீர்ப் போத்தலையும் கொண்டு போகலாம். ஒரு வேளை உங்களுக்குத் தலையிடி வரும் அல்லது ஆஸ்மா வரும் என்று பயந்தால் அதற்குரிய மருந்துகளைக் கொண்டு போகலாம். ஒரு வேளை மறந்துவிட்டால், பரீட்சை மேற்பார்வையாளரிடம் கேட்டால் பனடோல் தருவார்.

குறைந்தது அரைமணி நேரம் முன்னதாகப் பரீட்சை மண்டபத்தில் இருக்கும்படி திட்டமிட்டுப் போவது நல்லது. கடைசி நேரத்தில் எதையும் பாடமாக்க வேண்டாம். தெரிந்தவற்றை மீட்டுப் பார்த்துக் கொள்ளலாம். சிறு அட்டைகளை ஒரு முறை பார்த்துவிட்டுக் கதிரையில் அமரலாம். அமர்ந்து ஆழ்ந்த சுவாசப் பயிற்சி செய்வது உகந்தது. " எனது கடுமையான உழைப்பை யாராலும் பறித்துவிட முடியாது" என்ற எண்ணத்தை மனதிற்குக் கொண்டு வரலாம். ஒரு அழகான இயற்கைக் காட்சியை மனதில் பார்க்கலாம்.

வினாத்தாள் தரப்படும் நேரமும் அதிக பதகளிப்பு மிகுந்த நேரம். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தல்கள், வினாக்கள் அனைத்தையும் வாசிக்க வேண்டும். பல தேர்வு வினாவென்றால் உடனேயே பதிலைப் போட்டுக் கொண்டு போகலாம். கட்டுரை வினா அல்லது அமைப்பு வினா எனில் வினாக்களை வாசித்து முடியப் பதற்றம் குறைந்துவிடும். நன்கு விடைதெரிந்த இலகுவான வினாக்களை முதலில் எழுத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஒரு வினா எழுதி முடியச் சுயநம்பிக்கை அதிகரிக்கும். ஒரு வினாவுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அதை முடித்து அடுத்த வினாவுக்குச் செல்வது முக்கியம். அந்த வினா எழுதி முடியாவிட்டாலும் இடைவெளியை விட்டுவிட்டு அடுத்த வினாவை உரிய நேரத்தில் தொடங்கவும். சரியான விடையை எழுதியவுடன் உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளவும். ஒரு வேளை தெரியாத வினா வந்தாலும் உங்களைத் திட்டவேண்டாம். "இதைப் படிக்காமல் விட்டு விட்டேனே முட்டாள்" என்று நினைக்க வேண்டாம். அதைப்பற்றி நினைப்பதற்கு இது நேரமல்ல. அந்த நிமிட வேலையில் கவனம் செலுத்துவதே சிறந்தது.

கடைசி பத்து நிமிடங்களில் எல்லா விடைகளையும் திருப்பிப் பார்க்கவும். கவலையீனமாகப் பிழையாக எழுதியிருக்கலாம். தெரிந்த விடையையும் எழுதாமல் விட்டிருக்கலாம். சில விடயங்கள் இப்போது ஞாபகம் வரலாம். அவை எல்லாவற்றையும் செய்து முடிக்கலாம். மூன்று நிமிடங்களுக்கு முன் கடதாசிகளை ஒழுங்காக அடுக்கிக் கட்டிக் கொள்வதும் முக்கியம். மேற்பார்வையாளர் அருகில் வந்தபிறகு அடுக்கத் தொடங்கினால் பக்கங்கள் மாறிவிடலாம்.

பரீட்சை முடிந்த பின் அதுபற்றி நண்பர்களுடன் உரையாடுவதைத் தவிர்க்கவும். நண்பர்கள் என்ன எழுதினார்கள் என்பதை அறிந்து எமக்கு எதுவும் ஆகப் போவதில்லை. பரீட்சை விடைத்தாள் ஒப்படைக்கப்பட்ட கணத்தின் பின் பரீட்சை முடிவை மாற்ற எந்த வழியுமில்லை. ஆகவே, இனி அதைப் பற்றி விவாதிப்பது வீண் நேர விரயம். திரும்பவும் இதே பரீட்சை எடுக்க நேர்ந்தால் அப்போது இந்த வினாக்களைப் பற்றி யோசிக்கலாம். இப்போது அடுத்த நாளையை பரீட்சை பற்றிய ஆயத்தத்தில் ஈடுபடுவதே புத்திசாலித்தனமாகும்.

மேலே கூறப்பட்ட பரீட்சை தொடர்பான நடத்தையும் சிந்தனைமுறையும் எம்மை வெற்றிப் பாதை நோக்கி அழைத்துச் செல்லும்.


**அகிலம் வருடாந்த சிறப்பு மலருடன்**

அகிலம்
கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகை

- கல்வி
- கலை
- அறிவியல்
- விஞ்ஞானம்
- சமயம்
- மனையியல்

**இன்னும் பல்வேறு சுவையான அம்சங்களுடன் தொடர்ந்து வெளிவரவிருக்கின்றது.**

**தொடர்புகளுக்கு:**
**அகிலம் பப்ளிக்கேசன்ஸ்**
**308, டி. எஸ் சேனாநாயக்க வீதி**
**கண்டி (இலங்கை)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததானம் ஒரு உன்னதமான யாகம்

**டாக்டர் கே. ஜெயகுணசீலன்**
போதனா வைத்தியசாலை, கண்டி



**குருதியிழப்பு !**

எதிர்பாராத விபத்துக்களினாலோ அல்லது ஆயுதங்களினால் தற்செயலாகவோ அன்றி வேண்டுமென்றோ காயமேற்படுவதன்மூலமோ உருவாகும் குருதிப்பெருக்கு காரணமாக, உடலிலிருந்து பெருமளவு குருதி இழக்கப்பட்டு, ஒரு குறுகிய கால இடைவெளியில் குருதியில் உள்ள 'ஹீமோகுளோபின்' குறைவடைந்து, திடீர் குருதிச்சோகை ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

உடலிலேற்படும் பல்வேறு நீண்டகால நோய்களின் காரணமாக, நோயாளி உணர முடியாத வகையில், படிப்படியாகக் குருதியில் ஹுமோகுளோபினின் அளவு குறைவடைவதன் காரணமாகவும் நீண்டகாலக் குருதிச்சோகை ஏற்படுகிறது.

சில வேளைகளில் சாதாரண மகப் பேற்றின்போது, அதிகளவு குருதியிழப்பு, எதிர்பாராத விதமாக ஏற்படும் சிக்கல்களினால் ஏற்பட்டுக் குருதிச் சோகை திடீரென உருவாகிறது.

திட்டமிட்டுச் செய்யப்படும் மகப்பேற்றுச் சத்திரசிகிச்சை அல்லது வேறு பாரதூரமான நீண்டநேர சத்திரசிகிச்சைகளின்போது ஏற்படும் எதிர்பாராத அனர்த்தங்களினால் உருவாகும் திடீர் குருதிப்பெருக்கு ஹீமோகுளோபினின் அளவைக் குறைவடையச் செய்து, நோயாளியை மிக ஆபத்தினுள் தள்ளிவிடுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இழக்கப்பட்ட குருதியை ஈடுசெய்து, ஹுமோகுளோபினின் அளவை உடனடியாக உயர்த்த வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறான நிலைமைகளில் அந்த நோயாளிக்கு குருதி பாய்ச்சுவதைத் தவிர வேறு மாற்று வழிகள் எதுவும் இல்லை.

எனவே மேலே குறிப்பிட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நோயாளியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உரியவாறு வைத்திய சாலைகளில் ஒரு இரத்த வங்கி இருப்பது அவசியமாகிறது. அவ்வாறான ஒரு இரத்த வங்கியில் குறிப்பிட்ட அந்த வைத்தியசாலையின் முழுத்தேவைகளையும் பூர்த்திசெய்யுமளவு குருதி சேகரித்து வைக்கப்பட்டிருப்பதும் அவசியமாகிறது. எல்லா வகையான குருதி இனங்களிலும் இந்தக் குருதி இருப்பு (Blood Stock) முழுமையானதாக இருப்பதும் இன்றியமையாததாகும்.

ஒரு வைத்தியசாலையில் நோயாளருக்கான அன்றாட கருமங்கள் யாவும் எதுவித தடங்கலு மின்றி நடைபெறுவதில் இரத்த வங்கி, மகத்தான பெரும் பங்கொன்றை வகிக்கிறது. அவ்வாறாயின் இந்த இன்றியமையாத வேள்விக்கு அதன் இருப்புக்களை ஒவ்வொரு நாளும் சரியான முறையில் பராமரித்து நிர்வகிப்பதற்கு இரத்த வங்கி எவ்வாறு முகம் கொடுக்கிறது என்பதே அடுத்த கேள்வியாகிறது. ஏனெனில் குருதியை செயற்கையாக உற்பத்தி செய்ய முடியாது என்பது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் குருதிக்கு நிரந்தரமாக ஈடு செய்யக்கூடிய வேறொரு மாற்றுப் பதார்த்தமும் கிடையாது என்பதே உண்மையாகும்.

எனவே குருதியானது சுகதேகியான ஒருவரிடமிருந்து பெறப்பட்டு, இரத்த வங்கியில் சேகரித்து வைக்கப்பட்டு, தேவையானபோது நோயுள்ள இன்னொருவருக்கு, தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரத்ததான முகாம்களும் அவற்றின் வலையமைப்பும்**

நாடளாவிய ரீதியில் பரந்து காணப் படுகின்ற இரத்ததான முகாம்களை (Blood Donation Camps) ஒருங்கமைத்துத் தரும் ஒருங்கமைப்பாளர்கள் (Organizers) அவ்வப் போது ஒரு ஒழுங்குமுறையில், இவ்வாறான முகாம்களை ஒழுங்கு செய்வார்கள்.

கிராமங்களிலுள்ள மக்கள் மிகவும் உத்வேகத்தோடு, இந்தப் புனிதமான வேள்வியில் ஈடுபடுவார்கள். அதுபோலவே நகர்ப்புற மக்களும் இரத்த தானத்தைப் பொறுத்தவரை சளைத்தவர்கள் அல்லர். ஒரு இரத்ததான முகாமென்பது, மக்கள் மிக உற்சாகத்தோடு பங்கு பற்றுகின்ற ஒரு நிகழ்ச்சி என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான பல முகாம்களில் வைத்தியராகக் கடமையாற்றிய போது மக்களின் அந்த உற்சாகத்தையும் அர்ப்பணிப்பையும் கண்டு நான் வியந்து இருக்கின்றேன்.

இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட முகாம்களிற்கு இரத்த வங்கியிலிருந்து வைத்தியர்கள், தாதிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உதவியாளர்கள் அடங்கிய குழுவொன்று சென்று, அங்கு இரத்ததானம் செய்ய வந்தவர்களிடமிருந்து குருதி பெறப்பட்டு இரத்த வங்கிக்கு எடுத்து வரப்பட்டு, பாதுகாப்பாகக் குளிரூட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டு, தேவையின்போது உபயோகிக்கப்படும்.

நாடெங்கிலுமுள்ள பெரும்பாலான இரத்த வங்கிகளிலும், இவ்வாறான நடவடிக்கைகள் காணப்படுவதோடு, இவை எல்லாவற்றிற்கு மிடையே ஒரு வலைப்பின்னல் (Net Work) போன்ற தொடர்பு காணப்படும். அதாவது நாட்டிலுள்ள சகல இரத்த வங்கிகளினதும் மொத்தக் கட்டுப்பாடு, கொழும்பிலுள்ள தேசிய இரத்த மாற்று மையத்திடம் (National Blood Transfusion Centre) இருக்கும். அதே நேரத்தில் சகல இரத்த வங்கிகளும் ஒன்றுடனொன்று சுதந்திரமான தொடர்பு உடையவையாகக் காணப்படும்.

இவ்வாறான வசதியின் மூலம், ஒரு குறிப்பிட்ட இரத்த வங்கியில் ஒரு குறிப்பிட்ட குருதியினம் பற்றாக்குறையாக உள்ள சந்தர்ப்பத்தில், அவசர தேவைக்காக, வேறொரு குருதி வங்கியிடமிருந்து அந்தக் குருதியினத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு தலைமை மையத்திடமிருந்து அனுமதி பெறவேண்டிய அவசியமும் இல்லை, இவ்வாறான ஒரு வலைத் தொடர்பினால், நாட்டில் ஒரு மூலையிலிருந்து இன்னுமொரு மூலையிலுள்ள குருதித் தேவையைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

'பொம்பே' O (Bombay O) எனப்படும், ஒரு புதிய குருதியினம், O குருதியினம் உள்ளவர்களிடமிருந்து உருவாகியுள்ளது. அது மிகமிக அரிதானது. நாட்டில் ஒரு 40-50 நபர்களே இந்தக் குருதியினம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தக் குருதியினம் தவிர்ந்த, வேறு குருதி இனங்களினால், குருதி பாய்ச்சுதல் செய்ய முடியாது. எனவே இவர்களுக்கு அனர்த்தங்கள் ஏற்படுத்தும் குருதியிழப்பு இவர்களை மரணத்தினுள் தள்ளிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சகல இரத்த வங்கிகளிலும் அரிதான குருதியினங்களுள்ள இரத்ததானதாரரின் விபரங்கள் அடங்கிய ஒரு விபரக்கொத்து காணப்படும். அதில் அந்த இரத்த வங்கியின் இரத்ததான முகாம்களில் இரத்த தானம் செய்தவர்களிலிருந்து அரிதான குருதியினங்களைக்கொண்டோரின் விபரங்கள் காணப்படும்.

பெரிய வைத்தியசாலை ஒன்றிலுள்ள இரத்தவங்கி, மாதத்திற்கு 20 இற்கும் அதிகமான முகாம்களை ஒழுங்கமைத்து நடத்துகின்றது என்பது மற்றொரு உண்மை. அவ்வாறு செய்யாவிடின் அந்த வைத்தியசாலையின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒருமுறை 'பொம்பே' O குருதியினமுள்ள ஒரு கர்ப்பிணித் தாய்க்கு சத்திரசிகிச்சையின் மூலம் குழந்தையை வெளியே எடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், கொழும்பு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலைக்கு அவர் அனுமதிக்கப் பட்டார். ஆனால் அங்கு அந்தக் குருதியின முள்ளோரை அன்று இரத்த வங்கிக்கு கொண்டுவர முடியவில்லை. இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் அக் குருதியினமுள்ள இருவர் அங்குள்ள இரத்த வங்கிக்கு வரவழைக்கப்பட்டு, அவர்களிடமிருந்து குருதி பெறப்பட்டு, வான் வழியாக இராணுவத்தினரின் ஹெலிகொப்டரில் கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டு அந்தத் தாய்க்குச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

அரிதான குருதி இனத்தைக் கொண்டோர், அவசியம் ஏற்படும்போது தொலைபேசி அழைப்பின்மூலம் இரத்த வங்கிக்கு வரவழைக்கப் பட்டு, உடனடியாக இரத்த தானத்தில் ஈடுபட வைக்கப்படுவார்கள். அரிதான குருதியினம் உள்ளவர்களுக்கு அவர்களின் குருதியின் முக்கியத்துவம் பற்றியும் அந்தக் குருதியின் மதிப்பினை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும் அறிவுரைகள் வழங்கப் பட்டிருக்கும்.

இரத்ததானம் செய்பவர்கள் எல்லோரும் ஒரு இன்றியமையாத வேள்வியினைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டியது அவர்களது கடமையாகிறது.

**இரத்ததானம் செய்பவர்களின் கடப்பாடு !**

இரத்ததானம் என்பது ஒரு உன்னதமான யாகம். புனிதமான வேள்வி. ஏனெனில் இரத்தத்தை தானம் செய்பவர்கள், அது இன்னொரு நோயாளிக்கு செலுத்தப்படும்போது அந்த நோயாளியின் பாதுகாப்பு (Safety) பற்றிச் சிந்திக்க வேண்டும். அதாவது இரத்ததானம் செய்பவருக்கு அது உண்மையில் ஒரு உன்னதமான வெற்றியையும் திருப்தியையும் கொடுக்க வேண்டுமாயின் அக்குருதி அதைப் பெற்றுக்கொள்ளும் நோயாளிக்குப் பாதுகாப்பானதாகவும் எதுவித ஊறுகளும் விளைவிக்காததாகவும் இருக்க வேண்டும்.

இரத்ததானம் செய்த ஒருவரின் குருதியிலுள்ள நோய்க் கிருமிகளோ அல்லது இரசாயனப் பதார்த்தங்களோ அக்குருதியைப் பெறும் நோயாளிக்கு ஏதாவது ஊறு விளைவித்தால், அந்நோயாளி மேலும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்படுவார். அது மாத்திரமல்ல, அவரை மரணத்திலிருந்து மீட்டு வருவதற்காகக் கொடுக்கப்பட்ட குருதியே அவரை மரணத்தினுள் தள்ளிவிட்டுவிடும் அபாயம் இருக்கிறது.

அது போலவே இரத்ததானம் செய்யும் ஒருவர், அந்த நடவடிக்கையின் பின்னும் அவரது உடலிலும் மனதிலும் எதுவித பாதிப்பும் அற்றவராக இரத்ததானம் செய்வதற்கு முன்பு எவ்வாறு இருந்தாரோ அவ்வாறே தனது சுகத்தைப் பேண வேண்டும. ஏனெனில், ஒரு நோயாளியைக் குணமாக்குவதற்காக இன்னொரு நோயாளியை உருவாக்குவது ஏற்புடையதல்ல. அது சுகாதாரத்திற்கான அடிப்படைக் கோட்பாட்டையே தகர்ப்பது போலாகும்.

எனவேதான் இரத்ததானம் செய்யும் ஒருவருக்கு பொறுப்போடு கூடிய கடப்பாடு உள்ளது. அவர் இந்த நடவடிக்கையின்போது தனது இரத்தத்தைப் பெறும் நோயாளியின் பாதுகாப்பு, தனது சுகத்தின் பாதுகாப்பு, இரண்டையும் மனதில்கொண்டு பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும். இதுவே இரத்த தானம் என்னும் இன்றியமையாத உன்னதமான யாகத்தினுள் நுழையும் ஒவ்வொருவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அடிப்படை விதியும் கோட்பாடும் எனலாம்.

எனவேதான் ஒரு இரத்ததானம் நடை பெறும் முகாமிற்கு அதைச் செய்வதற்காக வரும் எல்லோரிடமிருந்தும் குருதி எடுக்கப்படுவதில்லை. அவருடைய குருதியின் பாதுகாப்புத்தன்மை பற்றியும் அவருடைய உடல் உள சுகத்தின் பாதுகாப்பு தன்மை பற்றியும் உறுதி செய்யப்படுவதற்காக ஒரு பரீட்சைக்கு அவர் உட்படுத்தப்பட்டு அந்தப் பரீட்சையில் சித்தி பெற்றால் மட்டுமே அவர் இரத்ததானம் செய்வதற்கு உகந்தவராக ஏற்றுக்கொள்ளப்படுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்க்கரை வியாதியின் முக்கியத்துவம்

**கந்தையா பரநிருபசிங்கம்**

**ச**ர்க்கரை வியாதியை நீரிழிவு நோய் என்றும் குறிப்பிடுவது வழக்கம். நீரிழிவு என்ற பெயர் இந்நோய்க்கு வரக்காரணம் இந் நோயில் ஒரு குணம்குறியான அதிக சிறுநீர் வெளியேற்றம். இதே குணம்குறி வேறு காரணங்களாலும் ஏற்படும். உதாரணமாக கீழ்த்தலமசினால் உருவாக்கப்பட்டு சுபச்சுரப்பியில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து சுரக்கப்படும் ஏடீஎச் என்னும் அகஞ்சுரக்கும் சுரப்பால் அதன் அளவு குறைந்த நிலையில் நீரிழிவு ஏற்படுகின்றது. எனவே வெல்லம் தொடர்பான நீரிழிவை அதனைச் சுட்டிக்குறிப்பிடும் ஒரு பதத்தால் குறியிடுதல் நல்லது. இந்த வகையிலேயே நீரிழிவு என்னும் பதத்திற்குப் பதிலாக சர்க்கரை வியாதி என்று குறிக்கப்படுகின்றது. சர்க்கரை வியாதி குருதியில் உள்ள அதிக குளுக்கோசின் அளவினால் ஏற்படுகின்றது. எனவே இவ்வியாதிக்கு சர்க்கரை வியாதி என்ற பெயர் பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

சர்க்கரை வியாதி எமது குடித்தொகையை விரைவான வகையில் பாதித்துவரும் நோய்களில் ஒன்று. இப்பொழுது உலகின் குடித்தொகையில் காற்பங்கு வரையானவர்கள் இந்நோயினாற் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

சர்க்கரை வியாதி பாதிக்கப்பட்டுள்ள குருதி வெல்ல அனுசேபத்தினால் ஏற்படுகின்றது. அதாவது, நாம் எமது உணவு மூலம் எடுக்கும் வெல்லம் எமது உடற்கலங்களுக்குச் சென்று சரியான முறையில் பயன்படுத்தப்படாததால் ஏற்படுகின்றது. இவ்வாறு எமது உடற் கலங்களுக்குச் சென்றடையாத குருதிவெல்லம் குருதியில் தேங்கி குருதியைத் தடிப்பமாகவும் கடினமாகவும் ஆக்குவதால் குருதிச்சுற்றோட்டம் சிரமமாக்கப்படுகின்றது.

இவ்வாறான குருதிவெல்ல உயர்நிலை பல வியாதிகளை ஏற்படுத்த ஏதுவாக அமைந்துவிடுகின்றது. இந்த வகையில் சர்க்கரை வியாதி பாரிசவாதம், அசாதாரண இன்பியற் தொழிற்பாடு, முதிர்ச்சி முன் மனச்சிதைவு, சிறுநீரகநோய், இதயநோய், பார்வையின்மை, நரம்புத் தொகுதியின் பாதிப்பு ஆகியவற்றிற்குக் காரணமாக அமைந்து விடலாம்.

சர்க்கரை வியாதி வரக்கூடிய ஏது நிலைகளைத் தவிர்ப்பதற்கு இதனைக் கட்டுப் பாட்டில் வைத்திருக்கவேண்டும். அதாவது முகாமைத்துவம் செய்யவேண்டும்!.

சர்க்கரை வியாதியில் சில வகைகள் உண்டு. ஆனால் இங்கு நாம் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள இருப்பது வகை -2 என்றழைக்கப்படும் சர்க்கரை வியாதி. ஏனெனில் 90 சதவீதமான சர்க்கரை வியாதி நோயாளிகள் இவ்வகைச் சர்க்கரை வியாதியால் பாதிக்கப்படுகின்றனர். இந்நோய் படிப்படியாகவே விஸ்வரூபம் எடுக்கின்றது. பொதுவாக 50 வயதிற்கு மேற்பட்டவர்களே இந்நோயினால் அதிகம் பாதிக்கப்படுவதுண்டு. ஆனால் உயர் உடற்பருமன் மற்றும் சுறுசுறுப்பற்ற வாழ்க்கையை நடத்துபவர்களிடையே இந் நோய் சிறுவயதிலும் ஏற்படலாம். இந்நோய் எமது வாழ்க்கைமுறை, பாரம்பரியம் ஆகிய வற்றாலும் எமது உடற்கலங்களின் இன்சுலின் தடையாலும் ஏற்படுகின்றது. அதாவது உடற் கலங்களுக்கு இன்சுலினால் வெல்லம் கடத்தப்படுவதை கலங்கள் தடுக்கின்றன.

இப்பொழுது நாம் சர்க்கரை வியாதியைக் கட்டுப்பாட்டில் (முகாமைத்துவம் செய்ய) வைத்திருக்க செய்யக்கூடிய வழிமுறைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்போம். இந்த வகையில் பின்வரும் வழி முறைகள் பின்பற்றப்படலாம் (பின்பற்றப்பட்டும் வருகின்றன).

- உணவு
- உடற்பயிற்சி
- குறைநிரப்பிகள்
- பல்வைற்றமின்கள் (Multivitamin) பல் தாதுப்பொருட்கள் சில விசேட பதார்த்தங்கள்
- அலோப்பதி வைத்திய முறையில் சிபாரிசு செய்யப்பட்ட மருந்துகள்.

**உணவு:**

நாம் உண்ணும் உணவு, குடிக்கும் பானங்கள் ஆகியவற்றில் உள்ள காபோவைதரேற்றின் அளவு, வகை, மற்றும் அதனை எடுக்கும் நேரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி எமது குருதியில் விடப்படும் வெல்லத்தின் அளவைக் கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் வெல்லம் இன்சுலின் தொடர்பான அனுசேபத்தை மீறிச்செல்வதைத் தவிர்க்கலாம்.

உணவு வகை எல்லாவற்றையும் முழுமை நிலையில் எடுக்கவேண்டும். அதாவது, வெள்ளை அரிசியைத் தவிர்த்து அரிசியை முழுத்தானியமாக எடுக்கவேண்டும். பழச் சாறுகளுக்குப் பதிலாக பழங்களை எடுக்க வேண்டும். இவ்வாறு எடுப்பதன் நோக்கம் என்ன வெனில் முழுமைநிலையில் உணவுக் கூறுகள் இருப்பதுடன் வெல்ல அனுசேபத்திற்கு உதவியாக அமையும். நார்ச்சத்தும் கிடைக்கும். அத்துடன், காபோவைதரேற்றின் அளவினைக் கட்டுப்படுத்த மரக்கறிகள், வித்துக்கள், விதைகள், மெலிதான புரத உணவுகள் ஆகியவற்றை உண்ண வேண்டும்.

வெல்லத்தின் அளவைக் குருதியில் கட்டுப்படுத்த உண்ணும் உணவை சிறுசிறு அளவுகளாக உண்ணவேண்டும். அண்மைக் காலமாக உணவுப் பொருட்களின் குருதி வெல்லம் தோன்றும் சுட்டெண், குருதிவெல்லச் சுமை என்ற பதங்கள் பேசப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இவை இரண்டும் குறைவாக உள்ள உணவு வகைகளை உண்டு குருதி வெல்லத்தைக் கட்டுப்படுத்தலாம்.

மேலும் சர்க்கரை வியாதி வராமல் தடுக்கக்கூடியது என விஞ்ஞானிகளால் கருதப்படும் உணவுப் பொருட்களையும் உட்கொள்ளலாம்.

**உடற்பயிற்சி:**

சர்க்கரை வியாதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உடற்தொழிற்பாடு இன்றியமையாதது. ஏனெனில் உடற் தொழிற்பாட்டினால் எமது உடற்கலங்கள் அதிகம் இன்சுலின் உணர்ச்சியுள்ளவையாக மாறி இன்சுலின் தொழிற்பாட்டை மேம்படுத்தும். அத்துடன் உடற்கலங்கள் குருதியிலிருந்து சிறிதளவு குளுக்கோசை இன்சுலினால் கடத்தப்படுவதற்கு மேலதிகமாகப் பாவிக்கும்.

நாம் கிரமமான உடற்பயிற்சியுடன் எமது நாளாந்த வாழ்வில் பிற உடற் தொழிற்பாடுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக பெருங்கடைகளுக்குச் செல்லும்போது வாகனத் தரிப்பிடங்களில் கடையைவிட்டு விலகி தூரவிடங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டு நடந்து செல்லல், செல்லும் இடங்களிலுள்ள செங்குத்துயர்த்திகள், மற்றும் சாய்வுயர்த்திகளைத் தவிர்த்து படிக்கட்டுகளால் ஏறிச்செல்ல வேண்டும். அத்துடன் குறைந்தது நாளாந்தம் 500 மீற்றர் தூரம் என்றாலும் நடக்க வெண்டும்.

**குறைநிரப்பிகள்:**

நாம் எடுக்கும் உணவு மற்றும் குடிபானங்களில் போதிய அளவு நார்ச்சத்து உள்ளதா எனக் கவனித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடத்து நார்ச்சத்து குறைநிரப்பிகளைப் பாவிக்கலாம்.

பல் வைற்றமின்களும் பல் கனிப் பொருட்களும் சர்க்கரை வியாதியுடையோர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவுப் பொருட்களில் குறைபாடு உடையவர்களாக இருக்கலாம். இந்நிலையில் நல்ல தரமான பல் வைற்றமின்கள் மற்றும் பல்கனிப்பொருட்களை நாளாந்தம் எடுத்து நிவர்த்தி செய்யலாம். இவற்றைத் தேர்வு செய்யும் போது வெல்லம், உப்பு, மற்றும் செயற்கைக் கூறுகள் உள்ளவற்றைத் தவிர்க்கலாம்.

**சில விசேட பதார்த்தங்கள்:**

குறோமியம் என்ற உலோகம், கறுவா என்ற சரக்கு, பில்பெறி என்ற பழம் போன்றவையும் சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த உதவும் என்று கண்டறியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அலோப்பதி வைத்தியமுறையில் சிபார்சு செய்யப்படும் மருந்துகள்:**

இன்று சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு சிபார்சு செய்யப்படும் மருந்துகளில் பின்வருவன முக்கியமானவை:

- மெற்போமின்
- இன்சுலின்
- கிளைபியூறைட்டு

இவை ஒவ்வொன்றும் எவ்வாறு தொழிற்பட்டு குருதி வெல்லத்தைக் கட்டுப்படுத்துகின்றன என்று பார்ப்போம்.

**மெற்போமின்**

இம்மருந்து குருதியில் உள்ள வெல்லத்தின் அளவை பின்வரும் வழிகளில் குறைக்கும்

0 எமது சமிபாட்டுக் குழாயிலிருந்து உறிஞ்சப்படும் குளுக்கோசின் அளவைக் குறைத்தல்

0 எமது ஈரல் மற்றும் சிறுநீரகத்தினால் உருவாக்கப் படும் குளுக்கோசின் அளவைக் குறைத்தல்.

0 எமது உடற்கலங்களின் இன்சுலின் சார்பான உணர்ச்சியை (உடற்கலங்களில் குளுக்கொசு பாவிக்கப்படுதல்) கூட்டுதல்.

**கிளையியூறைட்டு:**

இம் மருந்து சதையிலுள்ள இன்சுலினைச் சுரக்கும் கலங்களைத் தூண்டி அவை இன்சுலினை உற்பத்தியாக்கிச் சுரக்கச் செய்யும். இந்த வகையில் உடற்கலங்களால் வெல்லம் பயன்படுத்தப்படுதலைக் கூட்டி குருதிக் குளுக்கோசின் அளவைக் குறைக்கவுதவும்.

**இன்சுலின்:**

சர்க்கரை வியாதி வகை 2 உடையவர்கள் மிகவும் உயர் அளவு குருதிவெல்லத்தைக் கொண்டிருந்தால் இம் மருந்தை ஊசி மூலம் ஏற்றி குருதிவெல்லத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இக்கட்டுரை சர்க்கரை வியாதி சார்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவே எழுதப்பட்டுள்ளது. சர்க்கரை வியாதியை முகாமைத்துவம் செய்ய மருத்துவர்களையும் சர்க்கரை வியாதி முகாமைத்துவ நிலையங்களையும் நாட வேண்டும்.

*நன்றி : தாயகம்*

## நீரழிவு நோயின் அறிகுறிகள்...

(1) அதிகப்படியான தாகம் (2) அதிகப்படியான சிறுநீர் கழித்தல் மற்றும் சிறுநீர் கழிக்கும் எண்ணிக்கை அதிகரித்தல் (3) உடலின் நிறை குறைதல். (4) ஆராத காயங்கள் ஏற்படுதல் (5) சுவை மிகு உணவு வகைகள் உட்கொள்வதற்கு விருப்பம் (6) உடல் உறுப்பு பகுதிகளில் தொற்று ஏற்படுத்தல். (7) கை கால்களில் வேதனை மற்றும் உணர்ச்சியற்று போதல்.

மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் இன்றியே நீரழிவு நோயாளிகள் இருக்கக்கூடும்.

சிகிச்சை மேற்கொள்ளாமல் தட்டிக்கழித்தல் மற்றும் முறையான சிகிச்சை மேற்கொள்ளலாததன் காரணமாக ஏற்படக்கூடிய இடையூறு மற்றும் ஆபத்துக்கள்.

1. இதய நோய் (நீரழிவு நோயாளிகளில் அதிகப்படியான மரணம்
2. பாரிசவாதம், சிறு காயங்கள் சீக்கிரமாக வளர்ச்சியடைதல்.
3. கண்கள் குறைபாடு
4. ஆண்களில் ஏற்படக்கூடிய உடலுறவுப் பலவீனம்.
5. காயங்கள் ஆறுவதற்கு நாட்செல்லல்
6. பாதங்களில் உபாதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து நவீன தமிழ் கவிதை வளர்ச்சியில் மஹாகவி து. உருத்திரமூர்த்தி



இரா. லோஹிதா B. A. Hons

தமிழ்க் கவிதைகள் பொதுவாக மரபுக் கவிதை, நவீன கவிதை, புதுக் கவிதை என்று பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அந்த வகையில், நவீன கவிதை என்பது மரபுக் கவிதை வடிவிலிருந்து விலகிய "யாப்புடைத்த கவிதைகள்" அல்லது பாரதிக்குப் பின் வந்த தலைமுறையினரின் கவிதை என்றும் வரையறை செய்யலாம்.

தமிழ்நாட்டு நவீன கவிதைப் போக்குகள் சமகால வாழ்க்கை ஓட்டத்திலிருந்து விலகிக் கொண்டிருந்த வேளையில் ஈழத்திலே நவீன கவிதை தோற்றம் பெற்று வலுவுடனும் வனப்புடனும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளமுற்பட்டது. இதற்கு ஈழத்து நவீன கவிஞர்களான மஹாகவி நீலாவர்ணன், முருகையன், சில்லையூர் செல்வராசன் ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர். இவர்களுள் மஹாகவி முதன்மையானவர்.

யாழ்ப்பாணத்தில் அளவெட்டி எனும் சிற்றூரில் 1927ல் பிறந்தவர் மஹாகவி. இவரது இயற்பெயர் உருத்திரமூர்த்தி. தனது பதினான்காவது வயதில் கவிதைகளை எழுதத் தொடங்கினார். அவருடையு பதினாறாவது வயதிலிருந்து பத்திரிகைகளில் அவரது கவிதைகள் வெளிவரத் தொடங்கின. முப்பதாண்டுக் காலத்தில் நூற்றுக்கணக்கான கவிதைகளும் இசைப்பாடல்களும் காவியங்களும் கவிதை நாடகங்களும் சிறுவர் பாடல்களும் படைத்துள்ளார்.

மஹாகவி தனது சமகால கவிதை ஓட்டத்தினைச் சரியாக இனங்கண்டு கொண்டு அதனைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

"நவீன வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியன நவீன உருப்பொருளைக் கையாண்ட வேளை நவீன கவிதை மட்டும் பழயை பொருள் மரபைப் பற்றியே சுழன்றமையால், அருகி வரும் கலை எனக் கருதுமாறாயிற்று. நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்து வரல் அவசியமாகும்."

மஹாகவி தனது கவிதைகளுக்கூடாக சாதாரண கிராம மக்களினதும் நகரம் சார்ந்த மக்களினதும் மத்தியதர வர்க்கத்தினரதும் நாளாந்த வாழ்க்கையைக் கவிப்பொருளாக்கி கவிதை புனைந்தார். இதற்கு 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு', 'திருட்டு' ஆகிய கவிதைகளை உதாரணங் கூறலாம். அத்துடன், யாப்பு வழிச் செய்யுள் ஓசைக்குப் பதிலாக பேச்சோசையை அறிமுகப் படுத்தினார். கருத்து, உணர்ச்சி, அழுத்த வேறுபாடுகளுக்கேற்ப தேவைப்படும் இடங்களில் செய்யுளடிகளை உடைத்து எழுதினார். இதற்கு உதாரணமாக 'தேரும் திங்களும்' என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

> "ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே
> வாருங்கள் நாமும் பிடிப்போம் வடத்தை
> என்று வந்தான் ஒருவன்.
> வயிற்றில் உலகத்தாய்
> நொந்து சுமந்திங்கு நூற்றாண்டு
> வழ்வதற்காய்
> பெற்ற மகனே அவனும்,
> பெருந்தோளும்
> கைகளும் கண்ணில் ஒளியும் கவலையிடை
> உய்ய விளையும் உளமும் உடையவன் தான்
> வந்தான். அவனோர் இளைஞன்
> மனிதன் தான்
> சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து
> வானத்தே
> முந்த நாள் ஏறி முழுநிலவைத் தொட்டு விட்டு
> மீண்டவனின் தம்பி
> மிகுந்த உழைப்பாளி!
> ஈண்டு நாம் யாரும் இசைந்தொன்றி நின்றிடுதல்
> வேண்டும் எனும் ஓர் இனிய விருப்போடு
> வந்தான் குனிந்து வணங்கி வடம் பிடிக்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனாவாதத்திற்குப் பதிலாக யதார்த்த வாதத்தைக் கையாண்டமையும் மஹாகவி தன் கவிதைகளினூடாக சாதித்த விடயமாகும். இத்தகைய காரணங்களால் தற்காலத் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் மஹாகவியை விடுத்து நாம் பேசமுடியாதுள்ளது. "கேடுற்றவரிடையே கெட்டழியாது என்னிடமே எஞ்சிக் கிடக்கின்ற இன்பத்தமிழ் இவ்வென்பார்கள், என்றைக்கொரு நாளோ எத்திசையும் வெல்லும்" என்று இளமையிலேயே தன்னை முன்னுணர்ந்து பாடியவர் மஹாகவி. இவரது கவிதைகள் தனித்துவமானவை. ஆரம்பத்திலே பாரதிதாசன், கலைவாணன் ஆகியோர் மஹாகவியை அதிகம் பாதித்துள்ளனர். ஆயினும் தன்னுடைய வளர்ச்சிப் போக்கிலே மஹாகவி இவர்களை விட்டு வெகுதூரம் சென்று விட்டார். இன்றைய நடைமுறை வாழ்க்கையை யதார்த்த பூர்வமாக கவிதையில் சித்தரித்துக் காட்டியமை தமிழக கவிதைக்கு மஹாகவி வழங்கிய முக்கியமான பங்களிப்பாகும்.

"இன்னவைதாம் கவிதை எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள், மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உய்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

என்று தன் ஆரம்ப காலத்திலேயே எழுதினார்.

மஹாகவியின் யதார்த்தம் அவர் கையாண்ட கவிப்பொருளின் ஊடாக வெளி வருகிறது. கிராமப்புறத்து விவசாயிகள், நகர்ப்புற வாழ்க்கைக்குப் பலியான ஏழைகள், மத்தியதர வர்க்கத்தினர் போன்ற சாதாரண மக்களின் வாழ்க்கை மீதே மஹாகவியின் பார்வை விழுந்திருப்பதை அவரது படைப்புகள் காட்டுகின்றன. பொதுவாக 1955க்குப் பிந்திய மஹாகவியின் படைப்புகளில் சாதாரண மக்களின் வாழ்க்கை நிலை, சமூக முரண்பாடுகள், அவற்றின் விளைவாக மனித நடத்தை முதலியனவே சித்திரிக்கப்பட்டுள்ளன. அவரது, இயற்கையைப் பற்றிப் பாடும் கவிதைகளில் கூட நாம் இந்தப் பண்பைக் காணலாம்.

கிராமப்புற வாழ்வை மட்டுமன்றி நகர்புற வாழ்வையும் இவர் கவிதையின் கருப்பொருளாகக் கொண்டுள்ளார். நகர்ப்புற நாகரிகத்தினால் ஒதுக்கித்தள்ளப்பட்ட பிச்சைக்காரர்கள், விபசாரிகள், திருடர்கள் முதலியோர் இவரது சில கவிதைகளில் அனுதாபத்தோடு சித்தரிக்கப்பட்டுள்ளனர். 'சீமாட்டி', 'விட்டமுதல்', வீசாதீர்', 'திருட்டு' முதலிய கவிதைகள் இத்தகையன. நகரத்தில் குடியேறி மீண்டும் கிராமத்தில் பிறந்து நகரத்தில் குடியேறி மீண்டும் கிராமத்திலேயே வந்து மடியும் மத்திய தர வர்க்கத்தினரின் வாழ்வை இவரது 'ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தில்' காணலாம்.

மஹாகவியின் படைப்புகளினூடு பிரதிபலிக்கப்படும் அவரது வாழ்க்கைத் தரிசனம் ஆழமானது. ஒரு படைப்பாளியின் வாழ்க்கைத் தரிசனமே அவனது படைப்புகளின் உள்ளடக்க மாகவும் அமைகிறது. மஹாகவியின் உள்ளடக்கத்தை மூன்று நிலைப்படுத்தி நோக்கலாம்.

1. ஆழமான மனிதாபிமானம்
2. வாழ்வின் மீது உறுதியான நம்பிக்கையும் வாழவேண்டுமென்ற முனைப்பும்
3. சமூக ஏற்றத்தாழ்வின் மீதும் அதன் போலி ஆசாரங்கள் மீதும் எதிர்ப்பு

இவை மூன்றும் முற்றிலும் வேறு பட்டவையல்ல. பதிலாக ஒன்றோடொன்று தொடர்புடையவை. வாழ்க்கையை நேசிப்பதும் சமூகத்தை சீரமைக்க முனைவதும் மனிதாபி மானத்தின் செயற்பாடுகளே. அந்தவகையில் மஹாகவி உலகின் எல்லாச் சிறந்த கலைஞர்களையும் போல் ஒரு மனிதாபி மானியாகவும் (Humanist) விளங்கினார்.

இவரது முக்கியமான படைப்புகள் அனைத்திலும் சமூக முரண்பாடுகள், மோதல் மீதும் அதன் போலி ஆசாரங்கள் மீதும் எதிர்ப்புணர்ச்சியும் அவற்றைக் களைய வேண்டும் என்ற விருப்பும் சில இடங்களில் கருத்தின் அடியாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். பேதங்களும் முரண்பாடுகளும் அற்ற ஒரு சமத்துவமான வாழ்க்கையில் மஹாகவி தனது படைப்புகளில் வலியுறுத்தியுள்ளார்.

மஹாகவியின் இலக்கிய உள்ளடக்கம் காத்திரமானது, முற்போக்கானது என நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமாகக் கூற முடியும். ஆயினும் அவரை முற்போக்கு இலக்கியத்துக்கு எதிரானவர் வரிசையிலும் பொதுவுடைமை எதிர்ப்பு வாதிகளின் வரிசையிலும் அடக்குவோருமுளர். (கா. சிவத்தம்பி, ஈழத்தில் தமிழ் இலக்கியம் ப. 75) மஹாகவியின் படைப்புகளிலிருந்து இக்கருத்துக்கு ஆதாரங்காட்ட முடியாது. மஹாகவி ஒரு மாக்கிஸவாதியாக இருக்க வில்லை என்பது மெய்யே. ஆயினும் அவர் ஒரு பொதுவுடைமை ஆதரவாளராகவே இருந்து வந்திருக்கிறார் என்பதை அவரது படைப்புகளில் காணப்படும் பொது வுடைமைச் சிந்தனைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

யாப்பு ரீதியில் நோக்கும்போது யாப்பு மீறிய வசன கவிதையை அவர் 'நோஞ்சான்' கவிதை என்றே கருதுகிறார். "யாப்பு முறையற்று, நெஞ்சிலே ஊன்றாத நோஞ்சல் உரைநடைப் பாக்களினைப் போன்றிருந்தேன் சோர்ந்து" என்று 'கல்லழகி' காவியத்தில் கூறுகிறார். வசன கவிதையை - யாப்பு மீறிய கவிதையை அவர் நிராகரித்த அதேவேளை பாரம்பரிய யாப்பு வடிவங்களை அவ்வாறே பேணுவதையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. யாப்பை அதாவது செய்யுள் நடையை காலத்துக்கேற்ப நவீன உள்ளடக்கத்துக்கேற்ப நவீனப்படுத்த வேண்டும் என்ற கருத்து அவரிடம் இருந்தது. "யாப்புக்குள் இருந்து யாழ் மீட்டுபவள்" என்ற கவிதையிலே,

"முந்தை நாள் யாப்பு முறைக் கஞ்சுகிறேன் என்னை
முடமாக்கும் அத்தளையைச் சற்றே தளர்த்தி
செந்தமிழிற் கவிபாடத் தெரியுமோ" என்றாள்
ஆமென்றேன்
ஓடிவந்தே அணைத்துக் கொண்டாள்"

என்கிறார்.

தமிழ்க் கவிதைக்குப் புதிய உயிரைக் கொடுத்த பாரதியின் கவிதைகளிலே கூட பேச்சு வாழ்க்கை நாம் அரிதாகவே காண்கிறோம். வருகுது, போகுது, வளருது, தொலையுது, போச்சே போன்ற சில வினை வடிவங்களை அவர் துணிவோடு கையாண்டுள்ள போதிலும் ஒப்பீட்டளவில் பாரதியின் கவிதைகளில் இவை அரிதாகவே காணப்படுகின்றன. பாரதிதாசன் பரம்பரையும் இதுவே. ஆனால் தமிழ்க் கவிதை வரலாற்றில் அல்லது தமிழ்ச் செய்யுள் வரலாற்றில் பேச்சுத் தமிழைப் பெருமளவு கையாண்ட ஒரே ஒரு கவிஞராக மஹாகவியே விளங்குகின்றார்.

மஹாகவி கருத்துக்களை முதன்மைப் படுத்தாது, கருத்துக்களின் ஊற்றுக் கண்ணாக இருக்கும் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை முதன்மைப்படுத்தினார். நிகழ்வுகளை அனுபவ ரீதியாக, அதன் உயிர்த்தன்மையுடன் சொற்களில் சித்தரித்தார். அதனால், அவரது கலை நெறி காலம், நிகழ்வு ஆகியவற்றின் ஒருங்கியைபு பெற்ற 'கற்புலக் கலை நெறியாக' அனுபவ வெளிப்பாடாக உள்ளது. இக்கலைநெறி சங்ககாலக் கவிதைகளுக்குப் பின்னர் மஹாகவியிடமே தற்காலத்துக்கு ஏற்ற வகையில் முழுவடிவம் பெற்றுள்ளது எனலாம்.

மஹாகவி தனக்கானதொரு பாணியை தமிழ்க் கவிதைத்துறையில் நிலை நாட்டிச் செல்ல, புதுக்கவிதை என்ற வழியில் பிச்சமூர்த்தி கவிதையுலகில் தடம் பதிக்கிறார். இவர் தத்துவ விசாரமிக்கதும் அறிவார்ந்த அலசல்கள் உள்ளதுமான கவிதைகளை எழுதுகின்றார். இவரின் வழிவந்த பலரும் புதுக்கவிதை இயன்றளவிலும் புனைந்து வருகின்றனர்.

தொகுத்து நோக்கும் போது. செய்யுள் இலக்கியத்தின் பிரிவுகளான கவிதை, காவியம், பாநாடகம் முதலிய துறைகளில் முக்கியத்துவமுடைய அநேக பங்களிப்புகளை மஹாகவியே செய்துள்ளார். தமிழ்க் கவிதைத் துறையில் மஹாகவியின் படைப்புகள் அனைத்தும் நூலுருப்பெறுவதும், வரலாற்று ரீதியில் புற நிலைப்பட்ட ஆய்வு முறைக்கு அவற்றைச் சரியான முறையில் இனங்காண உதவக்கூடும்.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு கலை வடிவங்கள் வளர்ந்து விட்டதால் கவிதைச் சந்தைக்கு வாடிக்கையாளர் குறைந்து போய் விட்டமையானது கவிதைத்துறை அழிந்து போவதற்கு காரணமாக அமைகிறது. எனினும், தமிழ்க் கவிதை வளர்ச்சிப் போக்கில் மஹாகவியின் இடமும் பங்கும் மிகப் பரந்தளவில் காணப்படுகின்றது என்பது மறுப்பதற்கில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து வாழும் மூடநம்பிக்கைகள்

எஸ். பத்மநாதன்

**ப**டித்தவர்கள், படியாதவர்கள், ஏழைகள், பணக்காரர்கள், வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்கள் என்று இவ் உலகில் வாழும் பெரும்பான்மையினர் பல்வேறு மூடநம்பிக்கைளில் மூழ்கிக் கிடக்கின்றனர். பரம்பரை பரம்பரையாகவும், தலைமுறை வேறுபாடுகளாகவும் வளர்க்கப்பட்டு வரும் இவ்வகையான பகுத்தறிவுக்கு மாறான இந்நம்பிக்கைகள் எவரையும் விட்டு வைப்பதாக இல்லை. சகுனங்கள் (Omens) ஒரு புறத்திலும், எதிர்கால பலன்கள் ஒரு புறத்திலும், நன்மை - தீமை ஒரு புறத்திலுமாக மனித பலவீனங்களை இவை ஆட்சி செய்கின்றன. சாதாரணமாக பல்லிகள் சுவர்களில் இருந்து கத்துவதற்கு பலன் கூறுவதிலிருந்து வீட்டிலுள்ள நாய் ஊளையிடுவது வரை எல்லாமே எமது நடைமுறை வாழ்வில் புகுந்து விளையாடுகின்றன.

மூடநம்பிக்கைகள் (Superstitions) நீண்ட காலமாக மக்களிடையே இருந்து வந்துள்ளன. 13ம் நூற்றாண்டுகளில் லத்தீன் மொழியில் 'Superstito' என்ற பதத்தில் இக்கருத்து நிலவியுள்ளது. ஆங்கில பிரெஞ்சிய மொழிகளிலும் படிப்படியாக இச்சொற்கள் புகுந்துள்ளன. அப்போது நிலவிய இயற்கை காட்சிகள், கடவுள் நம்பிக்கைகள், பிராணிகள், பறவைகள், வானத்து நட்சத்திரங்கள், கோள்கள், கிரகணங்கள், வாழ்வியல் நடைமுறை அனைத்துமே ஒரு பயத்தினையும் நன்மையான விளைவினையும் தரும் என்று நம்பியவர்களிடையே புதுப்புது நம்பிக்கைகள் பிறந்து இன்று ஒரு பூகோளப் பரம்பலாகியுள்ளது. எல்லா நாடுகளிலும் இந்த மூடநம்பிக்கைகளும் சகுனங்களும நன்றாகவே வளர்ந்துவிட்டன. எனினும், வியப்பு என்னவெனில் ஒரு நாட்டில் தீமை தரும் ஒரு நம்பிக்கை மற்றைய நாட்டில் நன்மையை தரும் என்பது தான்! அதாவது மூடநம்பிக்கைகளிடையேயும் வேறுபாடான அர்த்தங்கள் நிலவுகின்றன.

பொதுவாக ஒருவர் வீட்டைவிட்டு வெளியே செல்கிறார் என்றார் அவரது வீட்டுப்பூனையோ அல்லது பக்கத்துவீட்டு பூனையோ குறுக்காகச் செல்கிறதென்றால் அவர் தனது பயணத்தை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்துவிடுகிறார். இந்த பூனை குறுக்காக போவது எமக்கு கூடாதென்று பல ஐரோப்பிய நாடுகளிலும் இதனை நம்புகிறார்கள். ஆனால், ஒரு வித்தியாயசம் அவர்கள் கறுப்புப் பூனை குறுக்காக செல்வதையே விரும்புவதில்லை. எனவே நம்பிக்கையில் கூட கறுப்பு வெள்ளை பார்க்கிறார்கள். பூனை எங்கேயோ போகிறதென்பதே உண்மை. இதே போல பூனை ஒன்று கப்பலில் ஏறிவிட்டால் கப்பல் பிரயாணிகள் பயம் கொள்கின்றார்கள். பூனைகளுக்கு இதுதான் பிரச்சினையா?

எம்மவர்கள் பொதுவாக காகம் மரத்திலிருந்து கரைந்தால் கடிதம் வரும் என்பார்கள். தபால்காரன் வேலையை காகம் செய்வதுபோல. எந்த அளவு மூடநம்பிக்கையுடன் பலருக்கு வாழ்வு கழிகிறது. ஆனால் இந்த காகம் பற்றிய பல்வேறு மூடநம்பிக்கைகள் மேற்கத்திய நாடுகளிலும் உள்ளன. ஒரு காகம் கரைந்தால் துரதிஷ்டம், இரண்டு காகம் கரைந்தால் அதிஷ்டம், மூன்று கரைந்தால் உடல் நலம் ஏற்படும், நான்கு கரைந்தால் சொத்து வரும், ஐந்து கரைந்தால் நோய் ஏற்படும், ஆறு கரைந்தால் மரணம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி படித்த பல நாடுகளில்கூட இந்த மாதிரி முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுகிறார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் காரியங்கள் பல மூடநம்பிக்கையுள்ளவையே. எம்மவர்கள் வீட்டுத் தளபாடங்களை வெளியே கொண்டு செல்லமாட்டார்கள், ஏனையோருக்கு பணம் வழங்கமாட்டார்கள். ஆனால் பல நாட்டு மக்கள் வெள்ளிக்கிழமை படுக்கையினை மாற்றினால் கெட்ட கனவுகள் வரும் என்பர். வெள்ளிக்கிழமை கப்பலில் புறப்படக்கூடாது. வெள்ளிக்கிழமைகளில் உடுப்புகள் தைக்கக்கூடாது. வெள்ளிக்கிழமை 13ம் திகதி வந்தால் அது மிகவும் படுமோசமான சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பர்.

பதின்மூன்றாம் இலக்கம் உலகின் பல நாடுகளில் மூடநம்பிக்கைகளுக்கு வித்திட்டுள்ளது. மாடிக் கட்டிடங்களில் 13ம் மாடி இருப்பதில்லை. ஹோட்டல்களில் 13ம் இலக்க அறை இருப்பதில்லை. 13ம் இலக்க வீதிகள் இருப்பதில்லை. அமெரிக்காவினால் 13ம் நாளில் ஏவப்பட்ட அப்பலோ விண்வெளிக் கப்பல் வெடித்து சிதறியுள்ளதால் மேலும் பலர் இதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இலக்கங்கள் வரிசையில் எம்மவர்கள் கூட்டுத் தொகை 8 வரும் போது வீடு வாங்கமாட்டார்கள். ஆனால் சீனர்கள் 8ம் இலக்க வீட்டினை தேடித்தேடி வாங்குவார்கள். இதேவேளை பலர் 7ம் இலக்கத்தை Lucky 7 என்பார்கள். அவர்களுக்கு இது அதிஷ்டமாகும். 7ம் இலக்கமுள்ள பல சிறிய விற்பனைக்கடைகளும் உள. அதேவேளையில் சிலருக்கு 666 என்ற இலக்கம் வந்துவிட்டால் "உலகையே விட்டுப்போய் விடுவோம்" என்று நம்புகின்றனர்.

குழந்தை பிறக்கின்ற தினங்களும் இந்த மூடநம்பிக்கைகளில் உள்ளடங்கும். பிள்ளை பிறக்கும் போது கால் முதலில் வந்து பின்னர் தலை வந்தால் அப்பிள்ளையை "காலால் பிறந்த பிள்ளை" என்றும் அவரது காலால் தடவினால் நோய்மாறிவிடும் என்பர். மேற்கத்திய நாடுகளில் திங்கள் பிறந்தால் வடிவான முகம், செவ்வாய் பிறந்தால் கருணையுள்ளவர், புதன்கிழமை பிறந்தால் கவலை ஏற்படும், வியாழன் பிறந்தால் பலதடைகள் ஏற்பட்டுவரும், வெள்ளியில் பிறந்தால் அன்பும் பொருள் வழங்கும் தன்மையுள்ளவர், சனிக்கிழமை பிறந்தால் கடுமையான உழைப்பாளர் என கருதுகின்றனர். எம்மவர்கள் "செவ்வாய் வெறுவாய்", "கள்ள வியாழன் கழுத்தறுக்கும்" என்றெல்லாம் நாட்களுக்கும் பலன்கூறி செயல்படுவர். எல்லாம் நல்ல நாட்கள் தான் என்பதில் அவர்களுக்கு ஒப்புதலில்லை.

கண்ணாடியை யாராவது தவறுதலாக உடைத்துவிட்டால் வீட்டில் பெரிய பிரளயமே ஏற்பட்டுவிடும். கண்ணாடி ஒரு உடையக்கூடிய பொருள். அதனை தவறுதலாக தட்டிவிட்டால் உடையத்தானே செய்யும்! இது கூடவா பிரச்சினை. அதுவும் யாராவது பிரேம்போட்ட கண்ணாடி உடைந்துவிட்டால் படத்தில் உள்ளவர் செத்துவிடுவாரே ? என்று பயம் ஏற்படுகிறது. உடைத்தவருக்கு நாள் முழுவதும் நைவேத்தியம் தான் கிடைக்கும். மேற்கத்திய நாடுகள் சிலவற்றில் கண்ணாடியை உடைத்தால் 7 வருடங்களுக்கு துரதிஷ்டம் என நம்புகின்றனர்.

எம்மிடையே வாழும் பறவைகளில் கூட பலர் மூடநம்பிகையுள்ளவர்களாக உள்ளனர். 1948ம் ஆண்டு B.F. Skinner என்பவர் Journal of Experimental psychology என்ற ஆய்வில் புறாக்களின் நடவடிக்கைகளில் சில நம்பிக்கைகளை ஆய்வு செய்துள்ளார். அவை எப்படி நடந்துகொள்கின்றன என்பதனை பொறுத்து பல பலன்களைக் கூறியுள்ளார்.

சிலர் எமது பலன்கள் நட்சத்திரங்களில் உரியதென்பர். வால் நட்சத்திரத்தை கண்டால் சிலர் அதிஷ்டம் என்பர். சிலரோ துரதிஷ்டம் என்பர். Halleys என்ற வால் நட்சத்திரத்தினை இங்கிலாந்தில் வாழ்ந்த King Harold என்பவர் துரதிஷ்டம் என்றார். ஆனால் William என்ற ஆட்சியாளர் அதிஷ்டம் என்றார். வானமே பலருக்கு பலன்களை தருவதாக நம்புகின்றனர். கிரகங்களும், நட்சத்திரங்களும் பல்வெறு சோதிடமுறைகளில் பாவனையில் உள.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் இயற்கையின் விந்தைகளை தமக்காக பாவித்து நீண்டகாலமாக ஊறிப்போயுள்ள நம்பிக்கைகளே இவை.

மூடநம்பிக்கைகள் எப்படி சேர்ந்தன என்பதனை நோக்கினால் எல்லாமே நமது உடலும், பரந்த வெளியும், இயற்கையும் சம்பந்தப்பட்டவையாகவே உள. மத ரீதியான பல்வேறு நம்பிக்கைளும் இதில் இணைந்து கொண்டன. வரலாற்று ரீதியில் பலர் கூறிய கதைகளும் சம்பவங்களும் கூட சிலவற்றுள் உள்ளன. எதிர்காலம் பற்றிய பயமும் தேவையும் மகிழ்ச்சியும் எல்லாவற்றிற்கும் இந்த சகுனங்களும் மூடநம்பிக்கைகளும் தான் பலனை வழங்கி வருகின்றன.

மூடநம்பிக்கைகளில் சம்பந்தமில்லாத சம்பவங்கள், போலிக்கோட்பாடுகள், தெய்வீக அருள்நிகழ்வுகள், இயற்கை கடந்த ஆற்றலச்சம், ஆறியாநிலை, தவறான மதிப்பச்சம் போன்ற பல சொற்கள் தொடர்புபட்டவை. இதில் ஒரு பொருள் (an object) அல்லது சூழ்நிலைகள் (Circumstances) ஏற்படுத்துகின்ற பொருத்தமற்ற சம்பவங்கள் (NotLogicallyRelated) இதில் இணைவு பெற்றுள்ளதினை காணமுடிகிறது. உலகெங்கும் பொதுவான சில மூடநம்பிக்கைகள், நாட்டுக்கும் இனத்திற்கும் இடையேயுள்ள தனித்துவமான மூடநம்பிக்கைகள், சில சம்பவத்தோடு எழுந்த மூடநம்பிக்கைகள் இப்படி நூற்றுக்கணக்கில் உள்ளன. இவை பகுத்தறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கைகளே. எனினும், தொடந்தும் உயிர் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

மூடநம்பிக்கை கொள்பவர்களை Supersttionist என்பர். பதின்மூன்றாம் இலக்கத்திற்கு அச்சம் கொள்பவர்களை Friggatriskaridekaphobia என்பர்.

எட்மன்ட பேர்க் (Edmund Burke) என்பவர் கூறுகின்றார், "பலவீனமான மனம் கொண்ட சமயமே மூடநம்பிக்கை ஒருவரை ஆதிக்கம் செலுத்துகின்றது" என்று. பகுத்தறிவு இயக்கங்கள் பல இந்த மூடநம்பிக்கைகளை போக்கடிக்க பல கருத்தரங்குகளை நடத்துகின்றன. இந்தியாவில் மகாராஷ்டிர மாகாணத்தில் சட்டரீதியாக இதனை அகற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

மூட நம்பிக்கையாளர்களின் கண்ணுக்குப் பட்டதெல்லாமே மூடநம்பிக்கைகளின் கருவூலங்களாகவே உள்ளன. மனதை விசாலமாக்கி, காரணகாரியம் அறிந்து, ஒரு விடயத்தை பார்க்கும் பக்குவ அறிவை நாம் வளர்த்துக்கொள்ளாத வரைக்கும் மூடநம்பிக்கைகள் தான் ஆதிக்கம் செலுத்தும்.

*நன்றி : தாயகம்*

# சிந்தனைக்கு

**இளைஞன் ஒருவன் தத்துவஞானி சாக்ரடீஸை சந்தித்தான். எனக்கு பறந்த அறிவும் வெற்றியும் வேண்டும். அதற்கான வழிகளைச் சொல்லுங்கள். என்று கேட்டான். சாக்ரடீஸ் அவனைப் படகில் அழைத்துச்சென்று தண்ணீரில் தூக்கிப்போட்டார். நீச்சல் தெரியாத அவன் மூச்சுத்திணறி மேலே வந்து காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று கதறினான். அவனைக் காப்பாற்றிய சாக்கிரடீஸ் "நீ நீரில் மூழ்கி இறந்து விடுவோமோ என்ற பயத்தில் காற்றைச் சுவாசிக்க எப்படிப் போராடினாய். அந்த வேகத்தை அறிவைப் பெறவும் வெற்றிக்காக உழைப்பதிலும் காட்டு, வெற்றி தானாய் உன்னை வந்தடையும் என்றால் ஆம் விடாமுயற்சி விஸ்வரூப வெற்றியாகும்.**

*தொகுப்பு – எஸ். ராமன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித வளங்களின் அபிவிருத்தியும் மானிட அபிவிருத்தி குறிகாட்டியும்

பேராசிரியர் மா. செ. மூக்கையா

மனித வளங்களின் அபிவிருத்தி நாடுகளின் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் பெரிதும் முக்கியம் வாய்ந்ததோர் கருத்தியலாகும். அநேகமாக அனைத்து கல்வித்துறைகளுமே மனித வாழ்வை எவ்வாறு மகிழ்ச்சிகரமான தாக்கலாம் என்பதனை கண்டறிவதனை இறுதி இலக்காகக் கொண்டனவாகும். வெளிப்படையாகவும் உள்ளமைந்ததாகவும் மறைமுகமாகவும் துறைகளின் முறையியலின் பண்புகளுக்கு ஏற்ற வகையில் இவ்விலக்கு கையாளப்பட்டு வருகின்றது.

மனித வளங்களின் அபிவிருத்தி செய்முறை தொடர்புபடாத துறைகளே இல்லை எனலாம். எனவே, ஒவ்வொரு துறை சார்ந்தவர்களாகவும் தமது ஆய்வுப் பரப்பின் பின்னணியில் இருந்து அதனை பார்ப்பதனை உற்று நோக்கினால் மனித வளங்களின் அபிவிருத்திக்கு அனைத்து துறைகளினதும் கருத்துக்களின் முக்கியத்தை விளங்கிக் கொள்ளலாம். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் அலுவலக மேற்பார்வையில் பல்வேறு அறிக்கைகளும் தீர்மானங்களும் தயாரிக்கப்பட்டு பொதுச் சபையின் அங்கீகாரமும் இதற்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே, மனித வளங்களின் அபிவிருத்திக்கு சர்வதேச சமூகங்கள் வழங்கியுள்ள அங்கீகாரத்திலிருந்து அதன் முக்கியத்துவம் விளங்கப்படுகிறது.

இக்கட்டுரையில் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் மானிட அபிவிருத்தி குறிகாட்டி என்பன பற்றிய அடிப்படை வரைவிலக்கணம், விளக்கங்கள் என்பன உள்ளடக்கத்துடன் ஆராயப்பட்டுள்ளன.

**பின்னணி:**

பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழல் அபிவிருத்தி என்பனவற்றின் மையத்தில் மனித வள அபிவிருத்தி நிலைகொண்டுள்ளது எனப்படுகின்றது. அந்தளவுக்கு நாட்டின் பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழலின் அபிவிருத்தி என்பன தொடர்பாக மனிதவள அபிவிருத்தி முக்கியம் வாய்ந்ததோர் நிர்ணயக் காரணியாக உள்ளது. அத்தோடு சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளதான நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கும் அதுவும் புத்தாண்டின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அனைவருக்கும் சிறந்த வாழ்வுக்கு வாய்ப்புக்கள் கிட்டும் வகையில் வாய்ப்புக்களை விஸ்தரித்தல் தொடர்பாகவும் குறிப்பாக அவற்றின் காரணமாக பெரிதும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய குழுக்கள் மற்றும் சமூகத்தின் தனிப்பட்டவர்களுக்கு அவ்வாறு வாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தல் தொடர்பிலும் அது முக்கியம் வாய்ந்த மூலமாக உள்ளது.

"தமது சொந்த வாழ்க்கைத் தரங்களையும் தமது குடும்பங்கள், தொழில் நிறுவனங்கள், சமூகங்கள் என்பவற்றின் தரங்களையும் மேம்படுத்திக்கொள்ள பங்களிக்கத் தேவையான திறமைகளை மக்கள் வளர்த்துக்கொள்ளக் கூடிய வகையில் அவர்களை வலுவூட்டும் நடவடிக்கை" என 'மனிதவள அபிவிருத்தி' ஐ. நா. சபையின் தீர்மானம் செய்பவர்களால் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இது தொடர்பில் தனிப்பட்டவர்கள் தமது 'செயற்திறனை' (Capacity) வளர்த்துக் கொள்வது பற்றிய கருத்துக்களிலேயே குவியம் கொண்டிருந்த ஆர்வமானது பின்னர் படிமுறை வளர்ச்சி பெற்று இப்போது சமூக பொருளாதார கொள்கைகள், அபிவிருத்தித் திட்டம் மற்றும் உபாயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக தேசியமட்டங்களில் நிறுவன அமைப்புக்களின் செய்திறனை கட்டியெழுப்புவது வரையிலான செய்திறனாக மனிதவள அபிவிருத்திக் கோட்பாடு விஸ்தரிப்புக் குள்ளாகியுள்ளது. எனவே, தேசிய அளவிலான மனித செயற்திறன்கள் அபிவிருத்திசெய்ய வசதி வழங்குவதாகவும் அவ்வாறான செயற் திறன்கள் வாயிலாக நிலைத்து நிற்கக் கூடியதும் முழுமையானதும் சமத்துவமான அபிவிருத்தியினை உறுதி செய்யும் அதே வேளையில், தனிப்பட்டவர்களது நலன்களை உயர்ச்சியடைய செய்யக்கூடியதும் என மனித வளங்களின் அபிவிருத்தி கருதப்படுகிறது. எனவே. மனிதவளங்களின் அபிவிருத்தி உபாயங்கள் அதிகரித்த வகையில் நாடுகளின் தேசிய அபிவிருத்தித் திட்டமிடலின் ஒரு முக்கிய பகுதியாக இருப்பதுடன் அறிவார்ந்த கொள்கைகளுக்கும் மிக முக்கியமானதாக உள்ளன.

வளர்ந்துவரும் தொழில்சார் அமைப்புக்களின் பொருளாதாரங்களுக்கு உலக தொழில் சந்தைகளே உருவம் கொடுத்தும் மாற்றிய மைத்தும் வருவதனால், மனித வளங்களின் அபிவிருத்தி உபாயங்கள் புதிதில் தொழில் துறைகளின் கேள்விகளுக்கு (தேவைகளைப் பூர்த்தி செய்ய) ஏற்ப அவற்றை சமன் செய்யும் வகையில் அவற்றிற்கு தேவைப்படும் தொழில் திறமைகளை வழங்கக் கூடியதாக இருக்கவேண்டும். அனேகமாக அனைத்து நாடுகளினதும் சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் தகவல் (பரிமாற்றம்) மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) "பசுமை/ நீலப் பொருளாதாரம்" மற்றும் விவசாய அபிவிருத்தி என்பன உயிராதாரமானதும் மிக முக்கியமானதுமான துறைகளாகக் கருதப் படுகின்றன. வளர்ந்துவரும் துறைகள் உதாரணமாக பசுமை வளர்ச்சி, அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy) அறிவு திறம் வாய்ந்த சொத்துக்கள் தொடர்பான (Intellectual Property) கொள்கைகளை மதிப்பிடுதலும் முகாமைத்துவம் செய்தலும் போன்றவை குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் இப்போது முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான மனித வளங்களின் அபிவிருத்திக்கான அணுகுமுறை (யாவற்றையும் உள்ளடக்கியதாக) அமைதல் அவசியம். அதில் பாலின (ஆண், பெண் பங்கேற்பு) சமத்துவம், எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய (பின்தங்கிய பிரிவினர், சிறுபான்மையான, சமய பிரிவினர்) பிரிவினர்களது தேவைகளுக்கு அமைவான ஏற்பாடுகள் என்பன உள்ளடக்கப்பட்டதாக இருக்க வேண்டியது அவசியம். அதில் பலதரப்பட்டதும் முக்கியமானதுமான அம்சங்கள் உதாரணமாக மக்கள் தொகை, ஆரோக்கியம், போஷாக்கு, நீர், கழிவு நீக்கம், வீட்டு வசதி, தொடர்பாடல், கல்வியும் தொழிற்பயிற்சியும் அறிவியலும் தொழில்நுட்பங்களும் மற்றும் தொழில் வாய்ப்பு தொடர்பான அம்சங்கள் கருத்திற் கொண்டிருத்தல் அவசியமாகும். மனித வளங்களின் அபிவிருத்தியின் வெவ் வேறான பரிமாணங்களை வெவ்வேறுபட்ட அமைச்சுக்களிடம் விட்டுவிடக்கூடாது என்பது விழிப்புணர்வுடன் கவனித்து செய்யவேண்டிய தொன்றாகும். மனித வளங்களின் அபிவிருத்தியில் அடிப்படை மனித உரிமைகள், தொழிலாளர்களது உரிமைகள், தொழில்சார் பாதுகாப்பும் ஆரோக்கியம் என்பனவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியன வாகும்.

மனித வளங்களின் அபிவிருத்தி அணுகுமுறைகள் பொருளாதாரம் மற்றும் நிதிக் கொள்கைகளை மாத்திரம் கவனத்திற் கொண்டதாக இருக்கக்கூடாது. ஏனெனில், அவ்வாறான கொள்கைகள் அண்மைக் காலத்தில் பொருளாதார நிதிசார் நெருக்கடி களால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியுள்ளன. எனவே, இதற்கு ஏற்றதாக முழு சமூகமுமே நிலைமாற்றமடையக்கூடியதான ஒரு சர்வதேச சமூக மாதிரியுரு பயனுடையதாக இருக்கும் என இத்துறைசார் நிபுணர்கள் கருதுகின்றனர். இவற்றோடுநிலைத்துநிற்கக்கூடிய வாழ்வாதாரம் உள்ளூர் சமூகங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படுதலும் சிவில் சமூகத்தின் பிரதான பிரதிநிதிகளை உள்ளடக்கியதும் அவர்கள் முழுமையாக பங்கு கொள்வதுமான வெளிப்படைத் தன்மை கொண்ட நல்லாட்சி அமைப்பை உருவாக்குதலும் தனித்தன்மை கொண்ட புவிசார்பரசியல், கலாசார பின்னணி மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைமையினை ஊக்குவிக்கும் பண்புகளும் மனித வளங்களின் அபிவிருத்தி செய்முறையின் போது பின்பற்றப்பட வேண்டும் என ஐ. நா. அமைப்பின் நிறுவனங்கள் உறுதியாக நம்புகின்றன.

மேற்படி மனித வளங்களின் அபிவிருத்தி தொடர்பான ஐ. நா. சபையின் கருத்துக்கள் ஐ. நா. சபை செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தால் 1993 ஆம் ஆண்டு முதலாக 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 10 அறிக்கைகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவை யாவுமே மனித வளங்களின் அபிவிருத்தி சார் அறிக்கைகள் என்றே தலைப்பிடப்பட்டுள்ளன. இவை மாத்திரமன்றி ஐ. நா. சபையின் பொதுச் சபையினதும் 1993 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் 10 தீர்மானங்கள் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை ஐ. நா. சபையின் 15 உப நிறுவனங்களினால் உலகளாவிய வகையின் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய விபரங்களிலிருந்து மனித வளங்கள் அபிவிருத்தியின் முக்கியத்து வத்தினை எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது. இதனைத் தொடர்ந்து மனித வளங்களின் அபிவிருத்திச் செய் முறையுடன் தொடர்பான முக்கியமான செய் முறைகள், வரை விலக்கணம், அங்கங்கள் என்பன பற்றியும் தெரிந்து கொள்ளுதல் பயனுடையதாய் இருக்கும்.

**மானிட அபிவிருத்தி குறிகாட்டி :**

உலக நாடுகளின் அபிவிருத்தி நிலைமைகளும் வளர்ச்சியும் நாடுகளிடையே வேறுபடுவதனைப் போன்றே அவை கால மாற்றங்களுக்கு ஏற்பவும் வேறுபாடுகளுக்கு உட்பட்டு வந்துள்ளன. இவை அபிவிருத்திப் பொருளியலில் கிடையான வேறுபாடுகள் என்றும் செங்குத்து வேறுபாடுகள் என்றும் இனங்காணப்படும். உலக நாடுகளில் பொருளாதார வரலாற்றை எடுத்துப் பார்த்தால் உலகநாடுகள் யாவும் 18 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பின்னரேயே அபிவிருத்தியில் பெருமளவு வேறுபாட்டுக்கு உள்ளாயின. மானிட அபிவிருத்தி குறிகாட்டியின் மூலம் இப்போது நாடுகளின் மனித வள அபிவிருத்தி நிலைமையை நியாயமான வகையில் வேறுபடுத்திப் பார்ப்பதற்கான அளவீட்டு முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மனித வளம் என்றால் என்ன என்னும் வினாவுக்கு குறைந்தபட்சமாக ஒரு விளக்கம் இல்லாதபோது அதுபற்றி ஆராய்வது வழிகாட்டல் ஏதுமின்றியும் இலக்கு ஏதுமின்றியும் பாலைவனத்தில் அல்லது நடுக்கடலில் அலைந்து திரிவது போன்றிருக்கும். மனித வளம் மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாத்திரம் தீர்மானிக்கப்படுவதாகாது. மாறாக பொருட்களையும் அல்லது சேவைகளையும் அல்லது அவையிரண்டையுமே உற்பத்தி செய்யக்கூடிய மக்கள் பிரிவே மனித வளம் எனக் காணப்படலாம். இதற்கு ஆரோக்கியம், வாழுங்காலம், எழுத்தறிவு உள்ளடங்கலான கல்வி பெறுபேறுகள், வாழ்க்கைத்தரம் அதுவும் குறிப்பாக சிறுவர்களது நலன்களை உள்ளடக்கியதாகும். இவற்றை உள்ளடக்கி மானிட அபிவிருத்தி குறிகாட்டி கணிப்பிடப்படுகிறது. இக் குறிகாட்டியை கணிப்பிடும் தொழில்நுட்பம் நோபல் பரிசுபெற்ற இந்திய பொருளாதார நிபுணர் அமர்தியா சென் மர்தும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி பிரிவின் பொருளாதார நிபுணர் மஹ்றூப் அல்ஹக் போன்றவர்களால் (1990) விருத்தி செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய விபரங்களிலிருந்து நாடுகளில் மனிதவளம் அபிவிருத்தியுற வேண்டுமாயின் அதற்காக அந்நாட்டு மக்களது ஆரோக்கியமும் கல்வி வளர்ச்சியும் உறுதி செய்யப்படவேண்டியது அவசியமாக உள்ளது என்பது தெளிவாகிறது. அவ்வாறு ஆரோக்கியமும் கல்விவளர்ச்சியும் ஏற்பட்டால் தான் சிறந்த தொழிலாளர் படை உருவாக்கப் பட்டு தொழில்கள் சுபீட்சமாகச் செயற்பட ஏதுவாக இருக்கும். இவற்றின் தொடர்ச்சியாக நாடுகளின் பொருளாதாரமும் வளர்ச்சியடைய முடியும். இதனால் மக்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்து அவற்றால் மகிழ்ச்சியான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு தேவையானவை வளர்ச்சிபெற முடியும். அதே நேரத்தில் மனித உரிமைகளைப் பேணல், பாதுகாத்தல், சனநாயக வாழ்வு நல்லாட்சி என்பவற்றுடன் தொடர்பாக சுதந்திரமான வாழ்க்கை, இறுதியில் நல்வாழ்க்கை என்பனவும் நாடுகளில் ஏற்பட முடியும். எனவேதான், இவை யாவற்றிற்கும் அடிப்படையாக உள்ள மானிட அபிவிருத்தி குறிகாட்டி நாடுகளில் உயர்நிலையில் இருக்க வேண்டும் என இத்துறைசார் நிபுணர்கள் வற்புறுத்திக் கூறுகின்றனர்.

மானிட அபிவிருத்தி குறிகாட்டி: மானிட அபிவிருத்தி குறிகாட்டியானது மேலே கூறியவாறு பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் வாழுங்காலம், எழுத்தறிவு, கல்வி, வாழ்க்கைத் தரம், தரமான வாழ்க்கை என்பவற்றின் அடிப்படையில் ஒப்பீடான முறையில் கணிக்கப்பட்ட ஒன்றாகும். உலகில் ஆகக்கூடிய குறிகாட்டி 2014 ஆம் ஆண்டில் நோர்வே நாட்டிற்கு 0.944 என்றும் அவ்வருடத்தில் உலகில் 187 ஆவது நாடாக நைகர் நாடு 0.337 ஆகக் குறைந்த குறிகாட்டியைக் கொண்டதாகவும் காணிப்பிடப்பட்டுள்ளது. இவற்றினிடையே இலங்கை 73 ஆவது இடத்தை பெற்று 0.750 அலகினை குறிகாட்டியாகக் கொண்டிருந்தது.

உலகநாடுகளை,

1. ஆகக்கூடிய மனிதவள அபிவிருத்தி குறிகாட்டி கொண்ட 49 நாடுகள் (0.944 - 0.808)
2. உயர் மனிதவள அபிவிருத்தி குறிகாட்டி கொண்ட 52 நாடுகள் (0.790 - 0.700)
3. நடுத்தர மனிதவள அபிவிருத்தி குறிகாட்டி கொண்ட 41 நாடுகள் (0.698 - 0.556)
4. தாழ் மனிதவள அபிவிருத்தி குறிகாட்டி கொண்ட 42 நாடுகள் (0.540 - 0. 337) .

என வகைப்படுத்திப் பார்க்கலாம். இவை ஒவ்வொரு பிரிவினுக்கும் 10 நாடுகள் உதாரணமாக கீழே தரப்படுகின்றன. மேலும் அவ்வகைப்பாட்டிற்குள் உட்படும் சில முக்கியமான நாடுகள் பற்றியும் அருகில் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

**ஆகக்கூடிய மனிதவள அபிவிருத்தி குறிகாட்டியைக் கொண்ட 10 நாடுகள் பின்வருவனவாகும்:**

| | | |
|---|---|---|
| 1. | நோர்வே | 0.944 |
| 2. | அவுஸ்திரேலியா | 0.933 |
| 3. | சுவிட்சர்லாந்து | 0.917 |
| 4. | நெதர்லாந்து | 0.915 |
| 5. | ஐக்கிய அமெரிக்கா | 0.914 |
| 6. | ஜேர்மனி | 0.911 |
| 7. | நியூசிலாந்து | 0.910 |
| 8. | கனடா | 0.902 |
| 9. | சிங்கப்பூர் | 0.901 |
| 10. | டென்மார்க் | 0.900 |

**அபிவிருத்தியுற்ற சில நாடுகள்**

| | | |
|---|---|---|
| 12. | சுவீடன் | 0.898 |
| 14 | ஐக்கிய இராச்சியம் | 0.892 |
| 15 | தென் கொரியா | 0.891 |
| 17 | யப்பான் | 0.890 |
| 19 | ஸ்ரேல் | 0.890 |
| 20 | பிரான்ஸ் | 0.884 |
| 24 | பின்லாந்து | 0.879 |

**உயர்மட்ட மனிதவள அபிவிருத்திக் குறிகாட்டியைக் கொண்ட 10 நாடுகள்**

| | | |
|---|---|---|
| 1. | உருகுவே | 0.790 |
| 2. | பகாமாஸ் | 0.789 |
| 3. | மொன்டி நெக்ரோ | 0.789 |
| 4. | பெலாரஸ் | 0.786 |
| 5. | ருமேனியா | 0.785 |
| 6. | லிபியா | 0.784 |
| 7. | ஓமான் | 0.783 |
| 8. | ருசியா | 0.778 |
| 9. | பல்கேரியா | 0.777 |
| 10. | பார்படோஸ் | 0.776 |
| 63. | மலேசியா | 0.773 |
| 73 | இலங்கை | 0.750 |
| 75. | ஈரான் | 0.749 |
| 89. | தாய்லாந்து | 0.722 |
| 91. | சீனா | 0.719 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுத்தர மனிதவள அபிவிருத்தி குறிகாட்டியைக் கொண்ட 10 நாடுகள்**

| | | |
|---|---|---|
| 1. | மாலைத்தீவுகள் | 0.698 |
| 2. | மொங்கோலியா | 0.698 |
| 3. | டேக்மெனிஸ்தான் | 0.698 |
| 4. | சமோவா | 0.694 |
| 5. | பலஸ்தீன் | 0.686 |
| 6. | இந்தோனேசியா | 0.684 |
| 7. | பொத்ஸ்லானா | 0.683 |
| 8. | எகிப்து | 0.682 |
| 9. | பரகுவே | 0.676 |
| 10. | காபன் | 0.674 |
| 117. | பிலிப்பைன்ஸ் | 0.660 |
| 120. | ஈராக் | 0.642 |
| 135. | இந்தியா | 0.586 |
| 142. | பங்களதேஷ் | 0.558 |

**தாழ்மட்ட மானிதவள அபிவிருத்திக் குறிகாட்டி கொண்ட 10 நாடுகள்**

| | | |
|---|---|---|
| 1. | நேபாளம் | 0.540 |
| 2. | பாகிஸ்தான் | 0.537 |
| 3. | கென்யா | 0.535 |
| 4. | சுவாசிலாந்து | 0.530 |
| 5. | அங்கோலா | 0.526 |
| 6. | மியம்மார் | 0.524 |
| 7. | ருவாண்டா | 0.506 |
| 8. | கமரூன் | 0.504 |
| 9. | நைஜீரியா | 0.504 |
| 10. | யேமன் | 0.500 |
| 169. | ஆப்கானிஸ்தான் | 0.468 |

மானிட அபிவிருத்தி குறிகாட்டி வருடா வருடம் குறித்த நாட்டில் அது தொடர்பான நிலவரங்களின் வளர்ச்சியின் அடிப்படையில் கூடவும் குறையவும் முடியும். சாதகமான சமூகப் பொருளாதார சூழலில் அது அதிகரிக்க முடிவதோடு சில சாதகமற்ற மற்றும் யுத்த சூழல்களில் வீழ்ச்சிடையவும் முடியும்.

**மானிட அபிவிருத்தியின் மேம்பட்டிற்கான தேவைகள்.**

உலக நாடுகள் நவீன காலத்தில் அரசியல் ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்டு பல்வேறு ஆட்சி அமைப்புக்களின் கீழ் ஆளப்பட்டு வருகின்றன. சனநாயக ஆட்சியின் வாயிலாக நல்லாட்சியும் அரசியல் ஸ்திர தன்மையும் காணப்படும் நாடுகள் (இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படாத போது) மக்களின் வாழ்க்கை நிலவரங்கள் மேம்பட்டதாக காணப்படுகின்றன. நல்லாட்சி, சுதந்திரம், மனித உரிமை பாதுகாப்பு என்பனவற்றுடன் சனநாயக ஆட்சி பாதிப்புக்கு உள்ளாகையில் கிளர்ச்சிகள், போராட்டங்கள் என்பன ஏற்பட்டு அரசியல் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படுவதால் தொழில்துறைகளில் முதலீடுகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதனை உலக நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது.

எனவே, நல்லாட்சி கொண்ட நாடுகளில் மானிட அபிவிருத்தி மேம்பட்டுச் செல்லும் அதே வேளையில் அமைதியற்றதும் ஸ்திரமற்றதுமான நாடுகளில் அதற்கான வாய்ப்புக்கள் அருகிக் காணப்படுகின்றன. பெரும்பாலான அதிஉயர் மானிட அபிவிருத்தி கொண்ட நாடுகள் அங்கு நிலவும் நல்லாட்சி நிலவரங்களால் மானிட அபிவிருத்தி குறிகாட்டியில் மேம்பட்டு நிற்கின்றன.

**உணவு நிரம்பல் :**

தரமானதும் போதியளவினதுமான உணவு விநியோகம், நிரம்பல், அவற்றின் விலைகளை நாட்டின் வளமான நிலவரங்களுக்கு ஏற்ப சந்தையில் ஸ்திரமாக்கி வைத்தல், தேவையான வகையில் உற்பத்தியாளர்களுக்கு மானியங்களை வழங்குதல், விவசாய துறையின் உற்பத்திக்காக ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தல், மற்றும் இறக்குமதி ஏற்றுமதியில் முறையான முகாமைத்துவம் உட்பட்ட பலநடவடிக்கைகளை அந்நாட்டு அரசாங்கங்கள் பின்பற்றி செயற் படுகின்றன.

**சுகாதார சேவைகள்:**

அதேபோல் சுகாதார சேவைகளை பன்முகப்படுத்தி மக்களின் ஆரோக்கியத்தை பராமரிப்பதற்காக இலவச மருத்துவ சேவை, நாட்டின் ஆரோக்கிய தேவைகள் தொடர்பான ஆராய்ச்சி, மருத்துவசேவைகளுக்கான முறையான முகாமைத்துவம், நோய் தடுப்பு நடவடி க்கைகள், சிறுவர்கள். குழந்தைகள், தாய்மார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியம் தொடர்பான பலதரப்பட்ட சிறப்பு சேவைகளையும் ஏற்பாடுகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் என்பன மேற்கொள்ளப் படுகின்றன. சுகாதார சேவைகளில் சுத்திகரித்த நீர் விநியோகம், கழிவு நீக்கம், சூழல் மாசாக்கத் தடை மற்றும் விழிப்புணர்வு கல்வி நடவடிக்கை என்பனவும் உள்ளடங்குகின்றன.

**கல்வி வளர்ச்சி :**

அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் சமூகங்களிலும் கல்வி நிலை உயர்ந்தள வினதாகக் காணப்படுகின்றது. அநேகமாக அனைத்து அபிவிருத்தியுற்ற உயர் மானிட அபிவிருத்தி குறிகாட்டியைக் கொண்ட நாடுகளிலும் அடிப்படை எழுத்தறிவு 100 வீதத்தை அண்மித்தே காணப்படுகின்றது. அத்தகைய நாடுகளில் பெரும்பாலானவற்றில் பாடசாலைக் கல்வி முற்றாக இலவசமாகவும் கட்டாயமானதாகவும் ஆக்கப்பட்டுள்ளதோடு அவை முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. எழுத்தறிவுக்கு அப்பால் மேம்பட்டு, உயர்கல்வி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி நடவடிக்கைகள் அவ்வாறான நாடுகளில் உயர் நிலைக்கு சென்றுள்ளமை அந்நாடுகளின் அதி உயர் மானிட அபிவிருத்தி குறிகாட்டிக்கும் உயர் மட்ட வாழ்க்கைத் தரங்களுக்கும் காரணமாயுள்ளன.

**வீட்டு வசதி :**

வீட்டு வசதிகள் தொடர்பிலும் அரசாங்கங்களின் தலையீடுகள் அத்தியாவசி யமானதாகவே கருதப்படுகிறது. ஆரோக்கிய வாழ்க்கை, பாதுகாப்பான வாழ்க்கை, மகிழ்ச்சி யான வாழ்க்கை யாவற்றுடனும் வீட்டுவசதியும் தொடர்புற்றுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வீட்டு வசதி தொடர்பாக அரசாங்கத்தின் பங்கேற்பு பெருமளவினதாக உள்ளது. தனிப்பட்டவர்களாலோ அல்லது தனியார் துறையினராலோ முழுமையாக வீட்டு வசதியை தீர்த்து விடமுடியாது. வீடுகளின் தரங்கள், வீடுகளுக்காகத் திட்டமிடல், சூழல் பாதுகாப்பு, இயற்கை அனர்த்தங்கள், சந்தையில் வீட்டுக்கான விலைகளின் ஏற்ற இறக்கம், வீடு நிர்மாணம் தொடர்பான தொழில் நுட்பங்கள், உள்ளீடுகளின் சந்தை நிலவரம், பயனாளிகளுக்கு நீண்டகால, குறுகியகால கடன்வசதி உட்பட பல்வேறு தேவைகளை தேசிய நலனை அடிப்படையாகக் கொண்ட வகையில் ஏற்பாடு செய்ய வேண்டிய தேவைகள் உள்ளன.

மேற்கூறிய தேவைகளை பூர்த்தி செய்வதுடன் நாட்டில் இவை ஸ்திரமாக பேணப்பட அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமாகின்றது. அத்துடன் அவற்றுடன் இணைந்ததான மேற்குறிப்பிட்ட சனநாயக நல்லாட்சி, மனித உரிமைகள் பாதுகாக்கப்படல், சனநாயக சுதந்திர வாழ்வு என்பன உட்பட்ட ஆட்சி தொடர்பான நிலவரங்களும் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்த முடியும். ஏனெனில் இயற்கை அனர்த்தங்களான வரட்சி, வெள்ளம், கடல்கோள் (சுனாமி), புயல், சூறாவளி, காட்டுத்தீ, எரிமலை வெடிப்பு என்பன ஒரு புறமிருக்க நாடுகளில் வேறுபட்ட பிரிவினர் தமது அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார வாழ்வில் அதிருப்தியடைகையில் கிளர்ச்சிகளில் ஈடுபடுதல், தொழிலாளர்கள் தமது ஊதியம் மற்றும் தொழில் நிலவரங்களுக்காக போராடுதல் என்பன காரணமாக ஏற்படும் முரண்பாடுகள் மக்கள் வாழ்க்கையை பாதிக்க முடியும். இவற்றிற்கு ஒரு நாட்டில் நல்லாட்சி இருந்தால்தான் சுமுகமான தீர்வுகளை எட்டமுடியும். இல்லாதபோது அவை புரை யோடி பெரும் அழிவுகளுக்கே வழிவகுப்பதாகி விடும். எனவே, வளர்ந்த மானிட அபிவிருத்தி குறிகாட்டிகளை பாதுகாத்து மேலும் வளர்ச்சி யடையச் செய்ய வேண்டுமானால் அவற்றிற்கான தற்போதைய நிலைமைகள் பாதுகாக்கப் படுவதுடன், எதிர்கால வளர்ச்சியினை உறுதி செய்வதற்கும் அவற்றை மேலும் மேம்படச் செய்யவும் பொருத்தமான ஏற்பாடுகள் திட்டமிடப் பட்டு அரசாங்கங்களால் நடைமுறைப்படுத்தப் படுதல் அவசியமாகின்றன.

**வறுமையான நாடுகளின் நிலவரங்கள் :**

மானிட அபிவிருத்தி குறிகாட்டி பெரும்பாலான (அநேகமாக அனைத்து நாடுகளிலுமே) வறுமையான நாடுகளில் தாழ் நிலையிலேயே உள்ளன. இதற்கான பிரதான காரணம் பல்வேறு அரசியல், சமூக பொருளாதார காரணங்கள் நிமித்தம் அந்நாடுகளில் மக்களின் ஆரோக்கியம், கல்வி, உணவு நிரம்பல் விநியோகம், வீட்டுவசதி என்பன மக்களுக்கு தேவையான அளவிலும் தரங்களிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காதுள்ளமையேயாகும். மேற்கூறிய நான்கு தேவைகளும் திருப்திகரமாக பூர்த்தியடையாத போது, மக்களின் வாழுங் காலம், குழந்தைகள், சிறுவர்கள் நலன்கள், மனிதவள அபிவிருத்திக்கான சுகாதாரம், கல்வி, தொழிற்பயிற்சி என்பன கிடைக்காமல் போய்விடலாம். இவற்றின் விளைவாக அங்கே மானிட அபிவிருத்தி குறிகாட்டி தாழ்வு நிலைமையிலேயே தொடர வேண்டிவரும்.

அண்மையில் இலங்கையில் கல்வி வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் முதலீடு வருடாந்தம் (2 வீதத்திற்கும்) குறைவாக இருப்பதாகவும் அதனை 6 வீதமாக அதிகரிக்கும் படியும் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் சில ஆண்டுகளாக போராட்டம் நடாத்தினார்கள். இறுதியில் இவ்வருடம்தான் புதிதாக ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இக்கோரிக்கையினை ஏற்றுக்கொண்டதாகவும் அதனை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் உறுதிமொழி கூறியுள்ளது. இது இலங்கையின் மானிட அபிவிருத்திக்கு பெரியளவில் சாதகமாக பயனளிக்கக்கூடும்.

செலவினமாக கருதப்படுவனவற்றிக்கு இங்கே அரசாங்க முதலீடு என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதன் காரணம் விளங்கிக் கொள்ளப்படல் வேண்டும். கல்விக்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் (நோய் தடுப்பு) செய்யப்படும் செலவுகளை முதலீடாகக் கருதலாம். ஏனெனில் அது மானிட அபிவிருத்திக்கு ஏதுவாக அமைய முடியும் என்பதால் ஆகும்.

முடிவாக கூறுவதானால் நாடுகளின் அபிவிருத்தி தொடர்பில் கவனிக்கும்போது ஒவ்வொரு நாடும் அதன் அபிவிருத்திக்கு பெருமளவுக்கு அதன் மானிட அபிவிருத்தி குறிகாட்டியின் வலிமையிலேயே தங்கியுள்ளமை தெரியவருகிறது. எனவே, மக்களின் ஆரோக்கியம், கல்வி, தொழில் பயிற்சி, வீட்டு வசதி என்பவற்றிற்கான செலவினங்களை பொருளாதார செலவினமாக கருதாது அவற்றை பொருளாதார முதலீட்டு நடவடிக்கையாக கருதும் அரசியல் கொள்கைகளின் வாயிலாக ஆவன செய்ய வேண்டியது அத்தியாவசியமானதும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதுமாகும்.

# எழுதுங்கள்...!

எழுத்தாளர்களிடமிருந்தும், வாசகர்களிட மிருந்தும், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், விகடத் துணுக்குகள், குருநாவல்கள், வரலாற்றுத் தகவல்கள், மருத்துவம், ஆன்மீகம் எதிர்பார்க்கப் படுகின்றன. தழுவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தழுவல்களாகவோ முன்னர் பிரசுரமானவை யாகவோ இருப்பின் பிரசுரிக்கப்படமாட்டாது. தாளின் ஒரே பக்கத்தில் எழுதுவதோடு ஆக்கங்களின் பிரதிகளை கைவசம் வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மாதர் அரங்கு, மாணவர் அரங்குப் பகுதிளை "அகிலம்" ஆரம்பித்து இருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். குறுக்கெழுத்துப் போட்டிக் கேள்வி பதில்கள் அனைத்தும் அடுத்துவரும் மாதாந்த ,தழ்களில் இடம்பெறும்.

நீங்களும் ஒரு சந்தாதாராகி "அகிலம்" வளர்ச்சிக்கு உறுதுணையாக இருங்கள்!

**சந்தா விபரம்**
தனிப்பிரதி - ரூ. 100.00
ஆண்டுச்சந்தா - ரூ 1000.00
(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி :
**கே. வி. இராமசாமி**
ஆசிரியர் "அகிலம்"
அகிலம் பப்ளிகேஷன்ஸ்
308, டீ. எஸ் சேனாநாயக்கா வீதி, கண்டி
(இலங்கை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தொழிற்சங்க அரசியல் முன்னோடிகள்



**செல்வி மங்களேஸ்வரி வேலுசாமி**, B.A. Hons.

மலையகம் என்பது இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழியினர் அதிகமாக வாழ்கின்ற பிரதேசத்தை குறிப்பிடும் வகையில் அமைகின்றது. இதில் பெரும்பாலும் மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மாகாணங்களில் 1823 ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1924 இல் ஜோர்ச் பேர்ட் (George Bird) என்பவரினால் முதல் முதலில் கோப்பிப் பயிர்ச்செய்கை கம்பளையில் ஆரம்பிக்கப்பட்டது. இக்கோப்பி பயிர்ச் செய்கையில் பங்கஸ் நோய் ஏற்பட இதனை கைவிட்டு தேயிலைப் பயிர்ச்செய்கை பயிரிடப் பட்டது. இது இன்றுவரை இலங்கையின் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாகவும் அன்னிய செலாவணியை பெரும் அளவில் பெற்றுத்தரும் துறையாகவும் காணப்படுகின்றது.

தேயிலை பயிர்ச்செய்கை பருவக்கால பயிர்ச்செய்கையாக காணப்படாமையினால் இதற்கான நிரந்தர தொழிற்பாட்டை கண்டறிவதில் பிரித்தானியர் ஈடுபட்டனர். இதன்போது இலங்கையின் சுதேச மக்கள் ஓய்வின்றிய வேலையாகவும் வருமானம் குறைந்த வேலையையாகவும் கருதி இத்தொழிலை விரும்பாத நிலையில் அந்நிய நாட்டிலிருந்து தொழிற்படையினரை கொண்டு வரக்கூடிய நிலையில் தென் இந்தியா (தமிழ்நாடு) விலிருந்து தாழ்த்தப்பட்ட சமூகப் பிரிவினர் குறிப்பாக நிலமற்ற விவசாயிகள் கூலிப்படைகளாக அழைத்துவரப்பட்டனர். இவர்களின் வருகை பல உயிர் அழிவுகளுடன் கூடிய ஒரு துன்பகரமான விடயமாக இருந்ததுடன் குடியமர்த்தப்பட்டதன் பின்னர் குளிராலும் வாந்திபேதியாலும் மற்றும் சின்னம்மை நோயினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தொழிலாளர்களாக வழிநடத்த கங்காணிமார்கள் காணப்பட்டதுடன், இவர்கள் தொழிலாளர்களை விநியோகம் செய்யும் தனியுரிமை பெற்றவர்களாகவும் காணப்பட்டனர். தொழிலாளர்களின் வேதனங்கள் முறையாக வழங்கப்படாமலும் உழைப்புகள் சுரண்டப்பட்ட கடனாளிகளாகவும் ஏறக்குறைய கங்காணிமாரின் அரை (Semi Slaves) அடிமைகளாகவும் இந்திய வம்சாவழியினர் வாழ்ந்த நிலை மறுக்கப்பட முடியாத விடயமாகும்.

வேதனக்குறைப்பு அடிமைத்தனத்தின் உச்ச நிலை அடைந்தபோது இந்திய தொழிலாளர்களை பாதுகாக்கவும் நலன்கள், உரிமைகளில் பாதுகாப்பினை மேற்கொள்ளவும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட கடினமான சட்டங்களால் தடைசெய்யப்பட்டபோதும் சுதந்திரத்தின் பின்னர் அரசியல், பொருளாதார கொள்கைகளில் பெருந்தோட்ட தொழிலாளரின் உரிமைக்காக போராடக்கூடிய நிலைக்கு இது உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் தொழிற் சங்கப் போராட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டாலும் தொழிலாளர் கல்வித்தரம் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். ஆனால் தொழிற்சங்க தலைவர்கள் புத்திஜீவிகளாகவும் சொத்துப் படைத்தவர்களின் ஆதிக்கம் கொண்டவர் களாகவும் காணப்பட்டனர். இலவச கல்வியனாது காலணித்துவ ஆட்சியில் காணப்படாமையினால் சொத்துடையவர்கள் மேலைநாடு சென்று கற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கல்வியே கற்காத தொழிலாளர்களால் அரசாங்க சட்டங்கள், நிர்வாகக் கட்டளைகள், கூட்டு பேரம் பேசுதல் தொடர்பான விடயங்களை கையாள எப்போதும் மத்தியதர வர்க்கத்தினரைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது.

பெருந்தோட்டங்களில் தொழிற்சங்கங்களை முதலில் அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக திகழ்ந்தவர் கோ. நடேசஐயர் ஆவார். 1915ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு முதல் தடவையாக இலங்கை வந்திருந்த ஐயர் மீண்டும் 1920 களில் இலங்கைக்கு வந்து ஷஷதேசநேசன்" எனும் பத்திரிகையை வெளியிட்டார். அதேவேளை தொழிலாளர்களுடன் ஐயர் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அரசியலில் ஈடுபடுவதற்கு காரணமாக இருந்தது. அதேவேளை 1920-1928 ஆம் ஆண்டு வரையில் நகர தொழிலாளர்களின் தலைவராகிய ஏ. ஈ. குணசிங்கவுடன் தொடர்பு கொண்டிருந்தார். 1926 ஆம் ஆண்டில் "Forward" பத்திரிகையை ஆரம்பித்தனர். இருப்பினும் இவர்களின் உறவு தொடரவில்லை. பின்னர் குணசிங்கா அநாகரிக தர்மபாலாவுடன் இணைந்து பேரினவாதத்தைப் பேசினார். மறுபுறத்தில் 1904 ஆம் ஆண்டு இந்திய கூலிகளைப் பற்றிய கவனத்தின் மூலம் திருச்சிராப்பள்ளியில் லேபர் கமிஷன் ஆரம்பிக்கப்பட்டது. 1921 க்குப் பிறகு தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற தேசிய இயக்கமும் ஆரம்பிக்கப்பட்டதனை இலங்கை அரசியல் துறையினரும் ஆதரித்ததுடன் துண்டுமுறை ஒழிப்புச்சட்டமும் 1921ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு சேர். பொன் அருணாசலம் முக்கியம் பெற்றதுடன் இதன் காரணமாக கங்காணிமாரின் ஆட்சியையும் முடிவுக்கு கொண்டுவர வாய்ப்பளித்தது. இலங்கை வாழ் இந்தியர்களை ஒதுக்கப்பட முடியாத கூட்டத்தினர் என ஆட்சியாளர் கருதியதன் விளைவாக இலங்கை வாழ் இந்தியர்க்கென முதலாவது நிருபணசபைக்கு ஈ.ஜி. ஆதாம் அலி நியமிக்கப்பட்டார். "இலங்கை சனத்தொகையில் ஆறில் ஒரு பங்கினர் இந்திய மக்கள். இவர்களுக்கென ஆகக்குறைந்தது நான்கு அங்கத்தினராவது இருக்க வேண்டும்" என்பது இவரின் கோரிக்கையாக இருந்தது.

1924ம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில் கொழும்பில் இயங்கிய சங்க பிரமுகர்கள் இக்னேஸியஸ் சேவியர் பெரேராவும் மொகமட் சுல்தானும் தெரிவாகினர். மொகமட் சுல்தான் மரணமடைந்து இடை தேர்தல் நடத்தப்பட்டது. இதில் 08.12.1925 இல் கோதண்டராம நடேசய்யர் தெரிவானார். இதிலிருந்தே சட்டசபையில் தோட்ட தொழிலாளர் குரல் ஓங்கி ஒலிக்க காரணமாகியது. 1931 இல் நடந்த பொதுத் தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் ஒரு நியமன உறுப்பினருமாக மூவர் அதாவது பெரி. சுந்தரம், எஸ். பி. வைத்தியலிங்கம், திலான் பகதூர், ஐ.



எக்ஸ். பெரேரா நியமிக்கப்பட்டதுடன் பெரி சுந்தரம் தொழில் மந்திரியாக தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில் இலங்கைக்கு வந்து சென்ற இந்திய தலைவர் ஜவகர்லால் நேரு (1934) இந்தியர்கள் இலங்கை வருவதற்கு தடைவிதித்தார். இவர் இந்தியா திரும்புவதற்குள் இவரால் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை இந்தியன் காங்கிரஸ் நடத்திய போராட்டங்கள், ஹர்த்தால்கள், வேலை நிறுத்தங்கள், தியாகங்கள் "இந்திய கூலிகளிடையே சுய மரியாதை உணர்வை" ஏற்படுத்தியது.

டொனமூர் ஆட்சி காலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என சேர். பொன். இராமநாதனின் கருத்துக்கள் இலங்கையினரின் சர்வஜன வாக்குரிமை பெண்களுக்கு வாக்குரிமை பறிப்பதற்காக சொல்லப்பட்டாலும் 1927 இல் லேடி டயஸ் பண்டாரநாயக்க தலைமையில் "இலங்கை வாழ் மகளிர் வாக்குரிமை சங்கம்" என்ற அமைப்பில் தமிழ் பெண்களும் அங்கத்துவம் பெற்றனர். "காந்தி சங்கம்" என்ற அமைப்பில் சத்ய வாகீஸ்வர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர், நல்லம்மா என்ற பெண்களும் வாக்குரிமைக்காகப் போராடினர். அதனைத் தழுவியதாக நடேச ஐயரின் மனைவியார் மீனாட்சியம்மையாரும் போராடியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். பின்னர் அரசாங்க சபை 1931 இல் கூடியபோது இந்திய மக்களின் பிரமுகர்களாக பண்டாரவளை ஏ. பெலோஸ், கோர்டன், தலவாக்கலை சி. வைத்தியலிங்கம், ஹற்றன் பெரியண்ணன் சுந்தரம் என்போர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் தேர்தலில் இலங்கை சமசமாஜக் கட்சியில் டி. இ. ஹமில்டன், பி.கே. வேலுசாமி போன்ற இந்தியர்களின் போட்டியும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகக் காணப்பட்டதுடன் பின்னர் நுவரேலியாவில் ஏ. ஈ.குணசிங்கா, தொழிற் கட்சியின் சார்பில் போட்டியிட்டவரான ஜே. டி. ரட்ணம் நகர்புற தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். 1936 இன் பின்னர் லட்சுமி இராஜரட்ணமும் கோ. நடேசய்யரும் போட்டியிட்டனர். இதில் நடேசய்யர் வெற்றியீட்டினார்

நடேசய்யரின் வெற்றியானது மீண்டும் தோட்ட மக்களிடையே பலத்தினை அதிகரித்ததுடன் இலங்கை இந்திய தொழிலாளர் சம்மேளனம், அகில இலங்கை இந்திய தோட்ட தொழிலாளர் சம்மேளனம் என்ற இரண்டு அமைப்புக்களை ஏற்படுத்தி மக்களின் நலனில் அக்கறையை அதிகரித்தார். தோட்டங்களில் ஊமையராய் உறங்கிக்கிடக்கும் மக்களை தட்டியெழுப்பும் பாரிய முயற்சியீல் நேரடியாக ஈடுபடவும் ஆரம்பித்தார். இவருக்குப் பக்க துணையாக துணைவியார் மீனாட்சி அம்மையார் காணப்பட்டதுடன், ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம் என்ற பாரதி பாடலுக்கு ஈடாக காணப்பட்டார். ஆனால் அரசியல் நடவடிக்கையில் நடேசய்யரின் செயற்பாடு தாக்கத்தை ஏற்படுத்தியதும் குறிப்பிடத் தக்க விடயமாகும்.

நடேசய்யரின் சம்பள குறைப்புக்கெதிரான சம்மேளனத்தின் பொது அபிப்பிராயமும் இலங்கையின் குறைவான சம்பளத்தை விரும்பாத தொழிலாளர் இந்தியா செல்லலாம் என்ற ஒப்புதல் தாங்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான அதிரடி நடவடிக்கைகள் என்பன தொழிற்சங்க போராட்டத்தின் முக்கிய தருணமாகும். மேலும் பெ. சுந்தரம், அன்னி பெசண்ட அம்மையார்,




லோகமான்ய திலகர் போன்றவர்களின் வெள்ளையர்க்கெதிரான செயற்பாடும் முக்கியமானது. மேலும் பொலிசாரினதும் துரைமார்களினதும் நடவடிக்கைகளுக்கும் தொழிலாளர்களின் மனைவிகளை தகாத முறையில் நடத்திய கங்காணியைத் தட்டிக் கேட்டதால் 450 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பைத்தியக்காரின் பட்டியலில் பைத்தியக்காரர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதையும் தட்டி கேட்டதும் சட்டசபையில் தன் செயற்பாடுகளை மேம்படுத்தியதும் நடேசய்யருக்கே உரிய தனித்துவமாகும். இவர் வெறும் தேசிய உணர்வால் மாத்திரம் உந்தப்பட்டவரில்லை ஆசையும் அபிலாஷையும் மிகுந்தவராகக் காணப்பட்டார்.

"சம்பளக் குறைப்புக்காக மட்டுமல்ல தொழிலாளர்களை அவர் சுத்தமாக உடுத்தச் செய்தார், செருப்பு போடும்படி கேட்டார், கோட் அணியச் செய்தார், தலைப்பாகை கட்டச் சொன்னார், கையிலே பிரம்பு எடுத்து கம்பீரமாக நிமிர்ந்து நடக்கச் சொன்னார்" தொழிலாளி விழித்தான். இந்நிலையில் கங்காணிகளின் அதிகாரம் குறைந்தது. தொழிற்சங்க நடவடிக்கைகள் பலவழிகளில் மேம்பட்டது. 1947 களில் தேர்தலில் பலர் போட்டியிடும் அளவிற்கு உயர்ந்தது. எஸ். எம் சுப்பையா, கே, குமாரவேலு, கே. இராஜலிங்கம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. ஈ.கே.ஆர். எஸ். தொண்டமான், சி. வி. வேலுப்பிள்ளை, ஜி. ஆர். மோத்தா போன்றவர்களின் தெரிவு முக்கியமானது. ஆனால் சிங்கள முதலாளித்துவம் இவர்களின் அரசியல் பிரவேசத்தை விரும்பவில்லை. இந்நிலையில் 1946 இல் ஹர்த்தால் இடம்பெற்றதுடன், இதனை இடதுசாரிகளும் அனுஷ்டித்தனர். 1,25,000 தொழிலாளர்கள் 27 நாட்கள் தொடர்ச்சியான ஹர்த்தாலில் ஈடுபட்டதுடன் இது இலங்கையினரிடம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் இவர்களை போராட்டத்திலிருந்து நசுக்கவும் முற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குடியுரிமை பிரச்சினையின்போது சி. வி. வேலுப்பிள்ளை, கே. இராஜலிங்கம், அப்துல் அஸிஸ், எம். சோமசுந்தரம் போன்றவர்களின் நடவடிக்கையும் முக்கியமானதாக காணப்பட்டது. 1939 இல் கொண்டுவரப்பட்ட இலங்கை இந்திய காங்கிரஸ் செயற்பாடு தொழிற்சங்கங்களின் முக்கியமான நடவடிக்கையில் ஒன்றாக திகழ்ந்ததுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமையில் இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிலாளர் யூனியன் (CICLU) பெயரில் தொழிற்சங்கம் இயங்கியதுடன் பின்னர் பிளவுபட்டது. இதன் மூலம் இந்திய இலங்கை காங்கிரஸ், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் எனவும் இலங்கை இந்திய தொழிலாளர் யூனியன் என்பது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகவும் பிளவுபட்டதுடன் தொழிற்சங்க நடவடிக்கை திறனும் குறைவடைந்தது.



தொழிற்சங்க பிளவின் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான எஸ் தொண்டமான் தீவிர நடவடிக்கை மேற்கொண்டார். இதன்படி இது அரசியல்மயமாக்கப்பட்ட விடயமாக காணப்பட்டாலும் நாடுகடத்தப்பட்டவர்களின் நிலைமையை தட்டிக் கேட்கவும், நாடற்றவர் என்ற நிலையை மாற்றியமைக்கவும், குடியுரிமை, பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொடுப்பதிலும் இவரின் முயற்சியானது விலைமதிக்க முடியாதது. பாராளுமன்றத்தில் தனிநபராக செயற்பட்டவரில் இவர் ஒருவரே உதாரணமாக உள்ளார். இதன்படி தொழிற்சங்க கட்டளைச் சட்டம் 1935ம் ஆண்டு 14 ஆம் இலக்க சட்டத்தை விரைவுபடுத்துவதிலும் காணி சுவீகரிப்பினை தடுக்கவும் தேர்தல் இடாப்பில் இந்திய வம்சாவழியினரின் பெயர்கள் பதியப்படவும் பிறப்புச் சான்றிதழ் பெற்றுத் தருவதிலும் வாக்குரிமையை மலையக மக்களுக்குப் பெற்றுத்தருவதிலும் பேரம்பேசியே பெற்றுத்தந்த பெரும் தலைவராகவும் தொழிற் சங்க முன்னோடியாகவும் காணப்படுகின்றார். இவரின் செயற்பாட்டில் அஸிஸ் என்பவரின் ஆளுமையும் உதவியும் சிறப்பாக அமைத்தமை குறிப்பிடத்தக்கது.

தொழிலாளர்களின் நலனை மையமாகக் கொண்ட தொழிற்சங்க நடவடிக்கை மலையகத்தை பொறுத்தவரை பாரிய சவாலினால் பெற்றெடுக்கப்பட்டாலும் தற்போது அதன் செயற்பாடு இரு வருடத்திற்கு ஒருமுறை கூட்டு ஒப்பந்தம் செய்யவே உதவினாலும் முன்னைய தொழிற்சங்கம் போல நம்பிக்கை மிக்கதாக காணப்படவில்லை. இருப்பினும் மலையக தொழிற்சங்கம் உருவாக அரசியல் முன்னோடியாகக் காணப்பட்டவர்கள் மலையகத் தினரால் என்றும் போற்றத் தக்கவர்களாவர்.

## உசாத்துணை நூல்கள் :


1. *சாரல் நாடன் - மலையக தமிழர் வரலாறு 2008 - சாரல் பதிப்பகம், கொட்டகலை*
2. *தனபாலசிங்கம் கிருஸ்ணமோகன், இலங்கை பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கம் 2008 குமரன் புத்தக இல்லம், கொழும்பு*
3. *சித்திரலேகா மோனகுரு, இலங்கையின் சமூக ஜனநாயக சீர்திருத்த இயக்கங்களில் முன்னோடிகளான சில தமிழ்ப்பெண், நிவேதினி இதழ் 1, 1994, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பெருந்தோட்டத் துறைசார் இந்திய வம்சாவழியினரின் கல்வி வரலாற்றுடன் தொடர்பான சமூக, அரசியல் மற்றும் சட்டப் பின்னணி



ப. ஆறுமுகம்
*B.A (Hons) PGDE (OUSL) PGDEM (Merit) SLPSI, SLEAS III, MSc. in Edu.Mgt*

## 1.1 அறிமுகம்

இலங்கைவாழ் வம்சாவழி தோட்டத் தொழிலாளரது பிள்ளைகளது கல்வி வளர்ச்சி பற்றி விசேடமாக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு பிரதான இடமளித்து இக்கட்டுரை முன்வைக்கப்படுகிறது.இவர்களது கல்விபெறும் செயன்முறையில் வரலாற்று ரீதியாக செல்வாக்கு செலுத்திவந்துள்ள சமூக, சட்ட மற்றும் அரசியல் காரணிகள் சுருக்கமாக இங்கு முன்வைக்கப்படுகின்றன. சில பத்திரிகைகள் மற்றும் எழுத்தாளர்கள் மலையக கல்வித்துறையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மீது குறைகாண்பதை காணலாம். மலையக கல்வி நிலையை இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களது கல்வி நிலையோடு ஒப்பிடுமிடத்து தாழ்ந்த மட்டத்திலிருப்பதற்கு வரலாற்றில் அச்சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் பிரதான நீரோட்டத்திலிருந்து பிரித்து வைத்தமையும் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக கருதலாம். இதனை இங்கு சமர்ப்பிப்பதன் மூலம் பெருந்தோட்ட பிள்ளைகளது கல்வி வளர்ச்சியில், அதன் அபிவிருத்தியில் ஏனைய சமூகத்திற்கு மிடையிலான இடைவெளியை நிரப்ப விசேட வேலைத்திட்டம் ஒன்று அவசியம் என்பது சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் கவனத்தில் கொள்ள உதவியாக அமையலாம்.

## 1.2 நோக்கங்கள்

1.2.1. 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டம். 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1951 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் விதிகள், தோட்டப் பாடசாலைகளின் கட்டடம் மற்றும் காணி வழங்குதலில் பின்பற்றப்பட்டதென்பதை கண்டறிதல்.

1.2.2. தோட்டப் பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவிகரிக்கப்படுவதற்குமுன் இப் பாடசாலை களுக்காக கல்வித்திட்டம், பாட உள்ளடக்கம், ஆசிரியர் பயிற்சி பற்றிய விபரங்களைக் கண்டறிதல்.

1.2.3. இப் பாடசாலைகள் எந்தளவிற்கு மாணவர் நேயபாடசாலைகளாக இருந்தனவென்பதை கண்டறிதல்.

## 1.3. இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர் என்ற சமூக உருவாக்கம்:

இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் வாசனைத் திரவியங்கள் வர்த்தக நோக்கில் பயிரிடப்பட்டாலும் அவை பெருந்தோட்டம் எனக் கூறக்கூடிய அளவில் அல்லாது சிறிய அளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தங்களில் கோப்பி பயன்பாடு வேகமாக அதிகரித்திருந்தமையை அறிந்த பிரித்தானிய ஆளுநர் பார்னர்ஸ் இலங்கையில் கோப்பிச் செய்கையை ஊக்குவித்துள்ளார். பேராதெனிய தாவரவியல் பூங்காவிற்கு அருகில் அவராகவே ராஜா தோட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இன்று ரஜவத்தை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தில் கோப்பிக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வி, கரிபியன் கடற்பிரதேச நாடுகளில் கோப்பி உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இலங்கையில் கோப்பி உற்பத்திக்கு வாய்ப்பான சூழலை உருவாக்கியதுடன் அதனைத் தொடர்ந்து தேயிலைச் செய்கை அவற்றில் பணிபுரிய தென்னிந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட தமிழை தாய்மொழியாகக் கொண்ட மக்கள் கூட்டம். இந்நாட்டின் மத்திய மலைநாட்டை பிரதான வாழ்விடப் பகுதியாகக் கொண்டவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டே இந்த விபரங்கள் வழங்கப்படுகின்றன. சமூக உருவாக்கம் ஆய்வின் நோக்கமல்லவாதலால் மிக சுருக்கமாகவே முன்வைக்கப்படுகிறது.

**1.4. பெருந்தோட்டப் பாடசாலை மற்றும் அவர்களது கல்வி ஏற்பாடுகள் - சமூக அரசியல் பின்னணி.**

இலங்கையின் மத்திய மலைநாட்டில் வாழத்தொடங்கிய இந்திய வம்சாவழி மக்கள் தமது கல்வியை தமது சொந்த முயற்சியால் ஆரம்பித்தமை இம்மக்களது கல்வியில் பிறரது கவனம் ஈர்க்கப்பட காரணமாக இருந்துள்ளது. திண்ணைப் பள்ளிக்கூடங்கள், லயன் பள்ளிக் கூடங்கள்

இரவுப் பள்ளிக்கூடங்கள் என தோட்டக் கங்காணிமார்களாலும் ஓரளவு எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாலும் சில மணித்தியாலங்களுக்கு நடாத்தப்பட்ட இப்பாடசாலைகளில் ஆத்திசூடி போன்ற அறநெறி ஒழுக்க விழுமியங்கள் கற்பிக்கப்பட்டன (தை. தனராஜ் பக்.68, 2008). பல தோட்டங்களில் பல்வேறு மன்றங்கள் உருவாக்கப்பட்டு திருக்குறள், கம்பராமாயணம், பாரதக் கதைகள் என்பன பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டது. மலையக நகரப் புறங்களில் சமய நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகள் மிக அரிதாக அல்லது ஒருவரும் அனுமதிக்கப்படாது பெரிய கங்காணிமார்களது மற்றும் தோட்ட உத்தியோகத்தர்களது மற்றும் வர்த்தக, அரச ஊழியர்களது பிள்ளைகளே கற்றனர். 1869ம் ஆண்டு இந்நாட்டில் போதனா திணைக்களம் தாபிக்கப்பட்டு அதன் முதலாவது பணிப்பாளரால் தோட்டப் பிள்ளைகளது கல்வி பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தோட்டத் துரைமாருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு போதிய அக்கறை காட்டப்படவில்லை (தை. தனராஜ் 2008) "தோட்டத் துரைமார் தோட்டத்துப் பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது அவர்களது நிலைமைக்கு அளவிற்கு அதிகமானதாகவும் பெருந்தோட்டத் துறையை கொண்டு நடத்துவதற்கு பாதகமானதாகவும் அமையக்கூடியதாக கருதியுள்ளனர்" (எஸ் நடேசன் 1993). தோட்டத்துப் பிள்ளைகளது கல்வியில் தோட்டத் துரைமார்கள் ஆரம்பகாலத்தில் பின்பற்றிவந்த எதேச்சதிகாரமான முகாமைத்துவ செயற்பாடுகளின் மத்தியில் இத்தகைய ஒரு சேவையை அவர்களிடம் எதிர்பார்த்தமை பொருத்தமில்லை. எவ்வாறாயினும் முன்னாள் தோட்டத்துரையாக பணிபுரிந்த ஏ.ஜீ.எச். வைஸ் என்பவருக்கு தோட்டத் தொழிலாளரது பிள்ளைகளுக்காக ஒரு இடம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டுமென முனைந்தார். 1903 டிசம்பர் 07ந் திகதி லண்டனில் சேர். லெப்பெல் கிறிப்பின் தலைமையில் நடைபெற்ற கிழக்கு இந்திய சங்கக் கூட்டத்தில் இலங்கையில் கல்வி என்ற தலைப்பிலான ஓர் ஆய்வரங்கத்தில் - A Place for Estate School - தோட்டப் பாடசாலைக்கு ஓர் இடம் கோரிக்கையை வலியுறுத்தி பேசியதுடன் தமது குடும்பு உழைப்பு பாதிப்படையும் என்பதால் தோட்டத்துப் பிள்ளைகளுக்கு கல்வி வழங்கப்படுவதை அவர்களது பெற்றோரே நிராகரிக்கின்றனர் என்ற கருத்து தவறானது என வாதிட்டார். இனைத்தொடர்ந்து காலனித்துவ நாடுகளுக்கான இராஜாங்க செயலாளர் இலங்கையில் குடியேறிய கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்களது பிள்ளைகளின் கல்வியின்பால் கவனம் செலுத்துமாறு இலங்கையின் அப்போதைய ஆள்பதி சேர் ஹென்றி பிளக்கை கேட்டுக்கொண்டார். - (எஸ் நடேசன் 1993).

இத்தகைய ஒரு நிலையில் போதனா திணைக்கள முன்னாள் பணிப்பாளர் எஸ். எஸ். பரவோவ்ஸ் தோட்டப்புற பிள்ளைகளின் கல்வி பற்றி ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டார். அவரது அறிக்கையின்படி 1,857 தோட்டங்களில் 4,06,821 பேர் வசிப்பதாகவும் அதில் பாடசாலைக்கு செல்லும் வயதையுடைய (6-12) பிள்ளைகள் ஏறக்குறைய 25,000 பேர் இருப்பதாகவும் அவர்களில் 1,765 பேரே பாடசாலைக்குச் செல்வதாகவும் அதில் 1,598 பேர் ஆண் மாணவர்கள் என்றும் அவர்கள் இடைநிலை கல்வியை தொடர்வதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையில் தோட்டத்து பிள்ளைகளுக்காக பொருத்தமான கல்வி பற்றிய அவரது அறிக்கையில் ஒரு பகுதி:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"The question of intellectual aspirations may be dismissed as irrelevant under the circumstance. It is on the other hand advisable that the cooly should be able to write his name and recognize signatures, to read and write simple sentences in his mother tongue, and to do some arithmetic as is implied in the very simple accounts that comes his daily life .... (S. Nadesan P. 102)"

1905 ஜனவரி 25 ஹெபர்ட் வாஸ் தலைமையில் அடிப்படைக் கல்வி பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழு "தோட்டங்களில் பணிபுரியும் தமிழ் கூலிகளது பிள்ளைகளது கல்வி பற்றியும்" அறிக்கையில் சேர்க்குமாறு கோரப்பட்டது. அவரது அறிக்கையில் 1,353 தோட்டங்களில் பாடசாலை செல்லும் வயதையுடைய 23,690 ஆண் பிள்ளைகளும் 22,510 பெண் பிள்ளைகளும் இருப்பதாகவும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் 359 பாடசாலைகள் இயங்குவதாகவும் அவற்றில் 2 அரசாங்க பாடசாலை எனவும் 58 உதவி பெறும் பாடசாலைகள் எனவும் 299 உதவி பெறா பாடசாலைகள் எனவும் இந்த 299 பாடசாலைகளில் 120 தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்பட்ட அறைகளிலும் 179 படசாலைகள் லயன் அறைகளிலும் இயங்கியுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆணைக்குழு தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவது தோட்டத்துறையின் தொழிலாளர் நிரம்பலை பாதிக்கக்கூடும் என்ற அச்சத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் இலங்கை கல்வி முறையின் மூல கட்டளைச் சட்டம் (Principal Ordinance) எனக் கூறப்படும் 1939 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க கட்டளைச் சட்டமும் 1947 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க கட்டளைச் சட்டமும் 1951 ஆம் ஆண்டின் 5ம் இலக்கச் சட்டமும் தோட்டப் பாடசாலை விவகாரத்தில் தோட்ட முகாமையாளரதும் உரிமையாளரதும் பொறுப்புகளை குறிப்பிடும் விதிகள் உள்ளடக்கப்பட்டமை ஒரு முன்னேற்றகரமான விடயமாகும். இந்த நாட்டில் ஆரம்பக் கல்வி முதல் பட்டம் வரை இலவசமாக வழங்கப்பட தீர்மானம் மேற்கொண்ட 1943 ஆம் ஆண்டின் விசேட கல்வி ஆணைக்குழு அறிக்கை பெருந்தோட்டப் பாடசாலைகளை உள்வாங்காமை இந்த சமூகத்திற்கு இழைக்கப் பட்ட பெரும் அநீதியாகக் கருதலாம். குமாரி ஜயவர்தன இந்நாடு கல்வி வழங்குவதில் இன பேதம், மத பேதம், சாதி சமூக அந்தஸ்து பேதம் காட்டாமை பாராட்டப்படக்கூடியதாயினும் இந்நாட்டிற்கு பெருமளவில் வருமானம் தேடித்தந்த தோட்டத் தொழிலாளரது பிள்ளைகளை புறக்கணித்தமை மிகவும் அவமானப்படக்கூடிய விடயமெனக் குறிப்பிட்டுள்ளார். இலவசக் கல்வியின் பிதா வென போற்றப்படும் கலாநிதி சீ. டபிள்யூ. டபிள்யூ. கண்ணங்கரா 1931 ஆம் ஆண்டில் சர்வசன வாக்குரிமை வழங்கப்படும் போது இது இந்திய தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படுவதை எதிர்த்தவராகும். ஆனால் அவரால் அதை தடுக்க முடியாவிட்டாலும் இலவசக்கல்வி வழங்கும் விடயத்தில் அவர் இந்திய தோட்டத் தொழிலாளர்களை புறக்கணித்தமை மலையகக் கல்வி வளர்ச்சியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது. தோட்டத் தொழிலாளரது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டிய எஸ். பீ. வைத்திலிங்கம், ஐ. என்ஸ். பெரேய்ரா, பீ. எச். அலுவிகார ஆகியோரால் முன்வைக்கப்பட்ட "சகல ஆரம்ப தோட்டப் பாடசாலைகளையும் அரச பாடசாலைகளாக மாற்றும் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதன் அமுலாக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. 1954 ஆகஸ்ட் 14ந் திகதி அன்றைய கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் எல்லாப் பாடசாலைகளையும் அராசாங்கத்திற்கு சுவிகரித்து மொத்த வியாபாரம் நடாத்த முடியாது என கூறியமை தோட்டப் பிள்ளைகளின் கல்வியில் பெரும்பான்மை இனத்தவர்களின் மனப்பாங்கு எத்தகையதாக இருந்துள்ளதென்பது கவனிக்கத்தக்கது.

1948 ஆம் ஆண்டு இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமையை பறிக்கும் வகையில் இயற்றப் பட்டு இம்மக்களை "நாடற்றவர்களாக" குடியுரிமை அற்றவர்களாக ஆக்கியமை கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. பிரதிநிதித்துவ ஜனநாயக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் மக்கள் தமது பிரச்சினைகளை தமது பிரதிநிதிகள் மூலம் தீர்த்துக்கொள்ளும் வேளையில் பிரதிநிதித்துவமற்ற சமூகமாக இருந்து தமது கல்வித் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாது போனதில் ஆச்சரியமில்லை. 1950 களுக்குப் பிறகு இரு மொழிகளில் போதனை நடாத்தப்பட்ட பாடசாலைகளில் மாணவர் கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெரும்பான்மை எண்ணிக்கை யுடைய மாணவர்கள் எந்த இனத்தவர்களோ, அந்த இனத்திற்குரியவர்களின் பாடசாலையாக ஆக்கப்பட்டது. அவ்வாறு கணக்கெடுப்பு நடாத்தப்பட்டபோது நாடற்ற பிள்ளைகள் கணக்கில் எடுக்காமையால் பல தமிழ் பாடசாலைகள் பிற இனத்தவர்குரிய பாடசாலைகளாக மாறியமையும். 1951 முதல் 1954 வரை 24 தோட்டப் பாடசாலைகள் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டமையும் ஞானமுத்து அவர்களின் ஆய்வில் சுட்டிக்கட்டப்பட்டுள்ளது

இவ்விடயம் சம்பந்தமாக ப/ பசறை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு விசேடமான ஓரிடம் உண்டு. பண்டாரவளை கல்விக் கந்தோர், கல்வி அதிகாரி பீ. பீ. எம். சேனாநாயக்கவிற்கு 02.12.1962 திகதியிட்டு தலைமையாசிரியருக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வரும் பகுதியினரை பாடசாலையில் அனுமதிக்க வேண்டாம் என அறிவித்துள்ளார்.

1. தோட்டப் பாடசாலையிலிருந்து தரம் 6 ற்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கோ.
2. இலங்கை பிரஜையாக அல்லாத எவரையும் தரம் 6 ற்கோ அலலது அதற்கு மேற்பட்ட தரத்திற்கோ
3. தமது வீட்டிற்கு அருகில் வேறு தமிழ் பாடசாலையோ தமிழ் பிரிவுள்ள பாடசாலை இருக்குமிடத்து....... இவற்றில் முதலிரண்டு நிபந்தனைகள் தோட்டப் பகுதியில் வாழ்ந்த மற்றும் குடியுரிமை பறிக்கப்பட்ட இம்மக்களது பிள்ளைகளுக்கு எவ்வளவு அநீதி இழைக்கப்பட்டது என்பது தெரிகிறது.

1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஜயசூரிய கல்வி அறிக்கை தோட்டப் பாடசாலை அரசு சுவீகரிக்கும்படி செய்த முற்போக்கான சிபார்சுடன் மிகவும் பிற்போக்கான, கல்வித் தத்துவங்களுக்கு முரணான அவர்களது தாய்மொழியிலன்றி சிங்கள மொழியே அப்பாடசாலைகளின் போதனா மொழியாக அமைய வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டமை பெரும்பான்மை சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கல்விமான்களுடைய மனப்பாங்கையும் அறிய உதவுகிறது.

எவ்வாறாயினும் பின்வரும் நடவடிக்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் தோட்டப் பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை செய்துள்ளன.

1. 1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் தோட்டப் பாடசாலைகளை சுவீகரிக்க எடுத்த தீர்மானம்

2. 1977ல் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் சுவீகரிப்பு பணிகளை துரிதப் படுத்தியமை

3. சுவிடன் நாட்டின் நிதி உதவியுடன் (12 ஆண்டுகள்) செயற்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகள் கல்வி அபிவிருத்தித் திட்டம். 1986ல் ஆரம்பிக்கப் பட்டபோது 420 பாடசாலைகளும் பின்னர் 141 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப் பட்டன. ஆயினும் 270 பாடசாலைகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுக்கொள்ள முடியாது போயிற்று.

4. பெருந்தோட்டப் பாடசாலைகளுக்காக விசேட ஆசிரிய நியமனங்கள்

5. அரசியலமைப்பிற்கான 13வது திருத்தம் மூலம் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களின் தமிழ் கல்வி அமைச்சுக்கள் தாபிக்கப் பட்டமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

**1.5. பெருந்தோட்டப் பாடசாலைகள் சட்ட ஏற்பாடுகள்.**

* 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்வி கட்டளைச் சட்டத்தின் பகுதி IV தோட்டப் பாடசாலைக்கான விதிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டமைக்கப்பட்டமை இக்கட்டளைச் சட்டத்தின் 31ம் சரத்தின் 1ம் உப பிரிவு இப்பகுதியானது ஏதாவதொரு தோட்டத்தில் 5 வயதுக்கு குறையாத 14 வயதுக்கு மேற்படாத பிள்ளைகளின் தொகை 27க்கு அதிகமாக இருப்பின் அந்த தோட்டத்திற்கு ஏற்புடையதாகும்.

* 31ம் சரத்தின் 1ம் பிரிவு குறிப்பிட்டவாறு அமையும் ஏதேனும் தோட்டமொன்றின் பிள்ளைகள் ஏற்கனவே இக்கல்வி கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு தாபிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் பாடசாலையொன்றில் இக்குறிப்பிட்ட பிள்ளைகள் கல்வியை பெற்றுக்கொள்ளும் வசதியைப் பெற்றிருப்பதாக பணிப்பாளர் நாயகம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியதை அடுத்து அமைச்சரால் விடுக்கப்படும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இக்கடப்பாட்டிலிருந்து குறித்த தோட்டம் விலக்களிக்கப்படும் 1947 ஆம் 26ம் இல. கட்டளைச் சட்டத்தில் அமைச்சர் என்ற பதம் ஆளுனர் என திருத்தப்பட்டது.

* 1939ம் ஆண்டு 31ம் இலக்க 40 (1)ம் சரத்து 1947 26ம் இல. கட்டளைச் சட்டம் 35 (1) யின் படி தோட்ட உரிமையாளர் தோட்ட எல்லைக்குள் பின்வருவனவற்றிற்கான ஏற்பாடுகளை செய்து தரல் வேண்டும்.

* **அ.** மூலக் கட்டளைச் சட்டத்தின் 43ம் பிரிவிலும் 26ம் இல. 1947ன் 38ம் சரத்திலும் கூறப்படும் பிள்ளைகளுக்கு கல்வி வழங்க ஏற்ற தரமுடைய கட்டடம் ஒன்று

**ஆ.** திருமணம் முடித்த தலைமையாசிரியர் தனது குடும்பத்துடன் வாழ ஒரு விடுதி மற்றும்

**இ.** மேற்குறித்த கட்டடம் அமைந்துள்ள பகுதியில் விளையாட்டு மைதானமாக ஒரு பகுதியும் பாடசாலை தோட்டமாக பயன்படுத்த ஒரு ஏக்கருக்கு குறையாத காணியும் வழங்குதல் வேண்டும்.

* மேற்குறித்த கட்டளைச் சட்டங்களின் சரத்துகள் முறையே 40(2), 35(2)யின் படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தோட்ட உரிமையாளர்கள் இணைந்து பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் மேற்குறித்த தேவையை நிறைவேற்றலாம்.

* இதே சரத்தின் 3 ஆம் உப பிரிவின்படி மேற்குறித்தவாறு செயற்படத் தவறிய தோட்ட உரிமையாளர்களுக்கு அதனை நிறைவேற்றுமாறு கட்டாயப்படுத்தும் எழுத்து மூல அறிவித்தலை பணிப்பாளர் நாயகம் வழங்குதல் வேண்டும். 1939ம் ஆண்டு கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்ட கால அவகாசம் ஓராண்டாகும். 1947ம் 26ம் இல. கட்டளைச் சட்டத்தில் இது 6 மாதமென திருத்தப்பட்டது.

* பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைகளை நிறைவேற்றத் தவறும் தோட்டத்திற்குள் பணிப்பாளர் நாயகமோ அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரோ தன்னுடைய உதவியாளர் மற்றும் வேலையாட்களுடன் சென்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள சட்டத்தால் அதிகாரமளிக்கப் படுகிறது.

* பிரிவு 4 இதன் காரணமாக அரசுக்கேற்படும் செலவுத் தொகைக்கு தோட்ட உரிமையாளர் கடனாளியாக்கப்படுவதுடன் அப்பணம் அவரிடமிருந்து அறவிட அரசு நடவடிக்கை எடுக்கும்.

* 1939இன், 31ஆம் கட்டளைச் சட்ட சரத்து 41(1)ன் படி தோட்ட உரிமையாளர் மற்றும் அச்சந்தர்ப்பத்தில் பொறுப்பாகவுள்ள அதிகாரி ஒரு பாடசாலையை அமைத்து நிருவகிப்பதற்கான இடமளித்தல் வேண்டும்.

* பிரிவு 3 மேற்கூறப்பட்ட கட்டிடங்கள் திருத்தப்பட வேண்டிய தேவையிருப்பின் அவ்வாறு திருத்த வேலைகளை செய்யுமாறு பணிப்பாளர் நாயகம் எழுத்து மூல அறிவித்தலை விடுக்கலாம். அவ்வாறு அறிவித்தல் விடுக்கப்பட்டு இரு மாத கால எல்லைக்குள் அதற்கான உரிய நடவடிக்கை தோட்ட உரிமையாளரால் மேற்கோள்ளப் படாவிட்டால் அத்திருத்தத்தை செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்செலவை தோட்ட உரிமையாளருக்கு செலுத்தப்படும் வாடகை பணத்தில் இருந்து அரசு கழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்.

* பாடசாலைக் கட்டடம் மற்றும் அதற்குரிய காணியில் எழுத்து மூல அனுமதியின்றி கல்வித் தேவைகள் தவிர்ந்த வேறு எந்த தேவைகளுக்கும் பயன்படுத்தலாகாது.

* 1939, 31ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 43ம் சரத்தின்படி தோட்டத்தில் வசிக்கும் பெற்றார் தமது 5 வயதுக்கு மேற்பட்ட 14 வயதுக்கு குறைந்த பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். 1947ம் ஆண்டின் 26ம் இல. கட்டளைச் சட்டத்தின் 38ம் சரத்து 14 வயது என்பதை 16 வயது எனவும் 1951ம் ஆண்டின் 5 இல. சட்டம் மீண்டும் 14 ஆகவும் திருத்தி உள்ளது.

* 1939, 31ம் இலக்கச் சட்த்தின் 45(1) படி அதன் 43வது விதியை மீறல் (1947 26ம் இல. 40 (1) ) தண்டனைக்குரிய குற்றமாகும். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத்தவறும் பெற்றார் நீதவான் நீதிமன்றில் தொடரப்படும் வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டால் தனது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமைக்காக ஒரு ரூபாய்க்கு மேற்படாத தண்டனையும் பாடசாலைக்கு அனுப்பாத நாளொன்றுக்கு 50 சதப்படியும் அபராதம் விதிக்கலாம்.

* 1939 31ம் இலக்க கட்டளைச் சட்டம் 45 (2), இச் சட்டத்தின் 41(1), 42, 44, என்பனவற்றிற்கு முரணாக தோட்ட உரிமையாளர் செயற்படுமிடத்து அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்கில் குற்றவாளியாக காணப்பட்டால் அவருக்கு 100 ரூபாவிற்கு மேற்படாத தண்டப்பணமோ அன்றி 3 மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ விதிக்கப்படலாம்.

* இச் சட்டத்தின் 40 (3)க்கு முரணாக தோட்ட உரிமையாளர் செயற்படுமிடத்து அவருக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டால் அவருக்கு 500 ரூபாவிற்கு மேற்படாத தொகையும் தவறிழைத்த தினம் முதல் நாளொன்றிற்கு ரூ 50/ படி அபராதம் விதிக்கப்படலாம்.

மேலும் 1951ம் ஆண்டின் 5ம் இல. கட்டளைச் சட்டம் பெருந்தோட்டப் பிள்ளைகளது கல்வி வழங்குதலோடு தொடர்புடைய சட்ட ஏற்பாடுகளை அமுல்படுத்த தவறும் தோட்டத் துரைமார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

* **1947ம் ஆண்டின் 26ம் இலக்க சட்டம் பிரிவு 35 (3)**
1951ம் ஆண்டு 5ம்இலக்க சட்டப்பிரகாரம் திருத்தப்படுகிறது. இதன்படி 6 மாதங்கள் எனப்படுவது 12 மாதங்கள் என கொள்ளப் பட வேண்டும்.

1951ம் ஆண்டு 5ம் இலக்க திருத்தச் சட்டம் 14ம் சரத்து பின்வருமாறு கூறுகிறது:

**அ)** பாடசாலைக்கு வரக்கூடிய ஒவ்வொரு மாணவருக்கும் 10 சதுர அடி இட வசதியுடைய பாடசாலை கட்டடம் வழங்கப் படல் வேண்டும்.

**ஆ)** கட்டடம் காற்றோட்டமுள்ள, போதிய வெளிச்சமுள்ளதாக இருத்தல் வேண்டும்.

**இ)** காற்று, மழை ஆகியவற்றின் பாதிப்பு களிலிருந்து பாதுகாப்பான இடமாக அமைதல் வேண்டும்.

**ஈ)** ஆசிரியரின் விடுதியை தவிர வேறு எந்த கட்டடத்துடனும் இணைந்ததாகவோ அல்லது வேறு கட்டடத்தின் பகுதியாகவோ அமைதலாகாது.

பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசுடமை யாக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த சட்டத்தின் விதிகள் பல பொருத்தமற்றவையாகிவிட்டன. ஆயினும், தோட்ட எல்லைக்குள் பாடசாலைகள் அமைந்துள்ளமையாலும் இன்னும் சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துரைமார் காலனித்துவ ஆட்சியாளர்களைப் போல் கருமமாற்ற முன்வருவதால் தோட்டப் பகுதிக்குள் கல்வித்துறை அதிகாரிகள் பிரவேசிப்பதற்கு இருக்கும் சட்டரீதியான உரித்தைக் காட்ட இச்சட்டவிதிகளை இன்றும் பயன்படுத்தலாம்.

**1.6. பெருந்தோட்டப் பாடசாலைகள் அவதானிக்கப் பட்ட பிரச்சினைகளும் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுப் பிரேரணைகளும்.**

1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கைப் பாராளுமன்ற சட்டப்படி தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு 2008 ஆம் ஆண்டு முன்வைத்த பொதுக்கல்வி மீதான சட்டம் ஒன்றை தயாரிப்பதற்கான தனது வரைபில் தோட்டத்துப் பிள்ளைகள் (Estate Children) என்ற தலைப்பில் தமது முன்வைப்புக்களை பிரசுரித்துள்ளனர்.

1.6.1. எழுவினாக்கள் *(Issues)*

அ) பிள்ளைகளது வசிப்பிடங்களுக்கு அருகாமையில் பாடசாலைகள் அமையாமை, வறுமை போன்ற காரணங்களால் பாடசாலை கல்வியை ஆரம்பிக்காதிருத்தல்

ஆ) இடைவிலகல் உயர் மட்டத்தில் இருத்தல்.

இ) உட்கட்டமைவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மந்தகதி.

ஈ) ஆசிரியர் பற்றாக்குறை (அளவுரீதியிலானதும் கட்டமைவு ரீதியிலானதும்)

1.6.2. தீர்வு யோசனைகள்

அ) தேவைப்படுமிடங்களில் புதிய பாடசாலைகளை ஆரம்பித்தல்.

ஆ) பெருந்தோட்டப் பாடசாலை அபிவிருத்திக் கென விசேட நிதியம் ஒன்றை ஆரம்பித்தல்

இ) தொடர்ச்சியாக பெற்றார்களுக்காக அறிவூட்டல் செயலமர்வுகளை நடாத்துதல்.

ஈ) இன்னும் அபிவிருத்தி செய்யப் படாதுள்ள 270 தோட்டப் பாடசாலைகளை விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் துரிதமாக அபிவிருத்தி செய்தல்.

உ) பெருந்தொட்டப் பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்கும் பொருட்டு தேவையான எண்ணிக்கை ஆட்சேர்ப்பு செய்து விரைவாக அவர்களுக்கான பயிற்சி வழங்கப்படல் வேண்டும்.

ஊ) தேவையான அளவு மேற்பார்வை, கண் காணிப்பு, ஆலோசனை சேவைகள் செய்யக்கூடிய ஆளணியினரை நியமித்தல்

1.6.3. பேராசிரியர் தை தனராஜ் எழுதியுள்ள ஒடுக்கப்பட்டோர் கல்வி எனும் நூலில் மலையக கல்வி மேம்பாட்டிற்காக பின்வரும் யோசனைகளை முன்வைத்துள்ளார்:

அ) மலையக கல்விக்கான ஒரு தூரதரிசனம்.

ஆ) மலையக கல்விக்கான ஒரு பாரிய திட்டம்.

இ) மலையக கல்விச் செயலகம்.

ஈ) மலையக கல்வி மகாநாடு

உ) வரலாற்றுக் காரணங்களால் ஏனைய சமூகத்திற்கு கிட்டிய வாய்ப்புகள் கிடைக் காமல் போனதால் ஏற்பட்ட இடைவெளியை சீர்செய்ய நேர்மறை நடவடிக்கைகள் பல எடுக்கப் படல் வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

**1.7. கண்டறிதல்கள்**

ஆய்வின் நோக்கம் கருதி பாடசாலையின் அமைவிடங்கள், சுவீகரிக்கப்படு முன்னர் இருந்த கட்டடங்கள் 10 பார்வையிடப்பட்டன. அக்காலத்தில் பணியாற்றிய பாடசாலை அதிபர்கள் 5 பேரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. சுவீகரிப்பிற்கு முன்னர் தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்ற 4 பேரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய மாகாணத்தில் ஒரு பாடசாலையும் ஊவா மாகாணத்தில் ஒரு பாடசாலையும் இச்சட்டங்களில் கூறப்பட்டவாறு கட்டிட நிர்மாணம் இடம்பெற்று கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் காணியுடன் செயற்பட்டு வந்துள்ளது. மற்றைய எட்டு பாடசாலைகளும் தேயிலை பயிரிட முடியாத இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாடசாலைக்கு பொருத்தமில்லா இடங்களில் அமைக்கப்பட்டவைகளாகும். "புல்லுக்கானு", "வரக்கட்டு" (ஈரலிப்பு தன்மையுடைய தரையில் படரும் புற்கள் உள்ள இடம் - புல்லுக்கானு. சரிவான இடம் வரக்கட்டு) கட்டடம் சம்பந்தமான நியமங்கள் அதிகம் கவனத்தில் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. கட்டடங்கள் கருங்கற்களால் கட்டப்பட்ட அரைச்சுவர் கட்டடங்கள். சில இடங்களில் தடிகளை கட்டி கழி மண்ணால் மறைக்கப்பட்ட சுவர்கள் (வரிச்சி சுவர்) கொண்ட பாடசாலையே அமைக்கப்பட்டிருந்திருக்கின்றன. மழை, வெயில், பலத்த காற்று காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படாதிருக்க ஆரம்ப காலத்தில் சிறிய பலகைகளைக் கொண்டு "கிராதி" அடிக்கப்பட்டிருந்துள்ளது. அவை காலத்திற்கு காலம் சில விசமிகளால் உடைக்கப்பட்டபோதும், பழுதடைந்தபோதும் அவை திருத்தப்படவில்லை. பதுளை மாவட்டத்தில் அமைந்திருந்த ஒரு பாடசாலை கட்டிடம் வட்டவடிவிலானது. அதன் அமைப்பு எந்தவகையிலும் பாடசாலைக்கு பொருத்தமானதாக அமையவில்லை. தற்போது அக்கட்டிடம் பயன்படுத்தப்படுவதில்லை. நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டுவந்த அந்த கட்டிடத்தின் ஒரு பகுதி பாடசாலை நடைபெறும்போது கொழுந்து நிறுப்பதற்கும், "கொழுந்து சாக்கு"கள் வைத்திருப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன. பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட கட்டிடமானது தலைமையாசிரியர் விடுதியை தவிர்ந்த வேறு தேவைகளுக்கான கட்டடங்களுடன் இணைந்ததாக அமையலாகாது என்ற சட்ட ஏற்பாடுகளுக்கு இது முரணானது.

விபரங்கள் திரட்டப்பட்ட 10 பாடசாலைகளில் ஒரு பாடசாலை தவிர மற்றய அனைத்துப் பாடசாலைகளும் தரையில் சீமெந்து போடப்படாத மண் தரையாகும். மாணவர்கள் தினமும் தண்ணீர் தெளித்து கூட்டவேண்டும் அல்லது வாரத்திற்கு ஒரு தடவை வீட்டிலிருந்து வந்து சாணமிட்டு மெழுகவேண்டும். இது நடைமுறையிலிருந்திருக்கின்றன. மாணவர் களுக்கு "வாங்குகளும் பெஞ்சுகளும்" வழங்கப்பட்டுள்ளன. பற்றாக்குறை இருக்கு மிடத்து மாணவர்கள் தரையில் "சம்மனங்கோலி போட்டு" உட்காரச் செய்யப்பட்டு கற்பித்தல் இடம்பெற்றுள்ளது. (பெருந்தோட்டப் பகுதியில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்)

இரண்டாவது ஆய்வு நோக்கத்திற்காக தலைமை ஆசிரியர்கள் கல்வி கற்ற மாணவர்களிடம் திரட்டப்பட்ட பண்புசார் தரவுகளின்படி சகலருமே இப்பாடசாலைகளுக்கு அறிவியல் ரீதியிலான கலைத்திட்டம் ஒன்றோ, பாட உள்ளடக்கமோ, கற்பித்தல் முறையோ, பொதுவான பாட நூல்களோ கிடையாது. ஆசிரியருக்குத் தெரிந்த நாட்டார் பாடல்கள், இராமாயணக் கதைகள், பாரதக் கதைகள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், திருக்குறள் என்பன போதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களால் பாடசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட உமா வாசகம், பாலபோதினி ஆகிய சிறுவர்களுக்கான நூல்கள் கற்றல்-கற்பித்தல் செயன்முறைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு பாடசாலையில் ஆசிரியரால் மிகவும் விருப்பத்துடன் சகல வகுப்பு மாணவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடல் ஒன்று இங்கு தரப்படுகிறது. மாணவ, மாணவியர் வரிசையாக நிறுத்தப்பட்டு ஒருவர் தோளில் மற்றவர் கைவைத்து ஆண் பிள்ளைகள் "அக்கா வெளக்கெண்ண அக்கா விளக்கெண்ண" பெண் பிள்ளைகள் "கொண்டு வா தம்பி கொண்டு வா" என்ற வரிகளை திரும்ப திரும்ப படிக்கச் செய்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவர் (வெளக்கெண்ண - விளக்கெண்ணை).

இந்த ஆய்வின் மூன்றாவது நோக்கம் எந்தளவிற்கு இந்த பாடசாலைகள் மாணவர் நேய பாடசாலைக்குரிய பண்புகளை கொண்டிருந்தது? எந்தளவிற்கு பிள்ளைகள் விரும்பி போகும் இடமாக இருந்திருக்கின்ற தென்பதாகும். ஆய்விற்குட்பட்ட எந்தவொரு பாடசாலையிலும் மலசலகூட வசதி, குடிநீர் வசதி இருந்திருக்கவில்லை. மாணவர்களை பலவந்தமாக பாடசாலைக்கு "விரட்டிச்செல்ல"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட நிர்வாகத்தால் தோட்டத்திற்கு ஒருவர் சம்பளத்திற்கு நியமிக்கப்பட்டு செயற்பட்டுள்ளார்.

சில பாடசாலையின் ஆசிரியர்கள் நன்றாக கல்வி பயிலும் மாணவர்களை மாத்திரம் உற்சாகப்படுத்தி செயற்பட்டுள்ளனர். 5ம் தரத்திற்குப் பிறகு நகரப் பாடசாலையில் அனுமதி பெற்றுக்கொடுக்கும் வரை அவர்களது சேவை நீடித்திருந்திருக்கின்றமை மாணவர்களை நேர்கண்டபோது அறிய முடிந்தது. ஆயினும், சிறுவர் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட இடமாகவும் தோட்டப் பாடசாலைகள் இருந்துள்ளன. குறிப்பாக நான்காம், ஐந்தாம் வகுப்பில் படித்த மாணவர்கள் "வாத்தியார் அய்யா" அல்லது "வாத்தியார் அம்மா" வீட்டிற்கு "மிளார் பொறுக்குதல்", "போஞ்சிக்கு வரிச்சு வெட்டுதல்", "தோட்டத்திற்கு தண்ணீர் போடுதல்", "வீட்டிற்கு தண்ணீர் தூக்குதல்"(பெருந்தோட்டப் பகுதியில் மேற் கொள்ளப்படும் வேலைகள் சில பிரதேச மொழி வழக்கிலேயே தரப்படுகிறது). பதுளைப் பிரதேசத்தில் பணிபுரிந்த பிற மாவட்ட தலைமை ஆசிரியர் ஒருவர் ஒவ்வொரு சனிக்கிழமை யன்றும் மாணவர்களை வரச்சொல்லி அவரது விடுதியிலிருந்து ஏறக்குறைய 2 மைல்களுக்கு அப்பாலுள்ள பதுளை ஓயாவிற்கு கூட்டிச் சென்று தனது தலையிலும் உடம்பிலும் எண்ணெய் பூசி கல்லொன்றில் அமர்ந்திருக்க மாணவர்கள் வாளி ஒன்றில் தண்ணீர் அள்ளி அவரை குளிப்பாட்டி கூட்டிவரும் செயற்பாடு தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது (சனி நீராடு).

## 1.8. முடிவுரை

பெருந்தோட்ட பிள்ளைகளுக்கு வரலாற்று ரீதியாக இடம்பெற்ற அநீதிகளுக்கான பிராயச்சித்தம் தேடவேண்டிய நிலை இந்த நாட்டை ஆட்சிசெய்யும் பிரிவினருக்கும் அவர்களுக்கு அரசியல் ரீதியாக வாக்குகளை பெற்றுக்கொடுத்து அனுசரணை புரிபவர்களுக்கும் உண்டு. தமது குடும்ப பிரச்சனைகளையும் சொந்த பிரச்சனைகளையும் தீர்க்க உதவிய ஆசிரியர் தொழிலை செய்யும் பகுதியினருக்கும் பிள்ளைகளை இவ்வுலகிற்கு ஈன்றெடுத்த பெற்றார்களும் தம் பிள்ளைகளது கல்வியில் தமது வருவாயில் ஒரு பகுதியை முதலீடு செய்து எதிர்காலத்தில் ஏனைய சமூகத்திற்கு நிகரான நிலையை எய்த உதவ வேண்டப்படுகின்றனர். சமகாலத்தில் பாடசாலையில் கற்கும் மாணவர்களது பெற்றார்களுக்கு முறையான கல்வி வழங்காமை அவர்களது பிள்ளைகளுக்கு கல்வி வழங்குவதில் எவ்வளவு பாதிப்பைக் கொண்டுள்ளதென்பது ஆய்விற்குட்படுத்த வேண்டிய விடயமாகும்.

### உசாத்துணை நூல்கள்:

Nadesan, S. - A History of the Up-Country Tamil People in Sri lanka, 1993.

தை. தனராஜ் - ஒடுக்கப்பட்டோர் கல்வி - 2008

Legal Enactments on Geneal Education in Sri Lanka - 2008

National Policy Framework on General Education in Sri Lanka - 2008 NIE Press

## அன்னை

**உலகத்தவர் வகிக்கும் அந்தஸ்துகளுள் தாய் ஒருத்தியின் அந்தஸ்தே தலை சிறந்தது. சுயநலப் பற்றற்ற நிலையில் தாய் ஒருத்தி இருக்கின்றாள். சுய நலத்தை நீக்க வேண்டும் என்ற கோட்பாட்டைத் தாய் ஒருத்தியிடமிருந்தே மற்றவர்கள் கற்றுக்கொள்ள முடியும். கடவுளின் அன்பிற்கு அடுத்த படியில் இருக்கிறது தாயின் அன்பு. ஆதலால் தாயின் அன்புமூலமே கடவுள் அன்பை நாம் ஓரளவு அறிந்து கொள்ளமுடியும் ஏனைய அன்புகளெல்லாம் தாயின் அன்பிற்கு நிகராகாது.**

*– சித்ருபானந்தா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கியக் காவலராகத் திகழ்ந்தவர் துரை விஸ்வநாதன்

## (துரைவி)

28.02.1931 இல் தமிழகத்தின் துறையூரில் பிறந்த துரை விஸ்வநாதன் அவர்கள் தனது பதினைந்து வயதில் தொழில்தேடி இலங்கை வந்தார். மலையகம் அவரை வரவேற்று உள்வாங்கிக் கொண்டது.

நுவரெலியா, கண்டி, மாத்தளை என்று வர்த்தக ஸ்தாபனங்களில் ஊழியனாகச் சேர்ந்து மனேஜராக உயர்ந்தவர். நேர்மை, உழைப்பு என்னும் மந்திரங்களே அவரை உயர்த்தின.

1945 ல் தொழில்தேடி இலங்கை வந்தவர் 1966 இல் மாத்தளையில் ராணி கிரைண்டிங் மில்ஸ் என்னும் அரைக்கும் ஆலையைத் தொடங்கி ஒரு வர்த்தகர் ஆகின்றார். எழுபதுகளில் கொழும்பில் விஜயா ஜெனரல் ஸ்டோர்ஸ் என்னும் வர்த்தக நிலையத்தை ஆரம்பித்தார்.

புத்தகங்கள் வாசித்தல், வாசிப்பதற்காக அவைகளைப் பணம் கொடுத்து வாங்குதல் என்பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருந்தவர். எழுத்தாளர்களுடன் பழக்கம் மிகக்கொண்டார். ஈழத்தின் குறிப்பாகக் கொழும்பின் எல்லா வெளியீட்டு விழாக்களுக்கும் அழைப்பின்றி செல்வதையும் நூலாசிரியரிடமே பணம் கொடுத்து புத்தகம் வாங்குவதையும் ஒரு கடமையாகக் கொண்டியங்கினார். துரைவி என்னும் பதிப்பகத்தை 1996 இல் உருவாக்கி மலையக நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டார்.

அப்படி இவர் வெளியிட்ட முதல் நூல் 'மலையகச் சிறுகதைகள்' 1997 பெப்ரவரியில் வெளிவந்தது. மலையக இலக்கியத்துக்கான ஒரு உயிர்ப்பையும் எழுச்சியையும் ஏற்படுத்திய வல்லமை கொண்டதாக துரைவியின் நூல் வெளியீடுகள் அமைந்தன.

- 1997ல் மலையகச் சிறுகதைகள்
- உழைக்கப் பிறந்தவர்கள்
- பாலாயி - மலையகக் குறுநாவல்கள்
- மலையகம் வளர்த்த தமிழ்

என்னும் நான்கு மலையக நூல்களை வெளியிட்டு சாதனை புரிந்தார்.

அதேபோல் 1998 லும், சக்திபாலையா கவிதைகள். ஒரு வித்தியாசமான விளம்பரம். மலையக மாணிக்கங்கள், தோட்டத்துக் கதாநாயகர்கள் என்று நான்கு நூல்களை வெளியிட்டார்.

இரண்டே வருடங்களில் எட்டு மலையக நூல்களை வெளியிட்டு அனைவரையும் மலையக இலக்கியம் பற்றிப் பேசவைத்த, எழுதவைத்த பெருமை இவரைச் சார்கின்றது.

1998 செப்டம்பரில் அகில இலங்கைச் சிறுகதைப் போட்டி ஒன்றினை நடாத்தி ஒரு லட்சத்து ஓராயிரம் ரூபாய் பரிசுப் பணமாகக் கொடுத்தார். இலங்கையில் ஒரு சிறுகதைப் போட்டிக்கு இதுவரை யாரும் இவ்வளவு பெரிய தொகையைப் பரிசாகக் கொடுத்ததில்லை.

பரிசளிப்பையும் பரிசுபெற்ற கதைகளையும் நூலாக்கி வெளியிடும் நிகழ்வை டிசம்பர் 1998 இல் ஏற்பாடு செய்திருந்த நிலையில் 1998 டிசம்பர் 21 ஆம் திகதி திடீரென அமரர் ஆனார்.

தந்தையின் வழியில் பரிசளிப்பு விழாவினையும் நூல் வெளியீட்டையும் நடத்திக் காட்டிய துரைவியின் புதல்வர் ராஜ்பிரசாத் துரைவியின் வெளியீட்டுப் பணிகளையும் தொடர்கின்றார். காவலர் பணிகள் தொடர ஆலயத்தால் நல்லாசிகள் என்றுமுண்டு.

20 ஆம் நூற்றாண்டின் ஒரு இலக்கியக் காவலர் அமரர் துரை விஸ்வநாதன் அவர்கள் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிகளில் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் பங்கும் பணியும்



**திருமதி சர்மிளாதேவி துரைசிங்கம்**

ஆசிரியை - திரித்துவக் கல்லூரி, கண்டி.

"**தா**ழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்ப்பட்டு" நின்ற மலையகத் தோட்டத் தொழிலாளர் குறித்தும், அவர்தம் இலக்கியங்கள் குறித்தும் ஆய்வுகளில் ஈடுபட்டோரில் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் வகிபாகம் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரல்லர். ஆயினும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய அவரை, புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' மலையகத் தோட்டத் தொழிலாளர் மீது கரிசனை கொள்ளச் செய்தது. கரிசனை தந்த உந்துதல், மலையகத் தமிழ் இலக்கியம் குறித்துத் தேடிப் படிக்கவும் ஆய்வு செய்யவும் அவரைத் தூண்டின.

பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் ஆய்வுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. இலக்கிய ஆய்வுகள்
   - i. பண்டைய இலக்கியங்கள்
   - ii. இடைக்கால இலக்கியங்கள்
   - iii. நவீன இலக்கியங்கள்
   - iv. நாவல்கள்
   - v. சிறுகதைகள்
   - vi. ஏனையவை
2. தனிநபர் இலக்கியப் பங்களிப்புகள்
3. தமிழியல் ஆய்வு முயற்சிகள்
4. ஏனையவை

இலக்கிய ஆய்வுகளைப் பொறுத்தவரையில், பண்டைய இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் என முத்தரத்து இலக்கியங்கள் குறித்தும் பரிச்சயம் கொண்ட பேராசிரியர் அவர்கள், அவை குறித்து வரலாற்று ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் தம் பார்வையை ஆழமாகவும் அகலமாகவும் செலுத்தியுள்ளார். இதுவரை, மதுரைக்காஞ்சி, தொல்காப்பியம், காரைக்காலம்மையார், பட்டினத்தார் உட்பட எண்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைப் பேராசிரியர் எழுதியுள்ளார். இவற்றுள் பெரும்பாலானவை சஞ்சிகைகளிலும் நூல்களிலும் வெளிவந்துள்ளன. ஆய்வரங்கக் கட்டுரைகள் உட்பட பல கட்டுரைகள் அச்சுவாகனம் ஏறுவதற்குக் காத்துக் கிடக்கின்றன. பேராசிரியரின் பண்டைய, இடைக்கால, நவீன இலக்கியங்கள் குறித்த, அனைத்து ஆய்வுகளும் நூல்வடிவம் பெறும் போது, அவர்தம் ஆய்வுகளின் புதிய பரிணாமத்தைக் காணமுடியும்.

பேராசிரியரின் நவீன இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் விதந்துரைக்கத் தக்கவை. அவர்தம் ஆய்வுகளுள் கணிசமானவை நவீன இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகளே ஆகும். பேராசிரியர் நவீன இலக்கியங்கள் மீது கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டின் விளைவாக, முதுமாணிப் பட்ட ஆய்வுக்காக, "ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள்" குறித்தும், கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'தமிழில் வரலாற்று நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்' குறித்தும் ஆராய்ந்தார். இவற்றுடன், 'மலையகத் தமிழ் இலக்கியம்' நூல்வடிவம் பெறவிருக்கும், 'மலையகத் தமிழ்ச் சிறுகதைகள்' என்பனவும் நவீன இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகளாகவே விளங்குகின்றன.

தனிநபர் இலக்கியப் பங்களிப்புகள் குறித்த ஆய்வுகளில், 'பாரதியார் சிந்தனைகள்', 'விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள்' ஆகியவை கற்றோரால் காமுறப்பட்டவை. இவைதவிர, 'சாதனையாளர் சாரல்நாடன்' என்னும் தலைப்பிலும் ஆய்வு நூலொன்று வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பேராசிரியரின் ஆய்வு முயற்சிகளின் மகுடமாக விளங்குவது, 'இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்' என்னும் ஆய்வு நூலாகும். ஆய்வுகளின் ஆய்வாகத் திகழும் இவ்வாய்வு போன்றதொரு முயற்சி இதுவரையில், இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை. இவரே இம் முயற்சிக்கு முன்னோடியாய் விளங்குகின்றார்.

ஏனைய ஆய்வுகளாக, காலக் கண்ணாடி இளங்கதிர், இலங்கையின் மலையகத் தமிழர், இளந்தலைமுறையினரும் கல்வியும், பத்தாண்டுகளில் குன்றின்குரல், தமிழகத்தில் சமணம், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள் (தமிழகம்), இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகள் (ஈழம்) முதலியவை விளங்குகின்றன.

பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் அனைத்து ஆய்வுகளிலும் அவர்தம் விமர்சனப்பார்வை பளிச்சிடுகின்றபோதும், தகவம், பரிசுக்கதை இரண்டும் தொடர்பாக அந்நூலில் இறுதியில் எழுதப்பட்டுள்ள விரிவான திறனாய்வு குறிப்பிடத்தக்கதாக விளங்குகின்றது.

இதுவரைக்கும் பெரியளவும் சிறியளவுமாக ஒன்பது ஆய்வு நூல்கள் அச்சில் வெளி வந்துள்ளன. இவை தவிர, சிறுகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், நாவல்கள், ஆய்வு நூல்கள் முதலானவற்றுக்குப் பேராசிரியரால் வழங்கப்பட்ட அணிந்துரைகளும், நீண்ட முன்னுரைகளும்கூட அவரது ஆய்வுகளாகக் கொள்ளப்பட வேண்டியவையே ஆகும்.

பேராசிரியரின் ஆய்வுகளில் கணிசமானவை மலையகத் தமிழர், மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுகளே அகும். மலையக மண்ணின் மீதும் தோட்டத் தொழிலாளர் மீதும் ஈடுபாடும் கரிசனையும் கொண்ட அவர், மலையகத் தமிழர் வரலாறு குறித்தும், மலையகத்தமிழ் இலக்கியம் குறித்தும் ஆய்வு நூல்களை வெளியிட்டார். மலையகம், மலையகத் தமிழர், மலையகத் தமிழ் இலக்கியம் குறித்த, உதிரிகளான தகவல்களே காணப்பட்ட நிலையில், மிகுந்த சிரமத்தின் மத்தியில், தனியொரு



மனிதனாக நின்று அவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் போற்றுதலுக்குரியவை. இவை மலையகத்தமிழர், மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பாக அறியமுயல்வோருக்கும் அய்வு செய்வோருக்கும் வழிகாட்டியாக அமைபவை.

மலையகம் தொடர்பான ஆய்வுகளுள், பேராசிரியரின் கன்னி முயற்சியாக, 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம், 'இலங்கையின் மலையகத் தமிழர்' என்னும் நூல் வெளிவந்தது. தமிழ் மன்றத்தின் வெளியீடான இந்நூல், அறுபத்து மூன்று பக்கங்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் முகவுரையில், "மலையகத் தொழிலாளர்பால் எனது கவனத்தை முதலில் திசை திருப்பியது புதுமைப்பித்தனின் 'துன்பக்கேணி' என்னும் சிறுகதையேயாகும். அக்கதையினைக் கருத்தூன்றிப் படித்தபோது, என்னையுமறியாமலே என் கண்கள் பனித்துவிட்டன. பல வருட காலம் மலையகத் தொழிலாளர் பற்றிய சிந்தனை அடிமனதில் கருக்கொண்டிருந்தது. மலையகத் தொழிலாளர் பற்றிய ஆக்கங்கள் பலவற்றையும் அவ்வப்போது படித்து வந்தேன். அவ்வப்போது, மலையகத்தமிழ் இலக்கியம் தொடர்பாகச் சில கட்டுரைகளையும் எழுதினேன்". என்றும், "தோட்டத் தொழிலாளரின் நல்வாழ்வுக்கு வழிகோலும் திட்டங்கள் அமைப்பதற்கு ஒரு அறிமுக முயற்சியாக இந்நூல் அமையுமென நினைக்கின்றேன்" என்றும் கூறுவதிலிருந்து, பேராசிரியரை எழுதத் தூண்டிய எண்ணங்கள், அவரது நோக்கு, போக்கு என்பவற்றை அறியமுடிகிறது.

இந்நூலில், மலையகத் தமிழரின் பல்வேறுபட்ட பிரச்சினைகள், வாழ்க்கைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்கள், உரிமைப் போராட்டங்கள், தற்போது ஏற்பட்டு வரும் மாற்றங்கள், இன்றைய நிலைமைகள், கடந்த நூற்றாண்டிலே அவர்கள் தாயகத்தை விட்டுப் புறப்படுவதற்கான காரணங்கள், தமிழகத்திலே அன்றைய அவர்களது சமூக, பொருளாதார நிலைமைகள் முதலிய பலவும் வரலாற்று ரீதியாகவும் சமூக, பொருளாதாரப் பின்னணியிலும் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்வானது, பின்னர் வெளிவந்த, 'மலையகத் தமிழ் இலக்கியம்' என்னும் நூலின் முதல் இயலாக, 'மலையகத் தோட்டத் தொழிலாளர் - ஓர் அறிமுகம்' என்னும் தலைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ் மன்றத்தின் வெளியீடாக, 'மலையகத் தமிழ் இலக்கியம்' என்னும் ஆய்வுநூல் வெளிவந்தது. 287 பக்கங்களைக் கொண்ட இந்நூல், தோட்டத் தொழிலாளரின் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த கோவிந்தன், வெள்ளையன், செல்வநாயகம், சிவனுலெட்சுமணன் முதல் ஏபிரகாம் சிங்கோ வரையிலான தொழிலாளர் செம்மல்களுக்குக் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. இந்நூலில்; மலையகத் தோட்டத் தொழிலாளரது அறிமுகம், மலையகத் தமிழ் கவிதை, புதுக்கவிதை முதலான விடயங்கள் குறித்து விரிவாக நோக்கப்பட்டுள்ளது. பல்லாண்டு காலமாக முயற்சி செய்து, பல்லாயிரக்கணக்கான பக்கங்களைப் ப்டித்து, அரும்பாடுபட்டு எழுதிய இந்நூலில், பேராசிரியர் அவர்கள் தன்னை ஓர் ஆய்வாளனாக மட்டும் இனங்காட்டிக் கொள்ளாது, அதனையும் மீறி நீண்ட காலமாக தாம் வாழும் மலையக மண்ணின் மீதும், தோட்டத் தொழிலாளர் மீதும் மிகுந்த ஈடுபாடும் கரிசனையும் கொண்டு, அவர்தம் பிரச்சினைகளை இதயசுத்தியுடன் நோக்கியிருப்பதும் குறிப்பிடத் தக்கது. யார் பொருட்டு ஆய்வு செய்தாரோ அம்மக்கட் கூட்டத்தினருக்கே இந்நூல் காணிக்கையாக்கப்பட்டிருப்பதும் சிறப்புக்குரியது. மேலும், இந்நூலின் காத்திரம் கருதி, 'மத்திய மாகாணச் சாகித்திய மண்டலப் பரிசு' வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியரின் ஆய்வுப்பணிகளுக்கு மகுடம் சூட்டுவதாக, 1997 ஆம் ஆண்டு. 'இலங்கை தமிழியல் ஆய்வு முயற்சிகள்' வெளிவந்தது. குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடான இவ்வாய்வு நூல் 475 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. தமிழியல் பற்றிய ஆய்வுகளை வரலாற்று விவரண ஆய்வு முனையினூடாகத் துறைகளின் அடிப்படையிலும் ஒழுங்கமைத்துத் தருவதுடன் தேவையானவிடத்து விமர்சனப்பாங்கிலும் நோக்கப்பட்டிருக்கும். நன்நூலின் ஒன்பதாம் இயலை மலையகத் தமிழரியல் ஆக்கிரமித்துள்ளது. 1960 களிலிருந்து 1980 களின் முற்பகுதிவரை தமிழியல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகளின் மதிப்பீடாக அமையும் இந்நூலில், தமிழ் நாவல்கள், சிறுகதைகள், நவீன தமிழ்க் கவிதைகள், புதுக் கவிதைகள், பண்டைய கால, இடைக்காலத் தமிழ் இலக்கியங்கள், தமிழ் மரபிலக்கணமும் மொழியியலும், நாட்டார் வழக்காற்றியலும் அவைக்காற்றுக்கலைகளும், வரலாற்று நாயகர்களும் அறிஞர் பெருமக்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், மலையகத் தமிழரியல், சாசனவியலும் தொல்பொருளியலும் வரலாற்றியலும் சமூகமும் சமயமும் பண்பாடும் அரசியலும் பொருளாதாரமும் முதலான பலவும் ஆராயப்பட்டுள்ளன. தமிழியல் ஆய்வுகளைப் பற்றி ஆய்வு செய்யும் இந்நூல், பேராசிரியரின் ஏனைய ஆய்வு நூல்களிலிருந்து பொருளாலும் நோக்கும் விதத்தாலும் முற்றிலும் வேறுபட்டு விளங்குகின்றது. "காரியம் மிகப் பெரியது. எனது திறமை சிறிது" என்று பாரதியின் கூற்றை அவையடக்கமாக்கியிருக்கும் பேராசிரியரின் இந்நூலை வாசிக்கும்போது காரியமும் பெரிது. அவர்தம் திறமையும் பெரிது என்பது புலனாகின்றது. இந்நூலுக்கு வழங்கப்பட்ட தேசிய சாகித்திய மண்டலப் பரிசும், வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசும் இதனை மெய்ப்பிக்கின்றது.

மலையகத் தமிழ் இலக்கிய ஆய்வுகளுள் பேராசிரியருக்குப் புகழ் ஈட்டித்தரும் மற்றுமொரு ஆய்வு, "மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்" என்னும் ஆய்வாகும். இவ்வாய்வு நூலினூடாகச் சுமார் முப்பது மலையகத் தமிழ் நாவல்களைத் தேடிப்பெற்று, அவை தொடர்பான நீண்டதொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வை முன்வைத்துள்ளார். மலையகத் தமிழ் நாவல்களைத் தொகுத்தும் வகுத்தும் உள்ளடக்கத்தை அலசியும் ஆராய்ந்தும் கூறும் இவ்வாய்வும் மலையகத்தமிழ் இலக்கிய ஆய்வில் முன்னோடி முயற்சியே ஆகும். மலையகத் தோட்டத் தொழிலாளர் வருகையும் அதையடுத்த காலகட்டமும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் குறிப்பாக, பிரஜாவுரிமைப் பிரச்சினையும் தொழிலாளர் தாயகம் திரும்பவேண்டிய நிர்ப்பந்தமும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள், தொழிலாளர்களின் விழிப்பும் எழுச்சியும் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டமையும் தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும். தோட்டத்து அதிகாரிகளின் கொடுமைகளும் தொழிலாளர்களுக்கு எதிரான வன்செயல்களும் விளைவுகளும் 1983ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலநிலைமைகள் முதலான பல விடயங்களையும் மலையகத் தமிழ் நாவல்களை ஆதாரமாகக் கொண்டு ஆராயும் இந்நூல், 1999 ஆம் ஆண்டு குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக 537 பக்கங்களுடன் வெளிவந்தது. மலையகத் தமிழ் நாவல்கள் தொடர்பான ஆய்வாக மட்டும் அமையாது, மலையகத் தமிழரின் வாழ்வியலையும் வரலாற்றையும் உணர்த்தும் உயிரோவியமாகவும் முழுமையான வரலாற்று ஆவணமாகவும் திகழும் இந்நூல் தோட்டத் தொழிலாளியும் தம் பாட்டாலே மலையகத்தைப் பாலித்திட நினைத்த கவிஞருமாகிய குறிஞ்சித் தென்னவனுக்குக் காணிக்கை ஆக்கப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர் வரலாறும் அவர்தம் இலக்கிய வரலாறும் எழுதப்பட வேண்டும் என்று வாய்ச் சொல்லிலே வீரம் பேசாது எழுதியும் ஆவணப்படுத்தியுள்ள பேராசிரியர் அவர்கள் இந்நூலின் ஓரிடத்தில், "இந்நூல் மலையகத் தமிழ் நாவல் பற்றிய ஓர் அறிமுகம் மட்டுமே, மலையகத் தமிழ் நாவல்கள் பற்றிய காரசாரமான திறனாய்வோ ஆழ்ந்தகன்ற ஆய்வு நூலோ அன்று" என்று அவைக்கு அடங்குகின்ற அதேவேளை, மலையகத்தின் தலையாய சக வரலாற்று ஆவணமாகத்திகழும் மலையகத் தமிழ் நாவல்கள் பற்றி விரிவானதொரு ஆய்வுநூல் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. அவ்வகையில், இந்நூலே "மலையகத்தமிழ் நாவல்களின் தகுதிப்பாடு" பற்றி முதன்முதல் அறிமுகப்படுத்தவதாக அமைகின்றது என்று கூறி அவையை அடக்கவும் செய்கின்றார். மேலும், பேராசிரியர் அவர்கள் தம் ஆய்வுப் பணிகளுக்கு அப்பால், மலையகத் தமிழ் நாவல்கள் குறித்து ஆராய முயல்வோருக்கு வழிகாட்டும் விதத்தில் ஆய்வுத்தலைப்புகள் சிலவற்றையும் தந்துள்ளார். மலையகத் தமிழ் நாவல்களை ஆதாரமாகக் கொண்டு, அதன் தோற்றமும் வளர்ச்சியும் தோட்டத் தொழிலாளரின் வாழ்வியலம்சங்கள், தொழிற் சங்கங்கள், அரசியல், பொருளாதாரம், தொழிலாளர் சமூகம், பெண் தொழிலாளர்கள், உத்திமுறைகள், மண்வாசனை, யதார்த்தப் பண்பு முதலியவற்றை விரிவாக ஆராயும் அதேவேளை, மலையகத் தமிழ் நாவல்களுடன் ஈழத்து நாவல்களையும் தமிழகத்து நாவல்களையும் ஒப்புநோக்கியும் ஆராயலாம் என்றும் கூறுகின்றனர். இவை தவிர இவ்வாய்வுகளில் மலையகத் தொழிலாளரின் வரலாறு தொடர்பாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ள நூல்களும் கட்டுரைகளும் தகுந்தவாறு பயன்படுத்தியுள்ளமையும் பாராட்டத்தக்கது. இவ்வாய்வு நூலுக்காக வழங்கப்பட்ட தேசிய சாகித்திய மண்டலப் பரிசும் மத்திய மாகாணச் சாகித்திய மண்டலப் பரிசும் இவ்வாய்வின் காத்திரத்தைப் பறைசாற்றுகின்றன.

ஓர் ஆயவாளர் இன்னுமொரு ஆய்வாளரைப் போற்றிப் புகழ்வது அரிது. அதற்குப் பண்பட்ட மனம் வேண்டும். பண்பான மனம் கொண்டவராகவும் மனிதநேயம் மிக்கவராகவும் பேராசிரியர் விளங்குகின்றார் என்பதற்கு, "சாதனையாளர் சாரல் நாடன்" என்னும் நூல் சான்று பகருகின்றது. பல்கலைக்கழகத்தைச் சாராத மலையக இலக்கிய ஆய்வாளர்களையும் படைப்பாளிகளையும் இனங்கண்டு எழுதியவர்களுள் பேராசிரியரும் குறிப்பிடத்தக்கவர்.

மேலும், பேராசிரியரால் பல்வேறு சஞ்சிகைகளிலும் நூல்களிலும் உதிரிகளாக எழுதப்பட்ட, மலையகத் தமிழ்ச் சிறுகதைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அவதானிப்புகள், மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் பெண் தொழிலாளர்கள், மலையகத் தமிழ்ச் சிறுகதைகளில் மலையகத் தொழிலாளரின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதன் வெளிப்பாடுகள், பத்தாண்டுகளில் குன்றின் குரல் முதலான கட்டுரைகளும் அவர்தம் ஆய்வுகளின் ஆழ்ந்த அகவித்த தடத்தினைக் காட்டுகின்றன. இவை தவிர, மலையகப் படைப்பாளிகளின் சிறுகதைத் தொகுப்புகள், கவிதைத் தொகுப்புகள், நாவல்கள் முதலியவற்றுக்கும் கட்டுரைத் தொகுப்புகளுக்கும் ஆய்வு நூல்களுக்கும் பேராசிரியரால் எழுதப்பட்ட அணிந்துரைகளும் நீண்ட முன்னுரைகளும் கூட அவரது ஆய்வுகளாகக் கருதப்பட வேண்டியவைகளே ஆகும். இவ்வகையில், தி. ஞானசேகரன் அவர்களின் சிறுகதைத் தொகுப்பு, மாத்தளை சோமு அவர்களின் தேசம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட நீண்ட முன்னுரைகள் குறிப்பிடத்தக்கன.

மலையகத் தமிழர், மலையகத் தமிழ் இலக்கியம் குறித்து, மேலும் பல ஆய்வுகளை அவாவி நிற்கும் இக்காலகட்டத்தில், நெஞ்சில் உறுதியோடும் நேர்மை திறத்தோடும் நினைவு நல்லதுவோடும் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின் ஆய்வுகள் போற்றுதலுக்குரியவை. எதையும் வரலாற்று ரீதியாகவும் சமூகவியல், மானிடவியல் ரீதியில் அணுகி தொகுத்தும் வகுத்தும் விளக்கியும் ஒப்பிட்டும் மதிப்பிட்டும் ஆராயும் அவர் தம் ஆய்வுத்திறன் பாராட்டத்தக்கது. ஆயினும், மலையகத்தமிழர் மீதுகொண்ட அந்த ஈடுபாடு அவரது ஆய்வுகளில் கூறியது கூறல், உணர்ச்சி மேலீடு முதலியவற்றுக்கும் இடமளித்திருக்கின்றது. எது எவ்வாறு இருப்பினும் மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வு முயற்சிகளில் பேராசிரியர் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. "மலையகத் தமிழ் இலக்கியம்" என்னும் நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையிலே, இந்நூலை எழுதிக் கொண்டிருக்கும் போது, திக்குத் தெரியாத காட்டுக்குள் நின்று தத்தளிப்பது போன்ற ஒரு உணர்வே எனக்கு ஏற்பட்டது" என்று கூறுவதும், "மலையகத் தமிழ் நாவல்கள் - ஓர் அறிமுகம்" முன்னுரையில் இந்நூலை எவ்வாறேனும் எழுதி முடிக்க வேண்டும் என்றும் கரை கடந்த ஆவலினால் கடந்த ஐந்து மாதங்களாக என்னை மறந்தேன், என் நலத்தினை மறந்தேன், குடும்பத்தையும் உற்றார் உறவினரையும் மறந்தேன். தைப்பொங்கல், புதுவருடக் கொண்டாட்டம் முதலிய யாவற்றையும் மறந்தேன். அதன் விளைவாக இந்நூலை ஒருவாறு எழுதி முடித்தேன். எனது கஷ்டங்களையும் தியாக நிலைகளையும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களது வாழ்க்கைப் போராட்டங்களுடனும் அவலங்களுடனும் தியாகங்களுடனும் ஒப்பிடுகையில் எனது கஷ்டங்கள் கால் தூசுக்குச் சமம் என்று கூறுவதும் மலையகத் தமிழர், மலையகத் தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின்போது அவர் எதிர்நோக்கிய பிரச்சினைகளையும் அதனையும் மீறி மனதில் உறுதியோடு ஆய்வுப் பணிகளில் தம்மை அர்ப்பணித்து அவற்றில் வெற்றிகண்டமையையும் புலப்படுத்துகின்றன.

நிறைவாக மலையகத் தமிழ் இலக்கியம் குறித்து அறியவும் ஆராயவும் முற்படுவோருக்குப் பல வழிகளிலும் வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் விளங்கும் பேராசிரியரின் ஆய்வுகள், மலையகத் தமிழ் இலக்கியத்திற்குப் புதுரத்தம் பாய்ச்சி, வனப்பும் வளமும் சேர்ப்பவையாக விளங்குகின்றன. அவ்வகையில் மலையகத் தமிழ் இலக்கியம் குறித்த பேராசிரியரின் ஆய்வுகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பாக மலையகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மைல் கற்களாகும்.

நன்றி - அருணம்

*அண்மையில் மறைந்த பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள் மலையகத் தமிழ் இலக்கிய ஆய்வு முயற்சிகளுக் காற்றிய பங்களிப்பினை நினைவுகூரும் வகையில் இக்கட்டுரை மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்கும் நிகழாட்டங்கள்

கலைமணி பசறையூர் க. வேலாயுதம்



மலையக மண் கிராமிய கலைகளை களஞ்சியமாகக் கொண்டுள்ளது என்பது மிகைப்படுத்தப்படாத ஒரு உண்மையாகும். அதனாற்றான் ஏழை எளிய மக்களின் வாழ்வியலில் உள்ளத்தைத் திறந்து காட்டும் வெள்ளை இலக்கியமாக இங்கு நாட்டுப்புற இலக்கியம் விதந்துரைக்கப்படுகின்றது கதைகளுமாய் கவினுர கலந்து விளங்கும் நாட்டார் இலக்கியம் நீண்டதொரு காலம் காட்டுப் பூக்களாகவே காண்பாரற்று பூத்துக் கிடந்தது. 1946 க்கு பின்னரே அறிவியல் பார்வைக்கு உட்பட்டு உலக அரங்கில் உன்னதமான ஓரிடத்தைப் பெறலாயிற்று.

பொருண்மையிலும், பெருமையிலும் மிகச்சிறந்த நாட்டுப்புற இலக்கியம் என்ற சொல் பொதுவாக கிராமத்தையே குறிக்கின்றது. நாடு புறம் என்ற சொல்தாங்கிய நாட்டுப்புற இலக்கியம் இன்று நகர்புரம் நோக்கி தனது பண்பாட்டுப் பயணத்தை ஆரம்பித்துள்ளது.

நாட்டாரியல் எனும்போது ஒரு சமூகத்தின் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கும் அம்மக்களின் உள்ளார்ந்த பண்புகளை விளங்கிக் கொள்வதற்கும் அது ஒரு ஊன்றுகோலாகவே விளங்குகின்றது. மானுடவியல், சமூகவியல், மொழியியல், உளவியல் என பரந்த பன்நோக்குக் கூறுகளைக் கொண்டுள்ள நாட்டாரியல் அவலங்களையும் ஆசைகளையும் மட்டுமல்லாது இதயத்தில் எழும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் கிராமத்துக் குறளாகவும் மிளிர்கின்றது எனக் குறிப்பிடலாம்.

விரிந்து கிடக்கும் உலகை வெளிப்படுத்திக் காட்டும் நாட்டுப்புற இலக்கியத்தை பல கூறுகளாகப் பிரிக்கலாம். நாட்டுப்புறப் பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், விளையாட்டுக்கள், நம்பிக்கைகள் என்ற வரிசையுடன் நிகழ்த்துக் கலைகளான ஆடற் கலைகளையும், அலங்காரப்படுத்திப் பார்க்க முடியும்.

பரவல் முறையினை உயிர்நாடியாகக் கொண்டுள்ள நாட்டுப்புற இலக்கியம் தான் பிறந்த மண்ணிற்கு உரமாக மாறி ஒளி வீசுபவை. நாகரிகத் தொருக்களிலும் நன்கு உலா வருபவை. பண்பாட்டு பழக்கவழக்கங்களை பாமரருக்கும் கற்றுத்தருபவை. பெருமைமிகு பேச்சு மொழி பெட்டகமாய்த் திகழ்பவை. மனித இனத்தின் விருப்பு, வெறுப்புக்களை சைகையாகவும், பேச்சாகவும், எழுத்து மொழியாகவும் எடுத்தியம்புபவை. குறிப்பாக உழைப்புக்கு இலக்கணமாய் விளங்கும் சாதாரண மக்கள் சதா ரணம் கொண்டு நாளெல்லாம் உழைத்த களைப்பைப் போக்கி மனக்குவிப்பில் மகிழ்ச்சியில் ஆடியும் பாடியும், அரங்கமாக கூடியும், குழு மனப்பான்மை குரலாக எதிரொலிக்கவும் செய்பவவை. உள்ளங்களில் இனிய, எளிய முறைகளில் நல்லறிவைச் சேர்க்கும் நாட்டுப்புற இலக்கியமானது பாரம்பரியமும், பண்பாடும் சேர்ந்து மனிதனின் வாழ்நாட்களில் நடக்கும் யதார்த்த கூறுகளை வெளிப்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாட்டுடனான பண்பாட்டுக்கூறு எனலாம்.

இத்துணை சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் நாட்டுப்புற இலக்கியத்தில் நயமுற அமைந்துநடன கலைகள்பரந்துபட்ட விடயங்களை நம்மிடையே பகிர்ந்து கொள்ளுகின்றன என்றே கூறவேண்டும். அத்தகைய நடனங்களான ஆடற் கலைகள் செலுத்தும் செல்வாக்கினை ஆராய்ந்தறிந்து பார்ப்பது பொருத்தமானதொரு சூழலுக்கு நம்மை இட்டுச்செல்லுமென நினைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுப்புற ஆடல்கள்:

மனிதனது உணர்ச்சி உந்தல்கள், ஆடல்கள் மூலமாகவே வெளிப்பட்டு வந்துள்ளன. காலப்போக்கில் அவை பல்வேறு சீர்மைகளுடன் திருத்தங்களைச் தேடிச் சென்று தொடக்ககாலப் பண்புகளை வெளிப்படுத்தி வரலாயிற்று. ஆயிரம் "ஏடுகளும் பலநூறு மேடைகளும் செய்ய முடியாத சாதனையை பழம்பெரும் கலைகள் கிராம மக்களிடையே ஆற்றியுள்ளது" என்று ஒரு காலத்தில் தமிழகத்தின் தாமரை இதழ் தலையங்கம் தீட்டியிருந்தது. உண்மையில் மாறுபட்ட சூழ்நிலைகளின் காரணமாக ஆடலின் தோற்றம், இசையமைப்பு, ஓசை நயம் ஆகியவற்றில் பல வேறுபாடுகள் நிலைக்க அடிப்படையில் உள்ளார்ந்த ஒருமைப்பாட்டுடன் காணப்படும் ஆடற் கலைகள் கோவில் திருவிழாக்களிலும் முக்கிய கலாசாரப் பண்பாட்டு நிகழ்வுகளிலும் இடம்பெற்று வருகின்றன. சீர்மையும், சிறப்பும் கொண்ட கலைகளான நாட்டுப்புற கலை களுக்கும் அதன் கலைஞர்களுக்கும் இன்று சரியான அங்கீகாரமும் பூரண ஒத்துழைப்பும் கிடைக்காமையினால் அக்கலையின் வளர்ச்சி குன்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற நடனங்களை தெய்வமுற்று ஆடுதல், வேடம் புனைந்து ஆடுதல் என இரண்டு பிரிவுகளுக்குள் உள்ளடக்கலாம். தெய்வமுற்று ஆடுதல், சிறு தெய்வ வழிபாட்டுடனே ஒன்றித்திருக்கின்றது என்றாலும் இக்கலையாட்டம் இன்று மங்கியே காணப்படுகின்றது. ஒரு சில இடங்களில் மாத்திரம் ஆண்டுக்கொருமுறை மாடசுவாமி ஆலயத்தில் பூஜை முடிய வேடந்தாங்கி ஆட்டத்துடன் பக்தி ஊர்வலமாக செல்லுகின்றபோது அச்சமூட்டும் தன்மையை அது வெளிப்படுத்தும் நிலையை அவதானிக்கலாம். அண்மைக்காலங்களில் ஹட்டன், மஸ்கெலியா பகுதிகளில் இது புனர் ஜென்மம் பெற்று வருகின்றமையும் குறிப்பிடதக்கது.

## வேடம் புனைந்து ஆடும் ஆடல்கள்
## தப்பு இசை:

மலையகத்தில் தப்பு இசை முக்கிய இசைகருவியாக தொன்றுதொட்டு விளங்கி வருகின்றது. தப்பு என்று கூறப்படும் பறை முரசு ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலிலான ஒரு வகை மேளமாகும். பறை என்ற சொல் பேச்சைக்குறிப்பதாகும். பேசு எனப்பொருள்படும் அறை என்ற சொல்லினின்று பறை தோன்றியது. பேசுவதை இசைக்கவல்ல தாளக்கருவி பறை எனப்பட்டது.

பன்னெடுங்கால வரலாற்றை தன்னகத்தே கொண்டுள்ள இக்கருவி தொல்குடி சமூகத்தின் சொத்தாகவும் தோலிசை கருவிகளின் தாயாகவும், தமிழ் இனத்தின் தொன்மையான அடையாளமாகவும் விளங்கி வருகின்றது. கற்காலத்தின், முதல் தகவல் தொடர்பு சாதனமான இக்கருவி தமிழர் வாழ்வியலின் முகமாகவும் தொல்குடி தமிழர்களின் நில அமைப்புக்களுடன் தொடர்பு கொண்ட சாதனமாகவும் விளங்கி வருகின்றது. மலையக மக்களின் ஜீவனான இந்த தப்பு இசை காமன் கூத்து திருவிழாவிலும், ஆடித்திருவிழாவிலும், அம்மன் திருவிழாவிலும் ஓசை எழுப்பும் ஒப்பற்ற ஒலியாக இன்னும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

## பேன்ட் வாத்தியம்:

யாழிசைப்போல் இனிமைதரும் ஏழிசை அன்னை தமிழுக்கு வானிசையாய் வாழ்த்துப்பாடி பல்வேறு நடனங்கள் இடம்பெறுகின்றன. அதற்காக பல இசைக்கருவிகளும் பாவிக்கப்படுகின்றன. நாட்டுப்புற கலைகளில் மிருதங்கம் கடம், கஞ்சிரா, தவில், தாடப்பலகை உருமி உடுக்கு தப்பு போன்ற பல கருவிகள் இசைக்கப் படுகின்றன. கடம், கஞ்சிரா போன்றவை கர்நாடக இசைக்கே அதிகம் உபயோகிக்கப் படுகின்றது. மலையகத்தைப் பொருத்தளவில் இன்று எல்லா நடனங்களையும் "பேன்சட்" எனப் பேசப்படும் பேன்ட் வாத்தியமே கட்டுபடுத்துகிறது. இசை நாகரீகத்திற்கு அடையாளமில்லாத ஆங்கிலபாணி உடையணிந்து பொழுதுபோக்கு நிகழ்வாக புகுந்து கொள்ளும் பேன்ட் வாத்தியம் சர்ச்சைக்குரிய சங்கதிகளையும் ஏற்படுத்தத் தவறுவதில்லை. தற்போது மேளமும் இதனோடு சேர்ந்து பாவிக்கப்படுவது காணத்தக்கது.

## கரகாட்டம்:

கரகாட்டம் தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்றாகும். சங்க இலக்கியத்தில் கரகாட்டம், குடக்கூத்து என்று குறிப்பிடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. கரகம் என்பது ஒரு பானை வடிவ கமண்டலத்தைக் குறிக்கும். பல விதங்களில் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலையில் வைத்தபடி சமநிலைபேணி கரகாட்டம் ஆடப் படும்.

கரகாட்டம் பக்தி கலந்து கோவில்களில் ஆடப்படும், குறிப்பாக அம்மன் ஆலயங்களில் கரகம் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது. கரக ஊர்வலத்துடன் மஞ்சள் நீராட்டமும் கலந்து வருவது மலையகத்தில் இன்று வரையும் பேணப்படும் ஒரு தெய்வீக கலையம்சமாகும். கோவில் கரகத்தை ஆட்டக்கரகம் என்பர். பொது மக்கள் முன்னிலையில், பொது நிகழ்வுகளில் ஆடப்படுவதை சக்திக் கரகம் என்பர். மத்தளம், சல்லரி என்பனவும் இதற்கு முக்கிய இசைகருவியாகவும் எதுகை, மோனை கலந்த பாடல்கள் இதற்கு துணையூட்டுவனவாகவும் அமைகின்றன.

**கரடியாட்டம்:**

கருமை அல்லது மஞ்சள் சாயல் நிறைந்த முடிப்போர்வை அணிந்து கரடிபோன்று முகமூடி அணிந்து ஆடுவது கரடியாட்டமாகும். முகமூடியில் கோரமான பற்கள் காணப்படுவதால் பார்க்க அச்சமாக இருக்கும். இதன் மந்தமான ஆட்டத்தை சிறு குழந்தைகள் ரசிப்பர். பெரும்பாலும் கோவில் திருவிழா மற்றும் பெரஹெர ஊர்வலங்களில் இன்னும் இதனைக் கண்டு ரசிக்கலாம்.

**பொய்கால் குதிரையாட்டம்:**

தாளத்துக்கு தக்கபடி குதிரையை ஆடச்செய்யும் இவ்வாட்டக்காரர் பெரும்பாலும் ஆண்களாகவே இருப்பர். காட்போட் மட்டை களால் குதிரை ஒன்றினை அமைத்து நடுவில் இடைவெளி வைத்தவாறு மெதுவாக ஆடுவர். இவ்வாட்டத்தை தனியாகவும் குழுவாகவும் மேற்கொள்வர். இவ்வாட்டத்திற்கு அதிகமான இடைவெளி தேவைப்படும்.

**மயிலாட்டம்:**

தமிழர் நாட்டார் ஆடற் கலைகளில் ஒன்றான மயிலாட்டம் மயிலின் தோகையை குடையுடன் சேர்த்து ஒடுக்கியும் விரித்தும் ஆடக்கூடியவாறும் உடை செய்யப்பட்டிருக்கும். பெண் சிறார்களே மயிலின் ஆட்டத்தை அல்லது அசைவுகளை ஒத்த ஆட்டத்தை ஆடுவர். இன்று சகோதர மொழி பேசுபவர்களும் இவ் ஆட்டத்தை விரும்பி ஆடுவதை காணக்கிடைக்கிறது.

**அனுமனாட்டம்:**

குரங்கு போன்ற முகமூடியுடன் மயிர் வளர்ந்துள்ளது போன்ற ஆடைகளுடன் அனுமனாட்டம் ஆடுவர். இன்று கூடுதலாக நிறச்சட்டை அணிந்து ஆடுகின்றனர். கையில் கஜாயுதம் போன்ற கருவியையும் வைத்துக் கொண்டு மகிழ்வுபடுத்தி சிரிப்பூட்டுவர் திருவிழா ஊர்வலங்களில் அனுமனாட்டத்தைப் பார்க்க முடியும்.

**கோலாட்டம்:**

கோலாட்டம் என்பது இரண்டு கழிகள் அல்லது குச்சிகளைக் கையில் பிடித்து 10 அல்லது 12 பேர் வட்டமாக நின்று பாட்டுக்குத் தக்கவாறு கழிகளை ஒன்றோடு ஒன்று அடித்து ஆடிவரும் அழகுக் கலை ஆட்டமாகும். இக்கழிகள் பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்டதாக இருக்கும். தொன்றுதொட்டு கோலாட்ட நிகழ்வு தமிழரிடையே இடம்பெற்று வருகின்றது. கோலாட்டத்தை வட இந்தியாவில் தாண்டியா என அழைப்பர் ஆரம்பகாலத்தில் திருமணமாகாத இளைஞர்களே கோலாட்டமடிப்பர். இன்று பெண்களும் பெரும்பான்மையாக கலந்து கொள்கின்றனர். இதை பயிற்றுவிற்பவரை கோலாட்ட மாஸ்டர் என்பர்.கோலாட்டம் ஆடித்திருவிழா உள்ளிட்ட பல நிகழ்வுகளில் முன்னிலைப்படுத்தப்படுகிறது அதே வேளை சில இடங்களில் மரபுரீதியான அடிப்படையில் இருந்து அகன்று பல பிரதேசங்களில் நாகரீகம் தழுவிய கோலாட்டம் நடாத்தப்படுகிறது. இவர்கள் கோலாட்ட பாட்டுக்கு பதிலாக பேன்சட் வாத்தியத்தை நம்பியிருப்பதும் காணத் தக்கது.

**காவடியாட்டம்:**

"காவடியாம் காவடி கந்த வேலன் காவடி" என இறைவனை நினைத்து நோன்பு நோற்று விரதம் காத்து காவடி எடுப்பது ஒருவகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடியாட்டத்திற்கு கதிர்காமத் திருவிழாவே தலைமையேற்கும் என்பது உண்மையாகும். பறவைகாவடி, பால்காவடி, பன்னீர்காவடி, புஸ்பகாவடி, சேவற்காவடி என அது பல பெயராக பிரிந்து செல்லும். மற்றையது கலைச்சிறப்புடன் ஆடுவது. காவடி கலைஞர்கள் காவடியை கைக்கொண்டு பிடிக்காமல் ஆடுவர் சிலர். உடம்பு முழுவதும் சுழலச்செய்து சாதனை காட்டுவர். கழுத்தை சுற்றி மிக வேகமாக சுழன்று ஆடும் காவடி நடனம் கலையம்சமானது. இன்றும் இது இடம்பெற்றுவருகின்றது. சிறுவர்கள் சிறுமிகள் பெண்கள் ஆண்கள் யாவருமே வயதெல்லை இன்றி காவடியாடுவர்

**சிலம்பாட்டம்:**

சிலம்பத்தை மலையகத்தில் "வஸ்தா" என பெயர் கொண்டு அழைப்பர் சிலம்பம் தமிழர்களின் ஒரு தடியடி தற்காப்புக்கலையாகும். இது தடியை கையாளும் முறையால் அசைவுகள் உடல் அசைவுகள் மூலம் தம்மை பாதுகாத்துக் கொள்வதென பல கூறுகளை கொண்ட விரிவான தற்காப்புக்கலையாகும்.

முற்காலத்தில் தமிழர் அல்லாதவர்களும் இக்கலையை பயன்படுத்தினர். சிலம்பம் பற்றி தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக சிலப்பதிகாரத்தில் குறிப்புகள் உள்ளன. ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய பலவிதமான ஆயுதங்களை பயன்படுத்தினர் (ஈட்டி, கத்தி, வாள்) அவற்றுள் மிக பழமை வாய்ந்த ஆயுதம் சிலம்பு. (நிலத்திலிருந்து ஒரு ஆளின் நெற்றி புருவம் வரையுமான உயரமுடையது) சிலம்பத்தில் பல வகையுண்டு. அவையாவன துண்டுகாண்டம், குறவஞ்சி, மறக்காணம் ஆகியனவாகும்.

தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான சிலம்பு கலையை சில சினிமா படங்களில் காண்பிக்கத் தொடங்கியதும் இளைஞர்கள் அதனை ஆர்வமாக கற்றுக் கொள்ளும் கலையாக உள்ளது. 07 வயது முதல் 25க்கு உட்பட்டவர்கள் இந்த கலையைப் பயிலவேண்டுமென்று சிலம்பு பயிற்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த வயதில்தான் சிலம்பம் பயில்வதற்கு ஏற்ற உடல் அசைவும், உடல் வாகும் இருக்குமென்று கூறப்படுகின்றது. மேலும் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நல்ல நினைவாற்றலும் தேவைப்படுகின்றது. நினைவாற்றல் உள்ளவர்களே சிறந்த சிலம்ப வீரர்களாக உருவாகமுடியும்.

பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்ட சிலம்பம் கம்புகளின் வீச்சையும் அசைவையும், கவனிக்கும் வகையில் கற்றுக்கொடுக்கப்படுகின்றது. இது மலையகத்தின் பாரம்பரிய ஒரு கலையாகும்.

**தெருக்கூத்து:**

தெரிவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து ஆகும். கதை சொல்லல், நாடகம், ஆடல் பாடல், எனப் பலதரப்பட்ட அம்சங்கள் தெருக்கூத்தில் கலந்திருக்கும். இதுவே இன்று Road Show என்ற வீதி நாடகமென கைகொள்ளப்படுகின்றது.

கதைத்கேற்ற மாதிரி ஒப்பனை உடையணிந்து தோட்டக் கோவில்கள், லயத்து முற்றங்கள் போன்ற இடங்களில் இடம்பெற்ற இக்கூத்தின் போது தப்பிசை, மிருதங்கம் (டோலக்கு) தபேலா, ஆர்மோணியம், தாளம், செஞ்சனாக்கட்டை போன்ற இசைக்கருவிகள பாவிக்கப்பட்டுள்ளன.

**வில்லுப்பாட்டு:**

வாய்மொழி இலக்கியத்தின் சிறப்பை விளக்கும் இன்னொரு கலைதான் வில்லுப் பாட்டாகும். நடந்த பல வரலாற்று நிகழ்ச்சிகளை கானம் கலந்த கதையாகவும், நகைச்சுவையாகவும் சொல்லும் வில்லிசை நாட்டுப்புற பாடலிசைப் பின்னணியைக் கொண்டதாகும்.

தமிழர் கலை வடிவங்களில் ஒன்றான வில்லிசை வில்லின் துணைகொண்டு பாடப்படுவதால் வில்லுப்பாட்டு எனப் பெயர்பெறுகிறது. இதன்போது வில்லே இங்கு முதன்மை பெறுவதோடு உடுக்கை, ஆர்மோனியம், தாளக்கட்டை, சலங்கை என்பன இதன்போது பயன்படுத்தப்படும் துணை இசைக்கருவிகளாகும்.

காப்பு விருத்தமான இறை வணக்கம் செய்தல், வருபொருள் உரைத்தலான கதையை முன்கூட்டிச்சொல்லல், குருவடி பாடுதல், அவையடக்கம், நாட்டு வளம், கதைகூறு வாழ்த்துப்பகுதியான மங்களம் பாடுதல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது வாழி பாடுதல் என்பன வில்லுபாட்டின் கட்டமைப்பாகும். இது ஒரு நாட்டுப்புற கலை என்பதுடன் மனிதன் வேட்டையாடத் தொடங்கிய காலத்திலேயே இதன் ஆரம்பம் பிறந்திருக்கலாம் என நம்பம்படுகின்றது.

**கும்மி நடனம்:**

பலர் கூடி ஆடும் ஒருவகை கூத்து, அல்லது நடனம் கும்மி நடனமாகும். பல பெண்கள் வட்டமாக சுற்றி நின்று தங்களுடைய கைகளை அடிப்பதுடன் தங்களுக்கு முன்பின் நிற்பவர்களுடைய கைகளையும், அடித்து ஒரு விதமான தாள ஒலியினை எழுப்புவர்.

கும்மி அடிக்கும் பெண்கள் இருபுறமும் சரி சமமாக நின்ற ஆடிக்கொண்டு வரும்போது இசைக்குத் தக்கவாறு கை தட்டி கால்களையும் இடுப்பையும், தலையையும் அளவுற அசைத்து குனிந்து, நிமிர்ந்து கூட்டாக ஆடுவர். இது கும்மி ஆட்டம் எனப்படும். இதனில் வயது எல்லையின்றி விரும்பிய யாரேனும் கலந்து கொள்ளலாம். மகளீருக்கான கும்மி நடனம் பல்வேறு வரலாற்றுப் பின்புலங்களைக் கொண்டிருப்பதும் குறிப்பிடதக்கது.

**நாடகம்:**

பெருந்தோட்ட பிரதேசத்தின் புதிய மறுமலர்ச்சிக்கு அடியெடுத்துக்கொடுத்த மரபும் பெருமையும் நாடகத்திற்கு உண்டு. நாடகத்திற் கிடையில் மேற் சொல்லப்பட்ட பல்வேறு நடனங்கள் ஆடல்கள் என்பன நாடகங்களால் உள்ளீர்க்கப்படுவது வழமையாகும். ஆரம்பகால நாடகங்கள் சமூக நாடகங்களிலிருந்து விலகி பக்திபூர்வ புராண நாடகங்களாக இருந்தபோது அதன் பெரும்பகுதி நாட்டுப்புற ஆடற் கலைகளை அடியொட்டி இருந்ததை அறியக் கூடியதாக இருக்கின்றது.

நாடகமென்பது ஒரு கலை அல்லது பலவகை கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாட்டு + அகம் - ஸ்ரீ நாடகம் அதாவது நாட்டு மக்களின் அகத்தைப் பிரதிபலிக்கும் கதை நாடகம் என்பதாகும். இது இயல், இசை மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவமாகும். வாய்மொழிப்பாடல்கள்நாடகத்தை அலங்கரிப்பவையாக அமையும்.

நிறைவாகக் கூறின், கலை சிறப்புடன் வேடம் புனைந்து ஆடும் ஆட்டங்கள் பெரும்பாலும் மக்களுக்கு மகிழ்ச்சியளிப்பதையே நோக்காகக் கொண்டவையாகும். பாடல் பொருளையே ஆடல் மெய்பாடுகள் புலப்படுத்துகின்றன. நாட்டுப்புற நடனங்களும் நல்ல அதன் பாடல்களும் ஆடலும், பாடலுமாய் அவையை அலங்கரிப்பதுடன் நின்று விடாமல் ஒரு சமூகத்தின் இருப்பையும், அதனோடு ஒட்டிய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் உறுதிப்படுத்துபவையாகும்.

ஒரு சமூகம் வாழ்ந்துள்ளது இல்லை வீழ்ந்துள்ளது என்பதற்கு அந்த சமூக மக்களிடையே காணப்படும் கலாசார பண்பாட்டு அம்சங்களே சாட்சியமாய் மிளிர்கின்றன. சுமார் 200 வருட வாழ்வியல் பின்புலத்தை கொண்டு விளங்கும் மலையக பெருந்தோட்ட சமூகமும், அதன்பால் அக்கறை கொண்டவர்களும் தமிழர்தம் தொன்மையை விளக்கும் சமூக அடையாளமான இக்கலைகளைப் பாதுகாக்க முன்வருவது காலத்தின் கட்டாயமாகும். அதற்குத் துணை நிற்கும் அகிலம் சஞ்சிகையும் அதன் ஆசிரியர் இராமசாமி ஐயாவும் வாழ்த்துப் பட்டியலில் முதலிடம் பிடிக்கவேண்டியவர்கள் என்பது நிஜப்படுத்தப்பட்ட நியாயமாகும்.

- இறையருளைப் பெறுவதற்கு ஆதாரம் அன்பு தான். மனதில் அன்பு ஊற்றெடுக்க வேண்டுமானால், எல்லா உயிர்களையும் நேசிப்பது ஒன்று தான் வழியாகும்.
- அன்னதானம் செய்பவர்களை கடவுளின் அம்சம் என்று சொல்ல வேண்டும். பசி புட்தியை தடுமாறச் செய்யும் பசி என்னும் தீயை அன்னட்தால் அணைக்க வேண்டும். அன்னமிடுபவர்கள் பெருங்கருணையாளர்கள் என்றால் மிகையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலே வா!



கந்தையா கணேஷமூர்த்தி

விழித்தது மலையகம்
வீதியெங்கும் வெற்றிப்பாட்டு
இரவுக்கு இனியில்லை இடம்
எங்கும் பகல்வெள்ளம்!

கண்ணாமூச்சு எம்மை
கவர்ந்திருந்தது நேற்று
இனி "கபடி"
இது மலையகத்தின் தேசிய விளையாட்டு .

பூமியின் சுழற்சியில்
சூரியக் கண்களில் நீறு பூத்திருந்தது
இமைகளை எரித்து
எம் விழிகளுக்கு நாமே
ஒளியேற்றினோம்

ஆத்மாவின் ஆழத்திலிருந்து
அக்கினிக் கணைகள் கொணர்ந்தோம்
அனுபவத்தின் சாரத்திலிருந்து
ஆண்டவனாய் அவதரித்தோம்.

நேற்றிருந்த பனிக்குளிர்
இன்றில்லை
எங்கும் உஷ்ணக் காற்று
போகிப்பண்டிகை முடித்து
பொங்கல் விழா இன்று நமக்கு!
புத்தாடைகள் புனைந்து புயலென
எழுகிறோம்!

தலையினிழிந்த எம்
வயிறுகளை சாம்பராக்கி
திருநீறால் பூசிக்கொண்டோம்

தரித்திரத்தின் வாழ்வுதனை
தன்மானத்தால் வென்ற
தரணியில் வீறு கொண்டோம்

மழையால் வழுக்கியும்
வெயிலால் கருகியும்
தேயிலையினூடு
சிகரத்தை அடைந்தோம்!

புள்ளி புள்ளியால் தெரிந்த
கனவுலகின் நட்சத்திரங்கள்
சூரியனாய் சூழ்ந்ததெம்மை
சுடர்விடத் துணிந்துவிட்டோம்

அறியாமையை வென்று
ஆக்கத்தை அடைந்தோம்
இயலாமையைக் கொன்று
இமயத்தை வென்றோம்!

எம் கண்களில் வெயிலின்று
காதுகளில் குயில்
சுவாசத்தில் சுதந்திரம்
கைகளில் எதிர்காலம்
கால்களில் இலட்சியம்

இருநூறு வருட அடைகாப்பு
இறக்கம் தந்ததுண்மை
இறுகிப்போன இறக்கைகள்
இற்றுப்போன இருக்கைகள்
பழகிப்போன வேதங்கள்
பைத்தியத்தின் மனநிலைகள்

புதுயுகத் தோழா
புதுப்பிறவி கொள்வோம் வா
புயலையடுத்து
புறப்படுவோம் எழுந்து வா!

நேற்றழிந்தது நேற்றே
இன்றுகளை வென்று
நாளைக்குள் வந்துவிட்டோம்
நம்பிக்கை கொள்

வெளிச்சத்தையும்
வீரத்தையும்
விழிகளில் ஏந்தி
வீறுநடை போடுவோம்
விரைந்து வா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விச் சமூகவியலும் மாணவர்களைச் சமூக இயல்பினர்களாக்குதலில் அதன் முக்கியத்துவமும்

**சி. மனோகரன்**
விரிவுரையாளர், கல்விமாணி கற்கை நிலையம், கண்டி.

சமூக வாழ்க்கையில் தோன்றும் நிகழ்ச்சிகளை அறிய மனிதன் மேற்கொண்ட முயற்சியின் விளைவால் தோன்றிய அறிவியற் பிரிவே 'சமூகவியல்' (Sociology) என்பதாகும். இவ் அறிவியலின் கோட்பாடுகளை அறிந்து கல்வி அமைப்பிலும் கற்பிக்கும் முறைகளிலும் அவற்றைப் பயன்படுத்துதல் இன்றைய ஆசிரியர்களின் கடமையாகக் கருதப்படுகின்றது. கல்வியானது தனிமனித வளர்ச்சி மட்டுமின்றி சமூக வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டுள்ளதென்பது இன்று இனங்காணப் பட்டுள்ளது. தனிமனித வளர்ச்சிக்கு அப்பாற் கருத்தைச் செலுத்தி மனிதர்களிடையே உள்ள சமூகத் தொடர்புகளைப் பேணுவதிலும் சமூக நலன்களைப் பேணுவதிலும் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் நகர்த்திச் செல்வதிலும் கல்வியியலாளர்கள் ஆர்வம் கொள்ளல் வேண்டும். இதனை செம்மையாக நிறைவு செய்ய சமூகவியலறிவு துணையாக அமையும்.

இன்று அறிவியற் கலைகள் பல்கிப் பெருகியுள்ளன. வெகுவாக முன்னேற்றம் கண்டு முள்ளன. எனினும் மனித சமூகத்தில் நல்லெண்ணமும் ஒத்துழைப்பு மனப் பான்மையும் போதிய அளவில் பெருகவில்லை. சகிப்புத்தன்மை என்பது சகலரிடமும் குறைந்து காணப்படுகின்றது. பல்வேறு அறிவியல் ஆராய்ச்சிகளிலும் தொழினுட்பத் துறைகளிலும் சிறப்புமிக்க சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருப்பினும் மனிதன் மகிழ்ச்சி யற்றவனாகவே வாழ்கின்றான். நோய் நொடிகளை ஒழித்து, தொலைவினைச் சுருக்கி, அணுவினைப் பிளந்து, அண்ட வெளியில் உலாவி, தனது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கியுள்ள மனிதன் தனது அயல் வீட்டாருடன் நட்பு முறையில் வாழும் பண்பினைக் கற்க மறந்துவிட்டான். இந் நிலை தொடருமாயின் இவ்வுலகில் மனித வாழ்வு அற்றுப் போகலாம் என அச்சமடைய வேண்டியுள்ளது. இத்தகைய இக்கட்டான நிலைமைகளில் இருந்து மனித சமூகத்தை மீட்டெடுக்க சமூகவியலறிவு பெரிதும் உதவும்.

சமூகத்தின் தன்மையை முதன் முதலாக ஆராய்ந்து 'சமூகவியல்' எனும் அறிவியற் பிரிவை, 19ம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த 'ஒகஸ்ட் கொம்த்' (August comte - 1798-1857) எனும் அறிஞர் தோற்றுவித்தார். இவரே ஆரம்பகால சமூகவியலின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.

- ஹெபர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer - 1820 - 1903)
- பிரெட்ரிக் லபிலே (Frederic Leplay - 1806 - 1882)
- கார்ள் மார்க்ஸ் (Karl Marx - 1818 - 1883)
- சார்ள்ஸ் டார்வின் (Charles Darwin - 1809 - 1892)
- சிக்மண்ட் ப்ராய்ட் (Sigmund Freud - 1856 - 1939)

**சமூகவியல் தோற்றத்துக்கும் விருத்திக்கும் காரணமான நிகழ்வுகள் :**

- கைத்தொழில் புரட்சி (Industrial Revolution)
- பிரான்சியப் புரட்சி (French Revolution)
- மனித உரிமைப் பிரகடனம் (Declaration of Human Rights)
- முதலாளித்துவ, சமவுடைமைப் பொருளாதாரங்களின் வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவியல் சிந்தனை வளர்ச்சி
- புத்தொளிக் கொள்கையின் வளர்ச்சி (Enlightement)
- ஐரோப்பிய மாக்ஸிசவாதத்தின் எழுச்சி. (Development of European Marxism)

**கல்விச் சமூகவியல் :**

கல்விச் செயன்முறையானது ஒரு சமூகச் செயன்முறையாகும் என்பது கல்விச்சமூகவியலின் அடிப்படைக் கருத்து ஆகும். சமூகவியலின் விதிகளையும் முறைகளையும் பயன்படுத்திப் பல்வேறு கல்விப் பிரச்சினைகளுக்கு விடை காண, கல்விச் சமூகவியல் (Educational Sociology) பயன்படுகின்றது என்பதை ஸ்மித் (Smith) எனும் சமூகவியலறிஞர் குறிப்பிடுகின்றார். கல்விச் சமூகவியலானது கல்வி நிலையங்களின் செயற்பாடுகளை சமூகக் கண்கொண்டு நோக்குகின்றது. பாடசாலையை ஒரு சமூக நிலையமாகக் கருதி அதற்கும் வேறு சமூக நிலையங்களுக்கும் உள்ள தொடர்புகளின் தன்மையை விளக்க முற்படுகின்றது. மேலும் சமூகவியலின் அடிப்படையில் கல்விப் பிரச்சினைகளுக்கு விளக்கம் கூறுகிறது. இவ் அடிப்படையில் பல்வேறு சமூகவியல் அறிஞர்கள் கல்விச் சமூகவியல் தொடர்பாகப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

* கல்வி நிலையங்களை சமூக நிலையங்களாக கருதி ஆராயும் அறிவியற் பிரிவே கல்விச் சமூகவியலாகும். - குல்ப் (Kulp)
* கல்விப் பிரச்சினைகளுக்குச் சமூகவியலின் அடிப்படையில் விளக்கம் தரும் இயலே கல்விச் சமூகவியலாகும் - பின்னே (Finney) & ஜெலினி (Zeleny)
* சமூகக் குழுக்களின் உறுப்பினனாக மனிதனினால் பெறப்படும் கல்வி பற்றியும் இத்தகைய குழுக்களில் பயன்மிக்க முறையில் வாழ்க்கை நடாத்த மனிதனுக்குத் தேவைப்படும் கல்வி பற்றியும் கல்விச் சமூகவியல் ஆராய்கின்றது - ஆல்வின் குட் (Alwin Good)
* தனிமனிதனுக்கும் அவனது பண்பாட்டுச் சூழ்நிலைக்குமிடையே (Cultural Environment) நிகழும் இடைத் தொடர்பினைக் கல்விச் சமூகவியல் ஆராய்கின்றது என சில சமூகவியல் அறிஞர்கள் குறிப்பிடு கின்றனர்
* கல்விச் சமூகவியல் (Educational Sociology) கல்வி பற்றிய சமூகவியல் (Sociology of Education) என்பன வேறுபட்டவை என்பதை சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கல்விச் சமூகவியல் (Educational Sociology) ஆசிரியர்களுக்குரியது. இதில் மாணவர்களைச் சமூகவியல்பினர்களாதல் செயன்முறை பற்றியும் இச்செயன்முறையில் ஆசிரியர்களது பங்குபற்றியும் விளக்கப் படுகின்றது. ஆனால் கல்வி பற்றிய சமூகவியல் (Sociology of Education) சமூகவியல் அறிஞர்களுக்குரியது. கல்விச் செயலை ஒரு சமூகச் செயலாகவும் பாடசாலையை ஒரு சமூக நிலையமாகவும் இது ஆராய்கின்றது. ஆனால் இவை இரண்டும் இணைந்தவை.

**கல்விச் சமூகவியல் பற்றிய முக்கிய குறிப்புக்கள்:**

* கல்வியில் சமூகவியலின் அவசியத்தை முதன் முதலில் உணர்ந்தவர் E. G. பெயின் (E. G. Payne) என்பவராகும்.
* 'கல்விச் சமூகவியல்' (Educational Sociology) எனும் சொற்றொடரை முதன்முறையாகப் பயன்படுத்தியவர் Dr. J. M. Gillett என்பவராகும்.
* முதன் முதலில் அமெரிக்காவில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் 1907 ஆம் ஆண்டு முதல் கல்விச்சமூகவியல் தனித்த ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது.
* 1917 ஆம் ஆண்டில் கல்விச் சமூகவியல் பற்றிய முதலாவது நூல் W. ரொபின்ஸன் ஸ்மித் (W.Robinson Smith) என்பவரால் எழுதப்பட்டது.
* நவீன கல்விச் சமூகவியல் தந்தையாக விளங்குபவர் துர்க்கைம் (Durkheim 1858-1917 France) ஆகும்.

**கல்விச் சமூகவியலின் நோக்கங்கள்:**

* சமூகத்தில் ஆசிரியர்களின் பங்கினைத் தெளிவாக்கி அதனை மேலும் முக்கியமானதாக உயர்த்துதல்.
* ஆசிரியர், மாணவர் இடைத் தொடர்பின் சமூக விளைவுகளை உணர்ந்து கற்றலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்க இவற்றைப் பயன்படுத்துதல். உதாரணம்

- வகுப்பறை கவின் நிலை (Class room elimate)

- இடைவினைப் பகுப்பாராய்ச்சி (Interaction Analysis)

* சமூக நிறுவனங்களின் கல்விப் பயன்களை ஆராய்தல்
* பாடசாலை அமைந்திருக்கும் சமுதாயத்தின் தேவைகளை உணர்தல்.
* பாடசாலைக்கும் பிற சமூக நிறுவனங் களுக்குமிடையே நெருங்கிய தொடர்பினை உருவாக்குதல்
* சமூகத்தில் காணப்படும் பல்வேறு போக்குகளை ஆராய்ந்து இவை தனிநபர்களையும் பாடசாலைகளையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை தெளிவாக்குதல். அதன்போது சில சமூக நிறுவனங்களின் தீய அல்லது கெடுதல் பயக்கும் செல்வாக்குகளை அகற்றுதல்.
* மாணவர்களிடையே ஜனநாயகப் பண்புகள் வளர உதவுதல்.
* கலைத்திட்டத்தினை சமூகப் பயன் மிக்கதாக மாற்றியமைத்தல், இதனூடாக சமுதாயப் பாடசாலை (Community Science)' என்பதன் வளர்ச்சிக்கு உதவுதல்.

கல்விச் சமூகவியல் பயில்வதால் ஆசிரியர்கள் பெறும் பயன்களும் அவற்றின் விளைவுகளும்.

* கல்விச் சமூகவியலானது கல்விக்குத் துணைபுரியும் சகல சமூக நிலையங்கள் பற்றியும் ஆராய்கின்றது கல்வியானது மாணவர்களின் முழு உணர்ச்சியைத் (Group Feeling) தூண்டி சமூகப் பண்புகளைத் (Social Virtues) தோற்றுவித்து மாணவர்களது வளர்ச்சியில் சமூகத்துக்குப் பெரும் பங்குண்டு எனும் உண்மையினை உணர்த்த வேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கற்பிப் போர்களாக மட்டு மன்றி சமூகத்தின் வழி காட்டிகளாகவும் செயற்பட வேண்டும். சமூக முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு அதற்காக உழைக்கவிழையும் மாணவர் சமுதாயமொன்றை அவர்கள் தோற்றுவிக்க வேண்டும். முழுமையான சமூகவியல்பு பெற்றவர்களாக மாணவர்களை உருவாக்குதலே கல்வியின் நோக்கம் என்பதை கல்விச் சமூகவியல் வலியுறுத்துகின்றது. இத்தகைய முயற்சிகளுக்கு ஆசிரியர்கள் சமூகவியல் அறிவு பெற்றவர்களாக இருத்தல் இன்றியமையாததாகும்.

* கல்வி முறையானது சமூக அமைப்பினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றது. கல்வி அமைப்பு கற்பிக்கப்படும் பாடங்கள், கற்பித்தல் முறைகள். கல்வியின் இறுதி இலக்கு என்பன சமூக அமைப்பு அதன் குறிக்கோள்கள், நோக்கங்கள் என்பனவற்றுடன் இணைந்தவை. இதனால் சமூகப்பயன்மிக்க கல்வியினை உருவாக்குதலில் கல்விச் சமூகவியல் அறிவு ஆசிரியர்களுக்கு அவசியமாகும்.

* பாடசாலையில் பயிலுகின்ற மாணவர்களை சமூக இயல்பினர்களாக்கும் செயன் முறையே ஆசிரியர்களின் பிரதான பணியாகும். இச் செயன்முறையின் வெற்றிக்கு அவர்களுக்கு சமூகவியல் அறிவு அவசியமாகும்.

* தனிமனித ஆற்றல்களினால் சமூகம் வளர்ச்சி பெறுகின்றது என்பதனையும் சமூகத்தினால் தனிமனிதர்கள் பல்வேறு பயன்களை பெறமுடியும் என்பதனையும் ஆசிரியர்கள் உணர்ந்திருத்தல் அவசியம். இதனை உணர்த்துவதற்கும் தமது கல்விப்பணியின் மூலமாக ஆசிரியர்கள் ஆற்றக் கூடிய செயற்பாடுகளை விளக்குவதற்கும் அவர்களுக்கு கல்விச் சமூகவியல் அறிவு அவசியமாகும்.

* சமூகத்தின் பண்டைய மரபுகளை பேணி அவை சிதைவடையாமல் பாதுகாத்து அடுத்து வரும் பரம்பரைக்கு ஒப்படைத்தல் கல்வியின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். இம் மரபுகளை மாணவர் களுக்கு அளிக்கின்ற ஆசிரியர் அதனை முறையாக கையளிக்க அவருக்கு சமூகவியல் அறிவு அவசியமாகும்.
* கல்வியானது சமூக மாற்றத்துக்கான (Social


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Change) ஒரு கருவியாகும். கல்விக்கூடாக சமூக மாற்றம், சமூக மாற்றத்திற்கு ஊடாக கல்வியில் மாற்றமும் நிகழ்வது தவிர்க்க இயலாதவைகளாகும். எனவே இம் மாற்றங்களை உணர்ந்து செயலாற்ற ஆசிரியர்களுக்கு கல்விச் சமூகவியல் அறிவு அவசியமாகும்.

பாடசாலை என்பது சமூகத்தின் ஒரு பகுதியாகும். சமுதாயத்தினைப் பிரதி பலிக்கும் மிகச் சிறிய சமுதாய அமைப்பாக பாடசாலை விளங்குவதால் மாணவர்களை சமூக இயல்பினர்களாக்கும் பாரிய பொறுப்பு பாடசாலைகளைச் சார்ந்துள்ளது. இதனால், சமுதாய மரபுகளையும் அதன் தேவைகளையும் எதிர்கால நோக்குகளையும் விளக்கி மாணவர்களை சமூக இயல்பினர்களாக்கும் பொறுப்பினை ஆசிரியர்களே சுமக்க வேண்டியுள்ளது. இப்பாரிய பொறுப்பினை செவ்வனே ஆற்ற கல்விச் சமூகவியலறிவு ஆசிரியர்களுக்கு உதவும்.

**ஆசிரியர்களின் சமூகவியல் பணி:**

பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களை சமூக இயல்பினர்களாக்குதல் கல்வியின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். இச் செயன்முறையே ஆசிரியரின் பிரதான பணியாகும். இச் செயன்முறையை மேற் கொள்கின்ற ஆசிரியர் மூன்று நிலைகளில் அதற்கான முயற்சிகளை நிகழ்த்துதல் வேண்டும்.

**முதல் நிலை:**

மாணவனை தான் சமூகத்தில் ஒரு உறுப்பினன் என்பதை உணரச் செய்தல். இதனை 'சமூக உணர்வு' (Social awareness) அல்லது "சமூக விழிப்புடைமை' எனலாம்

**இரண்டாவது நிலை:**

சமூக வாழ்வில் அவனை பங்கு கொள்ளச் செய்தல். இதனூடாக மாணவன் மகிழ்ச்சியடைகின்றான். இதனை 'சமூக மகிழ்வு' (Social Enjoyment) என்பர்.

**மூன்றாவது நிலை:**

சமூக ஒற்றுமை, கட்டுப்பாடு, சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் மாணவனுக்குள்ள பொறுப்புக்களை உணர்ந்து (Social Responsibility) நடக்கச் செய்தல். இதனை பாடசாலை வாழ்வின் இறுதியில் மாணவர்கள் அடையும் வகையில் ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். இவ் இறுதி நிலை 'சமூக முதிர்ச்சி' (Social maturity) பெறுதல் எனப்படும்.

**முடிவுரை:**

கல்விச் சமூகவியல் என்பது இன்று ஆசிரியர் கல்வித் துறைகளில் பிரபல்யம் பெற்று கற்கைத் துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இதனைப் பயிலும் ஆசிரியர்கள் சமூகவியலின் தோற்றம் வளர்ச்சி பற்றிய போக்கினை சிறிதளவேனும் விளங்கி யிருத்தல் அவசியமாகும். அப்போது தான் கல்விச் சமூகவியல் தொடர்பான முக்கிய அம்சங்களை தெளிவுற விளக்கி, மாணவர்களைச் சமூக இயல்பினர்களாக்கும் செயன்முறைகளில் இவ்வறிவை செம்மையாகப் பயன்படுத்த இயலும். கல்விச் சமூகவியலின் இயல்பு, நோக்கு, ஆசிரியர்களிடம் இதன் முக்கியத்துவம் பயன்பாடு பற்றியே இக் கட்டுரை ஆராய்ந்துள்ளது. மாணவர்களினை சமூக இயல்பினர்களாக்க விழையும் ஆசிரியப் பெருமக்களுக்கு இது துளியளவேனும் உதவும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## அகிலம்

**"அகிலம்" தமிழில் வெளிவரும் பல்வேறு எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகளும் "அகிலம்" கலை இலக்கியப் பரிசுப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டு பரிசு பெற்றிருக்கும் சிறந்த ஆக்கங்களான கவிதை, கட்டுரை, சிறுகதைகள், பிரசுரமாகவிருக்கின்றன என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**– ஆசிரியர்**
**"அகிலம்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூங்கில் காடு



ந. பார்த்தியன்
விரிவுரையாளர், கல்வியியற் கல்லூரி, வவுனியா.

திகனைக்கான கடைசிப் பஸ்ஸும் போயிருக்குமோ ....... என்ற அங்கலாய்ப்புடன் கையில் சுமையுடனும் மனத்தில் பாரத்துடனும் கண்டி பஸ் நிலையத்தில் காத்திருக்கிறேன். கொழும்பிலிருந்து புறப்படும்போது மூன்று மணித்திலாயத்தில் கண்டிக்கு போயிடலாம். இப்ப நான்கு மணிதானே. திகனைக்குப் போயிடலாம் என எண்ணிய எனக்கு ஆப்பு வைத்துவிட்டார்கள் றைவரும் கொன்ரைக்ரரும்.

குறுகிய தூர ஓட்டமென்றாலும் நல்ல ஹோட்டலில் நிறுத்தி மூக்குமுட்டச் சாப்பிட்ட ஓட்டுநரும் நடத்துநரும் பிரயாணிகளின் நேரத்தையும் சாப்பிட்டுவிட்டனர். இனி, அவர்களைக் கோபித்து என்ன... மற்றவர்களைப் பற்றி அலட்டிக்கொள்பவன் முட்டாள் என்ற புத்திசாலித்தனத்தோடு எல்லோரும் செயற்படும்போது.....

திகனவுக்கான கடைசி பஸ் போய்விட்டதா? என அந்தப் பஸ்நிலையத்தில் நின்றவர்களிடம் விசாரிக்கின்றேன்.

அது சரியாக எட்டு மணிக்கு போயிட்டுது என்ற பதில் என்னைச் சோர்வடையச் செய்கிறது. என்ன செய்யலாமென யோசித்துக் கொண்டிருக்கையில் யாரோ 'சேர்' என அழைப்பது கேட்கின்றது. சரி, அழைப்பவருடன் சேர்ந்து போவதற்கான ஒழுங்குகளைப் பார்க்கலாமென எண்ணிக்கொள்கின்றேன்.

அழைத்தவரைத் திரும்பிப் பார்க்கிறேன். சிவசோதி.... கொஞ்சம் கொழுத்து வெள்ளை புல்சிலிவ் சேட்டும் மண்ணிற ரவுசருமாய் ... ஆளைப்பார்க்க சந்தோஷமாக இருக்கிறது. இருக்காதா ....? நியமனம் கிடைத்துவிட்டதல்லவா? புருஷ லட்சணம் வரத்தானே செய்யும். எனக்குள் நினைத்துக்கொள்கின்றேன். நலலாசிரியனாய் இருப்பான் சிவசோதி ...

சிவசோதி க.பொ.த உயர்தரம் படிக்கும்போது இருந்த கோலத்தை நினைத்துப் பார்க்கிறேன். பதவி, சம்பளம் எல்லாம் ஒரு களையைக் கொடுக்கத்தானே செய்யும். ஏதோ சிவசோதி தப்பிவிட்டான் என்று எனக்குள் நினைத்துக்கொள்கின்றேன். "சேர், எப்படி இருக்கிறீங்கள்" சம்பிரதாயமான கேள்வியைக் கேட்கிறான் சிவசோதி. மறக்கவில்லை ஆசிரியரை.... "நல்லாக இருக்கிறன். நீ எப்படி...?" சம்பிரதாயத்தில் நானும்... "நான் நல்லாய் இருக்கிறன் சேர்" என்று கூறியபடி ஒரு வெள்ளைக் கடிதஉறையை என்னிடம் தருகிறான்.

"ஏன்.. ஏண்டா" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே என் கையில் திணித்துவிடுகிறான். என்னவாயிருக்கும் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும்போது "என்ன சிவா" என்று கேட்டுக்கொண்டு ஒருவர் அவன் பக்கத்தில் வருகிறார்.

சிவசோதி அவருடன் கதைக்கத் தொடங்குகிறான். நான் சிவசோதி தந்தது என்னவாயிருக்கும் என்று எனக்குள் கேட்டுக்கொள்கிறேன். அன்று க.பொ.த. உயர்தரம் சித்தி அடைந்து "ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரிக்கு எனக்குக் கிடைச்சிருக்கு சேர்" என்று சந்தோஷத்துடனும் ஒருவித தயக்க-கலக்கத்துடனும் சொன்ன அந்தப் பரிதாபத்துக்குரிய சிவசோதியின் முகம் நினைவுக்கு வருகிறது. அன்று அவனுடைய நிலை பரிதாபத்துக்குரியதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய், கொலிஜுக்கு கிடைச்சிருக்கு. சந்தோஷமடா. பிறகென்ன, நீயும் ஒரு நல்ல ரீச்சரடா" என்று வாழ்த்தியதும் அந்த வாழ்த்தை ஏற்றுக்கொண்டபோதும் அவனுடைய கலக்கம் எனக்கும் ஓரளவு புரிந்திருந்தது.

சிவசோதியின் குடும்ப நிலைமை ... கூலி வேலை செய்யும் தந்தை. நோயாளியான தாய். கூடிப் பிறந்தவர்கள் ஐந்துபேர். குடும்ப சீவியமே பெரிய கஷ்டம்.

ஏ.எல். படிக்கும்போது ரியுசன் செலவுகளின்றி அக்கறையுள்ள ஆசிரியர்களின் துணையுடன் படித்து சிவசோதிக்கு நல்ல பரீட்சைப் பெறுபேறு. ஆசிரியர்களின் சொற்கேட்டு, ஒழுங்காகப் பாடசாலைக்கும் சனி, ஞாயிறு வகுப்புகளிற்கும் வருகை தந்து சிவசோதி கல்வியியற் கல்லூரிக்குச் செல்லக்கூடிய பெறுபேறினைப் பெற்றிருந்தான். பாடசாலையிலும் ஒரு கொண்டாட்டம்.

"சேர். என்னுடைய குடும்ப நிலையில் நான் கொலிஜ்ஜுக்குப் போவது .... தயங்கித் தயங்கிக் கூறுகிறான்.

என்னுடன் கதைத்துக்கொண்டிருந்த சக ஆசிரியர்கள் சிறிது நேரம் தங்களுக்குள் கலந்துரையாடிவிட்டு "சிவசோதி, நீ ஒன்றுக்கும் யோசிக்காதே. நாங்கள் இருக்கிறம்" என்று கூறியதும் சிவசோதியின் முகத்தில் தோன்றிய சந்தோஷம் இன்றும் நினைவுக்கு வருகிறது.

ஆசிரியர்கள் ஒன்று கூடிக் கதைத்து, அதிபருடனும் கலந்துரையாடி ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி சிவசோதி தனக்கு உதவி செய்யும்படி கடிதமொன்றை எழுதி முதலில் அதிபரும் பின்னர் உப அதிபர் உட்பட ஆசிரியர்களும் தலா ஐநூறு ரூபா வீதம் கொடுத்து பத்தாயிரம் ரூபா அளவில் சேர்த்து கொடுத்தது ஞாபகத்துக்கு வந்தது.

அன்று நாங்கள் கொடுத்த உதவியை ஆசிரியரானதன் பின் சிவசோதி திருப்பிக் கொடுக்க நினைத்து இந்தக் கடித உறையைத் தருகிறானோ என்றும் மனம் நினைத்துக்கொண்டது. எதுவாயிருந்தாலும் பரவாயில்லை இப்போது பார்க்கக்கூடாது, பார்ப்பது நாகரிகமல்ல என நினைத்துக் கொண்டவனாய் நகரை நோக்கி வருகின்ற பஸ்களைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றேன். அவை எதுவும் திகனைக்கான பஸ்கள் அல்ல என்பது ஏமாற்றம்.

தன்னுடன் கதைத்தவரை அனுப்பிவிட்டு சிவசோதி என் பக்கம் திரும்பி என்னைப் பார்த்து 'சேர், என்ன சேர் நீங்க முன்னமே எல்லாம் அறிஞ்சிட்டீங்களோ' என்று கேட்கிறான்.

என்ன அறிந்து விட்டீங்களோ ... என்று கேட்கிறானே. மற்றைய ஆசிரியர்களுக்கெல்லாம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டானோ. தன் கடனைத் தீர்த்துவிட்டானோ?

விடைத்தாள் திருத்தும் பணிக்காக கொழும்புக்குச் சென்றிருந்து, பதினைந்து நாட்களுக்குப் பின்னர் வருகின்ற எனக்கு மற்றைய ஆசிரியர்களுக்கு கொடுத்தது, கொடுக்காதது தெரியாத நிலையில் நான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

"சேர், என்ன சேர் எடுத்துப் பாருங்கோ சேர்" என்று சிவசோதி மீண்டும கூறினான்.

"பரவாயில்லை. இருக்கட்டும், நீ அவசரப்பட்டிட்டாய்" என்று நான் சொல்லி முடிக்க முன் "அப்படித்தான் சேர் வேறை ஆக்களும் சொன்னார்கள்" என்று சிவசோதி கூறுகின்றான்.

வேறை ஆக்களும் என்று சொன்னதும் மற்றைய ஆசிரியர்களைத் தான் அப்படிக் கூறுகின்றானோ, இல்லை அந்த நேரத்தில் வேறு ஆட்களிடமும் உதவி பெற்றிருப்பானோ... நாங்கள் கொடுத்த பத்தாயிரம், கல்வியியல் கல்லூரிக்குப் போதாதுதானே. வேறு ஆட்களிடமும் உதவி பெற்றிருப்பான் என நினைத்துக்கொள்கிறேன் அன்றிருந்த அவனுடைய நிலைமை அப்படி.

இருப்பினும் "வேறை ஆக்களுமோ...." என்று என்னையும் அறியாமல் கேள்வி எழுந்துவிட்டது.

"ஓம் சேர். நான் இந்த முடிவை எடுத்ததை அவசரப்பட்டு எடுத்த முடிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சொல்லுகினம். ஆனால், சேர் நான் அவசரப்படேல்ல... எங்கடை மக்கள் படுகிற கஷ்டங்களைப் பார்த்து, அறியாமைகளை நினைத்து, ஏமாற்றப்படுகின்ற விசயங்களைப் பார்த்துத்தான் நான் இந்த முடிவை எடுத்தனான்" சிவசோதி பேச்சில் ஒரு கர்வம்.

என்ன இது, நான் ஏதோ நினைக்க, சிவசோதி ஏதேதோ சொல்கிறானே என நினைத்துக்கொண்டிருக்க "சேர், எங்கட தலைவர்கள் எப்படி எப்படியெல்லாம் ஏமாத்துறாங்க... சுய அரசியல் நடாத்தி தொடர்ந்தும் எங்களை, எங்க சனத்தை ஏய்ச்சுப் பிழைக்கிறாங்க".

எனக்கு சிவசோதி ஏன் இப்போது இப்படிக் கதைக்கிறான் என்பது விளங்கவில்லை. நான் வகுப்பு நேரங்களில் சொல்லிய அரசியல் வியாக்கியானங்கள், விமர்சனங்களுக்காக இப்போது சிவசோதி கதைக்கிறானோ என நினைத்துக் கொள்கிறேன்.

பொதுவாக மலையகக் கல்வி பின் தங்கிப்போனமைக்கு நல்ல தீர்வு, மக்கள் படித்தவர்களாக மாறுவதே. நீங்கள் படித்து, நாலு விடயங்களையும் தெரிந்திருந்தால் உங்களை யாரும் ஏமாற்ற முடியாது. பிறமாவட்டங்களில் உள்ளவர்கள் இந்த விழிப்புணர்வைப் பெற்றதற்கு கல்வி அறிவுதான் காரணம். இப்படி சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் படிக்க வேண்டும். முன்னேற வேண்டும் என கூறியது சிவசோதியின் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ள நிலைமையில் சிவசோதி அரசியல் பேசுகிறானோ என நினைத்துக்கொண்டேன்.

"சேர், இந்த முறை மாகாண சபைத் தேர்தலில் நானும் போட்டியிடுகிறேன் சேர். அதற்கான நோட்டீஸ்தான் சேர் இது. எடுத்துப் பாருங்கோ சேர். என் கொள்கை விளக்கத்தையும் கட்சியின் சின்னத்தையும்" என்று தன் சமூக விடுதலைக்குத் தான் உரமாகிப்போவது போலவும் உயிர் கொடுக்கப்போவது போலவும் நினைப்புடன் சிவசோதி கூறுகிறான்.

ஆசிரியராகத் தொடங்கி, ஆசிரியராகவே வாழ்ந்து ஆசிரிய சேவையை மகத்தான சேவையாக மாற்றி தன்னைச்சூழவுள்ள மாணவர்களை, சமூகத்தை மாற்றி முன்னேற்றிய ஆசிரியர்களை ஒரு கணம் நினைத்துப் பார்க்கிறேன்.

ஆசிரியராய் சேவை செய்வதை விட அரசியல்வாதியாய் சேவை செய்வது உசிதமானது. உயர்ந்தது என்று நினைக்கும் சிவசோதியை இனி மாற்றமுடியாது. இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல் என்று கண்டுபிடிக்க முடியாத ஆசிரியனாய் நான் இருப்பது எனது இயலாமை.

புல்சிலீவ் வெள்ளைச் சேட்டும் மண்ணிற ரவுசரும் முகத்தில் பூரிப்பும் மதாளிப்பும் உடலெல்லாம் கொழுப்புக் காரணமான தோற்றப் பொலிவும் மாதாந்தம் கிடைக்கும் சம்பளத்தில் வந்ததல்ல. அது அரசியல்வாதியின் சலுகைகளால் வந்தது என்பதை உணர முடிகிறது.

சிவசோதியைத் தேடிச் சிலர் வருகிறார்கள். சிவசோதி தன் பயணத்தைத் தொடரமுன் "சேர், ஒன்றுக்கும் யோசிக்காதேங்கோ.... நாங்கள் வெற்றிபெற்றாப் பிறகு உங்களுக்கும் செய்யக்கூடியதைச் செய்வோம்" என்று கூறிவிட்டு அவர்களுடன் செல்கிறான்.

ம்.... சிவசோதியும் அரசியல்வாதிகளும் .... சிவசோதி அரசியல்வாதியாகி மலையகத்தை முன்னேற்றப் போகிறான். அரசியல்வாதிகளால் தான் மலையகம் முன்னேறப்போகிறதா என்ற கேள்வியும் எனக்குள் உருவாகிறது,

- **மரணம் எப்போது வேண்டுமானாலும் நம்மைத் தேடி வரலாம். மனிதர்கள் நம் நிலையாமை தன்மையை உணர்ந்து கொள்ளத் தவறி விட்டனர். அதனால் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை கொண்டு அலைகிறார்கள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழா நீ தலை நிமிர்ந்து வாழ்!



கே. குலசேகரன் - ஹப்புத்தளை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு
முன் தோன்றிய மூத்த குடியிற் பிறந்து
கல்வியிலே மிகவுயர்ந்து, உலகோர்க்கெல்லாம்
கலாசார விழுமியத்தைக் கற்பித்திங்கு
நல்ல பெருங் காப்பியங்கள், புராண இதிகாசங்கள்
நல்கும் உயர் தத்துவங்கள் தமையறிந்த
வல்லவனாய் வாழ்ந்திட்ட தமிழா! வீணே
வழி தவறிப் போகாது தலை நிமிர்ந்து வாழ் !

கங்கை முதற் கடாரமிவையீறாய் வெற்றிக்
கவின் கொடியை ஏற்றி வைத்த தமிழன், இன்று
தங்க இடமின்றித் தனி த்துவமும் இன்றித்
தவிக்கின்ற நிலை வந்ததேனோ? என்று
இங்கு நீ எண்ணிப் பார்! உனக்கு வந்த
இழி நிலையைப் போக்க வழி உடனே கண்டு,
தங்கத் தமிழ் மகனாய், தன்மானம் மிக்கோனாய்
தலை நிமிர்ந்து உனை உணர்ந்து வாழ்!

சங்கம் வளர்த்த எங்கள் தமிழை, அன்று
சபைகூட்டி மூவேந்தர் வளர்த்திட்ட மொழியை,
இங்கெமது கம்பனொடு வள்ளுவனும் மற்றும்
இளங்கோவும் அணி செய்த அழகான தமிழை,
மங்காத புகழ்கொண்ட மொழியை, இன்று
மாற்றார்கள் இகழ்கின்ற இழிவான நிலையை,
இங்குடனே மாற்ற வழி காண்பாய்! நல்ல
இலட்சியமே கொண்ட்வனாய் தலைநிமிர்ந்து வாழ்வாய்!

மனிதர்கட்குள் சாதிகளைப் பிரித்தே வைத்தாய்!
மதத் தலத்துள் அவர் செல்லத் தடை விதித்தாய்!
தனி மனித சுதந்திரத்தைத் தடுத்தே நீயும்
தன்னலமே பெரிதென்று எண்ணிக் கொண்டாய்!
மனிதரெலாம் ஓர் இனமே என்ற கூற்றை
மறந்திங்கு பேதங்கள் வளர்த்துக்கொண்டாய்!
புனிதர்களாம் யேசு, புத்தன், காந்தி சொன்ன
போதனைகளை என்றோ புரிந்துகொள்வாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச வாதங்கள் பேசி எம் மொழியினரை
பிரித்து வைப்பதில் நீயும் பெருமை கண்டாய்!
தரகராய்த் தொழிற்பட்டுன் சொந்த இனத்தையே
தாழ்த்திடத் தண்டிக்கத் துணையாய் நின்றாய்!
இரவென்ன பகலென்ன இனத்திற்கு இடையூறு
இளைப்பதில் வரலாற்றுத் துரோகம் செய்தாய்!
நிரந்தரமாய் அடிமைகளாய் வாழும்வாழ்வை
நீக்க வழிகண்டு, தலை நிமிர்ந்தே வாழ்வாய்!

கூடவிருந்தே இங்கு குழிபறிக்கும், கெட்ட
குணத்தினை நீ கொண்டிருந்த காரணத்தால், எங்கள்
மாடமாளிகைகளுடன், கோபுரங்களும் சிதைந்து
மண்ணோடு மண்ணாகிப் போனதனை அறிந்துகொண்டாய்!
கோடான கோடி சொத்தை கொண்டவர்களாயிருந்தும்
கொள்கை வழி நிற்காததாலே இங்கு
மாடாய் உழைத்தவற்றைப் பறிகொடுத்து, மற்றவர்க்கு
மண்டியிட்டு வாழுகின்ற நிலையை மாற்றாய்!

உலகெங்கும் வாழ்கின்றாய் உனக்கோ இங்கு
உரிமை கொள்ள நாடில்லா நிலையில்! மேலும்
கலகங்களால் நீயும் அகதியாக, அங்கிங்கு
கவலைகொண்டு அலைகின்றாய், கண்ணீர் மல்க!
சிலகாலம் வாழும் இவ் வாழ்வில் நீயும்
சீருடனும் சிறப்புடனும் வாழ வேண்டில்,
பலங்கொண்ட தமிழனாய், தலைநிமிர்ந்து
பாரினிலே வாழ வழி' உடனே காணு!

அன்னிய மோகத்திற்கு நீ அடிமையாகி,
அன்றாடம் எமது கலை, கலாசாரத்தை,
மென்மேலும் அழிக்கின்றாய்! எமது அந்த
மேன்மை மிகும் தமிழோடு ஆங்கிலத்தை
என்னேரமும் கலந்தே பேசுகின்றாய்!
எம் மொழியில் சொற்களுக்குப் பஞ்சம் உண்டோ?
தன்மானத்தோடு தூய தமிழைப் பேசி என்றும்
தலை நிமிர்ந்து வாழ்ந்திடுவாய் தகைமை பேணி!

எங்கெங்கு தமிழர்கள் வாழ்ந்திட்டாலும்,
ஏற்றமுற வழிவகைகள் வகுத்திட்டாலும்,
அங்கெல்லாம் ஒற்றுமையே இல்லா அந்த
அவல நிலை தொடர்வதையே கண்டுகொண்டோம்.
பங்கமுற்று வாழ்கின்ற நிலை விடுத்து
பைந்தமிழர் நாம் என்றோர் அணியில் சேர்ந்து
இங்குரிமைக் குரல்கொடுத்து நிற்பாயானால்
இனியவனே தலைநிமிர்ந்து வாழ்வாய் ! உண்மை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் சமூகத்தின் பிரதிபலிப்புகளாகும்



**துரைசாமி நடராஜா** BA PGDE (Merrit)
அதிபர், விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம், ஹெல்பொட

பாடசாலைகள் சமூகத்தின் அச்சாணிகள் என்பார்கள். பாடசாலைக்குள் சமூகம் இருக்கின்றதா? அல்லது சமூகத்திற்குள் பாடசாலை இருக்கின்றதா? என்று பார்த்தால் இரண்டும் ஒன்றில் இருந்து ஒன்றினை பிரிக்க முடியாத அளவிற்கு ஒன்றிணைந்து செல்வதனை விளங்கிக்கொள்ள முடியும்.

பாடசாலைகள் சுகதேகிகளை பராமரிக்கின்ற அதேவேளை நோயாளர்களை புறந்தள்ளுகின்றன. எனவே, பாடசாலைக் கலாசாரம் சிறப்பானதன்று. பாடசாலைகளை இழுத்து மூடிவிட வேண்டும் என்று சில அறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கின்றார்கள். எனினும், பாடசாலை மீதான நம்பகத்தன்மையை சமூகம் இன்னும் இழந்துவிடவில்லை. பாடசாலையை மையப்படுத்திய செயற்பாடுகள்தான் சமூகத்தில் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன பாடசாலையும் சமூகமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமே தவிர ஒன்றில் இருந்து இன்னொன்றை புறந்தள்ளிவிடுவதற்கில்லை. பாடசாலைக்கு மாணவர்களை வழங்குவதும் பாடசாலையில் இருந்து வெளியேறுகின்ற மாணவர்களைப் பொறுப்பேற்பதும் சமூகமேயாகும். இதனை கருத்திற் கொண்டு பார்க்கும்போது பாடசாலையின் அபிவிருத்தியில் சமூகத்திற்கு இருக்க வேண்டிய வகிபாகத்தினை விளங்கிக்கொள்ள முடியும்.

பிள்ளைகள் அனைவரும் ஒரே விதமானவர்களாக இருப்பின் கற்பித்தல் செயற்பாடு என்பது மிகவும் இலகுவானது ஆகும். ஆனால் பிள்ளைகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமானவர்களாவர். சிலரது சுற்றாடல் வளமானது. அவ்வாறானோர் சாதகமான நிலைமைகளுடன் வருகின்றனர். மற்றும் சிலரது சுற்றாடல் வறியது. அவர்கள் சாதகமான நிலைமைகளின் கீழ் வழிதவறிச் சென்றோராவர். நீங்கள் மாணவனது சுற்றாடலையும் அதன் அங்கத்துவம் வகிக்கும் சமுதாயத்தையும் அச்சமுதாயம் அதன்மீது தாக்கம் விளைவித்துள்ள விதத்தையும் விளங்கிக் கொள்ளும்வரையில் அம் மாணவனை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள முடியாது. ஒவ்வொரு சுற்றாடலும் பிள்ளைக்கு யாதேனையும் கற்பிக்கின்றது. சில சுற்றாடல்களில் நன்மை, அன்பு, வரவேற்பு என்பன காணப்படும். மற்றும் சில சுற்றாடல்களில் இவை காணப்படுவதில்லை. இவ்வாறான வெவ்வேறுபட்ட சுற்றாடலில் மாணவரின் நடத்தை பல்வேறுபட்டனவாகக் காணப்படும். அவர்கள் அச் சுற்றாடலின் மொழி, நடத்தை போன்றவற்றை பாடசாலைக்குக் கொண்டு வருவர். பிள்ளைகள் சமுதாயத்தின் பிரதி பலிப்புக்களாகும். அத்தோடு பிள்ளைகள் பாடசாலை தொடர்பான தகவல்களையும் ஆசிரியர்கள் பற்றிய தகவல்களையும் சமூதாயத்தினுள் கொண்டு செல்கின்றனர் என்று ஜோர்ஜ் விலாட் பிரேசியர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதில் பிள்ளைகள் சமுதாயத்தின் பிரதிபலிப்புகள் என்ற கூற்று தொடர்பாக நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியிருக்கின்றது. அதாவது, சமுதாயம் பாடசாலையில் பிரதிபலிக்கின்றது என்றும் கூற முடியும். இவற்றுக் கிடையிலான தொடர்பின் ஆழமும் இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பாடசாலைக்கு வரும் பிள்ளை தன்னுடன் தனது பெற்றோரையும் பாடசாலைக்குக் கொண்டு வருகின்றது என்று ஒடாலே கருத்துத் தெரிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் நடத்தைக் கோலங்களை பின்பற்றியதாக பிள்ளை பாடசாலைக்குள் நுழைகின்றது என்றும் நாம் பொருள்கொள்ள முடியும். இங்கு பெற்றோர்க்கும் பிள்ளைக்குமான தொடர்பு சித்தரிக்கப்படுகின்றது.

சமூகத்தின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகள் என்பன தொடர்பிலும் பாடசாலை அதிகமாக கவனம் செலுத்த வேண்டி இருக்கின்றது. பாடசாலையில் இருந்து வெளிச் செல்லும் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்களாக இருத்தல் வேண்டும். ஏட்டுச் சுரைக்காயை ஒத்த கல்வியினால் எவ்விதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. சம காலத்தில் 'படிப்பது இராமாயணம் இடிப்பது சிவன் கோவில்' என்ற போக்கு காணப்படுவதனை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்நிலை மாற்றியமைக்கப்பட்டு கல்விக்கும் செயற்பாட்டுக்கும் இடையே ஒரு பிணைப்புத் தன்மை இருத்தல் வேண்டும். சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யாத கல்வி அல்லது பாடசாலைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டி இருக்கின்றது.

பாடசாலை, சமூகம் என்பவற்றுக் கிடையிலான புரிந்துணர்வு ஊடாக பல்வேறு காரியங்களை சாதிக்கக்கூடியதாக இருக்கும். அத்தோடு பல்வேறு அபிவிருத்திக்கும் இத்தொடர்பு உந்து சக்தியாகவும் அமையும். எனினும், தற்போது பல இடங்களில் பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகள் விரிசல் நிலையினை அடைந்திருப்பதனை காண்கின்றோம். இரு சாராருக்கும் இடையிலான முரண்பாடுகள் கல்வி அபிவிருத்திக்கும் சமூகத்தின் அபிவிருத்திக்கும் பெரிதும் தடைக்கல்லாக இருந்து வருகின்றன என்பதையும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பாடசாலையின் பொறுப்புகள் இன்று அதிகளவில் காணப்படுகின்றன. இத்தகைய பொறுப்புகளை தனியொரு பாடசாலையால் தனித்து நின்று செவ்வனே நிறைவேற்ற முடியாது. எனவே, சகலரினதும் ஒத்துழைப்பு பாடசாலையின் சிறப்பான செயற்பாட்டுக்கு வழி சமைப்பதாக அமையும். இதனையே ஜோன் ஐ குட்லடீ (John I Kudlatee) போன்றார் தெளிவாக விளக்கிக் கூறி இருக்கின்றனர்.

பொதுப் பாடசாலைகளை சமுதாய நிலையங்களாகக் கருதும் எண்ணக்கரு பழைமை வாய்ந்ததாகும். ஜோன் டு யி யின் எவ்வித செயற்பாடுகள் பாடசாலை, சமுதாயந் தொடர்பின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. ஏல்ஸன் சமுதாய பாடசாலைகளுக்கு அடிப்படையாக அமையும் ஏழு எண்ணக் கருக்கள் தொடர்பாக விளக்கிக் கூறி இருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலைகளினதும் சமூகத்தினதும் உறவுகள் எந்தளவிற்கு பேணப்படுகின்றதோ அந்தளவிற்கு சாதக விளைவுகள் ஏற்படும். எனவே இந்த இரண்டு சாரார்களுக்கும் இடையில் திட்டமிட்ட வரைவுகளின் ஊடாக ஐக்கியத் தன்மையை கட்டியெழுப்ப வேண்டும். ஒன்றில் இன்னொன்று செல்வாக்கு செலுத்தும் விதத்தினை விபரித்துக் கூறுதல் வேண்டும். சமுதாயத்தின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சமுதாயத்தின் அபிவிருத்திக்காகவும் சமுதாய வளங்களைப் பிரயோகிப்பதற்காக வழிகாட்டல் மூலமும் அதற்காக முன்வருதலின் மூலமும் பாடசாலைக்கும் அயற் சமுதாயத்திற்கும் இடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப் படுகின்றது. பாடசாலையானது சமுதாய பிரச்சினைகளையும் சமுதாய வளங்களையும் ஒன்றிணைக்கும் தரகராக கருமமாற்றுதல் வேண்டும் என்று மின்ஸே வர்பகர் கருதுகின்றார்.

பாடசாலை மற்றும் சமுதாய உறவினைப் பேணுவதில் ஆசிரியர்களின் வகிபாகமும் அளப்பரிய தாகும். ஆசிரியர்கள் சமுதாயத்தைப் புரிந்து செயற்பட வேண்டும். சமுதாயத்தின் சிறப்பாக செயல்களை தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதோடு பிழையான திசை திரும்பல்களை நேர் வழிக்கு இட்டுச் செல்லவும் பின்நிற்கக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்திருந்த தமிழ்த் திரைப்படங்கள்....!



**பாலா சங்குப்பிள்ளை**
மலையக ஜனரஞ்சன எழுத்தாளர்

திரைப்படங்கள் பார்ப்பதைத் தவிர வேறு எந்த பொழுதுபோக்கு வசதிகளையும் கொண்டிராத மலையகத்தில் 'சினிமா' என்பது அவர்களின் வாழ்க்கையோடு ஊறிப் போய்விட்டது. திரைப்படங்களினால் சமூகம் சீரழிவுக்குள்ளாகின்றது என்ற வாதங்களுக்கு அப்பால் சிறப்பான சில மாற்றங்களும் அதனால் நிகழ்கின்றதென்பதையும் மறுப்பதற்கில்லை. முன்னர் சில நல்ல திரைப்படங்கள் பாடசாலை மாணவர்களுக்காக விஷேட காட்சிகளாகக் காண்பிக்கப்பட்டதையும் மறந்து விடமுடியாது. உதாரணமாக நல்ல தரமான படமான 'பாமா விஜயம்' அன்று அவ்வாறு மாணவர்களுக்காக காண்பிக்கப்பட்டது. திருவிளையாடல், கந்தன் கருணை, சரஸ்வதி சபதம், வீரபாண்டிய கட்டப்பொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற படங்களும் இவ்வாறு மாணவர்களுக்காக காண்பிக்கப்பட்டன.

தமிழ்த் திரைப்படங்களைப் பொறுத்த வரை பேசும் படங்கள் எப்போது வெளிவரத் தொடங்கினவோ அப்போதிருந்தே 'சினிமா' மோகம் அமோகமாக வளர்ச்சியடையத் தொடங்கிவிட்டது. அதாவது திரையில் தோன்றும் பிம்பங்கள் மீது மக்களுக்கு ஓர் ஈர்ப்பும் மோகமும் மகிழ்ச்சியும் ஏற்படத் தொடங்கியபோதே அதில் பங்குபற்றும் கலைஞர்களுக்கு மவுசு கூடியது.

அந்த வகையில் முதலாவது தமிழ்த் திரையுலக 'சுப்பர் ஸ்டார்' என புகழப்படும் எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த 'ஹரிதாஸ்' படம் மூன்று தீபாவளிகளைக் கண்ட சாதனையினை இதுவரை வேறு எந்தப்படமும் முறியடிக்க வில்லை. 'கரகாட்டக்காரன்' மற்றும் 'சந்திரமுகி' போன்ற படங்கள் ஒரு வருடம் வரை ஓடி சாதனை படைத்ததாக ஆறுதலடைந்தாலும் கூட அது ஹரிதாசுக்கு நிச்சயம் ஈடாகாது. தமிழ்த் திரையுலகின் அறுபது வருட வசூல் சாதனைகளை முறியடித்து பந்தயக் குதிரையின் வேகத்துடன் ஓடி வசூலை வாரிக்கு வித்த சின்னத்தம்பியில் நடித்த சிவாஜியின் மகன் பிரபு அதற்குப் பின் அப்படியொரு சாதனையினை மறுபடியும் தரவில்லையென்பதைவிடவும் தொடர்ந்தும் ஏதோவொரு வகையில் தமிழ்த் திரைப் படத்துறையில் நிலைத்திருப்பதுடன் தன் மகன் விக்கிரம் பிரபுவுக்கும் நல்ல 'ஓபனிங்' கை கொடுத்திருப்பதும் சந்தோஷப்படக்கூடிய விடயம்தான்.

மலையக மக்களைப் பொறுத்தவரை அன்று மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் படங்களுக்கு எத்தகைய ஆதரவினை வழங்கினார்களோ அதே போன்று இன்றைய இளைய தலை முறையினர் ரஜனி, விஜய், அஜித் போன்றோருக்கும் அவ்வாறு வழங்கினாலும் அவர்கள் நடித்த படங்களை 'சீடி'க்களில் அதிகம் பார்ப்பதாவது சற்று வேதனையினை தருகின்றது. இன்றைய நவீன காலத்தில் நேரத்துடன் போட்டிபோட்டவாறு ஓய்வு ஒழிச்சலில்லாமல் பணம் தேடுவதிலேயே குறிக்கோளாக இருக்கும் மக்கள் படம் பார்க்க திரையரங்குகளுக்கு செல்ல விரும்புவதில்லை. இரண்டரை மணித்தியாலப் படத்தில் இடம் பெறுகின்ற பாடல் காட்சிகளை ஓட்டிவிட்டு ஒன்றரை மணித்தியாலத்துக்குள் படத்தை 'சீடி' யில் ரசித்துவிட்டு மறுபடியும் பணம் பண்ண ஓடுகின்றவர்களால் திரையரங்குகளுக்குள் முடங்கிவிட முடியுமா?

அன்று தீபாவளி, பொங்கல் வந்தால் மலையகத்திலுள்ள திரையரங்குகளுக்கு மவுசு கூடிவிடும். திரையரங்க முகாமையாளர் மலையக திரைப்பட ரசிகர்களுக்கு பல வருடங்களுக்கு கடவுளாகவே தெரிவார். வெளியே தொழிலாளி, முதலாளியென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகளுடன் காணப்படுபவர்கள் திரையரங்கினுள்ளே பேதங்களின்றி ஒன்றாக சிரித்து சேர்ந்து கைதட்டி ரசித்து சமவுடைமையினை பறைசாற்றி நிற்பது சந்தோஷமாகத்தானிருக்கும்.

'எங்கவீட்டுப் பிள்ளை' படத்தில் சவுக்குடன் எம். ஜி. ஆர் 'நான் ஆணையிட்டால்' என பாடத் தொடங்கும்போது அனைவரும் விசில் அடித்து கைதட்டி கூச்சலிட்டு ஆரவாரம் செய்யும்போது நிச்சயமாக அவர்களை கோபித்துக்கொள்ளத் தோணாது. அதேபோல 'வசந்த மாளிகை' படத்தில் சிவாஜி கணேசன் காதல் தோல்வியினால் மதுவருந்திய நிலையில் டி.எம். சௌந்தராஜன் குரலில் 'யாருக்காக' என தத்ரூபமாக வாயசைத்து நடிக்கும்போது யாரும் வாய்திறக்காமல் கண்ணிமைக்காமல் ரசித்த காட்சி இன்றும் மறக்க முடியாது.

மலைகளில் மனம் மற்றும் உடல் சுமைகளுடன் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் தமிழ்த் திரைப்படங்கள் வரப்பிரசாதமாக வந்து அமைந்தது. நாள் முழுக்க உழைத்த களைப்புத் தீர மூன்று மணிநேரம் எல்லா வற்றையும் மறந்து மகிழ்ச்சியுடன் திகழக்கூடிய வாய்ப்பினை வழங்கிய வகையில் திரைப்படங்கள் அவர்களின் வாழ்வில் முக்கியத்துவத்தை ஏற்படுத்திவிட்டது.

அதனாலும் திரைப்படங்களை திரை யரங்குகளில் மட்டுமல்லாது பிரத்தியேகமாக வீடுகளிலேயே பார்க்கக்கூடிய விதத்தில் நவீன சாதனங்கள் வந்தபின் திரையரங்குகளில் கூட்டம் குறையத் துவங்கியது. தோட்டங்கள் தோறும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் 'டிஸ்' அன்டெனாக்களும் வந்தபின் தொலைக் காட்சியில் இடம்பெறக்கூடிய தொடர் நாடகங்களை விடாமல் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைத்தது.

இப்போதும் தீபாவளி சமயங்களில் தலை நகரிலும் மலையகத்தில் சில இடங்களிலும் ஒரே சமயத்தில் 'விஜய்', 'சூர்யா' போன்றவர்களின் திரைப்படங்கள் திரையிடப்படும் வேளைகளில் கூட்டமும் வரிசைகளும் திரையரங்குகளை நிறைத்தாலும் அவை இரண்டு வாரங்கள் மட்டும்தான்.

மக்கள் திலகம் எம். ஜி. ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோர் மலையக மக்களின் அபிமான அதிகம் விரும்பக்கூடிய திரை நட்சத்திரங்களாக இருந்தமையானது அவர்கள் நடித்த அனைத்துப் படங்களுமே நல்ல வசூலுடன் அதிக நாட்கள் ஓடின. இத்தகைய சூழ்நிலையில்தான் இலங்கைத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக எம். ஜி. ஆர். பட சாயலில் மலையகத்தில் ஒரு படம் தயாரிக்கப்பட்டது.

மலையகத்தில் வளர்ந்துவரும் இளம் அரசியல்வாதியாகவிருந்த வி. பி. கணேசன் தயாரித்து நடித்த 'புதிய காற்று' இலங்கையில் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடி போட்ட முதலுடன் லாபத்தையும் பெற்ற முதல் படமாக விளங்கியது. அதாவது தென்னிந்தியப் படங்களையே பார்த்து பழக்கப்பட்ட நம்மவர்கள் அதே போன்ற தோற்றத்தில் வெளியான 'புதிய காற்று'க்கும் தங்களின் ஆதரவினை வழங்கினார்கள்.

அன்று உருவாக்கப்பட்ட பல திரைப் படங்கள் குடும்பத்துடன் பார்க்குமளவுக்கு ஆபாசமோ ஆபத்தோ இல்லாமல் இருந்தது. பாடசாலை மாணவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய பல நல்ல விடயங்கள் அவற்றில் இருந்தன. புராண, சரித்திர கதையம்சம் கொண்ட அப்படங்களில் பல நல்ல கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. சமூகக் கதைகளிலும்கூட ஏராளமான நல்ல விடயங்களிருந்தமையினை நாம் மறந்துவிட முடியாது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, மாயவநாதன், கண்ணதாசன் உட்பட பல கவிஞர்களின் அர்த்தமுள்ள அனைவர்க்கும் பயன்தரக்கூடிய பாடல்கள் இருந்ததை சொல்லியேயாகவேண்டும்.

முடிவாக சுமார் அறுபது வயது மதிக்கத் தக்க ஒரு முதியவரை தோட்ட லயன் காம்பறாவில் வைத்து சந்தித்தேன். அன்றைய திரைப்படங்கள் பற்றி கேட்டேன். "அது ஒரு பொற்காலம் தம்பி. ஞாயிற்றுக்கிழமை வந்துட்டா எதையாவது சாப்பிட்டுட்டு பன்னன்டு மணிக்கே தியேட்டர்ல ரெண்டு மணி ஷோவுக்கு கியூவுல நின்னுடுவேன். அநேகமாக அது எம். ஜி.ஆர். படமாகத்தானிருக்கும். ரெண்டு மணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷோவுக்கு டிக்கெட் மட்டும் கிடைச்சிட்டா அது மாதிரியொரு சந்தோசம் எதுவுமில்லை. கைதட்டி விசில் அடிச்சி, சத்தம் போட்டுகிட்டு அணு அணுவா அந்தப்படத்தை ரசிப்போம். திரும்பத்திரும்பவும் 10 முறைக்கு மேல அதையே பார்ப்போம். கவலைகளை மறக்க எங்களுக்கிருந்த ஒரேயொரு முக்கியமான முதன்மையான பொழுது போக்கா இந்த சினிமாதான் இருந்திச்சி..." ஏழைகளின் தோழனா யிருந்த இந்த சினிமாவை கஷ்டப்பட்டு டிக்கட் வாங்கி பார்க்கிறப்போயிருந்த சந்தோஷம் மகிழ்ச்சியெல்லாம் இங்கே இந்த பொட்டிக்குள்ளே பார்க்கிறப்போ கிடைக்கல்லை. அதுவும் இப்ப வர்ற படத்தையெல்லாம் பார்க்கவா முடியுது. இதையெல்லாம் பார்த்துட்டுத் தான் இப்பவுள்ள இளசுகளெல்லாம் பிஞ்சிலே பழுக்குதுங்க.

**குடும்பத்திலும் சரி. அலுவலகத்திலும் சரி. மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க ....**

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள் - விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள் அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்
- மற்றவர் கருத்துக்களில் செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத்துவக்க முன் வாருங்கள்.

**- தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலம் பேச்சுப் போட்டியில் பரிசு பெறுவோர்

(பாடசாலை மட்டம்)

**முதலாம் இடம் :**
செல்வி சௌந்தர் லக்ஷிகா லோசனி
கேம்பிரிஜ், ஹட்டன்

**இரண்டாம் இடம் :**
செல்வி எஸ். சுதர்ஷனா
க/இந்துக்கல்லூரி,
கம்பளை

**மூன்றாம் இடம் :**
செல்வி. முத்தழகு உஷாலினி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

**ஆறுதல் பரிசு பெறுவோர்:**

1. செல்வி ஜே. ஷாலினி
க/இந்துக்கல்லூரி, கம்பளை

2. செல்வி தியாகராஜா வசந்தகீதா
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

3. செல்வி நவஜோதி மேனகாகுமாரி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

4. செல்வி அருந்தவச்செல்வன் தில்ஷானி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

5. செல்வி கணேசன் காயத்திரி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

6. செல்வி ஜெயப்பிரகாசம் ஜனகப்பிரியா
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

7. செல்வி பத்மசீலன் சாயீஸ்வரி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

# அகிலம் கவிதைப் போட்டியில் பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு :**
செல்வி. நாகேந்திரராஜா தக்ஷாலினி
களுதாவளை,
மாத்தளை.

**இரண்டாம் பரிசு :**
செல்வன் கா. புவனேஸ்வரன்
நு/கொட்டகல த.ம.வி.
கொட்டகல

**மூன்றாம் பரிசு :**
செல்வி. வி. பிரியதர்ஷினி
க./விவேகானந்தா த.ம.வி,
கண்டி.

**ஆறுதல் பரிசு பெறுவோர் :**

1. செல்வி ஜே. அமுதினி,
நு/கொட்டகல த.ம.வி.

2. செல்வி. டி. ஜோதிமலர்
உன்னஸ்கிரிய,
எல்கடுவ.

3. செல்வி. சந்திரகுமார் பிரியாந்தி
புனித அந்தோனியார் மகளிர்
கல்லூரி, கட்டுகஸ்தோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. செல்வி ப.ம.லூட்ஸ் அஞ்சலிக்கா
எழில்நகர், மன்னார்.

5. செல்வி. எம். எம். பி. நதா
பெண்கள் உயர்தரப் பாடசாலை,
கண்டி.

6. செல்வி சபினா பர்வின் லியானுடின்
கேகாலை

7. செல்வி எஸ். துஸ்ரா ஜஹரான்
நீ/நீர்கொழும்பு விஜயரத்தினம்
இந்துக்கல்லூரி, நீர்கொழும்பு

## அகிலம் கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு:**
செல்வி. இரவீந்திரன் மதுராகினி
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

**இரண்டாம் பரிசு:**
செல்வி. தியாகராஜா வசந்தகீதா
மா/பாக்கியம் தேசிய கல்லூரி,
மாத்தளை.

**மூன்றாம் பரிசு:**
செல்வி. குகேந்திரசர்மா விகோஷனா
பெரிய கல்லாறு - 03
கல்லாறு

### ஆறுதல் பரிசு பெறுவோர் :

1. செல்வி மா. திலக்ஷிகா,
கொ/விவேகானந்தா கல்லூரி
கொழும்பு

2. செல்வன்.ஜே. ஜெயானந்தராஜா
பெரிய கல்லாறு - 03
கல்லாறு

3. செல்வி. எஸ். சங்கவி
க/இந்துக் கல்லூரி,
கம்பளை

4. செல்வி ஜேசுதாசன் ஜெனனி லெனீட்டியா
க/நல்லாயன் மகளிர் கல்லூரி,
கண்டி

5. செல்வி. கெலிஸ்டீனா ரஞ்சன்
க/நல்லயன் மகளிர் கல்லூரி,
கண்டி

6. செல்வி ச. காஞ்சனா
க/விவேகானந்தா த.ம.வி, கண்டி

7. செல்வி பரமேஸ்வரன் சிவயோகினி
க/புசல்லாவ சரஸ்வதி ம. கல்லூரி
புசல்லாவ.

## அகிலம் கவிதைப் போட்டியில் பரிசு பெறுவோர்

(திறந்த மட்டம்)

**முதலாம் பரிசு:**
டாக்டர் ஜெயகுணசீலன்
போதனா வைத்தியசாலை, கண்டி

**இரண்டாம் பரிசு:**
கவிமணி நீலாபாலன் ஜே.பி.
பிரதம குமாஸ்தா, வெளிமடை

**மூன்றாம் பரிசு:**
கந்தையா கணேஷமூர்த்தி ஆசிரியர்
இறம்பொடை த. வி . இறம்பொடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுதல் பரிசு பெறுவோர் :

1. செல்வி ச. இந்துமதி
உடபுசல்லாவ
(பேராதனை பல்கலைக்கழக மாணவி)

2. திரு. ஆ. கௌரிதாசன்
வள்ளுவர் வீதி, வவுனியா

3. திரு சக்திவேல் கமலகாந்தன்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்

4. திரு. எம் சுதர்சன் ஆசிரியர்
பல்லேகல குண்டசாலை

5. செல்வி எம். எல் பாத்திமா பர்ஷானா
இறக்காமம், 01 அம்பாறை

6. திருமதி வி. சுமித்திரா தேவி
பாரதிபுரம், மூதூர்

7. பி. சுதாகரன்
தம்பட்டை, 02 தம்பிலுவில்

## அகிலம் கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர்

(திறந்த மட்டம்)

**முதலாம் பரிசு:**
திருமதி தர்மினி பத்மநாதன்
கண்டி ரோட் வவுனியா

**இரண்டாம் பரிசு:**
பா.சிவாகரன்
அபிவிருத்தி உத்தியோகத்ததர்
ஹட்டன்

**மூன்றாம் பரிசு:**
செல்வி அனுஷா கணேசராசா
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

## ஆறுதல் பரிசு பெறுவோர்:

1. செல்வி ஜீவாரதி
காரைதீவு, அம்பாறை

2. திருமதி தர்மினி எட்வேட் ரவிந்திர ராஜா
திறந்த பலக்லைக்கழகம், நாவல,
கொழும்பு

3. செல்வி மு. வேனுஜா
கல்லடி, மட்டக்களப்பு

4. செல்வி எம் நித்தியா இராஜேந்திரன்
காலவத்தை கட்டுகஸ்தோட்டை

5. திரு.பி. பாக்கியராஜா
மட்டக்குளி, கொழும்பு - 15

6. திருமதி டி துலக்ஷனா
மண்டூர் மட்டக்களப்பு

7. திருமதி. க. தமயந்தி (ஆசிரியை)
புசல்லாவ

## அகிலம் சிறுகதை போட்டியில் பரிசு பெறுவோர்

(திறந்த மட்டம்)

**முதலாம் பரிசு:**
திருமதி செல்வமலர் இராமலிங்கம்
(ஆசிரியை), தெல்தோட்டை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாம் பரிசு :**

திருமதி ஷீலா மாணிக்கம்
பெருந்தோட்ட குடும்ப நல உத்தியோகத்தர்
அக்கரைப்பத்தனை

**மூன்றாம் பரிசு**

திருமதி ஏ.யூ.எல். செல்வி அரப்பா மன்சூர்
- ஆசிரியை
இஸ்லாமிய செல்வி - க. பதியுத்தின்
முஸ்லிம் மகளிர் கல்லூரி
கண்டி

## ஆறுதல் பரிசு பெறுவோர் :

1. டாக்டர் சி. சிவகலா ராதா
தெஹிவளை

2. திரு. ஏ. கனகராஜ்
ஆஸ்பத்திரி வீதி,
அக்கரப்பத்தனை

3 திருமதி எப்.பி இப்திக்கார்
அறிவிப்பாளர், தயாரிப்பாளர்
வெல்லம்பிட்டிய

4. திருமதி யோகா யோகேந்திரன்
கடற்கரை வீதி, திருக்கோயில்

5. திரு.எம். நவநீதன் (ஆசிரியர்)
பிட்டகந்த, மாத்தளை

6. எஸ். குணரட்ணம்
அமிர்தகழி, மட்டக்களப்பு

7. திரு. எம்.டி.எம் அஷ்ரப்
ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது

## அகிலம் நாடகப் போட்டியில் பரிசு பெறுவோர்

(திறந்த மட்டம்)

**முதலாம் இடம் :**

திருமதி இந்து கன்யா சசிக்குமார்
திறந்த பல்கலைக்கழகம்
பேராதனை

**இரண்டாம் இடம் :**

திருமதி தர்மினி பத்மநாதன்
கண்டி ரோட், வவுனியா

**மூன்றாம் இடம் :**

திருமதி தேவிகா சுப்ரமணியம் (ஆசிரியை),
தலாத்து ஓயா

## ஆறுதல் பரிசு பெறுவோர் :

1. திரு. எம். டி. எம் அஷ்ரப்
ஆஸ்பத்திரி வீதி, சாய்ந்தமருது

2. திருமதி யோகா யோகேந்திரன்
கடற்கரை வீதி
திருக்கோயில்

3. திருமதி. கஜரதி பாண்டித்துறை
(ஆசிரியை), வவுனியா

4. திரு. எட்வாட் (ஆசிரியர்)
அப்புத்தளை

5. திரு. கா. சிவலிங்கம்
வன்னையூர் வீதி,
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANOKI JEWELLERS

*Your partner in Gold*

**No. 72, Yatinuwara Veediya, Kandy**
**Tel : 081 2232932**
**Email anoki.aj@gmail.com**
**Web : www.anokijewellers.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இலங்கைத் திருநாடும் மக்களும் சாந்தியும்,
சமாதானமும் பெற்று நல்வாழ்வு வாழ்ந்திட பிரார்த்திக்கின்றோம்.

வருடாந்த சிறப்பு மலராக வெளிவரும்

'அகிலம்' அறிவியல் சஞ்சிகை

அனைத்துக் கரங்களிலும் பவனிவர

எமது நல்லாசிகள்

Luckyland




LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.

TEL : 0094-081-2420574, 2420217. FAX: 0094-081-2420740

Email: luckyland@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 011 2330195